கலைஞரின்
கடிதங்கள்

10

14.01.1981 - முதல்
15.09.1981 - வரை

சீதை பதிப்பகம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
நூல்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 10

14.01.1981 - 15.09.1981

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : கலைஞர்
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2217
894.8116

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

முதல்வர் மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
863. அன்பு பழம் நீ!	14-01-1981	23
864. தீபம் காண வந்திடுக!	30-01-1981	28
865. அடேடே! தீக்குளிக்கிறார்!	12-02-1981	30
866. கைலாச விசாரணை கண்துடைப்பு நாடகம்!	13-02-1981	33
867. ஏன் எடுக்கவில்லை நடவடிக்கை?	14-02-1981	39
868. தலைமை நிர்வாகக்குழு கூடுகிறது!	15-02-1981	43
869. பாவம்; கான்யூட் மன்னர்கள்!	17-02-1981	47
870. நிதிநிலை அறிக்கை எப்போது?	19-02-1981	52
871. ஆரம்பமாகிறது அறப்போர்!	20-02-1981	55
872. மிதிக்க வேண்டாம்; தாண்டிச் செல்வோம்!	21-02-1981	58
873. அடக்குமுறை கண்டு அஞ்சியதில்லை; அஞ்சப் போவதுமில்லை!	22-02-1981	62
874. நான் வணங்கும் தெய்வம் நீதான்!	25-02-1981	66
875. குழப்பங்களுக்கு முடிவு காண!	26-02-1981	71
876. திரும்பிப்பார்!	27-02-1981	75
877. ஊழலார் ஊராள்கிறார்!	02-03-1981	79

878. எழுச்சி வடிவம் காட்டினாய்?	03-03-1981	83
879. இதுவரையுமில்லை - இனியுமில்லை!	05-03-1981	86
880. வறட்சிப் பணிகள், முறையாக நடந்திட...!	06-03-1981	91
881. அதுவரை நீயும் பொறுத்திரு!	07-03-1981	94
882. குமுதமா? குரோதமா?	08-03-1981	97
883. உருவிய வாள் எங்கே?	09-03-1981	102
884. உதவாதினி ஒரு தாமதம்!	10-03-1981	106
885. ஏரிக்கரை மீது போறவரே!	11-03-1981	111
886. மதுவிலக்கு ரத்தாகுமா?	12-03-1981	116
887. அந்த நம்பிக்கை!	13-03-1981	123
888. நீதி, தடுமாறுகிறது!	27-03-1981	126
889. நாடே கேட்கிறது!	29-03-1981	129
890. புள்ளிவிபரம் - புரிகிறதா?	03.04.1981	132
891. தூதுவிடு படலம் - தொடை தட்டும் நாடகமும்!	04.04.1981	135
892. அன்பே கொள்கை! அமைதியே குறிக்கோள்!	10.04.1981	138
893. பிரதமரின் பேருரை!	11.04.1981	141
894. ஆசிரியர்கள் அறப்போர்!	12.04.1981	144
895. சித்திரை நாள் செய்தி!	13.04.1981	147
896. நாகரீக நாட்களில்தானா வாழுகிறோம்?	15.04.1981	151
897. என்மீது அனுதாபப்படு!	17.04.1981	155

898. ஐவர் குழுவும் - அமைப்பு முறை - மாற்றமும்!	23.04.1981	158
899. யார் செய்யும் தவறு?	25.04.1981	162
900. பாவம்; மக்கள் படும்பாடு!	26.04.1‘981	166
901. உவகையில் பூத்த உற்சாக மலர்!	28.04.1981	170
902. இதோ! இதோ!! ஒரு இனத்துரோகம்!!!	29.04.1981	174
903. அரசியல் ஆதாயம் தேடிகள் யார்?	30.04.1981	179
904. என்ன பொருளோ; யார் கண்டது?	03-05-1981	182
905. கையில்லாத ஊமையோ காவல்துறை?	04-05-1981	187
906. கடலூரில் ஒரு கர்ச்சனை(?)	05-05-1981	190
907. இவர், சிந்திப்பாரோ - இல்லையோ!	06-05-1981	195
908. நடக்கட்டும் அந்த நாமாவளி!	07-05-1981	201
909. ஏலம் - டெண்டர்! ஏனோ? ஏனோ?	08-05-1981	205
910. தனித்தொகுதிக்கு ஆபத்தா?	09-05-1981	209
911. நீதிதேவன் நிமிர்ந்தார்???	15-05-1981	212
912. குளுகுளு மலையில் ஒரு குழப்பம்!	22-05-1981	218
913. ஊட்டியில் உளறல் காண்டம்!	23-05-1981	222
914. பதைக்கிறார்! துடிக்கிறார்!	30-05-1981	227
915. கேள்விக்கு என்ன பதில்?	31-05-1981	230
916. சில நாடுகள் இருக்கின்றன!	01-06-1981	234
917. உன் காலணியை வாழ்த்துகிறாய்!	02-06-1981	238
918. கண்ணீரே - கவசம்!	06-06-1981	241

919. விடை ஒழுங்காக வருமா?	13-06-1981	244
920. அடடாவோ! வீர கர்ச்சனை!	14-06-1981	248
921. கேள்வியின் விஸ்வரூபம்!	15-06-1981	252
922. தீயணைக்கும் படை வரும்!	16-06-1981	256
923. நேற்றைய தொடர்ச்சி!	17-06-1981	259
924. ஆணிவேரும் - விழுதுகளும்!	18-06-1981	261
925. அவர் விதைத்த வினையை...!	22-06-1981	264
926. ஒரு நாடகம் நடக்குது நாட்டிலே!	24-06-1981	267
927. இப்படியும் ஒரு கூத்தா?	02-07-1981	271
928. மலர்மன்னன் கதை!	03-07-1981	275
929. குழப்பம் தீர்த்திடக் குரல் கொடு!	06-07-1981	278
930. பழைய படத்தில் ஒரு காட்சி!	07-07-1981	282
931. இதற்கு, இவர் எதற்காக?	08-07-1981	287
932. கடலூர் அழைக்கிறது; கண்மணியே! வருக! வருக!!	15-07-1981	291
933. இவரும் அப்படியா?	18-07-1981	295
934. உடனடித்தேவை; அந்தச் சிகிச்சையே!	24-07-1981	304
935. முதற்கட்ட முழக்கம்!	25-07-1981	307
936. நச்சுப்பையில் விஷம் ஊறுகிறது!	28-07-1981	310
937. இதற்குமேல் எழுதமுடியவில்லை!	29-07-1981	315
938. பணிகள் பல காத்திருக்கின்றன!	31-07-1981	318
939. கண்ணகியானால் சிலம்பை உடைத்திடுக!	01-08-1981	321
940. அந்த எட்டு இளைஞர்கள்!	05-08-1981	326

941. அடுத்த கட்டம் அழைக்கிறது!	06-08-1981	329
942. ஒரே இரத்தம் - ஒரு விளக்கத்திற்காக!	08-08-1981	333
943. சின்னப் புது மலரே! சிங்கார அகல் விளக்கே!	09-08-1981	339
944. அரியதோர் வாய்ப்பு ஆகஸ்ட் 15	11-8-1981	342
945. அவர் உணர்வாரோ! யார் அறிவார்?	12-08-1981	345
946. இதோபதேசம் பலன் தருமா?	13-08-1981	347
947. தலைநகர் மாற்றம் - தர்பார் நடத்துவோருக்கு எச்சரிக்கை!	14-08-1981	350
948. மகளிர் அணியினர் சிந்தனைக்கு!	15-08-1981	354
949. கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்!	19-08-1981	357
950. அந்தத் திசையை நோக்குகிறார்கள்; ஐந்து கோடித் தமிழர்கள்!	20-08-1981	362
951. எழுச்சி கண்டார் - எரிச்சல் கொண்டார்!	24-08-1981	365
952. தமிழன் நாதியற்றவனா?	27-08-1981	368
953. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!	29-08-1981	371
954. உணர்வைப் புரிந்து கொள்க!	31-08-1981	375
955. அமைதியாகத் தொடரட்டும் அறப்போர்!	03-09-1981	379
956. தனபதி குடும்பநிதி	08-09-1981	382
957. உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!	09-09-1981	386

958. விதூஷகர் - வேறு யார் கிடைத்திடுவார்!	10-09-1981	390
959. இடர், எதுவரினும் ஏற்பேன்!	13-09-1981	392
960. நாங்களிருக்குமிடம் நீயிருப்பாய்!	15-09-1981	397

863. அன்பு பழம் நீ!

உடன்பிறப்பே,

வாடி என் வஞ்சி! வண்ணக்கிளியே! வரமிரண்டு தருகின்ற மூலிகை பறித்துத் தருகிறேன். அதனை தின்றால் உலக மக்கள் பேசுவதனைத்தையும் கேட்க முடியும் - உலகில் நடக்கும் காட்சிகளையும் காண முடியும் - எனக் குப்பன் என்பான் சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே அழைத்தபோது - ஆசை மிகக் கொண்ட ஆரணங்கு அந்த மூலிகை பறித்துண்ண அவனைத் தொடர்ந்தாள்.

கூட்டிப் போய்ப் பச்சிலையைப் பறித்துத் தருகின்றேன் - நீ எனக்கு என்ன தருவாய் என்று குப்பன் கேட்டபோது, என்றன் கரத்தால் இறுக உமைத் தழுவி நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன் என்றவளைப் பார்த்து ஆகையால் ஓர் முத்தம் அச்சாரம் போடென்றானே! பாவேந்தரின் குறும்புக்காரக் குப்பன். அப்படித்தானே நீங்கள் அன்றைக்கு என்னிடம் வம்பு செய்தீர்கள்! வளையல்கள் எல்லாம் நொறுங்கி வைக்கோற் போரடியில் விழுமளவுக்கு என்னை வளைத்துப் பிடித்து வலியுறுத்தி முத்தம் பெற்றுக் கொண்டது நினைவிருக்கிறதா?

பொன்னீ! முத்தம் பெற்றுக் கொண்டேன் என்று நீயே வாக்குமூலம் வழங்குகிறாய்! நீ தந்ததால் தானே நான் பெற்றுக் கொள்ள முடிந்தது!

மாம்பழக் கொத்தினை மரமேறிப் பறித்து வர முடியுமா? என நான் கேட்டவுடன் கண்ணின் கடைப் பார்வை கன்னியர் காட்டி விட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம் என மார்தட்டிக் கூறிவிட்டு மளமளவென்று மரத்தில் ஏறியது யாராம்? யாருக்காகவாம்?

நான்தான்! எனக்காகத்தான்! வஞ்சியிடம் வாக்குறுதி பெற்ற குப்பனைப் போல் பழம் பறித்துத் தந்தால் பத்து முத்தம் பதித்திட

வேண்டும் என் உதட்டில் என்று நிபந்தனை விதித்தபின்தானே, நீயும் இணங்கினாய்?

ஆமாம்! மாம்பழத்துக்காகத்தான் உங்களைக் காதலித்தேன்! அப்படித்தான் இன்னமும் ஒரு நினைப்பு உங்களுக்கு! அந்த மாம்பழம் இல்லாவிட்டால் - அதை நீங்கள் பறித்துத்தரா விட்டால் உங்கள் மீது எனக்கு ஆசையே இருந்திருக்காது! அப்படித்தானே!

இந்தக் கேள்வியையும் நீ என்னிடம் எத்தனையோ முறை கேட்டுவிட்டாய்! நானும் பதில் சொல்லிவிட்டேன்! மாம்பழம் தேவை என்ற சாக்கில் மங்கை என்னை நெருங்கியதும் - பறித்துத் தரும் சாக்கில் நான் அவளை நெருங்கியதும் - மறந்து போகும் நிகழ்ச்சியா? அதற்கு முன்பே, குளக்கரையில் நின்றவாறு தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி எழுந்திருந்த தாமரையை நான் பார்த்துத் தவித்ததுண்டே! அப்போது உன் விழிவண்டு என்மீது மொய்த்ததுண்டே!

அதுமட்டுமா? அம்மன் வழிபாட்டுக்காக நான் ஆலயத்துள் சென்றபோது...

ஆமாம்! நினைவிருக்கிறது - அம்மன் வழிபாட்டுக்காக நானும் கூட வந்திருந்தேன்!

நான் அம்மனைத் தொழுதேன்! நீங்களோ தொடர்ந்தீர்கள்!

எத்துணை சுவை மிகுந்த நிகழ்ச்சிகள், பொன்னி! புனலூர் சந்தை சென்று புதுப்பாளை, கரும்பு, வெல்லம், மஞ்சள், இஞ்சி எல்லாம் பொங்கலுக்கு வாங்கிக் கொண்டு பொழுதுசாய நீ வந்து கொண்டிருந்தாய்! வண்டியுடன் உன் அருகே வந்த நான், அழகுப்பாதம் நோக நடக்கலாமா அன்னமே? என்று கேட்டேன்! நடப்பதால்தானே உங்கள் கண்ணுக்கு அன்னமாகத் தெரிகிறது என்றாய்!

பிறகுதான் என் முன்னால் கெஞ்சிக் கூத்தாடி உங்கள் வண்டியில் ஏறிக் கொள்ளச் செய்து விட்டீர்களே!

கூப்பிடமாட்டானா என்று துடிப்பு! கூப்பிட்டவுடன் வண்டியில் ஏற மாட்டேன் என்று ஒரு நடிப்பு!

நல்லவேளை! அது பாரவண்டியாக இருந்தது! கூண்டு வண்டியாக இருந்திருந்தால் பாதையிலேயே உங்கள் குறும்பு தொடங்கியிருக்கும்!

உன்னை நான் அன்னமென்றே பெயரிட்டு அழைக்கலாமா எனக் கேட்டேன் அல்லவா?

என் பெயர் பொன்னி! அன்னமென்றால் சோற்றுக்கும் பொருந்தும்! அப்படி அழைக்க வேண்டாம் என்றேனே - மறந்துவிட்டதா?

நீ அதைச் சொன்ன சிறிது நேரத்திற்கெல்லாம், இந்தப் பொன்னன்;

குன்றுபோல் அன்னம் குவித்திருக்கு தென்னெதிரில்
உண்ண முடியாதே ஊரான்வோன் கூர்வாளும்
வண்ணமுடிச் செல்வாக்கும் வந்து மறிக்குதடி

என்ற புரட்சிக் கவிஞர் பாட்டை இசை கூட்டிப் பாடினேனே; நினைவிருக்கிறதா?

அவன் வண்டியில் என்ன ஆட்டபாட்டம் போட்டுக்கொண்டு போகிறாள் பார் என்று பக்கத்துத் தெரு பார்வதியும் மீனாவும் முகத்தைச் சுளித்துக் கொண்டு எள்ளும் கொள்ளும் வெடிக்கப் பேசியதுகூட இன்னமும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

ஒரு கரணை கரும்பு கிடைக்குமா? என்றேன்! இதோ என்று இஞ்சியை எடுத்து நீட்டினாய்! அதுவும் என் கண் முன்னால் நிற்கிறது!

அந்த இஞ்சியையும் வாங்கிக் கடித்து வாயில் குதப்பிக்கொண்டே, வஞ்சியின் கரம்பட்டால் இஞ்சியும் இனிக்குமே - என்று சமாளித்தது யாராம்?

என்னம்மா! இந்தத் தடியனோடு வண்டிச் சவாரியா? என்று உன் தந்தை சீறிட - உன் தங்கமேனி நடுங்கிட என் நாடி நரம்புகளும் தாளம்போட்ட நிகழ்ச்சி இருக்கிறதே... அதைப் பிறகு கற்பனை செய்து கொண்டேன்; நீ பரதம் ஆடியது போலவும், நான் நட்டுவாங்கம் செய்தது போலவும்!

எனக்கேற்பட்ட கலக்கத்திற்கு நீங்கள் கற்பனை ஓவியம் தீட்டிக் களித்தீர்கள்...

சந்தன உடலின் அசைவு சதிராகவும் - என் நாடி நடுக்கம் தாளமாகவும் - இணைந்து பொருந்தியதை இன்பமாக எண்ணிப் பார்ப்பது கூடக் குற்றமா?

ஏன் எண்ணிப் பார்க்க மாட்டீர்கள்? நீங்கள் தொட்டவுடன் துவண்டு விட்டேன் அல்லவா?

தொடமாட்டேனா என்று ஏங்கிக் கொண்டிருந்ததும் எனக்குத் தெரியும்.

எல்லாம் முடிந்தபிறகு ஏன் பேச மாட்டீர்கள்? வாளை முத்தமிட்டு விழுப்புண்பட்ட நெஞ்சின்மீது புதைத்து ஒத்தடம் கொடுத்து வீரத்தை மதித்துப் புகழ்ந்தனர் அந்நாள் தமிழ்க்குல வஞ்சியர்! காளையொன்றை அடக்கிவென்று ஏறுதழுவிய ஏந்தலுக்கே எழில் விழியாளின் இன்பத்தழுவல் கிடைக்குமென்று பழந்தமிழ் இலக்கியங்கள் பகருகின்றன! கொடும் புலிகொன்று பல் எடுத்தோ, கூர் நகமெடுத்தோ - தாலி செய்து வருபவனுக்கே, தளிர்க்கொடி, தன்னை ஒப்படைப்பாள் என்று தமிழச்சியின் பெருமை கூறப்படுகிறது! இதில் எதைச் செய்து என்னை மணந்தீர்கள் நீங்கள்?

நீ சொன்ன இத்தனை இலக்கியத்தையும் மனப்பாடம் செய்து ஒப்புவித்துப் பெண்களை மயக்குவோர் உண்டு! ஆனால் நானோ வாளினும் கொடிதான அடக்குமுறை தாங்கி இனமானம் காத்திட முனைந்தேன்! காளையினும் கடும் சீற்றமுடன் பாய்ந்த எதிர்ப்புக்களையும் ஏசல்களையும் எதிர்கொண்டு நின்றேன்! புலிப்பாய்ச்சல் அடக்கி அதனைப் புதருக்குள் பதுங்கச் செய்ததுபோல் பிறமொழி ஆதிக்கம், தமிழ் மொழி மேல் படராமல் பெரும் போர் நடத்தி வருகின்றேன்! ஏன் பொன்னி; என்னை நீ மான மரபு காக்கும் போருக்குரிய வீரன் என்றுதானே கரம் பிடித்தாய்! இல்லை; அந்த வைக்கோற் போருக்கருகே மாம்பழம் பறித்துக் கொடுத்த வீரத்தை மெச்சிக் காதல் விளைத்தாயா?

ஐயமேன் உங்களுக்கு! அம்மையும் அப்பனும் தடுத்தும் கூட இந்தப் பொன்னியின் மனம் இந்தப் பொன்னனை நாடியதற்குக் காரணம்; நானும் நீங்களும் படித்த தமிழும் - அந்தத் தமிழ் தந்த தன்மான உணர்வும் தானே! ஏதோ ஊடலுக்காக உங்களை வம்புக்கு இழுத்தல் தவறா?

ஊடலா? இந்த வயதிலா? எனக்குத் தொண்ணூறு! உனக்கு எண்பது! பனிமலை போல் தலை இருவர்க்கும்!

பருவக்கிளிகளைப் போல் காதற் கனியைக் கொத்திக் கொண்டிருப்பதை நம் கொள்ளுப் பேரர்கள் பார்த்தால் எள்ளி நகையாடுவர்! எழுந்திரு! எழுந்திரு! என் தடிக் கம்பு எங்கே?

இதோ நம் இரண்டு கம்புகளும் ஒன்றாகத்தானிருக்கின்றன!

உம்! பொன்னீ! நடுங்குகின்றன நமக்கு உடல்கள் எனினும் இளமையில் நடந்தவைகளை நினைத்தால்...

நடுங்கும் உடல் நமக்கு! ஆனால் தமிழ்ப் பகையைக் கண்டால் நடுங்கா உள்ளம் நமக்கு! இப்போது சொல்லுங்கள்; நானும் நீங்களும் கிழமா?

இல்லை பொன்னி! என் அன்புப் பழம் நீ!

மு. க.

14-01-1981

864. தீபம் காண வந்திடுக!

உடன்பிறப்பே,

தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி மாவட்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் - சட்டமன்ற நடவடிக்கைகள் - எனவே பத்து நாட்களாகக் கடிதம் எழுதவே நேரமில்லை. திருச்சியில் நடந்த தமிழர் திருநாள் மாட்சியையும் - தஞ்சையில் மொழிப் போர்த்தியாகிகளுக்கு நடைபெற்ற வீரவணக்க நாள் எழுச்சியையும் - பெரம்பலூர் பெரியார் சிலை திறப்பு விழாவில் பெருக்கெடுத்த உணர்ச்சியையும் - புதுக்கோட்டை மாவட்டத்தில் புத்தெழில்பூண்டு விளங்கிய சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையும் - ஏடுகளில் கண்டு; என் கடிதம் இல்லாத குறையைப் போக்கிக் கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

இப்போதும் விரிவான கடிதம் உனக்கு நான் எழுதவில்லை. காரணம்; உன்னைத்தான் நாளைக்கு திருவண்ணாமலையில் சந்திக்க இருக்கிறேனே!

தீபம் காண திருவண்ணாமலைக்குப் பல்லாயிரவர் திரளுவதுண்டு! நான் உன்னை இப்போது அழைப்பதும் தீபம் காணத்தான்! அது கார்த்திகைத் தீபம்! இது கழகத் தீபம்! இருளில் மூழ்கித் தவித்த சமுதாயத்திற்கு ஒளி காட்டப் பெரியார் ஏற்றிய தீபம்! பேரறிஞர் அண்ணா தூக்கிப் பிடித்த தீபம்! அணையாமல் காத்திடுக என்று நம் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள தீபம்!

அந்தத் தீபச்சுடரை அணைத்து விட எத்தனையோ தீயசக்திகள்; தங்கள் பெருமூச்சைப் புயல் காற்றாய் ஆக்கிப் பார்த்தன! புயலையும் மெல்லிய இளம் பூங்காற்றாக மாற்றிக் கொண்டு நமது கழகத் தீபம்; அசைந்தாடி அழகுமிழ்ந்து கொண்டிருக்கிறது!

வெறும் உதட்டுப்பறை கொட்டும் வேலையல்லவே நம்முடையது! வெங்குருதிதனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற

இனமான உணர்ச்சியின் எழுச்சி முரசமன்றோ நாம் ஒலிப்பது!

எட்டுப்பேர் மொழிக்காகக் தீக்குளித்தனரே; அந்த நெருப்பு நாக்குகளின் நர்த்தனமன்றோ நம் கையில் இருக்கும் தீபத்தில் நடைபெறுகிறது!

இலட்சியம் காத்திட எண்ணற்றோர் சிந்திய இரத்தமன்றோ இந்தத் தீபத்தின் எண்ணெய்! அவர்களின் நாடி நரம்புகளன்றோ இந்தத் தீபச்சுடர்!

சோதனைகளால் கவிழாத தீபம் - துரோகத்தால் அணைக்க முடியாத தீபம் - நயவஞ்சகர் - நன்றிகொன்றோர் - உடைத்தெறிய முயன்றும் உடையாமல் புது உரம் பெற்றுப் புகழ்ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் தீபம் - அந்தக் கழகத் தீபம் காணத்தான்; திருவண்ணாமலைக்கு உன்னை அழைக்கிறேன்!

இது மலை உச்சியில் ஏற்றப்படும் தீபமல்ல! உன் மன உச்சியில் செந்நகை சிந்திக் கொண்டிருக்கும் செந்தமிழ்த் தீபம்! சிந்தனைத் தீபம்! செயல்வீரர்களின் கரங்கள் குவிந்து காத்திடும் தீபம்!

அந்தத் தீபம் காண மட்டுமல்ல; அது திக்கெட்டும் ஒளி பரப்பிட; விண்முட்டுமளவுக்கு உயர்த்திப் பிடித்திட நம் கரங்கள் எல்லாம் உயர வேண்டுமல்லவா?

அதற்காகத்தான் அழைக்கிறேன்; ஆருயிர் உடன்பிறப்பே! உன்னை எதிர்பார்த்திருப்பேன்; தீபம் காண வந்திடுக! என் நெஞ்சில் தேன் மழை பெய்திடுக!

அன்புள்ள,

மு. க.

30-01-1981

865. அடேடே! தீக்குளிக்கிறார்!

உடன்பிறப்பே,

உத்தமர் முழங்குகிறார் பார்த்தாயா? ஆகா! என்னையா குற்றவாளி என்று சொன்னீர்கள் - என் கரம் கறைபடாத கரமாயிற்றே! அழுக்கு நோட்டுக்களை வாங்கியதில்லையே; எல்லாம் சலவை நோட்டுக்களாயிற்றே - பிறகு எப்படிக் கறைபடும்! பேருந்து முதலாளிகளுக்கு பஸ் எண்ணிக்கை போன்ற பல சலுகைகளைச் செய்து கொடுத்துவிட்டு எண்பது இலட்சத்தை என் கை தொட்டு வாங்கியதில்லையே! சத்தியமாக வாங்கவில்லையே - என் அன்னை மீது ஆணையாக மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்த மாட்டேன் - என்று சொன்னதை இப்போது நினைவுபடுத்தக் கூடாது! கப்பலை நியாயவிலைக்குக் கொடுத்தால் வர வேண்டிய கமிஷன் வராது! அதனால் அதிக விலை வைத்துக்கொடு என்று கேட்டு அதிலே சில கோடி சுருட்டுவதற்கு நான் திட்டம் வகுத்ததே இல்லையே! தாயின் பெயரால் ஒரு அறக்கட்டளை உருவாக்கி, அதிகாரிகளைவிட்டு வியாபாரிகளை மிரட்டி கலைநிகழ்ச்சி நடத்தி வசூல் மன்னன் என்ற பெயரினை நிலைநாட்டிக் கொண்டதாக யாராவது சொன்னால்; அவர்களைப் பேசவிடாமல் நான் தடுத்தது இல்லையே! பலகோடி ரூபாய் எரிசாராய ஊழலில் இன்று போய் நாளை வா! என்று கர்ச்சித்துவிட்டு; மறுநாள் ஏதேதோ பழைய புராணங்களைப் புரட்டிக் காட்டி - அதற்கெல்லாம் அப்போதிருந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற பதில்கள் வந்ததும் - சாட்சிகள் மாறாமல் இருந்தால்தான் விசாரணையென்று ஒருபோடுபோட்டுவிட்டு - இப்போது என்னைப் புனிதவான் என்று ஊருக்கு அறிவிக்க ஒரு சோதனைக்கு என்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறேன் பார்த்தீர்களா? இதிலும் குறை காணுகிறார்களே நியாயமா?

இப்படி முழங்குகிறார் உத்தமர்! வேடம் கலைந்து விட்டது - ஓடி ஒளிகிறார்! ஊருக்கு உபதேசம் செய்யும் ஊழல் பெருச்சாளிகளை தமிழ்நாட்டு மக்கள் இப்போதுதான் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் சோதனை நாடகம் நடிக்க வேதனையை மறைத்துக்கொண்டு வெளியே கிளம்பியிருக்கிறார்கள்!

பற்றியெரியும் தீயில் குளித்தெழுந்து என் கற்பை நிலை நாட்டுகிறேன் பார் என்று ஒருத்தி சூளுரைத்தாள்! திரளாக அமர்ந்திருந்த மக்கள், திகைப்புடன் அந்த நிகழ்ச்சியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தீக்குண்டம் நெருப்பின் நாக்குகளை நீட்டி எரிந்து கொண்டிருந்தது. சபதம் செய்த அந்தப் பெண் ஆவேசமாகக் கூத்தாடினாள்! ஏ! அக்கினி தேவா! நான் கற்புக்கரசியா? இல்லையா? என்பதை நீதான் உலகிற்கு அறிவிக்க வேண்டும்! நான் தூயவள் என்றால் நெருப்பாகத் தாவும் நீ, நீராக மாறி என் மேனியை நனைக்க வேண்டும்! தூர்த்தை என்றால் என்னைச் சுட்டுப் பொசுக்கிக் கருக்கிச் சாம்பலாக்க வேண்டும்! இப்படி கண்களில் கனல்பறக்க அவள் பேசினாள். திடீரென அந்தத் தீக் குண்டத்தில் குதித்தாள். அவள் மீது தழுவிப் பாய்ந்த தீ, குற்றாலத்து அருவிபோல மாறிக் கொட்டியது! கூடியிருந்த மக்கள் கரவொலி செய்தார்கள்! திரை விழுந்தது! நாடகத்தில் முக்கியக் காட்சி முடிந்தது!

உடன்பிறப்பே, நாடகத்துத் தந்திரக் காட்சிகளில் இதுவுமொன்று! தீக் குண்டத்தில் நீளமாகக் கத்தரித்து ஒட்டப்பட்ட சிகப்புத்தாள்கள் வேகமாகச் சுழலுகிற மின்காற்றில் பறந்து கொண்டிருக்கும். அந்தச் சிகப்புத்தாள்களின் மீது மாறி மாறி வண்ண மின்னொளி வீசிக்கொண்டேயிருக்கும். நாடகம் பார்ப்போருக்கு தீக் குண்டத்தில் உண்மையிலேயே நெருப்பு, கொழுந்து விட்டு எரிவது போலத் தோன்றும்!

அதில்தான் பத்தினிவேடம் போடுபவள் பாய்ந்து தாவி, கதைக்கேற்பத் தன்னைக் கற்பரசியென்று நிலைநாட்டுவாள்! நாடக மேடைக்கு மேலே ஒரு குடத்தில் வைக்கப்பட்ட தண்ணீரை ஒருவன் அவள் தலைமீது கொட்டுவான்! நாடக அரங்கில் ஆரவாரம்! கைதட்டல்! விசில் ஒலி கூட!

இப்படியொரு தீக்குளிக்கும் நாடகத்தை உத்தமர் (?) நடத்தப் போகிறாராம்! அதைப் பார்த்து நாம் ஏமாற வேண்டுமாம்! இப்படித்தான் தீர்ப்பு இருக்கவேண்டும் என்று முதலில் தீர்மானித்துக் கொண்டு அதன்பிறகு விசாரணை நாடகமாம்!

சூட்சுமம் புரிகிறதா உனக்கு? இன்னும் சில தந்திரக் காட்சிகள் இந்த நாடகத்தில் இடம்பெற இருக்கின்றன! அதையும் பார்த்து ரசிக்கலாம் பொறுத்திரு!

அன்புள்ள,

மு. க.

(12-02-1981)

866. கைலாச விசாரணை கண்துடைப்பு நாடகம்!

உடன்பிறப்பே,

எரி சாராய ஊழல் - இரண்டு மாநிலங்களை முக்கியமாக இணைத்துப் பேசப்படுகிறது. இரண்டையோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களையோ இணைத்துள்ள ஒரு சங்கிலித் தொடர் போன்ற இந்தப் பிரச்சினையை மேல்மட்ட நிலையில் பொதுவான ஒரு விசாரணையின் மீதுதான் அணுகிட வேண்டும் என்ற கருத்தைப் புறம் தள்ளிவிட்டு யாரோ ஓரிருவர் மீது பழியைப் போட்டு; தான் தப்பித்துக் கொள்ளலாம் என்ற அளவில் அ.தி.மு.க. அரசு, கைலாசம் விசாரணை யென்ற ஒரு கண்துடைப்புக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது.

ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி திரு. கைலாசம் இந்த மாநிலத்தில் நீதிபதியாக நீண்டகாலம் இருந்தவர். எம்.ஜி.ஆர். அவர்களின் குடும்ப நண்பர். அவர் என்னதான் நடுநிலையாளர் என்று யார் கூறியபோதிலும் எம்.ஜி.ஆர். அவர்கள், திருவாளர் கைலாசம் அவர்களின் குடும்ப நண்பர் என்ற ஊரறிந்த செய்திக்கு முன்னே அந்த நடுநிலை என்ற சொல்லுக்கு அர்த்தமில்லாமல் போய் விடும்.

கைலாசம் அவர்கள் இதனை விசாரிப்பார் என்று முதலமைச்சர் அறிவித்ததுமே; சட்டம் பயின்றோர் வட்டாரத்திலும் - நீதித்துறை அரங்குகளிலும் - அரசியல் உலகிலும் - ஒரு கேலி கலந்த சிரிப்பும் ஏகடிய விமர்சனங்களும் எதிரொலிக்கத் தொடங்கி விட்டன என்பதை அறியாதார் இல்லை!

ஏதோ தவறு நடந்திருக்கிறது! அதனால்தான், கைலாசத்தை நியமித்துச் சரிக்கட்டப் பார்க்கிறார் என்று ஆளுங்கட்சியிலே உள்ளவர்களே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள்.

கைலாசம் தகுதியானவரா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை! இந்த விசாரணைக்கு இந்த மாநில அளவிலே

மட்டும் ஒரு நடவடிக்கையை எடுப்பது போதுமானதல்ல என்பது மாத்திரமல்ல; ஒரு ஒத்திகை பார்க்கப்பட்ட நாடக அரங்கேற்றமாகத் தானிருக்கும் என்பதும் மக்களின் கருத்தாகும்.

எடுத்து வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்ன? அதற்கு எத்தனை முரண்பாடான பதில்கள் தமிழக அரசின் தரப்பிலிருந்து இதுவரையில் தரப்பட்டுள்ளன!

நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி, சட்டப் பேரவையில் எரி சாராய ஊழல் குறித்துப் பேசியபோது வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள்; சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தையும் சபையில் வைப்பதாகக் கூறினார். அப்படி வைக்கப்படவே இல்லை. சில நாட்கள் கழித்து நண்பர் கிருஷ்ணமூர்த்தி, அந்தக் கோப்புகள் ஏன் வைக்கப்பட வில்லையென்று சபாநாயகரைப் பார்த்துக் கேட்டார். அமைச்சர் அவையில் இருந்துங்கூட, சரியான பதில்கள் எதுவும் அரசுத் தரப்பில் இருந்து சொல்லப்படவில்லை. இதுவரை கோப்புகள் சபையில் வைக்கப் படவில்லை.

பிறகு எரி சாராய ஊழல் பற்றி தேதி வாரியாகப் பல ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களை அவையில் எடுத்து வைத்தேன். எரி சாராய ஊழலுக்கு எடுத்து வைத்த விபரங்களை முதலமைச்சர் விளக்கமாக அணுகி பதில் கூறவுமில்லை; அதேபோல வேறு பல ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களைப் பற்றியும் வாயே திறக்கவுமில்லை!

தமிழ்ப் பண்பாட்டு மைய ஊழல்.

பல் வைத்தியத்துறை மாணவர் தேர்வு ஊழல்.

சத்திய அறக்கட்டளை முறைகேடு வசூல்.

இந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் அவர் சந்திக்காமலே போய் விட்டார். எரி சாராயத்தைப் பற்றி மட்டும் சிறிது நேரம் விளக்கமளிக்கத் தொடங்கி, நான் என்னை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இரண்டு மாநிலங்களிலும் போலீஸ் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. விசாரணை முடிவுகள் வெளி வந்தவுடன் உண்மைக் குற்றவாளிகள் யார் என்று தெரியும் என்று கூறி முடித்து விட்டார். நீதி விசாரணையில் தனக்கு நம்பிக்கை கிடையாது என்பது போன்ற கருத்தையும் அந்தப் பதிலுரையில் வெளியிட்டார்.

இப்போது அவருக்குத் திடீரென்று நீதி விசாரணையில் நம்பிக்கை வந்து - அதிலும் கைலாசத்தின் விசாரணையில் நம்பிக்கை வந்து - நீதி விசாரணை பற்றி அவர் இரண்டு நாட்களுக்கு முன்பு - அவையில் வெளியிட்ட கருத்தை மாற்றிக் கொண்டு - இப்போது நீதி விசாரணைக்கு அறிவிப்புச் செய்து விட்டார்.

இந்த அரசின் மீது சாட்டப்படும் எரி சாராய ஊழலுக்கு ஆதாரமில்லையென்று நிரூபித்து ஒரு முடிவு கட்டவே இப்போது நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து உத்திரவிட்டுள்ளோம்.

இப்படிப் பத்திரிகையாளர் பேட்டியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆதாரமிருக்கிறதா? இல்லையா? என்று ஆராய்வதற்கல்லவாம் நீதி விசாரணை!

ஆதாரமில்லையென்று நிரூபித்து ஒரு முடிவு கட்டவே நீதி விசாரணை இப்படி முடிவு கட்டுவதற்கான ஏற்பாடு செய்து உத்திரவிடப்பட்டிருக்கிறது என்ற உண்மை, முதலமைச்சரின் பேட்டியிலேயே தெளிவாகத் தெறித்து விழுந்துவிட்டது!

எந்த அடிப்படையில் இந்த நீதி விசாரணை நடக்குமாம்!

தமிழ்நாட்டிலுள்ள எரி சாராயத் தொழிற்சாலைகளுக்கு 1980-அக்டோபர், நவம்பர் மாதங்களில் எரி சாராய ஏற்றுமதிக்கு உரிமம் வழங்கப்பட்டது குறித்தும் - 1980 அக்டோபர், நவம்பர் மாதங்களில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மன்னம் கூட்டுறவு ஆலைக்கு எரி சாராய ஏற்றுமதி செய்ய தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கியது குறித்தும் - அந்தத் தொழிற்சாலைகள் உண்மையாக எவ்வளவு எரி சாராயம் ஏற்றுமதி செய்தன என்பது குறித்தும் - விசாரணை நடைபெற்று ஏதாவது முறைகேடுகள் இருந்தால் அத்தகைய முறைகேடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பரிசீலனை செய்து பழைய நீதிபதி கைலாசம் அறிவிப்பாராம்! அடடா! என்னே நீதி? என்னே நீதி?

சட்டப் பேரவையில் எடுத்து வைத்த குற்றச்சாட்டுக்கள் என்ன ஆயின?

வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் எரி சாராய லாரிகளுடன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை அனுப்பாதீர்கள் என்று 8-6-79-இல் எரி சாராயத் தொழிலதிபர்கள் விடுத்த முறையீட்டை ஏற்று 26-6-79-இல் அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையெல்லாம் வேலை நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பிய அரசின் ஆணையைப் படித்துக் காட்டியிருக்கிறேனே; அவையில்! எரி சாராயத் தொழிலதிபர்களுக்குத் தோதாக - வசதியாக - வாய்ப்பாக - இந்த ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறதா இல்லையா?

அரசு ஆணை எண். ஷ 6648-80இன்படி ஜூலை 4-ஆம் தேதி 1980-இல் எரிசாராயம் வெளிமாநிலங்களுக்குச் செல்வதைத் தடை செய்து இந்த அரசு உத்திரவிடுகிறது!

ஏன்? எதற்காக?

அப்படித் தடுத்தால்தான் ஏற்றுமதியாளர்கள் தங்களை அணுகுவார்கள் - தர வேண்டியதைத் தந்தால் தடையைத் தளர்த்தலாம் என்றுதானே அந்தத் தடை உத்திரவு?

அதன்படி அவர்கள் முறைப்படி (?) அணுகுகிறார்கள்! தடை தளருகிறது! ஆகஸ்டு 28-ஆம் தேதி (VERY URGENT) மிக அவசரம் என்று தலைப்பிட்டு, தடையை நீக்கி ஒரு உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது! ஆகஸ்டு கடைசியில் தடை நீங்கியதும் செப்டம்பரில் வெளி மாநிலங்களுக்கு எரி சாராயம் ஏற்றுமதியாகிறது!

அக்டோபர் 12-ஆம் தேதி சென்னை வர்த்தக சபையில் பேசிய முதலமைச்சர், பத்து லட்சம் லிட்டர் எரி சாராயம் கொண்டு செல்ல ஒருவருக்கு அனுமதி கொடுத்தோம். அவர் பதினைந்து லட்சம் லிட்டர் கொண்டு சென்று விட்டார் என்று குறைபட்டுக் கொண்டார்!

ஆனால் அத்தகைய கடத்தல்காரர் மீது இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை! ஏன் - என்ன காரணம்?

கெம்ப்ளாஸ்ட் போன்ற தொழிற்சாலைகளை மூட வேண்டியிருக்கிறது - காரணம் தேவையான இன்டஸ்ட்ரியல் ஆல்ககால் கிடைக்கவில்லை என்று இங்குள்ள தொழிலதிபர்கள் கருத்தரங்க மேடைகளில் வருத்தப்படும்போது - வெளி மாநிலத் தனியார்களுக்கு அதனை இந்த அரசு தாராளமாக வழங்கியது ஏன்?

அதிலும் அனுமதிக்கு அதிகமாக எடுத்துச் சென்ற ஒரு நபரைப் பற்றி முதல்வரே பகிரங்கமாகப் பேசிவிட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்காத மர்மம் என்ன?

மத்திய மொலாசஸ் போர்டு பரிந்துரை செய்தும்கூட ஆந்திர அரசுக்கு அறுபது லட்சம் லிட்டர் அனுப்ப வேண்டியதற்கு மாறாக இருபத்தி நாலு லட்சம் லிட்டர் மட்டுமே அனுப்பிவிட்டு, மீதியை ஆந்திர அரசுக்கு அனுப்பாமல் - தனியார்களுக்குத் தந்தது ஏன்?

ராணுவத்திற்கு ரம் சப்ளை செய்வதற்காக ஒரு கம்பெனி அக்டோபரில் தமிழக அரசுக்கு எரிசாராயம் கேட்டு விண்ணப்பித்த போது இங்குள்ள உள்துறை இலாக்காவிலிருந்து அந்தக் கம்பெனிக்கு அக்டோபர் 15-1980 எழுதிய கடிதத்தில், வெளி மாநில எரி சாராய ஏற்றுமதிக்கு இன்னும் தடை நீக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டதை நான் சட்டசபையில் படித்துக் காட்டியிருக்கிறேன்!

ஆகஸ்டில் நீக்கப்பட்ட தடை, மறுபடியும் எப்போது - ஏன் போடப்பட்டது?

அக்டோபர் 15க்குப் பிறகு தடை எவ்வாறு நீக்கப்பட்டது?

மன்னம் மர்மம் என்ன? அகமத்கான் பாத்திரம் என்ன? கிளிக்கூண்டில் அடைபட்டுக் கிடந்த முக்கிய புள்ளிகளின் முகவிலாசம் யாது? கிளிக்கும் சித்ரா கிருஷ்ணசாமிக்கும் என்ன உறவு? துணைவியாரில் ஒருவர்தானே! சித்ரா கிருஷ்ணசாமி இந்த அரசாங்கத்தில் வகிக்கும் முக்கிய கதாபாத்திரம் யாது?

இப்படி 1979 ஜூலை முதல் திட்டமிட்டு நடைபெற்று வருகிற கொள்ளைக்கு 1980 அக்டோபர் முதல் விசாரணையென்றால் யாரோ இரண்டொருவர் மீது பழி சுமத்தி விட்டுப் பெரும்புள்ளிகள் தப்பித்துக் கொள்ளலாம் என்ற தந்திரம்தானே!

அதற்குத்தானே கைலாச விசாரணை என்ற கண்துடைப்பு நாடகம்!

இந்த நாடகத்தைக் கைவிட்டு - மாநில அரசு, மத்திய அரசுடன் பேசி; ஒரு மேல்மட்ட அமைப்பின் விசாரணைக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும்! இந்தப் பிரச்சினை ஒரு மாநில அரசுக்கு மேற்பட்ட மாநில அரசுகளின் பிரச்சினையாக

இருப்பதால் அந்தந்த மாநில தொடர்புடைய நீதிபதிகள் விசாரணை போதுமானதல்ல! பொருத்தமுடையதுமல்ல!

குறிப்பாக இங்கே நியமிக்கப்பட்டுள்ள பழைய நீதிபதி கைலாசம் அவர்கள் தானாகவே முன்வந்து - தன்னை; இந்த ஏற்பாட்டிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும்!

அதுவே அவருக்கு அழகு! முதல்வருக்கு அழகு; தன்னை ஒரு மேல்மட்ட விசாரணைக்கு உட்படுத்திக் கொள்வதுதான்!

அன்புள் ள,

மு. க.

(13-02-1981)

867. ஏன் எடுக்கவில்லை நடவடிக்கை?

உடன்பிறப்பே,

கடந்த அக்டோபர் - அதாவது 12-10-80 தினமணி - சென்னைப் பதிப்பில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ள செய்தியை அப்படியே இங்கு தந்துள்ளேன்.

சென்னை, அக்.11 -

தமிழ்நாட்டுத் தொழில்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றி வர புதிய கப்பல்கள் வாங்கப்படும் என்று முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் இன்று அறிவித்தார். கப்பல்கள் வாங்குவது பற்றி யார் என்ன சொன்னாலும் கவலைப்படப் போவது இல்லை. புதிய கப்பல்களுக்காக தமிழக அரசால் உலகம் தழுவிய டெண்டர் கோரப்படுகிறது என்று முதலமைச்சர் கூறினார்.

தென் இந்திய வர்த்தக சபையின் 70-வது ஆண்டுக் கூட்டத்தை இன்று மாலை தொடங்கி வைத்து பேசுகையில், முதலமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

(பல்கேரியா நாட்டின் பால்டிகா கம்பெனியிலிருந்து தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்து நிறுவனம் கப்பல்கள் வாங்க நடத்திய பேரம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி சட்டசபையில் புகார் எழுப்பியது தெரிந்ததே.)

தமிழ்நாட்டில் எரி சாராய உற்பத்தி பற்றி அரசின் கொள்கை முடிவு விரைவில் அறிவிக்கப்படுமென்றும் முதலமைச்சர் கூறினார்.

பத்து லட்சம் லிட்டர் வெளி மாநிலத்துக்கு ஏற்றுமதி செய்ய பர்மிட் கொடுத்தால் 5 லட்சம் கூடுதலாக ஏற்றுமதி செய்து, கறுப்புப் பணம் சம்பாதித்துள்ளனர். இது எப்படி நியாயமாகும் என்று முதலமைச்சர் கேட்டார்.

ஒரே பர்மிட்டைக் காட்டி பலமுறை எரிசாராயம் கேரளம் போன்ற அயல் மாநிலங்களுக்கு லாரிகளில் மாற்றி மாற்றி

அகற்றப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தென்னிந்திய வர்த்தக சபையின் புதிய தலைவர் ஏ.சி. முத்தையா தமது தலைமையுரையில் எரி சாராயத்திலிருந்து பல்வேறு உபயோகப் பண்டங்கள், செயற்கை இழைகள், வார்னீசுகள், துணிகள், பிளாஸ்டிக் பொருட்கள், பசைகள் முதலானவற்றுக்குத் தேவையான மூலப் பொருட்களான எதனால் ஆக்டனால் ஆகியவற்றைத் தயாரிக்கலாம் என்றும் ஆகவே எரி சாராயம் உற்பத்தியின் முக்கியத்துவம் பல்வேறு நாடுகளாலும் உணரப்பட்டுள்ளதென்றும், தமிழகத்திலும் சாராயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களின் வளர்ச்சிக்கான கொள்கை முடிவெடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே முதலமைச்சர் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

தினமணியில் மட்டுமல்ல; மற்றும் பல ஏடுகளில் இந்தச் செய்திகள் வந்துள்ளன. தனக்குத் தெரிந்தவர்களே, இப்படிச் செய்கிறார்கள் என்றும் அந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டதாக வேறு ஏடுகளில் வந்துள்ளன.

அப்படி அனுமதிக்கப்பட்டதற்கு மேலாக வெளி மாநிலங்களுக்கு எரி சாராயத்தை எடுத்துச் சென்றவர்கள் மீது ஏன் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று இப்போது பிப்ரவரியில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் மட்டுமல்ல; அப்போதே அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் (பத்திரிகைகளில் முதல்வரின் பேச்சு வெளிவந்த அதே நாள்) சென்னை வேளச்சேரி பொதுக்கூட்டத்தில் நான் பேசியுள்ளதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதோ அந்தப் பொதுக்கூட்டப் பேச்சின் ஒரு பகுதி:-

முதல்வர் எம்.ஜி.ஆர். நேற்றைய தினம், தமிழ்நாட்டு வர்த்தக சபையிலே - தொழிலதிபர்களுடைய கூட்டத்தில் பேசும் போது ஒரு அரிய செய்தியைச் சொல்கிறார்; அது என்ன செய்தி தெரியுமா? ஆங்கிலம், தமிழ் முதலான எல்லாப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

பத்து லட்சம் லிட்டர் எரி சாராயம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பலாம் என்று அனுமதி கொடுத்தேன். ஆனால், கூடுதலாக

ஐந்து லட்சம் லிட்டர் அனுப்புவதாகச் செய்தி வருகிறது. கறுப்புப்பணம் பெற்றுக்கொண்டு இப்படி அனுப்புவது நியாயம்தானா?

இப்படிப் பேசியிருக்கிறார்.

ஒருவர், முதலமைச்சரிடத்திலே அனுமதி கேட்கிறார். என்ன அனுமதி தெரியுமா?

தமிழ்நாட்டிலே இருந்து ஸ்பிரிட்-ஆல்கஹால் - அதாவது எரி சாராயத்தை வெளி மாநிலங்களுக்கு அனுப்ப அப்போது அனுமதி இல்லை. எனவே அவர் எம்.ஜி.ஆரிடத்திலே இருந்து ஒரு சிறப்பு அனுமதி கேட்கிறார்.

எம்.ஜி.ஆர். தடையிருக்கிறதே என்று சொல்லுகிறார். நீங்கள் அனுமதி கொடுங்கள் என்று அந்த வியாபாரி முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடத்தில் விண்ணப்பம் போடுகிறார்.

அதைப்பற்றித்தான் எம்.ஜி.ஆர். பேசி இருக்கிறார். அந்த விண்ணப்பத்தில், எனக்கு தனியாக எரி சாராயத்தை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல பத்து லட்சம் லிட்டருக்கு அனுமதி வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. எம்.ஜி.ஆரும் தந்து விடுகிறார்.

தந்து விட்டு, இப்பொழுது சொல்கிறார்; நான் பத்து லட்சத்திற்கு அனுமதி கொடுத்தேன். அவர் பதினைந்து லட்சம் லிட்டரை எடுத்துக் கொண்டு போய் கறுப்புப் பணம் சம்பாதிக்கிறார் - நியாயம்தானா? என்று கேட்கிறார்.

நியாயம்தானா? என்று கேட்க வேண்டியவர்கள் யார்? கையிலே சட்டத்தை வைத்துக் கொண்டிராத ஒரு சாதாரண குடிமகன் இது நியாயம்தானா என்று கேட்கலாம்!

இது நியாயம்தானா? என்று எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் கேட்கலாம் - ஆனால் முதலமைச்சரே கேட்கிறார், நியாயம்தானா? நேர்மைதானா? என்று!

இதை இப்போது சட்டப் பேரவையில் நினைவுபடுத்தி, பத்து லட்சம் லிட்டருக்கு அனுமதி பெற்று, பதினைந்து லட்சம் எடுத்துப் போனவரைப் பற்றி முதலமைச்சரே பகிரங்கமாக குற்றம் சுமத்திவிட்டு, அத்தகையவர் மீது நடவடிக்கை எடுக்காத காரணம்

என்ன - என்று கேட்டபோது எம்.ஜி.ஆர். அளித்த பதில் என்ன தெரியுமா?

நான் சென்னை வர்த்தகர் சங்கக் கூட்டத்தில் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னேன். அப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்று மற்றவர்களை எச்சரிப்பதற்காகச் சொன்னேன்.

இப்படித்தான் சமாளிக்கப் பார்த்தார்!

எரி சாராயம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பக் கூடாதெனத் தடை போடுவது ஒருநாள் - மறுநாள் அந்தத் தடையை அகற்றுவது - மீண்டும் தடைபோடுவது - மீண்டும் தடையை நீக்குவது - இந்த ஆணைகளுக்கு இடையிலேதான் பயங்கரமான ஊழல்கள் கொடிகட்டிப் பறந்திருக்கின்றன!

எரி சாராயக் கடத்தல் எல்லை மீறி நடைபெறுகிறது என்று வர்த்தக சபை விழாவில் அக்டோபர் 11-ஆம் நாள் திட்டவட்டமாக ஒப்புக் கொண்ட முதலமைச்சர்; அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் - கேரளாவில் இந்த விவகாரம் அம்பலத்திற்கு வந்த பிறகே நடவடிக்கை எடுப்பது போல நடித்ததற்கு என்ன காரணம்?

கடுமையான குரலில்
மக்கள் கேட்கிறார்கள்!
கைலாச விசாரணையால்
மக்களை ஏமாற்றிவிடலாமெனக்
கனவு காணாதீர்கள்!

இம்மாதம் 15-ஆம் நாள் கழகச் சார்பில் நடைபெற இருக்கிற எரி சாராய ஊழல் கண்டனக் கூட்டங்களில் சட்டசபை விவாதங்களையும் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளையும் நான் எழுதியுள்ள விளக்கக் கடிதங்களையும் கழகப் பேச்சாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(14-02-1981)

868. தலைமை நிர்வாகக்குழு கூடுகிறது!

உடன்பிறப்பே,

இன்று - பிப்ரவரி 15-ஆம் நாள் தமிழகமெங்கணும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் எரி சாராய ஊழல் பற்றிய விபரங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதோடு மட்டுமல்ல - ஊரையடித்து உலையில் போடும் இந்த உத்தமர்களின் (?) உண்மை உருவம் உலகிற்குத் தெரியும் வரையில் நமது பணி ஓயப் போவதில்லை. அதற்கான அறப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திட முறைகளை வகுக்கும் வகையில் கழகத்தின் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டம் வரும் 17-ஆம் நாள் சென்னையில் நடைபெற இருக்கிறது.

எம்.ஜி.ஆர். தன்னுடைய குடும்ப நண்பர் ஒருவரை நீதி விசாரணைக்கு நீதிபதியாக நியமித்திருப்பது தமிழ்நாட்டு மக்களின் கண்களில் மண்ணைத் தூவுகின்ற காரியமாகும்.

தனது நடுநிலைத் தன்மை சந்தேகத்திற்குரிய ஒன்றாக ஆகிடும்போது அத்தகைய சிக்கலான சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நாகரீக மனப்பான்மை பழைய நீதிபதி கைலாசம் அவர்களுக்கு இருக்குமென்று நாடு, இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறது.

அவரைப் பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டிய பொறுப்பை அவரிடமே விட்டு விடுவோம்.

மத்திய அரசைக் கேட்டு மேல்மட்ட அமைப்பு ஒன்றின் விசாரணைக்குத் தன்னையும் தனது அரசையும் உட்படுத்திக்கொள்ள வேண்டியதுதான் எம்.ஜி.ஆர். எடுக்க வேண்டிய முடிவாகும்! தமிழ்நாடு மாத்திரமின்றி கேரளம் போன்ற வேறு மாநிலங்களையும் தொடர்பு கொண்டுள்ள மிகப்பெரும் ஊழல் ஒன்றில் பொதுவான விசாரணைதான் பொருத்தமுடையதே தவிர - தமிழ்நாட்டுப் பழைய நீதிபதியொருவரை - அதுவும் மிக நெருங்கிய குடும்ப நண்பரை - விசாரணை செய்யச்

சொல்லி அறிக்கை எழுதுவது என்பது எப்படியிருக்குமென்றால் - திரைப்படத்தில் சௌந்தரராசன் பாட்டுக்கு எம்.ஜி.ஆர். வாயசைப்பது போலத்தானிருக்கும்! அதாவது இந்த விசாரணைத் திரைக்காட்சியில் எம்.ஜி.ஆர். இசைப்பார்! கைலாசம் அசைப்பார் வாயை!

இப்படியொரு கேலிக்கிடமான விசாரணையினால் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காட்டப்படப் போவதில்லை.

விசாரணையின் முடிவு கூட எப்படி இருக்குமாம்? இனிமேல் எரி சாராய அனுமதி வழங்குவது எப்படி முறைப்படுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரையைக் கைலாசம் அறிக்கையாகத் தருவாராம்!

நான் கேட்கிறேன்; நாடு கேட்கிறது - இனிமேல்தானா அது எப்படி விநியோகிக்கப்படலாம் என்று முறைப்படுத்தப்பட வேண்டும்?

இதே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13-ஆம் நாள் கவர்னர் உரை மீது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது திட்டவட்டமாக என்ன சொன்னார்! இதோ அந்த உரை :-

இங்கே ஸ்பிரிட் வேண்டுமென்று கேட்கிறார்கள். வார்னீஷ் வேண்டுமென்று கேட்கிறார்கள். லித்தோ பிரசுக்கு என்னிடமே கொண்டு வந்தார்கள். எட்டு லட்சம் லிட்டர் தேவைப்படும் என்று கேட்டார்கள். அவைகளையெல்லாம் நாங்கள் கணக்குப் போட்டு பார்த்து இனிமேல் நேரடியாக லைசென்ஸ் கொடுப்பதில்லையென்றும் - கூட்டுறவு முறையில் குறிப்பிட்ட சங்கங்களை அமைத்து அரசினுடைய அங்கீகாரம் பெற்று, கடைகளை வைக்கிற வியாபாரிகளுக்கு மட்டும் கொடுப்பது என்றும் எல்லோருக்கும் கொடுப்பதில்லையென்றும் முடிவு எடுத்திருக்கிறோம்.

1978-இல் இப்படியொரு முடிவு எடுத்த பிறகு - அந்த முடிவை நிலைநாட்டாத காரணம் என்ன? இப்படியொரு முடிவை அறிவித்த பிறகு தானே 1979 ஜூன் மாதம் 26-ஆம் தேதி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் எரி சாராய லாரிகளுடன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வரத் தேவையில்லையென்ற

சாராயத் தொழிலதிபர்களின் வேண்டுகோளையேற்று இந்த அரசு அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையெல்லாம் வாபஸ் பெற்று வீட்டுக்கு அனுப்பியது!

1978 செப்டம்பரில் சட்டப் பேரவையில், எம்.ஜி.ஆர். இப்படியொரு முடிவை அறிவித்த பிறகு தானே -

ஜூலையில் தடை!
ஆகஸ்டில் தடை நீக்கம்!
செப்டம்பரில் தடை!
அக்டோபரில் தடை நீக்கம்!
மீண்டும் தடை! தடை நீக்கம்!

இப்படிப்பட்ட விசித்திர விநோதங்கள் மாறி மாறி நடைபெற்றிருக்கின்றன!

1978-இல் பேரவையில் எரி சாராய அனுமதி பற்றிய முடிவை அறிவிக்கிறார்! 78, 79, 80 ஆகிய ஆண்டுகளில் எரி சாராயம் எங்கெங்கோ - எப்படியெப்படியோ - லஞ்ச லாவண்ய மஞ்சங்களில் புரண்டு எழுந்து போய்க் கொண்டிருக்கிறது; ஆட்சியாளரின் பூரண அனுக்கிரகத்தோடு!

இதை 1980 அக்டோபரில் முதலமைச்சரே ஒப்புக் கொள்கிறார்! ஊழல் அம்பலத்திற்கு வந்துவிட்டது எனத் தெரிந்ததும் - தென்னிந்திய வர்த்தக சபையில் பேசும்போது அவரே குறிப்பிடுகிறார், பத்து லட்சம் லிட்டருக்கு ஒருவருக்கு அனுமதி கொடுத்தோம்; அவர் பதினைந்து லட்சம் லிட்டர் எடுத்துப் போய் விட்டார் என்று!

அவர் அப்படி எடுத்துப் போனது தெரிந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஒருபுறம் இருக்கட்டும் - 1978-இல் பேரவையில் முதல்வர் அறிவித்த கொள்கை முடிவுக்கு மாறாக - ஏன் இப்படிப் பல தனியார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது?

1979-இல் ராணிப்பேட்டை தனலட்சுமி கெமிக்கல்ஸ் தொழிற்சாலைக்கு டிரயல் ரன்னுக்கு ஐந்தாயிரம் அல்லது பத்தாயிரம் லிட்டர் போதுமானதாக இருக்கும்போது ஒரு லட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரம் லிட்டர் எரி சாராயம் டிரையல் ரன்னுக்காக மட்டும் தரப்பட்டது ஏன்?

மத்திய மொலாசஸ் போர்டு, ஆந்திர அரசுக்கு அறுபது லட்சம் லிட்டர் அனுப்புமாறு சிபாரிசு செய்திருந்தும் - இந்த அரசு இருபத்தி நாலு லட்சம் லிட்டர் மட்டுமே ஆந்திர அரசுக்கு அனுப்பிவிட்டு - முப்பது லட்சம் லிட்டர் அளவுக்குத் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுத்த மர்மம் என்ன?

1978-இல் சட்டசபையில் முதல்வர் எம்.ஜி.ஆர். எரி சாராய அனுமதி பற்றிப் பேசியதற்கும் - செய்த அறிவிப்புக்கும் இந்தச் செயல்கள் முற்றிலும் முரண்பாடானவை அல்லவா?

உடன்பிறப்பே, எல்லாவற்றையும் மறைக்கத்தானே கைலாசத்தின் உதவியை நாடியிருக்கிறார்!

பரஸ்பரம் உதவிக் கொள்ளக்கூடிய இரண்டு நண்பர்கள்! ஒருவர்மீது குற்றச்சாட்டு! அவர் தன்னை விசாரிக்க தனது நண்பரை நீதிபதியாக நியமித்துக் கொள்கிறார்.

இதில் மேல்மட்ட மத்திய அமைப்பு ஒன்றின் முழுமையான விசாரணை - நடைபெற்றாக வேண்டும். அதனை இந்த அரசே, வேண்டிப் பெற வேண்டும். இது ஒரு மாநிலப் பிரச்சினையல்ல! ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களின் பிரச்சினை! அதனால் பொதுவான விசாரணை தவிர்க்க முடியாதது!

இதனை ஏற்காமல் எம்.ஜி.ஆரின் குடும்ப நண்பர் கைலாசத்தைக் கொண்டோ - அல்லது இந்த மாநில அளவிலோ விசாரணை நாடகம் நடைபெறுமென்றால் - கழகம், அதனை மறுத்தும் கண்டித்தும் அறப்போர்க் களத்திலே குதித்தே தீரும்!

அதற்கான திட்டங்களை வகுத்திடவே தலைமை நிர்வாகக் குழு அவசரமாகக் கூடுகிறது!

அன்புள்ள,

மு. க.

(15-02-1981)

869. பாவம்; கான்யூட் மன்னர்கள்!

உடன்பிறப்பே,

எரி சாராய ஊழல் பற்றிக் கைலாசம் அவர்கள் எந்த அடிப்படையில் விசாரணை நடத்துவார் என்பது குறித்து அரசாங்கம் கெசட் அறிவிப்பை வெளியிட்டுவிட்டது.

சட்டப்பேரவையில் எம்.ஜி.ஆர். அரசின் மீது எரி சாராய ஊழல் பற்றி அடுக்கடுக்காக - ஆதாரபூர்வமாக - தேதி வாரியாக - சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதைப்பற்றியும் கைலாசம் விசாரிக்க மாட்டாராம்!

1978 செப்டம்பர் திங்கள் 13-ஆம் நாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். எரி சாராய அனுமதி வழங்குவது பற்றி அரசின் சார்பில் ஒரு கொள்கைப் பிரகடனம் செய்தாரே; அதன்படி அனுமதிகள் வழங்கப்பட்டதா?

அதுகுறித்து கைலாசம் விசாரிப்பாரா? மூச்! அதெல்லாம் (Terms of Reference) விசாரணைக்கான அடிப்படைகள் பற்றிய அறிவிப்பில் இடம் பெறவில்லை.

சரி! 1979-ஆம் ஆண்டு எரி சாராயத் தொழிலதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெளிமாநிலங்களுக்குச் செல்லும் எரி சாராய லாரிகளில் கண்காணிப்புக்காகச் சென்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை 26-6-79-ஆம் நாள் உத்திரவுப்படி அரசாங்கம் வாபஸ் பெற்று வீட்டுக்கு அனுப்பியதே; அதில் மறைந்து கிடக்கும் மர்மத்தைக் கைலாசம் விசாரிப்பாரா?

மாட்டார்! மாட்டார்! அதை விசாரிக்கச் சொல்லி, விபரீத விளைவுகளை ஏற்படுத்திக் கொள்ள எம்.ஜி.ஆர். என்ன அவ்வளவு விவேகமில்லாதவரா?

போகட்டும்; 1980 ஜூலை 4-ஆம் நாள் எரி சாராய ஏற்றுமதிக்குத் தடை போடப்பட்டதே; அப்படிப் போடப் பட்ட தடை - 1980 ஆகஸ்டு 28-ஆம் நாள் நீக்கப்பட்டதே;

கைலாசம் அவர்கள் அந்த உத்திரவுகளுக்கான கோப்புகளைப் பார்த்து அவற்றின் மீது விசாரணை நடத்துகிற நிலை உண்டா?

இல்லை! 1978 முதல் இந்த ஊழல் நடைபெற்று வருகிறது என்று கேரள முதல்வர் நாயனார் சொன்ன அடிப்படையில் எம்.ஜி.ஆர். விசாரணைக் கமிஷன் வைத்திருப்பாரேயானால் - இந்த அரசின் மீது சட்டப் பேரவையில் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்; தமிழகக் கேரள மாநில நாளேடுகளில் வெளிவந்துள்ள பயங்கர ஊழல் செய்திகள்; அத்தனையும் 1978 முதல் இதுவரையில் என்று காலவரையறை வகுத்து விசாரணைக்குரிய விஷயங்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்க முடியும்.

அக்டோபர் 15 - 1980 என்று தேதியிட்டு ஒரு கம்பெனிக்கு எழுதிய கடிதத்தில் தடை நீடிக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிற இந்த அரசு, பிறகு எப்போது - ஏன் - எந்தச் சூழ்நிலையில் - யாருடைய தனிப்பட்ட ஆதாயத்திற்காக மீண்டும் தடையை விலக்கியது?

இவைகளையெல்லாம் விசாரணைக்குரிய விஷயங்களாக்கிச் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றுதான் - அரவிந்த், ஓரியான் என்ற எரி சாராய ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிகள் பற்றியும் - அவர்கள் உண்மையிலேயே எவ்வளவு எரி சாராயத்தை கேரளத்து மன்னம் சர்க்கரை ஆலைக்கு ஏற்றுமதி செய்தார்கள் என்பது பற்றியும் - கைலாசம் விசாரித்து அவற்றில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால் இனி அத்தகைய முறைகேடுகள் நடக்காதிருக்க வழிவகைகளைப் பரிந்துரை செய்வார் என்று மட்டும் விசாரணைக்குரிய விஷயம் குறுக்கப்பட்டிருக்கிறது!

அதுவும் 1980 - அக்டோபர், நவம்பர் ஆகிய இந்த இரண்டு மாதங்களில் நடைபெற்றுள்ள ஏற்றுமதி - தரப்பட்டுள்ள அனுமதி - இதை விசாரித்து அறிக்கை தர கைலாசத்திற்கு மூன்று மாதம் எதற்காக? மூன்றே வாரம் - ஏன்; மூன்றே நாட்கள் கூடப் போதும்!

ஃஃ குடும்ப நண்பர் கைலாசத்தையே விசாரணைக் கமிஷன் நீதிபதியாக நியமித்தது ஏற்றுக்கொள்ள முடியாத முதல் தவறு!

ஃ ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் தொடர்புடைய விவகாரத்தில் ஒரு பொதுவான மேல்மட்ட விசாரணைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாதது இரண்டாவது தவறு!

ஃ கைலாசம் விசாரணைக்கென்று தரப்பட்டுள்ள அடிப்படை விஷயங்கள்; இந்த அரசின் மீது 1978 முதல் சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகளைப் பற்றியவைகளாக இல்லாமல் - அக்டோபர், நவம்பர் 1980 என்று ஒரு கோட்டுக்குள் அமைக்கப்பட்டிருப்பது மூன்றாவது மிகப் பெருந்தவறு!

அடித்த கொள்ளையை மறைப்பதற்காகவும் - அதே நேரத்தில் இனியும் உத்தமர் வேடம் போட்டு ஊரை ஏமாற்றுவதற்காகவும் - கைலாசம் நீதி விசாரணை அறிவிப்பும் - அந்த விசாரணைக்குரிய விஷயங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிடையே கைலாசம் அவர்கள், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், எரி சாராயக் கடத்தல் மோசடி சம்பந்தமாக தமிழக அரசு நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளதும் - கேரள அரசு தனியாக நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளதின் காரணமாக இரு விசாரணைகளையடுத்து மோதல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறியிருக்கிறார்.

எரி சாராயக் கடத்தல் மோசடி என்று கைலாசம் இப்போதே திட்டவட்டமாகக் கூறியிருப்பது - கடத்தல் காரர்கள்தான் குற்றவாளிகளே தவிர, கடத்தல்காரர்களிடம் கையூட்டுப் பெற்றுக்கொண்டு அவர்கள் கடத்துவதற்கு வழிவகுத்துக் கொடுத்த தமிழ்நாட்டு ஆட்சியின் பெரும் புள்ளிகள் குற்றவாளிகள் அல்ல; என்று முன் கூட்டியே அறிவித்திருப்பது போல் இருக்கிறது!

தமிழக விசாரணைக்கும் கேரள விசாரணைக்கும் மோதல் இல்லை என்கிறார் கைலாசம்! இது ஏதோ இந்த இரு விசாரணைக் கமிஷன்களையும் கிண்டல் செய்வது போலிருக்கிறது!

ஆனால் ஒன்று - எம்.ஜி.ஆரின் குடும்ப நண்பர் கிண்டல் செய்வாரா?

எம்.ஜி.ஆர். அவர்கள்; மாநிலங்களவைத் தேர்தல் போன்ற எத்தனையோ அரசியல் முடிவுகளை கைலாசம் இல்லத்தில் கூடிப் பேசி எடுத்திருக்கிறார் என்பது ஊரறிந்த உண்மை!

அந்த அளவுக்கு இருவரும் குடும்ப நண்பர்கள்! எனவே இந்தப் பயங்கர ஊழல் விசாரணையில் எம்.ஜி.ஆர். தனது குடும்ப நண்பரை நியமித்திருப்பதும் - விசாரணைக்குரிய விஷயங்களை அறிவித்திருப்பதும் ஜனநாயக உணர்வுகளையே அசிங்கப்படுத்துவதாகும்.

இரு விசாரணைகளுக்குமிடையே மோதுதல் வராது என்று முன்கூட்டியே எப்படிச் சொல்லுகிறார்? இதிலிருந்து இரு விசாரணைகளுமே திட்டமிட்டு விவாதித்துப் பேசி எடுத்த முடிவுகளின் விளைவுகள் என்பதைக் கைலாசம், தன்னையுமறியாமல் ஒப்புக் கொள்கிறாரா?

இந்த ஊழலில் கதாநாயகன் இந்த மாநிலத்தின் பெரியபுள்ளி! அவர் தன்னை இந்த விசாரணைக்கு ஆட்படுத்திக் கொள்ள மறுக்கலாம் - அதற்கு இங்குள்ள கமிஷனும் துணை நிற்கலாம்! அல்லது அந்தப் புள்ளி, கைலாசக் கிருபை இருப்பதால் தமிழ்நாட்டில் கூண்டிலேறிவிட்டு, கேரளத்து விசாரணைக்குச் செல்ல மறுக்கலாம். அப்படி நிகழும் போது கேரளக் கமிஷனுக்கு இந்த உண்மை தெரிய வாய்ப்பே இல்லாமற் போய்விடக் கூடும்.

உதாரணமாக, இந்த ஊழலில் அச்சாணி போல் உள்ள அகமத்கானை எடுத்துக் கொள்வோம்! அவர் கேரள விசாரணைக்கு மட்டும் தன்னை ஆட்படுத்திக் கொண்டு கைலாச விசாரணைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள மறுத்துவிட்டால்? -

எனவே இரண்டு கமிஷன்களுக்கும் இரண்டு மாதிரியான விஷயங்கள் தெரிந்து - முன்னுக்குப்பின் முரணான முடிவுகள் வரலாம்!

இரு கமிஷன்களும் ஒரே தஸ்தாவேஜுகளைத்தான் பார்வையிட வேண்டியிருக்கும்.

இதனால் இரு கமிஷன்களின் பணிகளும் தடைப்படும்.

ஒரேவிதமான தஸ்தாவேஜுகளைப் பார்த்து விட்டு இரு கமிஷன்களும் ஒரே மாதிரியான முடிவுக்கு வந்து சேர வேண்டுமென்ற அவசியம் கிடையாது!

இங்குள்ள பெரிய புள்ளியின் முயற்சியால் - அல்லது கைலாச விசாரணைத் திரைமறைவால் - லஞ்சம் வாங்கிய விவகாரமே வெளிவரவில்லையென்று வைத்துக் கொள்வோம்;

கேரளாவில் அகமத்கானோ அல்லது மகமத்கானோ - யாரோ ஒரு பேர்வழி - கிளிவிடுதூது மூலம் மேற்படியாருக்குக் கொடுத்த தொகை இத்தனை லட்சம் என்று தெரிவிப்பதாக வைத்துக் கொள்வோம்;

அப்போது இந்த விசாரணைக் கமிஷன் விவகாரம் வேடிக்கைக் கூத்தாக ஆகிவிடாதா?

இதுகுறித்து இன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் அதன் டெல்லி நிருபர் கோவிந்தன் குட்டி அவர்கள் எழுதியுள்ளது வருமாறு:-

விசாரணைக் கமிஷன் சட்டப்படி; மத்திய அரசு ஒரு விசாரணையை அமைப்பதை முன்கூட்டியே தடுப்பதற்குத்தான் இந்த இரண்டு மாநில அரசுகளும் ஒரே நேரத்தில் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதாக இதைக் கூர்ந்து கவனிப்போர் நம்புகிறார்கள்.

இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

எனினும் இரு மாநிலப் பிரச்சினை என்பதால் இந்தக் கேலிக்கூத்தை நிறுத்தி மத்திய அரசே விசாரிப்பதற்கும் இப்போது சட்டத்தில் இடமிருக்கிறது

-என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்!

ஆனால் இவற்றில் எதையுமே காதில் போட்டுக் கொள்ளாமல் இங்குள்ளோர், கைலாசத்தின் கையில் பேனாவைக் கொடுத்துத் தாங்கள் சொன்னபடி எழுதுவதற்கேற்ற வண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள்!

பாவம்; மக்களின் எழுச்சி அலையின் முன்னே இந்தக் கான்யூட் மன்னர்கள்...

அன்புள்ள,

மு. க.

(17-02-1981)

870. நிதிநிலை அறிக்கை எப்போது?

உடன்பிறப்பே,

பதினெட்டு பேர் மந்திரிகள்! பட்ஜெட் தயாரிக்கக்கூட நேரம் இல்லையாம்! (Standing Finance Committee) நிதி நிலைக் குழுவின் கூட்டமே இப்போதுதான் இறுதி முடிவு எடுத்திருக்கிறதாம்! நிதி நிலைக் குழு என்பது அமைச்சரவையில் உள்ளவர்கள் சிலரைக் கொண்ட துணைக் குழு! இதில் முதல்வரும் நிதியமைச்சரும் மற்றும் ஓரிரு அமைச்சர்களும் இருப்பார்கள். நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் நாள் தொடங்கி மார்ச் இறுதிக்குள் முடிவதாகத் தான் அரசு, கணக்கிட்டு அதற்கான நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும். ஒவ்வொரு இலாகாவின் அமைச்சரையும் அதிகாரிகள் அனைவரையும் அழைத்துப் பேசி, அந்தந்த இலாகா மூலம் செலவிடப்பட இருக்கும் திட்ட வேலைகள், திட்டம் சாராத வேலைகள் பற்றி முடிவுகள் மேற்கொள்ளப்படும். எனவே இந்தப் பணி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி திங்களுக்குள் முடிவு பெற வேண்டும். அதைத் தொடர்ந்து அமைச்சரவை கூடி, நிதிநிலை அறிக்கைக்கான முழு வடிவத்தைத் தரும்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி இறுதி வாரத்தில் அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்தில் (பட்ஜெட்) நிதி நிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும். அதனையொட்டிப் பொது விவாதம் ஒரு வாரமும், பிறகு ஒவ்வொரு அமைச்சரும், அவரவர் துறைக்கான மானியக் கோரிக்கையை வைத்து நிதி ஒதுக்கீட்டு ஒப்புதலை சபையில் பெற விவாதமும் நடைபெற்று மார்ச் 31-க்குள் நிதி ஒதுக்கீடு மசோதா (Appropriation Bill) வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும்.

இந்த முறையானது தேர்தல் நடந்து முடிந்த ஆண்டில் மட்டும்தான் சற்று மாறுதல் பெற்று (Vote on Account) முன்கூட்டியே மொத்த வாக்கெடுப்பு ஓரிரு மாதங்களுக்கு மட்டும் எடுக்கப்பட்டு அரசு, அவையின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளும்.

இப்போது விசித்திரம் என்னவென்றால் - நிதி நிலைக் குழுவே மிகத் தாமதமாகக் கூடி இப்போது தான் இறுதி வடிவம் உருவாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

"Presentation of the Tamil Nadu Budget is likely to be delayed by a fortnight and a vote on account may be sought by the Government according to the current indications"

- என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. அதாவது இப்போதுள்ள நிலவரத்தின்படி நிதிநிலை அறிக்கையைத் தமிழக அரசு தாக்கல் செய்வது பதினைந்து நாட்கள் தாமதம் செய்யப்பட்டு - அதற்கு முன்கூட்டியே மொத்தமாக வாக்கெடுப்பு கோரப்படும் என்று தெரிவதாக அந்த ஏடு கூறுகிறது.

திட்டங்கள் இன்னும் முடிவு செய்யப்படாத காரணத்தால் மார்ச் மூன்றாம் வாரத்தில்தான் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று அறியப்படுகிறது.

எனவும் எக்ஸ்பிரஸ் ஏடு சுட்டிக்காட்டியிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாடு இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற காரணத்தால்தான் நிதிநிலைக் குழு ஆரம்பத்தில் கூட்டப்படவில்லை என்றும் அதே எக்ஸ்பிரஸ் ஏடு சமாதானமும் கூறியிருக்கிறது!

1968-ஆம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்த போதும் ஆண்டின் தொடக்கமான ஜனவரி 4-ஆம் நாள்தான் உலகத் தமிழ் மாநாடு தொடங்கி நடைபெற்றது. இப்போது மதுரையில் நடைபெற்ற மாநாட்டை விட எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்கிய மாநாடு அது! தலைகள் அல்ல; முழு உருவச் சிலைகள் வைக்கப்பட்ட மாநாடு! வீரமா முனிவர் சிலைக்குக் கீழே ராபர்ட்-டி-நொபிலியின் பெயர் பொறித்த அடிக்கல்லையோ, ராபர்ட்-டி-நொபிலியின் சிலைக்குக் கீழே வீரமா முனிவர் பெயர் பொறித்த அடிக்கல்லையோ மாற்றிப் புதைத்த அலங்கோலங்கள் இல்லாத மாநாடு! அந்த மாநாடு நடைபெற்றதைத் தொடர்ந்து அந்த ஆண்டு (பட்ஜெட்) நிதி நிலை அறிக்கையினை 1968 பிப்ரவரி 28-ஆம் நாளன்றே அண்ணா அவர்கள் தாக்கல் செய்தார்கள்.

எனவே உலகத் தமிழ் மாநாட்டை ஒரு காரணமாகக் காட்டி இந்தத் தாமதப் போக்குக் குற்றத்திலிருந்து இந்த அரசு தப்பித்துக்கொள்ள முடியாது!

ஆகா! பத்திரிகைகள் எழுதி விட்டனவே - எதிர்க்கட்சி சுட்டிக்காட்டி விட்டதே - என்பதற்காக இனி அவசர அவசரமாகப் பட்ஜெட்டைத் தயாரித்து அளிப்பதற்கு முனைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை வழக்கமாக மார்ச் முதல் வாரத்திற்கு முன்பே தாக்கல் செய்யப்பட்டு விடும்.

ஏடு கூறுகிறது இப்படி! நாடு அறிந்த செய்தி இது! என் செய்வது கேடு மலிந்த நிர்வாகத்தில் இப்படி எத்தனையோ அலங்கோலங்கள்! அவற்றில் இது ஒன்று!

அன்புள்ள,

மு. க.

(19-02-1981)

871. ஆரம்பமாகிறது அறப்போர்!

உடன்பிறப்பே,

பிப்ரவரி 22-ஆம் நாள் - மார்ச் முதல் நாள் - இந்த இரு நாட்களும் - உத்தமர் வேடம் போட்டு ஊரை ஏமாற்றித் திரியும் ஊழல் பேர்வழிகளின் முகமூடிகளைக் கிழித்தெறியும் நாட்களாகும். தலைமைக் கழக நிர்வாகக் குழு, அறப்போராட்ட முறைகளை வகுத்தளித்திருக்கிறது.

எரி சாராய ஊழல், கப்பல் பேர ஊழல் இவைகளை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வருவது மட்டுமல்ல; எம்.ஜி.ஆரால் பெரும் ஊழல் புகார்கள் சாட்டப் பெற்றவர்கள் இப்போது எம்.ஜி.ஆர். அருகாமையில் பல்வேறு பொறுப்புகளில் அமர்ந்து கொண்டு அரிச்சந்திர கூத்து நடத்துவதையும் அம்பலமாக்கிடும் கடமையையும் நிறைவேற்றி - அத்துடன் நில்லாது விஷம்போல் ஏறும் விலைவாசிக் கொடுமை - வேலையில்லாத் திண்டாட்ட வேதனை - விவசாயிகளை வதைக்கும் அடக்குமுறைச் சட்டம் - தொழிலாளர் விரோதப் போக்கு - கிராம அதிகாரிகள் மீது காட்டப்படும் அநாகரிக மிரட்டல்கள் - ஆசிரியர்கள், அரசு அலுவலர் மீது அச்சுறுத்தும் சேட்டைகள் - இந்த அவலங்களுக்கெல்லாம் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பைத் திரட்டி அறப்போர் இயக்கம் நடத்திடவும் விரைவில் செயற்குழு பொதுக்குழுக்களைக் கூட்டிடத் தலைமை நிர்வாகக் குழு முடிவு செய்திருக்கிறது.

எரி சாராய ஊழலுக்கு நீதிவிசாரணை என்ற பெயரால் மக்களை அறிவற்றவர்களாகக் கருதிக் கொண்டு தனது குடும்ப நண்பர் கைலாசத்தை நியமித்து, அவர் விசாரிக்க வேண்டிய விஷயங்களையும் படுசொத்தையாகப் பட்டியல் போட்டுக் காட்டி அரசு; ஆணையொன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த ஆணை, ஆளை ஏய்க்கும் மாயை! உண்மைக்குத் திரைபோடும் உபாயம்! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு

போகட்டுமென்று எவர் மீதோ பழியைப் போட்டு - தப்பித்துக் கொள்ளக் கையாளும் தந்திரம் - பாம்பும் நோகாமல் பாம்படிக்கும் தடியும் வளையாமல் பார்த்துக்கொண்டு - இன்னும் பாமர மக்களை விழிப்பற்ற உலகில் கிடத்திடச் செய்ய வகுத்திடும் வியூகம் -

எனவேதான் அந்த ஆணைக்கு முதன் முதலாகத் தீயிடும் நிகழ்ச்சி சென்னை மாநகரில் வரும் 22-ஆம் நாள் ஞாயிறன்று மாலை நடைபெற இருக்கிறது.

சென்னை மாவட்டச் செயலாளர் அருமைத் தம்பி சீத்தாபதி தலைமையில் அன்று பேரணியொன்று புறப்பட்டு, திருவாளர் கைலாசம் அவர்களிடம் முறையீடு ஒன்றைத் தந்து - எம்.ஜி.ஆரின் சாகசக் கூத்துக்குத் துணை நிற்காமல் விலகிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளும்.

அன்று மாலை சீத்தாபதி தலைமையில் சிங்கண்ண செட்டி தெருவில் நடைபெறும் கூட்டத்தில் - எனது ஆருயிர் இளவல் நாஞ்சிலார் பேசுகிறார்! வீணை அதிர்வது போலும் இருக்கும் - வில்லில் இருந்து அம்பு மழை பொழிவது போலும் இருக்கும் அந்தப் பேச்சு! விளக்கம் கொழிக்கும்! வீணர் தம் விதண்டா வாதங்களை நொறுக்கும்! அந்தப் பேச்சின் முடிவில் கைலாச விசாரணைக்கான அரசு ஆணைக்கு நாஞ்சிலார் தீ மூட்டுவார்!

அன்று பற்றியெரியும் தீ, மார்ச் முதல் நாள் தமிழகத்தில் மாவட்ட, வட்டத் தலை நகர்களில் எல்லாம் அந்த அரசு ஆணையின் மீது பரவும்!

உடனடியாக மாவட்ட, ஒன்றியக் கழகக் கூட்டங்கள் கூட்டப்பெற்று மார்ச் முதல் நாள் ஆங்காங்கு நடைபெறும் கண்டனப் பேரணிகளுக்குத் தலைமை வகிப்போர் யார் என்ற விபரங்களையும் - பேரணி முடிவில் கைலாச விசாரணை அரசு ஆணையைக் கொளுத்துவோர் யார் என்ற முடிவுகளையும் உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

நாடாளுமன்ற, சட்டமன்றக் கூட்டங்கள் இருப்பதால் இந்த அறப்போரில் எம்.பி.க்களும், எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களும் கலந்து கொள்ள வேண்டாமென்று ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எனினும் திடீரென நானோ அல்லது நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் போன்றவர்களோ கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவானால் அப்போது அந்த ஆட்சிமன்றப் பதவிகள் குறுக்கே நிற்க மாட்டா என்பதையும் முன்னரே அறிவித்திருக்கிறேன்.

உடன்பிறப்பே, ஊழல் சாம்ராஜ்யாதிபதிகள் - உண்மையிலேயே யார் என்பதும்; அவர்கள் இன்று பதுங்கியிருக்கும் இருட்டு மண்டபம் எம்.ஜி.ஆர். கட்சிதான் என்பதும் - இன்று நாட்டு மக்களுக்குப் பரவலாகப் புரிந்து விட்டது! அதனை ஆழமாகப் புரியவைக்க; ஆரம்பமாகிறது நமது முதற்கட்ட அறப்போர்!

சென்னையில் தம்பி சீத்தாபதி தலைமையில் நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் இந்த அறப் போராட்டத்தைத் தொடங்கி வைக்கும் அன்பு இளவல் நாஞ்சிலாரையும் - அவர்களைத் தொடர்ந்து மாநில முழுதும் மார்ச் முதல் நாள் அறப்போர்க் களம் புகுந்து ஆதிக்க மிரட்டல் வாதிகளுக்கு எதிராக நெஞ்சுயர்த்தி நின்று அரசு ஆணையை நெருப்புக்குத் தீனியாக்க இருக்கும் இனிய உடன் பிறப்புக்களையும் வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, அரவணைத்து அகமகிழ்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(20-02-1981)

872. மிதிக்க வேண்டாம்; தாண்டிச் செல்வோம்!

உடன்பிறப்பே,

எந்த மனிதனும் இறவா வரம் பெற்றவனல்ல! அப்படியொரு வரம் தந்திட யாரும் இல்லை! இரும்பால் அடித்து வைத்த உருவங்களில் கூடத் துரு ஏறுகிறது! கல்லால் ஆன சிற்பங்கள் கூட ஊனமுறுகின்றன! மனிதன், அவன் தன்னை மகான் என்றே கூறிக் கொள்ளட்டும் - முனிபுங்கவர் என்றே வர்ணித்துக் கொள்ளட்டும் - ரிஷீஸ்வரர் என்றே விளம்பரப்படுத்திக் கொள்ளட்டும்; சித்துக்கள் விளையாடும் செம்மல் என்றே சிறப்பித்துக்கொள்ளட்டும் - அந்த உடல்கள் அனைத்துமே தசையாலும், குருதியாலும், எலும்பு, தோலாலும், நாடி நரம்புகளாலும் ஆனவைகள்தான்! நோய்நொடிகளே அணுக முடியாத அளவுக்கு வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர் என்று யாரையும் குறிப்பிட்டுக் கூற யாராலும் முடியாது!

அதிகாலையில் எழுந்ததும் யோகாசனப் பயிற்சி - பின்னர் காலை உணவு; அளவோடு - சரியான நேரத்தில்! பிற்பகல் உணவு உடலுக்கு வலிவேற்றத்தக்கதாக! அதைத் தொடர்ந்து ஓய்வு! மாலை; குறைந்த அளவில் நிறைந்த சத்தூட்டக்கூடிய சிற்றுண்டி! அதுவும் குறித்த நேரம் தவறாமல் - இரவு, பால்பழம் பாதாம் பருப்பு - அயர்ந்த நித்திரை!

இப்படிப் பழக்கிக் கொண்டவர்களுக்கே, உடல் நிரந்தர ஆரோக்கியமில்லாமல் ஏதாவது நோய்நொடி தலைவலி காய்ச்சல் வருகிறதென்றால் - சரியான நேரத்தில் ஒருநாள்கூட; ஏன் - ஒருவேளைகூட உணவு அருந்தாமல் - காலையிலே இரண்டு அல்லது மூன்று திருமண நிகழ்ச்சிகளுக்குத் தலைமை - அல்லது வாழ்த்துரை - பிறகு ஒரு சிறப்புக் கூட்டம் - பின்னர் உணவருந்தச்

செல்லும் இடத்திற்குப் போகும் வழியில் நாலு பகுதியில் கொடியேற்று விழா - பிற்பகல் மூன்று மணிக்கு உணவு - மீண்டும் நாலரை மணிக்கு ஒரு ஊரில் வரவேற்பு நிகழ்ச்சி - அதைத் தொடர்ந்து ஐம்பது கல் தொலைவில் ஐந்து பொதுக்கூட்டங்கள் - விடியற்காலை இரவு உணவு - இப்படிப் பொது வாழ்க்கையை அமைத்துக்கொண்ட எந்த அரசியல்வாதியாக இருந்தாலும் மாதத்தில் பத்து நாட்களாவது ஓய்வு என்று ஒன்று இருப்பதை உணர்ந்து அதனை மேற்கொண்டால்தான் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நீடித்த உழைப்பைத் தரமுடியும்.

உடன்பிறப்பே, கடந்த ஐந்தாறு மாதங்களில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையும் நாட்களும் உனக்குத் தெரியாததல்ல! ஈரோடு, திருவண்ணாமலை மாநாடுகளன்னியில் - திருச்சி தமிழர் திருநாள், தஞ்சை தியாகிகள் நினைவு நாள் - இந்தப் பெருநிகழ்ச்சிகள் தவிர, திருச்சி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும், தொடர்ந்து சுற்றுப்பயணங்கள்! இவற்றுக்கிடையே முரசொலியில் ஒருநாள் கடிதம் எழுதாவிட்டால் உனக்குக் கோபம் - குங்குமத்தில் ஒரு வாரம் குறளோவியம் தீட்டாவிட்டால் குறைபட்டுக் கொள்கிறாய் - முத்தாரம் இதழில் வாராவாரம் பேசும் கலை வளர்ப்போம் வாயிலாக உன்னிடம் பேசித் தீர வேண்டும் - அத்துடன் விடுகிறாயா? சென்னையில் இருக்கும்போது நாள் தவறாது கட்சி அலுவலகத்தில் உன்னைப் போன்ற நூற்றுக்கணக்கான உடன்பிறப்புக்களைச் சந்தித்தாக வேண்டும். பல்வேறு பிரிவு மக்களின் பிரச்சினைகள்! மாநிலத்தில் ஆங்காங்கு எழும் பொது விவகாரங்கள்! இவைகளைப் பற்றி நமது பொதுச் செயலாளருடன் மற்றுமுள்ள நமது கழகத் தலைவர்களிடமும் விவாதித்து முடிவுகள் எடுக்க வேண்டும் - இப்படிச் சுழலுகின்ற ஒரு வாழ்க்கை முறை - எனக்கு மட்டுமல்ல; நமது கழகத்திலே உழைப்பை நல்கி வளர்ந்துள்ள தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் - அவர்களுக்கு மட்டுமல்ல; வேறு கட்சிகளிலே இவ்வாறு அயராது உழைப்போர் - அனைவருக்குமே அடிக்கடி உடல்நிலையைத் தாக்குகின்ற தவிர்க்க முடியாத சூழலை உருவாக்கக் கூடியதுதான்!

பிப்ரவரியில் இரண்டு வாரங்களும், மார்ச் திங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒப்புதல் அளித்திருந்தேன். அதில் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள், திருமண விழாக்கள்!

திருமண விழாக்களுக்குக் கழக வளர்ச்சி நிதியாக முன்கூட்டியே தலைமைக் கழகத்தில் இரண்டாயிரம் ரூபாய் கட்டிவிட வேண்டும் என்ற முறையை நான் கடைப்பிடித்து வருகிறேன் என்பதும் நீ அறியாததல்ல!

15-ஆம் தேதி வளவனூர், விழுப்புரம் கூட்டங்களை முடித்துவிட்டு இரவு இரண்டரை மணிக்குச் சென்னை திரும்பினேன். அது முதல் சற்று உடல்நலிவு! 17-ஆம் தேதி நிர்வாகக் குழு! காலை பத்து மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரையில்! உடல்நிலையைப் பரிசோதித்த டாக்டர், கண்டிப்பாக ஒரு மாதமாவது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, மருந்தும் அளித்தார்!

நிகழ்ச்சிகளுக்கு ஒப்புதல் பெற்றவர்களை நேரில் அழைத்து எவ்வளவு விளக்கினாலும் என்ன சொல்வார்கள்? ஏன்; நீயே என்ன சொல்வாய்!

ஆமாம்! உடம்பைக் கவனித்துக் கொள்க! ஆனால் என் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்கு மட்டும் வந்து விட்டுப் பிறகு ஓய்வெடுத்துக் கொள்க!

இப்படி நீ சொல்லிச் சொல்லி நான் எத்தனை முறை அனுபவப்பட்டிருக்கிறேன். அதனால்தான் மார்ச் முடிய ஓய்வு பற்றி ஒரு சிறிய அறிக்கை வெளியிட வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது!

அதைச் சில ஏடுகள் - சில செய்தி நிறுவனங்கள் - ஏ, அப்பா! எவ்வளவு பெரிதுபடுத்தி விட்டன! நமது மகத்தான மாநாடுகளைப் பற்றிக் கடுகளவு கூடச் செய்திபோட மனமில்லாத ஏடுகள்; எனக்கு உடல் நிலை சிறிது சரியில்லையென்றதும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு அதனைப் பிரச்சினையாக்க முயற்சி மேற்கொண்டன என்பதை நினைக்கும்போது - நம்மைப்பற்றி அவைகள் கொண்டுள்ள மனப்பான்மை புரிகிறதல்லவா?

அதைப் புரிந்து கொண்டால் நாம் எப்படிப் பட்டவர்களுக்கு மத்தியில் இந்த இயக்கத்தை நடத்தி வருகிறோம் என்ற எச்சரிக்கை உணர்வு என்றைக்கும் நமக்கு அரணாக இருந்திடும்!

தலைமை நிர்வாகக் குழுவுக்கும் எனது உடல் நிலைமைக்கும் முடிச்சு போட்டு - நிர்வாகக் குழுவில் ஏதோ அமளி துமளி நடந்தது போல் ஆளுங்கட்சி ஏடு ஒன்று கற்பனைக் கட்டுரை வரைந்து தனது எரிச்சலையும் ஆத்திரத்தையும் தணித்துக் கொண்டது!

முதலில் அவர்கள், தங்கள் கட்சி அமைப்புக்களின் தேர்தலை முழுமையாக நடத்தி முடிக்கட்டும்! நாலு மாவட்டங்களில் முடிவுற்ற தேர்தல்கள் ரத்து! இன்று நாலு மாவட்டங்களில் தேர்தல் ஒத்திவைப்பு! ஓட்டுப்பெட்டிகள் ஊசலாடுகின்றன!

இந்த அழகு அங்கே! அவர்கள் தங்கள் விகாரத்தை மறைத்துக்கொள்ள நமது நிர்வாகக் குழுவில் தகராறு எனத் தம்பட்டம் கொட்டுகிறார்கள்!

இப்படிப்பட்ட மஞ்சள் ஏட்டுச் செய்திகளின் மூலம் இந்த இயக்கத்தை அழித்து விடலாமென அண்ணா அவர்கள் காலத்திலிருந்தே இழிதகையாளர்கள் முயற்சி நடத்தியிருக்கிறார்கள்!

அதில் அவர்கள் இறுதியாகத் தோல்வியைத்தான் தழுவியிருக்கிறார்கள்!

இப்போதும் என் உடல்நிலை - ஓய்வு - என்ற செய்தியைத் திரித்தும் திசை மாற்றியும் ஏகடியம் செய்தும் ஏளனம் புரிந்தும் வெளியிட்டுத் தங்கள் இயல்பை நாட்டுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

நமது குறிக்கோள் வென்றிட நாம் நடத்திடும் பயணத்தில் குறுக்கே படுத்து இடையூறு விளைவிக்கும் அவர்களை மிதித்துக் கொண்டு நாம் நடக்க வேண்டாம்; அவர்களை தாண்டியவாறு நமது பயணத்தைத் தொடருவோம்!

அன்புள்ள,

மு. க.

(21-02-1981)

873. அடக்குமுறை கண்டு அஞ்சியதில்லை; அஞ்சப் போவதுமில்லை!

உடன்பிறப்பே,

அரிசி பேர ஊழல் என்று பொது மேடைகளிலும், ஏடுகளிலும், சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலும் அன்றைய அமைச்சர் நண்பர் ப.உ. சண்முகம் அவர்கள் மீது எம்.ஜி.ஆர். கட்சியினர் அக்கினியாஸ்திரங்களையொத்த விமர்சனங்களைச் செய்தபோது நீதிபதி இராமபிரசாத் கமிஷன் நியமிக்கப்பட்டது.

அவர் ஓய்வு பெற்ற நீதிபதி அல்ல! பதவிப் பொறுப்பில் இருந்த நீதிபதி! அந்த நீதி விசாரணையைக் கண்டித்து வெளிநடப்பு செய்யவும் அந்த விசாரணை முடிவு அறிக்கையை இன்று வரையில் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும் எம்.ஜி.ஆர். கட்சியினருக்கு உரிமை உண்டாம்! அண்டை மாநில நீதிபதியைத்தான் நியமிக்க வேண்டுமென்று அப்போது அவர்கள் வலியுறுத்தி எழுப்பிய குரல் இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இப்போது தமிழ்நாடு மாத்திரமல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களைத் தொடர்புபடுத்தியுள்ள எரி சாராய ஊழல் பிரச்சினை குறித்து விசாரிக்க ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியை - அதுவும் மிக நெருக்கமான குடும்ப நண்பரை எம்.ஜி.ஆர். நியமித்துக் கொள்வாராம் - அதை அப்படியே ஒப்புக்கொண்டு அவரது விசாரணையைக் கைலாச விசாரணையென்று ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்!

தமிழ்நாட்டில் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி விசாரிப்பாராம்! கேரளத்தில் ஓய்வு பெறாத ஒரு நீதிபதி விசாரிப்பாராம்! தமிழ்நாட்டில்தான் தவறு நடந்திருக்கிறது என்று கேரள நீதி விசாரணையால் அறிவிக்கப்பட்டால் அது தமிழ்நாட்டைக் கட்டுப்படுத்துமா? அல்லது கேரளத்தில்தான் தவறு

நடந்திருக்கிறது என்று தமிழ்நாட்டு நீதி விசாரணையில் முடிவு அறிவிக்கப்பட்டால் அது கேரளத்தைக் கட்டுப்படுத்துமா?

கட்டுப்படுத்த முடியாது! அதனால்தான் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களின் பிரச்சினையாகி விட்டதால் - பொதுவான மேல்மட்ட விசாரணை மத்திய அரசின் சார்பில் வேண்டுமென்று கூறுகிறோம்.

கைலாசம் நண்பராக இருக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள் சிலர்! இருக்கலாம்; ஆனால் மாநிலங்களவைத் தேர்தல் வேட்பாளராக ரங்கநாதன் அவர்களை நிறுத்துவது பற்றி இதே கைலாசம் வீட்டில் எம்.ஜி.ஆரும் மற்றவர்களும் அரசியல் ஆலோசனை நடத்தி முடிவு எடுத்த அளவுக்குக் குடும்ப நண்பராயிற்றே!

அந்தக் குடும்ப நண்பர் நடத்தும் விசாரணைக்கு என்று அளிக்கப்பட்டுள்ள அடிப்படை விஷயங்கள் 1980 அக்டோபர், நவம்பர் மாதங்களில் தரப்பட்ட எரி சாராய அனுமதியைப் பற்றி மட்டுந்தான் என்பது கேலிக்குரியது மட்டுமல்ல - வெறும் கண்துடைப்பே தவிர வேறு என்ன?

1978 முதல் தொடங்கி, தமிழகத்தின் பெரிய புள்ளி ஈடுபட்டுள்ள இந்த எரி சாராய ஊழல் பல கோடி ரூபாய்க்கு நடைபெற்றிருக்கிறது என்பதற்குத் தேதி வாரியாக - ஆணைகள் வாரியாக - அரசுக் கடிதங்கள் வாரியாக - ஆதாரங்களைச் சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டிய பிறகும் - எல்லாவற்றையும் மறைத்துவிட்டு 1980 அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கு மட்டுமே விசாரணை என்பது பித்தலாட்டமல்லவா?

இந்தக் கண்துடைப்புக் கமிஷன் விசாரணைக்கு ஒப்புதல் அளித்து எம்.ஜி.ஆரின் கபட நாடகத்திற்குத் துணை போகாதீர்கள் என்று கேட்டுக்கொள்ள கைலாசம் அவர்களிடம் மகஜர் அளிக்க ஒரு பேரணி நடத்தினால் அதற்கு இந்த ஆட்சி, அனுமதி அளிக்காதாம்!

1972-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். தி.மு.க. ஆட்சியின் மீது புகார்களைக் கொடுத்து விட்டு அத்துடன் நிற்கவில்லை. 170-க்கு மேற்பட்ட கழக எம்.எல்.ஏ.க்களின் வீடுகளுக்கு அந்தந்தத் தொகுதியில் பேரணி நடத்தி, எம்.எல்.ஏ.க்களிடம் மகஜர் கொடுக்கச் செய்தார். அமைச்சர் வீடுகளுக்கும் அந்தப் பேரணிகள் சென்றன.

என் வீடு வரையில் பேரணி நடத்தி, என்னிடமும் அன்றைக்கு மகஜர் கொடுத்து விட்டுச் சென்றனர். அந்தப் பேரணிகளுக்கு அப்போது அனுமதி மறுக்கப்படவில்லை.

அதுமட்டுமா? என் பிறந்த நாளின்போது ஒவ்வொரு ஆண்டும் எனக்குக் கொடும்பாவி கட்டி எரிக்குமாறு எம்.ஜி.ஆர். திட்டம் வகுத்து, அவரது கட்சி ஏடுகளில் அறிவிப்புகள் தந்து, அந்தக் காரியத்தையும் பல இடங்களில் செய்தனர்!

இப்போது ஒரு போலித்தனமான விசாரணைக்கான அடிப்படை விஷயங்கள் என்ற கண்துடைப்பு அரசு ஆணையில் உள்ள பொய்மையை எடுத்துக்காட்ட அதனை தீயிட்டுக் கொளுத்தினால் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவார்களாம்!

தீ பரவாமல் தடுப்பார்களாம் - அதிகாரிகள் பேசுகிறார்கள் - ஸ்பென்சரில் தீ! தடுத்தார்கள்; பாராட்டுகிறேன்! இரண்டு நாட்களுக்கு முன்பு கோடம்பாக்கத்தில் நூற்றுக்கணக்கான குடிசைகள் தீயில் கருகின! அவற்றைத் தடுக்க முயற்சி செய்யட்டும்; வாழ்த்துவேன்!

சென்னையில், அரசின் ஆணைப் பிரதிக்கு நாஞ்சிலார் தீ மூட்டுவதையோ - அல்லது மார்ச் முதல் நாள் மாநில முழுவதும் அந்தப் பிரதிகளுக்குத் தீ மூட்டுவதையோ - முன்கூட்டித் தடுத்தோ - அல்லது தீ மூட்டிய பிறகு குற்றம் சுமத்தியோ வழக்குகள் தொடரலாம்!

ஆனால் தீயைப் பரவாமல் தடுப்போம் என்பவர்கள்; எரி சாராய ஊழல் தீ இன்று எட்டுத்திக்கிலும் பற்றி எரிகிறது; என்பதை மறந்துவிட வேண்டாம்!

மாதாவின் மீது ஆணை மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்; தாயின் மேலாணை அதனைத் தளர்த்தவும் மாட்டேன்! என்று மார்தட்டிய எம்.ஜி.ஆர். தனது கட்சிக்காரர்களை யெல்லாம் ஒவ்வொரு பகுதியிலும் சாராயச் சிற்றசர்களாக ஆக்கிக்கொண்டு, இப்போது இந்த ஆட்சிக்கே எரி சாராய ஊழல் சாம்ராஜ்யம் என்ற பெயர் சூட்டிக் கொண்டு பவனி வருகிறாரே; இந்த ஊழல் செய்தியைப் பரவாமல் தடுத்து விடப் போகிறார்களா?

பல்கேரியா கப்பல் பேர ஊழலைவிட அதிகமாகப் பற்றிக்கொண்டு எரிகிறது; இன்றைக்கு எரி சாராய ஊழல் தீ!

அரசு ஆணைப் பிரதிகளில் கழகத்தினர் மூட்டிடும் தீயைத் தடுக்கவோ - சட்டத்தைப் பயன்படுத்தித் தண்டிக்கவோ - அதிகார வர்க்கம் இருக்கலாம்! அவர்தம் கரங்களில் குண்டாந்தடிகள், குண்டுகள் நிரப்பிய துப்பாக்கிகள் இருக்கலாம்! அவற்றைக் கொண்டு அந்தத் தீயைத் தடுக்க முனையலாம்!

ஆனால்; இன்று தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் எல்லாம் எம்.ஜி.ஆர். ஆட்சியின் ஊழல்கள் பற்றிய தகவல்கள் தீயை விட வேகமாகப் பரவியிருக்கின்றன!

அதனை போலீஸ் படையோ - துப்பாக்கி ரவையோ - பரவாமல் தடுத்து விடமுடியாது!

அமைதியான முறையில் அறவழிக் கிளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளக் கழகம் முன்வந்துவிட்ட பிறகு - மிரட்டல்களையோ, அடக்குமுறைகளையோ கண்டு; பின்வாங்கிய வழக்கம் அதற்கு இல்லை என்பதை மட்டும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்வேன். அடக்குமுறை கண்டு அஞ்சியதுமில்லை - அஞ்சப்போவதுமில்லை!

அன்புள்ள,

மு. க.

(22-02-1981)

874. நான் வணங்கும் தெய்வம் நீதான்!

உடன்பிறப்பே,

தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள்கள் உண்டெனச் சிரிப்பாய் என்ற புரட்சிக் கவிஞரின் வீர வரிகளின் வடிவமாகத் திகழும் உன்னை நினைத்துப் போற்றி இதயமார வாழ்த்தி மகிழ்வது என்ற பெரும்பேறு பெற்றிருக்கிறேனே - அது ஒன்றே என் நெஞ்சில் பாயும் ஈட்டிகளையும், வேல்களையும் தாங்கக் கூடிய உறுதியும் வலிவும் வாய்ந்த கேடயமாகும்!

கடந்த காலச் சோதனைகளை; என் கண்ணின் மணியே! உன்னை எண்ணிக் கொண்டுதான் என்னை இரும்புக் கோட்டையாக்கிக் கொண்டு சமாளித்தேன்!

நிகழ்காலத்து எதிர்ப்புகள் நெருப்பு நதியாகப் பிரவாகமெடுத்து மோதினாலும் - அவற்றையும் என் ஆருயிர் உடன்பிறப்பே; நீ அருகில் இருக்கிறாய் என்ற துணிவுடன் நீர்வீழ்ச்சியின் சிதறல்களாய் ஆக்கிக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் நமது கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் நிறைவேற அமைந்திட இருக்கும் அறப் போர்க்களங்களில் நீ பக்கத் துணை இருக்கும்போது எவ்வளவு படைபலமிக்கப் பகைப்புலமாயிருப்பினும் வென்று காட்டுவோம் என்ற நம்பிக்கையுடனே தான் நான் நடைபோடுவேன்!

நம் அனைவரையும் ஒரு தாய் வயிறு சுமக்க முடியாத காரணத்தால் தனித்தனித் தாய்களின் வயிற்றில் பிறந்தவர்கள் நாம் என்று அன்றைக்கு அண்ணன் கூறியபோது மெய் சிலிர்த்தது! நமது குடும்ப பாச உணர்வை எண்ணி இதயம் விம்மியது! ஆனந்தத்தால் விழிகள் கூட அருவிகளாயின! அந்தப் பாச உணர்வைப் பாழாக்கிட அன்றைக்கே 1960-ஆம் ஆண்டில் சில வீடணர்கள் தோன்றினார்கள். அண்ணா - அண்ணா - என்று அழைத்த அன்பமுதச் சொல்லை மாற்றி

திருவாளர் அண்ணாத்துரையென அழைத்து நம் அண்ணனுக்குச் சர்வாதிகாரி என்ற பட்டத்தையும் சூட்டினார்கள். அன்றைக்கும் நம்மைப்போன்ற தம்பிமார்களைத்தான் அண்ணன் நம்பினார். அந்த அண்ணனுக்கு தொடர்ந்து துரோகமிழைத்தோர் எதிரிகளின் தொட்டிலில் தாலாட்டப்பட்டனர். மாற்றார் மணிமண்டபத்தில் சீராட்டப்பட்டனர். வெற்றிபெறுவதுபோல் வெளிச்சம் போட்ட துரோகம், வீழ்ந்தது! வீழ்ந்தே போயிற்று என எண்ணியிருந்தோம்!

தன்னலத்தின் தத்துப்பிள்ளையல்லவா துரோகம்? தன்னை வைத்து ஒரு இயக்கத்தை எவன் எடைபோட நினைக்கிறானோ - அவன்தானே துரோகத்தின் மூலவிதையாக மாறுகிறான்!

ஆல்போல் தழைத்த இந்த இயக்கத்திற்கு 1972-இல் மீண்டும் ஒரு சோதனை! துரோகத்தை அடையாளம் காட்டி அதனைத் துரத்தியடிக்கத் துடித்தோர் - இறுதியில் அந்தத் துரோக இரத்தத்தின் சிகப்பு, வெள்ளை அணுக்களாக மாறிச் சுழலுகின்ற நிலைக்குத் தங்களைச் சுயநலவாதிகளாக்கிக் கொண்டனர்.

எனினும் அண்ணன் கண்ட இந்தக் கழகம் - சோதனைகளையும், தோல்விகளையும் சந்திக்க நேர்ந்ததே தவிர - கொள்கைக் கொடியைக் கீழே போட்டு விட்டு துவண்டு போய் விடவில்லை!

பதினெட்டு ஆண்டுக்காலம் எதிர்க்கட்சியாக - அண்ணா தலைமையில் இந்தக் கழகம் இயங்கியபோது - ஒன்றா இரண்டா? எத்தனையோ அறப்போராட்டங்கள்!

அனைத்து நாடுகளும் போற்றிய ஆசியாவின் ஜோதி நேரு பெருமகனார்; தமிழ் நாட்டுத் தலைவர்களைக் குறித்து இழிவாக ஒரு சொல் கூறினார் என்பதற்காக சென்னை விமான நிலையத்திலும் - அன்றைய மவுண்ட் ரோடுபகுதியிலும் - கறுப்புக்கொடி நிகழ்ச்சியெனும் கருங்கடலையல்லவா கஷ்டப்பட்டு கடக்க வேண்டியிருந்தது.

கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜிக்குக் காட்டப்பட்ட கறுப்புக் கொடி நிகழ்ச்சியில் சென்னைத் தெருக்கள் குருதிக் கொப்பளங்களால் நிறைந்திருந்தன!

குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போர் என்ன - ரயில் நிறுத்தப் போராட்டமென்ன - கல்லக்குடி களமென்ன - விலைவாசி உயர்வுக் கண்டன மறியல்கள் என்ன - ஏன்; நாற்பதாண்டுக்கால மொழிப் போர் நிகழ்ச்சி என்ன - அனைத்திலும் எத்தனை உயிர்கள் பலி கொள்ளப்பட்டன! எத்தனை கழகத் தங்கங்கள், அங்கமிழந்து வாழ்கின்றனர்! எத்தனை ஆயிரம் பேர் சிறைகளில் பூட்டப்பட்டனர்!

நீண்ட நெடிய போராட்ட வரலாற்று உணர்வெனும் கனல் அணையாமல் இன்றளவும் இயங்குவது நமது கழகம்! அதனால்தான் இதனை பாசறை என்கிறோம் - பாடி வீடு எனப் புகழ்கிறோம் - பதவி தேடிகளின் பஜனை மடமல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறோம்; வாய்ப் பேச்சால் அல்ல - வடித்திடும் செயல்களால்!

ஒன்பதாண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு கட்சிக்குப் பதவி சுகம் என்ற நோய், தொற்றியிருக்குமோ என நான் கூடப் பயந்ததுண்டு! அந்த நோய்க்கிரையானோர் - அல்லது இரையாவோர் - தனிப்பட்ட ஒரு சில தன்னலப்பிறவிகளே தவிர - உடன்பிறப்பே, இந்தக் கட்சியின் உயிர்நாடியாம் உழைப்போர் அணியை அந்தப் பிணி நெருங்கக் கூட முடியாது என்பதை நீயும் என் நெஞ்சு கவர்ந்த உடன்பிறப்புக்களும் நிரூபித்து வருகிறீர்கள்!

ஊழல் புகார் தொகுத்து - அதன் மூலமே தன்னை வளர்த்த இந்தக் கழகத்தை அழித்துவிடக் கங்கணம் கட்டியவர்கள்; இன்றைக்கு உண்மையிலேயே அவர்களின் கூட்டமே ஊழல் பெருச்சாளிகளின் கூட்டம் என்பதை உலக மன்றத்தில் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

சுற்றிலும் பார்க்கிறார் - யார் யார் மீது புகார்ப் பட்டியல் கொடுத்தாரோ; அவர்கள் எல்லாம் அவருக்குப் பக்கத்தில் பல் இளித்துக் கொண்டு நிற்கின்றனர்! அவரால் கொலை முயற்சி வழக்கு என கோர்ட்டில் நிறுத்தப்பட்டவர்கள், கூட்டுறவு நிறுவன மோசடி எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்; இன்று அவரை கொலு மண்டபத்துக் கோமாளியாக்கியிருக்கின்றனர். இறுதியாக அவர் தன்னையே கண்ணாடியில் காண்கிறார்; கறைபடிந்த கரங்களின் சொந்தக்காரராகக் காட்சி தருகிறார்!

இனியும் அவர் ஊரை ஏமாற்ற முடியாது - இதோ விழிப்பு வெளிச்சம் தமிழ் மண்ணில் கதிர்க்கரம் ஊன்றி விட்டது என்பதை எடுத்துக் காட்டவே; கழகம் அறப்போர்க் களத்தில் இறங்கியது!

தம்பி சீத்தாபதி தலைமையில் பேரணி சென்று, முன்னாள் நீதிபதி கைலாசம் அவர்களிடம் வேண்டுகோள் மனுதருவது - எனது அன்பு இளவல் நாஞ்சிலார், அரசின் ஆணை நகலுக்குத் தீ மூட்டுவது - இந்த இரு நிகழ்ச்சிகளும் முறைப்படுத்தப்பட்டு நடைபெற தலைமை நிர்வாகக் குழு கூடி முடிவெடுத்தது!

அமைதியான முறையில் நிகழ இருந்த பேரணிக்குத் தடை! காவல் துறை மூலம் அரசு அறிவித்தது! தடையை மீறினால் ஒடுக்குவோம்! என்று முதல் நாளே முதலமைச்சர் எச்சரிக்கை செய்தார்!

தடைச் செய்திகளும் - மிரட்டல் பாணங்களும் - ஏடுகளில் வெளிவந்ததும் நீ அஞ்சிப் பதுங்கி விடுவாய்; என அரசு எதிர்பார்த்தது!

நீயா அஞ்சி நடுங்குவாய்? தியாகத் தீபமாயிற்றே! தன்னலங்கருதா தமிழ்க் குலத்தின் திருவிளக்காயிற்றே! புறநானூற்றுத் தாய்களின் வழிவந்த அலமேலு அம்மையார் தலைமையிலும் மகளிர் அணியின் மணிச் சுடர்கள் அந்தத் தடையை இடறிடக் கிளம்பின எனின்; கிளம்பிற்றுக் காண் தமிழ் சிங்கக் கூட்டமென நீ ஆர்த்தெழுந்ததில் ஆச்சரியமும் உளதோ!

இல்லை உடன்பிறப்பே இல்லை! உன்னை அறிவேன் நான் - நீ சுடச்சுட ஒளிரும் பொன்! காய்ச்ச காய்ச்ச இனித்திடும் பால்! அரைக்க அரைக்கக் கமழும் சந்தனம்! அடக்கிட அடக்கிட அணிபெருக்கியெழும் அடலேறு!

அதைத்தான் கடந்த ஞாயிறன்று சென்னையில் நீ உலகிற்கு உணர்த்தியிருக்கிறாய்!

அன்று உன்மேல் பட்ட ஒவ்வொரு அடியும் என்னை வலியால் துடிக்கச் செய்தன! கண்ணீர்ப் புகை உன்னை நோக்கி! ஆனால் அழுதவை என் கண்கள்! நீ இன்று அடக்குமுறையேற்று சிறைக்கம்பிகளை வருடிக் கொண்டிருக்கிறாய் - உயிரனைய உடன்பிறப்பே! உன் பாதத்து விரல்களை என் கரங்கள் வருடிக் கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் மறந்து விடாதே!

மார்ச் முதல்நாள் தமிழகமெங்கணும் நீ, கழகத்தின் அறப்போர்க் கோலத்து உருவத்தை இந்த அரசுக்குக் காட்டப் போகிறாய்!

என்னதான் எதிரிகளால் எரிச்சலூட்டப் பெற்றாலும் - காவல்துறையினரின் கெடுபிடித் தாக்குதல்கள் பெருகினாலும் - அண்ணா வழி நின்று அமைதி காத்து - தியாகத்தின் பெருஞ்சோதியாக நீ திகழ்ந்திட வேண்டும்!

எதையும் இழப்பேன் என்னுயிரினும் மேலான இந்தக் கழகம் காத்திட என்று வாயால் அல்ல - செயலால் உணர்த்திடும் நீ தான்; நான் வணங்கிடும் தெய்வம் - வழிபடும் ஆலயம் - கும்பிடும் கோபுரத்துக் கலசம்; எல்லாமே நீ தான்! என் அன்பு மலர் அர்ச்சனையும் உனக்குத்தான்!

அன்புள்ள,

மு. க.

(25-02-1981)

875. குழப்பங்களுக்கு முடிவு கான!

உடன்பிறப்பே,

உருட்டி விழித்தால் ஓடி விடுவார்கள் - மிரட்டிப் பேசினால் பதுங்கிக் கொள்வார்கள் - எனவே நமது ஏவுகணைகளை விடுங்கள்; தடை விதித்துவிட்டோம் இவர்களின் பேரணிக்கு எனப் பிரகடனப்படுத்துங்கள் - மீறினால் கைது செய்வோம் என அறிக்கைகளை அனல்பறக்க வெளியிடுங்கள் - அதற்குள் நான் கேரளத்திற்குச் சென்று அரிசி தருகிறோம் - தண்ணீர் தாருங்கள் என்ற பரிவர்த்தனைப் பேச்சைப் பேசிவிட்டு வருகிறேன். உண்மையிலேயே அதைப் பேசத்தான் போகிறேனா என்று நீங்கள் சந்தேகப்படுவது எனக்குப் புரியாமல் இல்லை. நீங்கள் அதிகாரிகள்; அதனால் சந்தேகப்படுகிறீர்கள் - இன்னமும் நாட்டில் எனது ரசிகர்கள் இருக்கிறார்கள் - அவர்கள், நான் ஏதோ அரும்பெரும்பணியினை இந்த மாநிலத்துக்காக ஆற்றப் போயிருக்கிறேன் கேரளத்துக்கு என்று எண்ணிக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். எரி சாராய ஊழல் பற்றிக் கலந்து பேசத்தான் போயிருப்பதாக எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவார்கள் - ஏன், எனது கட்சியில் உள்ள அரசியல்வாதிகள் கூட அதனை அறிவார்கள் - எப்படியும் தண்ணீர் பற்றித்தான் பேசப் போகிறேன். நான் வருவதற்குள் தி.மு.கழகத்தின் போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிட வேண்டும்.

இப்படி அதிகாரிகளை நோக்கி ஆணை பிறப்பித்து விட்டுத்தான் அவர் கேரள விஜயத்தைத் தொடங்கினார். அங்கே சாக்கோவின் சிலையைத் திறந்து வைத்தார். அந்தச் சிலை திறப்பு விழாவில் மலையாளத் தாய்க்குப் பிறந்த என்னைத் தமிழ் நாடு வளர்த்தது என்று பெருமையுடன் கூறிக் கொண்டது மாத்திரமல்ல, அண்ணா நாமம் வாழ்வதற்கும் அந்த விழாவில் அக்கறை எடுத்துக்கொண்டார்! எப்படியும் அண்ணா பெயரை அங்கு சொல்லியாக வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு

சென்றவராயிற்றே. அதனால் சிந்தனைக்கே இடமில்லை! அண்ணாவையும் சாக்கோவையும் ஒப்பிட்டு அவரையறியாமலே அண்ணாவை எங்கேயோ கொண்டு போய்த் தள்ளினார்! சிந்திக்காமல் சொன்னார் என்று நான் கூறினால் அவரது தளபதிகளுக்குக் கோபம் வரும்! அவர் எதையும் ஆழ்ந்து சிந்திக்காமல் பேசுவதில்லை யென்று அடித்துக் கூறி அதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் அவர் கண்டுபிடித்து வெளியிட்ட - திராவிட மதம் பற்றிப் புகழத் தொடங்கினாலும் தொடங்குவார்கள்!

கிறித்தவ மதம், முஸ்லீம் மதம், புத்த மதம், சமண மதம், இந்து மதம், இப்படிப் பல மதங்களுக்கிடையே எந்த ஆராய்ச்சியாளராவது திராவிட மதம் என ஒரு மதம் நீண்ட காலமாக (?) இருப்பதைக் கண்டுபிடித்து வெளியிட்டது உண்டா?

ஒருவேளை உலகத் தமிழ் மாநாட்டுக்காக லெமூரியா கண்டம் வண்ணச் சினிமாப்படம் எடுத்தார்களே, அதற்கான ஸ்கிரிப்ட் தயாரிப்பதற்காக பழம்பெரும் இயக்குநர்கள், கதாசிரியர்கள், எடுத்துக் குவித்த அல்லது எழுதிக் குவித்த திரைக்கதைகளில் தேடியும் கிடைக்காமல் - இறுதியாக இராமாவரம் தோட்டத்தில் கேட்பாரற்றுக் கிடந்த ஓலைச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்தபோது - இந்தத் திராவிட மதக் கண்டுபிடிப்புக்கான ஆதாரம் கிடைத்ததோ என்னவோ?

எத்தனையோ புதுமைகளையும் புரட்சிகளையும் இந்தத் தமிழ்நாடு 1977 முதல் கண்டு வருகிறது! வளர்ச்சித் திட்டங்களும் வகுக்கப்படாமல் - வறட்சிப் பணித் திட்டங்களிலும் வேகம் காட்டாமல் - விழாக்கள், விருதுகள், நடனங்கள், அறிவிப்புகள், அவசரச் சட்டங்கள் - இப்படியே நாலு ஆண்டுக் காலத்தை ஒரு வழியாகஓட்டிவிட்டார்கள்! பஸ் முதலாளிகள், தியேட்டர் அதிபர்கள், இன்னோரன்ன பல முனைகளிலும் சுருட்ட வேண்டியதைச் சுருட்டிக்கொண்டு விட்டார்கள்! தாயின் பெயரால் சந்தியா அறக்கட்டளை - அதிகாரிகளைப் பயன்படுத்தி அதற்குக் கட்டாய வசூல்! - கறுப்பை வெள்ளையாக்க இன்னும் சில அறக்கட்டளைகள்! அப்படி வெள்ளையான கறுப்பிலே அச்சுக் கூடங்கள்!

கப்பல் பேர ஊழல் - எரி சாராய ஊழல் - எல்லாம் கோடிக்கணக்கில்! இன்னமும் இவர்களை நாடு, நாணயஸ்தர்கள் என்று நம்புகிறதாம்!

எஜமானியம்மாள் கவனிக்காத நேரம் அடுக்களையில் இருந்த பாலை வேலைக்காரி குடித்து விட்டு; பால் எங்கே என்று கேட்டபோது - பாழும் பூனை குடித்து விட்டது என்றாளாம் அந்தப் பம்மாத்துக்காரி! எஜமானி நம்பவில்லையாம்! தோட்டத்தில் வேலை செய்யும் என் கணவனை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள் - அவர் நடத்தும் எந்த விசாரணைக்கும் நான் தயார் என்றாளாம் அந்த வேலைக்காரி!

அப்படித்தான் கைலாசம் கமிஷன் கண்துடைப்பு விசாரணைக்கு ஏற்பாடு!

கப்பல் பேர ஊழல் விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கேட்டு பிரதமர் சரண்சிங்கிற்கு எழுதினார் - அவரும் பேசி வைத்தாற்போல் இப்போது அனுப்ப வசதியில்லை என்றார்!

ஏன்; அதே போல இப்போதும் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வேண்டுமென்று இவரே மத்திய அரசைக் கேட்கக் கூடாது? கேட்டால் உடனே ஒப்புதல் அளித்து விடுவார்கள் என்ற அச்சம் தானே காரணம்; கேட்காமல் இருப்பதற்கு?

இப்படிப் பல குழப்பங்களில் ஒரு குழப்பம் தான் பட்ஜெட் குழப்பம்!

எப்போதாவது - தேர்தல் ஆண்டு அல்லாத - சாதாரண ஆண்டுகளில் இப்படிப் பட்ஜெட் படிப்பது தமிழகத்தில் தள்ளிப் போடப்பட்டது உண்டா?

புரட்சித் தலைவர் என்பதற்கு வேறு என்னதான் ஆதாரம் காட்ட முடியும்? அதனால்தான் பட்ஜெட்டைத் தள்ளிப் போட்டு புரட்சி நடத்துகிறார் என்று அவரது தள நாயகர்கள் விளக்கவுரையாற்றினால் வியப்படையத் தேவையில்லை.

இந்தக் குறைபாடுகளையும் - முறைகேடுகளையும் - எடுத்துச் சொன்னால் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவேன் என்கிறார்! எல்லாவற்றுக்கும் தி.மு.க.வும் அதன் தலைவர்களும்தான் பொறுப்பேற்க வேண்டுமென்கிறார்!

தடியடி நடத்தப்படுகிறது! கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிக்கப்படுகின்றன! சிறைக் கதவுகள் திறக்கப்படுகின்றன!

ஆனால் - இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் குனிந்து கொடுக்காத கொள்கைச் சீமான்கள், மார்ச் முதல் நாள் அறப்போருக்கு அலை அலையாகத் திரளுகிறார்கள்!

மாவட்டச் செயலாளர்கள் கடித மூலமும் - நேரிலும் - தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு - மார்ச் முதல் நாள் கண்டன ஊர்வலம், அரசு ஆணைக்குத் தீயிடுதல் நிகழ்ச்சிக்கு - ஏராளமான கழகச் செயல்வீரர்கள் போட்டி போட்டுக் கொண்டு பெயர் தருவதாகப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றனர்.

பல இடங்களில் கண்டன ஊர்வலத்திற்கு யார் தலைமை வகிப்பது - கைலாசம் கண்துடைப்புக் கமிஷன் அரசாணையை யார் யார் கொளுத்துவது - என்பதைத் தீர்மானிக்க முடியாமல்; சீட்டுக் குலுக்கிப் போடுவதின் மூலம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!

அண்ணன் கண்ட கழகம் - அண்ணன் வளர்த்த கழகம் - அன்றாடம் வளர்கிறது; வலிவும் பொலிவும் பெறுகிறது என்பதற்கு இவை சான்றுகள்!

அண்ணா பெயரைச் சொல்லி அவர்தம் இலட்சியத்தைச் சிதைத்திட முயல்வோரின் கட்சி நாளும் தேய்கிறது என்பதற்கு இந்தக் கடிதம் கொள்ளாத அளவுக்கு ஏராளமான சான்றுகள்! எங்கெங்கும் காணப்படுகிற சான்றுகள்!

உடன்பிறப்பே, மார்ச் முதல் நாள் மாநில முழுவதும் நமது கழகத்தின் மாண்பினைக் காட்டிடும் வண்ணம் அறப்போர் நடத்திடுக! அமைதி காத்திடுக! கண்ணியம் போற்றிடுக! கட்டுப்பாடும் கடமையுணர்வும் உன் நெஞ்சில் நிலைத்திடுக!

அன்புள்ள,

மு. க.

(26-02-1981)

876. திரும்பிப்பார்!

உடன்பிறப்பே,

அவர்கள் வேகமாக வீசிய கல், பாறையில் மோதி அவர்கள் நெற்றிப் பொட்டைத் தாக்கும் போது துடிக்கிறார்கள் பார்த்தாயா? துடிக்கிறார்களா? அல்லது துடிப்பது போல் நடிக்கிறார்களா?

எரி சாராய ஊழல் பிரச்சினை குறித்து டெல்லி மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் மோதிக் கொண்டனர். இந்தச் செய்தி, அறிஞர் அண்ணாவுக்கு எவ்வளவு அதிர்ச்சி தரும் செய்தி தெரியுமா? என்று கிளிசரின் ஊற்றிக் கொண்டு கண்ணீர் வடிக்கிறார்கள்.

வலிவோடும் பொலிவோடும் விளங்கிய கழகத்தில் - அண்ணன் கண்ட கழகத்தில் - துரோகத்தனத்தால் வெடிப்பு ஏற்படச் செய்தவர்கள் யார்? அந்தத் துரோகச் செயல்கண்டு வங்கக் கடலோரம் துயில் கொண்ட அண்ணா, துயில் கலைந்து துடித்துப் போயிருக்க மாட்டாரா?

அன்றொருநாள் சபாநாயகரையே தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு, அவரைவிட்டே இந்த அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவையிலேயே அறிவிக்கச் செய்தார்களே; இப்போது துடிப்பது போல் நடிக்கிறார்களே; அவர்கள் உட்பட அத்தனை அமைச்சர்களும் அச்சடித்த பதுமைகளாய் இருந்து அமைதி காத்தோமே; அப்போது அலைகடலோரம் உறங்கிய அண்ணன் அதிர்ந்தெழுந்து கண்ணீர் விட்டிருக்க மாட்டாரா?

அவை முறைப்படி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத - அவை உரிமையை மீறிய - சட்டமன்ற விதிகளுக்கு மாறான வகையில் - அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதாகச் சொல்லி, நிகழ்ச்சி நிரலில் உள்ள விஷயங்களைப் புறக்கணிக்கச் சொல்லி, அதற்கு அன்றைய சபாநாயகரையும் தலையாட்டச் செய்தார்களே - அப்போது மண்ணுக்கடியில்

தூங்கிய அண்ணனுக்குத் தூக்கம் கலையவில்லையா? துயரம் மோதவில்லையா?

கவர்னரிடம் புகார் மனு - ஜனாதிபதியிடம் புகார் மனு - டெல்லிக்குச் சென்று புகார் மனு - மதுரைக்கு ரயிலில் சென்று பிரதமரைச் சந்தித்துப் புகார் மனு - ஆட்சியைக் கலைத்து விட்டு அடுத்த கட்டமாக கருணாநிதி உட்பட தி.மு.கழகப் பெருந்தலைகள் அனைவர் மீதும் அமைச்சர்கள் மீதும் விசாரணைக் கமிஷன் அமையுங்கள் என்று அறிக்கைகள் - இத்தனையும் தந்தார்களே எம்.ஜி.ஆரும் அவர் திருக்கூட்டத்தினரும் - அப்போது அலைகளின் தாலாட்டு அண்ணன் காதில் இடியோசையென ஒலிக்கவில்லையா?

நூற்றி எழுபது கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வீடுகள் நோக்கி ஊர்வலம் நடத்தி, ஊழல் கட்சியிலிருந்து விலகிடுக என மனுத் தந்தார்களே - மாசற்ற மாமணிகள் (?) என்று தங்களின் மார்தட்டிக் கொண்ட எம்.ஜி.ஆர். கட்சியினர்; அப்போது கல்லறைக்குள்ளிருந்தவாறு அண்ணன் கண்ணீர் வடித்திருக்க மாட்டாரா?

தொண்டர்களின் தலைவர் எனச் சொல்லப்பட்ட மதுரை முத்துவைக் குண்டர்களின் அரசன் என்று வர்ணித்த போது - நெக்லஸ் நெடுஞ்செழியன் என்று நாவலருக்கு நாடு முழுதும் களங்கம் சுமத்தியபோது - அரிசி பேர ஊழல் என்று அமைச்சர் ப.உ.ச. மீது அடுக்கடுக்காக அன்று பேரவையில் பாரதிர குற்றங்களைச் சாட்டியபோது - கருணாநிதி ஒரு கிரிமினல் என்று ஏடுகளில் எழுதிக் களித்து மேடைகளில் முழங்கிக் களித்த போது -கடற்கரையில் வீசுகின்ற காற்று; அண்ணன் மீது புயல்போல அழுத்தியிருக்காதா?

திருமதி இந்திராகாந்தி அம்மையார் வந்தபோது மதுரையில் நடந்துவிட்ட அசம்பாவிதங்களுடன் முடிச்சுப் போட்டு சென்னையில் இருந்த கருணாநிதி, பேராசிரியர், சாதிக்பாட்சா, ஆசைத்தம்பி, ப.உ. சண்முகம், மற்றும் கழக முன்னணியினர் மீது சதி வழக்கு, கொலை முயற்சி வழக்கு ஜோடித்து - இன்னமும் நீதி மன்றத்து நெடிய படிக்கட்டுக்களில் ஏறிக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலையைத் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறார்களே; இந்தப் பழி வாங்கும் போக்குக் கண்டு அண்ணன் கடற்கரையில்

பரவசத்துடனா படுத்துக் கொண்டிருப்பார்; பதைக்காதா அவர் உள்ளம்?

தங்கள் சுயநலத்திற்காக எத்துணையோ வழக்குகளை வாபஸ் வாங்கி - வெள்ளைக்கொடி காட்டியவர்கள், புலவர் கோவிந்தனையும் நண்பர் கந்தப்பனையும் கைது செய்து வழக்குத் தொடுத்தபோது, நீடு துயில் கொள்ளும் அண்ணனின் உள்ளம் உருகியிருக்காதா?

வெறிநாய் - சமூகத் துரோகி - இப்படி அள்ளி வீசினார்களே விருதுகளை; அவை துள்ளி வரும் வேலாக அண்ணன் இதயத்தில் தைத்திருக்காதோ?

ஆசிரியர்களும், அருமை திராவிடர் கழக நண்பர்களும் அரசு ஆணைக்குத் தீயிட்டபோது, அவர்களைச் சிறைப்பிடிக்காது - நாஞ்சிலாரையும் அவருடன் இணைந்து அரசு ஆணைக்குத் தீயிட்ட உடன்பிறப்புகளையும் மட்டும் கைது செய்து காவலில் வைத்துள்ள கீழ்த்தரப் பழிவாங்கும் போக்குக்கண்டு, நீலத்திரைக் கடலோரம் நித்திரை கொள்ளும் அண்ணன் நெஞ்சம் கொதித்திருக்காதா?

இப்போது பார்த்தாயா உடன்பிறப்பே! இந்த வீடணர்களையும் சுக்ரீவர்களையும் அனுமன்களையும் திடீரென குடும்ப பாசம் பிடித்துக் கொண்டு ஆட்டுகிற காட்சியை!

பாறையில் வீசிய கல் திரும்பி வந்து அவர்கள் நெற்றியைப் பதம் பார்க்கும் போதுதான் அய்யோ வலிக்கிறதே என்று அலறுகிறார்கள். அவர்கள் வீசிய கல் மட்டும் பாறையில் உலவிக் கொண்டிருந்த நம் மீது பட்டு, நாம் சுருண்டு விழுந்து மடிந்திருந்தால் - மகிழ்ச்சிக் கூத்து நடத்தியிருப்பார்கள்!

ஓரிரு கற்கள் நம் மீது பட்டதற்கே - உற்சாகத் திருவிழா எடுத்த உத்தமப் பிறவி(?)களாயிற்றே அவர்கள்!

இன்று வேடம் கலைகிறது. வேதனைப்படுகிறார்கள்! பிறர்மீது புகார் கூறுவதின் மூலம் தங்களைத் தங்கக்கட்டிகளெனத் தமிழகத்தில் காட்டிக் கொள்ளலாம் என்று தந்திர வித்தை செய்தவர்கள் - இன்றைக்கு இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஊழல் பேர்வழிகள் என்று அடையாளம் காட்டப்பட்டு

ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படும் போது - அடடா! அண்ணா அதிர்ச்சியடைய மாட்டாரா? என்று திசை திருப்ப முனைகிறார்கள்!

பாறையில் உலவிய நம் மீது வீசிய கற்கள்; திரும்பி வந்து அவர்களையே தாக்கும்போது வலிக்கிறதாம்!

ஒன்றிரண்டு கற்கள் நம் மீது பட்டபோதும், இப்படித்தான் வலித்திருக்கும் என்பதை அவர்களால் உணர முடியவில்லை போலும்!

அன்புள்ள,

மு. க.

(27-02-1981)

877. ஊழலார் ஊராள்கிறார்!

உடன்பிறப்பே,

எரிசாராயம் - கப்பல் பேரம் - சத்தியா அறக்கட்டளை - பேருந்து அதிபர்களிடம் கையூட்டு - காட்டுக்கொள்ளை - தேவாலயத் திருட்டு - மருத்துவக்கல்லூரி தேர்வுமுறைகேடு - பஸ், லாரி - சேசிஸ் - சம்பாத்தியம் - கிராம அதிகாரி தேர்வுச் சிபாரிசு - இப்படி அளவிட முடியாத ஊழல்களின் சொந்தக்காரர்கள் இன்று அமைச்சர்களாய் - ஆளுங்கட்சிப் பிரமுகர்களாய் - ஆலவட்டங்கள் பிடிப்போர் அணி வகுத்திட பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முகமூடியைக் கிழித்திடும் பணியில் நீ ஊர்தோறும் ஈடுபட்டிருக்கிறாய்!

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் நேரத்தில் ஒருவேளை நீ சிறைக் கொட்டடிக்குள் இருக்கலாம். உன்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான உடன்பிறப்புகளைச் சிறையில் அடைத்திட இந்த அரசு, வியூகம் வகுத்திருப்பதாகத்தான் தகவல்!

சிறையை, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிக் கொண்டவர்களின் பாசறை தி.மு.கழகம்!

எம்.ஜி.ஆர். அரசு, நம்மவர்கள் மீது போடாத வழக்கு ஏதாவது பாக்கியிருக்கிறதா? கழகத் தலைமையிலே உள்ள எங்களையெல்லாம் சதி, கொலை, கொலை முயற்சி என்ற பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தொடுத்து கடந்த நான்காண்டு காலமாக நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்க வைத்துக் கொண்டிருக்கிறது. இதைப்போலவே, கழகத்திற்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு கெட்ட நோக்கத்தோடு பல்வேறு வகையான வழக்குகளில் ஆயிரக்கணக்கான கழகச் செயல் வீரர்கள் சிக்க வைக்கப்பட்டுள்ளனர் பழி தீர்க்கும் உணர்வோடு!

இப்போதும் நாம் நடத்துகிற அமைதி வழி அறப்போரை வேண்டுமென்றே தடை செய்து அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு அதன் தொடர்பாகப் பல வழக்குகளை ஜோடித்திட இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது என அறிகிறேன்.

எதுவரினும் கலங்கிடோம்; கவலைப்படோம் என்ற நெஞ்சுறுதியுடன் நீ நிமிர்ந்து நடை போட்டு எத்தகையக் கொடுமைகளையும் ஏற்றுக் கொள்வாய் என்பது நாட்டுக்குத் தெரியும்.

எனினும் வழக்குகளில் சிக்க வைத்து நீண்ட நாளைக்கு உனது கழகப் பணிகளை முடக்கிவிடலாமென இந்த அரசு கருதுமேயானால் - அதற்கு இடந்தரக் கூடாது என்ற எண்ணம்; கழகத் தலைமைக்கு இருக்கிறது என்பதை நான் முன்பே அறிவித்திருக்கிறேன்.

அரசு ஆணையைக் கொளுத்தி, அந்தச் சாம்பல் பொட்டலங்களைக் கோட்டைக்கு அனுப்பிய திராவிடர் கழகத்தின் மீது எந்த வழக்குமில்லை; யாரும் கைது செய்யப்படவுமில்லை!

ஆசிரியர்கள், அரசு ஆணையைத் தீயிட்டுப் பொசுக்கினர் - அவர்களையும் சட்டம் தீண்டவில்லை!

ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் கேட்பதாகப் பொருள் அல்ல இதற்கு!

தி.மு.கழகத்தின் மீது மட்டும்; அரசாணை கொளுத்தியோர் கைது செய்யப்படவும் - வழக்கு தொடரப்படவுமான புதிய நிலை எடுக்கப்பட்டதற்கு என்ன காரணம்?

அதை உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் புரிந்துகொள்ள வேண்டு மென்பதற்காகவே குறிப்பிட்டுக் கேட்கிறேன்.

எனது ஆருயிர் இளவல் நாஞ்சிலார் உள்ளிட்ட நால்வர் அரசாணைக்குத் தீயிட்டதால் - பிறர் உயிருக்கோ, உடமைக்கோ ஆபத்து நேர இருந்ததாம்; அப்படி ஒரு சட்டப் பிரிவில் வழக்கு! இனி அந்த வழக்கில் புலன் விசாரணை - நீதி மன்ற விசாரணை - இப்படிப் பல விசாரணை!

சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி சீத்தாபதி, மகளிர் அணிச் செயலாளர் அம்மையார் அலமேலு அப்பாதுரையார், இணைச் செயலாளர் சற்குணம், மற்றும் கழக முன்னணியினர்,

ஆயிரக்கணக்கான கழகத் தொண்டர்கள் தடையை மீறிப் பேரணி நடத்த முயன்றதற்காகக் கைது! அவர்களில் சிலர் மீது வேறு விதமான வன்முறை வழக்குகள் - அவர்களையும் வழக்கில் மாட்டிவிட்டு; கழகப் பணிகளில் ஈடுபடாதவாறு தடுத்திடல் வேண்டும் என்ற கெடு நினைப்பு இந்த அரசுக்கு!

அத்தகைய நினைப்பு அரசுக்கு இருக்கிறது என உணர்ந்த காரணத்தால்தான் - கறுப்புக் கொடிப் போராட்டத்தின்போது தலைமைக் கழகம் எடுத்த முடிவை இப்போதும் எடுத்து, கழகத்தின் முன்னணித் தலைவர்கள் - நிர்வாகிகள் - கழக முன்னணியினர் தவிர சிறையிலே உள்ள ஏனைய கழகச் செயல்வீரர்கள், தொண்டர்கள் ஜாமீனில் வெளிவந்து வழக்கு நடத்திக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

சென்னை அறப்போர் நிகழ்ச்சியையொட்டி எடுத்துள்ள இந்த முடிவு, மாநில முழுதுமுள்ள மாவட்டங்களில் பரவலாக நடைபெற்றுள்ள எரிசாராய ஊழல் கண்டன அறப்போராட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பார்களேயானால்; அந்தக் கழக உடன்பிறப்புகளுக்கும் பொருந்தும்!

மாவட்டங்களில் கைது செய்யப்பட்டிருந்தால் - அவர்களில் சென்னையைப் போலவே கழக முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள், முன்னணியினர் மட்டும் விடுதலையாகும் வரையில் சிறையில் இருந்திடுவர் - அவர்களைத் தவிர சிறையில் உள்ள மற்ற தொண்டர்கள் ஜாமீனில் வந்து வழக்குகளை நடத்தலாம்.

அத்தகைய வழக்குகளை நடத்திட ஆங்காங்கு நமது கழக வழக்கறிஞர் குழுக்கள், உடனடியாக முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் குழுக்கள் தலைமைக் கழகத்துடன் தொடர்புகொண்டு ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்ப பணிபுரிந்திட வேண்டியது அவசியமாகும்!

மாவட்டங்களில் இருந்து வந்துள்ள அறப்போர் வீரர்கள், வீராங்கனைகள் பட்டியலை வெளியிடவே முரசொலியில் இடம் போதவில்லை!

சென்னை முரசொலி - மதுரை முரசொலி என்று பட்டியலை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு வெளியிட்டும் கூட எல்லோருடைய பெயர்களும் இடம் பெற இயலவில்லை.

மார்ச் முதல் நாள் இந்த அரசு அடக்குமுறையையும் - கைதுப் படலத்தையும் தொடருமேயானால்; அறவழியில் அண்ணா வழியில் அதனைச் சந்திக்கும் தீரர்கள் பல்லாயிரவர் இருப்பர் -

இந்த மடல் தீட்டும்போது - அரசின் போக்கு பற்றித் திட்ட வட்டமாகத் தெரியவில்லை!

எனினும் எதையும் தாங்கிட எதற்கும் தயாராக எனது இனிய உடன்பிறப்புகள் இருப்பார்கள் என்ற உணர்வோடும் உவகையோடும் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஊழலார் ஊராள்கிறார் என்ற உண்மை இன்று பட்டிதொட்டியெங்கும் பரவிடக் காண்கிறோம்; அது நமது அறப்போருக்குக் கிடைத்துள்ள முதல் கட்ட வெற்றி!

அன்புள்ள,

மு. க.

(02-03-1981)

878. எழுச்சி வடிவம் காட்டினாய்?

உடன்பிறப்பே,

காவல் துறையினர் கைபிசைந்து நின்றார்களாம்; உன் அணிவகுப்பு; அரசாணைக்குத் தீயிட அலைஅலையாக வந்து குவிந்தபோது! எவ்வளவு பேர் தடையை மீறி அரசாணையைத் தணலில் இட்டாலும் அவர்களில் ஒரு சிலரை மட்டும் கைது செய்யுமாறு மேல் அதிகாரிகள் தங்களுக்கு உத்திரவு பிறப்பித்திருப்பதாக ஆங்காங்குள்ள அதிகாரிகள் கூறியதாக தினமணிச் செய்தியாளரே அறிவித்துள்ளார்.

7583 பேர் கைது என்று எவ்வளவு கறாராகக் கணக்குத் தரப்பட்டிருக்கிறது பார்த்தாயா?

காவல்துறை கணக்கல்லவா? அதுவும் முதலமைச்சர் கட்டளைப்படி தரப்பட்ட கணக்கல்லவா?

முதலமைச்சர்தான் காவல் நிலையத்துக்கே தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உத்திரவிடுகிற உத்தம(?)ராயிற்றே!

ஆமாம்; அவரே அதனை நேற்றுக் காஞ்சீபுரத்திலே பேசியிருக்கிறார்!

இரண்டொரு நாட்களுக்கு முன்பு இரவில் எனக்கொரு செய்தி வந்தது தொலைபேசி மூலம்! எங்கள் கட்சிக்காரர் ஜாமீன் எடுக்க வருவதாகச் சொன்னார்கள். குடித்தவருக்காக ஜாமீனுக்கு வந்ததாகச் சொல்லப்பட்டது. ஜாமீனுக்கு வந்தவரையும் கைது செய்யச் சொன்னேன். அதுதான் இந்த ராமச்சந்திரன்!

இச்செய்தி எம்.ஜி.ஆர். பேசியதாக ஏடுகளில் வந்துள்ளது!

போலீஸ் ஸ்டேஷன்களிலுள்ள காவலர்களுடன் அல்லது இன்ஸ்பெக்டர்களுடன் பேசுகிற அளவுக்கு, உத்திரவிடுகிற அளவுக்குள்ள ஒரு முதலமைச்சர்; பதினைந்தாயிரம் பேர் கைது செய்யப்பட்டிருப்பதை ஏழாயிரத்து ஐநூற்று எண்பத்து மூன்றாகக் குறைத்துக் காட்டச் சொல்லி உத்திரவிடமாட்டாரா என்ன?

குடித்தவனை ஜாமீனில் எடுக்க வந்தால் அவனையும் கைது செய்யச் சொல்லியல்லவா உத்திரவிட்டிருக்கிறார்!

உடன்பிறப்பே, ஜாமீன் எடுக்க வந்தவரையும் கைது செய்வதற்கு - அதுவும் குடித்தவனை ஜாமீனில் எடுக்க வந்தவரையும் கைது செய்கிற அளவுக்கு - நமது முதலமைச்சருக்கு மதுவிலக்குக் கொள்கையில் எவ்வளவு தீவிர உணர்வு பார்த்தாயா? இவரா மதுவிலக்கை ரத்து செய்வார்? அதுவும் தனது தாயின் மேல் ஆணையிட்டு அந்த மதுவிலக்கை நிறைவேற்றி தமிழகத்தை எரி சாராய சாம்ராஜ்யமாக மாற்றியவராயிற்றே! ஜாமீனில் எடுக்க வருகிறவர்களை, ஜாமீனில் எடுக்கவா வந்தாய்? இதோ நீயும் கைது! என்று எந்தச் சட்டப்படி செயல்பட முடியும் என்று என்னைக் கேட்காதே!

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். எப்படி வேண்டுமானாலும் உத்திரவிடுவார்!

இதோ, ஒரு அசோசியேஷன் பெயரில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தை ஒருநாள் வாடகைக்கு வாங்கி, அங்கே தனது கட்சி நிதிக்காக அ.இ.அ.தி.மு.க. என்ற பெயராலேயே நிகழ்ச்சியை நடத்தி அதற்கும் தலைமை தாங்கிய நேர்மையாளராயிற்றே!

இது நியாயமா? அரசியல் கட்சி நிகழ்ச்சிக்கு பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம் பயன்படுத்தப்படலாமா? என்பதை முரசொலியில் இரண்டு நாட்களுக்கு முன்பே சுட்டிக்காட்டியும் கூட துணை வேந்தரைத் துரும்பாகத் தூக்கி எறிந்து விட்டு, முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களே அவரது கட்சி நிகழ்ச்சிக்கு அதே பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தலைமை ஏற்றிருக்கிறாரே!

நிகழ்ச்சியை நடத்தி முடித்து விட்டு; தவறு நடந்துவிட்டது! இனி அப்படி நடக்காது என்றும் அதே மண்டபத்தில் அறிவிக்கிற அவரது நாணயமே நாணயம் (?)

நடக்கப் போகிற தவறை முன்கூட்டியே சுட்டிக்காட்டியும் கூட அதனைப் பொருட்படுத்தாமல் பல்கலைக் கழக மண்டபத்தில் கட்சி நிகழ்ச்சி நடந்தே தீருமென்று துணைவேந்தருக்கு அறிவித்து விட்டு - மரபை மீறி அந்த மண்டபத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றால்; இவரிடத்திலே நீதி நியாயங்களை எதிர்பார்க்க முடியுமா?

பாவம் துணைவேந்தர்! ஆமைபோல் அடங்கி ஒடுங்கிக் கிடந்திருக்கிறார்! அவர் வந்த வழி அப்படி! அதனால் அவரால் தடுக்க முடியவில்லை! ஆளுங்கட்சியின் நிகழ்ச்சி - அ.தி.மு.க. நிகழ்ச்சியென்று பத்து நாட்களாக அவர்களது ஏடுகளில் விளம்பரம்! சென்னையில் சுவரொட்டிகள்! இதையெல்லாம் கண்டும் காணாதவர் போல அந்தத் துணைவேந்தர் இருந்து விட்டார்!

இந்த ஆட்சியின் நேர்மையற்ற போக்கு - நாணயமற்ற தன்மை - நிர்வாகத் தலையீடு - காவல்நிலையத்திலே தொடங்கி; சுயாட்சியுடன் திகழ வேண்டிய பல்கலைக் கழகம் வரையிலே இந்த அளவுக்குப் பரவியிருக்குமேயானால்; பல கோடி ரூபாய் எரி சாராய ஊழலுக்கு வேறு சாட்சியங்கள் தேவையா?

அதையும் மறைத்து அவதார புருடர் வேடம் போடத்தானே; கைலாசம் கமிஷனை நியமித்துக் கொண்டார்! தனக்குச் சாதகமாக விசாரணைக்குரிய விஷயங்களை (Terms of Reference) அமைத்துக் கொண்டார்!

இது ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலப் பிரச்சினை! அதனால் மேல்மட்ட நீதி விசாரணை தேவை என்பதை வலியுறுத்தவும் - கைலாசம் கமிஷன் கண்துடைப்புக் கமிஷன் - விசாரணைக்குரிய விஷயங்கள் போதுமானவையல்ல - என்பதை மக்களுக்கு விளக்கவும்தான்; அரசாணை நகலை அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கழக உடன்பிறப்புகள் கொளுத்தியிருக்கிறார்கள்.

முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் தீயிட்டனர்! பதினைந்தாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்! எத்தனை பேர் சிறையிலடைக்கப்படுவார்களோ தெரியாது!

எனினும், என் இதயம் நிறைந்த உடன்பிறப்பே! எங்கணும் நீ எழுச்சி வடிவமாகக் காட்சியளித்துக் கடமையினை ஆற்றியிருக்கிறாய் எனக் கேள்விப்படும் போது களிப்பேருவகை அடைகிறேன்! நீ அடைபட்டிருக்கும் காராக்கிருகம் நோக்கி உன் கால் மலர்களுக்குக் கரம் கூப்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(03-03-1981)

879. இதுவரையுமில்லை - இனியுமில்லை!

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். அரசின் எரி சாராய ஊழலைக் கண்டித்தும் - கண்துடைப்புக் கைலாசம் கமிஷன் அரசாணை நகலை எரித்தும் - நடைபெற்றுள்ள அறப்போரில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் தங்கள் பெயரையும் பட்டியலில் இணைக்க வேண்டுமென்றும் ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளிடமிருந்து வந்த கடிதங்களை என் கண்களில் ஒத்திக்கொண்டு ஆனந்தப் பெருமூச்சு விட்டுக் கொண்டேன். கழகப் பாசறையின் வீரர்களும் வீராங்கனைகளும் அடக்குமுறைகளை ஏற்கவும் - சிறைச்சாலை - சித்ரவதைக் கொடுமைகளைச் சிரித்த முகத்துடன் தாங்கவும் பழக்கப்பட்டவர்கள் என்பதை நமது தியாக வரலாறு ஏடுகள் நாட்டுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

நான் ஜெயிலுக்குப் போவேனா? இவனா ஜெயிலுக்குப் போவான்? என்று நீங்கள் எண்ணியிருப்பீர்கள்! உங்கள் எண்ணத்தில் மண்ணைப் போட்டதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு சென்னையில் அரசு ஆணை எரிப்புப் பொதுக்கூட்டத்தில் நாஞ்சிலார் குறிப்பிட்டார். அவர் கூறியது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து! எம்.ஜி.ஆரைப் போலவே நாஞ்சிலாரைப் பற்றிப் பலரும் எண்ணியிருக்கக்கூடும். அரசியல் இயக்கத்தில் அவரை ஒரு மலர்போலத்தான் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கணக்கிட்டவர்களும் உண்டு. சிறைச்சாலை செல்வது அவருக்குப் புதிதல்ல! ஏற்கனவே இருமுறை சிறைக்கோட்டம் சென்றவர்தான்! மென்மையாகத் தோற்றமளிக்கிற அவரது உள்ளம் எஃகுக் கோட்டை என்பதையும் - வைர நெஞ்சத்துக்குச் சொந்தக்காரர் என்பதையும் நானறிவேன். அறிந்த காரணத்தால்தான் இந்த அறப்போராட்டத்தில்

முதற்கட்டத்தைச் சென்னையில் தொடங்கி வைக்கும் பொறுப்புக்குத் தளநாயகராகத் தலைமைக் கழக நிர்வாகக் குழு, அவர் பெயரை அறிவித்தது! அவர் இன்று சிறைச் சாலையில் இருப்பது பற்றி ஆளும்கட்சி ஏடுகளும் அதன் ஆலவட்ட ஏடுகளும் நரகல் நடையழகு காட்டி ஏதேதோ எழுதுகின்றன! நானும் நமது பொதுச் செயலாளரும் பொருளாளரும் இரண்டொரு நாட்களுக்கு முன்பு அவரையும் அவருடன் சென்னைச் சிறையிலிருக்கும் மற்ற உடன்பிறப்புகளையும் சந்தித்தோம் - கடமையை ஆற்றிய வெற்றிப் பெருமிதத்துடன்தான் அவரும் அவருடன் இருப்போரும் காட்சி தந்து எங்களைக் களிப்பில் ஆழ்த்தினர்.முதிர்ந்த வயதில் மூதாட்டி அலமேலு அப்பாதுரையார் அவர்களும் அவருடன் மகளிர்அணியின் வீராங்கனையரும் புறநானூற்று வரிகளை எங்களுக்கு நினைவுபடுத்தினர்.

எத்தனை வழக்குகள் . எத்தனை சட்டப் பிரிவுகள் - எத்துணை நாள் கடத்தும் தந்திரங்கள் - இந்தப் பழிவாங்கும் அரசினால் ஏவி விடப்பட்டாலும் கலங்காது; அவற்றைப் புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் அரிமாக்கூட்டம்தான் நமது கழகம் என்பதை; சென்னைச் சிறைக் கோட்டத்தில் உள்ள முன்னணியினர் - கழக நிர்வாகிகள் மட்டுமல்ல; மார்ச் முதல்நாள் மாநில முழுவதும் கைது செய்யப்பட்டு சேலம், திருச்சி, மதுரை, கோவை, நெல்லை, கடலூர், வேலூர் போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள கழகத்தின் உறுதிகுலையாத உத்தமர்கள், நிலைதடுமாறாத முன்னணி வீரர்கள், வீராங்கனைகள், பல்வேறு அமைப்புக்களின் நிர்வாகிகள், மேலும் ஒருமுறை உலகுக்குத் தங்கள் தியாகத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிறை செல்வதற்கு முன்பு ஒரு சிங்கம் நிகர் உடன்பிறப்பு எனக்கு எழுதிய மடலினை நேற்று முரசொலியில் நீ படித்திருக்கக்கூடும். எனக்கே அந்த மடலைப் படிக்க வேண்டும் போலிருக்கிறது. அதனால் இந்தக் கடிதத்தில் அதனை இணைத்திருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கட்கு, அரசு ஆணையை எரித்துக் கைதாகியுள்ளேன். தந்தை 67 வயதானவர். புற்று நோயால் அவதியுறுகிறார். நாட்கள் எண்ணப்படும் நிலை. என் இளைய

மகன் ஸ்டாலின், நாலு வயது. மஞ்சள் காமாலை நோயினால் தாக்குண்டுள்ளான்.

இருந்தும், எது உயர்வான பணி எனச் சிந்தித்து இயக்கப் பணிதான் என முடிவெடுத்து அரசு ஆணையை எரித்தேன்.

ஏதேனும் பிரச்சினை என்றால் (பொருளாதாரப் பிரச்சினை யல்ல) தங்களைச் சந்திக்குமாறு உற்றார் உறவினரிடம் கூறியுள்ளேன். எந்த நிலையிலும் நானும் என்னுடன் சிறைப்படுகிறவர்களும் ஜாமீனில் வருவதாக இல்லை. நீங்களே சொன்னாலும்கூட!

பணிவன்புள்ள,
பொன். கலியமூர்த்தி,
பூதலூர் ஒன்றிய செயலாளர் (தஞ்சை)

உடன்பிறப்பே, கடிதத்தைப் படிக்கும் போதே கண்கள் குளமாகின்றன அல்லவா? மெய்சிலிர்க்கிறது அல்லவா? வயதான தந்தையின் உடலையும் உயிரையும் புற்றுநோய் வேக வேகமாக விழுங்கிக் கொண்டிருக்கிறது! பெற்ற மகனோ; நாலு வயது தளிர் - மஞ்சள் காமாலை நோயால் துடித்து துவண்டு கிடக்கிறான்! அய்யோ; நான் எவ்வளவு கல்நெஞ்சன்; அந்த வீட்டுப் பிள்ளையைச் சென்றிடுக சிறைக்கோட்டத்திற்கு எனக் கூறியிருக்கிறேன். இத்தனை நிலைமைகளும் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் பொன். கலியமூர்த்தியைப் போகாதே எனத் தடுத்திருக்க முடியும் - தடுத்தாலும் கேட்காமல் நாங்கள் தணலில் தங்கம் என்பதை எனக்கு அறிவிக்கிற பல்லாயிரக்கணக்கான பாசறைச் சீயங்களன்றோ; இந்தக் கழகத்தில் உலவுகின்றனர்!

சேலம் அண்ணா நகரைச் சேர்ந்த கே.பி. பக்ருதீன் என்ற உடன்பிறப்பு எழுதியுள்ள மடல் இன்று கிடைத்தது. அது, இதோ!

அரசு ஆணைக்குத் தீயிடும் போராட்டத்தில் கலந்து கொள்ள நானும் ஊர்வலத்தில் சென்றேன். ஏற்கனவே ஆறு மாதத்திற்கு முன்பு என் காலில் அடிபட்டு ஊனமுற்று இருந்ததால் தடியூன்றி நடந்து சேலம் 33-வது வட்டத்தில் அரசாணையை எரித்தேன். 101 பேர் கைது செய்யப்பட்டபோது போலீஸ் அதிகாரிகள் என்னை மாத்திரம் விட்டு விட்டார்கள். நீ ஊனமுற்று இருக்கிறாய்; உன்னைக் கைது செய்ய முடியாது எனக் கூறிவிட்டார்கள்.

மாவட்டச் செயலாளர் முத்து, பழனியப்பன் எம்.பி., நகரச் செயலாளர் மாரியப்பன் ஆகியோரும் எனக்கு ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டார்கள். என் நெஞ்சு துடிக்கிறது. இருப்பதா, இறப்பதா என்றே தெரியவில்லை. அழுது கொண்டேயிருக்கிறேன். 1977-இல் தாங்கள் கைது செய்யப்பட்டபோது விடுதலை கோரி நடந்த மறியலில் 15 நாள் காவலில் இருந்தவன் நான் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.

உங்களன்புள்ள,

கே.பி. பக்ருதீன், (சேலம்)

இத்தகைய கடிதங்கள், நான் உனக்கு முரசொலி வாயிலாக எழுதும் கடிதங்களைவிட உயர்ந்தவை அல்லவா? உணர்ச்சிப் பெட்டகங்கள் அல்லவா?

இந்த வீரர்குல திலகங்களை - தியாகத் திருவிளக்குகளைப் பெற்றிருக்கும் இந்தக் கழகத்தை; பொறாமையாளர்களும், புன்மதியாளர்களும், துரோகிகளும், நன்றி கொன்ற நயவஞ்சகர்களும், ஏடாகூடமாகவும் ஏனோதானோ வென்றும் எரிச்சல் கக்கியும் எழுதியும் பேசியும் அழித்துவிட முடியுமென்று கருதுவார்களேயானால் அவர்களைப் போலப் பைத்தியக்காரர்கள் இருக்க முடியுமா?

பொன். கலியமூர்த்தி, பக்ருதீன் போன்ற நிலையில் உள்ளோர் எத்தனை பேர்! அவர்கள் எனக்குக் கடிதம் எழுதாமல் இருக்கலாம்; ஆனால் அவர்களின் தொகை எண்ணிலடங்காது என்பதை நானறிவேன்!

தமிழகமெங்கணுமுள்ள சிறைக் கோட்டங்களில் சிறுத்தைப் புலிகளென - சிங்க ஏறுகளென - அடைபட்டிருக்கும்; என் ஆருயிர் உடன்பிறப்புக்களின் திருமுகங்களையெல்லாம் அகக்கண்ணால் தரிசிக்கிறேன்!

இந்தக் கழகம் வாழ - இந்தக் கழகத்தை வளர்த்து நாட்டை வாழ வைக்க - உதிரப் புனலையும் உயிரையும் வழங்கிடச் சித்தமாக உள்ளவர்கள்; தமிழகத்தை இடையே சூழ்ந்துள்ள இருளை அகற்றிட இன்னல் பலவற்றைப் புன்னகையுடன் ஏற்பவர்கள்; இன்று பல்வேறு சிறைக் கொட்டடிகளில்!

அவர்களின் தியாகம் வீண் போகாது! வீண் போனதில்லை! அண்ணா வளர்த்த ஆயிரங்காலத்துப் பயிர் இந்தக் கழகம்! இதனை அழித்திடும் முயற்சியில் வெற்றி பெற்றிட இதுவரை யாரும் பிறந்திடவில்லை - இனியும் பிறக்கப் போவதுமில்லை!

அன்புள்ள,

மு. க.

(05-03-1981)

880. வறட்சிப் பணிகள், முறையாக நடந்திட...!

உடன்பிறப்பே,

விரல்விட்டு எண்ணிச் சொல்லக்கூடிய ஒரு சில பகுதிகளைத் தவிர - மாநில முழுவதும் வறட்சிக் கொடுமையால் தாக்குண்டு மக்கள் அவதிப்படுகிறார்கள். சட்டப் பேரவையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற விவாதத்தில் எல்லாப் பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இன்று உருவாகியுள்ள பயங்கர நிலையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கழகத்தின் பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான பேராசிரியர் அவர்கள்;

நவம்பர் மாதத்திலேயே வறட்சி குறித்த அறிகுறிகள் தோன்றியபோது, அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டும் - தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தால் எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை, விரிவாகி விட்டது. வரும் மாதங்களில் இன்னும் கடுமையான வறட்சித் தாக்குதலைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வறட்சி நிவாரணப் பணிகளுக்கு இந்த அரசு ஒதுக்கியுள்ள தொகை, மிக மிக குறைவானது.

எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இந்திரா காங்கிரஸ் மற்றுமுள்ள சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் வறட்சித் துயர் துடைப்புப் பணிகளில் காட்டப்படும் தயக்கத்தையும், தாமதத்தையும் குறிப்பிட்டிருப்பதோடு; இன்றுள்ள சூழ்நிலையில் அந்தப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல என்பதையும் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

வறட்சிப் பணிகள், ஒப்பந்தக்காரர்கள் மூலமாக நிறைவேற்றப்படமாட்டா என்றும் ஆங்காங்குள்ள மக்களை வைத்தே அப்பணிகள் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இப்படித்தான் புயல், வெள்ளத்தால் தமிழகம் பாதிக்கப்பட்ட போதும் சொன்னார்கள். இவர்கள் ஆட்சியில் ஒப்பந்தக்காரர்களே இருக்கமாட்டார்கள் என்றும் பிரகடனம் செய்தார்கள். ஆனால் வெள்ள நிவாரணப் பணிகள் என்ற பெயரால் ஆளும் கட்சிக்காரர்களான அ.இ.அ.தி.மு.க.வினர் எவ்வளவு முறைகேடாக அந்தப் பணிகளை மேற்கொண்டனர் என்பதும், அவற்றில் எவ்வளவு ஊழல்கள் நடைபெற்றன என்பதும், அந்தந்த பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்கள் தெளிவாக அறிவார்கள்.

மக்கள் குழுக்கள் என்ற ஒரு மாயமந்திரச் சொல் இந்த ஆட்சியாளரிடம் சிக்கிப் படாத பாடுபடுகிறது!

பனிரெண்டாயிரம் ஊராட்சி மன்றங்களை ஒரே உத்திரவில் கலைத்துவிட்டு - அந்த அடிமட்ட ஜனநாயக அமைப்புத் தொட்டிலை நொறுக்கி எறிந்து விட்டு - அவற்றுக்குப் பதிலாக எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய மக்கள் குழுக்களை ஆங்காங்கு அமைத்து - அவர்கள் போட்டதுதான் திட்டம் -வகுத்ததுதான் சட்டம் - எனக் கொள்ளையடிக்கும் சூழ்நிலையை உருவாக்கிவிட்டு - அந்த உள்ளாட்சிமன்றத் தேர்தல்களையும் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறார்கள்.

அந்தந்த ஊர்களில் -ஒன்றியங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் தானே; அந்தப் பகுதி மக்களின் குறைகளைக் களையக் கூடிய கடமையுணர்ச்சிக்கு அவர்கள் ஆட்படுத்தப்படுவார்கள்!

அரசு அறிக்கைகளைப் பறக்க விடுவது! ஆணைகள் ஆயிரம் ஆயிரம்! ஆனால் எதுவும் வாட்டத்தால் தாக்குண்ட மக்களின் வீட்டு வாயிற்படியை மிதித்து அவர்கள் வாழ்வில் ஒரு துளி தேனையாவது ஊற்றியதாகத் தெரியவில்லை.

பல பகுதிகளில் கால்நடைகளுக்குத் தண்ணீர் இல்லாப் பரிதாபக் காட்சிகள்! விலைவாசிகள் விஷம்போல் ஏறி, எளியோரைக் கொட்டுகின்றன! விலைவாசி ஏறாமல் இருக்க - இப்போதுள்ள விலைவாசியைக் கூடக் குறைக்க - எங்களுக்கு வாக்களியுங்கள் என்று எம்.ஜி.ஆர்.தேர்தல் நேரத்தில் பேசாத கூட்டங்கள் இல்லை. ஆனால் இன்று? எல்லாப் பண்டங்களின் விலையும் விண்ணைமுட்டி நிற்கின்றன.

வண்ண விளம்பரங்கள் - வாண வேடிக்கைகள் - விருந்துகள் - விழாக்கள் - எதிர்க்கட்சிகளுக்கு அறைகூவல்கள் - இவற்றைத் தவிர, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குரிய பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு என்றைக்காவது திட்டமிட்டுச் செயலாற்றியது உண்டா?

யார் மீது வழக்குப் போடலாம்? யாரைப் பிடித்து சிறையில் அடைக்கலாம்? யாரைப் பழி வாங்கலாம்? இப்படியே நச்சு நினைவை அச்சாகக் கொண்டு சுழலும் இயந்திரமாகத்தான் எம்.ஜி.ஆர். ஆட்சி இருக்கிறது!

இந்த ஆட்சியிடமிருந்து வறட்சி நிவாரணப் பணிகள் - துரிதமாகவோ - அல்லது தூய்மையாகவோ - நடைபெறுமென எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே அளிக்கும்.

இதுகுறித்து மிக முக்கியமாக விவாதிக்கத்தான் கழகத்தின் செயற்குழு ஞாயிறன்று காலையில் கூடுகிறது.

கழகத்தினர் பல்லாயிரவர், செயற்குழு உறுப்பினர்கள், தலைவர்கள், சிறைக்கோட்டத்திலிருந்தாலும்; மக்களின் துயர்துடைக்கும் செயற்பாட்டுக்குக் கழகம்; இந்தச் செயற்குழுவில் தக்க முடிவுகளை எடுக்கும்.

அன்புள்ள,

மு. க.

(06-03-1981)

881. அதுவரை நீயும் பொறுத்திரு!

உடன்பிறப்பே,

வெறுத்தால் வழக்குகள்; விரும்பினால் விருதுகள்; என்ற நிலை அரசியலில் இருக்குமானால், எந்த அரசியல்வாதிக்கும் பாதுகாப்பே இருக்காது!

தமிழகத்தை ஆளுகின்ற எம்.ஜி.ஆர். அவர்களின் பொன் மொழியொன்று இவ்வாறு அவரது கட்சி ஏட்டில் எதிரொலிக் கப்பட்டிருக்கிறது!

அந்தப் பொன்மொழிக்கு எம்.ஜி.ஆர். அவர்களின் மனச்சாட்சியே பதில் கூறுவது போன்ற ஒரு கற்பனை! எழுத்து வடிவம்தான் கற்பனையே தவிர, எழுப்பிடும் கேள்விகள் உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் தோன்றுபவை!

இதோ அருமை நண்பர் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களை நோக்கி, அவரது மனச்சாட்சி தொடுத்திடும் கேள்விகள்!

(1). எம்.ஜி.ஆர். அவர்களே! தங்கள் கட்சியின் முதற்கட்ட இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியின் போது நெல்லை மாவட்டத்தில் நடந்த விவசாயப் போராட்டத்தில் ஒரு போலீஸ் அதிகாரி கொலை செய்யப் பட்டது தொடர்பாக, கோவையில் இருந்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்களைக் கைது செய்து பாளையங்கோட்டை சிறைச்சாலையில் அடைத்தீர்கள்! அவர் மீது 302-வது பிரிவு முதலியவற்றில் கொலைக் குற்றம் சாட்டினீர்கள்! ஜாமீனில் விட முடியாதென அரசு வக்கீல்கள் சார்பில் மறுத்தீர்கள்! பலநாள் முயற்சிகளுக்குப் பிறகு அவர் நிபந்தனை ஜாமீனில் விடப்பட உங்கள் அரசு வக்கீல் ஓரளவு சம்மதித்தார் போலும்! அதுவும் என்ன நிபந்தனை! நாராயணசாமி நாயுடு அவர்கள் எந்தக் கூட்டத்திலும் பேசக்கூடாது - மேடையில் இருக்கலாம்.; ஆனால் பேசக்கூடாது என்ற நிபந்தனை! பிறகு வழக்கு தீவிரமாகத் தொடரப்பட்டது! பாராளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சி தோற்ற

பிறகு, உங்கள் ஆட்சியும் கலைக்கப்பட்டது! கவர்னர் ஆட்சி வந்தது! நாராயணசாமி நாயுடு வீட்டுக்கு நாலு முறை சென்றீர்கள்! அவர் மீது நீங்கள் தொடுத்த கொலை வழக்கு கவர்னர் ஆட்சி வாபஸ் வாங்க வேண்டுமென்று அறிக்கைகளை நித்தமும் பறக்க விட்டீர்கள்! நாயுடு மீதிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது. எந்த நாயுடு அவர்களை சமூக விரோதி என்று சொன்னீர்களோ; அவரை - சட்டமன்றத் தேர்தலின்போது இந்திரன் சந்திரன் எனப் புகழ்ந்தீர்கள்! இப்போது மீண்டும் நாயுடு அவர்கள்மீது கோபம்! அவரை சமூக விரோதி என்கிறீர்கள். வெறுத்தால் வழக்குகள் - விரும்பினால் விருதுகள் என்ற தங்களது கேலி நிறைந்த அடுக்குத் தொடர் பொன்மொழி, தங்களுக்கே எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது பார்த்தீர்களா?

(2). எம்.ஜி.ஆர். அவர்களே! திருமதி இந்திரா காந்தி அம்மையார் வந்தபோது தி.மு.க. சார்பில் கறுப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியில் மதுரையில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்றன. அதைத் தொடர்புபடுத்தி - கழகத் தலைவர் கருணாநிதி மீதும், பொதுச் செயலாளர் பேராசிரியர் மீதும், பொருளாளர் சாதிக் மீதும், துணைப் பொதுச் செயலாளர் ஆசைத்தம்பி மீதும், நண்பர் ப.உ. சண்முகம் மீதும், மற்றும் தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் மீதும் - இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயற்சி என்று வழக்குத் தொடுத்தீர்கள்! சுமார் நாலு வருடமாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கொலை முயற்சி வழக்கில் உங்கள் ஆட்சியால் சிக்க வைக்கப்பட்டவர்களில் சிலர், இப்போது உங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள்! சிலர், உங்கள் கட்சியின் சொற்பொழிவாளர்கள்! வழக்கு முடியவில்லை! நடந்து கொண்டிருக்கிறது! ஆனாலும் வழக்கில் உங்களால் சம்பந்தப்படுத்தப்பட்டவர்கள்; உங்கள் கட்சியில் சேர்ந்து முக்கிய பொறுப்புக்களில் இருக்கிறார்கள்! கருணாநிதி மீதும் மற்ற தலைவர்கள் மீதும் எந்த சட்டப் பிரிவுகளின்படி கொலை முயற்சி வழக்கோ; அதே சட்டப் பிரிவுகளின்படி நண்பர் ப.உ. சண்முகம் அவர்களின் மீதும் நீங்கள் தொடுத்த கொலை முயற்சி வழக்கு நடந்து கொண்டிருக்கிறது! இதற்கிடையில் தாங்கள் அவரை தங்கள் கட்சியில் பொதுச் செயலாளராகவும் ஆக்கிக்கொண்டு விட்டீர்கள்! அதாவது நியமித்து விட்டீர்கள்! ப.உ.ச.வை வெறுத்தீர்கள்; அப்போது வழக்குப் போட்டீர்கள்! விரும்பினீர்கள்; அப்போது பொதுச் செயலாளர் என்ற விருதினை

அளித்தீர்கள். வெறுத்தால் வழக்குகள் - விரும்பினால் விருதுகள் என்ற தங்களது கேலி நிறைந்த பொன்மொழி, தங்களுக்கே எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது; பார்த்தீர்களா?

(3). நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், நண்பர் ப.உ.ச. அவர்களும், நண்பர் மதுரை முத்து, திருமதி சத்தியவாணிமுத்து, மற்றும் இன்றைய தினம் தங்களைச் சூழ இருந்து விருதுகளைப் பெற்றிருப்பவர்களையும் பார்த்து நிமிர்ந்தால் குற்றவாளிகளாக்கப்படுவீர்கள்! குழைந்தால் விருந்தினராக்கப்படுவீர்கள் என்று தங்களுடைய கட்சி ஏட்டில் தாங்கள் எழுதச் செய்திருப்பது - தன்மான இயக்கத்தில் இருந்து வளர்ந்து வருகிற அவர்களை எவ்வளவு புண்படுத்தும் தெரியுமா? அவர்கள், உங்களை எதிர்த்து நிமிர்ந்து நின்ற போது குற்றவாளியாக்கினீர்கள்; சரி! அதற்காக இப்போது அவர்களுக்குத் தோட்டத்தில் அளித்த விருந்தைச் சுட்டிக்காட்டி - குழைகிறீர்கள்; அதனால் விருந்தினராக்கப்படுகிறீர்கள்! என்று ஏகடியம் செய்கிறீர்களே; அது நியாயமா? வெறுத்தால் வழக்கு - விரும்பினால் விருதுகள்! என்ற தங்களது கேலி நிறைந்த பொன்மொழி எவ்வளவு பொருத்தமாக உங்களையே தாக்குகிறது பார்த்தீர்களா?

(4). எம்.ஜி.ஆர். அவர்களே! கொஞ்சம் பொறுத்திருங்கள்! கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில், வெறுத்ததால் நீங்கள் போட்ட வழக்குகள் எத்தனை என்பதையும் - எத்தகையவை என்பதையும் - அவர்களையே நீங்கள் பின்னர் விரும்பியதால் அளித்த விருதுகள் எத்தகையவை என்பதையும் - விரைவில் விளக்கமாகவும் ஆதாரங்களுடனும் தங்களுக்கும் நாட்டுக்கும் நினைவூட்டுகிறேன்.

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். அவர்களின் மனச்சாட்சி, அவருடன் பிறகு பேசி - மேலும் பல கேள்விகளை - பலமான கேள்விகளை எழுப்பிடக் கெடு கேட்டிருக்கிறது! அதுவரை நீயும் பொறுத்திரு!

அன்புள்ள,

மு. க.

(07-03-1981)

882. குமுதமா? குரோதமா?

உடன்பிறப்பே,

12-3-81-ல் வெளி வரும் குமுதம் வார இதழ் வழக்கம்போல் முன்னதாக இன்றைக்கே விற்பனைக்குச் சென்னை நகரில் வந்துவிட்டது. இன்றைக்கு இந்தக் கடிதத்தை உனக்கு நான் எழுதும் தேதி 7-3-81.

இப்பொழுது சில வார இதழ்கள் நாலைந்து நாட்கள் முன்கூட்டியே கிடைத்து விடுகின்றன. அதுபோலவே கிடைத்த குமுதம் இதழில் எழுதியுள்ள தலையங்கப் பகுதியைப் படித்துப் பார்த்தேன்.

தி.மு.கழகத்தைப் பற்றி செய்திகள் வெளியிடும் பாணியிலாகட்டும், கேலிச் சித்திரங்கள் வெளியிடும் நேரத்திலாகட்டும், தலையங்கங்கள் தீட்டிடும் வேளையிலாகட்டும் தாக்குவது - தரக்குறைவாக விமர்சிப்பது - இப்படியொரு குறிக்கோளைக் கொண்டு நடத்தப்படுவதுதான் குமுதம் ஏடு என்பதை நான் சொல்லி நீ புதிதாக தெரிந்து கொள்ளப் போவதில்லை.

விவேகமான விமர்சனங்களையோ - அந்த அடிப்படையில் வேகமான கண்டனங்களையோ - நானும் சரி; நமது கழகமும் சரி வரவேற்பதிலோ - அவற்றுக்குப் பதில் சொல்வதிலோ - விளக்கமளிப்பதிலோ - என்றைக்கும் ஆறாத சினம் கொண்டு அலைந்ததில்லை. பத்திரிகைகளின் கருத்துக்களுக்குப் பதில் கருத்து வழங்குவதிலோ - அல்லது கண்டனங்களுக்குக் கண்டனங்கள் தெரிவிப்பதிலோ - ஏற்படுகிற மோதுதல்கள் தற்காலிகமானவைகளே தவிர; நிரந்தரப் பகையாக நீடித்து நிற்கக்கூடியவையென்று நினைத்ததுமில்லை - அவ்வாறு நினைத்துச் செயல்பட்டதுமில்லை!

ஆனால் குமுதம் போன்ற ஒரு சில ஏடுகள் - தங்களை எந்தக் கட்சியையும் சாராத ஏடுகள் என்று வெளியிலே கூறிக்கொண்டு; தி.மு.கழகம் என்றாலே - எரிச்சலைக் கொட்டுகிற ஏடுகளாகத் திகழ்வதைக் காண்கிறோம்.

நாளிதழ்களோ - வார இதழ்களோ - கட்சிச் சார்புடையவை பல இருக்கின்றன! அவற்றில் அவை சார்ந்துள்ள கட்சிக் கொள்கைகள் இடம் பெறுவதும் - மாற்றுக் கட்சிகளை விமர்சிப்பதும் கண்டிப்பதும் தவிர்க்க முடியாதவைகள்!

ஆனால் குமுதம் போன்ற ஒரு ஏடு; கழகம் என்றாலே காய்ந்து விழுவதையே தனது பணியாகக் கொண்டிருப்பது ஏன் என்று புரியாமல் இல்லை.

கழகத்தைத் தாக்குவதைத் தனது கொள்கையாகக் கொண்டிருப்பதாகக் குமுதம் கூறுமேயானால்; அதை வெளிப்படையாக அறிவிப்பதற்கு நன்றியும் பாராட்டும் வழங்கத் தயாராயிருக்கிறேன்.

ஏழும் மூன்றும் பத்து என்று ஒருவன் சொன்னால்; ஆகா! சரியாகத்தான் சொன்னான் என்கிறோம்! ஆனால் ஆறும் இரண்டும் ஏழு என்று கூட்டி அதன் பிறகு ஏழும் மூன்றும் பத்து என்கிறானே; அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்று ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு விவாதத்தின்போது கேட்டார்கள்!

அப்படித்தான் குமுதம் சில செய்திகளை வெளியிடும்! அல்லது தலையங்கக் குறிப்புகளை எழுதும்! மேலெழுந்தவாரியாக யாராவது படித்தால் ஏழும் மூன்றும் பத்து என்பது போலத்தான் ஒப்புக் கொள்ளத் தோன்றும்.

ஆனால் குமுதம் எழுதத் தொடங்குகிற - விமர்சிக்க ஆரம்பிக்கிற அடிப்படை; ஆறும் இரண்டும் ஏழு என்று ஏமாற்றுகிற கணக்கில் அமையும்! இந்த ஏமாற்று வேலையை மறைத்து விட்டுத்தான் அந்த ஏழும் மூன்றும் பத்துதானே என்று குமுதம் கேட்கும்போது அடடா! நல்ல கேள்விதானே என்று நினைக்கத்தான் தோன்றும்!

இதோ இந்த வார இதழில் குமுதம் தலையங்கத்தில் சில முக்கியமான பகுதிகள்!

79-லிருந்து நடந்ததை விசாரிக்க வேண்டுமென்று கோரினோம். நவம்பர், டிசம்பர் நிகழ்ச்சிகளை மட்டும் விசாரிக்கச்

சொல்லியிருக்கிறார்கள் என்று கருணாநிதி குறைபட்டுக் கொள்கிறார். பிரச்சினை எழுந்ததே; அண்மையில் நடந்த எரி சாராயக் கடத்தல் விவகாரத்தில்தான்! அது விஷயத்தில்தான் அரசு ஊழல் செய்திருக்கிறது என்று தி.மு.க.வினர் குற்றம் சாட்டினார்கள். இப்போது நவம்பர், டிசம்பர் நிகழ்ச்சிகளை விசாரிப்பதில் புண்ணியமில்லை என்று அவர்கள் சொல்வார்களேயானால் அப்போது ஊழல் நடக்கவில்லை யென்று அவர்களே ஒப்புக்கொண்டதாகி விடும்.

கைலாசம் கமிஷனுக்கு விசாரணைக்குரிய விஷயத் தொகுப்பில் அறிவிக்கப்பட்டுள்ள மாதங்கள் 1980 அக்டோபர் - நவம்பர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளன!

குமுதம் அதையே கூட கவனிக்காமல் - அவசரத்தில் - அல்லது நம்மீதுள்ள ஆத்திரத்தில் - நவம்பர், டிசம்பர் மாதங்கள் என்று கமிஷன் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தலையங்கம் தீட்டுகிறது! பரவாயில்லை; குமுதத்தின் தவறைத் திருத்தி எம்.ஜி.ஆர். அரசின் ஆணை குறிப்பிட்டுள்ள அக்டோபர், நவம்பர் என்ற இரண்டு மாதங்கள் என்றே வைத்துக் கொள்வோம்!

கவர்னர் உரை விவாதத்தில் நான் சட்டப்பேரவையில் பிப்ரவரி நாலாம் தேதி, எம்.ஜி.ஆர். அரசின் எரி சாராய ஊழல் குறித்துப் பேசியபோது; 1979 ஜூன் மாதம் 26-ஆம் தேதி எம்.ஜி.ஆர். அரசின் ஆணையின்படி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிச் செல்கிற எரி சாராய லாரிகளுடன் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் செல்வதை எரி சாராயத் தொழிற்சாலை அதிபர்களின் முறையீட்டின்படி வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதிலேயே அந்த தொழிற்சாலை அதிபர்களுக்கு முறைகேடான சலுகை வழங்குவது ஆரம்பமாகி விட்டது என்பதையும் - 1980 ஜூலை 4-ஆம் தேதி ஆணைப்படி வெளி மாநிலங்களுக்கு எரி சாராய ஏற்றுமதிக்கு தடை விதித்து விட்டு - எதிர்பார்த்தபடி வர வேண்டியவர்கள் வந்து, தர வேண்டியதைத் தந்த பிறகு - ஆகஸ்டு 28-1980 தேதியிட்ட ஆணையின்படி அவசரம் என்ற தலைப்பிட்டு அந்தத் தடை நீக்கப்படுகிறது என்பதையும் - செப்டம்பர் மாதம் ஒருவருக்கு பத்து லட்சம் லிட்டர் எரி சாராயம் எடுத்துச்செல்ல ஏற்றுமதி அனுமதி கொடுத்தால் - அவர் பதினைந்து லட்சம் லிட்டர்

எடுத்துச் சென்று விட்டார் என்று முதல்வர் எம்.ஜி.ஆர். சென்னை வர்த்தக சபைக் கூட்டத்தில் அறிவித்ததையும் - அத்தகைய ஒரு கடத்தல்காரர் மீது ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் - அதன் தொடர்பாக அக்டோபர் நவம்பர் மாதங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எவை என்பதையும் - சுட்டிக்காட்டித்தான் இந்தப் பயங்கர ஊழல் பற்றிய விபரங்களையும் ஆதாரங்களையும் தொகுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இவ்வளவு குறிப்புகளும் - குமுதம் தலையங்கத்தில் மறைக்கப்பட்டு; திசை திருப்பப் பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

நவம்பர், டிசம்பர் நிகழ்ச்சிகளை விசாரிப்பதில் புண்ணியமில்லை என்று தி.மு.க. சொல்கிறதாம்!

அதாவது அக்டோபர், நவம்பர் நிகழ்ச்சிகள் என்று கமிஷன் விசாரணைக்குக் குறித்திருக்கிற ஆணையைத்தான் குமுதம் இப்படிக் கூறுகிறது!

அக்டோபர், நவம்பர் மாத நிகழ்ச்சிகளை விசாரிக்க வேண்டாமென்று கழகம் கூறவில்லை. அவற்றுக்குத் தொடர்பாக - 1979 முதற்கொண்டே இந்த அரசு, எரி சாராய ஏற்றுமதியில் பல ஊழல்களைச் செய்திருக்கிறது - அவற்றையும் சேர்த்து விசாரிக்க வேண்டுமென்பதே கழகத்தின் கருத்து!

உயர்மட்டக் கமிஷன் வேண்டுமென்கிறார்! கமிஷன் முன் வைக்க வேண்டிய ஆதாரங்களை வைக்க தி.மு.க. தயாராக இருந்தால் அவற்றில் உண்மை இருந்தால் கீழ்மட்டக் கமிஷன் முன் வைத்தாலே போதும். பொதுமக்களுக்கு எட்டிவிடும்.

இதுவும் குமுதம் கூற்றுத்தான்! குமுதம்; ஒரு உண்மையை ஒப்புக்கொண்டு விட்டது! கீழ்மட்டக் கமிஷன் அறிக்கை எம்.ஜி.ஆர். சொற்படிதான் வெளிவரும். ஆனால் பொது மக்களுக்கு உண்மை எட்டிவிடும். அது போதாதா? எந்தக் கமிஷனாக இருந்தால் என்ன? என்ற கருத்தைக் குமுதம் எப்படியோ ஒருவிதமாகப் பகிரங்கப்படுத்தியதற்கு நன்றி கூறத்தான் வேண்டும்!

நீதிபதியின் முடிவு எப்படி இருந்தாலும் - தகவல்களை, உண்மைகளை மறைக்க முடியாது! அவை அம்பலத்துக்கு வந்தே ஆக வேண்டும்.

இதுவும் குமுதம்தான்! நீதிபதியின் முடிவு எப்படியிருந்தாலும், என்றுதான் குமுதத்தினால் எழுத முடிகிறதே தவிர - அது நேர்மையானதாகவும் - சந்தேகத்திற்கு இடமின்றியும் இருக்கும் என்பதைக் குமுதம் கூடத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை பார்த்தாயா?

எனவேதான் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் தொடர்புள்ளதாக உள்ள இந்தப் பெரும் ஊழலைப் பற்றி விசாரிக்க மாநிலங்களின் அளவிலேயில்லாமல் - மேல்மட்ட அளவிலே விசாரணை வேண்டுமென்று கழகத்தினரும், வேறு பல அரசியல் கட்சித் தலைவர்களும் கூறுகிறார்கள் என்பதைக் குமுதம் புரிந்து கொள்ள வேண்டும்!

குமுதத்திற்குப் புரியாமல் இல்லை; குரோதம்; அவ்வளவுதான் - அதனால் அப்படி எழுதுகிறது.

அன்புள்ள,

மு. க.

(08-03-1981)

42217
894.811
தமி.10

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

883. உருவிய வாள் எங்கே?

உடன்பிறப்பே,

உருவினான் வாளை! எதிரே நின்ற மற்றொரு வீரனோ; உருவிய வாளை உறையில் போடாதே! இதோ என் வாளை ஓங்கிவிட்டேன் என்று தன் கைவாளைச் சுழற்றினான். ஓங்கிய வாளின் முன்னே நிற்க முடியாமல் உருவிய வாள் உறைக்குள்ளே பதுங்கிக் கொண்டது! அத்துடன் வாளுருவியும் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டான். அவனை வீரர் பட்டியலில் எவரும் சேர்த்திட முன்வரமாட்டார்!

இது என்ன திடீர்க்கதை! நொடிக்கதை போல! இந்தப் பொடிக் கதையை எதற்காகச் சொல்கிறாய் என்று நீ கேட்பாய்; எதையும் துருவித் துருவிக் கேட்கும் உடன்பிறப்பு ஆயிற்றே!

காஞ்சீபுரம்! நமது அண்ணன் பிறந்த நகர்! பல்லவர் புகழையும் - கருணாகரத் தொண்டைமானின் கீர்த்தியையும் - பரஞ்சோதியின் பராக்கிரமத்தையும் - முரசு கொட்டி அறிவிக்கும் வரலாற்றுத் திருத்தலம்! வீரங்கமழ்கின்ற மண்!

ஓ! அங்கே நடந்த போர்களைப் பற்றிய குறிப்புக்களைத் தொகுத்து எழுதுகிறாயா? அவற்றில் ஒரு நிகழ்ச்சிதான் இந்த வாளுருவியின் கதையா? எந்தப் போர்க்களத்தில்? புலிகேசி படையெடுத்து வந்த போதா? அல்லது பல்லவப் படை வாதாபி வரையில் புலிகேசியை விரட்டத் தொடங்கிய போதா? ஒருவேளை; சோழனின் சேனை, கலிங்கம் வரை சென்று கலிங்கத்துப் பரணி பாடியதே - அப்போதா?

வரலாறு படித்த உடன்பிறப்பல்லவா; அதனால் அடுக்குகிறாய் கேள்விகளை!

வாளோங்கியைக் கண்டு வாளுருவி ஓடியதாக நான் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு ஒரு கற்பனை! எதிரியை மிரட்டுவதற்காக வாளை உருவியதும் - எதிரி மிரளாமல் தனது வாளை ஓங்கிட;

வாளுருவி எடுத்தான் ஓட்டம் என்பது கற்பனையாக இருந்தாலும் - எங்காவது ஒரு களத்தில் நடைபெற்றிருக்கக் கூடுமென்று யூகிக்கலாம் அல்லவா?

சரி; இந்த வீர (?) நிகழ்ச்சியை மனத்திலே பதித்துக் கொண்டவாறு; சற்று என்னுடன் சட்டப் பேரவைக்கு வா!

பேரவையின் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து பேரவை நிகழ்ச்சிகளைக் கவனி!

எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் அமர்ந்திருக்கிறோம்! அதோ அவர்தான் முதலமைச்சர்! இப்போது புரட்சித் தலைவர்! அவர் புரட்சி நடிகராக இருந்தபோது தன் கையிலுள்ள ஒரு வாளால் தன்னைச் சூழ்ந்து மோதும் நூற்றுக்கணக்கான வாட்களைச் சமாளிப்பார்! உருவிய வாளை உறையில் போடமாட்டார்; பகைவர்களைப் பூண்டோடு வீழ்த்தாமல்! படத்தில் தான் சொல்லுகிறேன்! அறைகூவல் விடுவார்; அதை நிறைவேற்றிக் காட்டுவார் - அதுவும் படக்காட்சியில் தான்!

அப்படிப்பட்டவர் இப்போது முதல்வர்! எதிர்க்கட்சி வரிசையில் ஒரு இளைஞர் எழுகிறார்! இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர். பெயர் சுந்தரராசன்.

சற்றுப் பின்னால் இரண்டொரு வரிசைகளைத் தாண்டி இன்னொரு இளைஞர் எழுகிறார்! எதிர்க்கட்சியான தி.மு.க.வைச் சேர்ந்தவர்! பெயர் இரகுமான்கான்!

எரி சாராய ஊழலைப் பற்றி முதலமைச்சர், காஞ்சீபுரத்தில் நடந்த அரசாங்க விழா ஒன்றில் பேசியதையும் - விசாரணைக் கமிஷன் நியமித்து விட்டு - அந்த விசாரணைக் கமிஷன் மீது இதுதான் முடிவு என்று தினிப்பதுபோல இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒருவர் பற்றியும் - தி.மு.க. தோழர் ஒருவர் பற்றியும் - குற்றம் சாட்டிப் பேசியது உரிமைமீறல் ஆகும் என்று - எதிர் தரப்பில் இருந்து அந்த இருவரும் கருத்து தெரிவிக்கின்றனர்!

இ.காங்கிரஸ் எம்.பி. அன்பரசு அவர்கள், அ.தி.மு.க.வினர் குடிக்கிறார்கள் என்று அந்த நிகழ்ச்சியில் பேசினார். அதனால் நான் பதில் சொன்னேன். பேசியதற்கு இதோ டேப் இருக்கிறது.

அவர்கள் பேசலாம் - நாங்கள் பேசக்கூடாதா? என்று கேட்டு, டேப்பை, சட்டைப் பையிலிருந்து வாளையுருவிடுவது போல உருவி, மேசையில் போடுகிறார் முதல்வர்.

மாலை ஏடுகளில் செய்திகள்; டேப்பைக் காட்டி முதல்வர் விளாசினார்! முதல்வர் ஆவேசம்! பதிலடி! குட்டு! சூடு! எதிர்க்கட்சிகள் மௌனம்! இப்படி அந்த ஏடுகள் வீரவாழ்த்து பாடின முதல்வருக்கு!

மறுநாள்! மீண்டும் பார்வையாளர் மாடத்துக்கு வருகிறாய் உடன்பிறப்பே!

எதிர்க்கட்சித் தலைவனாகிய நான் எழுந்து பேரவைத் தலைவரிடம் கேட்கிறேன்.

தலைவர் அவர்களே! நேற்று முதல்வர் மீது உரிமைப் பிரச்சினை வந்தபோது அன்பரசு எம்.பி. பேசியதாக ஒன்றைச் சொல்லி, முதல்வர் டேப்பை எடுத்துக் காட்டினார். அன்பரசு அவர்கள் இன்று காலை டெல்லியிலிருந்து என்னிடம் தொடர்பு கொண்டு, காஞ்சீபுரம் நிகழ்ச்சியில், அவ்வாறு அவர் பேசவேயில்லையென்று மறுத்திருக்கிறார். எனவே சந்தேகம் நீங்கும் வகையில் அந்த டேப்பு போட்டுக் காட்டப்படுமா?

இப்படிக் கேட்டதும் அவர் எழுகிறார்! யார்?

அதோ - நெடிய தோற்றம் - கம்பீரமாக எழுகிறதே; அவர்தான் நாவலர் நெடுஞ்செழியனார் எம்.ஏ. - அவையின் முன்னவர்!

அவர் சொல்கிறார்; முதல்வருடன் கலந்து பேசி - அந்த டேப்பை எப்படிப் போட்டுக் காட்டுவதென்று ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று கலந்து கொண்டு செய்யலாமென்று!

நம்புகிறோம் - எதிர்பார்க்கிறோம் - உருவிய வாள்; தனது பளபளப்போடு பாய்ந்தே தீரும் எனப் பரபரப்போடு கவனிக்கிறோம்! சில விநாடிகளில் அவைக்கு முதல்வரும் வருகிறார்! அப்போதுதான் நடந்து முடிந்த நிகழ்ச்சியை அவர் நாவலர் வாயிலாக அறிந்து கொள்கிறார். சில விநாடிகளில் முதல்வர் போய் விடுகிறார்!

சிறிது நேரத்தில் அந்த டேப்புடன் (அதாவது உருவிய வாளுடன்) அவைக்கு வருவார்; அதை எங்கே போட்டுக் காட்டுவது

என்பதை அறிவிப்பார் என்று எதிர்வரிசையில் நானும் பேராசிரியரும் அன்பிலும் மற்றவர்களும் காத்துக் கொண்டிருக்கிறோம்.

உடன்பிறப்பே, நீயும் பார்வையாளர் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டேயிருக்கிறாய்!

ஆனால் அவரும் வரவில்லை - டேப்பும் ஒலிக்கவில்லை!

மார்ச் 5 - மார்ச் 6 - மார்ச் 7 - மூன்று நாட்களும் மூச் - எந்தப் பதிலுமில்லை!

இதற்கிடையே அன்பரசு எம்.பி. அறிக்கை!

முதல்வர், உண்மைக்கு மாறாக ஒரு செய்தியை நான் பேசியதாகச் சபையில் கூறியிருக்கிறார். அதை அவர் நிரூபித்தால் எம்.பி. பதவியைத் துறக்கத் தயார்! முதலமைச்சர் நிரூபிக்கத் தவறினால் ராஜினாமா செய்யத் தயாரா?

உடன்பிறப்பே! வாளுருவிக்கு நேராக வாளோங்கி வந்து விட்டார்! நான் சொன்ன கதையில் வரும் வாளுருவி போலவே - முதல்வர் ஓடிவிடப் போகிறாரா? அல்லது ட்விஷ்! ட்விஷ்! ஒலி கேட்குமா?

அந்த டேப்பைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்! கலந்து பேசி டேப் போடுவது பற்றி ஏற்பாடு செய்யலாம் என்றார்கள்!

சட்டசபை நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டனவே!

உருவிய வாள் எங்கே? உறைக்குள் போட்டுக் கொண்டு ஓடியது ஏன்?

உடன்பிறப்பே, ஆரம்பத்தில் குறிப்பிட்ட வீரனின் (?) கதைக்கு விளக்கம் கிடைத்ததா இப்போது!

அன்புள்ள,

மு. க.

(09-03-1981)

884. உதவாதினி ஒரு தாமதம்!

உடன்பிறப்பே,

சிறைச்சாலைகள் இப்போதே நிரம்பி வழிகின்றன! மதுரை, திருச்சி போன்ற சிறைக்கோட்டடங்களில் சிறைக்கூண்டுகள் போதவில்லையாம்! பெரிய கூடங்களிலும் கூட இட நெருக்கடியாம்! நாடாளுமன்ற அவையின் துணைத் தலைவர் இலட்சுமணன் அவர்களும், கழகப் பொருளாளர் சாதிக், கழக வெளியீட்டுச் செயலாளர் எல். கணேசன் எம்.பி. ஆகியோரும் மற்றும் கழக முன்னணித் தலைவர்களும் எல்லா சிறைச்சாலைகளுக்கும் சென்று கழகத்தின் தியாகக் கண்மணிகளைக் கண்டு வந்திருக்கிறார்கள்.

மலை குலைந்தாலும் மனங்குலையாத அந்த வீரர்களையும் வீராங்கனைகளையும் சிறைக் கொடுமைகள் எதுவும் செய்து விடாது - எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் அவர்கள் என்று, நேற்றுச் செயற்குழுவில் விவரித்தபோது பெருமிதத்தால் நெஞ்சு விம்மியது! களிபேருவகையால் கண்கள் குளங்களாயின!

கடந்த முறை நடந்த செயற்குழுவில் வந்து அமர்ந்திருந்தோர் - கருத்துக்களை அள்ளிப்பொழிந்தோர் - அவர்களில் பெரும்பான்மையோர் இந்த முறை, செயற்குழுவுக்கு வர முடியவில்லை. அவர்கள் எல்லாம் சிறைக்கொட்டடியில்! சிரித்த முகத்தினராய்! சீறிவரும் பகை எதிர்க்கும் சிங்கக் கூட்டங்களாய்! செந்தமிழ் திருநாட்டை வந்தவர்கெல்லாம் வேட்டைக் காடாக்கும் நிலையை மாற்றியே தீர வேண்டும் என்ற சூளுரை மேற்கொண்டவர்களாய்!

என் உடன்பிறப்புகள், சிறையின் வேதனைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் எஃகுக் கம்பிகளாய் - தளர்ந்து வளையாத கற்றூண்களாய் - எத்தனை நாட்கள்; மாதங்கள் ஆயினும் அவற்றைத் தம் வாழ்வின் இன்ப நாட்களாக எண்ணி இங்கேயே இருந்திடுவோம் எனக் கூறுகிறார்கள் என்றால்

அதிலென்ன வியப்பு! சோரம் போகாத மானமரபின் மாணிக்கங்கள்! பதவிக்காக நெளிந்தும் குழைந்தும் எஜமானனுக்கு எது பிடிக்குமென்று அறிந்து வளைந்து பல் இளித்துக் கிடக்கும் பஞ்ச தந்திரம் கற்ற நரிகள் அல்லவே; அவர்கள்! நிமிர்ந்த தலை வேங்கைகளன்றோ?

எனக்குப் பதவி கொடு! எம்.பி. கொடு! எம்.எல்.ஏ. கொடு! எம்.எல்.சி. கொடு! மந்திரி கொடு! இப்படிச் செவியில் விழும் முறையீடுகளுக்கு மாறாக; எனக்கு அரசாணை எரிப்புப் போராட்டத்தில் தான் இடம் தர மறுத்து விட்டாய்; இப்போது மறியல் போராட்டத்திலாவது இடம் கொடு - தயவு செய்து கொடு - என்று களம் செல்ல யாசிக்கும் கழகத்தின் நவரத்தினங்களைக் காணுகிறேன்! பொருளாளரைப் பிடித்து பொதுச் செயலாளரிடம் சிபாரிசு! பொதுச் செயலாளரை பிடித்து என்னிடம் பரிந்துரை! என்னை அரித்தெடுத்து - பொதுச் செயலாளரிடம் எப்படியாவது அனுமதி வாங்கிக் கொடு என்று வளைத்துச் சூழ்ந்து கொள்ளுதல்!

உடன்பிறப்பே, உண்மையிலேயே நான் எண்ணியதுண்டு; ஒன்பதாண்டுக் காலம் ஆட்சியில் இருந்த கட்சியாயிற்றே - போராட்டக்கனலின் வேகம் இருக்குமோ என்று!

யாரைப் பார்த்து அப்படி எண்ணினாய்? அவன் எவனாவது பதவிக்கும் பவிஷுக்கும் உன்னைப் பாராட்டிப் புகழ்ந்து உன் காரிலே தொத்திக்கொண்டு காதைக் கடித்துப் புண்ணாக்கிக் கழகத்திற்கும் களங்கம் உண்டாக்கிவிட்டு; இந்த வீட்டு இலை முடிந்ததும் பிறகு எந்த வீட்டு வாசலில் இலை விழுகிறது என்று நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு ஓடுவான் - அவனைப் பார்த்து வர வேண்டிய எண்ணம்; எங்களைப் பார்த்தா வந்தது? இந்த இயக்கத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சிக்கும் கண்ணீரும் செந்நீரும் சிந்திய கழகத்தின் தொண்டர்களாகிய எங்களைப் பார்த்தா அப்படியொரு எண்ணம் உனக்கு வந்தது? என்று என் ஆருயிர் உடன்பிறப்புகள் சிறைக்கோட்டத்திலிருந்தும் கேட்கிறார்கள்! சிறையேகிடத் துடிப்பவர்கள் வெளியில் இருந்தும் கேட்கிறார்கள்!

நான் அந்த உடன்பிறப்புகளிடமெல்லாம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்! தணலில்தான் நாங்கள் மேலும் ஒளிபெற்றுத் திகழ்வோம் என்பதை செயல்மூலம் காட்டியிருக்கிற

உடன்பிறப்புகள் அவர்கள்! பழைய போர்க்கனல் இருக்குமா - எனத் துளிச் சந்தேகம் என் உள்ளத்தில் எழுந்ததே தவறுதான்; அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, நான் அடிக்கடி கூறுவதுபோல - நீ இருக்கிறாய் - உன் நெஞ்சில் நான் இருக்கிறேன் - நாம் இருவரும் அண்ணன் கண்ட கழகத்தில் இருக்கிறோம் என்ற நினைப்பு ஒன்றுதானே, எத்தனையோ திகைப் பிலாழ்த்தும் சோதனைகள் வந்தபோதெல்லாம் நமக்குத் தெம்பூட்டி நமது கழகக் கலசத்தைத் திசை மாறாமல் செலுத்தி வருகிறது!

நீ என்னிடத்தில், கழகத்திடத்தில் எதையும் எதிர்பார்க்கவில்லை! உன்னிடத்தில்தான் கழகமும்; அதன் தலைவன் என்ற முறையில் நானும் அதிகம் எதிர்பார்க்கிறோம்!

கழகத்திற்கு நிதி வேண்டுமா? தருகிறாய்! அருகே நெருங்கிட அஞ்சிய நெருக்கடி காலத்திலேகூட ஆறு லட்ச ரூபாய்க்கு அதிகமாக - பேருந்துகளிலும் லாரிகளிலும் சென்னைக்கு வீடு தேடி வந்து ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என வழக்கு நிதி கொடுத்தாய்! இன்னமும் கழகம் வளரக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறாய்!

உன்னுடைய முதுகையே மேடையாக்கி அதிலே எங்களை ஏறிப் பேசச் சொல்கிறாய் என்ற பெருமூச்சுடன் தான் நீ நடத்தும் கூட்டங்களைப் பற்றி நான் கண்கலங்க கற்பனை செய்து கொள்கிறேன்!

சிறைக்கோட்டமா? அறப்போர்க்களமா? தொகையில் புற்றீசலாய் - பகை விரட்டும் தீரத்தில் புலியாய் - இதோ வந்தேன் என்று முந்திக்கொள்ளத் துடித்திடுகிறாய்!

மருங்கிருந்து சாமரம் வீசியோர் இன்று சதிபுரிந்து என் மண்டை பிளக்க முனைகிறார்கள் - தொலைவிலிருந்தாய் நீ எனினும் துள்ளி வரும் வேலென அவர்தம் துரோகம் பிளக்கப் பார்க்கிறாய்!

நெருங்கியிருந்தோரெல்லாம் - இப்போதும் நெருங்கி யிருப்போரெல்லாம் - நெருப்பு கக்கும் மலையென நினைத்திடல் வேண்டாம்!

நமதியக்கத்தைத் தங்கள் நாடி நரம்புகளால் வேலி கட்டிப் பாதுகாத்தவர்கள்! பாதுகாப்பவர்கள்!

நட்புக்குச் சிகரமெனக் கூறிவிட்டு உணவில் நஞ்சு கலந்து கொல்லவும் துணிந்திட்ட சில நயவஞ்சகர்களிடமிருந்து என்னையும், கழகத்தையும் காத்திட்டவர்கள்!

அந்தத் தளபதிகளாம் தன்மானச் சீயங்களும் - உன் போன்ற உயிரனைய உடன்பிறப்புகளும் - இருந்திடும்போது என்ன குறை இந்தக் கழகத்திற்கு வந்து விடும்?

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அடுத்த கட்டப் போராட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

மாவட்ட ஆட்சித் தலைவர் - கோட்டாட்சித் தலைவர் - அலுவலகங்களின் முன்பு ஒருநாள் மறியல்! வரும் இருபதாம் தேதி!

மறியல் அறப்போர்த் தலைவர்களின் முதல் பட்டியல் அறிவிக்கப்பட்டாயிற்று!

அடுத்தடுத்து பட்டியல் வெளிவரும், 15-ஆம் தேதி ஞாயிறன்று எல்லா ஊர்களிலும் கண்டனக் கூட்டங்கள்!

நமது பிரச்சாரம் இன்றே தொடங்கி 19-ஆம் தேதி வரையிலே விரிவாக நடைபெற்றாக வேண்டும்!

பல்கேரியா கப்பல் பேர ஊழல் - பஸ் முதலாளிகளிடம் அடித்த கொள்ளை - காட்டிலாகா ஊழல் - தேவாலயத் திருட்டு - சாராய சாம்ராஜ்யம் - சத்தியா அறக்கட்டளை ஊழல் - மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வு ஊழல் - எல்லாவற்றுக்கும் சிகரமாக விளங்கும் எரி சாராய ஊழல் - முன்பு புயல் வெள்ள நிவாரணத்தில் சுருட்டியது - இப்போது வறட்சி நிவாரணத்தில் சுருட்ட முனைவதைத் தடுப்பது - தேர்தல் கால வாக்குறுதிகள் காற்றிலே பறந்தது - விவசாயிகள் வேதனை - கிராம அதிகாரிகளைப் பழி வாங்கிய கொடுமை - இப்படி மூன்று நான்கு ஆண்டுகளாக நடைபெறும் ஊழல் மிகுந்த - நிர்வாகத் திறனற்ற - ஆணவங்கொண்ட - அடக்குமுறை மலிந்த - ஏழைப் பாட்டாளிகள் தொழிலாளர்களை நசுக்குகிற - ஆளுங்கட்சியின் தலையீடுகள் சகிக்க முடியாத - இந்த ஆட்சியின் முகமூடியை நமது பிரச்சாரப் படை, கிழித்தெறியக் கிளம்பட்டும்!

மாவட்ட அமைப்புகள் உடனடியாகக் கூடி, மறியல் அறப்போர்ப் பட்டியலைத் தயார் செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பட்டும்!

உடன்பிறப்பே, உதவாதினி ஒரு தாமதம்; உடனே செயல்படுக! உத்தமர் வேடம் போட்டு ஊரை ஏமாற்றிடும் உலுத்தர்களை அடையாளம் காட்டிட ஆர்த்தெழுக!

மேலும் நிரம்பட்டும் சிறைகள்! அண்ணன் வழி - அமைதி வழி - அறநெறி தவறாத வழி - அவ்வழியில் அறப்போர்க்களங்கள் அமையட்டும்!

அன்புள்ள,

மு. க.

(10-03-1981)

885. ஏரிக்கரை மீது போறவரே!

உடன்பிறப்பே,

நடந்தார் - நடந்தார் - நடந்து கொண்டேயிருந்தார் - நடந்து முடிந்து ஒருவழியாக வடஆற்காடு மாவட்டத்தைச் சென்று அடைந்தார். வறட்சியால் மக்கள் படுந்துயரத்தைக் கண்டறிந்தார். குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லையென்று ஒரு கிழவி கண்ணீர் விட்டதையும் துடைத்தார். துடைக்காமல் இருந்தாலாவது; அந்தக் கண்ணீரே அக் கிழவியின் உதடுகளை நனைத்து - தாகத்தைத் தீர்க்காவிடினும் நடுங்கும் இதழ்களை ஈரமாக்கியிருக்கும். அய்யோ பாவம் - அதையும் துடைத்து விட்டார்!

முதலில் காவேரிபாக்கம் ஏரியைப் பார்வையிடச் சென்றார். பதினைந்தாயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்திற்குப் பாசன வசதி வழங்கக் கூடிய அந்த ஏரி, சில நாட்களுக்கு முன்புகூட அல்ல, சில மாதங்களுக்கு முன்பே அறவே வறண்டு விட்டது.

இதை நான் சொல்லவில்லை. தினத்தந்திப் பத்திரிகை சென்னைப் பதிப்பு முதல் பக்கத்துச் செய்தி வர்ணனையிலேயே இந்த விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது.

மாதக் கணக்கில் வறண்டு கிடக்கும் ஏரியைப் பற்றித் தகவலறிய நேரிலேயே தான் அவர் செல்ல வேண்டியிருந்தது. அது வறண்டு போய்ச் சில மாதங்களான போதிலும் - அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் - மாதக்கணக்காக நடவடிக்கையெதுவும் அதிகாரிகளைக் கொண்டு எடுக்கச் செய்யாதவர் - நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி என்று மாதங்கள் உருண்டோடிய பின்பு - கடும் வேகத்தில் நடந்தார்! காவேரிப்பாக்கம் ஏரிக் கரையில் நின்றார்!

அங்கே நடைபெற்ற சம்பாஷணையை தினத்தந்தி ஏடு அப்படியே வெளியிட்டிருக்கிறது - படித்துப் பார்!

இந்த ஏரியில் நிலத்தடி நீர் எவ்வளவு ஆழத்தில் உள்ளது?

அவர் கேட்கிறார்! உடனே கலெக்டர் கங்கப்பா, விடை பகருகிறார்!

இருபத்தெட்டு அடி ஆழத்தில் நிலத்தடி நீர் உள்ளது!

அவர் விடவில்லை! மேலும் கலெக்டரைக் கேள்வியால் திணறச் செய்கிறார்.

எந்த இடத்தில் 28 அடி ஆழம்?

அந்தக் கேள்விக்கு எங்கப்பா பதில் என்று கங்கப்பா தேடிக் கொண்டிருக்கும் போது; அவரைக் காப்பாற்ற குடிநீர் வாரியத் தலைமை என்ஜினியர் வருகிறார். அவர் சொல்கிறார்;

45 அடி ஆழத்தில் உள்ளது.

என்ஜினியரைக் கேட்கிறார்.

இந்த ஏரியில் நீங்கள் அளவு எடுத்துப் பார்த்தீர்களா?

என்ஜினியரும், அதிகாரிகளும் இல்லை என்று தலையசைத்துவிட்டு - பக்கத்து நிலத்தில் பார்த்தோம் என்கிறார்கள்.

இந்த ஏரியிலேயே ஏன் பார்க்கவில்லை?

அவர் வினாக்களை தொடுக்கிறார்! தந்தி இதழில் செய்தி அத்துடன் முடிகிறது.

சுமார் நான்கு மாதங்களாக வற்றிக் கிடக்கிற ஏரியில் நிலத்தடி நீர் எவ்வளவு ஆழத்தில் கிடைக்கும் என்பதைப் பற்றி கலெக்டருக்கும் - என்ஜினியருக்குமே - ஆராய்ச்சி முடியவில்லை!

ஒருவர் மிகவும் சரியான கணக்காக - அதாவது ஒரு புள்ளிகூடத் தவறாமல்; 28 அடி ஆழத்தில் என்கிறார் - அவர் கலெக்டர்!

இன்னொருவர் 45 அடி ஆழத்தில் என்கிறார் - அவர் என்ஜினியர்!

இந்த இரண்டையும் ஆராய்ந்து முடிவெடுக்க - காய்ந்து கிடக்கும் காவேரிப்பாக்கம் ஏரிக்கு நாலு மாதம் கழித்து வருகிறார்; நாடாளும் மன்னாதி மன்னர்!

சூழநின்று வேடிக்கை பார்க்கும் ரசிக சிகாமணிகள்; அடடா! என்ன கேள்வி! என்ன கேள்வி! அதிகாரிகளைத் திணற வைக்கிறாரே; என்று சப்தமில்லாமல் தங்களுக்குள் விசில் ஊதிக் கொள்கிறார்கள்.

பாவம்! கிராமத்து மக்களில் அனுபவமும் விஷயமும் தெரிந்த சிலர் பேசிக் கொள்கிறார்கள் - காவேரிப்பாக்கம் ஏரி மட்டுமா? தமிழ்நாட்டில் எத்தனையோ ஏரிகள் காய்ந்தும் தீய்ந்தும் கிடக்கின்றன - இப்படி ஒவ்வொரு ஏரியைப் பற்றியும் இவர் கோட்டையிலேயே எல்லா மாவட்ட அதிகாரிகளையும், என்ஜினியர்களையும் கூட்டிவைத்துப்பேசி, இந்த யோசனைகளை முன்கூட்டியே தெரிவித்திருக்கக்கூடாதா? இந்தக் கேள்விகளை அந்தக் கூட்டத்திலேயே கேட்டு அப்பொழுதே அதற்கான விடைகளைக் கண்டிருக்கக் கூடாதா? இப்படி முணுமுணுத்துப் பேசிக் கொண்டிருந்த கிராம விவசாயிகளின் குரல் நிருபர்கள் செவிகளில் விழுந்திருக்க நியாயமில்லை! அப்படியே விழுந்து அதனை நிருபர்கள் குறித்துக் கொண்டு வந்திருந்தாலும், அதனை வெளியிட வேண்டுமென்று ஆசிரியருக்கு என்ன தலைஎழுத்தா? வெளியிட்டால் பிறகு அவர் தலை தப்புமா?

வட ஆற்காடு மாவட்டத்திலேயே பெரிய ஏரி! 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்கான ஏரி! அது வறண்டு போய் நாலு மாதங்களுக்கு மேலாகிறது! எத்தனை அடி ஆழத்தில் நிலத்தடி பெறுவதற்குக் கிணறு தோண்டலாம் என்று - அதிகாரிகள் யோசிக்கவே இல்லை!

குடி தண்ணீர்தானே தரமுடியும் எத்தனை அடி ஆழத்தில் தோண்டினாலும் என்று தான் என்ஜினியர் சொல்லுகிறார்; பக்கத்து நிலத்தில் தோண்டிப் பார்த்தோம் என்பதாக!

ஆனால் நாடாள்பவரோ அந்த ஏரியில் கிணறுகள் தோண்டுவதின் மூலம்; பாசன வசதிக்கே தண்ணீர் பாய்ச்ச முடியும் என்று கருதுகிறார் போலும்!

அவர் எதுவும் கருதுவார்! எப்படியும் கருதுவார்! குடித்தவனை ஜாமீனில் எடுக்க வந்தவனையும் கைது செய்க என்று போலீஸ் ஸ்டேஷனுக்கே போன் பேசிய அதிதீவிர சட்ட நுணுக்க மேதை ஆயிற்றே! இதையெல்லாம் கேட்டால் அங்கே சுற்றிக் கொண்டிருக்கிற பதவிதேடிகளும் பஜனைபாடிகளும் நம்மீது பாய்ந்து குதறுவார்கள்!

அதாகப்பட்டது ஏதோ ஒரு விதமாய் சகல ஜனங்களையும் பார்ப்பதற்காக - இல்லை - இல்லை - க்ஷமிக்கவும் சகலஜனங்களும் நமது ஸ்ரீமான் ராமச்சந்திர மூர்த்தியை தரிசிப்பதற்காக - காத்துத் தவங்கிடந்ததை அறிந்து, தெரிந்து, அதிகாரிகள் புடைசூழ, நடந்தார், நடந்தார், நடந்தே சென்றடைந்தார் வட ஆற்காடு!

காவேரிப்பாக்கம் ஏரிக்கரை வரையிலே காரிலே! கரை மீது நடையிலே! ஏரிக்கரை மீது போகிறார்; அப்படிப் போகிற போது - வயிறு ஒட்டி, வாய் உலர்ந்து, தின்னச் சோறும் - குடிக்கக் கூழுமில்லாத - வடாற்காட்டு பிரஜைகள்; ஏரிக்கரை மீது போகிறவரைப் பார்த்து ஏக சந்தோஷமாகப் பாடுகிறார்கள்! என்ன பாட்டு?

ஏரிக்கரை மீது போறவரே!
போறவரே! எம்துரையே!
எப்போதும் தீராதய்யா எங்கள்
குறையே!

இப்படியாகத்தானே வறட்சிப் பகுதி பார்வையிடும் காண்டம் முதல் பகுதி முற்றிற்று - என்று கூறி முடிப்போமாக!

உடன்பிறப்பே, வடாற்காடு வறட்சிப் பகுதியைக் காண - கசிந்துருக - நமது முதல்வர் எம்.ஜி.ஆர். எப்போது புறப்பட்டார் தெரியுமா?

1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் தேதி காலை பத்து மணி அளவில் சுபயோக சுபதின வேளையில் புறப்பட்டாராக்கும்!

அதாகப்பட்டது; ஆனந்த விகடன் பொன் விழா நிகழ்ச்சியைத் தொடக்கி வைப்பதாக ஒத்துக் கொண்டிருந்தவர்; அந்த நிகழ்ச்சிக்குக் கூடச் செல்லாமல் - வடஆற்காட்டில் எனது பிரஜைகள் வறட்சியால் அவதியுறும்போது எனக்கு விழா ஒரு கேடா? விருந்து ஒரு கேடா? இசை ஒரு கேடா? நாட்டியம் ஒரு கேடா? இன்று முதல் - இந்த க்ஷணம் முதல் நான் வறட்சிப் பணி தவிர எதையும் என் நேத்திரங்களைக் கொண்டு பார்க்க மாட்டேன் என்று சத்தியம் செய்து -

நவம்பர் ஏழாம் தேதி காலை பத்து மணிக்குப் புறப்பட்டவர், கல்லிலும் முள்ளிலும் நடந்து நடந்து நடந்து நடந்து கால் கொப்பளிக்க - கடும் வெயிலில் வியர்வை ஆறாகப் பெருகியோட -

நவம்பரில் நடக்கத் தொடங்கி நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி வரை நடந்து; இறுதியாக மார்ச் ஒன்பதாம் தேதி; தான் செல்ல வேண்டிய ஸ்தலத்தை அடைந்தார்!

நவம்பரில் புறப்பட்டு இவ்வளவு நாளா நடந்தார் என்று கேட்காதே! அவரது கணக்குப்படி; அதாவது கைலாசம் கமிஷன் விசாரணைக்குரிய விஷயத் தொகுப்பின்படி (Terms of Reference) அக்டோபர், நவம்பர் மாதங்கள் மிக முக்கியமான மாதங்களாகும்!

அதனால் குடிநீரின்றிக் குமுறுகின்ற வடாற்காட்டுக்குப் போவதாக எண்ணி; கொச்சிக்குப் போய் விட்டார்! அங்கிருந்து கோட்டயம் போனார்! பின்னர் திருவனந்தபுரம் போனார்! அதுவும் தண்ணீர்ப் பிரச்சினைதானே! அதாகப்பட்டது தண்ணீர் கலந்து பெருக்கிடும் பிரச்சினை!

இப்போதுதான் பக்கத்திலிருந்த ஆழ்வாராதிகள் - அதாவது பாடப்புத்தக ஆழ்வார் - சினிமா தியேட்டர் ஆழ்வார் - அரிசி பேர ஆழ்வார் - படகு ஊழல் ஆழ்வார் - தோட்டம் வாங்கி ஆழ்வார் - பர்மிட் இல்லாமல் பஸ் விட்ட ஆழ்வார் - காட்டுக் கொள்ளை ஆழ்வார் - மேட்டூர் மின்சார பேர ஆழ்வார் - பாட்டிலிங் ஆழ்வார் - இப்படிப்பட்ட ஆழ்வாராதிகள்; வறட்சியென ஒன்றிருக்குது; அதைக் கண்டு வாரும் அய்யனே! என்று தோத்திரம் செய்து தொழுவேத்தி அனுப்பியுள்ளனர்!

செய்திப் படங்கள், டெலிவிஷன்கள், எல்லாம் ஆனந்த மயமாக எடுக்கப்பட்டு திவ்யமாக தியேட்டர்களில் காட்டப்படப் போகின்றன!

இனி வறட்சியாவது; வெங்காயமாவது! வாழ்க எங்கள் எரி சாராயப் புகழ் ஏந்தல் - எம்.ஜி.ஆர்.!

என்று கோஷம் எழுப்புவர்! வேஷம் கலையும் வரையில் அந்தக் கோஷம் கேட்கத்தான் செய்யும்.

அன்புள்ள,

மு. க.

(11-03-1981)

886. மதுவிலக்கு ரத்தாகுமா?

உடன்பிறப்பே,

மதுவிலக்குச் சட்டத்தை அறவே ரத்து செய்கிறோம் என்று கூட அல்ல; ஓரிரு ஆண்டுகள் ஒத்தி வைக்கிறோம் என்று கழக ஆட்சியில் அறிவித்தோம். அறிவிப்பதற்கு முன்பு கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர்களையும், சிறப்பு அழைப்பாளர்களாகக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை, மேலவை உறுப்பினர்கள் அனைவரையும் கோவை நகரில் கூட்டி வைத்துக் கருத்தறிவித்தோம். நிலைமைகளை விளக்கினோம். ஓரிருவர் தவிர அனைவருமே மதுவிலக்கு ஒத்திவைப்புக்கு ஒப்புதலை வழங்கினர். அப்போது கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மதுவிலக்கைத் தற்காலிகமாக ஒத்தி வைப்பதற்குரிய காரணங்களை விளக்கி, ஏற்றுக் கொள்ளத் தயங்கிய ஓரிரு உறுப்பினர்களையும் மதுவிலக்கு ஒத்திவைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மதுவிலக்குக் கொள்கையைப் பிரச்சாரத்தின் மூலம் பரப்புவதற்காக ஒரு குழு அமைக்க வேண்டுமென்று கோரினார். அவ்வாறே அவரது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய குழுவின் தலைவரான எம்.ஜி.ஆரே. - அந்தக் குழுவை ஒருமுறைதான் கூட்டினார். பிறகு அந்தக் குழு செயல்படவே இல்லை. குழுவின் தலைவர் அவ்வளவு அக்கறையுடன் பணிபுரிந்தார்!

ஒருநாள் அண்ணா சதுக்கத்திற்கு நூற்றுக் கணக்கானவர்களை; நடிகர்கள் பலர் உட்பட ஊர்வலமாக அழைத்துச் சென்று அண்ணா கல்லறை முன்பு சத்தியம் செய்யச் சொன்னார். மது அருந்தமாட்டோம்! அருந்தவேமாட்டோம்!

அண்ணா மீது ஆணை! என்று அவர்கள் அனைவரும் சத்தியம் செய்தார்கள்.

ஆனந்த விகடனில் அவர் எழுதிய சுயசரிதைக் கட்டுரையில்கூட, மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்திக் கூறிவிட்டு - மதுவினால் அவரது குடும்பத்திலேயே எத்தகைய புயல்கள் வீசின என்பதை உருக்கமாக விவரித்து விட்டு - இருந்தாலும் இப்போதுள்ள சூழ்நிலையில் தி.மு.கழக அரசு; மதுவிலக்கை ஒத்தி வைத்துள்ளது தவிர்க்க முடியாததாகும் - அதனால்தான் அந்த ஒத்திவைப்பைத் தானும் ஏற்றுக் கொண்டதாக விளக்கினார்.

அதற்குப் பிறகு 1972-ஆம் ஆண்டு; இன்று அவருடன் யார் யார் இருக்கிறார்களோ; அவர்களில் பெரும் பகுதியினர்; அவரைக் கட்சியிலிருந்து விலக்கியே தீர வேண்டும்; கட்சிக் கிளையின் செயலாளர்களில் இருந்து எல்லோருடைய கணக்குகளையும் பொதுக்கூட்டத்தில் நின்று கொண்டு கேட்கிற முறையைப் பொருளாளராக இருக்கிற ஒருவரே உருவாக்கினால்; கட்சியின் கட்டுப்பாடு என்னாவது என்று சீறிப்பாய்ந்து செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் முழங்கி, அதன் விளைவாக எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்டார். கட்சியிலிருந்து எப்படியாவது வெளியேறினால்தான் தனக்கேற்பட்ட சிக்கல்களில் இருந்து தப்பிட முடியும் என்பதற்காகத் தானே அப்போது அவர், பொதுக்கூட்டத்தில் நின்று கணக்கு கேட்டார்!

இப்போது அவர் கட்சி தொடங்கி, ஒன்பதாண்டுகள் ஆகிறதே; அவர் கட்சி அமைப்பாளர்களின் கணக்குகள் - அவர் கட்சி எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி., அமைச்சர்களின் கணக்குகள் எதையாவது கேட்டிருக்கிறாரா? அல்லது அவர் கணக்கையாவது காட்டியிருக்கிறாரா?

இப்போது அவர் கட்சி மூலம் ஆரம்பித்திருக்கிற அண்ணா அறக்கட்டளைக்கு அவர்கள் பத்திரிகையில் நிதியளித்தவர்கள் பெயர் வருகிறது. ஆனால் முதல் நாள் வரையில் எவ்வளவு என்று கூட்டுத்தொகை குறிப்பிடப்படுவதுமில்லை. மொத்தம் இதுவரை எவ்வளவு என்ற கணக்கும் அவரது கட்சி ஏட்டில் வெளியிடப்படுவதுமில்லை. கட்சியிலே கடன் வாங்கி வருமான வரி பதின்மூன்று இலட்சம் கட்டினேன் என்றார்! இல்லை;

கட்சியிலே மூன்று லட்சம்தான் கடன் வாங்கினார் என்று அவரது கட்சிப் பொருளாளர் அறிவித்து மறுப்புச் செய்தி வெளியிட்டார்.

தி.மு.க.விலிருந்து வருகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் மீது ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை வைத்துத்தான் அவர்கள் புடம் போட்ட தங்கமா என்று பார்த்தறிந்த பிறகுதான் அ.தி.மு.க.வில் சேர்த்துக் கொள்வேன் என்றார்! அதற்காக ஒரு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியைக் கூடக் கட்சி சார்பில் நியமித்தார்! ஆனால் எந்த விசாரணையும் நடைபெறவில்லை! அவரால் ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இராமன் கால் பட்ட அகல்யா உத்தமியாகி உயிர் பெற்றதைப் போல - இராமச்சந்திரனின் கால்பட்டதும் உத்தமர்களாகி விட்டனர்! அதனால் விசாரணை தேவையில்லாமல் போய்; அந்த ஓய்வு பெற்ற நீதிபதிக்கும் ஒரு வாரியத் தலைவர் உத்தியோகத்தைக் கொடுத்து விட்டார்!

உடன்பிறப்பே, அவர் கட்சியிலிருந்து சென்று புதுக் கட்சி ஆரம்பித்தவுடன் மதுவிலக்குக் கொள்கையில் எப்படிப்பட்ட திசை திருப்பும் வேலையைச் செய்தார் என்பதைக் கூற வந்த நான்; இடையில் அவரது கணக்கு - விசாரணை போன்ற விஷயங்களுக்குப் போய் விட்டேன்! அவற்றைப் பிறிதொரு நாள் விரிவாக ஆராயலாம்! அதில் அந்நியச் செலாவணி வழக்கு - சத்தியா ஸ்டுடியோ விவகாரம் - அவரது அமைச்சரவை நண்பர்களின் முகவிலாசங்கள் - அனைத்தையும் காண்டம் காண்டமாகப் படிக்கலாம்!

இன்று; அவரது மதுவிலக்குக் கொள்கைக் குழப்பத்தை மட்டுமே சுட்டிக் காட்டுகிறேன்.

புதுக்கட்சி ஆரம்பித்த எம்.ஜி.ஆர். 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஏழாம் நாள் பேசியதாக அவரது கட்சிப் பத்திரிகை தென்னகத்தில் செய்தி வருகிறது; இதோ அது!

1973 செப்டம்பர் திங்கள் அ.தி.மு.க.வின் மாநாடு நடைபெற இருக்கிறது. அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்யப்படுவார்கள்.

எம்.ஜி.ஆர். பேசியதுபோல 1973-இல் அவரது கட்சித் தேர்தல்கள் நடைபெற்றதா? அதெல்லாம் கேட்காதே! பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா 1973-இல்?

அதையும் கேட்காதே! 1981-ல் இருக்கிறோம்! கடந்த ஆண்டு அவரது கட்சித் தேர்தல் நடந்து; நாலு மாவட்டங்களில் ரத்து! நாலு மாவட்டங்களில் ஒத்திவைப்பு! அதிருக்கட்டும் அந்தக் கூட்டத்தில் என்ன போராட்டத்தை எம்.ஜி.ஆர். அறிவித்தார் தெரியுமா?

தாய்மார்களை முழுமையாகக் கொண்டு; மதுவிலக்கு அமல் நடத்தப்படவேண்டும் என்ற போராட்டத்திற்கான தேதியை அந்த மாநாட்டில் அறிவிப்பேன்.

(தென்னகம் - ஜூன் 7 - 1973)

அவர் சொன்னபடி மாநாடு நடந்ததா? மதுவிலக்கை அமல்படுத்தத் தாய்மார்களைக் கொண்ட ஒரு போர்க்களத்தை அமைத்தாரா? அதையெல்லாம் அவரைக் கேட்காதே!

கழகப் பொருளாளராக இருந்தபோது 1971-இல் மதுவிலக்கு ஒத்தி வைப்பதை கோவைப் பொதுக்குழுவில் ஆதரித்தவர்; 1973-இல் அப்படி ஒத்தி வைத்ததை எதிர்த்து தாய்மார்களைக் கொண்டு போராட்டம் நடத்துவேன் என அறிவித்தார் என்பதற்காக அவர் கட்சி ஏட்டில் அன்று வந்ததை அப்படியே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலிருந்த காங்கிரஸ் கட்சி, அன்று கழக ஆட்சியை எதிர்த்து மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டுமென்று போராட்டம் நடத்தி, பல்லாயிரக்கணக்கானோர் சிறை சென்றனர். சிறையிலிருந்தோர் இரண்டொரு வாரங்களில் விடுவிக்கப்பட்டது மாத்திரமல்ல; அவர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்குகள் கூட திரும்பப் பெறப்பட்டன. ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்கு, மீண்டும் அமலாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அப்போது எம்.ஜி.ஆர். என்ன சொன்னார் தெரியுமா? காமராஜரும் கருணாநிதியும் சேர்ந்து கொண்டு நாடகமாடுகிறார்கள்! ஒருவர் போராட்டம் நடத்துகிறார்! ஒருவர் காமராஜரின் போராட்டத்தைக் காட்டி; மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்துவேன் என்கிறார்! இப்படி ஏகடியம் செய்து எரிச்சலைக் கக்கி எம்.ஜி.ஆர். பேசியதும் அவரது கட்சி ஏட்டில் அப்போதே வெளிவந்திருக்கிறது.

1977-இல் எம்.ஜி.ஆர். முதல்வராகப் பொறுப்பேற்கிறார். மதுவிலக்கில் தனக்குள்ள தீவிரத்தைத் தனது பேச்சின் மூலம் சத்தியம் செய்து காட்டிக் கொள்கிறார்!

என் உயிர் இருக்கும் வரையில் நான் பதவியில் இருந்தாலும் சரி, பதவியில் இல்லாவிட்டாலும் சரி, பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்து நான் ஓய்வு எடுத்தாலும் சரி, காந்தியடிகள் - ராஜாஜி - பேரறிஞர் அண்ணா கொள்கையைப் பின்பற்றி நடப்போம். இறுதி மூச்சு வரை மதுவிலக்கை நிறைவேற்றுவேன் என்று என்னைப் பெற்ற அன்னை மீது உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

(முதல்வர் எம்.ஜி.ஆர். பேச்சு - அண்ணா ஏடு - 2-12-79)

பெற்ற அன்னை மீதே உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறார்!

அதைத் தொடர்ந்து மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக்கப்படுகிறது! முதல் தடவை குடித்தால் ஆறு மாதம் - இரண்டாவது தடவை ஒரு வருடம் - குடிப்பதை நிறுத்தாவிட்டால் நாடு கடத்தல் போல ஊரை விட்டே அந்த ஆளைக் கடத்தல்! இப்படியொரு சட்டம்! அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொருந்தக்கூடிய சட்டமென அவரே அறிவித்தார்!

பிறகு அமைச்சர்களையும் அதிகாரிகளையும் விட்டு விட்டார்!

மதுவிலக்கை அமலாக்க இப்போது இருக்கிற சட்டமே போதும்; இந்தப் பயங்கரச் சட்டம் வேண்டாம் என்று எல்லாக் கட்சிகளும் கருத்து அறிவித்தன. அப்போது முதல்வர் எம்.ஜி.ஆர். வெளிநாடு போய்விட்டார்! அன்று நிதி அமைச்சராக இருந்த நாஞ்சிலார், முதல்வர் எம்.ஜி.ஆர். வந்ததும் கலந்து பேசி சட்டத்தின் கடுமையைக் குறைக்கலாம் என்று அறிக்கை வெளியிட்டார். ஆனால் வெளிநாட்டிலிருந்து திரும்பிய எம்.ஜி.ஆர். அந்தக் கடுமையான சட்டம் இருந்தே தீரும் என்று பிடிவாதமாக அறிவித்தார்! தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கவே இந்தச் சட்டம் என்றார்!

சில மாதங்கள் கடந்தன! எவ்வளவு தீவிரமாக மலையுச்சிக்குப் போகிற அளவுக்கு சட்டம் இயற்றினாரோ; அதே சட்டத்தை மடுவுக்குள் தள்ளுவது போலத் தளர்த்தினார்!

இனிமேல் 25 ரூபாய் கட்டி பர்மிட் வாங்கினால் எல்லோரும் குடிக்கலாம்! இப்படி அறிவித்தார்! குடித்தால் நாடு கடத்தும் சட்டம் ஒருபுறம்! இருபத்தைந்து ரூபாய் கட்டினால் எல்லோரும் குடிக்கலாம் என்ற உத்திரவு ஒருபுறம்!

இதுவும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் என்று அறிவித்தார்!

இன்று தமிழ்நாடே ஒரு பெரிய சாராய சாம்ராஜ்யம்! அதன் ஈடுஇணையற்ற சக்கரவர்த்தியாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.! மாவட்ட அ.தி.மு.க. அமைப்பாளர்கள் பலர் அந்த சாம்ராஜ்யத்திற்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள்! அதற்கும் அடுத்த மட்டத்து அமைப்பாளர்கள் பாளையப்பட்டுகள்! இப்படி அமல்படுத்தப்படுகிறது மதுவிலக்குச் சட்டம்! பெற்ற அன்னையின் மீது ஆணையிட்டு எடுத்துக்கொண்ட உறுதிமொழியல்லவா?

இன்னும் தளரப் போகிறதாம் - தளருவதற்கு என்ன இருக்கிறது -

புட்டிச் சாராய விற்பனை; அடுத்த கட்டமாம்! அதற்கும் இப்போதே ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன! எரி சாராயத் தொழிற்சாலைகளில் மது வகைகள் உற்பத்திக்காகத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் தயாரித்துக் கொள்ளவும் - அதற்கான இணைப்புக் கட்டிடங்களைக் கட்டிக் கொள்ளவும் - முன்பே ஜாடை காட்டப்பட்டு; அந்த வேலைகளும் ஆங்காங்கு முடிந்து விட்டனவாம்! கை மாற வேண்டியதில்; ஒரு பகுதி பாக்கியிருக்கிறதாம்!

பட்ஜெட் தாமதத்திற்கு அதுவும் ஒரு காரணமோ என்று பரவலாகப் பேசப்படுகிறது!

மதுவிலக்கு ரத்து என்ற வார்த்தையை மட்டும் பயன்படுத்தாமல் ஏராளமாக - தாராளமாக - அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் - மது பெருகியோட வழி காணப்பட இருக்கிறதாம்!

மதுவிலக்கை ரத்து செய்யமாட்டேன் என்று மாதாவின் மீது; அதுவும் பெற்ற மாதாவின் மீது சத்தியம் செய்திருக்கிறாரே!

அதனால் மதுவிலக்கு ரத்தாகாது! - ஆனால்; மது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்!

அவர் அன்னை சத்தியமாக மதுவிலக்கை ரத்துச் செய்ய மாட்டார்!

தொட்டிகளில் இருந்த சாராயம் புட்டிகளில் அடைக்கப்பட்டு பகிரங்க விற்பனைக்கு வரும்! அவ்வளவுதான்!

தாய்மீது ஆணையாக அவர் உறுதியெடுத்துள்ளார்; மதுவிலக்கை ரத்து செய்ய மாட்டார்!

ஆங்காங்கு கடைகளில் பீர்; பிராந்தி போன்ற மது வகையறாக்கள் விற்பனைக்குக் கிடைக்க வழி செய்து அறிவிப்பாரே தவிர, அவர் அன்னையின் மீது உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறார்; மதுவிலக்கை ரத்து செய்யமாட்டார்!

தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக - மதுவிலக்கைத் தளர்த்தி, தளர்த்தி, தளர்த்தி, அதை முழுமையாகத் தளர்த்துவாரே தவிர; அன்னை மீது ஆணையாக ரத்து செய்யும் பேச்சே இல்லையென்று கூறி விட்டார்!

தடையின்றிக் குடிக்கலாம்; கடைகள் திறக்கப்படலாம்; ஆனாலும்; தாய்மார்களைக் கொண்டு மதுவிலக்கு அமலாகப் போராட்டம் நடத்துவேன் என அறிவித்தவர் - தாய்மீது சத்தியம் கூறி, மதுவிலக்குத் தனது ஆட்சியில் ரத்தாகாது என சூளுரைத்தவர் - தாய்மார்கள் கண்ணீரைத் துடைப்பதற்காகக் கெட்டியான சட்டத்தைப் போட்டவர் - பிறகு அதே தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக தளர்த்தல் உத்திரவுகளைப் பிறப்பித்தவர் - மதுவிலக்கை ரத்து செய்வாரா என்ன? பிறகு சத்தியம் என்ன ஆவது! அதுவும் தாய்மீது செய்துள்ள சத்தியம்!

அன்புள்ள,

மு. க.

(12-03-1981)

887. அந்த நம்பிக்கை!

உடன்பிறப்பே,

வயிறும் பிள்ளையுமாக ஒரு பெண்ணின் வாழ்வு முடிந்து விட்டிருக்கிறது; அதாவது ஊரே பேசுவது போல; முடிக்கப்பட்டிருக்கிறது! பெயர் ஞானசவுந்தரி! ஆளுங்கட்சியின் முக்கியப் பிரமுகர்கள் தொடர்புடைய பயங்கரக் கொலையென்று கழகத்தினர், இந்திரா காங்கிரஸ் கட்சியினர் மட்டுமல்லாமல் ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகளும் மதுராந்தகம் பகுதியிலே அறிக்கைகள் வெளியிட்டு நியாயமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளன.

ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த இளம்பெண்ணின் இந்தக் கோர முடிவுக்குக் காரணமாக யார் இருந்தாலும் அவர்களை இந்த அரசு உடனடியாகக் கண்டுபிடித்து, அவர்களைத் தப்பிக்க விடாமல் உரிய சட்டப்பூர்வமான காரியங்களில் தயக்கமின்றி இறங்கிட வேண்டுமென்று மதுராந்தகம் வட்டாரத்துப் பொதுமக்கள் வலியுறுத்துகிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் இந்திரா காங்கிரஸ் நண்பர் அன்பரசு அவர்களும், இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்களும், திரு.கே. சடகோபன் அவர்களும் இந்தப் படுகொலை குறித்து விரிவான அறிக்கைகளை விடுத்துள்ளனர். கொலைக்குக் காரணமாக இருந்த பெரும்புள்ளிகளைக் கைது செய்ய வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

இதிலும் இந்த அரசு, கண்துடைப்பு நாடகம் ஆடிவிட்டு மக்களின் ஏகோபித்த குரலை அலட்சியப்படுத்துமேயானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மதுரையிலிருந்து திருவில்லிபுத்தூர் சென்று பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய கழகத் தோழர்களின் காரை மறித்து, பெருங்கல்லைத் தூக்கிப் போட்டு - காரில் இருந்த கழகத்தின் இளம் பேச்சாளன் இளஞ்செழியனைக் கொன்றார்கள்! அந்தப் பயங்கரப் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டம்; தனது கரத்தை நீட்டிப் பிடிக்கவில்லை. அதுபற்றிப் புலன் விசாரணை நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதே; மதுரையில் அரசு நிகழ்ச்சியான பெரியார் விழாவில் பேசிய முதலமைச்சர்; அது கொலையே அல்ல - வெறும் விபத்துத்தான் என்று கூறிவிட்டார்! கார், கல்லால் தாக்கப்பட்டதால் விபத்து ஏற்பட்டு காரில் இருந்த இளஞ்செழியன் இறந்ததாக மாவட்ட அதிகாரி கூறினார்! பிறகு எந்த நடவடிக்கையுமில்லை; குற்றவாளிகள் கும்மாளம் கொட்டுகிறார்கள்!

செங்கற்பட்டு மாவட்டத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த காண்ட்ராக்டர், அடித்துக் கொல்லப்பட்டுக் குளத்தில் மிதக்க விடப்பட்டார்! அவர் பெயர் புட்லூர் தண்டபாணி! அவர் கைப்பட எழுதி வைத்திருந்த கடிதங்களில் தனக்கும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பணப் புழக்கங்களைப் பற்றிய குறிப்புகளும், தன்னுயிருக்கு எந்த நேரத்திலும் அவரது கட்சி எம்.எல்.ஏ. ஒருவரால் ஆபத்து ஏற்படக் கூடுமென்ற தகவலும் இருந்தன! அந்தக் கடிதங்களை ஆதாரமாகக் காட்டி சட்டமன்றத்திலேயே அந்தக் கொலை பற்றிய சரியான விசாரணை நடைபெற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தத் தொடர்கதையின் ஒரு அத்தியாயமாகத்தான் மதுராந்தகம் ஞானசவுந்தரியின் முடிவும் அமைந்துள்ளது.

உணவுக்காக அ.தி.மு.க. அலுவலகம் மூடப்பட்டிருந்ததாகவும் அப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் உள்ளே புகுந்து தவறாக நடந்துள்ளனர் என்றும் ஞானசவுந்தரி மரணத்துக்கு இது காரணமாக இருக்கலாம் என்றும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஒரு தந்தி கொடுத்திருக்கிறார். ஆனால் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள்; அலுவலகம் மூடப்பட்டிருக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

இப்படி சென்னை மாலைமுரசு செய்தி வெளியிட்டிருக்கிறது!

ஞானசவுந்தரி கொலை - அதுகுறித்து அனைத்துக் கட்சிகள் கண்டனக்கூட்டம் - அனைத்துக் கட்சி சார்பில் சவ ஊர்வலம் - அனைத்துக் கட்சி சார்பில் அனைவருக்கும் தந்திகள் - இவ்வளவும் ஆன பிறகு; அந்தக் கட்சிகளையே குற்றம்சாட்டி; ஒருவர் அறிக்கை விடுவதும் தந்தி கொடுப்பதும் - தன்னை நிரபராதியென நிரூபித்திடப் பயன்படுமென நம்புவாரேயானால் - அந்த நம்பிக்கை; பணம் பாதாளம் வரையில் பாயும் என்ற நம்பிக்கையைத் தவிர, வேறில்லை!

அன்புள்ள,

மு. க.

(13-03-1981)

888. நீதி, தடுமாறுகிறது!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் - கழகத் துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சிலார் அவர்கள் மீதும் மைனர் மோசஸ், நாஞ்சில் மணிமாறன், சந்தானகிருஷ்ணன் ஆகியோர் மீதும் கைலாசம் கண்துடைப்பு கமிஷன் அரசாணை நகல் கொளுத்தியது குறித்த வழக்கு விசாரணைச் செய்திகள் - இவற்றில் உள்ள கவனம் இருக்குமென்ற காரணத்தினால், கடிதங்கள் எழுதிடவில்லை.

எரி சாராய ஊழலைக் கண்டித்துக் கழகம் நடத்திய அறப்போரில் பல்லாயிரக் கணக்கானோர் சிறைப்பட்டனர். பலர் மீது வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் நூற்றுக்கணக்கான கழக முன்னணியினர் சிறைகளில் உள்ளனர். அறப்போரில் ஈடுபட்டு அடக்குமுறையை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்! பாராட்டுகள்! வணக்கங்கள்!

கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர்கள், மகளிர் அணிச் செயலாளர், இலக்கிய அணிச் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் - இன்னமும் சிறையிலிருந்தவாறே நீதிமன்றம் சென்று வருகின்றனர்.

நாஞ்சிலார் வழக்கில் வருகிற சனிக்கிழமை காலை தீர்ப்பு கூறப்பட இருக்கிறது. முப்பத்தைந்து நாட்களுக்கு மேலாக அவரும் மற்ற மூவரும் சென்னைச் சிறைக்கோட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளனர். அதே நாளில் சென்னையில் தடையை மீறிப் பேரணி நடத்த முயன்றதாக மாவட்டச் செயலாளர் சீதாபதி, மற்றும் பலர் மீது இன்னமும் ரிமாண்டு நீடிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

சென்னையில் பேரணி நடத்துவதாக முன்கூட்டி அனுமதி கேட்டதற்கு மறுத்து விட்டனர்.

பேரணி எதற்காக? கைலாசம் கண்துடைப்பு விசாரணைக் கமிஷனில் நியாயம் கிடைக்காது; உண்மை வெளிப்படாது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக!

பேரணி எதுவரையில்? கைலாசம் அவர்களாலேயே கமிஷன் அலுவலகம் என்று அறிவிக்கப்பட்ட அவரது இல்லம் வரையில்!

பேரணி எந்த முறையில்? ஒரு குறிப்பிட்ட இடம் வரையில் சென்று ஊர்வலத்தில் உள்ள கூட்டத்தினர் நின்று விடுவர். அங்கிருந்து நாலைந்து பேர், மகஜர் ஒன்றை எடுத்துச் சென்று கைலாசம் அவர்களிடம் கொடுத்து விட்டுத் திரும்பிடுவர்!

இதை போலீசார் - அல்ல; அல்ல; எம்.ஜி.ஆர். அரசு அனுமதிக்கவில்லை! அனுமதிக்காதது மட்டுமல்ல; ஆயிரக்கணக்கில் கைது! தடியடிப் பிரயோகம் - கண்ணீர்ப் புகை! இப்படி அடக்குமுறைத் தாக்குதல்! ரிமாண்டு! ரிமாண்டு! ரிமாண்டு!

பேரணிக்கு இந்த நிலை! இதோ பெண்கள் அணியொன்று வந்தது பார்! அதற்கு என்ன நிலை? இது ஆளும்கட்சிப் பெண்களின் அணி! வண்ணைப் பகுதியிலேயிருந்து எதிர்க்கட்சித் தலைவரின் வீடு நோக்கி வருகிறார்கள்! முன்அறிவிப்பு உண்டா? இல்லை! முதல்வர் திட்டமிட்டு வேண்டுமென்றே அவதூறாகக் கூறிய பொய்களை மறுத்து அவற்றை நிரூபிக்க முடியுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டது; கடுமையாகக் கேட்டது தவறாம் - அதைக் கண்டிக்கப் பெண்கள் பேரணியாம்! அவர்களுக்கு வழிநெடுகப் போலீஸ் பாதுகாப்பாம்! சென்னையில் தடையுத்தரவு இருக்கிறது - இருந்தாலும் அந்தத் தடையை மீறி எதிர்க்கட்சித் தலைவர் வீட்டுக்குள்ளேயே நுழையப் பனிரெண்டு பெண்கள் ஆவேசமாகவும் - ஆபாச கோஷங்களுடனும் முனைகிறார்கள்! அதைத் தடுத்திட முனைந்த எதிர்க்கட்சித் தலைவரது அரசாங்க ஊழியராகப் பணிபுரியும் செயல்மணியை அந்தப் பெண்கள் பேரணி, தாக்குகிறது! செயல்மணிக்குத் தலையில் காயம்! மருத்துவமனையில் சிகிச்சை!

கருணாநிதி வீட்டுக்குப் போவோம். சாட்சி சொல்ல ஆள் இருக்காது! அடித்துத் துவம்சம் செய்வோம் என்று அன்றொருநாள் வன்முறையைத் தூண்டிவிட்டுப் பேசியவர்கள் தானே இன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கின்றனர்!

எனவே இந்த ஆட்சியில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும்!

சட்டத்தை மதிக்காமல், மிதித்துவிட்டு - வீட்டுக்குள்ளே நுழைந்து ரகளை செய்திட முயன்ற பெண்களும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு! அப்படி நுழைவதைத் தடுத்த செயல்மணியும் கைது செய்யப்பட்டு வழக்கு!

அடடா! என்ன நீதி? என்ன நீதி? இதுவன்றோ சமநீதி? வண்ணையிலிருந்து பெண்கள் பேரணி! எந்தத் தடையுமில்லை! எதிர்க்கட்சித் தலைவர் வீடு வரையில் அனுமதிக்கப்படுகிறது! ஆபாச ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது! அத்துமீறி வீட்டுக்குள்ளேயே நுழைய முயற்சித்தவர்களைத் தடுப்பது குற்றமாம்! இதுவல்லவா புரட்சி! இதுவல்லவா நீதி! இதுவல்லவா சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படும் நேர்மை!

தடிக்கம்புகள், தட்டிகளுடன் வந்த பனிரெண்டு பெண்களின் கூட்டத்தில் புகுந்து, ஒரே ஒரு செயல்மணி ரவிக்கையைக் கிழித்தாராம் - அதனால் அவரும் கைதாம்! இப்படிப் புகார் சொல்லப்பட்டிருக்கிறதாம்; முதலமைச்சர் சட்டப் பேரவையில் விளக்கமளித்துள்ள விதம் இது!

திடீரென்று யார் வீட்டில் வேண்டுமானாலும் பத்து பேர் நுழையலாம்! அதைத் தடுத்தால் தடுத்தவர்கள் மீதே ரவிக்கை புகார் கூறி அவர்களையும் கைது செய்து வழக்குப் போடலாம்! தடுப்பவர்களை அடித்து நொறுக்கினாலும் பரவாயில்லை!

இந்தச் சலுகை எம்.ஜி.ஆர். கட்சிக்கு மட்டுமே உண்டு!

நீதி தேவன் மயக்கம் என்று அண்ணா எழுதிய நாடகத்தில் ஒரே ஒரு நீதிதேவன்தான் குழப்பத்தால் மயங்கி விழுவது போன்ற காட்சி.

ஆனால், நீதியே மயங்கித் தடுமாறி விழுகின்ற காட்சிகளை நித்தமும் காவல்துறை மூலமாக எம்.ஜி.ஆர். ஆட்சியினர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்! இன்னும் எத்தனை நாள் இந்த அநியாயம்; பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

(27-03-1981)

889. நாடே கேட்கிறது!

உடன்பிறப்பே,

கடந்த 25-ஆம் தேதி இரவு எட்டுமணி அளவில் விருத்தாசலத்திலிருந்து நண்பர் செல்வராசு அவர்கள் தொலைபேசி வாயிலாக என்னிடம் தொடர்பு கொண்டார்.

கோட்டையில் ஒருநாள் விடியற்காலை நாலு மணிக்கு நுழைந்து முதல்வர் அறையில் உள்ள பொருள்களை சேதப்படுத்தியது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள புருஷோத்தமனைப் பற்றிச் சில விபரங்களைச் சொன்னார்.

நேற்றும் இன்றும் ஏடுகளில் வெளி வந்திருக்கின்றனவே; அந்த விபரங்கள்தான் அவை!

புருஷோத்தமன் ஏற்கனவே மனநோயாளியாக சென்னை மனநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றவர். இடையில் ஒரு தொழிற்சாலையில் தினக்கூலியாக வேலை பார்த்தார். மீண்டும் அவருக்கு மூளைக்கோளாறு ஏற்படவே அவரை அவரது சகோதரர் சென்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அப்போது புருஷோத்தமன் அவரை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டார். இந்த விபரங்களையெல்லாம் செல்வராசு அவர்களிடம் புருஷோத்தமனின் உறவினர்கள் வந்து சொன்னதாக நண்பர் செல்வராசு அவர்கள் தொலைபேசியில் என்னிடம் கூறினார்.

அந்த உறவினர்களைச் சென்னைக்கு வரச் சொல்லுங்கள். அவர்களைப் போலீஸ் அதிகாரிகளிடம் அனுப்பி, அவர்களது புலனாய்வுக்கு உதவிகரமாக இருக்குமா என விசாரிக்கச் சொல்லுகிறேன். இவ்வாறு நான் செல்வராசு அவர்களிடம் தொலைபேசியில் கேட்டுக் கொண்டேன்.

கழகத்தினர் பலரது தொலைபேசிகள், ஒட்டுக் கேட்கப்பட்டுக் காவல்துறையினரால் டேப் செய்யப்படுகின்றன;

என் வீட்டு தொலைபேசிகளும் டேப் செய்யப்படுவதால் நண்பர் செல்வராசு பேசியதையொட்டி அன்றிரவே போலீசார் நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டார்கள்.

புருஷோத்தமனைப் பற்றிய விபரங்களைத் தாங்கள் தான் முன்கூட்டித் தெரிந்து நாட்டுக்கு அறிவித்ததாக இருக்க வேண்டுமென்ற ஒரு அற்ப ஆசை, போலீஸ் இலாகாவுக்கு ஏற்பட்டுவிட்டது போலும். அதனால் தொலைபேசியில் அவர்கள் ஒட்டுக் கேட்டதை வைத்துக் கொண்டு, அதே நள்ளிரவு இரண்டு மணிக்கு விருத்தாசலத்தில் நண்பர் செல்வராசு வீட்டில் நுழைந்து சோதனையிடத் தொடங்கி விட்டனர்.

சென்னையில் முதல்வர் அறையில் நுழைந்த புருஷோத்தமன் மீது போடப்பட்டுள்ள சட்டப்பிரிவுகளான அய்.பி.சி. 457, 427 ஆகியவற்றின் தொடர்பாக அந்த நிகழ்ச்சியையொட்டி இந்த சோதனை 102, 165 சி.ஆர்.பி.யின்படி, மேற்கொள்ளப்படுவதாகப் போலீசார் செல்வராசு அவர்களிடம் அறிவித்தனர்.

இரவு இரண்டு மணி சுமாருக்குத் தொடங்கிய அந்தச் சோதனை காலை ஆறு மணி வரையில் நடைபெற்றது. எம்.ஜி.ஆர். கட்சி ஊழல் குறித்த சட்டமன்றப் பேச்சுத் தொகுப்புப் புத்தகங்கள் சிலவற்றைப் போலீசார் கைப்பற்றிச் சென்றிருக்கின்றனர்.

இந்த விபரங்களையும் மறுநாள் காலை நண்பர் செல்வராசு அவர்களும் மற்றும் நமது கழக நண்பர்களும் எனக்குத்தொலைபேசி வாயிலாகத் தெரிவித்தனர்.

நண்பர் செல்வராசு அவர்கள் சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர். மாற்றுக் கட்சிக்காரர்களால்கூட தனிப்பட்ட முறையில் மதிக்கப்படக்கூடியவர்களில் ஒருவர். அண்மையில்தான் அவர் மிக ஆபத்தான நிலையில் உடல்நலிவுக்கு ஆளாகி, சென்னையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்.

தன்னிடம் தெரிவிக்கப்பட்ட ஒரு தகவலை, அவர் என்னிடம் சொன்னதற்காக இப்படியொரு கெடுபிடியா?

இந்தப் பரபரப்பும், பதட்டமும், அக்கறையும் - மதுராந்தகத்தில் கொலை செய்யப்பட்ட ஞானசவுந்தரி என்ற ஆதி திராவிடப் பெண்ணைப் பற்றிய விவகாரத்தில் காட்டப்பட வில்லையே!

அதற்கு இந்தியப் பிரதமரல்லவா கடிதம் எழுதி நினைவூட்டி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது!

போலீசாருக்கு உதவிகரமாக இருக்குமென்ற நல்லெண்ணத்துடன்தானே; புருஷோத்தமனின் உறவினர்கள் வந்து கொடுத்த விபரங்களை, விருத்தாசலத்திலிருந்து செல்வராசு எனக்குச் சொன்னார்; அதற்கே இப்படியொரு ஆரவாரமா? ஆட்டபாட்டமா?

தமிழகத்தில் இன்று தர்பார் நடத்துகிறவர்களின் பழிவாங்கும் போக்கிற்கு ஒரு எல்லையே கிடையாதா?

நாம் மட்டும் கேட்கவில்லை இதை!

நாடே கேட்கிறது இப்போது!

அன்புள்ள,

மு. க.

(29-03-1981)

890. புள்ளிவிபரம் - புரிகிறதா?

உடன்பிறப்பே,

உழைப்புக்கு உணவு என்ற மத்திய அரசு பெரும் பகுதி பொறுப்பேற்றுள்ள திட்டத்தையும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஆகிய திட்டங்களையும் நமது மாநிலத்தில் எம்.ஜி.ஆர். அரசு, எந்த வகையில் நிறைவேற்றுகிறது என்பதற்கு இதோ சில புள்ளி விபரங்கள்!

இந்தப் புள்ளி விபரங்கள் சமுதாய வளர்ச்சி - மற்றும் நகர நிர்வாகம் என்ற தலைப்பில் இன்றுள்ள தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள குறிப்பிலேயிருந்து எடுக்கப் பட்டவைகளாகும்.

ஃ உழைப்புக்கு உணவு

ஃ கிராமப்புற வேலை வாய்ப்பு

ஃ வேலை வாய்ப்பு உறுதி

ஆகிய திட்டங்களின் கீழ் 1979-80-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை : 42,390.

அவற்றில் செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை : 32,914.

1980-81-ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை : 35,946.

அவற்றில் செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை : 18,686.

1979-80-இல் 32,914 பணிகள் முடிவு பெற்றிருக்க 80-81-இல் 18,686 பணிகளே முடிவுற்றிருக்கின்றன!

ஆனால் அரிசி மட்டும் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது தெரியுமா?

32,914 பணிகள் முடிந்த காலத்தில் 55,483 டன்கள்!

18,686 பணிகள் முடிவடைய வழங்கப்பட்டுள்ள அரிசி 44,813 டன்கள்!

முப்பத்திரண்டாயிரத்துக்கு ஐம்பத்தி ஐயாயிரம் டன் அரிசி! பதினெட்டாயிரத்துக்கு நாற்பத்திநாலாயிரம் டன்கள்!

கூலியாக வழங்கப்பட்ட பண அம்சம் எவ்வளவு தெரியுமா?

32,914 பணிகள் முடிவுற்றதற்கு 1979-80ல் 126.73 லட்சம் ரூபாய்!

18,686 பணிகள் முடிவுற்றதற்கு 1980-81ல் 195.75 லட்சம் ரூபாய்!

இதை விட வேடிக்கை! 126 லட்ச ரூபாய் கூலியாகத் தரப்பட்ட போது செய்யப்பட்ட வேலையின் மதிப்பு 920 லட்சம்! ஆனால் 195 லட்ச ரூபாய் கூலியாகத் தரப்பட்டுள்ள போது செய்யப்பட்ட வேலையின் மதிப்பு; 872 லட்சம்தான்!

அதுமட்டுமல்ல; அப்போது வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 1.86 லட்சம் பேர்! 80-81-இல் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 1.56 லட்சம் பேர்தான்! ஒரு லட்சத்து எண்பத்து ஆறாயிரத்திலிருந்து ஒரு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரமாகக் குறைந்திருக்கிறது, வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை!

அமைச்சரே! நாம் திட்டங்களுக்காக ஒதுக்குகிற பணம் ஏராளம்! ஆனால் அது, ஏழைகளின் கைக்குப் போய்ச் சேருவதில்லை என்கிறார்களே; எப்படி?

மன்னன், மந்திரியைப் பார்த்துக் கேட்டான்!

அமைச்சர் சொன்னார் அழகான பதிலை; வார்த்தைகளால் மட்டுமல்ல - ஒரு சிறு நிகழ்ச்சியை நடத்திக் காட்டி!

ஒரு ஐஸ் கட்டியை எடுத்து அரசன் கையில் அமைச்சர் கொடுத்தார் -

அரசே! அதை இந்தக் கொலு மண்டபத்தில் உள்ள நமது பிரதானியார் அனைவரும் வாங்கி வாங்கி அடுத்தவர் கைக்குக் கொடுக்க வேண்டும். அப்படி ஐஸ் கட்டி, கைமாறிக் கொண்டிருக்க வேண்டும்.

அரசன், தன் கையிலிருந்த ஐஸ் கட்டியை - தளபதியிடம் கொடுத்தான்.

தளபதி, துணைத் தளபதியிடம் கொடுத்தான்.

துணைத் தளபதி, தனக்கு அடுத்துள்ள அதிகாரியிடம் கொடுத்தான்.

ஐஸ் கட்டி அந்த மண்டபத்தை ஒரு சுற்று சுற்றி விட்டு அமைச்சர் கைக்கு வரும்போது ஒரு ஓட்டாஞ்சல்லி போல இளைத்திருந்தது!

அமைச்சர், தன் கையில் அதைச் சிறிது நேரம் வைத்திருந்து விட்டு - இறுதியாக இரண்டு மூன்று சொட்டுத் தண்ணீரை; அரசனின் கையில் ஊற்றினார்!

அரசன், அதில் ஒரு சொட்டை தனது நாவால் சுவை பார்த்துக் கொண்டான்!

இப்போது புரிகிறதா மன்னா! பல பேர் கை மாறிய ஐஸ் கட்டி என்ன ஆனது? கடைசியாக ஒரு சொட்டுத் தண்ணீராகத் தானே ஆனது! இதே போலத்தான் ஏழை மக்களுக்காக அறிவிக்கிற திட்டங்கள் ஒரு சொட்டுக் கண்ணீராக மாறி அந்த மக்களின் உதடுகளை ஈரமாக்குகிறது!

உடன்பிறப்பே, இந்தக் கதைதான் இப்போது தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது!

திட்டத் தொகைகள் அமைச்சர்களின் கரம்பட்டு - ஆளும்கட்சிப் புள்ளிகளின் கரம் பட்டு - அமைப்பாளர்களின் கரம் பட்டு - அந்தோ; பரிதாபம்; கடைசியாகப் பாடுபடும் ஏழைகளின் விழிகளில் ஒரு சொட்டுக் கண்ணீராக மிஞ்சுகிறது என்பதற்கே - இந்தப் புள்ளி விபரமும் கதையும்! புரிகிறதா உனக்கு!

அன்புள்ள,

மு. க.

(03.04.1981)

891. தூதுவிடு படலம் - தொடை தட்டும் நாடகமும்!

உடன்பிறப்பே,

எட்டு ஆண்டுக் காலம் தொடர்ந்து என் மீதும், கழக முன்னணியினர் மீதும், கழக அரசில் அமைச்சர்களாக இருந்தவர்கள் மீதும் குற்றச்சாட்டுப் புகார்களைக்கூறி - மகஜர்களாக மடித்துக் காட்டி மர்மப் பேழைகளில் வைத்து மத்திய அரசிடம் கொடுத்து - மத்திய விசாரணைக் கமிஷன் உடனடியாக அமைத்திடுக என்றும் கழக அரசை உடனடியாகக் கலைத்திடுங்கள் என்றும் - அப்படிச் செய்யாவிட்டால் இந்திய ஒருமைப்பாட்டுக்கே அர்த்தமில்லாமல் போய் விடுமென்றும் - குடியரசுத் தலைவரையும், பிரதமரையும் கேட்டுக் கொண்டவர்கள், ஏடுகளில் அடுக்கடுக்காக அறிக்கைகளை விட்டவர்கள், இன்றைக்கு அவர்கள் விட்ட கணை அவர்களையே திருப்பித் தாக்கும்போது எப்படி ஆத்திரப்படுகிறார்கள் பார்த்தாயா?

ஆகா! மாநில உரிமைகளில் மத்திய அரசு கை வைக்கலாமா? என்று, இன்றைக்கு அலறுகிறார்கள்! கதறுகிறார்கள்! பதறுகிறார்கள்! பதைக்கிறார்கள்!

அன்றைக்குக் கழக ஆட்சியின் மீது புகார் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு போய்க் கொடுத்து - பேசப்படுகிறது, சொல்லப்படுகிறது, யாரோ சொன்னார்கள் அதனை நான் சொல்கிறேன் - இருந்தாலும் மத்திய விசாரணைக் கமிஷன் அமைத்திட வேண்டுமென வற்புறுத்துகிறேன்; என்று முறையிட்டபோது - மாநில உரிமை பற்றிய உணர்வு மண்டையில் சுரக்கவில்லையாம் - இப்போது திடீரென அந்த உணர்வு சுரந்து - திருவொற்றியூரில் பதுக்கப்பட்ட இரண்டே கால் கோடி ரூபாய் பாமாயில் போல வழிந்து கொட்டுகிறதாம்! எண்ணூர் எண்ணெய், திருட்டுக் குழாய்களில் பெருக்கெடுத்தது போல மாநில உணர்வு; எம்.ஜி.ஆரின் திருக்கூட்டத்துக்குப் பெருக்கெடுக்கிறதாம்!

1968-இல் மாநில சுயாட்சி பற்றி அண்ணா திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிவித்த கருத்தையும் 1971-இல் தி.மு.க. தேர்தல்

அறிக்கையில் வலியுறுத்தியதையும், தொடர்ந்து ராஜமன்னார் குழு அமைத்து அறிக்கை பெற்றதையும், மாறன் - செழியன் குழுவினர் ஆராய்ந்து வெளியிட்ட கருத்தை அறிவித்ததையும், கழக அரசின் சார்பில் 1974-இல் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வந்தபோது, நானும் அன்றைய கல்வி அமைச்சர் நாவலரும் மற்றுமிருந்த அமைச்சர்களும், கழக உறுப்பினர்களும் விளக்கியதை ஏற்றுக்கொள்ள மறுத்து - மாநில சுயாட்சி தீர்மானத்திற்கு எதிராக முழங்கிய எம்.ஜி.ஆர். கட்சியினர் இன்றைக்குத் திடீரென ஞானோதயம் பெற்று - ஆகா! ஊகூ! தி.மு.க. மாநில சுயாட்சியை கைவிட்டு விட்டது! அ.தி.மு.க.தான் மாநில சுயாட்சிக்காகப் போராடும் வீராதிவீரன் சூராதிசூரன்! என்று பேசுவது கேட்டு உனக்குச் சிரிப்பு வருகிறதல்லவா?

மாநில சுயாட்சி என்ற சொல்லே கூடாது! அதை அண்ணா ஏற்கவேயில்லை என்று உண்மைக்கு மாறாக அன்று உரத்த குரல் எழுப்பியவர்கள்; எம்.ஜி.ஆர். அணியினர்!

மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவையில்லையென்று அன்றைக்குத் திட்டவட்டமாக சட்டசபையில் தெரிவித்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினர்!

ஒருவேளை அன்றைக்கு அது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்தாக இருந்திருக்கலாம்; இன்றைக்கு மாற்றிக் கொண்டிருக்கலாம்!

ஆனால், அண்ணாவின் பெயரைக் கட்சிக்குச் சூட்டிக் கொண்டிருப்பவர்கள் அன்றைக்கு அண்ணா மாநில சுயாட்சியென்ற வார்த்தையையே பயன்படுத்தவில்லை என்று வாதிட்டார்கள். அவர்கள் வாதத்தை சட்டப் பேரவையில் தவிடுபொடியாக்கிடும் வகையில் அன்றைய கழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், அண்ணா அவர்கள் இல்லஸ்ட்ரேட் வீக்லி இதழுக்கு அளித்த பேட்டியை எடுத்துக்காட்டி விளக்கியதை அவரே மறந்திருக்க முடியாது!

மாநில சுயாட்சி மாநாட்டில் அண்ணா எடுத்து வைத்த ஆணித்தரமான வாதங்களை நானும் அப்போது சட்டப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

அன்று; அண்ணாவின் லட்சியமான மாநில சுயாட்சியை மறுத்த எம்.ஜி.ஆர். கட்சியினர்; இன்று அந்த லட்சியத்துக்குத் தாங்கள்தான் வழிகாட்டிகள் என வாய்ப்பறை கொண்டுகிறார்களே; கண்டாயா அந்தக் காட்சியினை!

பஞ்சாப் முதல்வர் குர்நாம்சிங் கலந்து கொண்ட - கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். திறந்து வைத்த - திருச்சி மாநாட்டில் மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி என்ற முழக்கம் எழுப்பப்பட்டது!

கழகத்தைப் பொறுத்த வரையில் அந்த முழக்கத்தில் தொய்வில்லை! தயக்கமில்லை! குழப்பமில்லை!

ஆனால் எம்.ஜி.ஆரைப் பொறுத்த வரையில், 1972-க்குப் பிறகு மாநில சுயாட்சி என்ற வார்த்தையே உச்சரிக்கப் படக்கூடாத ஒன்று என உரைத்து வந்தார்! அந்த அடிப்படையிலேயே மாநில சுயாட்சித் தீர்மானத்தை 1974-இல் சட்டசபையில் அவரது கட்சி எதிர்த்தது!

இன்று மாநில சுயாட்சியென அதே கட்சி, குரல் கொடுப்பது மட்டுமல்ல; மத்திய விசாரணையே கூடாது என்றும் கொடி தூக்குகிறது!

மடியிலே கனமில்லை; வழியிலே பயமில்லை என்கிறார்கள்! பிறகேன் மத்திய விசாரணையைக் கண்டு மருளுகிறார்கள்? இந்தக் கேள்விக்கு விடை அளிக்க முடியாமல் தான் என்னென்னவோ பேசுகிறார்கள்! எவர் எவரையோ தூண்டிவிட்டுத் தொடை தட்டச் சொல்கிறார்கள்!

சுத்தவீரன்; தன் தொடையைத் தட்டிக்கொண்டு கொதித்தெழுவான்!

இவர்களோ; துணைக்கு வந்தவர்களின் தொடையைத் தட்டிக்காட்டி - பார்! பார்! எமது வீரம்! எனக் கொக்கரிக்கிறார்கள்!

தூது விடும் படலம் தொடருகிறது; இங்கே தொடை தட்டும் நாடகமும் அரங்கேற்றப்படுகிறது!

நாடு இந்த வேடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதானிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(04.04.1981)

892. அன்பே கொள்கை!
அமைதியே குறிக்கோள்!

உடன்பிறப்பே,

எந்தவொரு வெற்றியை ஈட்டிடவும் - எந்தவொரு கொள்கையை நிறைவேற்றிக் கொள்ளவும் - எந்தவொரு மாற்றத்தை ஏற்படுத்திடவும் - ஜனநாயக நெறி; சுட்டிக் காட்டியுள்ள வழிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக வன்முறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயல்படுவதை; அமைதியால் உலகம் தழைப்பதை விரும்புவோர் ஏற்றுக் கொள்வதேயில்லை.

வன்முறைக்கு எதிரான அறிவுரைக் கருத்தரங்குகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு தானிருக்கின்றன. சாந்தியால் உலகம் செழிப்பதே நன்று என - சிந்தனைச் செல்வர்கள், சீர்திருத்த செம்மல்கள், அறிவியக்க வித்தகர்கள், ஞானமேதைகள், அத்தனை பேரும் எழுதிக் குவித்த எண்ணக் கருவூலங்கள் அள்ளக் குறையாத அன்பு மொழிகளை வழங்கிய வண்ணமிருக்கின்றன!

தன்னுடன் ஒத்துப் போகாமல் உடன்பாடு கொள்ளாமல் கருத்து வேறுபாடு கொண்டு ஒருவன் எதிர் தரப்பில் இருந்தாலும் அவன் மீது கருத்துப் போராட்டம் நடத்துவதை விடுத்து; பகையுணர்வும் பழி வாங்கும் நோக்கும் கொண்ட நிலையில் அவனுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடாது என இகல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகிறார்.

பகையுணர்வுதான் நெஞ்சத்தில் மண்டி, பழி வாங்கும் வன்முறையை உருவாக்குகிறது.

புத்தர் முதல் காந்தியடிகள் வரையில் போதித்த அன்பு மார்க்கம் - புத்தகப் பேழைகளில் பொன்மணிகளாக ஒளிவிட்டுக் கொண்டுதானிருக்கின்றன!

ஆனால்... ஆனால்... இதோ அமெரிக்க ஜனாதிபதி ரீகன்; குண்டு துளைத்த நிலையில் மருத்துவமனையில்! அந்த நாட்டில் இந்தச் செயல் பொழுதுபோக்குப் போல ஆகிவிட்டிருக்கிறது! துப்பாக்கிகள் விளையாட்டுச் சாமான்களைப்போல விற்கப்படும் ஒரு நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் சாதாரணமானவைகளாகி விட்டன!

ஜனாதிபதி, உலகத்தின் கண்களுக்குத் தெரிந்தவர் என்ற காரணத்தினால் பரபரப்பும்! துடிதுடிப்பும்!

அமெரிக்காவில் அன்றாடம் குண்டு பாய்ந்து மாண்டிடுவோர் பற்றிய செய்திகள் வாடிக்கையாகி விட்டிருக்கின்றன. துப்பாக்கி உரிமம் தேவையில்லை யென்பதால் இந்த துர்ப்பாக்கிய நிலை என்ற வாதம் வலிவானதுதான் என்றாலும்; இங்கே இந்தியாவில் உத்தமர் காந்தியடிகளின் முடிவு எப்படி நேர்ந்தது என்பதையும் நினைவு கூர்ந்திட வேண்டியிருக்கிறதே!

நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது -தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரி பார்த்தசாரதிக்கு; அசாமில் ஏற்பட்ட சோக முடிவை!

திட்டமிட்டு வெடிகுண்டு வைத்து ஒரு மனித உடலைத் தூளாக்கி, ரத்தக்கூழாக்கிக் களிப்பதிலே வன்முறையாளர்களுக்கு என்னதான் சுவையோ?

தலைகீழ்ப் புரட்சி என்ற பெயராலோ, தீவிரவாதம் என்ற பெயராலோ, தீங்குகளை அகற்றுவது என்ற பெயராலோ, நியாயத்தை நிலைநாட்டுவது என்ற பெயராலோ, நடத்துகின்ற போராட்டங்களில் தன்னைத் தானே அடக்குமுறைகளுக்கு; துன்ப துயரங்களுக்கு ஆட்படுத்திக் கொள்கிற முறையை விடுத்து; பிறரை, வன்முறையின் வாயில் தள்ளுகிற முறையைக் கொடுமை என்போம்!

அக்கொடுமை கூடாது எனக் குரல் கொடுப்போம்!

வன்முறை, மலையளவு எனினும்; கடுகளவு எனினும் - அம்முறையை அணுவளவும் அனுமதியோம் என சூளுரை மேற்கொள்வோம்!

சட்டங்களால் மட்டும் இதனைச் சாதித்துவிட முடியாது! அதற்கான மனவளம் வேண்டும்! அந்த வளம் பெருக; உலகு தழுவிய கொள்கை பரப்புப் பணி வேண்டும்!

அன்பே நமது கொள்கை!

அமைதியே நமது குறிக்கோள்!

தனி மனிதர்களுக்கும், தனிப்பட்ட கட்சிகளுக்கும் பல்வேறு கொள்கைகள், குறிக்கோள்கள் இருக்கலாம் - ஆனால் உலக மாந்தரின் பொதுக்கொள்கையாகவும் குறிக்கோளாகவும் - அன்பும், அமைதியும்தான் இருந்திடல் வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(10.04.1981)

893. பிரதமரின் பேருரை!

உடன்பிறப்பே,

The Prime Minister assured all concerned, including Pakistan, that India had no intention of either building a war machine or competing in an arms race. The best defence, in India's view, was prevention of war at all costs. Though the basic responsibility for peace rested with the Big Powers, countries like India must pull together to avert the danger of war in their own interests.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு விடையளித்து உரை நிகழ்த்திய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நமது நாடு போருக்கான வலிமை மிக்க யந்திரத்தை உருவாக்குவதையோ, அல்லது போர்த் தளவாடங்களைப் பெருக்கிடும் பந்தயத்தில் மற்ற நாடுகளுடன் போட்டியிட்டு முன்னேற வேண்டுமென்பதையோ, நோக்கமாகக் கொண்டிருக்கவில்லையென்பதை பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு உணர்த்தியதுடன்; போர் வராமல் எல்லா வகையிலும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுத் தடுப்பதுதான் நாட்டுக்குச் சிறந்த பாதுகாப்பு என்றும் குறிப்பிட்டு; சமாதானத்திற்கான பொறுப்பு, வல்லரசுகளின் கையில் இருக்கிறதென்றாலும் இந்தியாவைப் போன்ற நாடுகளும் அவற்றின் நலனை முன்னிட்டு அந்த ஆபத்தைத் தவிர்த்திட முன்வர வேண்டியிருக்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து அணு ஆயுதங்களைப் பெற பாகிஸ்தான் முயற்சி மேற்கொள்வது பற்றிய செய்திகள் அடிக்கடி வருவதின் காரணமாகவும் - இந்து மகா சமுத்திரத்தை உள்ளடக்கிய, அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக் வரையில் பரவியுள்ள விரிவானதொரு இராணுவக் கூட்டமைப்பின் ஒரு

பகுதியாக பாகிஸ்தான் திகழ்ந்திட விழைவதின் காரணமாகவும் - போரா? அமைதியா? என்ற வினாவுக்கு விளக்கமளிக்க வேண்டிய கடமைக்கு இந்தியப் பிரதமர்; தன்னை ஆட்படுத்திக் கொண்ட ஆற்றியுள்ள உரை - நமது நாட்டு மக்களுக்கு அமைதியில் உள்ள அக்கறையை வெளிப்படுத்துவதோடு; அமைதி விரும்புவதை இயலாமை என எடுத்துக் கொண்டு, யாரும் மிரட்டுவார்களே யானால் அவர்களைக் களம் கண்டு புறங்காணச் செய்யவும் இந்தியா தயாராக இருக்கிறது என்ற உறுதியையும் உலகிற்கு உணர்த்தியிருக்கிறது.

பாம்புக்கு மனிதனிடம் பயம் - மனிதனுக்குப் பாம்பிடம் பயம் - என்பார்களே; நமது கிராமங்களில் - அதுபோல உலகில் உள்ள வல்லரசுகள் ஒன்றையொன்று பார்த்துப் பயந்து போய்த் தளவாடங்களை விதம் விதமாகக் குவிப்பதில் ஆர்வங் காட்டுவதோடு, முக்கிய கேந்திரங்களில் இராணுவ தளங்களை அமைத்துக் கொண்டு போர் மிரட்டல்களில் ஈடுபட்டும் வருகின்றன.

தங்கள் நாட்டின் வளம் பெருக்கவும் - வலிமை பெருக்கவும் - வல்லரசுகளல்லாத நாடுகள்; வல்லரசு நாடுகளுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டிட வேண்டியுள்ளது! அல்லது பணிந்து போகவேண்டியுள்ளது! அவற்றைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வலியார், எளியார்களை அடக்கியாளும் ஆதிக்க முறைக்கு அந்த வல்லரசுகள், கூர் ஏற்றிக் கொள்கின்றன.

நேருவின் தலைமையிலும் சரி; இன்று இந்திரா அம்மையாரின் தலைமையிலும் சரி; இந்தியா - குழு சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து, அதை உதட்டளவில் இல்லாமல் செயல் அளவிலும் உறுதிப்படுத்திக் கொண்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

உதவிகளை நாட்டு நலனுக்காகப் பெறுவதை முன்னிட்டு, உதவியளிப்போரின் பின்னால் கைகட்டி நிற்கும் போக்கினை இந்தியா, என்றைக்கும் ஏற்றுக் கொண்டது கிடையாது! இனியும் அப்படியொரு நிலை ஏற்படாது! ஏற்படக்கூடாது!

அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் ஆப்கானிஸ்தானத்திலிருந்து எல்லா வெளியார் படைகளும் திரும்பப் பெறப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலையாகும் என்று பிரதமர் கோடிட்டுக் காட்டியிருப்பதோடு, அரசியல்

வழிமுறைகளின் மூலமே ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றும் தெளிவாக்கியிருக்கிறார்.

பாரசீக வளைகுடாவின் பாதுகாப்பு அந்த வளைகுடா நாடுகளின் பொறுப்பாக இருந்திடல் வேண்டுமே தவிர, வெளிச்சக்திகளின் வலியுறுத்தல்களுக்கும் - தலையீடுகளுக்கும் இடம் கொடுத்து விடக்கூடாது என்றும் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

உலகிலேயே இந்தியாவின் இராணுவச் செலவுதான் பாகிஸ்தானைக் காட்டிலும் விகிதாச்சாரத்திலே கூட குறைவானது என்பதற்கான புள்ளி விபரங்களைத் தந்துள்ள பிரதமர், தளவாடப் பெருக்கப் போட்டியிலே இந்தியா இறங்கிட விரும்பவில்லை என்றாலும்;

எதற்கும் - எப்போதும் - இந்தியா; தன்னைக் காத்துக் கொள்ளத் தயார் நிலையில் இருக்கும் என்று வீர முழக்கமிட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்!

அன்பே நமது கொள்கை!

அமைதியே நமது குறிக்கோள்!

என்று நேற்று கடிதத்தில் எழுதியிருந்தேன் - அடிமைத்தனத்தைப் பண்ட மாற்றாக ஆக்கி அமைதியை யாரும் நாடிடமாட்டார்கள் அல்லவா? அதைத்தான் இந்தியப் பிரதமரின் நாடாளுமன்றத்து உரை, நமக்கு உணர்த்துகிறது! போர் மிரட்டல்காரர்களுக்கும் உணர்த்துகிறது!

அன்புள்ள,

மு. க.

(11.04.1981)

894. ஆசிரியர்கள் அறப்போர்!

உடன்பிறப்பே,

அகவிலைப்படி உயர்வு - மூன்றாவது ஊதியக் குழுவையொட்டிய ஒருநபர் குழுவின் அறிக்கை - ஓய்வு பெறுவோருக்கு உதவித் தொகை - அனைத்துத் துறைப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக்குதல் - ஆசிரியர்களை மாற்றுகின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய முறை - ஈட்டிய விடுப்பு - மகப்பேறு விடுப்பு - குடும்பக் கட்டுப்பாடு ஊக்க ஊதிய உயர்வு - இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக மாற்றுதல் - தலைமை ஆசிரியர்கள் ஊதிய நிர்ணயம் - நடுநிலைப் பள்ளி பட்டதாரித் தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப்படி - விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வுகள் - மலிவு விலையில் உணவுப் பொருள்கள் - மருத்துவப்படி, வீட்டு வாடகைப்படி - இவை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் கடந்த சில நாட்களாக அறப்போர் நடத்தி வருகிறது. இதுவரையில் ஆசிரியர்களும் ஆசிரியைகளுமாகச் சுமார் ஆயிரம் பேர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

தொடர்புடைய அமைச்சருடனும், முதலமைச்சருடனும் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள ஆசிரியர் மன்ற நிர்வாகிகள், எத்தனையோ முறை முயற்சி மேற்கொண்டார்கள்.

பாவம்; ஆசிரியர்களென்ன; வட்டிக்கடை வேந்தர்களா - பெட்டி பெட்டியாகக் கொண்டு வந்து கோரிக்கைகளைப் பெற்றுச் செல்ல!

அல்லது பேருந்து அதிபர்களா; மூன்று என்பதை ஐந்தாக உயர்த்திக்கொண்டு முக்கால் கோடியை வைத்து கோரிக்கையிலே முழு வெற்றியைப் பெற்றுத் திரும்பிட!

ஆசிரியர் மன்ற நிர்வாகிகளுக்குப் பேட்டி கிடைக்கவில்லை! அவர்கள் சார்பில் யாராவது பேசினாலும் அரசை நிர்வகிப்போர் சீறிவிழுந்தனர்! சினம் காட்டினர்!

நான்தான் கூரையைப் பொத்துக் கொண்டு கொட்டுகிற தெய்வமாயிற்றே; என்னிடம் கோரிக்கைகளா? என்று கோபம் கொப்பளிக்கக் கேட்டார் ஆட்சியின் தலைவர்!

கூரை பொத்தலானதுதான் மிச்சம்! கொட்டுகிற தெய்வமாக இல்லை; தேளாக இருக்கிறீர் அய்யா; என்று குமுறிக் கிளம்பினர் ஆசிரியர் குழுவினர்!

பேட்டி கிடைப்பதில்லை - கிடைத்தாலும் மிரட்டல் பாணியில், விரட்டும் தோரணையில், முரட்டுக் குரலெடுத்துப் பேசி - முடிவேதுமின்றி ஆசிரியப் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பது! இதனால் பொறுமையிழந்தோர், கோரிக்கைகளை வலியுறுத்தி 6-12-80 அன்று கல்வி மாவட்டம்தோறும் கோரிக்கை விளக்கக் கூட்டங்களை நடத்தினர். பேரணிகளை நடத்தி, மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் முறையீடுகளைத் தந்தனர்.

அடுத்த கட்டமாக 20-10-80 அன்று மாவட்டந்தோறும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களின் முன்னே உண்ணாநோன்பு மேற்கொண்டனர்.

13-2-81 அன்று கல்வி அமைச்சரைக் கண்டு பேசி, தங்கள் கோரிக்கைகளை நிதிநிலை அறிக்கையில் ஏற்று அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இத்தனைக்கும் பிறகே 30-3-81 முதல் தலைமைச் செயலகத்தின் முன்னே அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டு ஆயிரம் பேர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர், அணி அணியாக வந்து அமைதி வழி மறியலில் ஈடுபட்டுத் தமது கோரிக்கையை வலியுறுத்துவதை, அரசு அலட்சியப்படுத்தி விடுவது என்பது மக்களாட்சிப் பண்பல்ல!

ஒரு அமைப்பு, எழுப்புகின்ற எல்லாக் கோரிக்கைகளையும் உடனடியாக ஏற்றுக் கொண்டு விட வேண்டுமென்று நான் கூறிடமாட்டேன்.

அதற்காக எல்லாக் கோரிக்கைகளையும் ஏறெடுத்துப் பார்த்திட மாட்டோம் என்று வீம்பு பேசுவது ஆட்சியாளருக்கு அழகல்ல!

அறப்போரில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களை, இப்போதுகூட அழைத்துப் பேசி - அவர்களது கோரிக்கைகளில் ஏற்கக்கூடியவைகளை ஏற்றுக் கொள்ள அரசு முன்வரலாம்!

நீ என்ன சொல்வது; நாங்கள் என்ன கேட்பது - இது இந்த அரசின் பதிலாக இருக்குமென்று தெரிந்திருந்தும்கூட; சிறையில் வாடும் ஆசிரியர்களுக்காகக் கழகச் சார்பில் நான் என்னுடைய கடமையை இந்தக் கடித வாயிலாக நிறைவேற்றியிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(12.04.1981)

895. சித்திரை நாள் செய்தி!

உடன்பிறப்பே,

நாரதருக்கு ஒரு ஆசை! திடீரெனத் தோன்றி அவரைத் தீயெனப் பொசுக்கிய விரகதாபம்! காமாக்கினியின் எரிமலையாகிவிட்ட அவருக்கு ஏற்பட்ட ஆவல் விபரீதமானது; விசித்திரமானதுங்கூட!

பெண்ணாக மாற வேண்டும் - மாயக் கண்ணனாக உருவெடுத்த திருமாலினைக் கூடவேண்டும்! அந்த இன்பத்தின் எல்லையையே கண்டு கண்டு திரும்பி; அதன் அடையாளச் சின்னங்களாகக் குழந்தைகளையும் பெற வேண்டும்!

மன்மத பாணங்கள் அவரைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து வருத்தின!

நந்தகோபாலா!

நாராயணா!

என்று கூவினார்! உடன் அந்த நீலமேகச் சாமள வண்ணன் கருடாழ்வாரின் தோள் மீது அமர்ந்து; திரிலோக சஞ்சாரியே! என்ன வேண்டும் உனக்கு? எனக் கேட்டருளினான்.

நாரதன் நான் நாரதியாக வேண்டும்! நாராயணனின் நெஞ்சிலாடும் நர்த்தகியாக வேண்டும்! பள்ளிகொண்ட பெருமானே! உன் பள்ளியறைப் பாவையாகி இந்தப் பிறவி உன்னுடன் துள்ளியாடி மகிழ வேண்டும்!

என்னப்பா பிதற்றல்! ஆண்மகன் நீ; பெண் மகளாவதா?

என்ன கண்ணா புதிர் போடுகிறாய்? ஆணாகப் பிறந்த நீயே, மோகினிப் பெண்ணாக மாறி சிவனின் மோகம் தீர்த்து - அய்யனாரை ஈன்றெடுக்கவில்லையா? என்பால் அருள்பாலித்திடு!

இரக்கம் காட்டிடு! இதோ, என் நாடி நரம்புகள் நான் மீட்டும் தம்புராவின் கம்பிகளைவிட வேகமாகத் துடிக்கின்றன பார்!

நாரதரின் வேண்டுகோளுக்கு நாராயணப் பெருமாள் செவி சாய்க்கிறார். நாரதர், நாரதியாகிறார். நந்தவனத்தில் ஆட்டபாட்டம்! அமளிதுமளி! பின்னர் அம்சதூளிகா மஞ்சத்தில்; ஓங்கி உலகளந்த பெருமாள் நாரதியின் உடல் அளந்து மகிழ்கிறார்!

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின் மேல் - மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி - கொத்தலர் பூங்குழல் கோதை நப்பினை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய் - என்று ஆண்டாளம்மையால் புகழப்பட்ட போது அறியேன் இந்தச் சுவையை! அய்யனே! இப்போதன்றோ உணர்கிறேன் இந்த ஒப்பற்ற இன்பத்திற்கு உலகையே விலையாகக் கொடுத்தாலும் போதாதென்று!

நாரதியும் நாராயணனும் கட்டிலறையில் இப்படி உரையாடினார்களோ இல்லையோ; அவர்கள் இருவருக்கும் அறுபது குழந்தைகள் பிறந்தன என்பதும், பிரபவ முதல் அட்சய முடிய பெயருள்ள அந்தக் குழந்தைகளே அறுபது வருடங்கள் என்பதும் புராணக் கூற்று என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அந்த வருடங்களைக் கணக்கிட்டுத்தான் காலக் குறிப்பு வரைகிறோம்!

உலகில் இன்று பொதுவான ஆண்டுக்கணக்காக - கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு என்றும் (கி.மு.) - கிறிஸ்து பிறந்த பின்பு என்றும் (கி.பி.) காலத்தை வகுத்து, சரித்திர நிகழ்ச்சிகளையும் வேறு பல முக்கிய நிகழ்ச்சிகளையும் முறைப்படுத்தி வருகிறார்கள்!

எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு - எந்த ஆண்டில் - ஒரு சம்பவம் நடந்தது என்பதை நினைவு கொள்வதற்கு, அது ஏற்ற முறையாக இருந்து வருகிறது!

ஆனால், தமிழ் வருடங்கள் எனக் கூறப்படும் அறுபது வருடங்களும் தமிழ்ப் பெயர்கள் கொண்டவைகள் அல்ல! அது மட்டுமல்ல; ஒரு சுற்று - அறுபது ஆண்டுகளுக்குள் நடக்கிற நிகழ்ச்சிகளை மட்டுமே ஆண்டின் பெயரைக் கூறி நினைவில் வைத்துக் கொள்ள முடியும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை, தமிழ் ஆண்டு எனக் கூறப்படுகிற அறுபது வருடச் சுழல் கணக்கை

வைத்து எந்த ஆண்டு என்றோ - எத்தனை ஆண்டுகளுக்கு முன் என்றோ உறுதிப்படுத்த முடியாது!

ஒரு ஆண்டுக்கான பனிரெண்டு மாதங்கள் முடிவுற்று - புது ஆண்டு தொடங்குகிறது என்பதை சித்திரை பிறக்கிறது என்று கணக்கிட்டுப் புத்தாண்டு எனக் கூறலாமே தவிர, அறுபதாண்டு என்ற வளையத்தைத் தாண்டி நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளைக் கணக்கிட முடியாத நிலைமைதான் இருந்து வருகிறது!

வள்ளுவராண்டு என நாம் குறிப்பிடுவது கூட, வள்ளுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார் என்பதை நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் ஒன்றே தவிர கி.மு., கி.பி. - என வரையறுத்து இன்று வழக்கிலிருக்கிற தொடர் ஆண்டுக் கணக்குபோல அமைகின்ற ஒன்றாக இன்றைக்கு இல்லை!

எல்லாவற்றையும் மக்கள் ஏற்றிட வேண்டுமென்பதற்காக கடவுள்களைக் கதாநாயகர்களாக்கிப் புராணங்களை ஜோடித்து, அவற்றின் வாயிலாகத் தங்கள் எண்ணங்களைப் புகுத்தியவர்கள்; அறுபது வருடக் கணக்கிற்கும் ஒரு புராணக் கதையைப் புனைந்தார்கள்; அவ்வளவுதான்!

தமிழ் ஆண்டுப் பிறப்பு; ஒரு வருடம் கழித்து அடுத்த வருடம் வந்துள்ளது என்பதைக் குறிக்கின்ற ஒரு நாளாக மட்டுமே கருதப்பட வேண்டியுள்ளது.

பிரபவ வருடத்திலே ஒருவர் பிறந்துள்ளார்! அவருக்கு தாது வருடத்திலே வயது எழுபது ஆகியிருக்கும்! அதாவது ஒரு சுற்று அறுபது முடிந்து பத்து வருடம் அதிகமாகி யிருக்கும்!

அப்படிப் பிரபவ ஆண்டு பிறந்தவரின் வயதை, அவரது முதுமையறியாத ஒருவர் தாது வருடத்திலே கணக்கிட்டால் அவருக்கு வயது பத்துதான் ஆகிறது என்று சொல்வார்! அதாவது; பிரபவ, விபவ, சுக்ல, பிரமோதூத, பிஜோர்ப்பத்தி, ஆங்கிரீச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது - எனப் பத்தாவது ஆண்டு!

எனவே, இந்த அறுபது வருடக் கணக்கு - அறுபத்தொரு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூடக்

கோடிட்டுக் காட்டப் பயன்படாது என்பதைத் தெளிவாக அறியலாம்!

சித்திரை பிறந்தது; இனியாவது நித்திரை கலைந்து எத்தரை வீழ்த்தி - ஏமாளிகளை ஏழை எளியவர்களைக் காத்திட இளைய தலைமுறைக்கு எழுச்சியூட்டுவோம்!

மூட நம்பிக்கை முடை நாற்றமெடுத்த சமுதாயத்தை மாற்றி அமைத்திட, இளைஞர் அணியினர் கிளர்ந்திடுக!

சாதிபேதமற்ற சமத்துவ சமுதாயப் பூங்கா! அங்கே சமதர்மப் பூங்கொத்து!

அந்த இனிய நறுமணம் எங்கும் பரவிட இளைஞர் பட்டாளம் இன்றே விழிப்புற்று எழுக!

இதுவே நான் இக்கடித வாயிலாகத் தரும் சித்திரை நாள் செய்தி!

அன்புள்ள,

மு. க.

(13.04.1981)

896. நாகரீக நாட்களில்தானா வாழுகிறோம்?

உடன்பிறப்பே,

என்றைக்கோ - யாராலோ - எத்தகைய சுயநலத்திற்காகவோ - ஆண்டவன் பெயரால் - சாத்திர சம்பிரதாயங்களின் பெயரால் - அமைக்கப்பட்ட சாதிப்பிரிவுகளின் விபரீத விளைவுகள், இன்றைக்கும் சமுதாயத்தைத் தாக்கிச் சீரழித்து வருகின்றன.

எல்லாத் துறைகளிலும் கைதூக்கிவிடப்பட வேண்டிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும் - சாதி இந்துக்கள் என்றும் அரிஜனங்கள் என்றும் களம் அமைத்துக்கொண்டு, இருதரப்பிலும் உயிர்கள், உடைமைகள் பறிபோகின்ற அளவுக்கு போர்க்கொடி தூக்கிக்கொண்டு புறப்படுவது இன்று நேற்றல்ல; நீண்ட காலமாகவே இருந்து வருகிற வேதனையாகும்!

முற்றும் கற்றவர்களும் - உலகை உணர்ந்தவர்களும் - விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சியை வியந்து உரைப்பவர்களும் - ஏன்; சாதிசமய பேதமற்ற அரசியல் இயக்கங்களில் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களும் கூட; அவர்களது உணர்வில் எங்கேயோ ஒரு துளியிடத்தில் இன்னமும் அகற்றப்படாமல் ஒட்டிக் கொண்டிருக்கிற சாதியென்னும் புற்று நோய்க்கு ஆளாகிவிடுகிறார்களே என எண்ணிடும் போது - இந்தக் கொடுமைதனைக் களைய, இன்னும் எத்தனை ஆண்டுக்காலம் காத்திருக்க வேண்டுமோ என்ற மனக்குமுறல்தான் ஏற்படுகிறது.

நான் எழுதி வெளியிடப்பட்டுள்ள ஒரே இரத்தம் என்ற நூல்; ஏற்கெனவே சாதியின் பேரால் ஒடுக்கப்பட்டுள்ள மக்களுக்கிடையே எத்தகைய போராட்டங்கள் நடை பெறுகின்றன என்ற நெஞ்சுநெக்குருகும் நிகழ்ச்சிகளைத்தான் அடிப்படையாகக் கொண்டது என்பதை நீ அறிவாய்!

அந்த நூலில் - சாதி பேதத்தால் அமைதியற்றுக் குலைந்திடும் மக்களைப் பற்றிய உள்ளக் குமுறலைத்தான் நான் எழுத்துக்களாக்கியிருக்கிறேன்.

இந்த அல்லலும் சமூக அநீதியும் தீர, எத்தனையோ பெரியவர்கள், அறிஞர் பெருமக்கள், தியாகிகள், அரும் பாடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால் பயன்? இன்னமும் முழுமையாகக் கிட்டிய பாடில்லை!

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முதுகுளத்தூர்! மீண்டும் முதுகுளத்தூர் நிகழ்ச்சிகள் சிறிய அளவில்கூட, சிறு பொறியாகக் கூடத் தோன்றிடக்கூடாது என்பதுதான் நமது கவலை! நாட்டில் அமைதி நாடுவோர் அனைவரின் கவலை!

எனினும், மின்னல் பளிச்சிட்டுக் கண்ணைப் பறித்துக் கொள்வது போல இந்த இடைக்காலத்தில் அந்த விரும்பத்தகாத வெறியூட்டும் நிகழ்ச்சிகள், பல இடங்களில் நடந்தேயிருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் கண்ணீர் வடிக்கிறோம்! கவலையால் துவளுகிறோம்!

ஆனால் - அந்த நாச நடவடிக்கைகள், தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன!

இதோ, கடந்த சில நாட்களாக இராமநாதபுரத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும், அதேவிதமான அமளி உருவாகி, மக்கள் நிலை குலைந்து தடுமாறுகிறார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

என்ன காரணத்தால் இந்தக் கலவரம் தொடங்கியது என்ற ஆராய்ச்சிக்கெல்லாம் நான் போக விரும்பவில்லை! அந்த ஆராய்ச்சியே கூட இப்போது அங்கு எழுந்துள்ள காழ்ப்பு உணர்ச்சியெனும் தீயை மேலும் கொழுந்துவிட்டு எரியச் செய்து விடக்கூடும்!

சிறுசிறு நிலைமைகள் - அவை எழுந்தவுடனேயே பேசித் தீர்க்கப்பட்டு, இருசாராரிடையே ஒற்றுமைக்கு வழிவகுக்கப்பட்டால், விபரீதங்கள் ஏற்படாமல் ஓரளவு தடுக்க முடியும்.

ஏதோ ஒரு காரணத்திற்காக எப்படியோ ஏற்பட்ட ஒரு மோதல், எத்தனை வீடுகளில் பரவிய தீயாகி விட்டது! எத்தனை

உயிர்கள் ஊசலாடுகின்றன! எவ்வளவு பொருட்சேதம்! கொலை! கொள்ளை!

அய்யோ, நாம் - நாகரீக நாட்களில்தானா வாழுகிறோம்?

இந்தக் கேள்வியை, அந்தக் கலவரத்தில் ஈடுபட்டோர் மட்டுமல்ல; நாட்டுமக்கள் அனைவருமே தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது!

வீரத்தை இப்படிக் காட்டிக் கொள்வதை, அறிவுலகம் என்றைக்குமே ஏற்றுக் கொள்ளாது!

இது வீரர்களின் பண்பல்ல; விவேகமற்ற கூட்டங்களின் வெறியாட்டம்!

இந்த வெறிச் செயல் அறவே நீங்கிட, அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்!

அதுதான் சாதிப்பிணி போக்கும் அணி!

அரசியல் வேறுபாடுகள் - கட்சி மாறுபாடுகள் - அனைத்தையும் கடந்து - அந்த அணி அமைந்திடல் வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(15.04.1981)

★

இந்தப் பகை உணர்ச்சி தேவைதானா? கல்வியென்னும் பலகணி திறக்கப்பட்டு, அறிவு மணம் பரவிடாத இந்தக் கிராமப்புறங்களில் மட்டுமல்ல; நவீன விஞ்ஞானக் கல்வி முறைகளும் நாகரீகமும் நடை பழகுகின்ற நகர்ப் புறங்களிலே கூட இத்தகைய சாதிக் கலவரங்களைத் தவிர்க்க முடியவில்லை. அறிவு ஒளியை ஏற்றி வைக்கின்ற கல்லூரிகளில் மாணவர்களுக்கிடையே கூட சாதிக் கலவரங்கள் தலைவிரித்தாடுகிற அலங்கோலத்தை இன்னமும் காண முடிகிறது. அந்தக் கலவரங்களில் ஈடுபட்டு இரத்தம் சிந்துவோர் யார்? நாட்டில் ஜாதிகளைப் பிரித்து வைத்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்படுகிற உயர்ஜாதிக்காரர்களா?

இல்லை! இல்லவே இல்லை! யார் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறார்களோ - யார் ஒதுக்கப்பட்டு உழல்கிறார்களோ - யார் பிற்படுத்தப்பட்டு பள்ளத்தில் உருண்டு வீழ்ந்திருக்கிறார்களோ - அவர்கள்தான் ஒருவருக்கொருவர் ஆயுதம் தாங்கிக் கலவரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மானும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று அந்தக் காலத்தில் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டினை எழுதிக்காட்டுவார்கள்! இப்போது மானும் புலியும்கூட வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?

(ஒரே இரத்தம் நூலில் இருந்து)

897. என்மீது அனுதாபப்படு!

உடன்பிறப்பே,

ஒரு நாளேடு - அல்லது கிழமை ஏடு நடத்துவது என்பது எவ்வளவு சிரமமான செயல் என்பதைத் தொலைவிலிருந்து பார்க்கிற உன்னால் அறிந்துகொள்ள முடியாது. அதிலும் நமது கழகச் சார்பில் ஒரு ஏடு நடத்துவதற்கு - எப்படியோ இன்னல்களை ஏற்றுக்கொண்டு நிதி ஆதாரங்களைத் திரட்டினாலும்கூட - அதனைத் திறம்பட நடத்துகிற ஆசிரியர் குழாம் அமைவது என்பது குதிரைக் கொம்பாகவே இருந்து வருகிறது.

வார ஏடோ, நாளேடோ நடத்துவதின் வாயிலாகக் கழகத்தின் கொள்கை விளக்கங்களையும், செயல்முறைத் திட்டங்களையும் நாட்டுக்கு அறிவிக்க வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர்களாக என்னைப் போலச் சிலர், இந்தக் கழகத்தில் இருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் முரசொலி இதழில் என்ன செய்திகள் வருகின்றன; எப்படித் தலைப்புகள் வெளியிடப்படுகின்றன; என்பதிலேயிருந்து பிழை திருத்துகிற பணி உட்பட எல்லாப் பணிகளையும் கவனிக்கிற ஒரு நிலைமைக்கு ஆட்படுத்திக்கொண்டு, பிற்பகல் நேரங்களில் உறக்கம் கூட இல்லாமல் உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டு இன்னமும் உழைத்து வருகிறேன்; ஓய்வில்லாமல்!

சில சமயங்களில் கட்சிப் பணிகள், சட்டமன்றப் பணிகள், இவற்றின் காரணமாக, ஒருநாள் அல்லது ஒரு மணி நேரம் முரசொலி துணை ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருந்து விட்டால், ஏதாவது விபரீதமான செய்திகள் - அல்லது விரும்பத்தகாத கட்டுரைகள் இடம் பெற்று விடுகின்றன என்பதையும் நான் உனக்குச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. என்னைப்போல் எல்லாக் காரியங்களையும் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு

தொய்வில்லாமல் உழைக்கக் கூடியவர்கள் - அல்லது, அத்தகைய உணர்ச்சி படைத்தவர்கள் - முரசொலி அலுவலகத்தில் இல்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ஏப்ரல் 16-ஆம் நாள் முரசொலி (சென்னை பதிப்பு) இதழை நீ பார்த்திருக்கக்கூடும்! கிழக்கு ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் நண்பர் தா.கிருட்டிணன் அவர்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று திரும்பியது பற்றிய செய்தியை முரசொலியில் மூன்றாம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். தா.கிருட்டிணன் அவர்களின் படத்தை பிரசுரிப்பதற்குப் பதிலாக, நெல்லை மாவட்டச் செயலாளர் தூத்துக்குடி கிருஷ்ணன் அவர்களின் படத்தைப் பிரசுரித்திருக்கிறார்கள்!

மதுரைப் பதிப்பு முரசொலியில் இந்தத் தவறு நடைபெற்றிருக்காது என்று நம்புகிறேன்.

சுயமரியாதை இயக்கச் சுடர் சௌந்திரபாண்டியனார் மறைந்தபோது நமது அருமைமிகு என்.வி.என். அவர்கள், அவரது திராவிடன் இதழில் சௌந்திரபாண்டியன் படத்தை வெளியிட்டு, இரங்கலுரை எழுத விரும்பினார். அப்போது நான் ஆசிரியராக இருந்த மாலைமணி அலுவலகத்திற்கு ஆள் அனுப்பி சௌந்திரபாண்டியன் படத்திற்கான பிளாக் அனுப்பி வைக்குமாறு, உரிமையாளர் திரு.டி.எம்.பார்த்தசாரதி அவர்களிடம் கேட்டிருந்தார். அலுவலகத்திலிருந்த துணை ஆசிரியர்கள் ஒரு பிளாக்கை அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் படத்துடன் திராவிடன் இதழில் இரங்கலுரை வெளிவந்து விட்டது.

இதழ் வெளிவந்த மறுநாளே, ஒரு வழக்கறிஞர் திராவிடன் இதழ் மீதும் என்.வி.என். மீதும் வழக்கு தொடுக்க நோட்டீஸ் கொடுத்து விட்டார்.

காரணம் என்ன தெரியுமா? சௌந்திரபாண்டியன் படத்துக்குப் பதிலாக இரங்கல் கட்டுரையில் அந்த வழக்கறிஞர் படம் வெளியிடப்பட்டு விட்டது.

பிறகு, அடுத்த இதழில் என்.வி.என். அவர்கள், திராவிடன் ஏட்டில் - வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்.

அதேபோலத்தான் நெல்லை மாவட்டச் செயலாளர் கிருஷ்ணனுக்கும், கிழக்கு முகவை மாவட்டச் செயலாளர் கிருஷ்ணனுக்கும் வேறுபாடு தெரியாத நிலையில் முரசொலி அலுவலகத்து ஆசிரியர் குழுவினர் தவறு இழைத்துள்ளனர்.

அதற்காக நான் வெட்கப்படுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது!

முரசொலியில் அது வரவில்லை; இது வரவில்லை; என்று என்னிடம் கோபித்துக் கொண்டு குறை கூறுகிறாயே; இப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டு நான், என்னதான் செய்ய முடியும் என்பதை ஒருக்கணம் நீ, சிந்தித்துப் பார்த்தால் என் மீது - அப்போதாவது உனக்கு அனுதாபம் ஏற்படுமென்று நம்புகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(17.04.1981)

898. ஐவர் குழுவும் - அமைப்பு முறை - மாற்றமும்!

உடன்பிறப்பே,

கழக அமைப்புக்களின் செயல்திறனை அதிகப்படுத்தும் வகையிலும், கழகப் பணிகள் இன்னும் பரவலாகவும் விரைவாகவும் நடைபெற மேலும் பலர் பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையிலும் கழகச் சட்ட திட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்கான ஒப்புதலைப் பெறுவதற்குப் பொதுக் குழுவின் முன்னே வைப்பதற்கு ஏற்றவண்ணம் ஆலோசனைகளைக் கலந்து அறிவிக்கக் கழகத்தின் அமைப்புச் செயலாளர்களான நீலநாராயணன், தென்னரசு ஆகியோரையும் - கோ.சி.மணி, கதிரவன், என்.வி.என்.சோமு ஆகியோரையும் கொண்ட ஐவர் குழுவை நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் நியமித்து அறிவித்திருக்கிறார்கள்.

முறைப்படி அவரும் நானும் கலந்து பேசித்தான் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது என்பதை நீ அறிவாய்!

என்னையும் அவரையும் எண்ணெயும் தண்ணீரும் போல இருப்பதாகப் பேட்டிக் கட்டுரைகள் தீட்டும் பெருந்தகையாளர் களுக்காக இதனைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பதவிப் பசையால் நாங்களிருவரும் ஒட்டப்பட்டிருப்பவர்கள் அல்ல என்பதையும், கொள்கையெனும் வச்சிரத்தால் இணைக்கப்பட்டிருப்பவர்கள் என்பதையும் அறியாத - அல்லது அறிய மாட்டாத - அல்லது அறிந்தும் அறியாதவர்களாக நடிக்கும் - கோணல் மதியாளர்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான்; நாங்களிருவரும் கலந்து விவாதித்து எடுத்த முடிவு என்பதனைத் தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன்.

நீலகிரி, குமரி, புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் - பெரும் பரப்பளவைக் கொண்டவைகளாகத் திகழுகின்றன. அண்மையில் கோவை

மாவட்டத்திலிருந்து பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டு அந்தப் பெரிய மாவட்டம் இரு மாவட்டங்களாக ஆக்கப்பட்டுள்ளது.

பல மாவட்டங்கள், (Development District) வளர்ச்சி மாவட்டங்கள் என்ற பெயரால் இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

நமது கழகத்தைப் பொறுத்த வரையிலும் வளர்ச்சி மாவட்டங்களின் அடிப்படையில், மாவட்டக் கழக அமைப்புக்களும் நிர்வாகிகளும் இருந்தால், கழகப் பணிகள் மேலும் தீவிரமாக நடைபெற வாய்ப்பு வசதிகள் கிட்டுமென்ற கருத்தை, பல்வேறு அமைப்புக்களின் நிர்வாகிகள், தலைமைக் கழகத்திற்கு யோசனையாக அறிவித்திருக்கிறார்கள்.

அந்தக் கருத்து அலட்சியப்படுத்தக் கூடியதல்ல! வேறு சில கட்சிகளில் மாவட்ட அமைப்புகள், வளர்ச்சி மாவட்ட அடிப்படையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதைப் போலவே நமது கழகத்திலும் மாவட்ட அமைப்புகள் உருவாகிடச் சட்ட திட்டத்தில் திருத்தம் செய்யலாமா என்பதை இந்த ஐவர் குழுவினர் ஆலோசித்து விரைவில், தலைமைக்கு அறிக்கை தருவார்கள். ஓரிரு வாரங்களில் அறிக்கை தரப்பட்டவுடன் கழகச் செயற்குழு, பொதுக்குழுக்கள் கூட்டப்பெற்று, புதிய திருத்தங்கள் பற்றி விரிவாக விவாதித்து முடிவுகள் எடுக்கப்படும்.

வளர்ச்சி மாவட்ட அடிப்படையில் அமைப்புகள் பிரிக்கப்படும்போது, அந்தந்த மாவட்ட அமைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை எந்த அளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயிப்பதும் முக்கியமான ஒன்றாகும். அதனையும் ஐவர் குழு, ஆழமாகப் பரிசீலித்துக் கருத்துரை வழங்கிட வேண்டும்.

சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சி மாநகரங்களின் மாவட்டக் கழக அமைப்புக்களின் கீழே, பணியாற்றக்கூடிய பகுதிகள், வட்டங்கள் போன்ற கழக அமைப்புக்களிலும் பரவலான வகையிலும் - பணிகள், மேலும் பலருக்கு பகிர்ந்தளிக்கப்படக் கூடிய வகையிலும் - மாறுதல்களைச் செய்யலாமா என்பதையும் இந்த ஐவர் குழு, கலந்து பேசி கருத்தறிவிக்குமாறு வேண்டப் பட்டுள்ளது.

தமிழகமன்னியில், ஏனைய தென்னக மாநிலங்களிலும் - அந்தமான் போன்ற பிற பகுதிகளிலும், கழக அமைப்புகள் மேலும் கட்டுக்கோப்புடன் செயலாற்றுவதற்குத் தேவையான வழி வகைகளைச் சட்ட திட்டத்தில் திருத்தங்களாகக் கொண்டு வருவதற்கும் இந்தக் குழு, முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது, தலைமைக் கழகத்தின் விருப்பமாகும்!

கழக சட்டதிட்டத்தில் எந்தவொரு திருத்தத்தைச் செய்வதானாலும் பொதுக் குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்பது - கழகச் சட்டதிட்ட விதி 36-இல் பிரிவு ஒன்றில் கூறப்பட்டுள்ளதாகும்.

கழக உறுப்பினர் சேர்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகள், தலைமைக் கழகம், விடுத்துள்ள அறிக்கைகளுக்கேற்ப நடைபெற்று வருகின்றன.

கழகத்தின் ஈட்டிமுனைகளென அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் இளைஞர் அணிகளின் தொடக்க விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கழக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, கழகம் கிளைக் கழகத் தேர்தல்களை நடத்துவதற்கு முற்படுவதற்கு முன்பே, இந்த ஐவர் குழுவின் பணிகள் முடிந்து செயற்குழு பொதுக்குழுக்கள் அந்தக் குழுவினரின் கருத்துக்களை விவாதித்திட வேண்டியிருக்கிறது.

எனவே, அமைப்புக்கள்; மேலும் ஊக்கத்துடனும் பரவலாகவும் திறமையுடனும் செயல்பட எத்தகைய மாற்றங்களைச் சட்டதிட்டத்தில் செய்யலாம் என்பது குறித்த கருத்துக்களை அறிவிக்க எண்ணுவோர், உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கு எழுதியனுப்புவது இந்தக் குழுவின் பணிக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

உடன்பிறப்பே, அலைகடல் ஆர்ந்தெழுந்தாலும், எதிர்ப்புப் புயல் சுழன்றடித்தாலும், எரிமலைகள் நெருப்பு மூச்சால் சுட்டுப் பொசுக்கினாலும், அடக்குமுறைகள் நில நடுக்கங்கள்போல அதிர்ந்து எழுந்தாலும் - அவை அனைத்தையும் வெற்றி கொள்ளும் ஹெர்குலிஸ் ஆக நமது கழகம் உயர்ந்து நிற்பதற்குக் காரணமே; நமது கழகத்தின் கட்டுக்கோப்பான அமைப்பு முறைதான்!

இந்தக் கட்டுக்கோப்புக் கழனியில் களைகள் தோன்று வதுண்டு! அவற்றைக் கண்ட மாத்திரத்தில் கெல்லி எறிந்து, உறுதியும் தூய்மையும் கொண்ட உன்போன்ற உடன்பிறப்புக்களின் அமைப்புக் கூடாரமாக - அண்ணன் தந்த கழகத்தை வளர்க்கிறோம்! வலுப்படுத்துகிறோம்! அந்த பணியே நமது வாழ்வின் குறிக்கோள் எனக் கொண்டிடுவோம்!

அப்பணி ஒழுங்குற அமைந்திடவே, இந்த ஐவர் கொண்ட குழு!

அன்புள்ள,

மு. க.

(23.04.1981)

899. யார் செய்யும் தவறு?

உடன்பிறப்பே,

இந்த வாரம் ஆனந்தவிகடன் இதழில் வம்பு நேரம் என்ற பகுதியில் ஒரு துணுக்கு வெளியாகியிருக்கிறது! உண்மையில் நடந்த ஒரு செய்தியைத்தான் துணுக்கு செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி வருமாறு:-

மக்கள்குரல் அலுவலகத்தில் நடந்த ஆப்செட் அச்சு இயந்திர துவக்க விழாவில் மத்திய நிதி அமைச்சர் ஆர். வெங்கட்ராமனும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் பேசிய அமைச்சர் ராஜா முகமது, மாணவர்களுக்கு கோனார் நோட்ஸ் உதவுவது போல, அரசியல்வாதிகளுக்கு டி.ஆர். ஆர். கட்டுரை உதவுகிறது என்று மனம் விட்டுப் பாராட்டினார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசும்போது, அமைச்சர் ராஜா முகமது தவறு செய்துவிட்டதாகவும் பத்திரிகையாளர்கள் அதைப் பெரிதுபடுத்த மாட்டார்கள் என்று தாம் நம்புவதாகவும் சொன்னார், அமைச்சர் என்ன தவறு செய்தார் என்று யாருக்கும் புரியவில்லை.

குலக்கல்வி திட்ட எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் பேரறிஞர் அண்ணாவுடன் நானும் பேசினேன். பிராமண குலத்தைச் சேர்ந்தவரும், சவரத் தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்தவரும், திருமணம் செய்தால் பிறக்கும் குழந்தை எந்தத் தொழிலைச் செய்வது என்று நான் பேசிவிட்டுப் போய்விட்டேன். சவரத் தொழிலாளி என்று சொல்வதற்கு, சாதிப் பெயரைச் சொல்லி விட்டேன். பிறகு பேசிய அண்ணா, சவரத் தொழிலாளி என்று என் பேச்சைத் திருத்தினார்... ஆகவே ஒரு சாதிப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது.

- முதல்வர் இப்படிப் பேசிய பிறகே கோனார் நோட்ஸ் என்று அமைச்சர் ராஜா முகமது சொன்னதையே சுட்டிக் காட்டினார்

என்று புரிந்தது. அந்த நோட்ஸின் பெயரே கோனார் நோட்ஸ் என்று இருக்கும் போது அமைச்சர் பேசியதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லையே!

உடன்பிறப்பே!

அமைச்சர் ராஜா முகமது கோனார் நோட்ஸ் என்று சொல்லி விட்டதால் சாதிப் பெயரைச் சொல்லி விட்டதாக முதலமைச்சர் சங்கடப்பட்டிருக்கிறார் பார்த்தாயா? எந்த முதலமைச்சர்? அண்மையில் வ.வே.சு. அய்யர் விழா! என்று விளம்பரம் செய்து அரசின் சார்பில் நடந்த அந்த விழாவில் கலந்து கொண்டு திருச்சி தஞ்சை சாலைக்கு வ.வே.சு. அய்யர் சாலை என்று பெயர் வைக்கப்படும் என்று அறிவித்த முதலமைச்சர்!

வ.வே.சு. அய்யர் என்றால்தான் தெரியும் - வ.வே.சு. என்றால் யாருக்கும் புரியாது! ஏ.எஸ்.கே.அய்யங்கார் என்ற கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர், சாதி சமயங்களை ஏற்றுக் கொள்ளாத தீவிரவாதியாகத்தான் திகழ்ந்தார்.

பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பெயர்கள் இருக்கக்கூடாது என்ற கருத்தை அநேகமாக எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் அந்தக் கொள்கையை, இனி - வருங்காலத்திலே கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமே தவிர - கடந்த காலத்தில் சாதிப் பெயர்களோடு அறிமுகமாகிப் புகழ்பெற்ற தலைவர்கள், மேதைகள் ஆகியோரின் பெயர்களை திருத்தி அமைப்பது - திருத்தி எழுதுவது என்பது வரலாற்றுக் குழப்பத்தையே ஏற்படுத்தும்.

காங்கிரஸ் இயக்கத் தலைவராக வீறு நடைபோட்ட போது பெரியாரை, நாயக்கர் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். பிறகு அவர் ஈ.வெ. இராமசாமி என்று ஆகி, ஈ.வெ.ரா. என ஒளிவிட்டு, பின்னர் பெரியார் எனப் போற்றிப் புகழப்பட்டார்.

முதலியார் என்ற சாதிப் பெயரால் மட்டும் அழைக்கப்பட்ட கல்யாணசுந்தரனார்; பின்னர் திரு.வி.க. என, தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார்.

இராசகோபாலாச்சாரியார், ராஜாஜி என்று அழைக்கப்பட்டார். முதலில் இராஜகோபாலாச்சாரியாராக இருந்து - சி.ஆர். ஆகி; பின்னர் ராஜாஜியாக விளங்கினார்.

இப்படியும் சில எடுத்துக்காட்டுகள் உண்டு; சாதிப் பெயர் தானாகவே மறைந்து விட்டதற்கு!

ஆனால் காங்கிரஸ் தலைவராக இருந்த ஒருவரை வரதராஜலு என்றால் யாருக்கும் விளங்காது! வரதராஜலு நாயுடு என்றால்தான் விளங்கும்.

தொழில்மேதை ஜி.டி. என்றால் புரியுமா? புரியாது! ஜி.டி. நாயுடு என்றால்தான் புரியும்! கிருஷ்ணமாச்சாரியார் சாலையை கிருஷ்ணமா சாலை என மாற்றி எழுதியிருக்கிறார்கள். யாருக்காவது, அது; டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் என்ற பெயரை நினைவுபடுத்துமா? நிச்சயமாக நினைவுக்கு வராது!

சில மாதங்களுக்கு முன்பு பூங்கா நகர்த் தொகுதியில் ஒரு கூட்டத்தில் பேசினேன். கூட்டம் நடந்த இடத்திற்கு எதிரேயுள்ள தெருவுக்குப் பெயர் அண்ணா பிள்ளைத் தெரு! - எம்.ஜி.ஆர். அவர்களின் சாதி ஒழிப்புத் தீவிரத்தின் காரணமாக, அண்ணா பிள்ளைத் தெரு என்பதில் பிள்ளை என்ற எழுத்துக்களை அகற்றியிருக்கிறார்கள். இப்போது அது அண்ணா தெரு என ஆகியிருக்கிறது! அண்ணாவுக்கு, நாட்டில் ஆயிரம் தெருக்கள், நகர்கள், எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளன! ஆனால் பாவம்; அண்ணா பிள்ளைக்கு அந்த ஒரே தெருதான்! அதிலும் எம்.ஜி.ஆர். கைவைத்துவிட்டாரே; நியாயமா?

கோனார் நோட்ஸ் என்று ராஜா முகமது குறிப்பிட்டது குற்றமாகப் போய் விட்டதாம்! எம்.ஜி.ஆர். சாதி ஒழிப்பில் அவ்வளவு அக்கறையாக இருக்கிறாராம்! உடனே குத்திக் காட்டி விட்டார்! பாவம்; அந்த அமைச்சர்; தனது தலைவரின் மேதாவிலாசத்தை எண்ணி, மனதிற்குள் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருப்பார்! வேறென்ன செய்ய முடியும்; வெளியில்தான் சொல்ல முடியுமா? கோனார் நோட்ஸ் என ஒன்றிருப்பதே முதல்வருக்குத் தெரியாத காரணத்தால் வந்த வினையிது என அந்த அமைச்சர் விளம்பத்தான் முடியுமா?

தேவர் என்றால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரையே குறிப்பது போல் –

நாட்டாரய்யா என்றால் தஞ்சை வேங்கடசாமி நாட்டாரையே குறிப்பது போல் –

கோனார் நோட்ஸ் என்றால் ஐயம்பெருமான் கோனார் எழுதிய நோட்ஸ்களையேதான் குறிக்கும்.

என்ன செய்வது; பெரிய பதவிகளில் இருப்பதாலேயே - எதை வேண்டுமானாலும் பேசலாம் - அதை மக்கள் ஒரு பெரிய தத்துவமாக எடுத்துக்கொள்ள வேண்டும்; என்ற ஒரு நிலை இருக்கும்போது எம்.ஜி.ஆர். இதுவும் பேசுவார்! எதுவும் பேசுவார்! அவர், முதல்வராக இருக்கிறாரே!

சாதிகளும், பேதங்களும் ஒழிய வேண்டுமென்பதில் யாருக்கும் இருவிதமான கருத்துக்கள் கிடையாது!

அதற்காக, சாதிப் பெயர்களுடன் இணைந்து புகழ் பெற்றுவிட்டவர்களின் பெயரை; மக்களிடையே குழப்பங்களுக்கு உட்படுத்தாமல் இருப்பதே நல்லது!

வ.வே.சு. அய்யர் நூற்றாண்டு விழாக் கொண்டாடிய இந்த அரசுக்கு, அய்யர் என்ற சாதிப் பெயரை அகற்றிட இயலவில்லை! அகற்றாததுதான் சரி! இல்லையேல்; இவர்தான் விடுதலைப் போராட்ட வீரர் வ.வே.சு. அய்யர் என்பதும், சேரன்மாதேவியில் குருகுலம் நடத்தியவர் என்பதும், மக்களுக்குப் புரியாமலே போயிருக்கும்.

அன்புள்ள,

மு. க.

(25.04.1981)

900. பாவம்; மக்கள் படும்பாடு!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். டெல்லிக்குச் சென்றது குறித்து ஒரு மாலை ஏட்டில் வந்துள்ள செய்திக் குறிப்பு இது:-

எரி சாராயக் கடத்தல் தொடர்பான பல ரகசியங்களையும் பிரதமரிடம் அவர் எடுத்துச் சொல்லி, தமிழக அரசு விசாரணைக் கமிஷன் அமைத்ததற்கான பின்னணியையும் (எம்.ஜி.ஆர்.) விளக்குவார்.

இந்தத் தகவலை வெளியிட்டுள்ள ஏடு, ஆளும் கட்சிக்குத் தொலைதூரத்தில் உள்ள ஏடல்ல! எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிக நெருக்கமான ஏடு! அமைச்சர்கள் சிலருக்கும் மிக நெருக்கமான ஏடு! தலைமைச் செயலகத்திலிருந்தும், முதல்வர் அலுவலகத்திலிருந்தும் தகவல்களைப் பெறக்கூடிய அளவுக்கு, இந்த ஆட்சியில் செல்வாக்கு பெற்றுள்ள ஏடு! எம்.ஜி.ஆரின் குடும்ப நாளேட்டை விட, இந்த ஏட்டில் வரும் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிய செய்திகள், உறுதியானவை, உண்மையானவை என்று எம்.ஜி.ஆரின் கட்சிக்காரர்களே நம்புகிற அளவுக்கு எம்.ஜி.ஆருடன் தொடர்புடைய ஏடு!

அந்த ஏட்டில்தான், எம்.ஜி.ஆர்.; பிரதமரை டெல்லியில் சந்திக்கும்போது-எரிசாராயக்கடத்தல்குறித்தபலரகசியங்களையும், தமிழக அரசு, கைலாசம் கமிஷனை அமைத்ததற்கான பின்னணியையும் விளக்குவார் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், காலை ஏடுகளில் வந்த செய்திகளைப் பார்த்தால், விஷயமே வேறுவிதமாக இருக்கிறது.

பிரதமரைச் சந்தித்து விட்டு வெளியே வந்த எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து, நிருபர்கள்; எரி சாராய விசாரணைக்

கமிஷன் விவகாரம் பற்றிப் பிரதமருடன் பேசினீர்களா? என்று கேட்டிருக்கிறார்கள்.

மக்களின் பிரச்சினைகளைப் பற்றி மட்டும்தான் நாங்கள் விவாதித்தோம்.

என்று எம்.ஜி.ஆர். பதில் அளித்திருக்கிறார். அவருக்கு மிக நெருக்கமான ஏட்டில் வந்த செய்திக்கும் - எம்.ஜி.ஆர். அவர்களின் பதிலுக்கும், துளிக்கூடச் சம்பந்தமில்லாதது போல் தோன்றுகிறதல்லவா?

திட்டவட்டமாகச் செய்தி வெளியிட்டு, எம்.ஜி.ஆர்., எரி சாராயப் பிரச்சினை குறித்து பிரதமரிடம் விளக்கமளிப்பார் என்று தெளிவாக அறிவித்த அந்த மாலை ஏடு, எம்.ஜி.ஆரின் பதிலைக் கண்டு, நிச்சயமாகத் திடுக்கிட்டிருக்காது.

மக்கள் பிரச்சினை என்பதற்கு எம்.ஜி.ஆரின் அகராதியில் என்ன பொருள் என்று, அந்த ஏட்டுக்கும் தெரியும், பொதுவாக நாட்டுக்கும் தெரியும்! குறிப்பாக சிலருக்குத் தெரியாது; அவ்வளவுதான்!

மாநில சுயாட்சி முழக்கத்திற்கு எதிராக எம்.ஜி.ஆர். எழுப்பிய முழக்கமே மக்கள் சுயாட்சி என்பதுதானே!

அப்பொழுதே மக்கள் எனும் ஒரு பொருளை வைத்துக் கொண்டு, இஷ்டம் போல் உருட்டி விளையாடலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டவராயிற்றே அவர்!

அரசு அலுவலர் கிளர்ச்சி நடத்தினாலும்; ஏன் இன்றைக்கு அவருடன் தோழமை பூண்டுள்ள கட்சிகள் எல்லாம் கூடி முழு அடைப்புப் போராட்டம் நடத்தியபோதும்; அவர்களை மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றுதானே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மிரட்டினார்! அந்த மக்கள், அரசு அலுவலர்களையும், முழு அடைப்புக் கிளர்ச்சி நடத்திய அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் போலீஸ் துணையுடன் அடித்து நொறுக்கிய மக்கள்தானே! யார் அந்த மக்கள்!

சாராய சாம்ராஜ்யத்துச் சிற்றரசர்கள், தேவைப்படும்போது அனுப்பி வைக்கிற குண்டர்களின் பட்டாளம்தானே அந்த மக்கள்!

எம்.ஜி.ஆர். அடிக்கடி உச்சரிக்கும் மக்கள் என்றும் அந்த மாயமந்திரச் சொல் திரைக்குப் பின்னால்தானே -

வருமான வரி கட்டாமல் ஏமாற்றி பிறகு கணக்கில் காட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி எழுபத்தெட்டு லட்ச ரூபாய்க்குள்ள கறுப்புப் பண சொத்துக்களை வருமான வரி இலாக்காவுக்குக் காட்டிய மர்மம் ஒளிந்து கொண்டிருக்கிறது!

மக்கள் எனும் அந்த மாய்மாலத் திரையைப் போட்டுத்தானே; இன்னமும் கணக்கில் காட்டாத கோடிக்கணக்கான கறுப்புப் பணத்தை மறைத்துக் கொண்டு, மகா உத்தமரைப் போல வேடங் கட்டிக் கொண்டு திரிய முடிகிறது!

மக்கள் எனும் கூடையைப் போட்டு மூடித்தானே; வட்டிக்கடை வேந்தர்களிடம் பல சலுகைகளுக்கான உறுதியைக் கூறி, அவர்களை வாழ வைக்க - இருபது லட்ச ரூபாய்களைக் கையூட்டாகப் பெற முடிந்தது!

மக்கள்! மக்கள்! என்று நீலிக் கண்ணீர் வடித்துக் காட்டித்தானே - மூன்று பஸ்களை ஐந்து பஸ்களாக்கி அதற்கென ஒரு கோடி ரூபாய்க் கறுப்புப் பணத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொஞ்சி மகிழ முடிந்தது!

மக்கள் என்ற வாதத்தைக் காற்றிலேயே பல்கேரியா, பால்டிகா, கப்பல்களைச் செலுத்திக் கொண்டு போய் விடலாம் எனத் திட்டம் போட்டு; அதில் கோடிக்கணக்கில் சுருட்டிட முனைந்தது தடுக்கப்பட்ட செய்தி அம்பலமானதும்; வருகிறார் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் விசாரிப்பதற்கு என்று அறிவித்துவிட்டு - அந்த விஷயத்தையே அப்படியே கிடப்பில் போட்டு விட்டிருப்பது உலகறிந்த ரகசியமாயிற்றே!

பாவம்; மக்கள் என்ற சொல், நமது முதல்வரின் வாயில் சிக்கிப் படாதபாடு படுகிறது!

பல மோசடிகளை மறைக்கவும் தாராளமாகப் பயன்படுகிறது!

இப்போது, பல கோடி ரூபாய் எரி சாராய ஊழலை மறைக்கவும் அந்த மக்கள் எனும் புனுகைத்தான் தடவிப் பார்க்கிறார்!

புரையோடி விட்ட புண்! புனுகுப் பூச்சால் ஆறாதது மட்டுமல்ல; புண்ணின் துர்வாடையைக் கூட மறைக்க முடியாது!

எம்.ஜி.ஆர். ஆட்சி, கட்சி, ஊழல்கள் புரையோடி விட்ட புண்! மக்கள் என்ற புனுகுப் பூச்சால் மறைத்திட முனைகிறார்!

அதையும் மீறி நாற்றம் நாசியைத் துளைக்கிறது!

நாலே மாதங்களில் முப்பது லட்ச ரூபாய் கறுப்புப் பணம், வெள்ளைப் பணமாக்கப்பட்ட விபரங்களை நாடறிய வெளியிட்டதுமல்ல; அதை விசாரிக்க வேண்டியவர்கள் விசாரித்துக் கொண்டுமிருக்கிறார்கள்!

இத்தனை கொள்ளைகளையும் மறைத்திட, இனியும் மக்கள் என்ற வசீகர வார்த்தையையே எம்.ஜி.ஆர். நம்பியிருப்பாரேயானால் - ஏமாற்றமெனும் கிடுகிடுப் பள்ளத்தில் வீழ்ந்து விடுவார்! காரணம்; மக்கள் நெடுங்காலத்திற்கு ஏமாளிகளாக இருந்துவிட மாட்டார்கள்! விரைவில் விழித்துக் கொள்வார்கள்!

அன்புள்ள,

மு. க.

(26.04.1‘981)

901. உவகையில் பூத்த உற்சாக மலர்!

உடன்பிறப்பே,

நமது மனம் மகிழும் வண்ணம், பெருமையால் இதயம் பூரித்திடும் வண்ணம், நாடாளுமன்றத்தில் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் நமது கழக உறுப்பினர்கள் பொதுவாக இந்தியத் திருநாட்டில் ஏற்பட வேண்டிய சமுதாயப் பொருளாதார அரசியல் மாற்றங்களைக் குறித்தும், சிறப்பாகத் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசின் துணையோடு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் கருத்துக்களை எடுத்து வைக்கிறார்கள், வாதாடுகிறார்கள். தொடர்புடைய துறை அமைச்சர்களைச் சந்தித்து விளக்கங்களை அளித்து முறையீடுகளைத் தருகிறார்கள்.

சேது சமுத்திரத் திட்டம், கல்பாக்கம், நெய்வேலி, புதிய ரயில் பாதைகள், ரயில் நிலையங்களின் விரிவாக்கம், இந்தியைத் திணித்திட முனைதல் கூடாது என்ற திட்டவட்டமான கருத்து, சென்னைக்குப் பாதாள ரயில் பாதை, விவசாயத் தொழிலாளர் கூலி நிர்ணயம், பதினெட்டு வயது வந்தோர்க்கு வாக்களிக்கும் உரிமை, தமிழகத்திற்கு தேவையான தொழில் திட்டங்கள், இன்ன பிற இன்றியமையாதவை குறித்து நமது உறுப்பினர்கள் டெல்லியில் கொடுக்கும் குரல், எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது என்பதை அவ்வப்போது நாளேடுகளில் கண்டு களிபேருவகை கொள்கிறேன்.

தமிழக சட்டமன்றத்தில் மக்களின் குரலை எதிரொலிக்கும் பணியைக் கழகம் மேற்கொண்டு ஆற்றிடும் விவாதங்களை நாடு போற்றுகிறது. அதைப் போலவே, நாடாளுமன்றத்திலும் நம்மவர் ஆற்றல் ஒளிவிடக் காணுகிறோம்.

ஓரிரு நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி! நாடாளுமன்றச் சபாநாயகர் வெளிநாட்டிற்குச் சென்றுள்ள காரணத்தால் துணைச்

சபாநாயகர் திரு. லட்சுமணன் அவர்கள்தான் அவையை நடத்துகிற பணியை ஆற்றி வருகிறார்.

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சியினர் அந்த மன்றத்திலும், அரசியலிலும் எவ்வளவுகால அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதை நான் எடுத்தியம்பத் தேவையில்லை. அவர்களையும் சரி, அங்குள்ள ஆளுங்கட்சியான காங்கிரசையும் சரி, இங்குள்ள நம்மையும் சரி, உலுக்கிடக்கூடிய ஒரு நிகழ்ச்சி, ஆந்திராவில் நடைபெற்றுவிட்டதாகச் செய்திகள் வந்தன.

போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக பதினைந்து ஆதிவாசிகள் உயிரிழந்தனர் என்பதே அந்தச் செய்தி! நெஞ்சைப் பிழியும் செய்திதான்! காரணம் என்ன சொல்லப்பட்டாலும், பதினைந்து உயிர்கள் ஒரு நொடியில் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாவது என்பது சகிக்க முடியாத வேதனை!

அதுகுறித்து நாடாளுமன்ற எதிர்க்கட்சிகள் அவசரத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதை அப்போதே உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியதாகவும் - மத்திய அரசுக்கு, விபரமான தகவல்கள் கிடைக்காத காரணத்தால் - அவை கிடைக்கப் பெற்றவுடன் எடுத்துக் கொண்டு விவாதிக்கலாமென்றும், அரசு தரப்பில் சொல்லப்பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஒரு மாநிலத்திற்குள், குறிப்பாக ஏப்ரல் பத்தாம் தேதி ராமநாதபுரத்தில் நடந்த கலவரம் குறித்தே நமது மாநில அரசுக்கு விபரமான தகவல் கிடைக்க ஐந்தாறு நாட்கள் போதாமல் - சட்டசபையில் ஏப்ரல் பதினான்காம் தேதி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த அவசரத் தீர்மானம்; சபாநாயகர் அறிவித்தமைக்கு இணங்க மறுநாள்தான் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது! அப்படியிருக்க, ஆந்திர மாநிலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றிய விபரக்குறிப்புகள், அவ்வளவு விரைவில் டெல்லிக்குக் கிடைத்திடக் கூடிய சாத்தியமில்லாமற் போனது ஆச்சரியமல்ல!

உடனடியாக அவசரத் தீர்மானத்தை மக்களவையில் எடுத்திட வேண்டுமென வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டது குறித்தும், துணைச் சபாநாயகர் இலட்சுமணன் அவர்கள், எவ்வளவு பொறுமையாகவும் திறமையாகவும் நடந்து கொண்டார்

என்பது குறித்தும் - தினமணி ஏடு வெளியிட்டுள்ள செய்தியை அப்படியே தருகிறேன்; படித்துப் பார்!

லோக் சபையில் இன்று லோக்தளக் கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும், ஜனநாயக சோஷலிஸ்டு முன்னணியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் சபாநாயகரின் ஆசனத்துக்கு முன்பாக அமைந்த மேடையில் அமர்ந்து சுமார் 2 மணி நேரம் விடாது கோஷங்களைக் கிளப்பி கிளர்ச்சி நடத்தினர். இதனால் சபையில் ஒரே குழப்ப நிலைமை நிலவியது.

ஆந்திராவில் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 15 ஆதிவாசிகள் உயிரிழந்தது பற்றி தாங்கள் கொடுத்துள்ள அவசரத் தீர்மானம் பற்றி உடனே விவாதிக்க வேண்டும் என்று கோரி அவர்கள் இவ்விதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் பலராம் ஜாகர் வெளிநாடு போயுள்ளதால் சபைக்குத் துணை சபாநாயகர் ஜி. லட்சுமணன் தலைமை வகித்துக் கொண்டிருந்தார்.

மேற்படி உறுப்பினர்கள் துணை சபாநாயகரே வெளியேறுங்கள் என்பது உள்பட பல கோஷங்களைக் கிளப்பினர்.

துணை சபாநாயகர் மிகவும் பொறுமைகாட்டி அவர்களை இருக்கைகளுக்குத் திரும்புமாறு பல தடவை கூறினார். அவரது வேண்டுகோள் பலனளிக்கவில்லை. அவரது எச்சரிக்கையும் பலன் அளிக்கவில்லை.

உணவு இடைவேளைக்கு முன்னதாக ஒரு மணி நேரமும், இடைவேளைக்குப் பிறகு ஒரு மணி நேரமும் நிலவிய இச்சம்பவத்தின் போது, எல்.ஐ.சி. விவகாரம் சம்பந்தமாக வலது கம்யூனிஸ்டு, இடது கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு உறுப்பினர்களும் மற்றவர்களும் அவசரத் தீர்மானம் கொண்டு வந்தது நிலைமையை மேலும் மோசமாக்கியது.

இது போதாதென துணை சபாநாயகரைப் பதவியிலிருந்து அகற்றக் கோரி தீர்மானம் கொண்டு வர நோட்டீஸ் அளித்துள்ளதாக ஜார்ஜ் பெர்னாண்டசும், ஜோதிர்மயி பாசுவும் அறிவித்தனர்.

கோஷங்களை எழுப்பிய உறுப்பினர்கள் கடுமையான வார்த்தைகளை கூறியதை துணை சபாநாயகர் பொருட்படுத்தாமல் விட்டார். ஒரு கட்டத்தில் இ.காங்கிரசின் இளம் உறுப்பினர்கள்

எதிர்க்கட்சியினருடன் மோதியபோது துணை சபாநாயகர் அனைவரையும் அமைதிப்படுத்தி நிலைமையைச் சமாளித்தார்.

சென்னைப் பதிப்பு - தினமணி - கடந்த 23-ந் தேதியன்று மேற்கண்ட செய்தியை வெளியிட்டிருக்கிறது.

ஃ துணைச் சபாநாயகர் மிகவும் பொறுமை காட்டினார்.

ஃ கோஷங்களை எழுப்பிய உறுப்பினர்கள் கடுமையான வார்த்தைகளைக் கூறியதைத் துணைச் சபாநாயகர் பொருட்படுத்தாமல் விட்டார்.

இந்தச் சொற்றொடர்களைப் படிக்கும்போது எனக்கு எவ்வளவு சுவையாக இருக்கிறது தெரியுமா?

நமது நண்பர் இலட்சுமணன் இருக்கிறாரே; அவரது இயல்பை நானறிவேன்! இராமாயணத்தில் வரும் இலக்குமணனைப் போலவே மிகுந்த கோபக்காரர்! ஆனாலும்கூட அவர் வகிக்கின்ற பொறுப்பை உணர்ந்து பொறுமையை அணிகலனாகப் பூண்டார் என்பதைப் பாராட்டுவது மட்டுமல்ல - நமதியக்கத்தைச் சாராத ஏடுகள் போற்றிடும்போது - நமக்குத் தனி மகிழ்ச்சியே ஏற்படுகிறதல்லவா?

நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை கழக உறுப்பினர்கள், ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கடமையாற்றுகிறார்கள் என்று கற்பண்டனைய தகவல்கள் என் காதுகளில் விழுகிற போதும், துணைச் சபாநாயகர் திறன் குறித்துத் தேனினுமினிய செய்திகள் இதயத்தைக் குளிப்பாட்டும் போதும் - தமிழகச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்து நம்மவர் ஆற்றிடும் அரும்பணிகளுக்கு உற்ற துணையாக அங்குள்ள உடன்பிறப்புக்களும் விளங்குகிறார்கள் என்ற உவகை எனக்கும் உனக்கும் ஏற்படாதா என்ன?

அந்த உவகையில் பூத்த உற்சாக மலரே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(28.04.1981)

902. இதோ! இதோ!! ஒரு இனத்துரோகம்!!!

உடன்பிறப்பே,

பெரியார் பெயரையும் அண்ணா நாமத்தையும் (?) உதட்டளவில் உச்சரித்துக் கொண்டே இந்தச் சமுதாயத்தைச் சகதியில் அழுத்திடக் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படும் கட்சிதான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் கட்சி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாக நாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது.

இல்லாவிட்டால் எந்த உந்திக் கமலத்தில் உதித்தார்களோ; அந்த உந்திக் கமலத்தையே குத்திக் கிழிக்கும் கொலைவெறிப் பிள்ளைகளைப் போலக் கோரிக்கை வைப்பார்களா?

ஊட்டச் சத்து மிகுந்த பாலை இரு விரல்களால் இடுக்கித் தந்த தாயின் மார்பகங்களையே அறுத்து மகிழும் மதோன்மத்த மக்களைப் போன்றவர்களே டெல்லியிடம் கோரிக்கை வைத்த தமிழக ஆட்சியாளர்கள் என்பதைக் குன்றின் மீது ஏறி நின்று நான் கூறத் தயாராக இருக்கிறேன்.

பெற்றவளின் வயிற்றைக் கிழித்து அவள் குடலை எடுத்து மாலை போட்டுக் கொள்வதில் ஒரு திருப்தியா? அய்யோ! நினைக்கவே நெஞ்சம் கொதிக்கிறதே!

யாரையோ மகிழ்ச்சி கொள்ளச் செய்வதற்காக, மாதாவின் விலா எலும்புகளை உடைத்து, இருதயத்தை வெட்டி எடுத்துக்கொண்டு ஒரு கொடிய மகன் ஓடினானாம்! அப்படி ஓடும்போது, கல் தடுக்கிக் கீழே விழுந்தானாம்! அப்போது அவன் கையில் இருந்த தாயின் இருதயம் அந்த மகனைப் பார்த்து; அப்பா மகனே! காயம் பலமாகப் பட்டுவிட்டதா? என்று பரிவோடும் கலக்கத்தோடும் கேட்டதாம்! இப்படியொரு உணர்ச்சிக் கதையைப் படித்த நினைவு, என்னை விட்டு அகலவில்லை!

அத்தகைய தாயன்பு கொண்ட திராவிடர் இயக்கத்தையே தீர்த்துக்கட்டி விடத் திட்டமிட்டுத் தீர்மானித்துக் கொண்ட வர்கள்; டெல்லியில் நடைபெற்ற ஒரு குழுக் கூட்டத்தில், திராவிடர் கழகத்தையும், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தையும் ஒப்பிட்டுப் பேசி - இரண்டின் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

யார் அவர்கள்?

இன்று அவர்கள் பெற்றிருக்கிற பதவிக்கும் பவிஷுக்கும் எந்த இயக்கம், இரத்தத்தை அருவியாகப் பெருக்கெடுக்கிற அளவுக்கு சிந்திக் கொண்டேயிருந்ததோ - அந்த இயக்கத்தின் உழைப்பால் ஓயாத பணியால் - இன்று உச்சி மாடத்திலே இருப்பவர்கள்!

அவர்கள்தான் உடன்பிறப்பே; உடனடியாகத் திராவிடர் கழகத்தைத் தீர்த்துக் கட்ட வேண்டுமென்று மத்திய அரசிடம் மண்டியிட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிள்ளையார், இராமர் சிலைகளை நாடு முழுதும் நடுவீதியில் உடையுங்கள் என்று பெரியார் அறிக்கைவிட்டு, அவ்வாறே போராட்டம் நடத்தியபோது - அன்றைக்கு மாநிலப் பொறுப்பிலே இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள், திராவிடர் கழகத்தைத் தடை செய்ய ஆணை பிறப்பிக்கவில்லை! பெரியாரையும் அவரது ஆணையையும் எதிர்த்து எந்த நடவடிக்கையும் எடுத்திடவுமில்லை!

தேசியக் கொடியையும் கொளுத்துவோம் என்று திராவிடர் கழகச் சார்பில் பெரியார் அறிவித்தபோது கூட, தேசிய சின்னங்களை அவமதிப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சட்டத்தைக் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தாரே தவிர, திராவிடர் கழகத்தையே ஒடுக்கிவிடும் நடவடிக்கைகளில் அவர் இறங்கிடவில்லை. அந்தச் சட்டமே கூடத் தேவையில்லை; காமராசர் பெரியாரை சந்தித்துப் பேசினால் சுமுகமான முடிவு காணலாம் என்றுதான் சட்டப் பேரவையில் தி.மு.கழகச் சார்பில் அண்ணா அவர்கள் கருத்தறிவித்து அன்றைய காங்கிரஸ் அரசுக்கு ஆலோசனை கூறினார்.

பெரியாரும், அவர் உருவாக்கிய திராவிடர் கழகமும் இருக்கிற காரணத்தால் தான் - அழுத்தப்பட்ட மக்கள் விழிப்புற்றெழ

முடிகிறது என்ற திடமான நம்பிக்கை, பெரியாரைத் தனது அன்பான விரோதியாகக் கருதிய ராஜாஜிக்கும் - பெரியாரின் துணையுடன் தேர்தல் வெற்றிகளை ஈட்டிப் பெரியாரிடம் பெருமதிப்பு கொண்டிருந்த பெருந்தலைவர் காமராசருக்கும் - பெரியாரை விட்டுப் பிரிந்து தி.மு.கழகம் கண்ட பேரறிஞர் அண்ணாவுக்கும் - இருந்தது என்பதற்கு நான் கோடிட்டுக் காட்டிய இந்த நிகழ்ச்சிகள் சரியான எடுத்துக்காட்டுக்களாகும்!

1949-இல் தான் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் கண்டோம்!

இனஉரிமை - சமுதாய மறுமலர்ச்சி - மொழியுணர்வு - இத்தகைய பிரச்சினைகளில் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படக் கூடியவை என்று; தி.மு.க. தொடங்கிய நாளன்று அறிஞர் அண்ணா அவர்கள் பிரகடனம் செய்தார்கள்!

கழக ஆட்சியே பெரியாரின் காலடிக்குக் காணிக்கை யென்று சட்டப் பேரவையில் உணர்ச்சி பொங்கிடக் கூறினார்கள்.

1949-க்கு முன்பு, திராவிடர் கழகத்தின் சார்பில் கருஞ்சட்டைப் படையொன்று அமையும் எனப் பெரியார் அறிவித்தார்.

பிறகு, திராவிடர் கழகத்தினர் அனைவருமே கருஞ்சட்டை அணிய வேண்டுமெனப் பெரியார் விளக்கமளித்தார்.

அண்ணா, அந்த கருத்தை ஏற்கவில்லை! கருஞ்சட்டைப் படை தனியாக இருக்க வேண்டுமே தவிர, திராவிடர் கழகத்தினர் அனைவரும் கருஞ்சட்டை அணியத் தேவையில்லையென்று வாதிட்டார்! வாதிட்டது மட்டுமல்ல; அண்ணா, கருஞ்சட்டை அணியாமலே திராவிடர் கழகக் கூட்டங்களில் கலந்து கொண்டார்! அது, பெரியார் அவர்களுக்கு மிகுந்த கவலையை அளித்தது!

திடீரென அன்றைக்கிருந்த காங்கிரஸ் (ஓமந்தூரார்) அரசு; திராவிடர் கழகத்தின் கருஞ்சட்டைப் படைக்கு, 1948-ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் நாள் தடை விதித்து ஆணை பிறப்பித்தது!

அந்தத் தடையைக் கண்டித்துச் சென்னைக் கடற்கரையில் கூட்டம்! பெரியார் பேசுகிறார்! அதுவரையில் கருஞ்சட்டை

அணியாத அண்ணா அவர்கள், திடீரெனக் கருஞ்சட்டை அணிந்துகொண்டு அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, தடையுத்திரவை எதிர்த்து வீரமுழக்கமிடுகிறார்!

அய்யாவுக்கும், அண்ணாவுக்கும் ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் அப்போது இருந்த போதிலும் - கருஞ்சட்டைப் படைக்குத் தடை என்றதும்; அண்ணா அவர்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை! போர்க் கோலம் பூண்டார்! போர் முரசு கொட்டினார்!

பெரியாரைப் பிரிந்து, புதுக் கழகம் கண்டு - சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதும், திராவிடர் கழகத்திற்கு எதிரான சட்டத்தை அண்ணா அவர்கள் அங்கீகரிக்கவில்லை!

பெரியாரின் கொள்கைகளும் அவர் உருவாக்கிய திராவிடர் கழகமும் எப்படியோ ஒரு விதத்தில் இந்தச் சமுதாய விழிப்புக்குத் தேவையென்ற உண்மையை அண்ணா உணர்ந்திருந்தார்!

அண்ணாவை உணர்ந்துள்ள நாமும் அதை உணர்ந்திருக்கிறோம்!

சேலம் நீதிக்கட்சி மாநாட்டில் அக்கட்சியின் பெயரைத் திராவிடர் கழகமென மாற்றித் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியவரே அண்ணா தானே!

டெல்லிக்குச் சென்று, மத்திய அரசைப் பார்த்து; திராவிடர் கழகத்தை நசுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிய எம்.ஜி.ஆருக்கும், அவர் சொற்படி கேட்டுத் தீரவேண்டிய நிலைக்கு ஆளாகி விட்ட, பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கட்கும்; அந்தப் பழைய வரலாற்று உணர்வுகள் நெஞ்சில் நிழலாடாமல் இருந்திருக்கக் கூடும்! ஆனால் நம்மால் மறக்க முடியவில்லையே!

அண்ணா உருவாக்கிய தி.மு.கழகத்தையே அழித்திட முனைந்தவர்கள்; அண்ணாவின் தீர்மானத்தின் வழியில் அமைந்த திராவிடர் கழகத்தை மட்டும் சும்மா விட்டு விடுவார்களா?

திராவிடர் இயக்கத்திற்குச் சமாதி கட்டிவிட்டு, அவர்கள் சபாஷ் பெறவேண்டிய சந்நிதானங்கள் நிறைய இருக்கின்றனவே!

உடன்பிறப்பே, நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லையே - எவ்வளவு நன்றி கெட்ட குணமும் - இரக்கமற்ற தன்மையும் - இனப்பற்றற்ற நிலையும் - இருந்தால்; இப்படியொரு கோரிக்கையை டெல்லியிலே எழுப்பி - தமிழர்களின் தன்மானம் காத்த ஒரு பேரியக்கத்தைத் தணலில் தள்ளிட முனைந்திருப்பார்கள்!

ஏ, அப்பா! இவர்கள் கையில் இன்னமும் எத்தனை நாளைக்கு இந்த இனம், சிக்கிச் சீரழியப் போகிறதோ; தெரியவில்லையே!

அன்புள்ள,

மு. க.

(29.04.1981)

903. அரசியல் ஆதாயம் தேடிகள் யார்?

உடன்பிறப்பே,

திராவிடர் கழகத்தைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று எந்த அரசும், எந்த ஏடும், பல நாட்களாகப் பல்வேறு விதமான நச்சுப் பிரச்சாரங்களைச் செய்து வந்தனவோ; அந்த அரசின் சார்பில் டெல்லியில் மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்ட கருத்தை அந்த ஏடு; ஏப்ரல் 26-ஆம் நாள் சென்னைப் பதிப்பில் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டு மகிழ்ந்தது. அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தை இதோ அந்த ஏட்டில் வந்தவாறே உன் பார்வைக்கும் மற்றவர்கள் பார்வைக்கும், எம்.ஜி.ஆர். கட்சியிலே இன்னமும் மிச்சமாக இருக்கிற திராவிட இன உணர்வாளர்கள் பார்வைக்கும் இத்துடன் இணைத்துள்ளேன்.

வகுப்பு வெறியைத் தூண்டும் திராவிடர் கழகத்தின் மீது கடும் நடவடிக்கை - மத்திய அரசிடம் தமிழகம் வற்புறுத்தல் - என்ற தலைப்புச் செய்தியுடன்; திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். ஆகியவை மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய அரசு முன்வர வேண்டுமென்று தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் வற்புறுத்தினார். வகுப்பு வெறியைத் தூண்டுவதில் திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். முதலியவை ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

இப்படி; அந்த ஆளுங்கட்சி ஏடு - அமைச்சர்களுக்கு நெருக்கமான ஏடு - பரபரப்பாகச் செய்தி வெளியிட்டிருக்கிறது. டெல்லியில் ஒருமைப்பாட்டுக் குழுவின் ஒரு பிரிவுக் கூட்டத்தில் முதல்வரும், பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டு பேசிய முழுப்பேச்சின் வடிவம்தான் அது!

இந்தச் செய்தி கண்டவுடன், நான் கண்டன அறிக்கை வெளியிட்டேன். அந்த அறிக்கை விபரம் உனக்குத் தெரியும்.

உடனே அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஒரு மறுப்பு அறிக்கை தருகிறார். திராவிடர் கழகத்தைத் தடை செய்யுமாறு டெல்லியில் அவர் பேசவில்லையாம்! திராவிடர் கழகத்தின் மீது மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அதற்கு என்ன பொருள் என்பதை அவர்தான் விளக்க வேண்டும். நான், அது குறித்து சென்னை மயிலாப்பூர் பொதுக் கூட்டத்தில் விளக்கமாகப் பேசியிருக்கிறேன். உடன்பிறப்பே! அதையும் நீ படித்திருக்கக் கூடும்!

ஏப்ரல் 26-இல் தமிழக அரசின் சார்பில் டெல்லியில் பேசப்பட்ட விஷயத்தை கொட்டை எழுத்தில் வெளியிட்ட அதே ஏடு; ஏப்ரல் 28 சென்னை என்று தேதியிட்டு எப்படிச் செய்தி வெளியிட்டிருக்கிறது பார்த்தாயா?

திராவிடர் கழகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று நாங்கள் (எம்.ஜி.ஆர்., பண்ருட்டி) டெல்லியில் பேசியதாக கருணாநிதி கூறுவது அரசியல் ஆதாயம் தேடத்தான் என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார் - என்று அந்த ஏடு - ஆம்; அதே ஏடு - செய்தியைப் பெரிதாக வெளியிடுகிறது!

நான் விடுத்த அறிக்கையில், திராவிடர் கழகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று டெல்லியில் எம்.ஜி.ஆரும், அவர் சொற்படி பண்ருட்டி ராமச்சந்திரனும் வற்புறுத்தியதையும் - திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். இரண்டுமே ஒன்றுதான் என்பது போலப் பேசியதையும் கடுமையாகக் கண்டித்திருக்கிறேன்.

மத்திய அரசு, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று - மாநில அரசு வற்புறுத்தினால்; அதற்கு என்னதான் சரியான அர்த்தம் என்பதை; அரசியல் ஆதாயம் என்ற சமாளிப்புப் போர்வைக்குள் ஒளிந்து கொள்ளப் பார்க்கிற அமைச்சராவது விளக்க வேண்டும்! அல்லது அவரது டெல்லிப் பேச்சுக்கு, அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட - அந்த ஏடாவது விளக்க வேண்டும்!

எப்படியோ தடை விதிக்க வேண்டுமென்று பேசவில்லை என்று மட்டும் கூறித் தப்பித்துக் கொள்ள முயன்றிருக்கிறார்!

தடை விதிக்க வேண்டுமென்று அவர் வெளிப்படையாகப் பேசியதாக - நானும் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை! அமைச்சர் தான் அதைக் குழப்புகிறார்.

ஆனால் திராவிடர் கழகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இவர்கள் டெல்லியில் வற்புறுத்தியதாக வந்த செய்தி - அதுவும் அவர்களது ஆஸ்தான பத்திரிகையிலேயே வந்த செய்தி; அமைச்சரால் மறுக்கப்படவில்லை! அந்தச் செய்தி வெளிவந்த மறுநாளே அந்தப் பத்திரிகையின் செய்தியை அமைச்சர் மறுத்திருக்க வேண்டாமா? இன்னமும் அவர், அந்த ஏடு கொட்டை எழுத்தில் வெளியிட்ட செய்தியை மறுக்காத மர்மம் என்ன?

உடன்பிறப்பே, இந்த முரண்பாட்டை நாடு புரிந்து கொண்டால் அரசியலில் ஆதாயம் தேடுகிறவர்கள் யார் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

அன்புள்ள,

மு. க.

(30.04.1981)

904. என்ன பொருளோ; யார் கண்டது?

உடன்பிறப்பே,

முதலில் ஒன்றைப் பேசுவது - பிறகு அப்படிப் பேசவில்லை என்று கூறுவது கோழைத்தனமாகும்.

இந்தப் பொன்மொழியை உதிர்த்தவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களாவார்கள். அவையில் அமளிக்கு வித்திட்டதே இந்தப் பொன்மொழிதான் என்பதையும் அவரது மனச்சாட்சி இடித்துரைத்துக் கொண்டேதான் இருக்கும்.

சரி; அது போகட்டும் - இந்தப் பொன்மொழியை வழங்கியவர்; எவ்வளவு வேகமாகத் தன்னை மறந்து விட்டிருக்கிறார் என்பதை, அவருக்கு நினைவுபடுத்த வேண்டியது நமது கடமையல்லவா?

பொறுப்பிலே இருப்பவர்களோ, இல்லாதவர்களோ, தாங்கள் பேசியதாக ஏதாவது ஒரு தவறான கருத்து வெளியிடப்படுமேயானால் - அதனை மறுத்துரைக்க அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள்.

இங்கே எழுந்துள்ள பொன்மொழிப் பிரச்சினையின் விவகாரமே வேறு!

முதலில் ஒன்றைச் சொல்வது; பிறகு அப்படிச் சொல்லவில்லை என்று கூறுவது - கோழைத்தனமாகும் என்பதுதான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் அண்மைக்காலத்து ஆழமான அறிவிப்பாகும்!

உடன்பிறப்பே, முதலில் ஒன்றைச் சொல்லி விட்டு - பிறகு அதைச் சொல்லவே இல்லையென்ற கலையில் யார் வல்லவர் என்பது ஊரறிந்த செய்தி!

நெருக்கடி காலம் முடிவுற்று நடைபெற்றப் பாராளுமன்றத் தேர்தலின்போது - மொரார்ஜி தேசாய் அரசாங்க உத்தியோகஸ்தராக

இருந்தபோது லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்! அவரை இந்தியாவின் பிரதமராக்கலாமா? என்று நூற்றுக்கணக்கான தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசியவர் எம்.ஜி.ஆர்.!

தேர்தல் முடிந்து, மொரார்ஜி பிரதமரானதும் - தேர்தல் நேரத்தில் மொரார்ஜியைப் பற்றிப் பேசியதை மறுத்து - மன்னிப்புக் கேட்டு - அறிக்கை வெளியிட்டவரும் எம்.ஜி.ஆர். தான்!

பரவாயில்லை; மொரார்ஜி பிரதமராகி மிரட்டியதும் - எம்.ஜி.ஆர். தனது தவறைத் திருத்திக் கொண்டார் என்ற அளவில் அதை விட்டு விடலாம்!

உலகத் தமிழ் மாநாட்டு முகப்பில் சென்னை அண்ணா மேம்பாலத்தில் உள்ள குதிரைச் சிலைகள் இரண்டும் எடுத்துச் செல்லப்பட்டு மதுரையில் வைக்கப்படும் என்று எம்.ஜி.ஆர். மதுரையில் அறிவிக்கப் போகிறார் என ஒரு பத்திரிகை, கட்டியம் கூறி செய்தி வெளியிட்டு - அந்த ஏடு குறிப்பிட்ட அதே தேதியில் மதுரையில் எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையில் உள்ள குதிரைச் சிலைகள் மதுரை மாநாட்டில் கொண்டு வந்து வைக்கப்படும் என்றும் அறிவித்து - அதைத் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு மேலாக எதிர்ப்புக் கருத்துக்களும், ஆதரவு கருத்துக்களும் பரிமாறப்பட்டு - குதிரைச் சிலைகளை மதுரைக்குக் கொண்டு போய் வைத்தே தீருவேன் என அறைகூவல் விடுத்து முழங்கிக் கொண்டிருந்துவிட்டு, திடீரென ஒருநாள் குதிரைச் சிலைகளை மதுரை மாநாட்டில் வைப்பதாக நான் எப்போது சொன்னேன்? என்று எதிர்க் கேள்வி கேட்டாரே; அதை - யாராவது கோழைத்தனமென்று எம்.ஜி.ஆர். மொழியில் குறிப்பிட முடியுமா?

வீராதி வீரர் வெளியிட்ட மறுப்பல்லவா அது? அலெக்ஸாண்டர் அறிவானா அந்த வீரத்தை! நெப்போலியனின் நெஞ்சில் தோன்றியதுண்டா அந்த வீரம்!

முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு; பிறகு அப்படிச் சொல்லவில்லையென்பது கோழைத்தனம்.

இது முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் பொன்மொழி! நான் அவரைக் கோழையென்று கூறமாட்டேன்! அவரது பொன்மொழியை அவருக்கு நினைவூட்டுகிறேன் அவ்வளவுதான்!

உலகத் தமிழ் மாநாட்டில் பேசிய கேரள முதல்வர் நாயனார் அவர்கள், இந்தி மொழி மறைமுகமாகத் திணிக்கப்படுவதைக் கண்டித்தார். அவருக்குப் பிறகு பேசிய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தி திணிக்கப்பட மாட்டாது எனப் பிரதமர் இந்திரா காந்தி கூறியுள்ள உறுதிமொழியை நம்ப வேண்டும் என்று நாயனாருக்கு மறுப்பும் விளக்கமும் அளித்தார்.

இந்திரா காந்தி; தேர்தல் நேரத்தில் இந்தி திணிக்கப்படமாட்டாது என அளித்த உறுதிமொழியை நம்பக்கூடாது எனச் சொன்னீர்களேயென்று சபையில் கேட்டபோது; மாநிலக் கட்சிகள் கூடாது என்று இந்திரா காந்தி பேசினார். அந்தக் கோபத்தில் கூறினேன் என்று முதல்வர் எம்.ஜி.ஆர். புது விளக்கமளித்தார்!

உடன்பிறப்பே! இவரது கட்சி மாநிலக் கட்சியே அல்ல! அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்! பிறகேன் இவருக்குக் கோபம் வந்ததோ தெரியவில்லை! மாநிலக் கட்சிகள் கூடாது என்று என்றால் தி.மு.கழகத்துடன் இந்திரா காங்கிரஸ் உறவு கொண்டிருக்குமா? அது வேறு விஷயம்! இப்போது நான் பிரச்சினைக்கு வருகிறேன்.

ஜனவரி மாதம் மதுரைத் தமிழ் மாநாட்டில் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் மொழி குறித்த உறுதிமொழியை நாயனார் அவர்களுக்கு நினைவுபடுத்திய எம்.ஜி.ஆர். அவர்கள்; மார்ச் மாதம் அவரது கட்சிச் செயற்குழு அல்லது பொதுக்குழுவில் - இந்தி திணிக்கப்படுகிறது என்று திடீரெனத் தீர்மானம் போட்டு அறிவித்தார்!

இடையில் எரி சாராய ஊழல் குறித்து மத்திய அரசு விசாரணைக் கமிஷன் அமைக்கும் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர்கள் அறிவித்ததைத் தமிழ்நாட்டு மக்கள் நினைத்துப் பார்த்துக் கொண்டால், எம்.ஜி.ஆர். கட்சியின் திடீர்த் தீர்மானத்திற்குக் காரணம் புரிந்துவிடும்.

முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு; பிறகு அப்படிச் சொல்லவில்லையென்பது கோழைத்தனமாகும்.

எம்.ஜி.ஆரின் பொன்மொழியிது! இடையிடையே மறந்துவிடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்க!

அமைச்சர் ஒருவர், இந்திரா அம்மையாரையும் - மத்திய அமைச்சர்களையும், கடுமையாக விமர்சித்துக் கூட்டத்தில் பேசி எல்லா ஏடுகளிலும் வெளியாகிறது! அமைச்சரின் பேச்சு குறித்து மதுரை நிருபர்கள் எம்.ஜி.ஆரிடம் கருத்து கேட்கிறார்கள்! ஆக்ஷன் என ஒன்று இருந்தால் ரீ ஆக்ஷன் இருக்கத்தான் செய்யும் என முதல்வர் எம்.ஜி.ஆர்., தனது சக அமைச்சருக்குச் சபாஷ் கூறுகிறார்! பாபநாசம் சென்று முதலமைச்சரே ஒரு அரசு விழாவில் திரு. மூப்பனார் அவர்களையும் காங்கிரசாரையும் மறைமுகம் என்ற பெயரால் வெளிப்படையாகத் தாக்குகிறார்!

தொடர்ந்து காங்கிரசாரின் எதிர்ப்பு வலுக்கிறது! சென்னை நிருபர்களைச் சந்திக்கிறார்; மதுரையில் நான் ஆக்ஷன் ரீ ஆக்ஷன் என்று சொன்னது, கருணாநிதியைப் பற்றித் தானே தவிர - காங்கிரஸ் தலைவர்களைப் பற்றியல்ல; என்று பதில் அளிக்கிறார்.

முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு; பிறகு அப்படிச் சொல்லவில்லையென்பது கோழைத்தனமாகும்.

முதல்வரின் பொன்மொழியிது! செங்குட்டுவன், கரிகால் சோழன், இராசராசன், தலையாலங்கானத்து நெடுஞ்செழியப் பாண்டியன் - இவர்களது வீரமெல்லாம் இவர் முன்னே தூள்! தூள்! தூளேதான்!

அண்ணாவைக் கொலை செய்ய முயற்சித்தவர் தான் கருணாநிதி என்ற கொடுஞ்சொற்களை நெல்லைப் பொதுக்கூட்டத்தில் இதே எம்.ஜி.ஆர். தான் அண்மையில் பேசினார். செய்திகள் வந்தன! முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அந்தப் பேச்சு டேப்பிலும் பதிவாகியிருக்கிறது! அவரது பேச்சைக் கண்டித்து நான் காஞ்சீபுரத்தில் பேசி, அவர் மீது வழக்குத் தொடருவேன் என்று அறிவித்ததும்; மறுநாளே நெல்லைக் கூட்டத்தில் அப்படிப் பேசவே இல்லையென்று எம்.ஜி.ஆர். மறுப்பு அறிக்கை வெளியிட்டு விட்டார். முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு; பிறகு அப்படிச் சொல்லவில்லையென்று கூறுவது கோழைத்தனம்.

எம்.ஜி.ஆர். அருளிச் செய்த பொன்மொழியிது! அசோகன், கனிஷ்கன், சந்திரகுப்தன் ஆகியோர் வீரத்தையும் எம்.ஜி.ஆரின் வீரத்தையும் தராசில் போட்டு நிறுத்தால் - அவர்களது வீரம், இவரது வீரத்தின் முன்னால் எடைக்கு நிற்க முடியுமா? முடியவே முடியாது!

காஞ்சீபுரம் அண்ணா நினைவுப் புற்று நோய் மருத்துவமனைத் திறப்பு விழாவில் - நண்பர் அன்பரசு, எம்.பி. அவர்கள், பேசாத ஒன்றைப் பேசியதாகக் கூறி - அவரையும் அந்த அரசாங்க விழாவில் தாக்கி - இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. பற்றியும் அவதூறு கூறி - அது குறித்து காங்கிரஸ் துணைத் தலைவர் நண்பர் சுந்தரராஜன், நண்பர் சித்தன், ரகுமான்கான் ஆகியோர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தபோது; அன்பரசு பேசியதால்தான் பேசினேன்; அவரது அந்தப் பேச்சு டேப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறி, டேப்பையும் எடுத்துக்காட்டி - காஞ்சி விழாவில் இந்திரா காங்கிரஸ் எம்.பி. பேசியது என்ன? டேப்பைக் காட்டி முதல்வர் விளாசல் என அவர்களது குடும்ப ஏட்டிலேயே செய்தி வெளியிடப்பட்டு - மற்ற ஏடுகளிலும் செய்தி வந்து - அந்த டேப்பைப் போட்டுக் காட்டுக; எனச் சபையில் நான் கேட்டவுடன் அது அன்பரசு பேச்சு அல்ல! எம்.ஜி.ஆராகிய என் பேச்சுப் பதிவான டேப்பு என்று கூறி - காஞ்சி விழாவில் அன்பரசு பேசாததைப் பேசியதாக ஒரு தவறான தகவலை முதல்வர் சபையில் அறிவிக்கலாமா எனக் கேட்டபோது - அதற்கு நான் சொல்ல வேண்டிய இடத்தில் பதில் சொல்வேன் என சமாளிக்கப் பார்த்து, நீங்கள் தவறான தகவல் தந்தது இந்தச் சபையில்தான். எனவே இங்கேதான் பதில் சொல்ல வேண்டும் என்று நான் திரும்பக் கேட்டதற்கு நழுவிக் கொண்டு போய் விட்டாரே, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அதுபற்றி இப்போது அவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா?

முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு; பிறகு அப்படிச் சொல்லவில்லையென்று கூறுவது கோழைத்தனமாகும்.

அவர் திருவாய் மலர்ந்தருளிய இந்தப் பொன்மொழி; அண்மையில் சட்டப் பேரவை அமளியையொட்டி அனைத்து ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது!

இன்னும் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உண்டு! ஏடு கொள்ளாது என்பதால் இத்துடன் நிறுத்துகிறேன்.

கோழைத்தனம் என்பதற்கு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் அகராதியில் என்ன பொருளோ; யார் கண்டது?

அன்புள்ள,

மு. க.

(03-05-1981)

905. கையில்லாத ஊமையோ காவல்துறை?

உடன்பிறப்பே,

திருத்தணி என்றாலே முருகன் கோயில் நினைவுக்கு வருவதுபோல் - எல்லைப் போராட்டமும் அதன் தளபதியாகப் பொறுப்பேற்றிருந்த நண்பர் விநாயகமும் நினைவுக்கு வருவதுபோல் - அந்த ஊர் ஆலயத்திற்கு சங்கராச்சாரியார் வழங்கிய தங்கத்தால் ஆன வேல் இந்த ஆட்சியில் காணாமற்போனது நினைவுக்கு வருவதுபோல் - உரிய அதிகாரி போய்ச் சேருவதற்குள் 1980 ஆகஸ்டு மாதம் உண்டியல் உடைக்கப்பட்ட ஊழல் நிகழ்ச்சி நினைவுக்கு வருவது போல் - ஆலய விடுதியில் ஆரணங்கு ஒருத்தியின் பிணம் அழுகிக் கிடந்தது என்ற அண்மைக்காலத்துச் செய்தி நினைவுக்கு வருவதுபோல் - 1972-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். கட்சியினர், மாநில முழுவதும் பஸ்களைக் கொளுத்தியதைத் தொடர்ந்து, திருத்தணி கூட்டத்திற்குப் பேசச் சென்ற முன்னாள் அமைச்சர் கவிஞர் வேழவேந்தன் அவர்களின் காரின் பெட்ரோல் டாங்க் மூடியை அகற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி, அந்தக் காரைச் சாம்பலாக்கி விட்ட நிகழ்ச்சியும், நினைவுக்கு வரத்தான் செய்யும்!

வன்முறைச் செயல் புரிந்தோர் மீது கடும் நடவடிக்கை - கொடும் வழக்கு - என்றெல்லாம் இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிற முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., 1972-ஆம் ஆண்டு தனது மன்றத்து ரசிகர்களைக் கொண்டு நடத்திய வன்முறைச் சேட்டைகள் கொஞ்ச நஞ்சமல்ல! அவரது கூட்டத்தினரால் எரிக்கப்பட்ட பேருந்துகள், மற்றும் அரசுடைமைகள், எவ்வளவு என்ற கணக்கையும், பல லட்ச ரூபாய் இழப்பு என்ற தகவலையும் இன்றைக்கு எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் வீற்றிருப்பவர்களே; அன்றைக்குக் கழக அமைச்சர்களாக இருந்து சட்டப் பேரவையில் அறிவித்திருக்கிறார்கள்.

அன்று தொடங்கிய வன்முறைச் செயல்கள் இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. தங்கள் வன்முறையாட்டத்தை நடத்திட யாரும் எதிர்க்கட்சிக்காரர்கள் கண்ணில் தென்படாவிட்டால் தங்களுக்குள்ளாகவே அந்த வெறியாட்டத்தை நடத்திக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கி - சில நாட்களுக்கு முன்பு நாகர்கோயிலில் ஒருவரையும், வடஆற்காட்டில் ஒருவரையும் கொலை செய்து விட்ட நிகழ்ச்சிகள், எம்.ஜி.ஆர். கட்சியின் வரலாற்றுத் துணுக்குகளாகி விட்டன.

இதோ; அதே திருத்தணியில் கழகப் பொதுக் கூட்டத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு, எம்.ஜி.ஆர். கட்சியினர் பெரும் கலவரத்தை நடத்தியுள்ளனர். நாடாளுமன்றக் கழக உறுப்பினர் நண்பர் நாகரத்தினம் அவர்களை; அவரது காரைக் கொளுத்துவதின் மூலம் அவரையும் தீயில் கருக்கிடத் திட்டம் தீட்டிச் செயல்பட்டிருக்கின்றனர். நீண்ட நேரம் அமளி நடைபெற்றும்கூடக் காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுத்திட முன்வராமல் கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்தனர் என்ற செய்தியும் வந்துள்ளது.

கழகத்தினரும், இந்திரா காங்கிரஸ் நண்பர்களும் - மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டு, நண்பர் நாகரத்தினம் எம்.பி. அவர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

கலவரம் நடந்து ஓய்ந்து - காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து - அதன் பிறகு மீண்டும் கூட்டம் நடைபெற்றிருக்கிறது!

திருவில்லிபுத்தூர் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பும் போது காரோடு வைத்துக் கொல்லப்பட்டான் மதுரை மழலை இளஞ்செழியன்!

அ.தி.மு.க.வைச் சேர்ந்த காண்ட்ராக்டர் புட்லூர் தண்டபாணி, அ.தி.மு.க. பெரும் புள்ளிகளாலேயே கொலை செய்யப்பட்ட விவரங்கள், சட்டப் பேரவையிலேயே ஆதாரபூர்வமாகத் தரப்பட்டு ஆண்டுகள் இரண்டும் ஓடிவிட்டன!

மதுராந்தகத்தில் ஒரு பெரும்புள்ளியும் சம்பந்தப்பட்டு, ஞானசவுந்தரி என்ற பெண், எம்.எல்.ஏ. அலுவலகத்தில் கொலை செய்யப்பட்டாள் என்ற செய்தியை மத்திய, மாநில அரசுகளுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலாளர்

மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும், நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் அன்பரசு அவர்களும், கோரிக்கை விடுத்தும் - சட்டப் பேரவையில் எடுத்துரைத்தும் கூட - ஏதோ கண்துடைப்பு நடவடிக்கைகளை மாநில அரசு எடுப்பது போல் நடிக்கிறதே தவிர - இன்னமும் வெளியே குதூகலமாகத் திரிந்து கொண்டிருக்கிற குற்றவாளிகள் மீது கை வைக்காமலே அவர்களைக் காப்பாற்றி கொண்டிருக்கிறது!

நான் குறிப்பிட்டுள்ள இந்த நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, ஆயிரக்கணக்கான வன்முறை நிகழ்ச்சிகள் - எண்ணற்ற கொலைகள் - சட்டம் ஒழுங்கு அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகள்; இன்றைய ஆளுங்கட்சியினரால் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன!

இத்தனையும் காவல்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும்கூட அவர்கள் கண்மூடி மௌனிகளாகவே காட்சி தருகின்றனர்.

பாறையில் வெண்ணெய்! வெயிலோ சுட்டெரிக்கிறது! வெண்ணெய் உருகி விடாமல் பாதுகாப்பதற்கு இருப்பவனோ; இரு கைகளுமில்லாதவன்! விஷயத்தை யாரிடமாவது கூவிச் சொல்வதற்கு வாயுமில்லாத ஊமையன்கூட அவன்! இப்படி ஒரு இலக்கியப் பாடல் உண்டு!

அந்தக் கையில்லாத ஊமையராக ஆகிவிட்டதோ தமிழ்நாட்டுக் காவல்துறை?

சட்டம் ஒழுங்கு அமைதி - பாறையில் உருகி ஓடும் வெண்ணெய்தானோ இனி மேலே?

இந்தக் கேள்விகள் மக்கள் உள்ளத்தில் எழுவது இயற்கைதானே!

அன்புள்ள,

மு. க.

(04-05-1981)

906. கடலூரில் ஒரு கர்ச்சனை(?)

உடன்பிறப்பே,

சிறிய அளவில் எழுகிற பிரச்சினைகளைக் கூட குரங்குப் புண்ணாக ஆக்குவது என்று கூறுவார்களே; அதுபோலப் பெரிய பிரச்சினைகளாக ஆக்கிக் கொள்வதில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஈடாக யாரையும் கூற முடியாது!

அரசு ஊழியர்கள், கோரிக்கை வைத்தால், ஒருமுறைக்குப் பலமுறை அவர்களை அழைத்துப் பேசி பிரச்சினையை எப்படியாவது தீர்த்து வைத்திட முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக - கடலூரில் போய் ஒரு பொதுக்கூட்டத்தில் நின்று கொண்டு;

உங்களுக்குச் சம்பளம் கொடுக்கும் மக்கள், குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்கிறார்கள். ஆனால் நீங்களோ நவீன ஓட்டலில் காபி குடிக்கப் பணம் வேண்டுமென்கிறீர்கள். இது நியாயமா?

என்று கேள்வி கேட்டுக் கேலி பேசியிருக்கிறார்.

அரசு ஊழியர்கள் சார்பில் யாராவது திருப்பிக் கேட்டால் அதற்கென்ன பதில் சொல்லுவார்?

மக்கள் குடிக்க வேண்டுமென்று தண்ணீர் தானே கேட்கிறார்கள்; நீங்கள் ஏன் கள்ளுக்கடை சாராயக் கடைகளைத் திறந்துவிட்டு அந்தத் தண்ணீரைக் குடியுங்கள் என்று கூறுகிறீர்கள்?

இப்படியும் கேள்வி எழுமல்லவா?

உங்களுக்குச் சம்பளம் கொடுக்கும் மக்கள்; என்று எங்களையும் மக்களையும் மோத விட முனைகிறீர்களே; அமைச்சர்களாகிய உங்களுக்கும் சேர்த்துத்தானே அந்த மக்கள் சம்பளம் கொடுக்கிறார்கள்; அந்த மக்கள் பணத்தை

பல்கேரியா பால்டிகா கப்பல் பேரத்தில் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டினீர்களே நியாயமா? எரி சாராய ஊழலில் பல கோடியைச் சுருட்டிக் கொண்டீர்களே நியாயமா? பஸ் முதலாளிகளிடம் ஒரு கோடியை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டீர்களே, நியாயமா? பத்திரிகை அச்சிடும் காகிதத் தொழிற்சாலை தொடங்குவதாகக் கூறி, இருநூறு கோடி ரூபாயில் அந்த அரசுத் தொழிற்சாலைக்குத் திட்டம் தீட்டி, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழில் நுட்பம் மெக்ஸிகோ நாட்டில் இருப்பதாகத் தெரிவித்து - அதற்காக அங்கே சுற்றுப் பயணம் நடத்தி - ஏற்கெனவே தோல்வியுற்ற அந்தத் தொழில் நுட்பத்தை தமிழ்நாட்டு மக்களின் தலையில் கட்டி, அரசு ஆலைக்கு ஒரு தனியாரை - பிரபல தொழில் அதிபரை தலைவராக்கி - அந்த முயற்சியின் பெயராலும் பெரும் பணம் திரட்டிக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறீர்களே; இது நியாயமா? பஸ் ரூட் என்றும், சேசிஸ் என்றும், மருத்துவக் கல்லூரி தேர்வு என்றும், கிராம அதிகாரிகள் வேலை என்றும், ஆளுங்கட்சிக்காரர்களைப் பணத் தோட்டத்தில் மேய விட்டிருக்கிறீர்களே; இது நியாயமா?

இப்படியும் முதலமைச்சரின் கேலியால் சினங்கொண்ட அரசு ஊழியர்கள் வினாக்களை தொடுக்கலாமல்லவா?

நவீன ஓட்டல்களில் அரசு ஊழியர்களாகிய நாங்கள் மட்டும் காபி சாப்பிடக்கூடாது! ஆளுங்கட்சி அமைச்சர்கள் முதல் அமைப்பாளர் வரை - எத்தனை எத்தனை நவீன நவீனமான ஓட்டல்களில்... நாளொன்றுக்கு எவ்வளவு வாடகை கொடுத்து - என்னென்ன விதமான பானங்களையெல்லாம் சாப்பிடுகிறார்கள் - இந்தச் செய்திகள் மக்களுக்குத் தெரியாமலா இருக்கின்றன? அந்த மக்கள் தரும் வரிப்பணத்தில் தானே இத்தனை கூத்துக்களும் நடைபெறுகின்றன! நவீன ஓட்டல்களில் யாரும் காபி சாப்பிடக் கூடாது; தெரு முனைகளில் உள்ள டீக்கடைகளில்தான் சகலமான ஜனங்களும் தேநீர் அருந்த வேண்டுமென ஒரு சமத்துவ சமதர்மச் சட்டம் போட்டு நவீன காபி ஓட்டல்களை மூடிவிட இந்த அரசு தயாராக இருக்கிறதா?

காபி சாப்பிடுவதைக் கேவலமாகவும் கேலியாகவும் பேசிவிட்ட முதல்வரைப் பார்த்து, அரசு ஊழியர்கள் இதுபோன்ற கேள்வி எழுப்பிட எவ்வளவு நேரமாகும்!

உடன்பிறப்பே, முதல்வர் கடலூரில் அத்துடன் நிறுத்தவில்லை!

ஏழைகளுக்கு நன்மை செய்வதற்காகப் பினாமி நிலங்களை ஒழிக்கச் சட்டம் கொண்டு வந்தோம்! அது ஜனாதிபதி கையெழுத்துக்கு அனுப்பப்பட்டது, இன்னமும் வரவில்லை. நாங்களும் திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டேயிருக்கிறோம்.

- என்று பேசியிருக்கிறார், மே மாதம் இரண்டாம் தேதி இரவு! கடலூரில்!

ஆனால் ஏப்ரல் 29-ஆம் தேதி பி.டி.ஐ. செய்தி நிறுவனம் அளித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் ஏப்ரல் 30-ஆம் தேதி பின்வரும் செய்தி வெளியாகியிருக்கிறது.

T.N. LAND BILL RETURNED FOR REVIEW

New Delhi, April 29 - (P.T.I.)

The President has not given his assent to the Tamil Nadu Land Reforms Bill and the State Government has been asked to further examine certain legal as well as policy aspects of the bill, Minister of State for Home P.Venkata Subbiah, told Mr.Era.Anbarasu in the Lok Sabha today.

தமிழ்நாடு அரசின் நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் சில குறிப்பிட்ட சட்ட அம்சங்களையும் கொள்கை ரீதியான விஷயங்களையும், மேலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாநில அரசை கேட்டுக் கொண்டிருப்பதால், குடியரசுத் தலைவர் அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்திடவில்லையென்று மத்திய உள்துறை இணை அமைச்சர் வெங்கடசுப்பையா அவர்கள், அன்பரசு எம்.பி.யின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டார். இது டெல்லியில் ஏப். 29-ஆம் தேதி நாடாளுமன்றத் தகவல்.

இச்செய்தி, ஏடுகளுக்கெல்லாம் கிடைத்திருந்தும்கூட - மே மாதம் இரண்டாம் தேதி வரையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எட்டாமற் போனது எப்படியோ தெரியவில்லை!

பினாமி ஒழிப்புக் கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொள்கிற நாம்; அதற்கென நிறைவேற்றப்படுகிற சட்டம் எப்படிப்

பொருத்தமானதாக அமையவேண்டும் என்பதைச் சட்டசபையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இப்போது அந்தச் சட்டத்தில் உள்ள சட்ட சிக்கல்கள் குறித்து மத்திய அரசு, மாநிலஅரசிடம் மேல்பரிசீலனை செய்யுமாறு கேட்டிருப்பதை மக்களிடம் ஒரு முதலமைச்சர் தெரிவிக்காமல், நாங்கள் திரும்பத் திரும்ப நினைவுக் கடிதங்கள் எழுதியும் ஜனாதிபதி கையெழுத்திடவில்லை என்று கூறுவது எப்படி முறையாகும்?

வழக்கமாக ஒன்றைப் பேசிவிட்டுப் பிறகு பேசவில்லை என்று சாதிக்கிற அந்தத் தந்திரத்தையும் - கடலூரில் நடத்திக் காட்டியிருக்கிறார்.

டெல்லியில் நடந்த ஒரு குழுக் கூட்டத்தில் முதல்வரும், பண்ருட்டி ராமச்சந்திரனும், திராவிடர் கழகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேசியதாக - அவர்களது ஆஸ்தானப் பத்திரிகையிலேயே கொட்டை எழுத்துக்களில் செய்தி வந்தது. அதை அப்போது மறுத்திட முதல்வரோ அல்லது அமைச்சரோ முன்வரவில்லை!

இப்போது தன்மானத் தமிழர்களின் குமுறலைக் கண்டவுடன் - டெல்லியில் நாங்கள் அப்படிப் பேசியதாகக் கருணாநிதி கூறுகிறார்! நாங்கள் அப்படிப் பேசவே இல்லை என்கிறார், கடலூரில்!

முதலில் ஒன்றைப் பேசி விட்டு, பிறகு பேசவில்லையென்று கூறுவது கோழைத்தனம்,

இதை நான் சொல்லவில்லை - முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களே, அவையோர் அறிய வெளியிட்ட வீரமிக்க வாசகமாகும்!

இந்தித் திணிப்பை எதிர்ப்போம் வாரீர்! என்று கடலூரில் கொடி உயர்த்தியிருக்கிறார்.

மதுரைத் தமிழ் மாநாட்டில் இந்தித் திணிப்பு இல்லையென்று இவரேதான் அறிவித்தார்!

இவருடைய அரசாங்கத்தில் இவரது பார்வையுடன் தயாரிக்கப்பட்டு, கவர்னரால் ஜனவரி மாதம் சட்டமன்றத்தில் படிக்கப்பட்ட கவர்னர் உரையில் இரண்டாம் பக்கத்தில்; மூன்றாவது பாராவில் -

மதுரையில் இத்திங்கள் 10-ஆம் நாளன்று கூடிய பெருந்திரளான மக்களிடையே பேருரையாற்றிய இந்தியத்

தலைமையமைச்சர் அவர்கள் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தார். தமிழ்நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்பட மாட்டாதென்று மறைந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதி மொழியை மீண்டும் வலியுறுத்திக் கூறியதற்காக தமிழ்நாடு அரசும், மக்களும் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது!

இன்று எரி சாராய ஊழலுக்கு மத்திய கமிஷன் விசாரணை வரும் என்ற செய்திகள் வரவர,

இந்தித் திணிப்பை எதிர்ப்போம் வாரீர்! அதுவும் ராணுவத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்போம் வாரீர்! என அறைகூவல் விடுக்கிறார்.

முதல்வரின் கடலூர் பேச்சு, அவரை எவ்வளவு முரண்பாடு நிறைந்த சந்தர்ப்ப சாகசவாதி என்பதைத்தான் தெளிவாக்குகிறது!

அன்புள்ள,

மு. க.

(05-05-1981)

907. இவர், சிந்திப்பாரோ - இல்லையோ!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் இந்தத் தொடர் கூட்டம் முடியும் வரையில் நமது கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதின் காரணங்களை சட்டமன்ற தி.மு.கழக உறுப்பினர்கள் கூட்டத்தின் வாயிலாக நாட்டிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஒரு நிலைமை ஏற்பட்டதை நினைவூட்டிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 ஏப்ரல் 7-ஆம் நாள் சட்டப் பேரவையில் ஆளுங்கட்சியினருக்கும் நமது கழக உறுப்பினர்களுக்கும் இடையே அமளி எழுந்து, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆபாசமான முறையில் தங்கள் ஆடைகளை அவிழ்த்துக் காட்டினார்கள் என்றும், அதற்கு எதிர்ப்பாக கழக சட்டமன்ற உறுப்பினர்கள் செருப்பைத் தூக்கிக் காட்டினார்கள் என்றும் வருந்தத்தக்க செய்திகள் வந்ததை நாம் மறந்திடவில்லை. அப்போது அவையில் இருந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், கழகப் பொதுச் செயலாளருமான பேராசிரியர் அவர்கள் ரகுமான்கான், துரைமுருகன், சுப்பு ஆகியோர் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நான் பார்த்திருக்க முடியாது என்றும், அப்படி ஏதாவது நடைபெற்றிருக்குமேயானால் தி.மு.கழகத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும், மன்னிப்பையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், அதே நேரத்தில் ஆளுங்கட்சியின் சார்பாக எந்த அளவிற்கு உணர்வைத் தூண்டினார்கள் என்பதையும் அவரவர்கள் மனச்சாட்சிக்கு அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்று விட்டு விடுகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

அன்று தலைமை வகித்த துணைத் தலைவர் நடைபெற்ற சம்பவங்களுக்கு வேதனை தெரிவித்து விட்டு மன்றத்தின் தனி

மரியாதையையும், பாரம்பரியத்தையும் காப்பாற்ற அத்தனை உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டு அன்றைய தினம் அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

உடன்பிறப்பே,

அதற்கு மறுநாள் காலையில்தான் அந்தமானுக்குச் சென்றிருந்த நம்முடைய அருமைத் தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மறைந்து விட்டார்கள் என்ற மனமுருக்கும் செய்தி கிடைத்தது. அவரது உடலை அந்தமானிலிருந்து சென்னைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பதே பெரும் பிரச்சினையாகி விட்டது.

மறுநாள் ஏப்ரல் 9-ஆம் தேதி மறைந்த ஆசைத்தம்பியின் உடல் அந்தமானில்; அதே நேரத்தில் சட்டப் பேரவையில் துரைமுருகன், ரகுமான்கான், சுப்பு ஆகிய மூவரையும் பற்றிய உரிமைப் பிரச்சினை தரப்படுகிறது. உரிமைப் பிரச்சினை, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படாமல் உடனடியாக பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

அப்போது பேராசிரியர் குறுக்கிட்டு, தலைவர் அவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர்கள் தவறாக நடந்ததாகச் சொல்லப்படும் அதே சூழ்நிலையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களின் பெயர்கள் எல்லாம் இருக்கின்றன. ஒருவர் துணியை தூக்கிக் காட்டும் நிலை ஏற்பட்டது. இன்னொருவர் செருப்பைத் தூக்கிக் காட்டினார். இதை நான் சொல்லாமல் இருப்பதால் ஒரு பக்கப் பிரச்சினையாக ஆக்கிவிடக் கூடாது என்று குறிப்பிட்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் குறுக்கிட்டு, 7-ஆம் தேதியன்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அதில் எங்கள் கட்சியின் சார்பில் ரமணி கலந்து கொண்டார். எனக்குக் கிடைத்த தகவல்படி அன்றைய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகு இந்தப் பிரச்சினை பற்றிப் பேசி, அதிலே முடிவுக்கு வரலாம் என்ற அளவில்தான் அந்தக் கூட்டம் முடிந்திருக்கிறது. எனவே இங்கு இப்போது இருக்கின்ற பிரச்சினையை அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவெடுப்பது தான் நல்லது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்குப் பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு எடுத்தீர்களோ - இல்லையோ - இந்த அவையில் எனக்குள்ள இக்கட்டான நிலையைப் பார்க்க வேண்டும் என்று தனது பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனதா கட்சி உறுப்பினர் ஜெபமணி அவர்கள் அன்று நடந்த நிகழ்ச்சிக்கு பேராசிரியர் அவர்கள் மனம் உருக மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நடந்ததை ஒரு கெட்ட கனவாக நினைத்து மீண்டும் இப்படி நடக்காமல் இருக்க, தலைவர்கள் சந்தித்துப் பேசுவது நல்லது; அதை விட்டு விட்டு திடீரென்று தீர்மானம் கொண்டு வரத் தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அழகிரிசாமி அவர்கள் இது சம்பந்தமாக 7-ஆம் தேதி அவைத் தலைவர் அறையிலே கட்சித் தலைவர்கள் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவர் வந்தவுடன் இது சம்பந்தமாகப் பேசி, எதிர்காலத்தில் இப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித்தான் பேசி முடிவு செய்தோம். இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றல்ல; எனவே ஜெபமணி அவர்கள் கூறிய கருத்தை நான் ஆதரிக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முஸ்லீம்லீக் உறுப்பினர் லத்தீப் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இன்று வந்திருக்கிறார்கள். அவர்களையும் வைத்துப் பேசி, அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி ஒரு முடிவெடுப்பதுதான் நல்லது என்பது என்னுடைய கருத்து என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நான் அந்த விவாதத்தில் பேசும்போது இன்று நான் பேசக்கூடிய நிலையிலே இல்லாவிட்டாலும், வெந்த புண்ணில் வேல் என்பார்கள், அதைப் போல நாங்கள் ஆசைத்தம்பியை இழந்து ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் இங்கே வருகிறது என்று கேள்விப்பட்டு, வரவேண்டிய அவசிய நிலை எங்களுக்கு ஏற்பட்டு விட்டது. எல்லோரும் சேர்ந்து ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, மற்றுமுள்ள எதிர்க்கட்சிகள், தோழமைக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து இந்த மாமன்றத்தின் மரபைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் நான் கருத்து மாறுபாடு கொண்டவனல்ல. அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, மீண்டும்

இதைப் பற்றிப் பேச வேண்டும் என்ற நிலை வந்தபிறகு இப்படி அவசரப்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமா என்பது குறித்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இவ்வளவிற்கும் பிறகு ரகுமான்கான், சுப்பு, துரைமுருகன் ஆகிய மூவரும் கூட்டத் தொடர் முடிகிறவரையில் சட்டமன்ற வளாகத்திற்குள் வரக்கூடாது என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் எழுந்து, இம்மாதிரியான தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நீங்கள் முடிவு செய்திருந்தால் அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுவை நடத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அன்றைக்கு இல்லாத காரணத்தால் அவரையும் வைத்துப் பேசி முடிவெடுக்கலாம் என்றுதான் அந்தக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அப்படி அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யாமல் முதலில் இருந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு இந்தத் தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளுடைய நடவடிக்கைகளையே நசுக்கக்கூடிய ஒரு முயற்சியாக நாங்கள் இதைப் பார்ப்பதால் இந்தக் கடுமையான தண்டனையை எதிர்த்து சபையிலிருந்து வெளியேறுகிறோம் என்ற கருத்துக்களை விவாதத்திலும் வெளிநடப்பின் போதும் அறிவித்து விட்டு அவரது கட்சி உறுப்பினர்களுடன் அவையைவிட்டு வெளியேறினார்.

ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் நடந்த தவறுகளைப் பற்றியோ, தண்டனையைப் பற்றியோ எங்கள் கட்சி எதையும் எடுத்துக் கூற விரும்பவில்லை என்றாலும் நீங்கள் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்து பேசி முடிவெடுக்கலாம் என்று சொல்லிவிட்டு அதற்கு மாறாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதால் நாங்களும் இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று கூறி அவரது ஜனதா கட்சி உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்திருக்கிறார்.

அடுத்து, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சோ. அழகர்சாமி அவர்கள் எதிர்க்கட்சிகளில் உள்ளவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நீங்கள் யாரையும் கூட்டி முடிவெடுக்காமல்

இப்படி பிடிவாதமான போக்கிலே எடுத்த முடிவு சரியில்லை என்று கூறி அவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.

இந்திய யூனியன் முஸ்லீம்லீக் கட்சி சார்பாக எம்.ஏ. லத்தீப் அவர்கள் துயரம் நிறைந்த இந்த நேரத்தில் எல்லா கட்சிகளையும் கலந்து கொண்டு ஒரு முடிவை எடுக்கலாம் என்று சொல்லப்பட்ட கருத்தை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் தானும் வெளிநடப்புச் செய்கிறேன் எனக் குறிப்பிட்டு வெளியேறினார்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் எவ்வளவோ எடுத்துக் கூறியும் நானும் பேராசிரியரும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டும், அரசும் அன்றைய பேரவைத் தலைவரும் அவையின் மரியாதை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே தங்களுக்கு மிகுந்த அக்கறை இருப்பதாகக் கூறி கழக உறுப்பினர்கள் மூவரையும் அந்தக் கூட்டத் தொடர் முடியும் வரையில் சபைக்குள்ளும் வரக்கூடாது, சட்ட மன்றத்தைச் சார்ந்த பகுதிகளுக்குள்ளும் வருவதற்குத் தடை என்று தீர்மானித்து ஆணை பிறப்பித்த அந்த நிகழ்ச்சியை என்னால் மறந்து விட முடியவில்லை.

ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன?

அவையில் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உட்கார்ந்து கொண்டு ஏதோ பேசினார் என்று முதலமைச்சர் எழுந்துகூற - உடனே கிருஷ்ணமூர்த்தி தான் எதுவும் பேசவில்லை என்று மறுப்பு தெரிவிக்க - முதலமைச்சர், பேசிவிட்டு, பேசவில்லை என்பது கோழைத்தனம் என்று கடுமையான வார்த்தைகளால் குத்திக்காட்ட நான் கோழை அல்ல; நீங்கள்தான் கோழை என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தி பதில் உரைக்க அதன் தொடர்பாக அமளி ஏற்பட்டு ஆளுங்கட்சி உறுப்பினர் தாமரைக்கனி தன் இருக்கையிலிருந்து முன்னே பாய்ந்து வந்து அமைச்சர்களுக்கு முன்னால் உள்ள மேசையின் மீது ஒரு காலை ஊன்றிக் கொண்டு தி.மு.கழக உறுப்பினர்களை நோக்கி செருப்பை வீசியிருக்கிறார்.

இதை மனச்சாட்சி இல்லாதவர்கள் வேண்டுமானால் நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்லலாம்.

எதிர்க்கட்சிக்கு முன் வரிசையில் உள்ள ஆளுங்கட்சியினர் செய்கிற காரியங்கள் எதிர் வரிசையிலே உள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாமல் போக நியாயம் இல்லை.

தங்கள் முன்னால் உள்ள மேசையின் மீது ஒருவர் ஏறி நின்று செருப்பை வீசுவதைக் கவனிக்க முடியாத அளவிற்கு அமைச்சர்களும் இருந்திருக்க இயலாது. அவையில் சூழ்ந்திருந்த அதிகாரிகள், பத்திரிகைக்காரர்கள் ஏன், ஆளுங்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள்கூடத் தங்கள் கண்களால் பார்த்த ஒரு அநாகரீகச் செயலை இன்றையதினம் அரசு தரப்பினர் மூடி மறைக்க முயற்சிக்கிறார்கள்.

அவைத் தலைவரோ, அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படிதான் நடக்கிறேன் என்கிறார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தப்படுகிற போது அலுவல் ஆய்வுக் குழுவின் மறைவில் அரசாங்கம் பதுங்கிக் கொள்ள முனைகிறது.

அன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களாக கழக உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டபோது, எல்லா தலைவர்களும் எடுத்துச் சொல்லியும் கூட, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யாமலேயே, அவசரம் அவசரமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதுவும் ஆசைத்தம்பியின் சவம் அந்தமான் தீவில் இருந்த நேரத்தில் இந்த அவையில் நிறைவேற்ற முடிந்தது.

உடன்பிறப்பே,

1979 ஏப்ரலில் இந்த அரசு நடந்து கொண்ட முறைக்கும் 1981 மே திங்களில் இந்த அரசு நடந்து கொண்டுள்ள முறைக்கும் இடையில் எவ்வளவு முரண்பாடு என்பதை நீயும் சிந்தித்துப் பார்!

நாடும் சிந்திக்கட்டும்!! நமது சபாநாயகர் இதுபற்றி சிந்திப்பாரோ இல்லையோ எனக்குத் தெரியாது.

அன்புள்ள,

மு. க.

(06-05-1981)

908. நடக்கட்டும் அந்த நாமாவளி!

உடன்பிறப்பே,

மேதின விழாவையொட்டி சென்னையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் மாண்புமிகு நாவலர் அவர்கள் பேசிய கருத்துகள், அவரது கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் வெளி வந்திருக்கிறது.

எம்.ஜி.ஆருக்கு அறிவு இல்லை! ஆற்றல் இல்லை! என்று கலைஞர் எழுதினார். இன்றும் எழுதிக் கொண்டு வருகிறார். கலைஞர் இப்படிச் சொன்னபிறகு தான் அ.தி.மு.க.வுக்கு 129 இடங்களை மக்கள் கொடுத்தார்கள்.

இது நாவலர் பேச்சில் ஒரு பகுதி! எம்.ஜி.ஆருக்கு அறிவு இல்லையென்றோ ஆற்றல் இல்லையென்றோ நான் எப்படிச் சொல்லியிருக்க முடியும்? அறிவும் ஆற்றலும் அவருக்கு இல்லாமலிருந்திருந்தால்; எந்த நாவலர் பொதுச்செயலாளராக இருந்து பொருளாளர் எம்.ஜி.ஆர். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக விளக்கமான அறிக்கை கொடுத்து அவரை நீக்கி வைத்தாரோ; அதே நாவலர் அவர்களைத் தனக்குக் கீழே ஒரு மந்திரியாக இன்றைய தினம் நியமித்துக் கொள்கிற அளவுக்கு நிலைமையை உருவாக்கியிருப்பாரா? எம்.ஜி.ஆருக்கு அறிவும் ஆற்றலும் இல்லாமலிருந்தால் - ஒரு தலைவருடைய படத்தைக் கொடியிலே போட்டுக் கொள்ளுகிற கிறுக்கன், எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாராவது இருக்க முடியுமா? என்று 1972 முதல் 1977 வரையில் ஆயிரக்கணக்கான கூட்டங்களில் அழுத்தம் திருத்தமாகக் கேள்வியெழுப்பிக் கொண்டிருந்த நாவலர் அவர்களையே தனக்குப் பணியவைத்து; இதோ அவர்தான் புரட்சித் தலைவர் என்று அதே நாவலர் அவர்களைக் கொண்டே தன்னை புகழும்படி செய்திருக்க முடியுமா?

நெருக்கடி காலத்திற்குப் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் தோல்வியடைந்த பிறகு; மக்கள் தி.மு.க. என்ற புதுக் கழகம் கண்ட நாவலரும் அவரது புதுக் கட்சியின் தலைவர்களும் கூட, நிருபர்களுக்கு அளித்த முதல் பேட்டியில் - எம்.ஜி.ஆரின் வெற்றி; சினிமா மோகத்துக்குக் கிடைத்த வெற்றியென்றுதானே கூறினர்.

இன்று அதையும் மாற்றி, அதே நாவலர் வாயிலேயே; தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சினிமாக் கொட்டகைகள் - அவற்றில் டூரிங் டாக்கீஸ் எத்தனை - எல்லாவற்றிலும் இன்றைக்கு அதிகமாக ஓடுகிற படங்கள் எம்.ஜி.ஆர். நடித்த படங்கள்தான்! அதனால் அவரை யாரும் தேர்தலில் அசைக்க முடியாது - என்று பேச வைத்த அறிவாற்றலுக்குச் சொந்தக்காரர் எம்.ஜி.ஆர். என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

அண்ணாவுடன் பழகி அவரை அறிந்து கொண்டவர்கள் நாங்கள்! எம்.ஜி.ஆர். என்றைக்கோ ஒருநாள் அண்ணாவைப் பார்த்து அறிந்து கொண்டவரே தவிர, பழகி அறிந்து கொண்டவரல்ல!

இதுவும் நாடு முழுதும் சுற்றி நாவலர் அவர்கள் மேடைக்கு மேடை உதிர்த்த பொன்மொழிகள்தான்!

அந்த நாவலரை - நமது கழகக் காவலராயிருந்தவரை - பதவியெனும் ஓர் ஆசை காட்டி, தன் பக்கம் இழுத்துக்கொண்டு இன்று அவரைக்கொண்டே கருணாநிதி நல்லவரல்ல! எனப் பேசவைத்திருக்கிற எம்.ஜி.ஆரைப் பார்த்து அறிவு ஆற்றலற்றவர் என்று நான் எப்படிக் கூறிட முடியும்?

கோனார் நோட்ஸ் என்று அமைச்சர் ராஜா முகமது ஒரு விழாவில் கூறிட; அப்படியெல்லாம் சாதிப் பெயர்களைக் கூறி யார் மனத்தையும் புண்படுத்தக் கூடாது என்று முதலமைச்சர் மறுத்துப் பேசியதாக வெளிவந்த செய்தியைக் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். கோனார் நோட்ஸ் பற்றி எம்.ஜி.ஆர். அளித்த விளக்கத்தில் பொதிந்து கிடக்கும் அறிவையும் ஆற்றலையும் நாவலர் அவர்கள் புகழ்ந்து போற்றுகிற அளவுக்கு, அவரை ஆக்கிவிட்ட எம்.ஜி.ஆரின் ஆற்றலை நான் எப்படிக் குறைத்து மதிப்பிட்டிருக்க முடியும்?

உவமையைச் சொல்லும் போது உயர்ந்த பொருளைச் சொல்லுவார்கள்! ஆனால் கலைஞரோ; தன்னை, வீட்டு நாய் என்று வர்ணித்துக் கொள்கிறார்.

இதுவும் மேதின விழாவில் நாவலர் அவர்கள் எனக்குப் பாடிய நாமாவளிதான்!

நான் யார் தெரியுமா? நான்தான் ராஜாதி ராஜ - ராஜ மார்த்தாண்ட - ராஜ கம்பீர - .....

என்று அடக்கமாக அரசியல்வாதி எவரும் தன்னைப்பற்றி உயர்வாகச் சொல்லிக் கொள்ள மாட்டார்கள்!

நேரு, கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்! நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்!

என்றுதான், அண்ணா அவர்கள் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டார்! பதவி, கடந்த காலத்துப் பல செய்திகளை நாவலர் நினைவிலிருந்து மறைத்தே விட்டது போலும்!

உங்கள் வீட்டு நாய்போல எந்தச் சூழ்நிலையிலும் - அடித்து விரட்டினாலும் - உங்கள் கால்களைச் சுற்றியே வருவேன்.

என்று உவமை கூறியதே தவறு என்று நடமாடும் பல்கலைக் கழகமாக இருப்பவர் கேலி பேசுவதுதான் வியப்பாக இருக்கிறது எனக்கு!

நான் தெருநாய் அல்ல; விரட்டியவுடன் ஓடிவிட! வீட்டுநாய் நான்! உங்களையே சுற்றி வருவேன்!

என்னைப்பற்றி நான் சொல்லிக் கொண்டதை நாவலர்; ஏனோ திசை திருப்ப முனைகிறார் என்பது எனக்குப் புரியவில்லை?!

கலைஞர், தன்னை நல்லவர் என்று காட்டிக்கொள்ளும் எந்த அரசியல் வாய்ப்பும் இனி அவருக்கு இல்லை! 1985-லும் அ.இ.அ.தி.மு.க.தான் ஆட்சிக்கு வரும்!

இதுவும் எனது நீண்ட கால நண்பர், ஒன்றல்ல; இரண்டல்ல; சுமார் நாற்பது ஆண்டு கால நெருங்கிப் பழக்கமுடைய நண்பர்; நாவலர் அவர்கள் என்னைப் பற்றிக் கூறியுள்ள ஆரூடம் தான்! அதுவும் மேதின விழாவில்!

1985-லும் அ.தி.மு.க.தான் ஆட்சிக்கு வரும் என்று சோதிடம் பார்த்துச் சொல்லி விட்டாரே நமது நாவலர்!

பிறகு எப்படி அவர் என்னை நல்லவனல்ல! என்று அர்ச்சனை செய்யாமல் இருக்க முடியும்!

என்னை நல்லவன் என்று நாவலர் மேடையில் பேசிவிட்டு; பிறகு 1985-லும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் - அதில் தனக்கு இடம் கிடைக்குமென்பதை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதல்லவா?

கடந்த நாலு ஆண்டுகளில் நாவலர், என்னைப் பற்றி எவ்வளவோ பேசி விட்டார்! அவற்றையெல்லாம் அவரது கட்சி ஏட்டிலிருந்தே என்னால் தொகுத்தளிக்க முடியும்! சிலவற்றுக்கு நான்கூட சற்று சினம் கொண்டு பதில் எழுதியிருக்கிறேன்! அப்படி நான் எழுதியது கூட தவறு என நான் வருந்துகிறேன்!

பதவி, பவிஷுகள் கண்ணை மறைக்கும்போது - அவற்றைக் காப்பாற்றிக் கொள்ள நாவலரைப் போன்றவர்கள் என்னை எவ்வளவுதான் விமர்சித்தாலும் அதிலும் நான் அவர்கள் வாழ்வுக்காகப் பயன்படுகிறேனே என்ற ஒரு மன நிறைவுதான் இப்போதெல்லாம் ஏற்படுகிறது எனக்கு!

நடக்கட்டும் நாமாவளியென்று விட்டுவிட வேண்டியதுதான்!

அன்புள்ள,

மு. க.

(07-05-1981)

909. ஏலம் - டெண்டர்! ஏனோ? ஏனோ?

உடன்பிறப்பே,

தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக - இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக ஆக்கியிருப்பதாகச் சொன்ன எம்.ஜி.ஆர். இப்போது அதே தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகப் பத்தாயிரம் கள்ளுக் கடைகளையும் ஐயாயிரம் சாராயக் கடைகளையும் திறக்கப்போகிறார். இஃதன்னியில் ஆயிரக்கணக்கான ஒயின் ஷாப்புகளும் திறக்கப்படும்.

தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்குச் சட்டத்தை ஓரிரு ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த போது அதை முதலில் ஏற்றுக் கொண்டு - பிறகு புதுக்கட்சி தொடங்கியவுடன், மதுக்கடைகளின் முன்னால் தாய்மார்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவேன் என்று அறிவித்ததும் எம்.ஜி.ஆர்.தான் என்பதை நீ மறந்திருக்க முடியாது!

தாயின் மேலாணையாக சாராயக் கடைகளையும் கள்ளுக் கடைகளையும் எனது ஆட்சிக் காலத்திலோ, என் கட்சியின் ஆட்சிக் காலத்திலோ - திறந்திட ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன் என்று முதலமைச்சர் என்ற பொறுப்பில் 1979-ஆம் ஆண்டு சத்தியப் பிரமாணம் செய்த எம்.ஜி.ஆர்.;

இதோ பத்தாயிரம் கள்ளுக்கடையையும் ஐயாயிரம் சாராயக்கடைகளையும் திறக்கப்போகிறேன் என்று சகலமான ஜனங்களும் டம! டம! டம! டம! என்று பறை முழக்கி அறிவித்து விட்டார்!

கள்ளச்சாராயத்தை ஒழித்து நல்ல சாராயத்தை வழங்குவதற்காக இந்த ஏற்பாடாம்!

ஒரு புறத்தில் மது விலக்குச் சட்டமும் இருக்குமாம்!

இன்னொரு புறத்தில் கூட அல்ல; மாநில முழுதும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் மதுக்கடைகளும் இருக்குமாம்!

பூனை, பொறிக்குள்ளே அடைக்கப்பட்டிருக்குமாம்!

எலிகள், வீட்டில் உள்ள தானியங்களைக் கொரித்துக் தின்று - துணிமணிகளையும் துண்டாடி விளையாடிக் கொண்டிருக்குமாம்!

இந்தக் கள்ளுக்கடை, சாராயக் கடைகள் திறப்பதிலும் ஒரு குழப்பம்!

ஏலமும் உண்டாம் டெண்டரும் உண்டாம்!

ஏலம் என்பது பலர் கூடி நின்று தொகையை ஒருவருக்கொருவர் கூடுதலாகக் கேட்பது!

டெண்டர் என்பது அதிகபட்சத் தொகையைக் குறித்து எழுதி ஒரு மூடிய கவரில் முத்திரையிட்டு, குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவது!

இப்போது எம்.ஜி.ஆர். அரசின் அறிவிப்பின்படி; முதலில் குறிப்பிட்ட ஒரு கடைக்கான ஏலம் கூறப்படுமாம்! பலரும் ஏலம் கேட்பார்களாம்! உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்; ஒருவர் ஒரு கடையை ஒரு லட்ச ரூபாய்க்கு ஏலம் கேட்டு அத்துடன் ஏலம் முடிவடைவதாக வைத்துக் கொள்வோம். பிறகு யாரும் ஏலம் கேட்கவில்லையென்றால் - லட்ச ரூபாய்க்கு ஏலம் கேட்டவருக்கு இப்போது விடப்பட மாட்டாது!

என்ன செய்வார்கள் அதிகாரிகள்? ஏலம் முடிந்ததும் டெண்டர் வந்துள்ள கவர்களைப் பிரித்துப் பார்ப்பார்களாம்?

அதில் ஒரு லட்சத்து பத்தாயிரம் என்று டெண்டர் கேட்கப்பட்டிருந்தால் அந்த டெண்டர் கேட்டவருக்கே கடை விடப்படுமாம்!

அந்த டெண்டரைவிட அதிகமாக வேறு யாரும் ஏலம் கேட்க வாய்ப்பு கிடையாதாம்!

கடை ஏலம் விடப்படும் இடத்தில் - ஏலம் என்று ஒரு முறை இருக்க வேண்டும்; அல்லது டெண்டர் என்று ஒரு முறை இருக்க வேண்டும்; இப்போது புதுமை என்னவென்றால் ஒரே கடைக்கு ஏலமும் உண்டு! டெண்டரும் உண்டு!

ஏலத்தில் கடை கிடைக்காத ஒரு குறிப்பிட்ட முக்கிய புள்ளி; அவசர அவசரமாக முன்னேற்பாட்டுடன் அதிகாரியைக் கையிலே போட்டுக் கொண்டு - அல்லது மிரட்டி, ஒரு சீல் வைத்த டெண்டரை அவர் கையிலே உடனே கொடுத்து, ஏலத்தைவிட அதிகமாக சிறிது தொகையை உயர்த்தி எழுதி, மோசடியாக அந்தக் கடையைப் பெற்றுவிடக் கூடிய நிலைமையைத் தடுக்க, என்ன முறைகள் கையாளப்படப் போகின்றன என்பது தெரியவில்லை!

ஏலம் - டெண்டர் - என்ற இந்த இரண்டு முறைகளையும் கடைப் பிடிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதை விளக்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது!

ஏலமென்றால் ஏலம் - டெண்டர் என்றால் டெண்டர் - இப்படியில்லாமல் இரண்டையும் சேர்த்துக் குழப்புவானேன்?

ஆளுங்கட்சிக்காரர்களின் ஆதாயத்திற்காகவா என்ற ஐயப்பாடு எழத்தானே செய்யும்!

அதுவும் அந்த டெண்டரை தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும் என்றில்லை!

ஏலம் தொடங்குவதற்கு முன்பு நேரிலும் கொடுக்கலாம் என்றிருக்கிறது!

நேரிலும் கொடுக்கலாம் என்பதிலே எவ்வளவு மர்மங்கள் மறைந்து கிடக்கின்றனவோ?

நேரில் கொடுத்து - ஏலம் தொடங்குவதற்கு முன்பா? பின்பா? முன்பு கொடுக்க வேண்டும் என்று விதியில் கூறப்பட்டுள்ளது?

ஏலத்திற்குப் பின்பு கொடுத்தாலும் முன்பு கொடுத்ததாகத்தான் சொல்ல வேண்டுமென்று அதிகாரியின் தலைவிதியிருந்தால் என்ன செய்வது?

ஆக - இப்போது எம்.ஜி.ஆர். மதுவிலக்கில் எடுத்துள்ள இரட்டை நிலையால் - இரட்டை இலைக்காரர்களுக்கே கொண்டாட்டம்!

கடைகள் திறக்கப்படும் - எம்.ஜி.ஆரின் கட்சியினருக்கே அவைகள் தரப்பட வழிகள் காணப்படும்!

பர்மிட் முறையும் இருக்கும் - அதனால் அந்தக் கட்சியின் சாராய சாம்ராஜ்யாதிபதிகளும் மேலும் வளம் பெறுவார்கள்!

ஏலம் - டெண்டர் - இரண்டும் ஒன்றாக இணைந்து வருவது; நமது கணிப்பை, இன்னும் உறுதியாக்குகிறது!

எப்படியோ தாய்மார்களின் கண்ணீர் துடைக்கப்பட்டால் சரி! என்ன; உடன்பிறப்பே சிரிக்கிறாய்; நீ பொல்லாத உடன்பிறப்பாயிற்றே!

அன்புள்ள,

மு. க.

(08-05-1981)

910. தனித்தொகுதிக்கு ஆபத்தா?

உடன்பிறப்பே,

என்னைப் பொறுத்தவரையில் ஒரு எண்ணம் பல ஆண்டுகளாக, எனது இருபதாவது வயதில் இருந்து உருவாகி வளர்ந்துள்ளது! தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதியில் வேறு வகுப்பினர் வெற்றிபெற வேண்டும். வேறு வகுப்பினர் பெரும்பான்மையாக இருக்கும் பகுதியில் சிறுபான்மையாக இருக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் நின்று வெற்றிபெற வேண்டும்.

(- தினத்தந்தி, 8-5-81)

இந்த எண்ணம் இந்த வடிவத்தில் எனக்கு உருவானதா, என்று கேட்டுவிடாதே!

முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு அவரது இருபதாவது வயதில் உருவாகி - அதாவது 1937-ஆம் ஆண்டு உருவாகி - 1981-ஆம் ஆண்டில் முழு வளர்ச்சியுடன் வெளிப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலை அவர் சட்டப் பேரவையில், காவல்துறை மானியத்திற்கான விவாதத்தில் பதில் அளிக்கும் போது தெரிவித்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் பல்லாண்டுகாலத்திற்கு முன்பே போராடிப் பெற்ற நிகழ்ச்சி, இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அத்தியாயமாகும்.

எப்போதுமே பொதுத் தொகுதியென்பது தாழ்த்தப்பட்ட மக்களும் போட்டியிடுவதற்குத் தடையின்றி வாய்ப்பளிக்கக் கூடிய ஒன்றாகும்!

பொதுத் தொகுதிகளில் - பல்வேறு அரசியல் கட்சிகள், சில நேரங்களில் தங்கள் கட்சியின் வேட்பாளராக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நிறுத்தி வைத்ததற்குக் கடந்த காலச் சான்றுகள் எத்தனையோ உண்டு! எனவே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கொண்டுள்ள எண்ணத்தின் இரண்டாவது பகுதி, அதாவது; வேறு வகுப்பினர் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளில் சிறுபான்மையோராக இருக்கும் தாழ்த்தப்பட்டோர் நின்று வெற்றிபெற வேண்டுமென்பதை, அனைவரும் ஏற்றுக் கொள்ளலாம்!

ஆனால், இந்த இரண்டாவது பகுதியைக் காட்டி - தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்கெனவே இருக்கிற தனித் தொகுதி முறைக்கு கல்லறை கட்டிவிடலாம் என்கிறாரே; அதுதான் ஆபத்தானது!

தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக இருக்கும் பகுதியில் வேறு வகுப்பினர் வெற்றிபெற வேண்டும்.

தேர்தல் ஆய்வுக் குழுக்கள், எண்ணிக்கையைக் கணக்கெடுத்து, தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக இருக்கும் தொகுதிகளில் வேறு வகுப்பார் போட்டியிடக் கூடாதென்றும் - தாழ்த்தப்பட்டோர், மலை சாதியினர், பழங்குடியினர் மட்டுமே போட்டியிடக் கூடிய உரிமை படைத்த தனித் தொகுதிகளாக அவை விளங்க வேண்டுமென்றும் - அறிவிக்கப்படுகிறது!

எம்.ஜி.ஆரின், சட்டப் பேரவைப் பேச்சு அந்த உரிமையிலே கைவைத்து, அவர்களை உயரத் தூக்கிக் கீழே போடுகிற தன்மையில் அல்லவா அமைந்திருக்கிறது!

கொஞ்சம் மேலே தூக்கிக் கீழே போட்டால், குழந்தைக்கு அதிக காயம் ஏற்படாது!

கோபுரத்தில் தூக்கிவைத்து, அங்கிருந்து குழந்தையைக் கீழே தள்ளினால் அதன் உடல் சுக்கு நூறாகி விடுமே!

பிற வகுப்பார் அதிகமுள்ள இடங்களில் - அதாவது பொதுத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட வேட்பாளர் நின்று வெற்றி பெற வேண்டுமென்கிறார்; சரி! ஏற்றுக் கொள்ளலாம்! குழந்தையைத் தூக்கிக் கோபுரத்தில் வைக்கிறார்! பார்ப்பதற்கு உற்சாகமாகக் கூட இருக்கிறது!

ஆனால் அடுக்க கணம்; தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தனித் தொகுதி முறையைக் குறைகூறும் அளவில்; தாழ்த்தப்பட்டோர் அதிகமாக உள்ள தொகுதிகளில் பிற வகுப்பார் நின்று வெற்றி பெற வேண்டுமென்கிறார்! கோபுரத்தில் வைத்த குழந்தையைத் தூக்கி கீழே வீசுகிறார்!

தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி முறை இருப்பதால்தான்; இதோ நமது சட்டப் பேரவையில் எந்தக் கட்சியைத் சார்ந்தவராயினும் அவர்களில் நாற்பத்தி ஐந்து எம்.எல்.ஏ.க்கள் வந்து அமரமுடிகிறது!

இதற்கு ஆபத்து ஏற்படுத்துகிற எண்ணம், எம்.ஜி.ஆர். மனத்தில் அவரது இருபதாவது வயதிலிருந்தே ஏற்பட்டது என்கிறாரே; பெரியார், அண்ணா வழியில் வந்தவர்கள் அம்பேத்கார் போராடிப் பெற்ற அந்த உரிமையைப் புறக்கணிக்கச் சொல்லும் எம்.ஜி.ஆரின் அந்த விபரீத எண்ணத்தை ஏற்றிட இயலுமா?

இடஒதுக்கீடு - சலுகை போன்றவைகள்; தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் தேர்தலில், உத்தியோகங்களில், கல்லூரித் தேர்வுகளில் இருப்பது எம்.ஜி.ஆருக்குப் பிடிக்காத ஒன்று என்பதை அவரே பலமுறை, பல கோணங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறார்!

அந்த எண்ணத்தின் நிழலாட்டமேதான்; இப்போது தாழ்த்தப்பட்டோரின் தனித் தொகுதி முறையை மறைமுகமாகத் தாக்குகிற காரியமாகும்!

இதைத்தான் அவரது சட்டப் பேரவைப் பேச்சு, நமக்கு விளக்குகிறது!

அன்புள்ள,

மு. க.

(09-05-1981)

911. நீதிதேவன் நிமிர்ந்தார்???

உடன்பிறப்பே,

இன்றைய கடிதம் ஒரு ஓரங்க நாடகம்! நீ, சிந்திப்பதற்காகவும்; நாடு, சீர்தூக்கிப் பார்ப்பதற்காகவும்!

ஃஃஃஃ

(நீதி நெறி மண்டபம் முழுமையும் மக்கள் குழுமியிருக்கிறார்கள். நீதிதேவன், இரு காவலர் கட்டியம் கூற - தனது இருக்கையில் வந்து அமருகிறார்.)

நீதிதேவன் :-

இன்று வழக்குரைப்போர், தங்களை முதலில் அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்! நிறம்மாறுவோன் என்பவர் யார்?

நிறம்மாறுவோன் :-

அடியேன்தான் நீதிதேவா! என் வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்படும் என்றுதான் காத்து நிற்கிறேன்.

நீதிதேவன் :-

குற்றம் சாட்டப்பட்டவருக்கு இன்று காலையில்தான் தகவல் தரப்பட்டுள்ளது. அவரும் மன்றத்திற்கு வந்து கொண்டிருக்கிறார் என செய்தி வந்துள்ளது. இருப்பினும் அவர் அன்றைக்கு இல்லாத நேரத்திலேயே, அவரிடம் எந்த விளக்கமும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை அவருக்கு நேரிடையாகவோ எழுத்து மூலமாகவோ அளிக்காமல் - அவர்மீது குற்றங்களைச் சுமத்த உமக்கு நிறைய நேரம் வழங்கப்பட்டிருக்கிறது!

நிறம்மாறுவோன் :-

அறிவேன் அய்யனே! தாங்கள் என்பால் ஒரு தனி அன்பையே பொழிந்து கொண்டுதானே வருகிறீர்கள்?

நீதிதேவன் :-

ஓ! இதோ! குற்றம் சாட்டப்பட்டவரும் வந்துவிட்டார்!

(மன்றத்திற்குள் அறிஞர் அண்ணா நுழைகிறார், குழுமியிருந்த மக்களிடையே பரபரப்பு...)

அண்ணா :-

வணக்கம், நீதி தேவன் அவர்களே!

நீதிதேவன் :-

மன்ற முறைப்படி விசாரணையைத் தொடங்கலாம் எனக் கருதுகிறேன்.

அண்ணா :-

ஒரு திருத்தம் நீதிதேவா! விசாரணையைத் தொடங்கலாம் என்று மட்டும் கூறுவதே பொருந்தும்! மன்ற முறைப்படி எனக் கூறுதல் சரியாகாது! காரணம்; மன்றத்தின் விதிமுறைகள் பல தடவைகள் செயலிழந்து போயிருக்கின்றன.

நீதிதேவன் :-

இப்படி நீர் குற்றம் சாட்டுவதைத்தான் நிறம்மாறுவோன், குறிப்பிட்டு உன்மீது வழக்குத் தொடுத்துள்ளார். அண்ணா அவர்களே! அதற்கு உமது பதில் என்ன?

அண்ணா :-

என்னை அண்ணா என அழைக்காதீர்!

நீதிதேவன் :-

அப்படி அழைப்பதுதான் எனக்கு விருப்பம்.

அண்ணா :-

நீதிதேவனாகிய தங்களுக்கு விருப்பமாக இருக்கலாம்! ஆனால் வழக்கு தொடுத்துள்ள நிறம்மாறுவோனுக்கு அது ஏற்காது! திருவாளர் அண்ணாதுரை என்று அழைத்தால்தான் அவருக்குத் திருப்தியாக இருக்கும்.

நீதிதேவன் :-

இராவணனை இரக்கமற்ற அரக்கன் எனக் கம்பர் குறிப்பிட்டது தவறு என இராவணன் நடத்திய வழக்கில், நீர் இராவணனுக்காக வாதாடினீர்...

அண்ணா :-

ஆமாம்! வாதாடினேன்! இராவணனின் தங்கையாம் சூர்ப்பனகையின் மூக்கையும் மார்பையும் வெட்டியவர்கள் இரக்கமுள்ளவர்களென்றும், சீதையைச் சிறையெடுத்த போதிலும் அவள் கற்புக்கோ, உடலுக்கோ ஒரு ஊனமும் விளைவிக்காத இராவணன் இரக்கமற்றவன் என்றும் எப்படிக் கம்பரே உம்மால் எழுத முடிந்தது; என்று இந்த மன்றத்திலேதான் கேட்டேன்!

மேனகையைத் தழுவி அவள் கையில் சகுந்தலையைத் தந்துவிட்டு, தாயையும் சிசுவையும் கானகத்தில் கைவிட்டுச் சென்ற விசுவாமித்திரர் இரக்கத்தின் இருப்பிடம் - இலங்கையின் இராணி மண்டோதரியிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்துக் கால முழுதும் அன்பு செலுத்திய இலங்கை வேந்தன் இராவணன் இரக்கமற்றவனோ? இப்படியும் வினா எழுப்பினேன்! நீதிதேவா! கம்பரின் கூற்றுப்படி இராவணன் இரக்கமற்ற அரக்கனல்ல என்பதற்கு எண்ணற்ற ஆதாரங்களை அள்ளித் தந்தேன்! நீதிதேவா! அதுபற்றி இப்போது என்ன பிரச்சினை எழுந்துள்ளது! மறு விசாரணைக்கு ஏதாவது ஏற்பாடா? அந்த விசாரணையிலாவது நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் அடுக்கிக் காட்டிய வாதங்களைச் சிந்தித்து இராவணனுக்கு நல்ல தீர்ப்பு வழங்கப்படுமா?

நீதிதேவன் :-

அந்தப் பிரச்சினை எதுவும் எழவேயில்லை! இப்போது குற்றச்சாட்டு உம்மீது! அதனை நிறம்மாறுவோன் இப்போது விளக்குவார்!

அண்ணா :-

மீண்டும் விளக்கமா? சரி; அனைவரும் சகித்துக் கொள்வோம்!

நிறம்மாறுவோன் :-

நீதிதேவா! திருவாளர் அண்ணாதுரை அவர்கள், இதே மன்றத்தில் கம்பரை எதிர்த்து இராவணனுக்காக வாதாடி அவனை இரக்கமுள்ளவன் என்று மெய்ப்பிக்க முயன்றார்!

அண்ணா :-

திருத்திக்கொள்க! மெய்ப்பித்தேன்!

நிறம்மாறுவோன் :-

நான் ஏற்க முடியாது!

அண்ணா :-

எதனை? மெய்யையா?

நிறம்மாறுவோன் :-

திருவாளர் அண்ணாதுரையார் சொல்திறம் படைத்தவர்...

அண்ணா :-

சொல்வன்மை பெற்றிருப்பது ஒன்றும் இழிவல்லவே! அதற்கென வள்ளுவர் அழகான குறட்பாக்களே தீட்டியுள்ளாரே!

நிறம்மாறுவோன் :-

நீதிதேவா! அந்த வழக்கில் இருதரப்பு வாதங்களையும் தாங்கள் கேட்டீர்கள்! கம்பர் இராவணனை இரக்கமற்றவனே என்று கூறினார். இராவணன் சார்பில் வாதாடிய அண்ணாதுரையார் அவர்களோ, அதனை மறுத்து எதிர்வாதம் புரிந்தார் -

வழக்கு முடிந்தபிறகு, இந்த அண்ணாதுரையார் நீதிமன்ற மரபுக்கு மாறாக நீதிதேவன் மயக்கம் என்ற ஒரு நாடக நூலை எழுதியுள்ளார்! அது, நீதிதேவனையே மாசுபடுத்துகிற காரியமாகும்!

நீதிதேவன் :-

அண்ணா அவர்களே! இதற்கு உமது பதில் யாது?

அண்ணா :-

அன்று இந்த மன்றத்தில் தீர்ப்பு அளிக்காமலேயே - தீர்ப்பு அளிக்க முடியாத நிலைபெற்று - நீதி தேவனாகிய தாங்கள் தடுமாறியது உண்மையா அல்லவா? ஒரு பக்கம் பார்த்தீர்கள்; உங்களைச் சபிக்கும் பார்வையுடன் முனிபுங்கவர்களும் - கம்பரும் - அவரால் புகழ்ந்து போற்றப்படும் இராமச்சந்திர மூர்த்தியும் காட்சி தந்தார்கள்! இன்னொரு புறம் பார்த்தீர்கள்; எத்தனையோ மாற்றங்கள் உங்கள் மனத்தில் ஏற்பட்ட போதிலும் என்னிடம் கொண்ட மதிப்பு மட்டும் நீங்காத அளவுக்கு பாக்கியம் (?) செய்துள்ள நானும்; உங்களால் இனமான உணர்வுக்கு வித்திட்டவன் எனக் கூறப்படும்

இராவணன் கூட்டமும் தெரிந்தோம்! நான் எடுத்து வைத்த ஆதாரங்கள் அசைக்க முடியாதவை! ஆனால் தீர்ப்பு? திக்குத் தெரியாத காட்டில் கண்ணைக் கட்டி விடப்பட்ட குழந்தை போல! மனச்சாட்சி குடைந்தது உங்களை! இருப்பினும் இராம பாணம் வலிமையுடையதாயிற்றே என்ற அச்சம்! அது தங்களின் இருக்கையை நொறுக்கி விடுமோ என்ற சந்தேகம்! இருதலைக்கொள்ளி எறும்பாக ஆனீர்! மயங்கி விழுந்தீர்! மன்றம் கலைந்தது! அதைத்தான் நீதி தேவன் மயக்கம் என நான் குறிப்பிட்டேன்! இப்போதும் குறிப்பிடுகிறேன்!

நீதிதேவன் :-

நான்தான் யார் பக்கமும் தீர்ப்புச் சொல்லாமல் மயங்கி விட்டேனே; பிறகு எப்படி என்னைக் குறை காணலாம்!

அண்ணா :-

இராவணன் சார்பில் நான் எடுத்து வைத்த நியாய வாதங்களைப் புறக்கணிக்கும் வகையில்தானே; தாங்கள் தீர்ப்பே அளிக்காமல் மயங்கி விழுந்துவிட்டீர்கள்! அது என் பக்கம் பாதகமான தீர்ப்புதானே! அதாவது, நல்ல தீர்ப்பு வழங்க அஞ்சினீர்கள் என்று தானே பொருள்?

நிறம்மாறுவோன் :-

தீர்ப்புப் பற்றிக் கவலையில்லை! நீதிதேவன் மயங்கியதை அண்ணாதுரையார் வெளியே கூறலாமா? எத்தனையோ ஆண்டுக் காலமாக இந்த மன்றத்தின் மகிமைகளை அறிந்தவர், இப்படி ஒரு நூலை எழுதுவதா? இதுவே என் கேள்வி!

அண்ணா :-

நீதிதேவா! நான் இப்படியொரு நூல் எழுதியது தவறு என்றால், பாண்டியன் நெடுஞ்செழியன் நீதி தவறினான் என்று கண்ணகி வாயிலாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கச் சிலப்பதிகாரம் எழுதியதே தவறுதான்!

நீதிதேவன் :-

அந்தப் பாண்டிய மன்னன் வளைந்த நீதியை நிமிர்த்திய வரலாற்றையும் அதே இளங்கோவடிகள் எழுதியுள்ளாரே!

அண்ணா :-

இங்கும், வளைந்த நீதி - தங்களால் நிமிர்க்கப் படுமேயானால்; நீதிதேவன் மயக்கத்தைத் தொடர்ந்து நானும் ஒரு நூல் எழுதுவேன் - அதற்கு நீதிதேவன் நிமிர்ந்தார் எனத் தலைப்பு சூட்டுவேன்...

இத்துடன் மன்றம் கலைகிறது என்று கூறிவிட்டு நீதிதேவன் சென்று விடுகிறார். திரை விழுகிறது!

★

உடன்பிறப்பே, நாடக பாணியில் எழுதி நீண்ட நாட்களாயினவே என்பதால் இதனை எழுதினேன்; நீயும் பிறரும் சுவைத்திடக் கூடும் என்ற நம்பிக்கையுடன்!

அன்புள்ள,

மு. க.

(15-05-1981)

912. குளுகுளு மலையில் ஒரு குழப்பம்!

உடன்பிறப்பே,

கடந்த ஒருவார காலமாக எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் அவரது சக அமைச்சர்களுக்கும் அவரது தளகர்த்தர்களுக்கும் எரிச்சலோ எரிச்சல்; தாங்க முடியாத எரிச்சல்!

என்னதான் பேசுகிறோம் என்று தெரியாமல் - என்னதான் எழுதுகிறோம் என்று தெரியாமல் - ஆத்திரத்தை அக்கினிக் குழம்பாக ஓடவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

காரணம் உனக்கும் தெரியும்; காரசாரமானதும் கனல் கக்கிடக் கூடியதுமான அவர்களது பேச்சைக் கேட்கும் மக்களுக்கும் தெரியும்!

ஒரு முதலமைச்சர் இப்படியெல்லாம் பேசலாமா?

அரசியலில் நாகரீகம் வேண்டுமென விரும்புவோர் - இவ்வாறு கேள்வி கேட்டுத் தங்களுக்குள்ளாகவே நொந்து கொள்கின்றனர்!

குளுகுளு ஊட்டிக்குச் சென்றிருக்கிறார் மாண்புமிகு முதல்வர்!

இரண்டே முக்கால் லட்ச ரூபாய்க்கு எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமான வீட்டை விற்று இன்றைக்கு வருமான வரி கட்டியிருக்கிறேன் என்று ஊட்டிப் பொதுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

என்னுடைய வருமானவரி பாக்கிப் பிரச்சினை பற்றிச் சொல்லுகிறார்கள்; எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமான வீட்டை விற்று வருமான வரி பாக்கியில் இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் இன்று காலையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதான் அவரது பேச்சின் பகுதி! அவரது கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் முதல் பக்கத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது!

என்னுடைய வருமான வரி பாக்கி என்று கூறுகிறார்!

அதற்கு எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்கு சொந்தமான வீட்டை விற்றதாகக் கூறுகிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆர். அவர்கள்; வீட்டு வாடகைப்படி இருநூற்றி ஐம்பது என்று பெற்றுக்கொண்டு வந்தவர், திடீரென அவர் வீட்டுக்கு வாடகைப்படி ஆயிரத்து எண்ணூறு என உயர்த்தி, அந்த அளவு வீட்டு வாடகைப்படியை ஏற்கெனவே கடந்து விட்ட மாதங்களுக்கும் சேர்த்து வாங்கிக் கொள்ள (ரெட்ராஸ்பெக்டிட்வ் எபக்ட்) உத்திரவு பிறப்பித்து அதனை அவரே வாங்கிக் கொண்டார்! சொந்த வீட்டில் குடியிருக்கும் அமைச்சர்களுக்கு இருநூறு ரூபாய்தான் வீட்டு வாடகைப்படி என்று அண்ணா காலத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்டதை மாற்றி, ஆயிரத்து எண்ணூறு என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வீட்டு வாடகைப்படியில் ஊழல் புரிந்த எம்.ஜி.ஆர். அவர்களை - நாம் விமர்சித்தபோது எம்.ஜி.ஆர். சொன்ன பதில் என்ன தெரியுமா?

அது என் வீடு இல்லை! எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமான வீடு! எம்.ஜி.ஆர். பிக்சரில் நான் சம்பளம் வாங்குகிற ஊழியன்!

இப்படி அப்போது விளக்கமளித்தார்!

ஆனால் இப்போது என் வரிப் பாக்கிக்காக எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்று வரிப்பாக்கியைக் கட்டியுள்ளேன் என்கிறார்! ஒரு கம்பெனியில் சம்பளம் வாங்கிய ஊழியர் அந்தக் கம்பெனிக்குச் சொந்தமான வீட்டை தனது கடனை அடைக்க எப்படி விற்கமுடியும்?

அப்போதே கேட்டோம்; எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். குடியிருந்தபோது வாடகையே கொடுக்கவில்லையே; முதலமைச்சர் எம்.ஜி.ஆர். குடியிருக்கும் போது ஆயிரத்து எண்ணூறு வாடகையென்பதும் அதுவும்; ரெட்ராஸ்பெக்ட் எபக்ட் என்பதும் எப்படி நியாயமாகும் என்று! முதலமைச்சர் அதற்கு பதிலே சொல்லவில்லை! ஆம்; சட்டசபையில் கூட அதற்குப் பதில் கூற அவர் முன்வரவில்லை!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வீட்டு வாடகைப்படியில் இப்படியொரு ஊழலைச் செய்தவர் - மூக்கையறுத்துக் கொண்டவன்; எல்லோருடைய மூக்கையும் அறுத்துக்கொள்ள

வழிசொன்னதைப் போல - சொந்த வீட்டில் குடியிருக்கும் எல்லா அமைச்சர்களுக்கும் வீட்டு வாடகைப்படி இரண்டாயிரம் ரூபாய் என்று நிர்ணயித்து உத்திரவு பிறப்பிக்கிறார்!

அதுபோகட்டும்; வருமான வரிப் பாக்கிக்கு இரண்டே முக்கால் லட்சத்துக்கு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை எப்படி விற்க முடிந்தது? ஏற்கனவே இவர் அளித்துள்ள விளக்கப்படி, எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடுதான் இவருக்குச் சொந்தமில்லையே!

இதில் எது பொய்?

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டில் நான் குடியிருக்கிறேனே தவிர, அது என் சொந்த வீடல்ல! என்றாரே; அது பொய்யா?

அல்லது;

எனது வருமான வரிப் பாக்கிக்காக எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்றுக் கட்டினேன் என்று ஊட்டியில் கூறியிருக்கிறாரே - அது பொய்யா?

ஃ சத்யா ஸ்டூடியோ தனக்குச் சொந்தமல்ல; அது தொழிலாளர்களுக்குச் சொந்தமானது - என்று பகிரங்கமாக அறிவித்தார்!

ஃ சத்யா ஸ்டுடியோவை அடமானம் வைத்து அ.தி.மு.க. கட்சிப் பணத்தைப் பதின்மூன்று லட்சம் பெற்று, அதைக் கொண்டு வருமான வரி கட்டினேன் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தார்!

தொழிலாளிகளைப் பங்குதார்களாகவும் உடைமையாளர் களாகவும் கொண்ட சத்யா ஸ்டுடியோவை, தனிப்பட்ட எம்.ஜி.ஆர். எப்படி அடமானம் வைக்க முடியும் என்று அப்போதே கேட்டோம்; இதுவரையில் பதில் இல்லை!

கட்சி, பதின்மூன்று லட்சம் தரவில்லை - மூன்று லட்சம்தான் கொடுத்து என்று அ.தி.மு.க. பொருளாளர் சவுந்திரபாண்டியன் அறிக்கை விட்டார் அப்போது!

அதையும் முதல்வர் எம்.ஜி.ஆர். மறுக்கவில்லை!

மூன்று லட்சமோ பதின் மூன்று லட்சமோ - அதை விட்டு விடுவோம்; தொழிலாளர்களுக்கு உரிமையான ஒரு ஸ்டுடியோவை - தனிப்பட்ட எம்.ஜி.ஆர். எப்படி அடமானம் வைக்க முடிந்தது?

அ.தி.மு.க.வில் - எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அடமானத்தின் மீது கடன் கொடுத்ததைப் போல மற்றுமுள்ள அந்தக் கட்சிப் பிரமுகர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டுள்ளதா? கடன் கொடுக்கப்படுமா?

வீட்டை விற்று வரிப் பாக்கிக் கட்டியதாகவும் - ஸ்டுடியோவை அடமானம் வைத்துக் கட்சிப் பணத்தைக் கடன் வாங்கி வரிப் பாக்கிக் கட்டியதாகவும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்; அவரே வலிய வந்து அறிவிப்புக்களைச் செய்துள்ளார்.

ஃ யார் வீட்டை யாருக்காக விற்றார்கள்?

ஃ யாருக்குச் சொந்தமான ஸ்டுடியோவை யாருக்காக அடமானம் வைத்தார்கள்?

ஃ விற்கப்பட்ட வீட்டை விலைக்கு வாங்கிய நபரின் விலாசம் என்ன?

முதலமைச்சர் அந்த வீடு பற்றியும் ஸ்டுடியோ பற்றியும் முதலில் அளித்த விவரங்களும் - பிறகு அளித்த விவரங்களும் குழப்பமூட்டுபவைகளாக இருக்கின்றன!

ஃ கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதைகளாக இருக்கின்றன!

இந்தக் குழப்பம் நீங்க நல்லதோர் விளக்கத்தை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நாட்டுக்கு வழங்குவாரா?

அன்புள்ள,

மு. க.

(22-05-1981)

913. ஊட்டியில் உளறல் காண்டம்!

உடன்பிறப்பே,

ஊட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வருமான வரி பாக்கியைக் கட்டியது குறித்து அளித்துள்ள விபரங்களைப் பற்றி சில வினாக்களை நேற்றைய கடிதத்தில் எழுப்பியிருந்தேன். அதற்குரிய பதிலை அவரிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

அம்மதன்னியில் ஊட்டியில் அவர் உதிர்த்துள்ள மணிவாசகங்கள் (?) சிலவற்றைக் குறித்து இன்று ஆராய்வோம்.

மனோகரன் தி.மு.க.வில் எத்தனை நாள் இருக்கப் போகிறார்? இதை மற்றவர்கள் தான் சோதிடம் சொல்ல முடியும். அவர் ஜாதகத்தை அவர் கவனிக்க வேண்டும்.

எம்.ஜி.ஆரின் சொந்தக் கட்சிப் பத்திரிகையில் வெளிவந்துள்ள எம்.ஜி.ஆரின் பேச்சு இது!

நாஞ்சிலார், தி.மு.க.வுக்கு வந்தவுடனே; அவரது இருதய நோய் பற்றிக் கேலி செய்து அமங்கலமான சொற்களைப் பயன்படுத்தி விமர்சனம் செய்த பெருந்தகையாளர்தான் எம்.ஜி.ஆர். என்பதை மறக்காமல் இருப்பவர்களுக்கு; இப்போது அதே எம்.ஜி.ஆர். ஊட்டியில் நாஞ்சிலாரைப் பற்றிப் பேசியிருப்பது ஆச்சரியத்தை உண்டாக்காது!

துணியில்லாமல் நின்ற மதுரை முத்துவுக்குத் துணி எடுத்துக் கொடுத்தேன் என்று துணிந்து பொய் சொன்னவர்தானே இந்தக் கலியுகத்துக் கர்ண மகாராஜா(?)

அதனால் எதிர்முகாமில் இருப்பவர்களை எடுத்தெறிந்து பேசுவதிலும் - பழி போட்டுப் பேசுவதிலும் - தன்னைத் தவிர உலகில் யாருமே உத்தமர்களே கிடையாது என்று பாவித்துக் கொண்டு பேசுவதிலும் எம்.ஜி.ஆர். தனிப்பயிற்சி பெற்றவர்!

அதனால்தான் நாஞ்சிலார் குறித்து ஜாதகம், சோதிடம் என்று ஏதேதோ குளறியிருக்கிறார்! பல்வேறுவிதமான யாகங்கள்

நடத்திக் கொண்டிருக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஜாதகங்கள் சோதிடங்கள் எல்லாம் இப்போது சர்வ சாதாரணம்! நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நாஞ்சிலார் அளித்துள்ள பதில் போதுமானது என்பதால் இதனை இத்துடன் நிறுத்துகிறேன்.

தி.மு.க. பொதுக்குழுவில் அடிதடி ரகளை நடந்திருக்கிறது! சுப்புவை அடிக்கப் போயிருக்கிறார்கள்! கட்சிக்குள்ளும் அடிதடி! சட்டசபையிலும் அடிதடி!

இதுவும் எம்.ஜி.இராமச்சந்திரனார் அவர்கள் முதலமைச்சர் என்ற நிலையில் நின்று ஊட்டியில் பேசியதுதான்!

அண்ணா அவர்கள் இருந்தபோது வேலூர் பொதுக்குழுவினையொட்டிய செயற்குழுவில் ஈ.வெ.கி. சம்பத் அவர்களை, எம்.ஜி.ஆர். அடித்து சட்டையைக் கிழித்து விட்டார் என்று ஒரு கிழிந்த சட்டையை சம்பத் அவர்களும் அவரது நண்பர்களும் ஊர் ஊராகக் கூட்டம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள்! அதை எதிர்க்கட்சி ஏடுகள் எல்லாம் அப்போது பிரமாதப்படுத்திச் செய்தி வெளியிட்டன!

இப்படிக் கழகத்தில் செயற்குழு பொதுக்குழு நடைபெறும் நேரங்களில் எல்லாம் திசை திருப்புவதற்காக - கடுகை மலையாக்கிக் கயிறு திரிக்கும் காரியங்கள் நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்றன!

அந்த அநாகரீக முன்மாதிரியை இப்போது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே பின்பற்றி நடந்து; பாண்டிச்சேரி பொதுக்குழுவில் சுப்புவை அடிக்கப் போயிருக்கிறார்கள் என்று ஊட்டி மலையில் நின்று முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

கழகம் குறித்து ஒரு வார இதழில் வந்த விமர்சனம்! அதுபற்றி எழுந்த பிரச்சினை! அதைத் தொடர்ந்து சற்றுக் காரசாரமான விவாதம்! அதற்குப் பிறகு சுமுகமான சூழ்நிலை! பின்னர் பொதுக்கூட்டம் - பொதுக்கூட்டத்திலும் நண்பர் சுப்பு உள்ளிட்ட எல்லாக் கழக முன்னணியினரும் கலந்து கொள்கிறார்கள்; பொதுக்குழு முடிந்த மறுநாள் சுப்பு, சென்னையில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்திற்கும் வருகிறார்! வழக்கம் போல் அவரும் கட்சிப் பணிகளையும் தொழிற்சங்கப் பணிகளையும் கவனித்து வருகிறார்; சென்னை மாவட்டச் செயலாளர் சீத்தாபதியும், மாவட்டக் கழகப் பணிகளை என்றும் போல்

கவனித்து வருகிறார். இதற்கிடையே சில மஞ்சள் ஏடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் கட்சிக்குள்ளும் அடிதடி என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பது தேவைதானா?

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர். கட்சியின் பொதுச் செயலாளர் குமரி மாவட்டம் செல்கிறார். திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இறங்குகிறார். அங்கு அவருக்கு செய்தி கிடைக்கிறது. குமரி மாவட்டச் செயலாளர் தேர்தலில் எம்.ஜி.ஆர். கட்சிக்குள்ளேயே குத்துவெட்டு நடைபெற்று ஒரு அ.இ.அ.தி.மு.க. தொண்டர் டார்வின் என்பவர் இன்னொரு அ.இ.அ.தி.மு.க. தொண்டரால் படுகொலை செய்யப்படுகிறார். செய்தி கேட்டதும் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்குத் திரும்பி விடுகிறார்!

கட்சிக்குள் கொலை! குத்து வெட்டு! கட்சித் தேர்தல் கலவரங்கள்! ஓட்டுப் பெட்டியை ஆக்கிரமிக்கும் போராட்டங்கள்! முற்றுகைகள்! தேர்தல் செல்லாது என்று அறிவிப்புகள்!

இந்த லட்சணத்தில் கட்சி நடத்துகிற எம்.ஜி.ஆர். அவர்கள்; புதுவைப் பொதுக் குழுவில் ஏதோ புயலும் பூகம்பமும் ஏற்பட்டது போலப் புலம்பித் திரிவது கண்டு அவரது கட்சிக்காரர்களே உள்ளுக்குள் கேலி பேசுவது அவர் காதில் விழவில்லைபோலும்!

பதவியில் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; இறுதி மூச்சு வரை மக்களுக்காகவே பாடுபடுவேன்.

இப்படி எம்.ஜி.ஆர். ஊட்டியில் முழக்கியிருக்கிறார்!

சட்டமன்றத் தேர்தலின்போது என்ன சொன்னார்?

எங்களை தோற்கடித்தால் நான் அரசியலை விட்டே விலகி விடுவேன்.

இப்படிச் சொன்னவர்தானே எம்.ஜி.ஆர். இல்லையென்று மறுக்கிறாரா? இப்போது திடீரென்று ஞானோதயமாகியிருக்கிறது; பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு பணியாற்றுவதாக சபதம் செய்திருக்கிறார்!

தாயின் மேலாணையாகக் கள்ளுக் கடைகளைத் திறக்க மாட்டேன் என்று சபதம் செய்த சத்யவான் (?) அல்லவா? அதோடு இந்தச் சபதம் பத்தோடு பதினொன்று!

போலீசாரை நாம் எதற்கு வைத்திருக்கிறோம். கள்ளனைப் பிடிக்கத்தான்! கள்ளன் என்றால் கூடக் கருணாநிதி, பார்த்தீர்களா முக்குலத்தோரைப் பற்றிச் சொல்கிறார்! என்பார்!

ஊட்டியில் முதல்வர் எம்.ஜி.ஆர். பேசியதுதான் இதுவும்!

திருடனைக் கள்வன் என்றுதான் கூறுவது வழக்கம்! எம்.ஜி.ஆர். அந்தச் சொல்லைக் கள்ளன் என்று மாற்றிச் சொல்வானேன்? அதற்கும் என்னை இழுத்து முக்குலத்தோரையும் இழுப்பானேன்? அவரது கட்சி ஏடான அண்ணா பத்திரிகையில்தான் அவரது இந்தப் பேச்சும் வெளியாகியிருக்கிறது!

கோனார் நோட்ஸ் என்று அமைச்சர் ராஜா முகமது ஒரு விழாவில் குறிப்பிட்டு, முதல்வர் எம்.ஜி.ஆரிடம் சிக்கிக் கொண்டு விழித்தாரே - அதைப் போல இப்போது கள்வர் கள்ளர் என்ற சொற்களில் குழப்பமா?

கள்ளனைப் பிடிக்கத்தான் போலீஸ் இருக்கிறது

என்று முதலமைச்சர் பேசியது அவரது கட்சி ஏட்டிலேயே வெளியிடப்பட்டு; அதிலேயே அடுத்த வரியில் தேவையில்லாமல் முக்குலத்தோரையும் முதலமைச்சர் இழுத்துப் பேசியிருப்பது குழப்பமா? கோமாளித்தனமா?

தி.மு.க. பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதாலோ என்னவோ சட்டசபையில் மண்ணைத் துணியில் நிரப்பி டேபிள் வெயிட் வைத்திருக்கிறார்கள்.

இப்படியும் எம்.ஜி.ஆர். ஊட்டியில் பேசி, அவரது கட்சிப் பத்திரிகையில் அந்தப் பேச்சு வெளியிடப்பட்டிருக்கிறது!

டேபிள் வெயிட்டில் மண் நிரப்பப்பட்டிருந்தது ஒரு காலம்! அதை மாற்றி மண்ணுக்குப் பதிலாக மரத்தூள் அல்லது உமி நிரப்பப்பட்டது பிறகு! அது எந்த ஆண்டு என்பதை சட்டசபைச் செயலாளர்களிடம் கேட்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவிப் பாரேயானால்; அவர் ஊட்டியில் பேசியது எவ்வளவு அபத்தம் என்பது அவருக்கே புரியும்! மண்; இப்பொழுது டேபிள் வெயிட்டில் இல்லை! செருப்பு வீசிய ஆளுங்கட்சியினர் தலையில்தான் இருக்கிறது என்பதற்கு முதல்வரின் ஊட்டிப் பேச்சே சரியான சான்றாகும்!

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இதற்கெல்லாம் பதில் அளிப்பாரா? அல்லது வழக்கம் போல் வேறு விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவாரா?

சாராயக் கடை ஏலம் எடுப்பதற்காகத்தான் தி.மு.கழகத்தினர் சட்டசபைக்கு வரவில்லையென்றும், எம்.ஜி.ஆர். ஊட்டியில் பேசியிருக்கிறார்.

அய்யோ பாவம்; சாராயக் கடை திறப்பதையே ஒரு மாதம் தள்ளிவைத்து பாட்லிங் பாக்டரி பேரத்தை நடத்திக் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கத் துடியாய்த் துடித்த கூட்டம்; எந்தக் கூட்டமென்று நாடு புரிந்து கொண்டு தானிருக்கிறது!

இந்தி எதிர்ப்புத் தீர்மானம் சட்டசபையில் அரசு கொண்டு வருவதாக இருந்ததாம்! அதனால் தி.மு.க. வரவில்லையாம்! எம்.ஜி.ஆர்.தான் பேசியிருக்கிறார்!

சரி; நாம்தான் போகவில்லை - அரசின் சார்பில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் ஏன் வரவில்லை?

சட்டசபையில் செருப்பு எனக்குப் பின்னால் வந்து விழுந்தது

இப்படியும் எம்.ஜி.ஆர். ஊட்டியில் துணிந்து பொய் கூறியிருக்கிறார்! ஒருவேளை ஆளுங் கட்சியினர் தொலைவிலிருந்து எதிர்க்கட்சியை நோக்கி வீசிய செருப்புகளில் ஒன்று முதல்வருக்குப் பின்னால் விழுந்திருக்கலாம்!

செருப்பு வீசுகிறவர்கள் என்றால் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடிக்கும்! அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களை எப்படியாவது தனது கட்சியில் சேர்த்துக் கொள்வார்! இதனை ஆதாரங்களுடன் தான் சொல்கிறேன்! இதற்கு எம்.ஜி.ஆரே சாட்சி என்பதற்கு அவர் ஊட்டியில் பேசியிருப்பதே போதுமானது!

மீண்டும் 24-ஆம் தேதி கோவையில் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் நடன நிகழ்ச்சிக்குப் போகிறாராம் - அதையொட்டி ஊட்டிக்கு வந்து கருணாநிதியைப் பற்றி மேலும் தொடர்ந்து பேசுகிறேன் என்று இண்டர்வெல் விட்டுவிட்டு வந்திருக்கிறார்!

ஊட்டி மக்கள்; உளறல் காண்டத்தின் அடுத்த தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்ற நினைப்பு அவருக்கு! நடக்கட்டும்! நடக்கட்டும்! நடக்கும் வரையில் நடக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

(23-05-1981)

914. பதைக்கிறார்! துடிக்கிறார்!

உடன்பிறப்பே,

ஒரு மனிதர், தலையைப் பிய்த்துக் கொள்கிறார்! ஓராண்டுக் காலமாகவே அவருக்கிருந்த உளைச்சல் கடந்த 17-ஆம் தேதிக்குப் பிறகு மிகக் கடுமையாகி விட்டது! பாவம்; இந்தப் பதினைந்து நாட்களாக அவர் படும்பாடு - பஞ்சுதான் படுமோ என வியக்கும் அளவுக்குப் படாதபாடு! கைகளைப் பிசைந்து கொள்கிறார்! கனிவுடன் பேச வருகிறவர்களிடமும் கடிந்து கொண்டு சீறுகிறார்! கனவிலே கூட உளறுகிறார் - ஏன் இப்படி அலட்டிக்கிறீங்க? இது உங்களுக்கே நல்லாயிருக்கா! பழகினதையெல்லாம் மறந்துட்டு இப்படிப் பழிவாங்கத் துடிக்கிறீங்களே! கடந்த காலத்தையெல்லாம் கொஞ்சம் நன்றியோடு நினைச்சுப்பாருங்க! அந்தக் காலத்திலே அண்ணா கூட உங்களுக்கு - வேறு பதவி கேட்கக் கூடாதுன்னு கன்டிஷன் போட்டுத்தானே ஒரு சின்னப் பதவி கொடுத்தாரு; இவருதானே உங்களைத் தூக்கிப் பக்கத்திலே வச்சுக்கிட்டாரு! உங்க மேல புகார் எழுதிக் கொடுத்து புயல் வேகத்திலே குற்றங்களை சுமத்தின நேரத்தில் கூட இவர்தானே உங்களுக்குப் பாதுகாப்பு அரணா இருந்தாரு! ஏதோ எப்படியோ நடக்கட்டும் - நிம்மதியா தூங்குங்க; வந்த இடத்திலே வர வேண்டியது வந்தா சரி! அதை விட்டுட்டு அவர் மேலே இப்படிப் புழுதியை வாரி தூத்திக்கிட்டே இருக்கிறது நல்லதில்லீங்க! வீணா உடம்பை அலட்டிகிட்டு நல்ல உடம்பை கெடுத்துக்காதீங்க! நன்றியைக் கொஞ்சமாவது நினைக்கனும் - இல்லேன்னா குடும்பத்துக்கே ஆகாது! என்று வீட்டில் உள்ளோர் இடித்து இடித்துச் சொல்லியும் கூட அவர், அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை.

நண்பர்கள் கூட நயம்பட உரைக்கிறார்கள்; நட்பும் உறவுமுள்ள பெருமக்கள் கூட நல்லதல்ல இந்தச் செயல்; நாகரீகமுமல்ல - நஞ்சு கக்கும் இந்தச் செயலைக் கைவிட்டுவிடுக என்று அறிவுரை கூறுகிறார்கள்!

ஆனால் அவரோ காத்தவராயன் கோயிலில் ஆவேசம் வந்த பூசாரியைப் போலக் கட்டுக் கடங்காமல் ஆடுகிறார்! கைகள் இரண்டாலும் சேற்றை வாரி வாரி வீசுகிறார்! பாவம் - என்ன செய்வார்? தந்திகள் என்றார்! தடுத்தனர் சிலர் அங்குள்ளோரே! இல்லை! இல்லை! இலட்சக்கணக்கில் தந்திகள் அனுப்ப வேண்டும் என்று அடித்துச் சொன்னார். முடுக்கி விட்டார்! இன்று நேற்றல்ல - அங்கே போய் என்றைக்கு அடியெடுத்து வைத்தாரோ அன்றைக்கே ஆரம்பித்து விட்டார் - அவதூறுகளை அள்ளி வீச! அங்குள்ளோரே கூட ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு ஆவேசம் - ஆபாசம் - தனிப்பட்ட முறையில் தாக்குதல் - குடும்பத்தையே விமர்சித்தல் - இப்படிச் சுமார் இரண்டு ஆண்டுக்கால எதிர்ப்பு முழக்கத்தின் உச்சகட்டம் - கிளைமாக்ஸ் - இப்போது பத்து பதினைந்து நாட்களாக விறுவிறுப்பாக நடந்து வருகிறது!

இந்திரா காங்கிரசையும், தி.மு.க.வையும் மோத விடுவதாக எண்ணிக் கொண்டு இந்திரா காங்கிரஸ்காரர்களைத் தூண்டிவிட்டுப் பார்க்கிறார்! பலிக்கவில்லை! பதைக்கிறார்!

உடனே அந்த ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு; கழகத் தொண்டர்களுக்காகக் கண்ணீர் வடிப்பது போல நடித்துக்காட்டி, அய்யோ இப்படிப் போய் இந்திரா காங்கிரசுடன் உறவு கொள்ளலாமா? என்று கழகத் தொண்டர்களை உசுப்பி விட்டுப் பார்க்கிறார்!

கழகத் தொண்டர்கள் இளிச்சவாயர்கள் அல்ல! காலையில் சென்று மாலையில் திரும்பிய இவரை, கடற்கரையில் அடையாளங்கண்டு கொண்டு பேசாதே! உட்கார்! என்று ஆணையிட்ட அடலேறுகள் என்பதை - அய்யோ; பாவம் - அடியோடு மறந்து விட்டார்!

கலகம் செய்வது இவருக்கு கைவந்தகலை! கடுகை மலையாக்கி, துரும்பை தூணாக்கி, தோழமையாளர்களிடையே கூட ஒரு தொய்வை ஏற்படுத்தி விடுவதில் வல்லவர் என்று பெயர் பெற்றவர்! எட்டாண்டுகளுக்கு முன்பு அந்தக் காரியத்தை இங்கிருந்து செய்தார் - இப்போது அங்குப் போய்ச் செய்கிறார்! ஆம் - அவர்களுக்குள்ளாகவே செய்கிறார் என்று அங்குள்ளோர் அங்கலாய்ப்பது காதில் விழுகிறது!

இந்தக் கலகமகாபுருஷர்; இந்திரா காங்கிரசைத் தூண்டிவிடுவதிலும் - கழகத் தொண்டர்களை உசுப்பிவிடுவதிலும் - பயன்படுத்திய ஆயுதங்கள், கூர் மழுங்கி விழுந்து விடவே - கோபம் கொப்பளிக்கக் குமுறுகிறார்!

பாரதத்தில் காந்தாரியின் கதை படித்திருக்கிறோம்; நம்பியதில்லை! இவரைப் பார்க்கும்போது - இவர் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு சுவரிலே மோதி மோதி உரத்த குரலெடுத்துக் கதறுவதைக் காணும் பொழுது - அந்தக் காந்தாரி கதையையும் நம்பித் தொலைய வேண்டியிருக்கிறது!

யார் அவர்? உடன்பிறப்பே! உனக்கே தெரியும் என்பதால் பெயரைக் கூறாமலே விட்டு விட்டேன்!

அன்புள்ள,

மு. க.

(30-05-1981)

915. கேள்விக்கு என்ன பதில்?

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். அவர்கள் - ஆம்; மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்; அவரே முன் வந்து அளித்துள்ள விளக்கங்கள் தவறானவைகளாகவும் - மக்களைத் திசை திருப்புகின்றவைகளாகவும் அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டி அவரிடத்திலே பதிலை எதிர்பார்த்தேன்!

எதிர்க்கட்சித் தலைவர் கேட்பதற்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா? என்கிறார் அவர்!

ஸ்டுடியோவை பதின்மூன்று லட்ச ரூபாய்க்கும் கட்சியில் அடமானம் வைத்து வருமான வரித் தவணைப் பாக்கியைக் கட்டினேன் என்றார்.

கட்சியில் கொடுத்தது மூன்று லட்ச ரூபாய்தான் என்று அவரது கட்சி பொருளாளர் சவுந்தரபாண்டியன் அப்போதே மறுப்பு அறிக்கை வெளியிட்டு விட்டார்!

கட்சிப் பொருளாளர் விடுத்த அறிக்கைக்கு எம்.ஜி.ஆர். ஓராண்டுக் காலமாகப் பதிலே சொல்லவில்லை!

கட்சி கொடுத்தது மூன்று லட்சம் போக மிச்சம் பத்து லட்சம் எங்கிருந்து வந்தது?

யாரோ எவரோ அல்ல - தகவல் தந்தது முதலமைச்சர்! அது தவறான தகவல் என்கிற போது அவர்தான் விளக்கம் கூற வேண்டும்.

சத்யா ஸ்டுடியோ - தொழிலாளர்களைப் பங்குதாரர்களாகக் கொண்டு நடைபெறும் ஒரு ஸ்தாபனம் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே அறிவித்திருக்கிறார்.

அது உண்மையானால் அந்தத் தொழிலாளர் நிறுவனத்தை, எம்.ஜி.ஆர். அவர்கள் எப்படி அடமானம் வைத்துக் கடன் பெற முடிந்தது?

அவரது கட்சியில் எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாருக்காவது இப்படி அடமானத்தின் பேரில் கடன் வழங்கப்பட்டிருக்கிறதா?

அமைச்சர்களாகப் பொறுப்பேற்பவர்களுக்குச் சொந்த வீடு சென்னையில் இருந்தால் அந்த வீட்டிலேயே அவர்கள் குடியிருக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் 1967-இல் அறிவித்தார்.

அமைச்சர்கள் குடியிருக்கக் கூடிய அளவுக்கு வசதி கொண்ட வீடுகள் அண்ணா அவர்களுக்கும் எனக்கும் இருந்த காரணத்தால் நாங்கள் சொந்த வீடுகளிலேயே குடியிருந்தோம்! அந்தச் சொந்த வீடுகளுக்கு அரசாங்கம் வீட்டு வாடகைப்படியாக மாதம் இருநூறு ரூபாய் வழங்கும்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சரானார். சென்னை தியாகராயநகர் ஆற்காடு முதலித் தெருவில் இருக்கும் சொந்த வீட்டில் குடியிருக்கப் போவதாக அறிவித்தார். வீட்டு வாடகைப்படி மாதம் இருநூறு பெற்றுக் கொள்ளப்பட்டது. திடீரென இரண்டு ஆண்டு கழிந்ததும் - அந்த வீட்டுக்கு மாதம் 1800 ரூபாய் (ஆயிரத்து எண்ணூறு) என்று வீட்டு வாடகைப் படியை உயர்த்திக் கொண்டு (ரெட்ராஸ்பெக்ட் எபக்ட்) கொடுத்து கடந்த காலத்திற்கும் சேர்த்து சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் வீட்டு வாடகைப்படியாக பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த ஊழலையும் முறைகேட்டையும் நாம் வெளிக் கொணர்ந்ததும் - அது என் சொந்த வீடு இல்லை! எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு! என்று பதில் அளித்தார்.

பல ஆண்டுக்காலம் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டில் வாடகையில்லாமல் இருந்தீர்களே; திடீரென்று இப்போது அரசாங்கப் பணத்தில் இவ்வளவு வாடகை கொடுக்க வேண்டிய அவசியமென்ன?

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு உமது சொந்த வீடு இல்லையென்றால் - ராமாவரம் தோட்டத்து வீடு; உமது சொந்த வீடுதானே; அண்ணா வகுத்த விதிமுறைப்படி அங்கேதானே முதலமைச்சர் குடியிருக்க வேண்டும்?

சொந்தவீடு வசதியாக இருக்கும் போது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டில் குடியிருந்து கொண்டு, மாதம் ஆயிரத்து எண்ணூறு ரூபாயை அரசாங்கத்திலிருந்து கொடுப்பானேன்?

இப்போது கடந்தவாரம் ஊட்டியில் அறிவித்திருக்கிறார்; மற்றொரு குழப்பமான தகவலை!

என்னுடைய வருமான வரிப் பாக்கிப் பற்றிச் சொல்கிறார்கள்! எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமான வீட்டை விற்று வருமான வரிப் பாக்கியில் இரண்டே முக்கால் லட்சம் இன்று காலை கொடுக்கப்பட்டுள்ளது.

இது அண்ணா பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அவரது ஊட்டிப் பொதுக் கூட்டப் பேச்சு!

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை இவர் எப்படி விற்க முடிந்தது?

இவர்தான் எம்.ஜி.ஆர். பிக்சர்சில் வாடகைக்கு இருப்பவராயிற்றே!

அவர் கூற்றுப்படி அது அவரது சொந்த வீடு இல்லையே!

அந்த வீட்டை வாங்கியவர் யார்?

தன்னுடைய வருமான வரிப் பாக்கிக்காக எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்றதாகக் கூறிவிட்டு, இப்போது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வருமான வரிப் பாக்கிக்காக விற்கப்பட்டது என்கிறாரே - இவற்றில் எது உண்மை?

திடீரெனச் சொந்த வீட்டில் குடியிருக்கும் அமைச்சர்களுக்கு மாதாமாதம் வீட்டு வாடகைப் படி இரண்டாயிர ரூபாய் என உயர்த்தி உத்திரவிட்டுள்ளாரே; எதற்காக?

அவர் வீட்டுக்கு ஏற்கெனவே அவர் உயர்த்திக் கொண்டிருப்பதை நியாயப்படுத்துவதற்காக இந்த ஏற்பாடா?

சொந்த வீடு கடல் போல ராமாவரம் தோட்டத்தில் இருக்கும் போது, அண்ணாவின் கொள்கைப்படி அந்த வீட்டில் குடியிருக்காமல் - எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டுக்கு வீணாக மக்கள் வரிப்பணத்தை வாடகையாகக் கொடுப்பானேன்?

எம்.ஜி.ஆர். பிக்சர்சில் இவருக்குள்ள உரிமை என்ன? பொறுப்பு என்ன?

அவரே வலிய வந்து சொல்லியுள்ள சில செய்திகளின் அடிப்படையிலேயே இந்தக் கேள்விகள் எழுந்துள்ளன!

யாரோ எவரோ அல்ல; இந்த மாநிலத்தின் முதலமைச்சர்!

எதிர்க்கட்சியின் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமா? என்று சமாளிக்கக் கூடாது!

இவற்றை ஒரு பத்திரிகை நிருபரின் கேள்விகளாகவாவது எடுத்துக் கொண்டு முதல்வர் எம்.ஜி.ஆர். பதில் அளித்திட வேண்டும்!

உடன்பிறப்பே! இந்தக் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கிறாரோ இல்லையோ - உன் வேலை; இந்தக் கேள்விகளை மக்கள் மத்தியில் பரப்புவது!

அன்புள்ள,

மு. க.

(31-05-1981)

916. சில நாடுகள் இருக்கின்றன!

உடன்பிறப்பே,

சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே...
ஊராட்சி முதல் பாராட்சி வரையில்
ஜனநாயக குழந்தை ஜனிப்பதே யில்லை!
கருவில் ஒரு புழுவாய் நெளிந்திடும் போதே
கலைத்து முடித்துக் களிப்பெய்திடுவர்!
தப்பித் தவறி பிறந்து தவழ்ந்தால்
தலையை நறுக்கிச் சூப்பு செய்வர்!
மக்களாட்சி மாண்பு மண்ணாய்ப் போக!
அல்லது மலடாய்ப் போகிடவே...
இறையருள் வேண்டி இறைஞ்சி நிற்பார்!

அங்கெல்லாம் ஆட்சி மாற்றம் அரைநொடியில் நடந்தேறுகிறது!

ஆள்பவர் நெஞ்சில் துப்பாக்கி ரவைகளின் அணியாரங்கள்! மணியாரங்கள்!

அடுத்தவர் மார்பில் அழுத்தக் கவசம்!
அவரும் படுத்தால் எழுவது ஐயமே!
துப்பாக்கிகளே,
துரைத்தனக் கூடாரங்களைக்
கட்டி முடிக்கும் கம்பங்களாக
வேலை பார்க்கின்றன! ஜோலி முடிகின்றன!
பட்டாபிஷேக நிகழ்ச்சிகளைப்
பட்டாக்கத்திகளே,

முன்நின்று நடத்துகின்றன!
மகுடாபிஷேக வைபவம் என்பது
குருதிக் குடங்களில்
கொண்டு வந்த செந்நீராவ்
கொலு மண்டபங்களைக்
குளிப்பாட்டுவதே ஆகும்!
சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே...
ஜனநாயகக் குழந்தை
ஜனிப்பதே இவ்லை!
குடைநிழலில் குஞ்சரம் ஊர்வார் –
அவர்தம்,
குடலுருவி மாலையாய்ச் செய்து...
அடுத்த பலிக்கடாவுக்கு
அழகாய்ச் சூட்டுவர்!
ஏற்றிப் போற்றுவர்! அவன்
எலும்பை எடுப்பர்;
எழில்மிகு செங்கோல்
எமக்கு இதுவே என்பர்!
அக்கோல் பிடித்தவன்
வைக்கோல் போர் போல
என்று எரிவான்? எவர்தான் அறிவார்?
முடியாட்சி போன்ற ஆட்சி!
முடியடா ஆட்சியை என்று – கொடுந்
தடியினால் முடிப்பதே பொருளே போலும்!
முடிந்து முடிந்து இன்னும் முடியாத
முடியாட்சிகளாகவே,
சில நாடுகள் இருக்கின்றன
அங்கே,
ஜனநாயகக் குழந்தை
ஜனிப்பதே இவ்லை!
சர்வாதிகாரச் சல்லாப உல்லாசங்கள்

சப்ர கூட மஞ்சத்தில்
எதேச்சாதிகாரத்தின்
ஏகபோகக் கேளிக்கைகள் – அந்த
இன்பக் கூத்தின் இடையே யாரும்
இம் என்றால் சிறைவாசம்!
ஏன் என்றால் வனவாசம்!
அஃதோர் வாழைமரம்!
அதன் கன்றே அதனைச் சாய்க்கும்!
ஏனோ தெரியவில்லை –
ஜனநாயக ஆலமரம்,
அந்த மண்ணில் விழுது விடுவதேயில்லை!
ஏன் தெரியவில்லை;
அடிமரத்தை வெட்டித்தான்
ஆணிவேரையும் பிடுங்கி விட்டார்களே!
இந்தியாவின் கங்குகளில்
இரு நாடுகள் முளைத்தன!
அங்கே,
இரத்தக் கழனியில் தான்
ஆட்சிப் பயிர்கள் விளைகின்றன!
முடிந்தது வாழ்வு முஜிபுருக்கென்று
வடிந்தது குருதி நம் விழிகளில் எல்லாம்!
ஆனால்
விடிந்தது ஒருநாள் வங்க பூமி
மலர்ந்தது! மலர்ந்தது! மகிழ்ந்தது உலகு!
வங்க பந்து வாழ்த்தினர் அவரை –
அந்தத்
தங்கபந்துவின் தலையைப் பந்தாய்
தரையில் உருட்டி ஆடிக்களித்தனர்!
இதோ இன்னொரு பந்தாட்டம்;
வங்கதேச விளையாட்டு அரங்கில்!
ஜியாவுர் ரகிமான் கபாலபந்து
கோல் கீப்பரைத் தாண்டி

சதிவலையில் சிக்கி உருண்டு
இரும்புக் கம்பத்தில் மோதி உடைந்தது!
சர்வாதிகாரம்;
அஃதோர் வாழைமரம் –
அதன் கன்றே அதனைச் சாய்க்கும்!
வங்க தேசத்தில்
ஜனநாயக வாடைக் கொஞ்சம் வீசியது
அதனையும் தடுத்து
இராணுவ தர்பாருக்கு
இரத்தினக் கம்பளம்
விரித்திடும் வேலை வேகமாய் நடக்கிறது!
சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே
ஜனநாயகக் குழந்தை
ஜனிப்பதே இல்லை!
தப்பித்தவறி பிறந்து தவழ்ந்தால்
தலையை நறுக்கிச் சூப்பு செய்வார்!
இதுவே இன்று,
வங்கம் வழங்கும்
வேதனைச் செய்தி!

அன்புள்ள,

மு. க.

(01-06-1981)

917. உன் காலணியை வாழ்த்துகிறாய்!

உடன்பிறப்பே,

ஐம்பத்தி ஏழு பிறந்த நாள் இன்று - உன்
அன்பின் அடிமை பிறந்த நாள் இன்று!
நடந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதும்
நடக்கும் பாதையில் வழுவாதிருப்பதும்
அரிமா நோக்கெனப் புகல்வர் அறிஞர்
அடியேன் அரிமா அல்ல எனினும்
கடந்த வழியைக் கருத்தில் கொண்டு
தொடர்ந்து புரிவேன் தமிழினத் தொண்டு!
கோனிலி என்பது எனை விதைத்த ஊர் - திருக்
குவளையூர் என்று தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து - தென்றல்
காற்று தமிழை திருஆரூர் பயின்றேன்!
ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி - அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர்படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!

அன்றுமுதல் இன்றுவரை
அய்யா பெரியார் அணைப்பு!
ஆரத்தழுவிடும்
அண்ணாவின் ஈர இதய நனைப்பு!
அன்பு உடன்பிறப்பே! எனக்கு
உனையன்றி வேறென்ன நினைப்பு!

தண்டவாளத்தில் படுத்த போதும் -
தனிமைச் சிறையில் வறுத்தபோதும் -

கண்ட அண்ணன் வடித்த கண்ணீர் - என்
களைப்பைத் தீர்க்கத் தெளித்த பன்னீர்!
ஆண்டு இருபதைக் கடந்த வயதில்
பாண்டியில் என்னை வதைத்த காலை
தந்தை பெரியார் தடவிய மருந்தே - என்
சிந்தை குளிர்ந்த அமுத விருந்தாம்!

அஞ்சுகத்தாய் முத்துவேலர்
எனைப்பெற்ற போது -
இசைபாடி மகிழ்விப்பான்
இவனென்று காத்திருந்தார்!
இவனோ;
வசைபாடும் அரசியலின் மத்தியிலே
வசமாகச் சிக்கிக் கொண்டான்!

இலட்சியமென்பது;
எட்டிப்பறித்திடும் மல்லிகையல்ல!
ஏறிப்பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடி நாட்டல்!

இடையில் தோன்றிடும் ஆட்சி என்பது
நடையில் தோன்றிடும் களைப்பு நீங்க
இயற்கை வழங்கிடும் நிழற்கொடையென்று
இலட்சியப் பயணம் தொடர்தல் வேண்டும்!

அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்
உற்றார் உறவினர் போல நடித்து
பற்றுக் கொண்ட பதவியைத் தேடி
விற்றுக் கொண்டார் தம்மை எனினும்

வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும் போது
கவலை எதற்கு எனக்கு?

கழகம் தான் நமக்குக் கிழக்கு!
குதிரை, கீழே தள்ளிக் குழியும்
பறித்தது என்பர்! இங்கே

நம்மைக் குதிரையாக்கிச் சவாரி செய்தோர்
நமக்கே குழிபறிக்க வந்த கதை!
ஏறிய ஏணியை உதைத்த கதை!
நன்றி கொன்ற கதை!

கதையாகப் போன இத்தனை வதைகளையும்
கண்மணியே! உடன்பிறப்பே!
உனை நினைத்தே தாங்கிக் கொண்டேன்!
வாழ்த்துகின்றாய் என்னை!
வணங்குகின்றேன் உன்னை!

நீ வாழ்த்துவது; கிரீடத்தையல்ல!
கிரீடம் இருந்தாலும் இல்லா
விட்டாலும் வாழ்த்தும் பண்பு
கொண்ட உடன்பிறப்பு நீ!

உனக்காக உழைக்கின்ற இந்தக்
காலணியை வாழ்த்துகின்றாய்!
இதற்குத்தான் மெருகு போடுகின்றாய்!
ஏழை எளிய உடன்பிறப்பு நீ!
தேய்ந்தாலும் இந்தக் காலணியை

ஓய்ந்து போ என விடமாட்டாய்!
உனைவிட்டு அகலாமல்
ஓய்வின்றி உழைப்பதற்கே
உறுதி சொல்வேன்;
உடன்பிறப்பே இந்தப் பிறந்த நாளில்!

அன்புள்ள,

மு. க.
(02-06-1981)

918. கண்ணீரே - கவசம்!

உடன்பிறப்பே,

இலங்கையில் மீண்டும் கொந்தளிப்பு! யாழ்ப் பகுதியில் தமிழினத்தின் நரம்புகள் அறுக்கப்படுகின்றன! அவல ஓசை எழுகிறது! அடிக்கடி குமுறிக் கிளம்பும் கொடுமைக் கடலின் அலைக்கரங்கள், தமிழ்ச் சாதி மக்களை கிளிஞ்சல் பொடிகளாக ஆக்குவதற்கு மீண்டும் தாவிக் கிளம்பி விட்டன!

வருகிற செய்திகள், நெஞ்சில் நெருப்பைக் கொட்டுகின்றன!

நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர் யோகேஸ்வரன் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டதாகவும் - தமிழர் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதாகவும் - சிங்களப் போலீசார், சாதாரண உடையில் தமிழர்கள் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருவதாகவும் - வந்துள்ள செய்திகளை விட வராத செய்திகள் அதிகமென்றும் - பாதுகாப்புப் படையினரே பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குள் நுழைந்து ஒரு பாலகனைச் சுட்டுக் கொன்றார்கள் என்றும் - தமிழர் பிணங்கள் விழுந்து கொண்டேயிருக்கின்றன என்றும் - இலங்கையிலிருந்து வரும் தகவல்கள் நம் இதயத்தைப் பிழிந்தெடுக்கின்றன!

இலங்கை முழுவதும் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது! இராணுவத்தின் ஆதிக்கத்தில் இலங்கை பூமி விடப்பட்டிருக்கிறது! கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் சில நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர்களும் அதிபர் ஜெயவர்த்தனே அவர்களின் ஆணைப்படி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவையனைத்தும் ஏதோ உரிய நடவடிக்கைகள் எடுத்ததைப் போலத் தோற்றமளித்தாலும் - இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக இடைவிடாது போர்க்கோலம் கொண்டிருக்கிற இலங்கை

வாழ் சிங்களவர்களின் இனவெறியை அகற்றுவதற்கு ஏற்ற மனிதாபிமான நடவடிக்கைகள் இதுவரையில் தக்க வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

மாடாக உழைத்து இலங்கைத் தீவுக்கோர் மகிமையைத் தந்த தமிழின மக்கள் இன்று மண்ணில் நெளியும் புழுவாக மிதிக்கப்படுகின்றனர்!

தமிழ் இனமே! ஈழத்து மண்ணில் உதித்து, ஈழத்தை வளர்த்து வாழ வைத்த தமிழ் இனமே! ஈரத்தை இதயத்தில் காய வைத்துக் கொண்டோர், உன்னை வாட்டி வதைக்கும் கொடுமை கேட்டு, அய்யகோ! என் காதுகள் செவிடாகி விடவில்லையே! என்று அலறத்தான் தோன்றுகிறது!

எத்தனை இன்னல்கள் உனக்கு! எத்தனை தடவைகள்! எத்தனை ஆண்டுகளாக!

அன்றொரு நாள் தமிழனைக்கட்டி வைத்து, அந்தத் தமிழனுக்கெதிராகவே அந்தத் தமிழனின் தமிழச்சியை மானபங்கம் செய்தனர் - அச்சம் - நடுக்கம் - அடுத்து என்ன நடக்குமோ என்ற துடிப்பு - இவைகளினூடே எத்தனை ஆண்டுகளாக அங்குள்ள நம்மினம் ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பது?

இந்த இருள் விடியவே விடியாதா? விமோசனம் பிறக்கவே பிறக்காதா?

மத்திய அரசைப் பொறுத்தவரையில் இது இன்னொரு நாட்டுப் பிரச்சினை! மிகக் கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும்தான் அணுகிட வேண்டும்! நாம் அறியாததல்ல! ஆனால் மனிதாபிமானப் பிரச்சினை! ஐந்து கோடித் தமிழர்கள் இங்கேயுள்ளனர் இந்தியாவில்! ஆம்; தமிழ்நாட்டில்! அந்தத் தமிழ் இனத்தின் ஒரு பகுதி, இலங்கையிலே வேட்டையாடப்படுவதை எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்? இந்த உணர்வை அறியமாட்டாதவர் அல்ல பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்!

தானாடாவிட்டாலும் தன் தசையாடும் என்ற இரத்தபாசம் - இலங்கையில் அவதியுறும் தமிழினம் குறித்து இங்குள்ள தமிழினத்துக்கு உண்டு!

அந்தப் பாச உணர்வே; இதோ கண்ணீராக வழிகிறது! இரத்தக்கண்ணீராக வழிகிறது!

இலங்கையில் துடித்திடும் தமிழ்ச்சாதி மக்களே! எங்கள் கண்ணீரைத்தான் உங்களைப் பாதுகாக்கும் கவசமாக எங்களால் தர முடிகிறது!

வேறென்ன செய்ய நாங்கள்? அய்யோ! வேறென்ன செய்ய நாங்கள்?

அன்புள்ள,

மு. க.

(06-06-1981)

919. விடை ஒழுங்காக வருமா?

உடன்பிறப்பே,

சட்டம் நமது முதலமைச்சரின் கையில் சிக்கிக் கொண்டு குரங்காட்டம்தான் போடுகிறது! எதற்கெடுத்தாலும் சட்டம், தன் கடமையைச் செய்யும் என்ற வாசகத்தை அவர் சொல்லத் தவறுவதேயில்லை. ஆனால் அந்தச் சட்டம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் எப்படியெல்லாமோ இவரது நிர்வாகத்தில் தனக்கு வேண்டியவர்களைக் கண்டால் பணிந்து போகிறது - வேண்டாதவர்களைக் கண்டால் பழிவாங்கத் துடிக்கிறது!

எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தினால்; அதுவும் அரசு ஆணையின் நகல் தாளைக் கொளுத்தினால் அந்தத் தீயிலிருந்து ஊரே எரிந்து சாம்பலாகிவிடுமென்று சொல்லி, அதற்காக சட்டப் பிரிவுகளைத் தேடியலைந்து வழக்குகள் விசாரணைகள் - தண்டனைகள்; இத்யாதி - இத்யாதி!

தோழமைக் கட்சிகள் முன்கூட்டியே முதலமைச்சரிடம் பேசி முடித்துக்கொண்டு போராட்ட நாடகங்களை நடத்தினால் அவர்களுக்கு வழக்கும் கிடையாது! தண்டனையும் கிடையாது! சட்டமும் கிடையாது! பிரிவும் கிடையாது! சட்டம், தன் கடமையைச் செய்யும் என்ற பொன்மொழியை முதலமைச்சர் உதிர்ப்பதும் கிடையாது!

எதிர்க்கட்சிகள் - தோழமைக் கட்சிகள் என்ற அளவில் மட்டும் இந்தச் சட்டங்கள், பாரபட்சமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று கருதக் கூடாது! அரசாங்கத்தின் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடுகிற அமைப்புக்களின் மீதும் - அல்லது அமைப்புக்களின் தலைவர்களின் மீதும் - எம்.ஜி.ஆரின் சட்டம்; ஆளுக்கொரு விதமாகச் செயல்படுகிறது!

அதற்கு ஒரு எடுத்துக்காட்டுத்தான் ஒரு நியாயமான பிரச்சினைக்காக அடையாள உண்ணாவிரதம் கடைப்பிடிக்க முனைந்த என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் சிவ.இளங்கோவும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டு சிறையிலே இன்னமும் அடைக்கப்பட்டிருக்கிற நிகழ்ச்சியாகும்.

வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், சில முறையீடுகளை, முன் வைத்து அரசை அணுகினர். பயனில்லை. மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சுமார் எண்ணூறு பேர் கைதாகி ரிமாண்ட் செய்யப்பட்டனர். வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சட்டமன்றத்தில் இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்ட போது, போராட்டத்தை நிறுத்திக் கொண்டால் பேச்சுவார்த்தை நடத்தத் தயார், என்று நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அவையில் அறிவித்தார். போராட்டத்தை நிறுத்திவிட்டு அவர்கள் அந்தத் துறை அமைச்சரிடம் அலைந்தனர். அவரோ முதலமைச்சரிடம் கேட்டுச் சொல்வதாக அறிவித்து விட்டார். அலைந்ததுதான் மிச்சம்!

வழக்குகளையாவது திரும்பப் பெறுங்கள் எனக் கேட்டனர்! நடக்கவில்லை! எண்ணூறு அலுவலர்க்கும் மீண்டும் வேலையில் சேருகிற வாய்ப்பே புறக்கணிக்கப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு விட்டதாம்!

இந்தப் பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று கோரி ஜூன் எட்டாம் நாள் முதல் மூன்று நாட்கள் அடையாளத் தொடர் உண்ணாவிரதம் இருப்பதெனப் பாதிக்கப்பட்டவர்கள் அறிவித்தார்கள்.

அந்த உண்ணாவிரதத்திற்கு சிவ.இளங்கோ தலைமை வகிப்பதென முடிவு செய்யப்பட்டது.

உண்ணாவிரதம் இருக்கும் இடத்திற்கான அனுமதி கோரி முறைப்படி காவல்துறைக்கு மனுச் செய்து கொள்ளப்பட்டது. வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு முன்னால் எதிரிலேயுள்ள நடைபாதையையொட்டி உண்ணாவிரதம் இருப்பதற்கான இடத்தைக் காவல்துறையினர் அனுமதித்து, ஜூன் ஐந்தாம் தேதியிட்ட அனுமதிக் கடிதத்தை வழங்குகின்றனர்.

காவல்துறையினர் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு, அவர்கள் வழங்கிய அனுமதியுடன் சிவ.இளங்கோவும்,

அவருடன் வயல் விளக்க அலுவலர் சங்கத் தலைவர் முத்துக்கிருட்டிணன், மற்றும் கோபால், குமார், திருமதி அனுசூயா ஆகியோரும் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் இடத்திற்கு ஜூன் எட்டாம் நாள் காலையில் சென்றனர்.

அங்கே காவல்துறையின் புதிய திடீர் உத்தரவு எம்.ஜி.ஆரின் ஆணைப்படி காத்திருந்தது!

என்ன உத்திரவு தெரியுமா? விசுவாசமுள்ள அலுவலர்கள், சிவ.இளங்கோ நடத்தும் உண்ணாவிரதத்தை தடுக்கப் போகிறார்கள் என்று ஊர்ஜிதமான தகவல்கள் வந்துள்ளதால் - சட்டம் ஒழுங்கு அமைதியைக் காத்திட - இந்த உண்ணா விரதத்திற்கு வழங்கிய அனுமதியை ரத்து செய்துவிட்டு - உண்ணாவிரதமிருப்போரை அனுமதிப்பதில்லையென்ற உத்திரவுதான் அது!

ஆணையைக் காட்டினர்! இளங்கோவையும் மற்றவர்களையும் கைது செய்தனர்! ரிமாண்ட்டில் வைத்தனர்! வழக்கும் தொடுத்துள்ளனர்!

முதலில் கொடுத்த அனுமதியை ரத்து செய்து பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட - விசுவாச ஊழியர்கள் என்ற பெயரால் ஒரு கற்பனைச் செய்தி!

பாவம்; காவல்துறையினர்! முதலில் அவர்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டு அனுமதியை வழங்கி விட்டனர்.

ஏன் அனுமதித்தாய்? என்று முதலமைச்சர் சீறினார்!

இந்த முதல்வர்தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன்செய்து - மதுவிலக்குக் கைதியை ஜாமீனில் எடுக்க வருபவரையும் கைது செய்யச் சொல்பவராயிற்றே!

அந்த வழக்கப்படி எழுந்த அவரை சீற்றத்தைத் தாளாத அதிகாரிகள், உடனடியாக அடுத்த ஆணையைப் பிறப்பித்து - அதற்கு ஒரு நொண்டிக் காரணத்தையும் கற்பித்து - விசுவாச ஊழியர்கள் மீது பாரத்தைப் போட்டு இளங்கோவையும் மற்றவர்களையும் சிறையில் அடைத்து வழக்கைத் தொடுத்திருக்கிறார்கள்.

இந்த வெறுப்பு அரசியலையும் பழி வாங்கும் போக்கையும் எதிர்த்து மாநில முழுதுமுள்ள அரசு அலுவலர்கள்

கொதிப்படைந்திருக்கிறார்கள். ஆங்காங்கு ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள், தொடர் நிகழ்ச்சிகளாகி விட்டிருக்கின்றன!

மேலும் நிலைமை மோசமாகாமல் இந்த அரசு நடந்து கொள்ளப் போகிறதா?

அல்லது தனது பழைய பந்தாவிலேயே - மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற மந்திரத்தையும் கருங்காலிகளைக் கொண்டு கவனித்துக் கொள்ளலாம் என்ற பிரித்தாளும் தந்திரத்தையும் நம்பியிருக்கப் போகிறதா?

விடை ஒழுங்காக அளிக்கப்படா விட்டால் - விளைவுகளை ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(13-06-1981)

920. அடடாவோ! வீர கர்ச்சனை!

உடன்பிறப்பே,

இதோ ஒரு பொன்மொழி! இல்லை! இல்லை! புனித மொழி! அருள் மொழி! அருட்திருமொழி! வீர முழக்கம்! தீர துந்துபி! வெற்றி முரசு! ஜெயபேரிகை! எழுச்சி எக்காளம்!

என்ன; திருதிருவென விழிக்கிறாயா? விழிக்காதே! முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் பேச்சைப் படித்துப்பார்!

நம்மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இனி பதில் சொல்வதில்லையென்று முடிவு செய்துள்ளேன். அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் கூட பதில் சொல்ல வேண்டாம்.

அருப்புக்கோட்டையை அடுத்த பாளையம்பட்டியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியொன்றில் குடி தண்ணீர் தொட்டியைத் திறந்து வைத்துவிட்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், வீர தீர பராக்கிரமத்தோடு வெளியிட்ட அறிவிப்புதான் இது!

கூறப்படும் குறைகளுக்கோ குற்றச்சாட்டுகளுக்கோ இனிமேல் அவரும் பதில் சொல்ல மாட்டாராம்; அவரது அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் பதில் சொல்லக் கூடாதாம்!

நாட்டையாளுகிற நாயகர்தான் இப்படிக் கூறுகிறார்!

குறை கூறுவோருக்கும் குற்றம் சாட்டுவோருக்கும் விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பிலே இருப்பவர்கள்; இனிமேல், வாயே திறக்காமல் ஊமைகளாக உலவப் போகிறோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதின் மர்மம் என்னவென்று புரிகிறதா?

எதிர்க்கட்சித் தலைவர் கேட்பதற்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா? என்று இரண்டு வாரங்களுக்கு முன்பு எதிர்க்கேள்வி போட்டு சமாளித்துக் கொண்டவர்; இப்போது ஒரு திட்டவட்டமான முடிவுக்கே வந்து - பேசாமடந்தைத்தனமாகவே இருந்து விடுவது எனப் பிரகடனப்படுத்தியுள்ளார்!

அதற்காகப் பேசாமல் இருந்து விடுவாரா? பேசிக்கொண்டேதான் இருப்பார்!

ஒருபுறம் பெரியார் பெயரைச் சொல்லி அவரது தொண்டர்களை ஏமாற்ற வேண்டும் - இன்னொருபுறம் சங்கராச்சாரியார் பெயரைச் சொல்லி அவரது பக்தர்களை ஏமாற்ற வேண்டும் - அண்ணா அவர்களால் இரட்டைக் குழல் துப்பாக்கி எனக் கூறப்பட்ட திராவிடர் கழகத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அழித்திட ஒரு திசையில் முனைய வேண்டும் - அதே நேரத்தில் அண்ணா பெயரையும் சொல்லி அரசியல் நடத்த வேண்டும் - தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கத் தாயின் மீது ஆணையிட்டு மது விலக்குச் சட்டத்தை மிகக் கடுமையான கறுப்புச் சட்டமாகவும் ஆக்க வேண்டும். பிறகு அதே தாயாரை மூகாம்பிகை அம்மனாக ஆக்கி - சத்தியத்தைத் தூக்கி எறிந்துவிட்டு தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகப் பல்லாயிரம் மதுக்கடைகளைத் திறக்க வேண்டும் -

இது போன்ற முரண்பாடான செயல்களின் மொத்த உருவமாக இருக்கின்ற ஒரு முதல்வர் - இவைகளைப் பற்றியெல்லாம் பேசாமல் இருந்து விடுவாரா? பேசுவார்!

ஆனால் நாம் எடுத்து வைக்கிற குற்றச்சாட்டுக்கள் என்னதான் ஆதாரப்பூர்வமானதாக இருந்தாலும் அவற்றுக்கு அவரும் பதில் சொல்ல மாட்டார்! அவருடைய அமைச்சர்களும் பதில் சொல்ல மாட்டார்கள்!

ஃ கப்பல் பேர ஊழல் குறித்து சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதாக பேரவையில் அறிவித்தீரே; அந்த நீதிபதி விசாரணை கேட்டு இன்றுள்ள பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிக் கேட்டு ஏற்பாடு செய்வீரா?

இந்தக் கேள்விக்கு எம்.ஜி.ஆர். பதில் சொல்ல மாட்டார்! காரணம்; பதில் சொல்வதில்லையென்று உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஃ உம்மால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் யாராயினும் அவர்கள் மீது விசாரணை வைத்து அவர்கள் நிரபராதிகள் எனத் தெரிந்தால்தான் உமது கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படும் என அறிவித்தீரே; அய்யா! உத்தமப் புத்திரரே! அப்படித்தான்

அவர்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டு பதவிகளைக் கொடுத்தீரா?

எம்.ஜி.ஆர். இதற்கும் பதில் அளிக்க மாட்டார்! பதில் அளிப்பதில்லையென்று விரதம் பூண்டு விட்டார்!

ஃ எரி சாராய ஊழல் 1978 முதல் நடந்திருக்கிறது என ஆதாரங்களுடன் நேருக்கு நேர் - சபையில் எடுத்துக் காட்டப் பட்டிருந்துங்கூட 1980 அக்டோபர் நவம்பர் என இரண்டு மாதங்களுக்கு மட்டும் விசாரணை நடத்துமாறு கைலாசத்தை நாடி - அவர் கைவிட்ட பிறகு - சதாசிவத்தைச் சரண் அடைந்திருப்பதின் மர்மம் என்ன?

முதல்வர் பதில் அளிக்க மாட்டார்! அவர் பதில் அளிப்பதில்லையென்ற முடிவை, பாளையம்பட்டியில் அறிவித்து விட்டார்.

ஃ அரசே ஏற்று நடத்தாமல் - அல்லது கூட்டுறவுத் துறைக்கும் கொடுக்காமல் - அல்லது முன்பு இருந்தது போல டிஸ்டிலரிகளுக்கு பிளண்டிங் பாட்டிலிங் உரிமங்களை வழங்கி - ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் கையூட்டுக்காரியம் நடைபெற்றிருக்கிற தகவல் நாடு முழுதும் பரவியுள்ளதே; இதற்கு என்ன பதில்? மது விலக்கை ரத்து செய்ததின் மர்மம் இதுதானோ?

இதற்கும் பதில் கிடைக்காது! முதல்வரோ, அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ வாய்திறக்கக்கூடாதாம்! கப்சிப்! கபர்தார்!

ஃ வசதியான வீடுகள் சென்னையில் இருந்தால் அமைச்சர்கள் சொந்த வீட்டில்தான் குடியிருக்க வேண்டுமென அண்ணா சொன்னாரா இல்லையா?

ஃ அதற்கு இருநூறு ரூபாய்தான் வாடகைப்படியென நிர்ணயித்தது உண்டா இல்லையா?

ஃ சென்னை தியாகராய நகர் ஆற்காடு முதலித் தெரு வீட்டைத் தனது சொந்த வீடு என முதல்வர் தெரிவித்து இருநூறு ரூபாய் வாடகைப்படி பெற்றுக்கொண்டு குடியிருந்தது உண்டா இல்லையா?

ஃ திடீரென அந்த வீட்டுக்கு மாதம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் வாடகைப்படியென உத்திரவிட்டு, அந்தத் தொகையை இரண்டு ஆண்டு ரெட்ராஸ்பெக்ட் எபக்ட்டுடன் பெற்றுக் கொண்டு வருவது உண்மையா? இல்லையா?

ஃ இப்போது அதை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு என்றும் தனக்கு சம்பந்தமில்லை என்றும் எம்.ஜி.ஆர். கூறுவது உண்மையா? பொய்யா?

ஃ உண்மையென்றால் ராமாவரம் தோட்டத்தில் சொந்தமான பெரிய வீடு இருக்கும் போது ஆற்காடு முதலி தெருவில் அரசாங்க வாடகையில் ஒரு வீடு எதற்காக? இதுதான் அண்ணாவின் ஆணையை நிறைவேற்றும் அழகா?

ஃ வருமான வரிப் பாக்கி பதின்மூன்று லட்சம் கட்ட ஸ்டுடியோவை கட்சிக்கு அடமானம் வைத்ததாகக் கூறினீர் - கட்சி கொடுத்தது மூன்று லட்சம் தான் என்றார் கட்சியின் பொருளாளர்! மீதி பத்து லட்சம் கட்டியது எப்படி?

ஃ ஸ்டுடியோ தொழிலாளர்களின் சொத்து என்றும் தனிப்பட்ட தனக்கு சொந்தமில்லையென்றும் அறிவித்துவிட்டு - தனிப்பட்டவர் வரிப் பாக்கிக்காக அந்த ஸ்டுடியோவை எப்படி அடமானம் வைக்க முடிந்தது? இதில் எது உண்மை?

ஃ இப்போது வருமான வரிப் பாக்கி இரண்டே முக்கால் லட்ச ரூபாய்க்கு வீட்டை விற்றுக் கட்டினேன் என்று ஊட்டியில் கூறினீர்! எந்த வீடு எனக் கேட்டதும் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு என விளக்கினீர்? உமது வரிப் பாக்கிக்கு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்றிட உமக்கு ஏது உரிமை?

ஃ விற்கப்பட்டது யாருக்கு? வாங்கியது யார்? அதிலே அடங்கியுள்ள திரை மறைவு ரகசியம் என்ன?

உடன்பிறப்பே, இப்படி அடுக்கடுக்காகப் பல கேள்விகள் கிளம்பிடவே - அத்தனையும் ஆதாரபூர்வமான கேள்விகளாக இருந்திடவே - பதில் அளிக்க முடியாத எம்.ஜி.ஆர்.;

திடீர் அறிவிப்பைச் செய்து விட்டார்; இனிமேல் எந்தக் குற்றச்சாட்டுக்கும் பதில் கிடையாது! கிடையாது! என்று!

அடடாவோ! இதை வீர கர்ச்சனையென்று கூறாமல் வேறென்ன கூறுவது!

அன்புள்ள,

மு. க.

(14-06-1981)

921. கேள்வியின் விஸ்வரூபம்!

உடன்பிறப்பே,

நாராயணசாமி நாயுடு சமூக விரோதி!

பனவிடலைச்சத்திரம் படுகொலைக்கு அவரே காரணம்! அதனால் அவரைக் கைது செய்திருக்கிறோம்

அவரை ஜாமீனில் விடவே முடியாது. அவர்மீது கொலைகுற்றம், கொலையைத் தூண்டிய குற்றம், கொலை செய்யச் சதி செய்த குற்றம் - இத்தனை குற்றங்கள்! 302, 307, 120பி; இன்னும் பல சட்டப் பிரிவுகளில் வழக்கு தொடர்ந்துள்ளோம்

அவரை ஜாமீனில் விட்டாலும் கூட பொதுக் கூட்டங்களில் அவர் பேச அனுமதி கிடையாது! கூட்ட மேடைக்கு வந்தால் கை, கால்களை அசைக்கலாமே தவிர உதடுகளை அசைக்கக் கூடாது

1980 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு எம்.ஜி.ஆர். அவர்கள் மேற் கூறப்பட்ட இத்தனை முறையிலும் விவசாய சங்கத் தலைவர் திரு. நாயுடு அவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தார்.

நாயுடுவின் கிராமத்து வீடு, போலீசாரால் முற்றுகையிடப் பட்டது! வீட்டிலிருந்த பெட்டிகளைக் கூடத் தூக்கிக் கொண்டு போய் காவல் நிலையத்தில் போட்டனர்.

திடீரெனப் பாராளுமன்றத் தேர்தல் வந்தது! எம்.ஜி.ஆர். கட்சி படுதோல்வி யடைந்தது! ஆட்சி கலைக்கப்பட்டு; சட்ட மன்றத் தேர்தலுக்காக தேதி குறிக்கப்பட்டது. அப்போது எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் என்ன பேசினார்?

நாராயணசாமி நாயுடு மீது போடப்பட்டுள்ள கொலை வழக்கை வாபஸ் வாங்க வேண்டும்! வாபஸ் வாங்காவிட்டால் போராட்டம் நடத்துவேன்.

இவரேதான் வழக்கையும் போட்டார்! இவரேதான் கவர்னர் ஆட்சியைப் பார்த்து; வழக்கை வாபஸ் வாங்குக என்றும் குரல் கொடுத்தார்!

அந்தக் கொலை வழக்கைப் பொய்யாக ஜோடித்துப் போட்ட போதே எம்.ஜி.ஆர். ஆட்சியை நோக்கி எல்லாக் கட்சிகளுமே எதிர்ப்புக் குரல் கொடுத்தன! அப்போது அந்தக் குரலை அலட்சியப்படுத்திய எம்.ஜி.ஆர். அவர்கள்; திடீரெனச் சட்டமன்றத் தேர்தல் வந்ததும் - அய்யோ! இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா? என்பது போல - நாயுடு மீது நான் போட்ட வழக்கை; கவர்னர் ஆட்சியே வாபஸ் வாங்கு! எனக் கதறினார்! கண்ணீர் உகுத்தார்!

இவருக்கு முன்பே பல கட்சிகளின் கோரிக்கையாக இருந்த அந்த வழக்கு வாபஸ் கவர்னர் ஆட்சியில் நடைபெற்றது! நாயுடு, வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்!

நாயுடு வீட்டுக்கு எம்.ஜி.ஆர். நடையாய் நடந்தார்! நடந்ததையெல்லாம் மறந்து விடுக என்று கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்!

மத்திய அரசு ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் விவசாயிகளின் எல்லாக் கடன்களையும் ரத்து செய்து விடுவதாகக் கூறினார். ஜப்தி போன்ற நடவடிக்கைகளே இனிமேல் தலைகாட்ட மாட்டா என்று மேடைக்கு மேடை உறுதியளித்தார்!

நாயுடுவை மட்டுமா; தமிழ்நாட்டு மக்களையே ஏமாற்றி - வானத்தை வில்லாக வளைக்கிற வாக்குறுதிகள் - மணலைக் கயிறாகத் திரிக்கிற உறுதிமொழிகள் - அனைத்தையும் வாரியிறைத்துச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

தேர்தல் முடிந்த பிறகு - மீண்டும் விவசாயிகள் மீது தாக்குதல்! நாயுடுவுக்கு மறுபடியும் சமூக விரோதி பட்டம்! ஓநாய் என்று வர்ணிக்கும் அரசாங்க விளம்பரங்கள்!

நான் என்ன செய்வது? மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லையே! என்று பழி போட்டுத் திசை திருப்பும் படலம்!

திருச்சியில் விவசாயிகள் நடத்திய பேரணியில் போலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதல்! அந்தப் பேரணியே நடைபெறாமல்

செய்யப்பட்டது! அதைச் செய்த எம்.ஜி.ஆர். ஆனந்தக் கூத்தாடினார்!

சிறு விவசாயிகளுக்கு மட்டுமே கடன் ரத்து என சட்டசபையில் அறிவிப்பு!

பின்னர் செப்டம்பர் 15 அண்ணா சிலைக்கருகே உரையாற்றிய எம்.ஜி.ஆர். மேலும் இருநூற்றி நாற்பது கோடி ரூபாய் ரத்து செய்யப்படும் என விவசாயிகளுக்கு உறுதி மொழி அளித்தார்! எல்லா ஏடுகளிலும் செய்தி வந்தது!

பிறகு அப்படிப் பேசவில்லையென்று ஒரேயடியாக மறுத்து விட்டார்!

ஊட்டிக்குச் சென்றார்! விரைவில் நாராயணசாமி நாயுடு வீட்டுக்குச் சென்று அவருக்கு மாலை போடுவேன் என்றார்!

அடுத்த வாரம் அதே நாயுடு அவர்கள் திறந்து வைப்பதாக இருந்த ஒட்டன்சத்திரம் விவசாய சங்கக் கட்டிடத்தை ஒட்ட இடித்துத் தூளாக்கி விடுமாறு உத்திரவு பிறப்பித்தார்!

இதோ - சேலத்திலே அவரது ரசிகர்களின் மாநாடு! அதற்கான ஊர்வலத்திற்கு லாரிகளில், பஸ்களில் ஆட்கள் வரலாமாம்! அதற்குத் தடை கிடையாதாம்!

ஆனால் அதே நாளில் திருச்சியில் நாயுடு தலைமையில் விவசாயிகள் பேரணி! அந்தப் பேரணிக்கு விவசாயிகள் யாரும் பஸ்களிலோ - லாரிகளிலோ வரக்கூடாதாம்!

திருச்சி நோக்கி வரும் பஸ்களையெல்லாம் ஆங்காங்கு வழியிலேயே போலீசார் நிறுத்தி, அதில் விவசாயிகளைப் போலத் தோன்றமுடையவர் யார் இருந்தாலும் அவர்களையெல்லாம் கீழே இறக்கி விட்டு - அவர்களைத் திருச்சிக்கே செல்ல முடியாதபடி ஆக்கியிருக்கின்றனர் என்று எந்தக் கட்சியும் சாராத பத்திரிகைகளில் கூட செய்திகள் வெளிவந்துள்ளன!

தேர்தலுக்கு முன்பு தேனாக இனித்த விவசாயிகளின் சங்கம்; இன்று எம்.ஜி.ஆருக்குத் தேளாகத் தெரிவது ஏன்?

சேலத்திலே அவர் கட்சி மாநாட்டுக்கு - அல்ல! அல்ல! அவரது ரசிகர்கள் மாநாட்டுக்கு ஒரு சட்டம்!

திருச்சியிலே விவசாயிகள் பேரணிக்கு ஒரு சட்டமா?

இந்தக் கேள்விக்கெல்லாம் அவர் பதில் சொல்ல மாட்டார்! பதில் சொல்வதில்லையென்று உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறார்!

அவர் பதில் சொல்ல வேண்டாம்! ஆனால் சேலம் மாநாட்டுக்கு ஒரு நீதி - திருச்சி பேரணிக்கு ஒரு நீதியா? ஏன் இந்தப் பாரபட்சம்? ஏன்? ஏன்? ஏன்?

இந்தக் கேள்வி; அவர் பதிலை எதிர்பார்க்காமலே விசுவரூபம் எடுக்கத்தான் போகிறது!

அன்புள்ள,

மு. க.

(15-06-1981)

922. தீயணைக்கும் படை வரும்!

உடன்பிறப்பே,

சேலத்தில் நடைபெற்ற ரசிகர் மன்ற மாநாட்டில் இந்த மாநிலத்தையாளும் முதலமைச்சர்; சட்டம் ஒழுங்கு அமைதியை மிக அருமையாகக் காத்திடும் வண்ணம் (?) பேருரையாற்றியிருக்கிறார்.

தூங்கும் புலியை இடறுகிறார்கள். நான் முதலமைச்சராக இருக்கிறேன் என்பதற்காக எம்.ஜி.ஆர். மன்றத்தினர் சும்மா இருக்க மாட்டார்கள். திரும்பத் தாக்கினால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிடுமென்று சும்மா இருக்கிறார்கள். ஆனால் இனி மேலும் தாக்கப்பட்டால் எம்.ஜி.ஆர். மன்றத்தினரைப் பார்த்து சும்மா இருங்கள் என்று நான் இனி மேலும் சொல்லமுடியாது!

சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநிறுத்த வேண்டிய முதல்வரின் பேச்சு இது!

இப்போது என்னமோ; அவரது ரசிகர்களும் - கட்சிக்காரர்களும் சும்மா இருப்பது போலவும் - இனிமேல்தான் சும்மா இருக்கும் சங்கினை இவர் ஊதிக் கெடுக்கப் போவதைப் போலவும் பேசியிருக்கிறார்!

ஆளுங்கட்சியினரின் அராஜகம் எந்த அளவுக்கு எல்லை மீறியிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் அன்றாடம் உணர்ந்து கொண்டு தானிருக்கிறார்கள்!

ஒரு முன்னாள் துணை மேயர் தலைமையிலேயே மதுரையில் ஒரு பத்திரிகை அலுவலகத்தில் நுழைந்து தாக்குதல் நடத்தி நாட்கள் நாலைந்து கூட நகரவில்லை; நாடாளும் முதல்வர் - அகிம்சாமூர்த்தி போல நடித்துக் கொண்டு ஆர்ப்பரித்து எழுகிறார்!

அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே வெட்டிக்கொண்டு நாகர்கோயிலில் ஒருவரும் - ஆற்காட்டில் ஒருவரும் - கொலையுண்டு மாதங்கள் ஆறு கூட முடியவில்லை!

திருச்செந்தூர் சுப்பிரமணிய சம்காரம்!

திருத்தணியில் ஒரு பெண்மணி கொலையுண்ட நிகழ்ச்சி!

மதுராந்தகத்தில் ஞானசௌந்தரி பிணமாக்கப்பட்ட கொடுமை!

தாரமங்கலம் சிலை திருட்டில் கைது செய்யப்பட்டவர்களில் உண்மையை உரைக்கத் தயாராயிருந்த ஒரு நபர் கொலையுண்ட அவலம்!

அண்மைக் காலத்தில் நிகழ்ந்த இத்தனை வேதனையிலும் - அ.இ.அ.தி.மு.க.வுக்கு எவ்வளவு பங்கு உண்டு என்பதை இந்த நாடு அறியுமே!

எம்.ஜி.ஆர். இப்போது யாரை மிரட்டுகிறார்?

ஒருவேளை; எம்.ஜி.ஆர். மன்றத்துக்கு எதிர்ப்புக் குரல் கொடுக்க அவர் கட்சியிலேயே தோன்றியுள்ள அரசியல்வாதிகளுக்கு விடப்படும் எச்சரிக்கையா?

உடன்பிறப்பே, எப்படியோ - நாட்டையாளுகிற முதலமைச்சரே அவரது ரசிகர்களை நாசவேலைக்குத் தயாராக இருக்குமாறு உசுப்பிவிட்டு விட்டார்!

இனி, அவரால் உருவாக்கப்படும் அமளியைச் சந்திக்கத் தமிழக மக்கள் தயாராக இருக்க வேண்டும்!

தமிழக மக்களின் நல்வாழ்விலும், அமைதியிலும் நாட்டங்கொண்ட அனைவரும் எம்.ஜி.ஆரின் இந்த வன்முறை வெறியாட்டத் தூண்டுதலுக்குப் புத்திபுகட்ட அணி வகுத்திட வேண்டும்!

அ.தி.மு.க.வைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, நாடு முழுதும் அவரது பெயரால் எம்.ஜி.ஆர். மன்றங்களை அமைத்திட வேண்டுமென்று அவரே அவரது ரசிகர்களுக்கு சேலத்தில் ஜாடை காட்டி விட்டார்!

நாடு ரத்தக்களறியாகட்டும் என்ற கருத்துப்பட பேசியும் விட்டார்!

இவரது வீரம் நமக்குத் தெரியும்! இவரது தீரம் நாம் இதுவரை தெரிந்து கொள்ளாததல்ல!

ஆள், திரும்பிப் பார்க்காத வரையில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதிப்பார்! திரும்பிப் பார்த்தாலோ - என்ன? என்று கனைத்துக் காட்டினாலோ - இவர் எந்தப் புதரில் ஓடி ஒளிந்து கொள்வார் - என்பது கடந்த கால வரலாறு! அனுபவ வரலாறு!

நிகழ்காலமும் அப்படித்தான்! எதிர்காலமும் அப்படித்தான்!

1972-இல் இவரது தூண்டுதலால் பஸ்களைக் கொளுத்தியபோதும் - கார்களை கொளுத்திய போதும் - லாரிகளைத் தாக்கிய போதும் - கழக அரசு; நிதானம் காட்டியது! பொறுமையைக் கடைப்பிடித்தது!

சேலத்தில் எம்.ஜி.ஆரின் கூட்டத் திட்டமிட்டுள்ள சதியை நிறைவேற்ற முன்வந்து - தமிழகத்தில் கலவரத் தீயை மூட்டுவார்களேயானால்; அந்தத் தீயை அணைக்க - தமிழக மக்கள் தோளுயர்த்தி நிற்பார்கள் என்பது மட்டுமல்ல; அந்த வன்முறைத் தீயை அணைப்பதற்கு யார் வர வேண்டுமோ அவர்கள் வந்து விடுவார்கள்!

அந்தத் தீயணைக்கும் படைக்கு முன்னால் - எம்.ஜி.ஆர். கொளுத்துகிற தீ - நிச்சயமாக நிற்காது!

வீணாக வம்பை விலைக்கு வாங்க வேண்டாமென எம்.ஜி.ஆரை எச்சரிக்கிறது தமிழகம்!

அன்புள்ள,

மு. க.

(16-06-1981)

923. நேற்றைய தொடர்ச்சி!

உடன்பிறப்பே,

1. தூங்கும் புலியை தயவு செய்து இடறாதீர்கள்! பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு! நான் முதலமைச்சர்தான் - என்னுடைய கட்டுப்பாட்டுக்கு அதை அடக்கிக் கொள்வதற்கும் ஒரு எல்லையுண்டு. திருப்பித் தாக்க ஆரம்பித்தால் இந்த நாட்டில் அமைதியும் சட்டம் ஒழுங்கும் குலைந்துவிடும். அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள். இனிமேல் எங்காவது அ.தி.மு.க. தொண்டன், தி.மு.கழகத்தாரால் தாக்கப்பட்டார்கள் என்றால் நான் உண்மையில் சொல்லுகிறேன் எங்களுடைய மன்றத்தவர்களை இனிமேல் நாங்கள் பொறுத்துக் கொள் என்று சொல்ல முடியாது. அதன் விளைவுகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது என்ன நடந்தது என்பதை இங்கே முத்தண்ணன் சொன்னார். ஒரு அமைச்சர் வந்தார் ஓடினார். இன்னொரு அமைச்சர் வந்தார் பேச முடியவில்லை. ஒரு அமைச்சர் வரவே முடியவில்லை. அவர்களால் கொஞ்ச காலத்திற்குப் பொதுக்கூட்டமே நடத்த முடியவில்லை.

3. இந்தக் கட்சியைத் தொடங்கும் போது நான் அறிவித்த போது எத்தனை பேர் பக்கத்தில் இருந்தார்கள். ஆனால் அன்று நான் சென்னையில்தான் அறிவித்தேன். கன்னியாகுமரியில் கொடி ஏற்றப்பட்டது. நெல்லையில் கொடி ஏற்றப்பட்டது. அன்றையதினம் ஆட்சியில் இருந்த தி.மு.க. அமைச்சர்கள், வெளியே வர முடியவில்லை. எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர்களே, மன்றத் தொண்டர்களே, மக்களே அதைச் செய்தார்கள். நான் சொல்லவில்லை. அதைச் சொல்லிக் கொடுக்கக் கூடிய அளவுக்கு நமது கழகத்தவர்கள் தகுதி படைத்தவர்கள் இருக்கிறார்கள்.

4. எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு நடக்கத் தோழர்கள் உழைத்தார்கள் என்றால் உழைக்காதவர்கள் எல்லாம் ஊதாரிகளாகப் போவார்கள். உதறி ஊதித் தள்ளப்படுவார்கள்.

எம்.ஜி.ஆர். மன்றத்தை யார் அலட்சியப்படுத்தினாலும் அவர்கள் மக்கள் மத்தியில் வர முடியாது! எம்.ஜி.ஆர். மன்றம் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் ஆணிவேர் என்பதை டாக்டர் நாவலர் அவர்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மேலே நான் தொகுத்தளித்திருப்பது முழுவதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் சேலத்தில் அவரது ரசிகர்கள் மன்ற மாநாட்டில் பேசியதாகும்! அவரது பேச்சு டேப் செய்யப்பட்டு, அதிலிருந்து எடுத்தவைகளாகும்!

ஒரு முதலமைச்சர், எந்த அளவுக்கு வன்முறையைத் தூண்டி விடுபவராகக் காட்சியளித்துள்ளார் என்பதற்கு இந்தப் பேச்சைவிட வேறு சாட்சியம் எதுவும் தேவையில்லை!

தீயணைக்கும் படை வரும்

என்ற தலைப்பில் நேற்று நான் உனக்குக் கடிதம் எழுதியபோது - பத்திரிகையில் வெளிவந்த அவரது பேச்சை மட்டும்தான் வைத்துக் கருத்துக்களை கூறியிருந்தேன்.

நேற்று நான் எழுதிய கடிதம் எவ்வளவு சரியானது என்பதற்கு - டேப் செய்யப்பட்ட எம்.ஜி.ஆர். பேச்சு; சான்று கூறுகின்றது!

எனவே உடன்பிறப்பே! நேற்றைய எனது கடிதத்துடன் இன்று நான் தந்துள்ள எம்.ஜி.ஆரின் பேச்சுத் தொகுப்பையும் இணைத்துக் கொண்டு நேற்றைய எனது கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்திடுக!

தீயணைக்கும் படை வந்து தீர வேண்டிய அவசியத்தையும் - அதுவரையில் முதல்வர் எம்.ஜி.ஆரால் மூட்டிவிடப்படும் தீயை சமாளிக்கும் வலிவுடன் தமிழ்மக்கள் அணி வகுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் நீ நிச்சயம் உணர்ந்து கொள்வாய்!

அன்புள்ள,

மு. க.

(17-06-1981)

924. ஆணிவேரும் - விழுதுகளும்!

உடன்பிறப்பே,

ஆணி வேர் என்றால் என்ன? விழுதுகள் என்றால் என்ன?

இது ஒரு பரீட்சையில் மாணவனிடம் தரப்பட்ட வினாத்தாளில் காணப்பட்ட வினாக்களில் ஒன்று!

மாணவன் விடை எழுதினான்; பின்வருமாறு!

ஆணி வேர் என்பது ஒரு மரத்தைக் கீழே விழாமல் பாதுகாக்கக் கூடியதாகவும் - பூமிக்குள் வெகுதூரம் கீழே இறங்கி மரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் - பூமியில் உள்ள தண்ணீரைத் தானும் தன்னிடம் தோன்றும் சல்லிவேர்களுமாக உறிஞ்சி மரத்தை வளர வைப்பதாகவும் - மரத்தின் உயிர்நாடியாக விளங்குகிற ஒரு உறுப்பாகும். விழுது என்பது ஆலமரத்தின் கிளைகளில் இருந்து கீழ்நோக்கித் தொங்கிப் பூமியைத் தொட்டுக் கொண்டும் - பூமியில் பதிந்தும் இருக்கிற உறுப்புகளாகும். விழுதுகள் விழுந்து விட்டால் மரம் அழிந்து விடாது! ஆனால் ஆணி வேர் இல்லாவிட்டால் மரமே இல்லை!

இப்படி விடை எழுதிய மாணவனுக்கு உரிய மதிப்பெண் கிடைத்திருக்குமென்று உனக்குத் தெரியும்.

விழுது என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை? ஆணிவேர் என்றால் என்ன? அதன் பலம் எத்தகையது?

இந்த விபரங்கள் எல்லாம் வெறும் பத்தாவது மட்டுமே படித்த எனக்கு தெரிவதை விட எம்.ஏ. வரையில் படித்த நாவலர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும் அல்லவா?

அதனால்தான் அவர் சேலத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்களின் மாநாட்டில் பேசும்போது மிகுந்த கவனத்துடன் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் என்ற ஆலமரத்தின் விழுதுகளாக எம்.ஜி.ஆர். மன்றத்து செயல்வீரர்கள் செயல்படுகிறார்கள். பெரியார் விதைத்த விதை முளைத்து, அதை மரமாக வளர்த்தார் பேரறிஞர் அண்ணா! இன்று அந்த மரத்தின் விழுதுகள் பூமியிலே விழுந்து மரத்தையே காப்பாற்றுகின்றன! அந்த விழுதுகள்தான் எம்.ஜி.ஆர். மன்றம்.

விழுதுகள் என்றுதான் அவர் அந்த மன்றத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் அவருக்குப் பிறகு உரையாற்றிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்;

கழகத்தின் ஆணிவேர் எம்.ஜி.ஆர். மன்றம் என்று டாக்டர் நாவலர் கூறினார். இந்தக் கழகத்தைத் தொடங்கிய போது எத்தனை பேர் இருந்தார்கள் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன்.

என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்!

இருவரது உரைகளுமே அவர்களது அதிகாரபூர்வமான கட்சி ஏட்டிலேயே வெளி வந்திருக்கிறது!

நாவலர் விழுதுகள் என்று மட்டுமே சொன்னார்!

ஆணிவேர் என்று நாவலர் சொன்னதாக எம்.ஜி.ஆர். நாவலருக்கு நேராகவே சொல்லி விட்டார்!

மறுக்க முடியுமா? நாவலரால் மறுக்க முடியுமா? பேசுபவரோ முதல்வர்! நாவலரோ இரண்டாமவர்!

விழுதுக்கும் ஆணிவேருக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு - அதைப் புரிந்துதானே நான் விழுதுகள் என்று மட்டும் சொன்னேன்! எம்.ஜி.ஆர். மன்றம் ஆணிவேர் என்றால் - அ.தி.மு.க. என்ற கட்சி; எம்.ஜி.ஆர். மன்றம் இல்லாமல் வாழ முடியாது என்றல்லவா பொருள் வந்துவிடும்? நான் அப்படிச் சொல்வேனா? ஒரு காலத்தில் அண்ணாவின் உத்திரவுப்படி எம்.ஜி.ஆரிடம் சென்று அப்போது எம்.ஜி.ஆர். நடத்த இருந்த எம்.ஜி.ஆர். மன்ற மாநாட்டை நிறுத்தும்படி செய்த நானா; இப்போது அந்த மன்றத்தை ஆணிவேர் என்று சொல்வேன்? நான் சொல்லாததை இவர் மேடையில் சொல்லுகிறாரே! சரியானபடி என்னைப் பழிவாங்குகிறாரே! நான் விழுதுகள் என்றுதானே சொல்லித்

தொலைத்தேன்! அண்ணா மீது ஆணையாக நான் ஆணிவேர் என்று சொல்லவில்லையே! அதுமட்டுமா? நான் சொல்லாததைச் சொல்வது மட்டுமா? இந்தக் கட்சியை ஆரம்பித்தபோது எத்தனை பேர் என்னோடு இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதாகக் கூறி என்னையும் மற்றும் சிலரையும் குத்திக் காட்டுகிறாரே! என்ன செய்வது அப்போது கலைஞர் கருணாநிதியிடம் பதவிகளை வழங்கும் அதிகாரம் இருந்தது; அங்கே இருந்தோம்! இப்போது இவரிடம் இருக்கிறது இங்கே இருக்கிறோம்! இவர் இந்தக் கட்சியை ஆரம்பிக்கும் போது நாங்கள் இல்லாமல் இருந்திருக்கலாம் - ஆனால் தி.மு.கழகத்தை 1949-இல் அண்ணா ஆரம்பிக்கும் போது இவர் எங்கே இருந்தார் என்று கேட்க எனக்கு எவ்வளவு நேரமாகும்? நான் மட்டுமல்ல எல்லோருமே அதை எண்ணிப் பார்க்கிறோம்! என் செய்வது - வந்த பதவியும் வரவேண்டிய பதவிகளும் எங்கள் கண்களை மறைக்கிறதே! எங்கள் வாயை ஊமையாக்குகிறதே!

இப்படி அந்த மேடையில் உட்கார்ந்திருந்தவாறே நாவலர் மனதிற்குள் புலம்பிக்கொண்டுதான் இருந்திருப்பார்! அவ்வளவுதான் முடியும் அவரால்!

இல்லாவிட்டால் அவர் விழுதுகள் என்றதை - எம்.ஜி.ஆர்., ஆணிவேர் என்று ஒரேயடியாக மாற்றிக் கொண்டு பேசியதை அவர் கேட்டுக் கொண்டு இருந்திருக்க முடியுமா?

அன்புள்ள,

மு. க.

(18-06-1981)

925. அவர் விதைத்த வினையை...!

உடன்பிறப்பே,

வினை விதைத்தவர்கள் வினையை அறுக்கிறார்கள்! தினை விதைத்தவர்கள் தினையை அறுக்கிறார்கள்!

அடிபட்டவனின் வலி அடித்தவனுக்குத் தெரியவில்லை!

அடித்தவனே இப்போது அடிபடும்போது அந்த வலியின் தன்மை தெரிகிறது!

ஒருமுறை!

இருமுறை!

மூன்றாவது முறை!

இப்படி மும்முறையும் புகார் காண்டங்களுடன் புதுடெல்லி சென்றதும் - ராஜ்பவனுக்கு பேரணி நடத்தியதும் - மதுரை விமான நிலையத்திற்கு ரயில் பயண பவனி நடத்தியதும் - அப்பப்பா! எத்தனை ஆர்ப்பாட்டங்கள்! எவ்வளவு ஆரவாரங்கள்!

பத்திரிகைகளில் பத்தி பத்தியாக விளம்பரங்கள்!
குதூகல விழாக்கள்!
கும்மாளங்கள்!
கொண்டாட்டங்கள்!

விசாரணைக் கமிஷன் வந்த பிறகு அந்தக் காட்சி காண - ரசிக்க - சுவைக்க -மகிழ- நாள்தோறும் விஜயங்கள்! விசாரணை மண்டபத்திற்கு!

இத்தனையும் நடந்து முடிந்து ஆட்சிக்கு வந்த பிறகு - அடடா! என்னே பெருந்தன்மை?

புலவர் கோவிந்தனார் கைது!
கந்தப்பன் கைது!
கண்ணப்பன் வழக்கு!

இப்படி அடாவடி வழக்குகள்!
அவதூறு வழக்குகள்!

கூட்டுறவுத் துறையில் பொறுப்பு வகித்த அத்தனை கழகத்தினர் மீதும் வழக்குத் தொல்லைகள்; நூற்றுக்கணக்கில்!

இருபத்தைந்து ரூபாய் டெலிபோன் கட்டணத்திற்காகக் கூட வழக்கு! அதிலே ஒரு வஞ்சம் தீர்த்துக் கொண்ட மகிழ்ச்சி! வக்கிர புத்தியின் உச்சக் கட்டம்!

நடிகர் ராசேந்திரன் அவர்களை நான் கொலை செய்யத் தூண்டியதாக ஒரு பழைய வழக்கு! அதில் செக்ஷன்கள் வலிவாக இல்லை என்று புது செக்ஷன்களை இணைத்து என் மீது இவரது அரசாங்கச் சார்பில் ஒரு பயங்கர வழக்கு!

திருமதி இந்திரா காந்தி அம்மையார் மதுரை வந்தபோது கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் விரும்பத் தகாத அசம்பாவிதங்கள் ஏற்படவே; அதனைத் தொடர்புபடுத்தி அம்மையாரை கொலை செய்ய முயற்சி என்ற பெயரால் என் மீதும் - பேராசிரியர் மீதும் - பொருளாளர் சாதிக் மீதும் - ஏனைய கழக முன்னணியினர் மீதும் சதி வழக்கு - கொலை வழக்கு - கொலை முயற்சி வழக்கு!

இப்போது நூறல்ல - ஆயிரமல்ல - கோடி கோடியாக - ஊழல்!
விசாரணைக் கமிஷன் வந்துவிட்டது!
விசாரணை ஆரம்பமாகப் போகிறது!
நான் எகிறிக் குதிக்கவில்லை!
எக்காளம் முழங்கவில்லை!
பரவசம் அடையவில்லை!
பள்ளுப்பாடி மகிழவில்லை!

கமிஷன் வந்தும்கூட இவர்களால் தங்கள் ஊழல் பேரங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

பிளண்டிங் யூனிட் ஊழல் - பாட்டிலிங் யூனிட் ஊழல் - ஐந்து கோடி ரூபாய் அளவுக்கு!

சாராய மொத்த வியாபாரம் - ஐ.எம்.எம்ப்.எல். உரிமம் - அதிலும் பல கோடி ரூபாய் ஊழல்!

எரி சாராய அத்தியாயத்தைத் தொடர்ந்து - அடுத்தடுத்து ஊழல் அத்தியாயங்கள் இவை!

விசாரணைக் கமிஷன் வந்தால் புறக்கணிப்போம் - முதல்வருக்கு அடுத்தவர் நாவலர்; இப்படி முழங்கினார்!

மக்களைச் சந்திப்போம் முதல்வரே அருப்புக்கோட்டையில் இவ்வாறு கர்ஜித்தார்!

விசாரணைக் கமிஷன்
தலையிலிருந்து விழுந்த
ரோமத்திற்குச் சமம்!
தேய்ந்த லாடத்துக்குச் சமம்!
இப்படி ஒரு மந்திரியார் முரசு கொட்டினார்!

இப்போது அந்த ரோமம் எம்.ஜி.ஆர். கண்ணில் விழுந்து எடுக்க முடியாமல் உறுத்துகிறது!

அந்த தேய்ந்த லாடம் அவரது தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டு அலைக்கழிக்கிறது!

அபயம் கோருகிறார்! டெல்லிக்கு ஓடுகிறார்!
மார்க்சிஸ்டுகள் தடுத்தும் கேட்கவில்லை!

மார் தட்டியவர் - மார்பும் முதுகும் பூமியில் புரள உருண்டு உருண்டு அங்கப் பிரதட்சணம் செய்கிறார்!

அன்று அவர் சிரித்து
மகிழ்ந்ததைப் போல
நான் சிரிக்கவில்லை!
அனுதாபப்படுகிறேன்!

ஆனால் ஒன்று; அவர் அறுவடை செய்வது அவர் விதைத்த வினையைத்தான்!

அன்புள்ள,

மு. க.

(22-06-1981)

926. ஒரு நாடகம் நடக்குது நாட்டிலே!

உடன்பிறப்பே,

குழுமியிருந்தோர் கண்கள் குளமாகி விட்டன!

குளிர் காற்று வீசிக்கொண்டிருந்த போதிலும் அவர்களது உடல்கள் உலைக் களங்களைப் போலக் கொதிக்கத் தொடங்கின!

அய்யோ! என்ன அக்ரமம்! அநியாயம்! இப்படியும் இவருக்கும் ஒரு கொடுமையா? என்று பலரது வாய்கள் முணுமுணுத்தன!

வாரி வாரி வழங்கிய வள்ளலுக்கு இப்படியொரு கதி வரலாமா? என்று வேதனைக் குரல்கள் எழுந்தன!

அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்து, நொந்தெனை அடைந்தாய்!
தலைதனைக் கொண்டு போய்த் தம்பிகை கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே!

என்றுரைத்துக் காட்டில் வாழ்ந்த குமண மன்னனுக்குக் கூட இந்த இன்னல் வந்திருக்காது; இவருக்கு வந்துற்ற இன்னலை என்னென்பது?

இப்படித்தான் அங்கு கூடியிருந்தோர் ஒருவரைப் பார்த்து ஒருவர் புலம்பியவாறு அழுது தீர்த்தனர்!

நேரில் கேட்டோர் நெஞ்சு நெகிழ்ந்தனர்! இதயம் உருகிட த்சு! த்சு! என இரக்கம் பொழிந்தனர்!

செய்திகளை ஏடுகளில் படித்தவர்களோ - செந்தீ செவிதனில் வீழ்ந்தது போலும் - செந்தேள்கள் ஆயிரம் நரம்பு மண்டிலங்கள் அனைத்திலும் கொட்டியது போலும் - துடித்தனர்! துவண்டனர்!

வாழ்வாங்கு வாழ்ந்தவராயிற்றே; அவருக்கா இந்த வறுமையின் தாக்குதல்!

அடடா! தாழ்வுற்றுத் தரித்திராய் நிற்கும் போதும் - அவர் கடைப்பிடிக்கும் நேர்மைதான் என்னே! நாணயம்தான் எத்தகையது!

ஊர் பேசிற்று! நாடு பேசிற்று! ஏன்; உலகம் (?) கூட பேசக்கூடும்!

கூட்டுறவுக் கடனைத் திருப்பித் தரவில்லை! நிலவரியைக் கூட கட்ட முடியவில்லை! கட்டக்கூடாது என்பது கொள்கையல்ல! கட்ட இயலவில்லை என்பதே உண்மை நிலைமை! வறட்சி வேறு வாட்டுகிறது! வட்டி வேறு பிழிந்தெடுக்கிறது! தவணையில் தருகிறேன் என்று கெஞ்சினாலும் விடுவதில்லை - ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பாக்கிக்கே - அதிகாரிகள் அணி வகுப்பு! துப்பாக்கி தூக்கிய காவலர்கள் படையெடுப்பு!

ஜப்தி! ஏலம்! கதவு, நிலைப்படி, ஜன்னல், அண்டா, குண்டா, அடுக்களைப் பாத்திரங்கள் அனைத்துமே! ஜப்தி! ஏலம்!

எம்.ஜி.ஆர். ஆட்சியில் விவசாயிகளுக்கு இப்படியொரு நிலையா? எல்லோரும் ஆத்திரம் மேலிடக் கேட்டனர்!

எங்களிடம் ஆயிரம் இரண்டாயிரம் பாக்கியை வசூலிக்க இவ்வளவு கெடுபிடி நடத்துகிற எம்.ஜி.ஆர். வருமான வரிப் பாக்கி ஏழு லட்சம் கட்டவில்லையே; நியாயந்தானா? அவருக்கு மட்டும் தவணை முறை! எங்களுக்கு இல்லையா?

விவசாயிகளின் மனப்புழுக்கம் காற்றில் கலந்து வரும் புரட்சி கீதமாக ஒலித்தது!

நானா - வருமான வரி கட்டவில்லை? இன்று காலையில்தான் எம்.ஜி.ஆர். பிக்சர்சக்குச் சொந்தமான வீட்டை இரண்டே முக்கால் லட்ச ரூபாய்க்கு விற்று ஒரு தவணை வரி கட்டியிருக்கிறேன்.

ஊட்டியில் நடந்த கூட்டத்தில் முதலமைச்சர் இந்தச் செய்தியை வெளியிட்டார்! அவராகவே வெளியிட்டார்!

இந்தச் செய்தியை அவர் அறிவித்தவுடன்தான் - இராமன் காட்டுக்குக் கிளம்பிய போது - பூனைகள் அழுதன - புள்ளினம் அழுதது - பாவையர் அழுதனர் - இந்தப் பாரே அழுதது - எனக் கம்பர் வர்ணித்தது போல - அந்தோ! எம்.ஜி.ஆருக்கா இந்தக் கஷ்டம்? வீட்டை விற்றா வரி கட்டினார்? எனக் கேட்டு விம்மி

விம்மி அழுதனர், கூடியிருந்த மக்களும் - செய்தி ஏடு படித்த மக்களும்!

அனுதாபம் வரத்தானே செய்யும்! இரக்கம் எழத்தானே செய்யும்!

நூறு படங்களுக்கு மேல் நடித்தவர்! இப்போது மாண்புமிகு முதலமைச்சர்! அவர், கையில் காசில்லாது வருமான வரி கட்டுவதற்கு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்று விட்டு - நடுத் தெருவில் நிற்கிறார் என்றால் - அவரது பகைவர்கள் கூட அய்யோ பாபம்! என்றுதானே சொல்வார்கள்!

யார் அந்த கிராதகன்? யார் அந்தப் பாவி? எங்கள் வள்ளல் பெருமானின் வீட்டை வாங்கிக் கொண்டு - அவருக்குக் குந்துவதற்குக் கூடக் குடிசையில்லாமல் செய்தவன் - என்று சபிக்கக் கூடத் தோன்றுமல்லவா?

இதையெல்லாம் எதிர்பார்த்து மக்களின் அனுதாபத்தை அறுவடை செய்யத்தான் வீட்டை விற்று வரி கட்டிய சோகச் செய்தியை உதகையிலே விதைத்தார்!

ஆனால் விதைத்தது முளைப்பதற்குள் விவகாரம்; ஊருக்கும் உலகத்திற்கும் தெரிந்து விட்டது!

1967-இல் அண்ணா எடுத்த முடிவுப்படி எம்.ஜி.ஆர். சொந்த வீட்டில் முதலமைச்சர் என்ற முறையில் குடியிருப்பதாக முதலில் அறிவித்தார்!

பிறகு அது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு எனக்கூறி மாத வாடகை ஆயிரத்து எண்ணூறு என நிர்ணயித்து அரசாங்கப் பணத்தை இதுவரை சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை வாங்கிக் கொண்டார்.

ராமாவரம் தோட்டத்தில் சொந்த வீடு இருக்கும் போது - ஆற்காடு முதலி தெருவின் வீட்டுக்கு அரசாங்க வாடகையை அள்ளிக் கொடுத்தார்!

அது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு; தனக்குத் தொடர்பில்லை என்றார்!

இப்போது அந்த வீட்டை விற்று வரி கட்டியது யார்?

எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகன் திருமிகு. ரவீந்திரன்! எம்.ஜி.ஆர். பிக்சர்சின் டைரக்டர்!

அந்த வீட்டை வாங்கிக் கொண்டது யார்?

எம்.ஜி.ஆரின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்கள்!

பாவம்! எம்.ஜி.ஆர். அனுதாபத்தைப் பெருக்கிடப் பார்த்தார்!

அதை அணை போட்டுத் தடுத்து விட்டது ஆதாரபூர்வமான உண்மை!

இப்படியும் ஒரு நாடகம் நாட்டிலே நடந்து கொண்டேயிருக்கிறது!

அதற்கும் ரசிகர்கள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில்!

அன்புள்ள,

மு. க.

(24-06-1981)

927. இப்படியும் ஒரு கூத்தா?

உடன்பிறப்பே,

ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டு

அவசரக்காரனுக்கு புத்தி மட்டு

கிராமங்களில் அடிக்கடி கேள்விப்படும் முதுமொழிகள் அல்லவா இவைகள்?

மத்திய உள்துறை அமைச்சர் செயில்சிங் அவர்கள் சொல்லாத ஒன்றை பி.டி.ஐ. செய்தி நிறுவனத்தார் படபடவென்று அடித்துத்தள்ள - அந்தச் செய்தியைத் தூக்கித் தோள் மீதும் தலை மீதும் வைத்துக் கொண்டு தாம்தோம் எனச் சில பத்திரிகைகள் ஆடித் தீர்த்து விட்டன. மாநில அரசு நியமித்துள்ள சதாசிவம் கமிஷன் நீடிப்பது பற்றித் தனக்கு ஆட்சேபணையில்லையென்று செயில்சிங் அவர்கள் அறிவித்தார் என்பதுதான்; அந்த உண்மை ஒரு துளியும் கலப்பில்லாத கற்பனைச் செய்தியாகும்!

உடனே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தர்மம் வென்றது - என்று சிறப்புப் பேட்டியும் அளித்து விட்டார்.

கையைக் குலுக்குதல் என்ன! என்ன!

கட்டித் தழுவுதல் என்ன! என்ன! என்ன!

கம்யூனிஸ்டுகளின் கண்களில் கனல்பறக்கிற அளவுக்கு ஏடுகளில் டெல்லியில் எடுத்த புகைப்படங்கள்!

விசாரணைக் கமிஷன் ஒன்றுக்காகவே மத்திய அரசை எதிர்த்து மாநில சுயாட்சி முழக்கம் எழுப்புகிறவர்களாயிற்றே இங்குள்ள ஆளுங்கட்சியினர்!

இல்லாவிட்டால் மாநில உரிமையாவது மண்ணாங் கட்டியாவது!

மாநில சுயாட்சித் தீர்மானத்தை எதிர்த்துச் சட்டப் பேரவையில் 1974-இல் குரல் கொடுத்த கட்சி தானே இன்றைய ஆளுங்கட்சி!

பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் இந்தியைத் திணிக்க மாட்டார் என்று உலகத் தமிழ் மாநாட்டில் கேரள முதல்வர்

நாயனாருக்குப் பதில் கூறியவர் மட்டுமல்ல; கவர்னர் உரையின் போதும் - இந்தியைத் திணிக்க விரும்பாத இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நன்றி தெரிவித்தவரல்லவா நமது முதல்வர் எம்.ஜி.ஆர்.!

திடீரென்று இப்போது எங்கிருந்து வந்தது இந்தி எதிர்ப்பு?

விசாரணைக் கமிஷனால் வந்த விளைவல்லவா?

இப்போது டெல்லிக்குப் போனவர் இராணுவத்தில் இந்தி என்பது பற்றி பிரதமருடனோ - அல்லது மற்ற மத்திய அமைச்சர்களிடமோ - வாய் திறக்காத காரணம் என்னவென்று நீயே யூகித்துக் கொள்க!

அது போகட்டும்; இடையே இரண்டு நாட்கள் இவர்கள் இங்கே இனிப்பு வழங்கிக் கொண்ட பிறகு - இன்று வந்துள்ள செய்தி என்ன?

பி.டி.ஐ. செய்தி நிறுவனம், உள்துறை அமைச்சர் கூறாத ஒன்றைத் தவறாக வெளியிட்டு, அதனைச் சில ஏடுகளும் விளம்பரப்படுத்தியுள்ளதை மத்திய உள்துறை அமைச்சரின் அலுவலகம் மறுத்திருக்கிறது.

“States Can’t
Continue with
Probes”

என்று தலைப்பிட்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடும்,

“State Probes
Untenable:
Delhi clarifies”

என்று தலைப்பிட்டு இந்து ஏடும், செய்திகளை வெளியிட்டுள்ளன.

எரிசாராய ஊழல் புகார் பற்றி மாநில அரசுகள், தங்கள் சொந்தத்தில் தாராளமாக விசாரணை நடத்திக் கொள்ளலாம் என்று செயில்சிங் கூறியதாகத் தவறாகச் சில செய்திகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.*

இவ்வாறு தினமணி ஏடும்; செய்தி பிரசுரித்துள்ளது.

ஆடிய ஆட்டமெங்கே?

பாடிய பாட்டெங்கே?

இப்படியெல்லாம் கேட்டு, யாருடைய மனத்தையும் புண்ணாக்க விரும்பவில்லை.

வானொலி, டெலிவிஷனைப் பற்றி டெல்லியில் முதலமைச்சர் பிரமாண்டமான புகார் ஒன்றைச் சொல்லப் போய் - அவரது கூற்று தவறானது என்று நிலைமையை விளக்கி அந்தத் துறையினர் அறிக்கை தந்ததின் விளைவு அந்த நிலையங்களுக்கு அனாமதேய மிரட்டல்கள் வந்த வண்ணம் இருக்கின்றதாம்! தொடர்புடைய அதிகாரிகள், மாநில அரசின் தலைமைச் செயலாளருக்கும் - காவல் துறைக்கும் தெரிவித்திருப்பதாக ஏடுகளில் முன்பக்கச் செய்திகள் காணப்படுகின்றன! அளவுக்கு மீறி எம்.ஜி.ஆருக்கும் - ஆளும்கட்சிக்கும் விளம்பரம் கொடுத்தும் கூட அந்த நிலையங்கள் இந்தப் பாடுபடுகின்றன!

மத்திய அரசுக்கு உட்பட்ட வானொலி, டெலிவிஷன் நிலையங்கள் மட்டுமா? சென்னை விமான நிலையங் கூட அதோகதி ஆகியிருக்கிறதே!

சீனத்துணைப் பிரதமர் ஹூவாங் ஹுவா அவர்கள் இந்தியாவுக்கு வந்தவர்; திங்களன்று சென்னைக்கும் வந்தார்!

சீனத் துணைப் பிரதமரின் சென்னை வருகையின் போது நமது அமைச்சர்கள் நடந்து கொண்ட முறையையும் - காவல் துறையினரின் அலட்சியப் போக்கையும் - இதோ; சென்னைத் தினமணி இதழ் ஜூலை 1; அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறது பார்!

விமான நிலைய வட்டாரத் தகவல்களின்படி சீனத் துணைப் பிரதமரது விமானம் வந்ததும் அவரை வரவேற்க வந்த மாநில அமைச்சர்கள் - பிரமுகர்கள் எல்லாப் பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் உதறித் தள்ளி விட்டு நேரே விமானம் நின்ற இடத்துக்கே தங்கள் கார்களில் சென்றார்கள் என்றும், இந்த அமர்க்களத்தில் மாநிலத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ராகவானந்தத்தின் கார் ராஜ்தூத் விமானத்தின் இடது இறக்கையை உராய்ந்து லேசாகப் பழுதாக்கிவிட்டதாகவும் தெரிய வந்தது. உடனடியாக ராகவானந்தம் நேர்ந்துவிட்ட தவறை உணர்ந்து விமானியிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்ட போதிலும் மேலதிகாரிகளுக்கு இதுபற்றி தாம் விரிவான விளக்க அறிக்கை அனுப்பக் கடமைப்பட்டுள்ளதாகவும், தவறினால் இராணுவச்

சட்ட விசாரணைக்கு தாம் ஆட்பட வேண்டி நேரிடுமென்றும் மந்திரியிடம் கூறியிருக்கிறார் என்றும் தெரிய வந்தது.

ஹிவாங் ஹுவா வருகையை ஆட்சேபித்து விமான நிலையத்தில் திபேத்திய இளைஞர்கள் சிலர் முட்டை வீச்சு, தக்காளி வீச்சு ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலிருந்து வந்த இந்த இளைஞர்களின் நடமாட்டம் முன்கூட்டியே தெரிந்திருந்தும் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தை நெருங்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது!

இவ்வளவு அமளியும் அவமானகரமான நிகழ்ச்சியும் நடந்த பிறகு மாநில அரசின் தலைமைச் செயலாளர் கார்த்திகேயன் அவர்கள் சீனத் துணைப் பிரதமரைச் சந்தித்து வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்றும் - கலவரம் செய்யத் திட்டமிட்டு வந்த திபேத்தியர்களும் - அவர்களை ஏற்றி வந்த பேருந்தும் - பின்னர் போலீசாரால் முறையே கைது செய்யப்பட்டும், கைப்பற்றப்பட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் தெரிய வருவதாக அதே தினமணிதான் செய்தி, தந்துள்ளது.

உடன்பிறப்பே, இதிலிருந்து என்ன தெரிகிறது!

பி.டி.ஐ. போன்ற செய்தி நிறுவனங்கள் எம்.ஜி.ஆருக்குச் சாதகமான செய்திகளையே தர வேண்டும்!

வானொலி, டெலிவிஷன் இரண்டும் அவர் வளைத்த படியெல்லாம் வளைய வேண்டும்!

விமான நிலையத்தில் அமைச்சர்கள் விளையாடுவார்கள்! இராணுவ விமானத்தின் இறக்கைகளை கூட ஒடிப்பார்கள்!

அடடா! என்னே கடமை?
என்னே கண்ணியம்?
என்னே கட்டுப்பாடு?

எல்லாவற்றையும் மூடிமறைக்கத்தான் அண்ணா நாமம் வாழ்க! என்ற உதட்டுத்திரையொன்றைக் கைவசம் வைத்திருக்கிறார்களே! அய்யோ! இப்படியும் ஒரு கூத்தா? எவ்வளவு காலத்திற்கு?

அன்புள்ள,

மு. க.

(02-07-1981)

928. மலர்மன்னன் கதை!

உடன்பிறப்பே,

ஒரு சிறுகதை இது! வேடிக்கையான கதை என்பதை விட ஒரு தமாஷ் கதையென்று சொன்னால்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஒரு ஊரில் ஒரு கொள்ளைக்காரன் இருந்தான். அவனுக்குப் பாதுகாப்பாகப் பத்துப் பதினைந்து மெய்க்காப்பாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தனது எஜமான் கொள்ளையடிப்பது பிடிக்கவில்லை. ஆனால் அதை அவனிடம் நேரிலே சொல்ல பயந்தார்கள். அவனைவிட்டு விலகி விடலாமென்றாலோ வயிற்றுப்பாடு - குடும்பம் - குழந்தைகுட்டிகள் என்று இருக்கிறதே; என்ன செய்வது - அதனால் வாய் பேசாமல் அவனது கொள்ளைக்குத் தங்களையுமறியாமல் உதவிக் கொண்டிருந்தார்கள்.

ஊரார் அவனைக் கொள்ளைக்காரன் என்று நினைக்காத அளவுக்கு அவன் பெரும் பக்தனைப் போலக் காட்டிக் கொண்டிருந்தான்.

மெய்க்காப்பாளர்களில் மலர்மன்னன் என்று ஒருவன். கொள்ளைக்காரனின் ரகசியங்கள் எல்லோரையும் விட அவனுக்கு அதிகமாகத் தெரியும்.

ஒவ்வொரு தடவையும் கொள்ளைத் தொழிலில் அவனது எஜமான் ஈடுபடும் பொழுதும் மலர்மன்னன், குறுக்கே நின்று தடுப்பான். எஜமான் கேட்க மாட்டான். கொள்ளைக்காரன், ஆண்டவனைத் தொழும் சாக்கில் ஆலயத்திற்குச் செல்லும் போது கூட அவனுடன் சென்றிடும் மலர்மன்னன்; இனிமேல் கொள்ளையடிப்பதில்லையென்று கோயிலில் சத்தியம் செய்து விடுங்கள் என்று வலியுறுத்துவான். கொள்ளைக்காரன், சிரித்துக் கொள்வான். அல்லது புருவத்தை நெரித்துக் கொள்வான்.

மலர்மன்னன் அடிக்கடி தனக்கு அறிவுரை கூறித் தொல்லை கொடுப்பது கொள்ளைக்காரனுக்குப் பிடிக்கவில்லை. அவனைத் தன்னிடமிருந்து விலக்கிவிடத் திட்டமிட்டான்.

ஒருநாள் அவனை அழைத்து உனக்கு வயதாகி விட்டது! வயதானவர்களை ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஒருநாள் கூட நான் பதவி நீடிப்பு கொடுத்து வேலைக்கு வைத்துக் கொள்வதில்லையென்று முடிவெடுத்திருக்கிறேன் என்பது உனக்கும் தெரியும். அதனால் மொத்தமாக ஏதாவது பணத்தை வாங்கிக் கொண்டு நீ விலகிக் கொள்! என்றான் கொள்ளைக்காரன்!

இங்கிருந்து இந்த இழி செயல்களுக்குத் துணையிருப்பதை விட விலகிக் கொள்வது மேலென்று மலர்மன்னனும் அதற்குச் சம்மதித்தான்!

அவன் வேலையை விட்டு விலகிடப் போகிற செய்தி கேட்ட மற்ற மெய்க்காப்பாளர்கள், அவனுக்கு ஒரு பிரிவு உபசார விருந்து ஏற்பாடு செய்தார்கள். அந்த ஊர் ஆலயப் பிரகாரத்திலேயே அழகான பந்தல் போடப்பட்டது! மெய்க்காப்பாளர் அனைவரும் பட்டை பட்டையாக விபூதியைப் பூசிக்கொண்டு, ருத்ராட்ச மாலைகளை அணிந்து கொண்டு - விருந்துபசார ஏற்பாடுகளை வேகமாகக் கவனித்தனர்.

சர்க்கரைப் பொங்கல்! எலுமிச்சம் பழச்சோறு! பால்பாயசம்! ரவாலட்டு! ஜாங்கிரி! கொழுக்கட்டை! பலாச்சுளை! மாங்கனி! பேரிச்சை! திராட்சை! முந்திரி! பிஸ்தா பருப்பு! பாதாம் பருப்பு!

இப்படி விதவிதமான சுவைமிகு பண்டங்கள் பரிமாறப்பட்டிருந்தன!

மலர்மன்னன் கழுத்தில் அணிவிக்க ஆள் உயர ரோஜா மாலையொன்று!

வெள்ளிச்சட்டமிட்ட பிரிவுபசார வாழ்த்துப் பத்திரமும் தயார்!

மலர்மன்னன் வருகைக்காகக் காத்திருந்தனர்.

அவனோ; தனது எஜமானனிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றான்.

எஜமான்! தாங்கள் இதுவரையில் என்னிடம் காட்டிய அன்புக்கு நன்றி! விடைபெற்றுக் கொள்கிறேன் எனக் கூறி வணங்கினான்.

கொள்ளைக்காரன் புன்னகை புரிந்தான்!

மலர்மன்னா! உன்னை வேலையை விட்டு நீக்கியது உண்மை! உன் வயதுப்படி நீ இனி வேலைபார்க்கக் கூடாது என்பதும் உண்மை!

அதனால்தான் பிரபு; விடைபெற்றுக் கொள்ள வந்திருக்கிறேன்.

இதோ எனது புதிய உத்திரவு! திடீர் உத்திரவு! நீ மீண்டும் வேலையில் நீடிக்கிறாய்!

மலர்மன்னனுக்கு தூக்கிவாரிப் போட்டது! பிரிவு உபசார விருந்தளிக்கக் காத்திருந்தவர்களிடம் ஓடி வந்தான்! விபரத்தைச் சொன்னான்! எல்லோருக்கும் ஆச்சரியம்!

ஒரு மெய்க்காப்பாளன் மட்டும் மற்றொரு மெய்க்காப்பாளன் காதில் கிசுகிசுத்தான்!

இந்த திடீர் உத்திரவு ஏன் தெரியுமா? மலர்மன்னனுக்கு நமது எஜமானனின் சமீப கால ரகசியங்கள் எல்லாம் தெரியும்! அவனை இப்போது வெளியே விட்டால், அவன் எல்லாவற்றையும் யாரிடத்திலாவது சொல்லி விட்டால் ஆபத்தல்லவா? அதனால்தான், நமது எஜமான் விழித்துக் கொண்டு இந்தக் கடைசி நிமிட உத்திரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த உண்மை, மெய்க்காப்பாளர் அனைவருக்கும் தெரிந்து விட்டது!

இருந்தாலும் ஏற்பாடு செய்த விருந்தை வீணாக்காமல் - மலர்மன்னனுக்கு வேலை நீடிப்பு கிடைத்த மகிழ்ச்சியைக் கொண்டாட, அனைவரும் விருந்து அருந்தி மகிழ்ந்தார்கள்.

ஒரு மலரின் வாயை அடைத்து விட்டால் போதுமா?

எத்தனை மலர்கள் காத்திருக்கின்றன; எரி சாராய மணத்தை அள்ளி அள்ளி வீச!

அன்புள்ள,

மு. க.

(03-07-1981)

929. குழப்பம் தீர்த்திடக் குரல் கொடு!

உடன்பிறப்பே,

விபரங்களைத் தெளிவாகத் தெரிந்து தேர்ந்து நிதானித்துக் கருத்துக்களை வழங்கக்கூடிய பத்திரிகை ஆசிரியர்கள் - ஒரு பத்திரிகைக்குப் பதிலாக நாலைந்து பத்திரிகைகளைப் படித்துப் பார்த்துப் பொருளை நன்கு புரிந்து கொண்டு; அப்படிப் புரிந்து கொண்ட பிறகும் திருப்தியடையாமல் விஷயம் தெரிந்தவர்களைக்கேட்டு அபிப்பிராயங்களைத் தெரிவிக்கக்கூடிய அரசியல் தலைவர்கள் - இவர்கள் எல்லாம் கூட எம்.ஜி.ஆர். அவர்கள் நியமித்துள்ள சதாசிவம் கமிஷனின் (Terms of Referece) விசாரணைக்குரிய விஷயத் தொகுப்பு என்னவென்பதை அறிந்து கொள்ளாமலோ - அல்லது அறிந்தும் அறியாதவர்களைப் போலவோ - எழுதுவதும் பேசுவதும் வியப்புக்குரியதாகவே இருக்கிறது!

1979-ஆம் ஆண்டு முதல் எம்.ஜி.ஆர். அரசில் எரிசாராய ஊழலுக்கான முறைகேடுகள் - எப்படியெல்லாம் தொடங்கி நடைபெற்று வந்திருக்கின்றன என்ற பயங்கர விபரங்களை ஆதாரங்களுடன் சட்டப்பேரவையில் தி.மு.கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்டது.

1980 அக்டோபர் நவம்பர் மாதங்களில் மட்டும் ஏதாவது எரிசாராய ஏற்றுமதியில் முறைகேடு நடந்திருக்கிறதா என்று அறிந்திடுவதற்காகக் கைலாசம் கமிஷன் நியமிக்கப்படுவதாக முதல்வர் எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

இரண்டே மாதங்களுக்கு மட்டும் போதுமா? 1979 முதல் விசாரிக்க வேண்டாமா? என்று கேட்டபோது எம்.ஜி.ஆர். என்ன சொன்னார் தெரியுமா?

விசாரிப்பதென்றால் 1969 முதலே கூட விசாரிக்க வேண்டுமென்கிறார்கள். ஏன்; இன்னும் கூட முன்னே சென்று 1952 முதல் கூட விசாரிக்க வேண்டுமென்கிறார்கள்.

இப்படியொரு பதிலை எம்.ஜி.ஆர். அவர்கள் தான் சொன்னார்!

குடும்ப நண்பர் கைலாசம் அவர்கள் அந்தக் கமிஷனில் இருந்து விலகிக் கொண்டதும் - எம்.ஜி.ஆரின் ஆஸ்தான நீதிபதி சதாசிவத்தைக் கொண்டு கமிஷன் ஒன்றை எம்.ஜி.ஆர். நியமித்திருக்கிறார்!

அந்தக் கமிஷன் செயல்படப் போகிறதா? இல்லையா? நமக்குத் தெரியாது!

இரு மாநிலங்கள் தொடர்புடையதும் - எரி சாராய பிரச்சினையை உள்ளடக்கியதுமான ஒரு ஊழலில் மத்திய அரசு ஒரு கமிஷன் அமைத்திருக்கும் போது மாநில அரசு கமிஷன் செயலற்றதாகி விடுகிறது என்பதே உண்மை நிலை!

அது ஒருபுறமிருக்கட்டும் - மத்திய கமிஷனை எதிர்க்க எம்.ஜி.ஆரின் தோழமைக் கட்சிகள் உருவிய வாளுடன் நிற்கின்றன! ஆனால் எம்.ஜி.ஆரோ - அந்த கமிஷனுக்கும் ஒத்துழைப்பு தரப்படும் என்று டெல்லியிலேயே நிருபர்கள் கூட்டத்தில் அறிவித்து விட்டார்! பாவம்; தோழமைக் கட்சிகள்!

மத்தியக் கமிஷன் கூடாது! மாநில சதாசிவம் கமிஷனே வேண்டும்! என்று முழங்குகிறார்கள் தோழமைக் கட்சியினர்!

மத்தியக் கமிஷனும் இருக்கட்டும் - மாநிலக் கமிஷனும் இருக்கட்டும் - இரண்டுமே விசாரணை நடத்தட்டும் என்று அறிவிக்கிறார் எம்.ஜி.ஆர்.!

மாநில சதாசிவம் கமிஷனுக்கு எம்.ஜி.ஆர். வகுத்துக் கொடுத்துள்ள விசாரணைக்குரிய விஷயத் தொகுப்பு என்ன தெரியுமா?

ஜூன் மாதம் முதல் வாரத்தில் எல்லா ஏடுகளிலும் அந்த விசாரணை விஷயத் தொகுப்பு ஒன்றரைப் பக்க விளம்பரங்களாக வெளிவந்துள்ளது.

அதை என்ன காரணத்தாலோ சில பேர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எம்.ஜி.ஆர். நியமித்துள்ள சதாசிவம் கமிஷன் 1969 முதல் 1980 முடிய எரிசாராய ஊழலை விசாரிக்கப் போகிறது என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். தெளிவான பத்திரிகை ஆசிரியர்களுக்கும் - தேர்ந்த திறமை பெற்ற அரசியல்வாதிகளுக்கும் - இந்தக் குழப்பம் என்றால்; பாமர மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

வேண்டுமென்றே திசை திருப்புகிற விஷமிகளையும், விஷ வித்துக்களையும் பற்றி நான் கவலைப்படவில்லை!

விபரமறிந்தோர் குழம்பிடக்கூடாது என்பதற்காகவே இந்த விளக்கமளிக்க விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்கள் சதாசிவம் கமிஷனை 1969 முதல் 1980 வரையில் என்று காலவரையறை வகுத்து அமைத்திடவில்லை!

எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1979 முதல் நடைபெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பேரவையிலேயே ஆதாரங்கள் காட்டப்பட்ட எரிசாராய ஊழலுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள், சதாசிவம் கமிஷனுக்கு - நிர்ணயித்துள்ள காலவரம்பு; 1980-ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் ஆகிய இரண்டு மாதங்களில் நடைபெற்ற எரிசாராய ஏற்றுமதி குறித்த பிரச்சினைகளை மட்டுமே எம்.ஜி.ஆரின் சதாசிவக் கமிஷன் விசாரிக்குமாம்!

ஆனால் அதற்குப் பிறகு ஏட்டிக்குப் போட்டியாக - எதிர்க்கட்சியின் மீது பதிலுக்குக் குற்றம் சாட்ட ஒரு பட்டியலைத் தயாரித்துத் தந்து அதன்மீது விசாரிக்க நிர்ணயித்துள்ள கால வரம்பு; 1969 முதல் 1976 ஜனவரி மாதம் முடிய என்பதாகும்!

இந்த இரண்டையும் கவனித்துப் படிக்காமல்தான் ஆகா! எம்.ஜி.ஆர். 1969 முதல் 1980 வரையில் கமிஷன் போட்டு விட்டார் என்று நடுநிலையாளர்கள் கூடக் கருதுகிறார்கள்.

இதோ; எம்.ஜி.ஆர். அரசாங்கம் சதாசிவம் கமிஷன் பற்றி ஏடுகளில் வெளியிட்ட விளம்பரத்தின் பீடிகையைப் படித்தாலே போதுமே!

1980-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்களில் தமிழ்நாட்டிலிருந்து, வேறு மாநிலங்களுக்கு சாராயம் கொண்டு செல்வதில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்தும், சாராயம் கொண்டு செல்லவும், மாநிலத்திற்குள் விநியோகம் செய்யவும் 1969 பிப்ரவரித் திங்களிலிருந்து 1976 சனவரி 31-ஆம் நாள்வரை உரிமங்கள் வழங்குவதில் முன்னாள் முதலமைச்சர் திரு.கருணாநிதியும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் கையூட்டுப் பெற்றதாகவும், அவர்கள் அதிகாரத்தை அத்துமீறி பயன்படுத்தியதாகவும் கூறப்படுவது குறித்தும் விசாரிக்க சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி

திரு. ஆர்.சதாசிவம் அவர்களை தனிநபர் விசாரணைக் கமிஷனாகத் தமிழ்நாடு அரசு நியமித்து மதுவிலக்கு - ஆயத்துறையின் 30-5-1981-ஆம் நாளிட்ட 43-ஆம் எண்ணில் ஆணை பிறப்பித்துள்ளது.

படித்தாயா உடன்பிறப்பே! இந்தப் பீடிகையை மற்றவர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக்காட்டு!

1980 அக்டோபர் - நவம்பர் இரண்டே மாதங்களில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் எரிசாராயத்தில் முறைகேடாம்! அவ்வளவுதான்! 1979 முதல் நடைபெற்ற ஊழல்களை ஆதாரபூர்வமாக சட்டசபையில் எடுத்துக் காட்டியதையெல்லாம் திரை போட்டு மறைத்து விட்டு - இரண்டே மாதங்களில் நடைபெற்ற முறைகேடாம்! அதைச் சீர்படுத்த விசாரணையாம்!

கழக ஆட்சியின் போது மட்டும் 1969 முதல் 1976 வரையில் ஏழு வருடங்கள் கருணாநிதியும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் கையூட்டுப் பெற்று அதிகாரத்தை அத்துமீறிப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டாம்!

அடடா! சதாசிவம் விசாரணைக் கமிஷன் (Terms of Reference) விசாரணைக்கான விஷயத் தொகுப்பிலேயே எவ்வளவு பாரபட்சமான நிலை திணிக்கப்பட்டிருக்கிறது புரிகிறதா?

அதனால்தான் சொல்கிறேன்; எம்.ஜி.ஆர். மீது பேரவையில் நமது கழகச் சார்பில் எடுத்து வைத்த குற்றச்சாட்டு என்ன? ஊழல் நடந்த கால கட்டமென்ன? அவையெல்லாம் சதாசிவம் கமிஷன் விசாரணைக்குரிய விபரங்களாக ஆக்கப்படாத காரணம் என்ன? இவற்றையெல்லாம் நாள்தோறும் - மேடைதோறும் - நீ மக்களுக்கு விளக்கிக் கொண்டேயிரு!

ஆளுவோர் ஆட்டம் போடுவார்கள்! ஆட்டம் கொடுத்துவிட்ட காரணத்தால் இவர்களின் ஆட்டம் பெரிதாகத்தான் தோன்றும்!

அதுபற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்திடுக உன் தூய பணியை!

அன்புள்ள,

மு. க.

(06-07-1981)

930. பழைய படத்தில் ஒரு காட்சி!

உடன்பிறப்பே,

ஒரு பழைய படம் பார்த்த நினைவு! மிகமிக இளம் வயதில்! அதனால் படத்தின் பெயரும் நினைவுக்கு வரவில்லை! நடிகர்களின் பெயரும் நினைவுக்கு வரவில்லை! ஆனால் அந்த அற்புதமான (?) வீரஞ்செறிந்த (?) நகைச்சுவைக் காட்சி மட்டும் அப்படியே பசுமையாக நினைவில் தோன்றுகிறது!

அந்த நினைவு தோன்றுவதற்கும் கூடக் காரணம் தற்போது தமிழ் நாட்டில் வீசிக் கொண்டிருக்கும் அரசியல் அலைகள் தான்!

சின்னஞ்சிறு பிராயத்தில் நான் பார்த்த அந்தப் படம் போர்க்களச் சூழ்நிலைகளைக் கொண்டது! இரு அரசர்களுக்கிடையே பெரும் போராட்டம் உருவாகிறது!

ஒரு புறத்தில் கதாநாயகன் கச்சையை இறுகிக்கட்டி, கட்கமேந்தி, அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையை ஆர்த்தெழுந்திடுமாறு முரசு கொட்டுகிறான்.

இன்னொரு புறத்திலோ வில்லன் பல்லைக் கடித்து, விட்டேனா பார்! என்று மீசையை முறுக்கித் தனது படை வீரர்களை அணிவகுத்துப் புறப்படுகிறான்.

இரு தரப்புப் படைகளும் சந்திப்பதற்கிடையிலே தான், நான் குறிப்பிட்ட அந்த நகைச்சுவைக் காட்சி படத்திலே இடம் பெறுகிறது.

வில்லனது படை வரிசைக்கென வீட்டுக்கொருவர் வில்லேந்தி வாளேந்தி வருக எனப் பறை முழக்கப்படுகிறது.

அந்தப் போர்க்கள அழைப்பின் ஒலி, ஒரு வீட்டின் கதவைத் தட்டுகிறது. வில்லனுக்கு உற்ற தோழன் வீட்டுக்கதவுதான் அது!

அவன் மனைவி, தூங்கிக் கொண்டிருந்த கணவனை வேக வேகமாக எழுப்புகிறாள்.

என்னடி! என்ன நடந்தது?

அத்தான்! நீங்களும் உங்கள் உற்ற தோழர் வில்லாதிவில்லனும் எதிர்பார்த்த யுத்தம் வந்து விட்டது!

அய்யய்யோ! யுத்தமா? அட கடவுளே! எம்மாடி! உன் இஷ்ட தெய்வத்தை வணங்கிக் கொள்! தாலி பாக்கியம் கொடு தாயே என்று கெஞ்சு! அடி என் கண்ணே! இப்போது நாம் என்ன செய்யலாம் சொல்!

என்னத்தான்! கேலி பேசுறீங்க! வரட்டும் யுத்தம்; விரட்டுகிறேன் எதிரிகளை! என்று கர்ச்சித்ததும் இந்த வாய்தானே! என்ன செய்யலாம் என்று கேட்கிறீர்களே என் கன்னத்தில் ஒன்று கொடுங்கள்! கவசம் அணியுங்கள்! கத்தியைத் தூக்குங்கள்! களம் நோக்கிக் கிளம்புங்கள்!

கன்னத்தில் என்றாயே; அதோடு நிறுத்தடி! கத்தி - கவசம் - களம் - இந்தப் பெயர்களையெல்லாம் சொல்லி என் வயிற்றைக் கலக்காதேடி!

என்ன விளையாடுகிறீர்களா? விரோதிகளை வீழ்த்திட வீரமுழக்கமிட வேண்டிய நேரத்திலா விளையாட்டு! அன்றைக்கு அரண்மனை வாசலில் ஆயிரம் பேரைக் கூட்டி வைத்துக் கொண்டு பேசினீர்களே! உதிரம் சிந்துவோம் - உயிரைக் கொடுப்போம் - எத்தகைய தியாகத்திற்கும் தயாராவோம் - உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை! என்று உரத்த குரல் கொடுத்து ஊரையே கலக்கினீர்கள். இன்று வயிற்றைக் கலக்குகிறது என்கிறீர்களே - போதும் உங்கள் தமாஷ்! புறப்படுங்கள்!

தமாஷா? தலைபோகிற விஷயமடி இது! அன்றைக்குப் பேசினேன், உண்மைதான்! இப்படியொரு யுத்தம் வருமென்று தெரிந்தால் பேசியிருப்பேனா? என் கண்ணல்ல! என்னைத் தொந்திரவு செய்யாதே! ரத்தத் துளியைக் கண்டாலே எனக்கு மயக்கம் வந்துவிடும். யுத்தகளத்தில் ரத்த ஆறே ஓடுமே!

சே! சே! உங்களுக்கு வெட்கமா இல்லை? உம்! எழுந்திருங்கள்! நீங்கள் வருவீர்கள் என்று காத்துக்கொண்டு உங்கள் வீராதி வீர -

வில்லாதிவில்ல நண்பர்கள் எல்லாம் வழிமேல் விழி வைத்துக் கொண்டிருப்பார்கள்! இதோ! இராணுவ உடை! இதோ கவசம்! உம்! எழுங்கள்!

இப்படி வேகமாகப் பேசிக்கொண்டே அந்தப் பெண்மணி, கணவனைக் கட்டிலில் இருந்து தூக்கி நிறுத்திப் போர் உடைகளை அணிவித்து, யுத்த தளவாடங்களையும் கொடுக்கிறாள். அவன் விழிகளில் நீர்! முந்தானையால் துடைத்துவிட்டு - முத்தங்கள் ஈந்து முறுக்கேற்றி விடுகிறாள்!

கூனிக் குறுகி நிற்கும் அவனை, நிமிர்ந்து நிற்குமாறு முதுகில் தட்டிக் கொடுக்கிறாள்.

ஆகா! இப்பத்தான் என் ராஜாவுக்கு வீரக்களை சொட்டுது! சேர சோழ பாண்டிய மன்னர்கள் மூவருமே ஓர் உருவில் வந்தது போல் தோன்றுகிறது! வில்லேந்திய விஜயனைப்போல் - வேலேந்திய முருகனைப் போல் - என் விழிகளுக்கு விருந்தாக இருக்கின்றீர் அத்தான்! உம், புறப்படுக! போர் முரசு கொட்டுக! எதிரிப் படையைத் தூள் தூளாக்கிவிட்டு திரும்பிடுக!

அடிப்பாவி! என்னை எல்லை கடந்து புகழ்ந்து கொண்டே எமன் வாயில் தள்ளுகிறாயே!

அப்படியே போர் முகத்தில் மாண்டாலும் - வீர சொர்க்கம் அத்தான்! அபிமன்யு! இந்திரஜித்! .....

அய்யோ போதும்! போதும்! .... நான் அங்கேயே போய் சாகிறேன்! இங்கேயே கொன்று விடாதே!

அப்படிச் சொல்லுங்கள்! வீராதி வீரரே! தீராதி தீரரே! திக்கெட்டும் பாராட்டப் போகிறது உமது திண்தோள் காட்டும் போர்த் திறனை! உம்மை உலகமே கொண்டாடப் போகிறது! வீரனுக்கு ஒரு முறை தான் சாவு! கோழைக்குப் பல முறை சாவு! நீங்கள் வீரர்! தீரர்! சூரர்! புலி, சிறுத்தை, சிங்கம், வேங்கை .....

நிறுத்து! நிறுத்து! எனக்கு வீரம் வந்து விட்டது! இதோ போகிறேன்! விடைகொடு! வெற்றியோடு திரும்புகிறேன்.

கணவன் சொல்கேட்டு, அவள் ஆடினாள்! பாடினாள்! நெற்றியில் வெற்றித் திலகமிட்டாள்! காலில் விழுந்து வணங்கினாள்! அவனும் வீட்டைவிட்டு வெளியே சென்றான்!

அவனோ, தாலியை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள்! பின்னர், கதவைத் தாளிட்டுவிட்டுக் கட்டிலில் சாய்ந்தாள் கவலையுடன்!

வில்லனோ, தனது வீரத்தோழன் வருவான் - வருவான் - என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து - படையுடன் புறப்பட்டு விடுகிறான்.

கட்டிலில் படுத்திருந்த காரிகை கொல்லைப் பக்கம் ஏதோ ஒலி கேட்டு எழுந்து செல்கிறாள். யாரையும் காணவில்லை. கொல்லையில் உள்ள வைக்கோற் போரில் ஏதோ சலசலப்புச் சப்தம்!

வைக்கோற்போரிடம் சென்று சுற்று முற்றும் உற்றுப் பார்க்கிறாள்!

ஒருவேல், வெளியே நீட்டிக் கொண்டிருக்கிறது! அவள் அந்த இடத்தைக் கிளறிப் பார்க்கிறாள்!

போருக்கு அனுப்பி வைத்தாளே அந்த வீரக் கணவனை - அவன்! அங்கே வந்து ஒளிந்து கொண்டிருக்கிறான்.

சே! நீ ஒரு ஆம்பிளையா? ஆவேசம் வந்தவளைப் போலக் கத்துகிறாள். அவனோ, பேந்தப் பேந்த விழிக்கிறான்.

உடன்பிறப்பே, நான் அந்தப் படத்தில் கண்ட காட்சியை நினைவில் வைத்துக் கொண்டு - அந்தக் காட்சிக்குரிய கருப்பொருளுக்கேற்ற உரையாடலைத் தீட்டிக் காட்டியிருக்கிறேன்!

படம் பழைய படம் தான்! நிலையும் நினைப்பும் புதியவை என்பதை மறுக்க முடியுமா?

குறிப்பு: மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:-

இப்போது மத்திய அரசு தமிழ் நாட்டில் கைவைக்க ஆரம்பித்துள்ளது. அதன் தொடக்கம்தான் எரிசாராய ஊழல் புகார் விசாரணைக் கமிஷன். மாநில அரசும் ஆளும் கட்சியும் இதற்கு எதிராக பொது மக்களை திரட்டி எதிர்ப்பை காட்ட தயங்குகிறது. முதலமைச்சர் டெல்லிக்குப் போகிறார். இது சரியல்ல.

இந்த விஷயத்தில் மவுனமாக இருப்பது நல்லதல்ல. எம்.ஜி.ஆரின் தயக்கமும் ஊசலாட்டமும் மத்திய அரசுக்கு ஊக்கம் அளிக்கும். எனவே தமிழகத்தில் உள்ள கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு, மக்களைத் திரட்டி மத்தியில் ஆட்சியில் உள்ளவர்களின் சவாலைச் சந்திக்க முன்வர வேண்டும்!

மார்க்சிஸ்ட் கட்சியின் இந்த அறிக்கையை ஏடுகளில் படித்த போது நினைவுக்கு வந்ததுதான் அந்தப் பழைய படத்தின் காட்சி!

அன்புள்ள,

மு. க.

(07-07-1981)

931. இதற்கு, இவர் எதற்காக?

உடன்பிறப்பே,

நான் ஆணையிட்டால் - அது நடந்து விட்டால்? என்று ஒரு பாட்டுக்கு உதடு அசைத்த புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.; நான் ஆளவந்தால் அது நடந்துவிட்டால் என்று ஆரம்பித்து - நாட்டில் குடிகாரர் இருக்க மாட்டார்! கொள்ளை, கொலை என்ற பேச்சுக்கே இடமிருக்காது! ஊழல் தலையெடுக்காது! ஊரெல்லாம் வளம் பொங்கும்! உழவனுக்கு ஒரு துளி தொல்லையும் வராது! தாழ்த்தப்பட்டோர் வாழ்க்கைத் தரம் உயரும்! அவர்தம் உரிமைகள் கொழிக்கும்! சாதிமதச் சண்டைகளே அறவே ஓய்ந்து போகும்! விலைவாசி, கிடுகிடு என இறங்கும்! என்றெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி அள்ளிப் பொழிந்தார்.

ஆளுவதற்கும் வந்தார்! ஆண்டுகள் நான்கும் நகர்ந்து விட்டன என்றே கூறலாம்!

இப்போது என்ன நிலை? கொள்ளைகள் கணக்கு எல்லையற்றுப் போய் விட்டன! கொலைகளும் அவ்வாறே!

ஏன்? என்று கேட்டால் - என்ன சொல்லுகிறார் எம்.ஜி.ஆர்.! இப்போதுதானா புதிதாகக் கொள்ளைகளும் கொலைகளும் நடக்கின்றன? அது உலகம் தோன்றிய காலத்திலிருந்தே நடக்கின்றனவே! இதுதான் அவரது பதில்!

குடிப்பதை அனுதிக்க மாட்டேன் என்று தாயின் மேல் சத்தியம் செய்தீர்களே; இப்போது பதினைந்தாயிரம் கள், சாராயக் கடைகளைத் திறக்கிறீர்களே; என்று வினவினால் - தமிழ்நாட்டுக்கு அந்தக் கடைகள் ஒன்றும் புதிதல்ல - புராதன காலந்தொட்டு இருந்து வருபவை தான் என்று விடையளிக்கிறார்.

கழக ஆட்சிக் காலத்தில் விலைவாசி ஏறி விட்டது என்று நீங்களும் உங்கள் கட்சிக்காரர்களும் ஒருநாள் உண்ணாவிரதம்

இருந்தீர்களே; இப்போது அன்றிருந்ததை விடப் பல மடங்கு விலை ஏறி விட்டதே - என்ன சொல்லுகிறீர்கள்?

இதற்கு எம்.ஜி.ஆரின் பதில் என்ன? புதிதாக ஒன்றும் விலைவாசி ஏறவில்லை! முன்பே ஏறத்தொடங்கியதுதான்! இதுவே அவரது பதில்!

கடனுக்குத் தவணை முறை உண்டு - ஜப்தியே கிடையாது என்று உழவர்க்கு வாக்குறுதி கொடுத்துவிட்டு; இப்போது அவர்கள் வீட்டு பண்ட பாத்திரங்களையெல்லாம் படையெடுத்துச் சென்று பறித்துக் கொள்கிறீர்களே; என்று கேள்வி எழுப்பினால் - ஜப்தி முறை என்பது ஆங்கிலேயர் காலத்தில் இருந்து நடைமுறையில் இருப்பது தானே என்று பதில் அளிக்கிறார்.

ஊழலற்ற ஆட்சி நடத்துவோம் என்று வானதிரக் கூப்பாடு போட்டீர்களே; இப்போது வறட்சி நிவாரணப் பணி ஒப்பந்தக்காரர்கள் நிலையில் ஆயிரம் பதினாயிரம் எனத் தொடங்கி, மருத்துவக் கல்லூரி தேர்வு, பேருந்து வகையறா, காட்டிலாகா போன்றவைகளில் இலட்சக்கணக்கில் பெருகி, இன்று எரிசாராய ஊழல் - கப்பல் பேர ஊழல் - சாராயக் கலவைத் தொழிற்சாலை ஊழல் - சாராயத்தைப் புட்டியில் அடைக்கும் தொழிற்சாலை ஊழல் - என்ற அளவுக்குக் கோடி கோடியாக வளர்ந்திருக்கிறதே - என்று கேட்டால்; அதைக் கேட்டால் உன்மீதே ஒரு கமிஷன் போடுவேன் என்று மிரட்டுகிறாரே தவிர - உரிய பதிலை இதுவரையில் தந்திடவில்லை!

ஊருக்கு ஊர் தமிழ்நாடு முழுதும் ஊழல் நாற்றம்! பொது மக்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு சுவாசிக்க முடியாமல் தொல்லைப்படுகிறார்கள்!

மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்டோர் ஐநூறுக்கு மேற்பட்டோர் மதம் மாறியதற்கு ஒரு சில வகுப்பு வெறியர்களின் கொடுமையும் - அரசின் அலட்சியப் போக்கும் - காரணமல்லவா என்று கேட்டால்; 1969-இல் நாலு பேர் - 1972-இல் மூன்று பேர் - இப்படி முன்பே மதம் மாறியிருக்கிறார்கள் - இது ஒன்றும் புதிதல்ல! 1944-இல் கூட நூற்றி எழுபது பேர் மதம் மாறினார்கள் என்று எம்.ஜி.ஆர். புள்ளி விபரம் தருகிறார்!

தமிழ் நாட்டில் உள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மிகப் பெரும்பான்மையோர் முறையே மக்கா, மதினாவிலிருந்தோ, ஜெருசலத்திலிருந்தோ இங்கு வந்து குடியேறியவர்கள் அல்ல! இங்கிருந்தவர்களேதான் பல்லாண்டு காலத்திற்கு முன்பு முஸ்லிம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மதம் மாறினார்கள் என்பது வரலாற்று உண்மை!

மீனாட்சிபுரம் சம்பவங்கள், ஏன் நடக்கின்றன என்று கேட்டால் - அதற்குப் பொறுப்பான பதிலை அளித்திட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய முதல்வர் எம்.ஜி.ஆர்., ஆங்கிலேயர் காலத்தில் 1944-இல் நடக்கவில்லையா? 1969-இல் கழக ஆட்சிக் காலத்தில் நாலைந்து பேர் மதம் மாறவில்லையா? என்று பதில் அளிப்பது எந்த வகையில் உரிய சமாதானமாகும்!

இப்படியொரு புள்ளி விபரப் பதிலைத் தருவதற்குப் பதிலாக மதமாற்றமென்பது ஆண்டாண்டுக் காலமாக நடைபெற்று வருவதுதான் என்று கூடச் சுலபமாகக் கூறிச் சமாளித்துக் கொண்டிருக்கலாம்.

கொள்கை காரணமாக - திருமணங்கள் காரணமாக - எத்தனையோ அடிப்படைகளில் மதம் மாறிய நிகழ்ச்சிகள் சில உண்டு! விரல் விட்டு எண்ணக் கூடியவை!

எம்மதமாயினும் சம்மதமே என்ற நிலையில் அனைவரையும் மனித உணர்வு அடிப்படையில் காணுகின்ற தி.மு.கழகம்; மதம் மக்களுக்கு அபினாகி விடக் கூடாது என்பதிலும் அக்கறையுடைய தி.மு.கழகம் மீனாட்சிபுரம் நிகழ்ச்சிக்குரிய அடிப்படையை ஆராய்ந்து - தமிழகத்தில் பல மீனாட்சிபுரங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை முழுமையாக அகற்றிட வேண்டுமென்பதில் மிகுந்த கவலை கொண்டுள்ளது என்பதையும், வகுப்புக் கலவரங்கள் ஏற்படாமல் வன்முறைகள் நிகழாமல் முன் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்பதையும் தெளிவாக்கிடக் கடமைப்பட்டிருக்கிறது!

அத்தகைய அணுகுமுறையை மேற்கொள்வதற்குப் பதில் - கடந்த காலப் புள்ளி விபரங்களைக் காட்டி; ஒரு முதலமைச்சர் பிரச்சினையின் ஆழத்தையும் அடிப்படையையும் திசை திருப்புவது அபத்தமானது!

எள்ளின் முனையளவும் தவறாத ஏற்றமிகு ஆட்சி நடத்தப் போகிறேன் எனக் கூறிவிட்டு; எல்லையற்ற தவறுகளின் உறைவிடமான ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவர்;

எந்தக் குற்றச்சாட்டைக் கூறினாலும்; அதற்கு முன்மாதிரி இருக்கிறது என்று புள்ளி விவரங்களோடு துள்ளி ஓடி வருவது - இந்த ஆட்சியின் எண்ணிலடங்காக் குறைகளையும், குற்றங்களையும், கொடுமைகளையும், ஊழல்களையும் மறைத்து விடப் பயன்படாது! இதற்கு, இவர் எதற்காக? என்ற கேள்விதான் கிளம்பும்!

அன்புள்ள,

மு. க.

(08-07-1981)

932. கடலூர் அழைக்கிறது; கண்மணியே! வருக! வருக!!

உடன்பிறப்பே,

திருவண்ணாமலை மாநாட்டுக்குப் பிறகு தஞ்சை மாவட்ட மாநாட்டைக் குடந்தையில் நடத்துவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்ட போதிலும் - கைலாசம் கண்துடைப்பு விசாரணைக் கமிஷனின் அரசு ஆணையை எரித்திட்ட அறப்போர் தவிர்க்க முடியாததாகி விட்டபடியால் - மாநாட்டுத் தேதியைத் தள்ளிப் போட வேண்டியதாயிற்று!

அதன்பிறகு நஞ்சை குலுங்கும் தஞ்சை, விவசாயப் பணிகளில் விறுவிறுப்பாக ஈடுபட வேண்டிய காலம்! மாநாடு நடத்துவதற்கென்று வயல்வெளிகளைத் தவிர பெரிய மைதானங்கள் எதுவும் குடந்தையைச் சுற்றிலும் எங்குமே இல்லை! இப்போது, நமது கழகப் பொதுக் கூட்டங்களே, மாநாடுகளைப் போல நடைபெறும்போது - மாநாடுகளை நடத்துவதற்கு இடங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது எளிதான காரியமா?

எனவே, தஞ்சை மாவட்ட மாநாடு ஒத்தி வைக்கப்பட்டு, தென் ஆற்காடு மாவட்ட மாநாடு கடலூரில் - வரும் 18, 19 - சனி, ஞாயிறு நாட்களில் நடைபெற இருக்கிறது.

மாநாட்டுக்கெனக் கடலூரில் தேர்வு செய்யப்பட்டிருக்கிற இடமும் போதுமானதாக இருக்குமா - என்பது எனக்குச் சந்தேகம்தான்!

அண்மையில் இரண்டொரு நாட்களுக்கு முன்பு, பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் - குழுமிய மக்கள் வெள்ளம் - பெருக்கெடுத்த பேரார்வம் - உடன்பிறப்பே! உன்னைப் போன்றவர்கள் காட்டிய எழுச்சிக் கோலம் - இவையனைத்தையும்

கண்டபிறகு; கடலூர் எனப் பெயர் பூண்டுள்ள அந்த நகரம் - கடல் அலையென பொங்கி வழியப்போகும் பெருந்திரளை எப்படித்தான் தாங்கி நிற்கப் போகிறது என்ற அச்ச உணர்வே எனக்கு ஏற்படுகிறது!

அந்த அச்ச உணர்விலே கூட எவ்வளவு மகிழ்ச்சி! எத்துணைக் குதூகலம்! மாறி மாறி வரக் கூடிய வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் - சோர்ந்து சுருண்டு விழுந்து விடாமல் - சோதனைகள் சுழல்கள் எனப்பற்றி இழுத்தாலும் - வேதனைகள் விழிகளைக் குளமாக்கிவிட முயன்றாலும் - எதையும் தாங்கிடும் இதயம் உண்டென்று நிமிர்ந்து நின்று - இலட்சிய தீபத்தை அணையாமல் காப்பது ஒன்றிலே மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்தால் போதுமென்று - நமது அருமை அண்ணன் உருவாக்கிய இந்தக் கழகத்தை அழிக்க முனைவோரின் எண்ணத்தை உருத்தெரியாமல் உடைத்தெறிவோம் என்று - சூளுரைத்திடும் சுடரொளிகள் தொடர்ந்து நிகழ்த்திடும் தூயபணிகள் விளைவன்றோ; கழகத்திற்கு நாள்தோறும் பெருகிவரும் நல்லாதரவு என்பதை நினைத்திடும்போது என் நெஞ்சு குளிராதா? இன்பத்தால் பூரித்திடாதா?

எத்தனை வித முயற்சிகள் நம்மை வீழ்த்திட!

சேற்றையள்ளி வீசிப்பார்த்தனர்; அதனால் இந்தச் செந்தாமரையின் வாசம் போய்விடவில்லை!

இருட்டடிப்புச் செய்வதை ஏடுகள் பல, கையாண்டு பார்த்தன! பார்க்கின்றன!

காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? என்ற பாவேந்தரின் பாட்டுக்கு எடுத்துக்காட்டாகக் கழகம் ஒளி விட்டதே தவிர யாரும் அதனை ஒளித்து வைத்து விட முடியவில்லை!

வாதங்களால் சந்திக்கத் திறனற்றோர் வசை புராணங்களால் வீழ்த்திவிட வரிந்து கட்டினர் - இன்னமும் அப்படியொரு வரிசையினர், கைவரிசை காட்டுகின்றனர்! நாமோ; அசைக்க முடியாத ஆதாரங்களை அடுக்கிக் காட்டி - வெல்ல முடியாத உண்மைகளின் பக்கம் நின்று - அன்றும் சரி; இன்றும் சரி; அண்ணா வழியில் அயராது உழைக்கும் அணியினை அன்றாடம் வளர்த்துக் கொண்டேயிருக்கிறோம்!

தமிழகத்தில் நடைபெறும் துக்ளக் தர்பார் - மக்கள் படும் தொல்லை - நிர்வாகத் தேக்கம் - கோடி கோடியாகக் கொள்ளையடிக்கும் கோட்டைக் கோமான் - எல்லாமே சீரழிவு தான் இந்த மாநிலத்திற்கு என்று அறிந்தோர் சிலர் - தெளிந்தோர் சிலர் - இங்கே இருப்பினும் கூட - அவற்றைத் திரைபோட்டு மறைத்து விட்டு - தி.மு.க. என்றால் மாத்திரம் அந்த அறிந்தோரும் தெளிந்தோரும் அலர்ஜி கொண்டு எதிர்த்திடும் போக்கிற்கான அடிப்படைக் காரணத்தை, எல்லாத் தரப்பு மக்களிலும் பெரும்பாலோர் இன்று புரிந்துகொண்டு இடையில் செய்து விட்ட தவறுக்குக் கழுவாய் தேடிடக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

குற்றவாளிக் கூண்டில் எரிசாராய ஊழலுக்காக ரே கமிஷன் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கும் எம்.ஜி.ஆர். அவர்கள், முதலமைச்சராக நீடிப்பது நியாயமா?

இந்தக் கேள்வி எழுந்துள்ளது எங்கணும்; பரவலாக!

எம்.ஜி.ஆர். அரசைக் கலைக்க வேண்டுமென்பதோ - அந்த அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்பதோ - எங்கள் கோரிக்கையல்ல என்று டெல்லியில் தெரிவித்தேன்!

அதற்குப் பிறகு தமிழகத்தில் நடைபெறும் சம்பவங்கள் - பழிவாங்கும் நடவடிக்கைகள் - வன்முறைகளைத் தூண்டும் பேச்சுகள் - ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகளைத் தூண்டிவிட்டு நடைபெறும் காரியங்கள் - விவசாயிகளுக்கு - அரசு அலுவலாளர் பிரதிநிதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் - ரே கமிஷன் நியமனத்திற்குப் பிறகும் நடைபெறுகிற லஞ்சலாவண்ய ஊழல்கள் - இவற்றையெல்லாம் பார்க்கும் போது -

தி.மு.க.வின் நிலை குறித்து டெல்லி நிருபர்களிடத்தில் அறிவித்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்து, கழகச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களிடத்திலே அழுத்தமாக எழுந்துள்ளது.

கடலூர் மாநாடு, மக்களின் பல்வேறு தொல்லைகளைக் குறித்து விவாதித்து முடிவு எடுத்திடும் பொறுப்பை உடையது என்பதோடு - மாநில மக்களுக்குப் பெருந்தொல்லையாக வாய்த்துள்ள எம்.ஜி.ஆர். அரசு குறித்தும் ஒரு முடிவினை எடுத்திட வேண்டிய சூழ்நிலையில் கூடுகிறது!

கழகக் கூட்டுத் தலைமை எடுத்த முடிவைத் தான் டெல்லியில் அறிவித்தேன்.

கட்சிக்குக் கட்டுப்பட்டதுதானே தலைமை!

எனவே என்ன முடிவு எடுக்க வேண்டுமென்பதைக் கலந்து பேசக் கடலூர் மாநாடு வாய்ப்பாக அமைகிறது!

அந்த வாய்ப்பை நீ நழுவ விடுவாயா? நிச்சயமாக நழுவவிடமாட்டாய்!

கனிவும் கம்பீரமும் நிறைந்த உன் முகத்தைக் காண - கணீர் என்ற உனது குரல் எழுப்பும் முழக்கம் கேட்க - கடலூரில், உனக்கு முன்பே நான் காத்திருப்பேன்! நீ வரும் வழிமேல் விழி வைத்து! உடன்பிறப்பே! என் உயிரே! இயக்கத்தின் இரத்த நாளமே! வருக! வருக!

கடலூர் கோட்டை மட்டும் கழகக் கோட்டையல்ல; கடலூரணைய பலக் கழகக் கோட்டைகளைக் கட்டி முடித்து வெற்றிக்கொடி பறக்க விட என் கண்மணியே; வருக! வருக!

அன்புள்ள,

மு. க.

(15-07-1981)

933. இவரும் அப்படியா?

உடன்பிறப்பே,

நாலைந்து மாத காலமாகப் போடுகிறார்கள் சட்டம்; தீட்டுகிறார்கள் திட்டம் - பிறப்பிக்கிறார்கள் ஆணை - ஒரு சட்டத்தோடு ஒரு சட்டம் மோதுகிறது! திட்டமும் திட்டமும் முட்டிக்கொண்டு மூலைக்கொன்றாகச் சிதறி மூளியாகிக் கிடக்கின்றன! ஆணைகளோ; காலையில் ஒன்று! மாலையில் அதனை மறுத்து ஒன்று! அறிக்கைகள் நிருபர்கள் பேட்டிகளோ - அழுத்தம் திருத்தமாக! ஆனால் அவற்றில் குறிப்பிட்டபடி எதுவுமே நடப்பதில்லை!

மதுவிலக்கு பற்றி மறுசிந்தனையென்று கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டிய எம்.ஜி.ஆர். அரசு; நாவலர் படித்த நிதி நிலை அறிக்கையில் அநேகமாக மதுவிலக்கு ரத்து செய்யப்படும் என்பதற்கொப்பான அறிவிப்பைத் தந்து - ஏறத்தாழ நாலைந்து மாதங்களாக மதுவிலக்குக் கொள்கையை குரங்குப் புண்ணாகவே ஆக்கி விட்டது!

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர். அவர்கள்; தனது தாயாரின் மீது சத்தியம் செய்து மதுவிலக்குச் சட்டத்தை மேலும் தீவிரமாக்குவேன் என்று முழக்கினார். அந்தச் சத்தியம், சமுத்திரத்தில் கரைக்கப்பட்ட சாம்பலாகி விட்டது; அது வேறு விஷயம்!

மதுவிலக்கு சட்டத்தைத் தளர்த்துவது என்ற பெயரால் ரத்து செய்தவர்கள் - இந்த நாலைந்து மாத காலத்தில் ஏதாவது முறைப்படி காரியமாற்றியிருக்கிறார்களா?

டெண்டர்கள், ஏலங்கள் என்று இரண்டையும் இணைத்து அறிவித்து அதிலே எல்லையற்ற குழப்பங்கள்!

அதிகத் தொகைக்கு டெண்டர் வந்துள்ளதை அடிப்படையாக வைத்து அதற்கு மேல் ஏலத்தைத் தொடங்கலாமே என்று எதிர்க்கட்சி சார்பில் எடுத்து கூறப்பட்ட யோசனைகளைப் புறக்கணித்தார்கள்!

அதற்குக் காரணம், தமிழ்நாட்டுக்காரர் அல்லாதவர்களுக்குக் கணிசமான ஆட்களுக்குக் கடைகளுக்கான அனுமதி வழங்க வேண்டுமென்பதுதான்! எனவேதான் அதிகாரிகள் சொல்லியுங்கூட அரசாங்கம் பொருட்படுத்தவில்லை! அரசின் குறிக்கோள் வேறாக இருக்கிறதே!

பதினைந்தாயிரம் கள் சாராயக் கடைகளுக்கு அனுமதிகள்!

அந்தக் கடைகளுக்கு சாராயம் வழங்கப்பட வேண்டுமல்லவா?

அந்தச் சாராயக் கலவைத் தொழிற்சாலைகளை அரசாங்கமே ஆரம்பித்து நடத்தலாம்! அல்லது கூட்டுறவு நிறுவன வாயிலாக தொடங்கி நடத்தலாம்! எதுவும் முடியாவிட்டால் தற்காலிகமாக ஆங்காங்குள்ள டிஸ்டிலரிகள்; சாராயக் கலவையைச் செய்து சில்லறை கடைகளுக்கு அனுப்பலாம் - என்று யோசனை தெரிவித்தோம்! தந்திகள் கொடுத்தோம்!

கோலேந்திகளின் காதில் விழவில்லை! காதில் விழாததுபோலக் காட்டிக் கொண்டனர்!

பிளண்டிங் (சாராயக் கலவை) பாட்லிங் (புட்டியில் அடைத்தல்) ஆகிய தொழிற் கூடங்களை பத்துக்கு மேற்பட்ட இடங்களில் அமைக்க - புதிதாகச் சில தனியார்களை நியமித்தார்கள்! அந்தத் தனியார்களில் பெரும்பாலோர் - தமிழ்நாட்டைச் சேராதவர்கள்! தமிழ்ப் பெயருடையவராக இருந்தால் அவர்கள் பினாமிகள்! கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் நடைபெறவே இந்தத் தனியார் துறைத் திட்டம்! வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு, வாய்மொழியாகவே உறுதியளிக்கப்பட்டு விட்ட காரணத்தால் அவர்கள் அந்தத் தொழிற்கூடக் கட்டிடங்களைப் பல லட்ச ரூபாய் செலவில் கட்டத் தொடங்கி விட்டார்கள்.

இதற்கிடையே உரிமை வழங்கப்பட்ட கள், சாராயக் கடைகள் திறக்கப்படுவதற்கான தேதிகளில் குழப்பமோ குழப்பம்! ஒவ்வொரு

தேதியை அறிவிக்கும்போதும் அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் உறுதியாக அறிவித்தார்! ஆனால் அவர் அறிவித்த தேதிகளில் கடைகள்தான் திறக்கப்படவில்லை!

மொத்த வியாபாரிகள் - ஐ.எம்.எப்.எல். வியாபாரம் - இவைகளை நிர்ணயிப்பதற்கும் பெரும் பேரம் நடைபெற்று முடை நாற்றமெடுத்த ஊழல், லஞ்சலாவண்யங்களுக்கு மத்தியில் அதற்குரிய ஆட்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்! ஆனால் அவர்கள் இன்னமும் செயல்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நாலைந்து மாதக் குழப்பங்கள் - கோளாறுகள் அனைத்துக்குமே காரணம் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கும் திட்டம் நிறைவு பெற வேண்டுமே; அதற்காகத்தான்!

இவ்வளவு அலங்கோலங்களுக்குப் பிறகு - காமராசர் அவர்களின் பிறந்த நாளுக்கு மறுநாள் - ஜூலை 16-ஆம் நாள் கடைகள் திறப்பது உறுதி! இந்த அறிவிப்பே இறுதி! இறுதி! என அமைச்சர் நிருபர்களிடம் கூறினார்; எம்.ஜி.ஆரின் ஆணைப்படி!

ஃ கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக சாராயம், பாட்டில்களில்தான் அடைத்து விற்கப்படும் என்பதில் மாற்றமே இல்லை!

ஃ கள்ளோ, சாராயமோ குடிப்பதற்கு பர்மிட் வாங்கியே ஆக வேண்டும். இதில் மறுபரிசீலனைக்கே இடமில்லை! பர்மிட் இல்லாதவர்கள் குடிக்கவே முடியாது!

ஃ மதுக்கடைகள்; அரசு நிர்ணயித்துள்ள முறைப்படி தான் கட்டப்பட்டு விற்பனை நடைபெற வேண்டும். இல்லையேல் கடை உரிமங்கள் ரத்து செய்யப்படும்.

எம்.ஜி.ஆர். சார்பில் இந்தத் திட்டவட்டமான அறிவிப்புகளை அமைச்சர் எஸ்.டி.எஸ். அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்! எம்.ஜி.ஆர். அரசும், இந்த ஆணையைப் பிறப்பித்தது!

ஆனால்! ஆனால்!

இதோ; 16-ஆம் தேதி மதுக்கடைகள் திறப்பதில் எவ்வளவு அலங்கோலங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை ஏடுகள் விவரிக்கின்றன!

"The Hitch was the shopkeepers could not take delivery of the stocks from the newly erected blending unit near Tiruvanmiyur till late in the Evening.".

இவ்வாறு இந்து ஏடு எழுதுகிறது! அதாவது மதுக்கடைக்காரர்கள், திருவான்மியூரில் புதிதாக கட்டப்படுகிற பிளண்டிங் யூனிட் (சாராயக் கலவைத் தொழிற்சாலை)டிலிருந்து 16-ஆம் தேதி மாலை வரையில் சரக்கினைத் தங்கள் கடைகளுக்கு எடுத்துச் செல்ல முடியவில்லையாம்!

"Another irritant was the question of permits most persons had no permits and made it quite plain that they were not going to get one either. Some even warned the shopkeepers not to insist on permits."

பெரும்பான்மையான குடிகாரர்கள் பர்மிட் வைத்திருக்க வில்லையாம்! அவர்கள் யாரும் பர்மிட் வாங்கப் போவதில்லையாம்; யாருடைய பர்மிட்டையும் வாங்கிக் காட்டிக் குடிக்கப் போவதுமில்லை. பர்மிட்களை வலியுறுத்திக் கேட்காதேயென்று அவர்களில் சிலர் கடைக்காரர்களை எச்சரித்தனர். இந்தச் செய்திகளையும் இந்துதான் விரிவாக எழுதியிருக்கிறது!

The nearly 100 licensed arrack shops in Madras City remained "dry" on Thursday the very first day of the State going "wet" again - as the Neelankarai blending unit was not allowed to release stock for non-payment of Excise duty.

The retailers were also sore that top officials of the Prohibition and Excise department did not respond to their requests to expedite release of stocks from the blending unit. Further they charged that the unit, which was to sell unbottled arrack, quoted a price that included the cost of the bottle. They argued while excise authorities had told them that they would be asked to pay Rs. 10.53 for a litre of arrack, the blender wanted Rs. 10.73.

There was not a Policeman in sight strange for an area where people were obviously carrying lakhs of rupees.

According to late night reports tension prevailed around the Neelankarai arrack blending unit after 11 P.M. as retailers could not lift their quota of arrack.

It is reported that nearly 100 retailers of the City were waiting at the unit right from 8 a.m. but they were told that only 66 of them would be supplied arrack. Later they were informed by the management that only 50 of them would get supply. It is said there was a tiff between the Tahsildar and the management over this.

It also seemed in certain cases that authorities had not fully used their discretion while permitting location of arrack shops, even temporarily for a month. For example, there is one right opposite the Mandaveli bus terminus, one of the busiest in the city. Drunken driving comes that much closer to reality.

The story in Chengalpattu is not very different. Hundreds of retail outlets had to go without a drop of arrack on the first day of relaxation of Prohibition.

While some retailers in North Madras managed to tap other sources and maintain supply somehow, others were asked to take a day's stock for blending units in Cuddalore (South Arcot) and Gudiyatham (North Arcot).

But where is the blending Plant at Chengalpattu? A Tahsildar attached to the Saidapet Taluk Office said he had no idea. The sub-collector attached to the office had asked them to lift arrack (one day's stock) from Cuddalore Disgruntled retailers responded that it was not worth while carring it all the way from Cuddalore. Enquiries reveal that the blending plant at Chengalpattu does not have potable water inside the premises.

A spokesman of the retailers condemned the Revenue Minister for blaming them for the postponement from June 30 to July 16. The fact is that some of the blending units are yet to take off!

இதன் தமிழாக்கம் வருமாறு:-

தமிழகத்தில் மதுவிலக்கு மீண்டும் நீங்கிய முதல்நாள் வியாழக்கிழமை, ஆனால் அந்த முதல் நாளன்றே சென்னையில் சுமார் நூறு சாராயக்கடைகள் காய்ந்து கிடந்தன. ஆயத் தீர்வைக் கட்டவில்லை என்று, நீலாங்கரைக் கலவை ஆலையிலிருந்து சரக்கை எடுத்து வர அதிகாரிகள் அனுமதியாததே இதற்குக் காரணம்!

.... கலவை ஆலையிலிருந்து சரக்கை எடுத்துச் செல்வதை விரைவுபடுத்தித் தாருங்கள் என்ற தங்கள் வேண்டுகோளை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மேல் அதிகாரிகள் ஏற்கவில்லை - ஏற்று அனுசரணையாகச் செயல்படவில்லை என்றும் சில்லறை கடைக்காரர்கள் புண்பட்டிருக்கின்றனர்.

கலவை ஆலை சாராயத்தைப் புட்டியில் அடைத்து விற்கவில்லை. வெறுமனே தான் தந்தது. ஆனாலும் புட்டிக்கும் சேர்த்து விலை போட்டது என்றும், அவர்கள் குற்றம் கூறினார்கள்.

ஆயத்தீர்வை அதிகாரிகள் லிட்டருக்கு ரூ.10.53 காசு தந்தால் போதும் என்று கூறினார்கள். கலவை ஆலைக்காரர்களோ ரூ. 10.73 காசு கேட்டார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்.

பற்பலர் வெளிப்படையாக லட்சம் லட்சமாகப் பணம் எடுத்து வந்த அந்த இடத்தில் ஒரு போலீஸ்காரர் கூடக் காணப்படாதது வேடிக்கையாகத்தானிருந்தது.

சில்லறை விற்பனையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சரக்கை எடுத்துச் செல்ல முடியாததால், நீலாங்கரைக் கலவை ஆலையைச் சுற்றிக் கொந்தளிப்பு நிலவியது என்று பின்னிரவில் வந்த செய்திகள் கூறுகின்றன.

சென்னை சில்லறை விற்பனைக் கடைக்காரர்கள் சுமார் நூறு பேர் காலை 8 மணி முதலே கலவை ஆலையில் காத்துக் கிடந்தார்கள் என்றும், ஆனால் அவர்களுள் 66 பேருக்கே சாராயம் தரப்படும் என்றும் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பின்னர் அவர்களுள் 50 பேருக்குத்தான் சாராயம் கிடைக்கும் என்று கலவை ஆலை நிர்வாகம் கூறியதாம். இது பற்றி, தாசில்தாருக்கும் கலவை ஆலை நிர்வாகத்துக்குமிடையே மோதல் என்றும் கூறப்படுகிறது.

சாராயக் கடைகளை இன்னின்ன இடங்களில் வைக்கலாம் என்று அனுமதிப்பதில் குறிப்பிட்ட சில கடைகளைப் பொறுத்து அதிகாரிகள் தம் உசிதானுச்சார அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்றும் தோன்றுகிறது. தற்காலிகமாக ஒருமாத காலத்திற்கு அனுமதி வழங்குவதில் கூட இந்த நிலை.

நகரின் நெரிசல் மிக்க பகுதிகளுள் ஒன்று மந்தைவெளிப் பேருந்து நிலையம். இங்கே பேருந்து நிலையத்திற்கு நேர் எதிரிலேயே கடை உள்ளமை இதற்கு உதாரணம்.

செங்கற்பட்டிலுள்ள நிலைமையும் அப்படித்தான். மதுவிலக்குத் தளர்த்தப்பட்ட முதல் நாளிலேயே நூற்றுக் கணக்கான சில்லறை விற்பனைக் கடைகளில் சாராயம் ஒரு சொட்டும் கூட இல்லை.

வடசென்னையில் சில்லறை வியாபாரிகள் சிலர் வேறு வழிகளில் சரக்கைப்பெற்று எப்படியோ வியாபாரத்தை நடத்தினர். மற்றவர்களோ, கடலூர் மற்றும் குடியேற்றத்திலுள்ள கலவை ஆலைகளிலிருந்து ஒருநாள் தேவைக்காக சரக்கைப் பெற்றுக் கொள்ளும்படி கூறப்பட்டனர்.

ஆமாம்! செங்கற்பட்டு மாவட்டத்திற்குரிய கலவை ஆலை எங்கே உள்ளது? சைதாப்பேட்டை வட்ட ஆட்சியர் அலுவலகத்தைச் சார்ந்த தாசில்தார் ஒருவர் தனக்கு அதுபற்றி ஏதும் தெரியவில்லை என்றார்.

இந்த அலுவலகத்தைச் சார்ந்த மாவட்டத் துணை ஆட்சியாளர் (ஓரிரு நாளுக்குத் தேவையான) சாராயத்தை கடலூரிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று சில்லறை வியாபாரிகளிடம் கூறினார். அவர்களோ அவ்வளவு தொலைவிலிருந்து எடுத்து வருவது - கடலூரிலிருந்து எடுத்து வருவது பயனற்றது என்று கூறிவிட்டார்கள்.

செங்கற்பட்டிலுள்ள கலவை ஆலையில், ஆலை வளைவுக்குள்ளேயே போதுமான அளவு நீர்வசதி இல்லை என்று விசாரித்துப் பார்த்ததில் தெரிகிறது.

ஜூன் முப்பதிலிருந்து ஜூலை 16 ஆக (கடைதிறப்பு) தேதியை ஒத்திப்போட்டதற்கு தம்மை - வருவாய்த்துறை அமைச்சர் குறை கூறியது தவறு என்று கடைக்காரர்கள் சார்பில் ஒருவர் கண்டனம் தெரிவித்தார்.

கலவை ஆலையை சிலபல இன்னும் இயங்கத் துவங்கவே இல்லை என்பதுதான் உண்மை!

இப்படி எழுதுகிறது இந்தியன் எக்ஸ்பிரஸ்!

சாராய வடி தொழிற்சாலைகளிலிருந்து எரிசாராயத்தைப் பெற்று அதை குடிசாராயமாக மாற்றும் கலவைத் தொழிற்சாலைகள் செயல்படத் துவங்காத காரணத்தால், மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் முதல் நாளான இன்று சாராயம் இல்லை.

இன்று மாலை 6 மணிக்குக் கூட நகரில் உள்ள எந்தச் சாராயக் கடையிலும் சரக்கு வந்து சேர்ந்தபாடில்லை என்பதை நகர் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த நமது நிருபர் நேரில் கண்ட உண்மை நிலவரமாகும்.

திருச்சி மாவட்டத்தில் சாராயக் கடைகளுக்கு இன்று காலை வரை சாராய பாட்டில்கள் வந்து சேரவில்லை.

நிருபர்கள் கள்ளுக்கடைகளைச் சுற்றிப் பார்த்த போது கள் குடிக்க வந்தவர்களில் யாரும் பர்மிட் வைத்திருந்ததாகத் தெரியவில்லை. கள்ளுக் கடைக்காரர்களும் பர்மிட்டைக் காட்ட வேண்டும் என்று வற்புறுத்தக் காணோம்.

இது தினமணியில் வந்துள்ள தகவல்!

சாராயக் கடைகள் முன் உள்ள சுவரில் வெள்ளை அடித்து சாராயக் கடை என்று மட்டும் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் கடைக்குள் எந்த வேலையும் நடைபெறவில்லை.

நேற்று மாலை வரை சென்னை நகரில் எந்த சாராயக் கடைக்கும் சாராயம் சப்ளை செய்யப்படவில்லை.

பாட்டில் சாராயம் சப்ளை செயல்படா விட்டாலும் சில இடங்களில் கள்ளச் சாராய விற்பனை ஜாம் ஜாம் என்று நடைபெற்றது. சாராயக் கடை அருகிலேயே கள்ளச் சாராயமும் விற்கப்பட்டது.

தினகரன் ஏட்டில் வந்துள்ள செய்தி இது!

இதோ, தினத்தந்தி செய்த வெளியிட்டிருக்கிறது பார்!

சாராயக் கடைகளில் பிற்பகல் 2 மணிக்கு விற்பனை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் கடைகளுக்கு சாராயம் உரிய காலத்தில் வந்து சேராததால், சில கடைகளில் மாலை 5 மணி அளவிலும், சில கடைகளில் இரவு 8 மணிக்கும் விற்பனை தொடங்கியது.

பாட்டிலில் அடைக்கப்பட்ட சாராயத்தைத்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், பாட்டிலில் அடைத்த சாராயம் கடைகளுக்கு வந்து சேராததால், தற்காலிகமாக சாராயத்தை அளந்து விற்க கடைக்காரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரங்களை மறைக்க - அல்லது மழுப்ப - அமைச்சர் அறிக்கை விடக்கூடும்!

ஆனால் நிருபர்களைச் சந்திக்க நேரம் கொடுத்த அமைச்சர் 15-ஆம் தேதியன்று பேட்டியை ரத்து செய்து விட்டார்! ஏன்?

எம்.ஜி.ஆரின் ஊழல் குட்டையில் விழுந்திடாத சிலரில் இவர் ஒரு சீலர் என நம்பியிருந்தோம்!

அடுக்கடுக்கான அலங்கோலங்களுக்கு இவரும் துணை போவதைப் பார்த்தால் - அதுவும் தொடர்ந்து துணை போவதைப் பார்த்தால் - நமது நம்பிக்கையை நாசமாக்கி விடுவாரோ என எண்ணிடத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு. க.

(18-07-1981)

934. உடனடித்தேவை; அந்தச் சிகிச்சையே!

உடன்பிறப்பே,

சேலம் எம்.ஜி.ஆர். மன்ற மாநாட்டில் தனது தொண்டர்கள் சைக்கிள் செயின், கம்புகழிகள் போன்ற ஆயுதங்களுடன் எதிர்க்கட்சியினரைத் தாக்குவதற்குத் தயார் என்று தோள் தட்டிச் சவால் விட்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்; இதோ கோவையில் நடைபெற்ற கூட்டத்திலும் தி.மு.க. நடத்த இருக்கிற நான்காவது கட்டப் போராட்டத்தைப் பொறுத்துத் தனது கட்சியும் எதிர்ப்போராட்டம் நடத்துமென்று அறிவித்துவிட்டு; ஆனால் அந்த எதிர்ப்போராட்டத்தில் வன்முறை இருக்காது என்று கூறியிருக்கிறார்.

சொத்துக்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்துவது தான் போராட்டமா? என்று இதோபதேசம் புரிந்துள்ள நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் - 1972-ஆம் ஆண்டு அவரது ரசிகர்களை ஏவிவிட்டுக் கொளுத்திய பஸ்கள் எத்தனை? உடைத்து நொறுக்கிய லாரிகள் எத்தனை?

1972-இல் அமைச்சர்களே வெளியில் வர முடியாமல் செய்தோம் என்று சென்ற சில வாரங்களுக்கு முன்புதானே இதே எம்.ஜி.ஆர். சேலத்தில் வீராப்பு மொழிகளை வீசினார்!

சாத்வீகத்தின் வடிவமாக - அமைதியின் உருவமாக - கோவையில் கொட்டி முழக்கிவிட்டுத் திரும்புகிறார்! இரயிலடியில் ஆர்வத்தின் காரணமாக அவர் மீது மாலை வீசிய ஒரு மாணவனை அவரே பிடித்து அவன் கன்னத்தில் அறைந்து, போலீசாரிடம் ஒப்படைக்கிறார். அந்த மாணவன்; பச்சை குத்திக் கொண்டிருப்பவர் என்றும் சொல்லப்படுகிறது. இவ்வாறு ரயிலடியில் ஒரு சம்பவம் நடைபெற்றது என்பது உண்மையானால் - அடடா! எவ்வளவு அற்புதமான முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது என நமக்கு நாமே பெருமைப்பட்டுக் கொள்ளத்தானே வேண்டும்!

அந்தச் சம்பவத்தை கோவையிலிருந்து வெளிவரும் ஏடுகள் வெளியிடக் கூடாதென்று அதிகாரிகள் முன்கூட்டியே

தடுத்தார்களாம்! கோவை தினகரன் ஏட்டுக்கும் அப்படியொரு தாக்கீது அதிகாரிகள் வாயிலாகத் தரப்பட்டதாம். அதன்படி கோவை தினகரனில் அந்தச் சம்பவம் குறித்த செய்தி வெளியிடப்படவில்லையாம்!

இருந்தபோதிலும் எம்.ஜி.ஆரின் சீடகோடிகள் கோவை தினகரன் மாலைமுரசு ஆகிய ஏடுகள் வெளிவரும் அலுவலகத்தில் நுழைந்து பெரும் அமளியை நடத்தியிருக்கிறார்கள். இயந்திரங்கள் சேதமுற்றிருக்கின்றன. அச்சு எழுத்துக்கள் அடித்து நொறுக்கப்பட்டு பயனற்றவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அலுவலக ஊழியர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு இருவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சூறையாடப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டே ஓடிவிட்டனர் - எம்.ஜி.ஆர். சீடர்கள்!

உயிருக்கும் பொருளுக்கும் ஆபத்து ஏற்படுத்தாத கிளர்ச்சிகளைத்தான் தனது கட்சியினர் நடத்துவார்கள் என்று, தேன் தடவிய பேச்சுப் பேசியவர்; இந்தத் தீய செயல்களுக்கு அளிக்கப் போகும் விளக்கமென்னவோ?

இளைஞர் காங்கிரஸ் தலைவர் நண்பர் தங்கபாலு மீது ஒரு பாய்ச்சல்! என்னையா பதவி விலகச் சொல்லுகிறாய்? என்று!

ரெபரெண்டத்துக்குத் தயார்! அதாவது பொது வாக்கெடுப்பு! எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருப்பதா? வேண்டாமா? என்று பொது வாக்கெடுப்பாம்! அதில் அவரே மீண்டும் முதல்வராம்! அதேபோல் மற்ற எந்த மாநில முதலமைச்சர்களாவது இப்படிச் செய்ய முன்வருவார்களா? செய்தால் மீண்டும் பதவிக்குத் திரும்ப மாட்டார்கள்! என்றும் கூறி மற்ற மாநில முதல்வர்களை வம்புக்கு இழுத்திருக்கிறார்.

இது இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர்களுக்கு மட்டுமல்ல; கம்யூனிஸ்டு கட்சி முதல்வர்களுக்கும் எம்.ஜி.ஆர். விடுத்துள்ள அறை கூவலாகும்! அவரது கட்சியின் அதிகாரப் பூர்வமான ஏட்டிலேயே வெளி வந்திருக்கிறது!

முதலமைச்சராக ஒருவர் நீடிக்கலாமா? வேண்டாமா? என்பதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த அரசியல் சட்டத்தில் எங்கே இடமிருக்கிறது?

இடமில்லாவிட்டாலும் பொது வாக்கெடுப்பு நடத்த எம்.ஜி.ஆர். தயார் என்றால் - நாளைக்கே நடத்தட்டும்! நாம் வேண்டாமென்று சொல்லவில்லை!

ரே கமிஷன் நியமிக்கப்பட்டதையொட்டி, எம்.ஜி.ஆர். பதவி விலக வேண்டுமென்றோ - அல்லது அவரது ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்றோ - தி.மு.க. தலைமை நிர்வாகக் குழு தீர்மானம் நிறைவேற்றவில்லை!

ஆனால் - எரிசாராய ஊழலுக்குக் கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகும் சாராய பிளண்டிங், பாட்லிங் யூனிட்டுகள், மொத்த வியாபாரங்கள் என்ற பெயரால் தொடர்ந்து நடைபெற்று வருகிற பயங்கர ஊழல்களை எதிர்த்து -

முதற்கட்டமாக ஆகஸ்டு முதல் நாளும் இரண்டாம் நாளும் மாநில முழுதும் பேரணிகளையும் - பொதுக்கூட்டங்களையும் நடத்துவதென்றும்,

இரண்டாம் கட்டமாக தாயின்மேல் ஆணையிட்ட இந்த தவப்புதல்வரைத் தாய்க் குலத்திற்கு அடையாளம் காட்டிட திருச்சியில் மகளிர் மாநாடு நடத்துவதென்றும்,

மூன்றாம் கட்டமாக ஆகஸ்டு 21-ஆம் நாள் சென்னையில் கறுப்புடை தரித்து கறுப்புக் கொடிப் பேரணி நடத்துவதென்றும்,

இவற்றுக்குப் பிறகு செப்டம்பரில் செயற்குழுவோ, பொதுக் குழுவோ கூடி நான்காவது கட்டம் குறித்து முடிவெடுப்பது என்றும்,

கடலூர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

கடலூர் மாநாட்டு எழுச்சி! சேலம், கோவை, பெரியார் மாவட்டங்களில் கழக நிகழ்ச்சிகளின் வெற்றி! நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை மிகவும் கலக்கியிருக்கிறதென்று தெரிகிறது!

மூப்பனார் - எம்.பி.எஸ். - பா.ரா. - திண்டிவனம் ராமமூர்த்தி - முரண்பாடாகப் பேசுகிறார்கள் என்று ஒரு கிண்டல்!

கருணாநிதிக்கு பிளட் பிரஷர் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று ஒரு ஏகடியம்!

பொது வாக்கெடுப்புக்கு மற்ற மாநில முதல்வர்கள் தயாரா? என்று ஒரு ஆணவக் குரல்! அரசியல் மேதாவித்தனம்!

மொத்தத்தில் எம்.ஜி.ஆரின் கோவைப் பேச்சைப் படிக்கும்போது - அவரை ஒரு மனநோய் மருத்துவர் உடனடியாகக் கவனிக்க அருகிலிருப்போர் முயற்சி மேற்கொள்வது நல்லது எனத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு. க.

(24-07-1981)

935. முதற்கட்ட முழக்கம்!

உடன்பிறப்பே,

தலைமை நிர்வாகக் குழுவில் முடிவெடுத்து, கடலூர் மாநாட்டில் அறிவித்தவாறு ஆகஸ்டு முதல் நாள் சனிக்கிழமையன்றும் இரண்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்றும் தமிழக முழுவதும் நமது கழகப் பேரணிகள் எழுச்சியுடனும், அமைதிகாக்கும் பொறுப்புணர்வுடனும் நடைபெற்றிட வேண்டும். பேரணிகள் முடிவுற்று ஆங்காங்கு விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

எம்.ஜி.ஆர். அரசின் ஊழல் முடைநாற்றத்தையும், அராஜகப்போக்கையும், பழிவாங்கும் வஞ்ச நெஞ்சத்தையும் மக்களுக்கு விரித்துரைத்துக் கண்டனக் குரல் கொடுத்திட முதல் கட்டமே ஆகஸ்டு முதல் நாளும் இரண்டாம் நாளும் நாம் நடத்த இருக்கிற பேரணிகளும் பொதுக்கூட்டங்களும்!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கலந்து பேசி, எந்தெந்த ஊர்களில் பேரணிகளையும் பொதுக்கூட்டங்களையும் நடத்துவது என்று முன்கூட்டியே முடிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

அதிகாரிகளுக்கும் முன்னரே ஊர்களையும், இடங்களையும் தெரிவித்து, பேரணி சென்றிடும் பாதையினையும் குறித்துக் கொடுத்து அனுமதி பெற்றிடுவது முக்கியமாகும்.

பேரணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடங்கி, பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்களில் முடிவுறும் வகையில் நேரத்தையும், இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல்கால வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்ட எம்.ஜி.ஆர். ஆட்சியில் விஷம்போல் ஏறிக்கொண்டு போகும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாததையும், பஸ் கட்டணத்தை அளவுக்கு மீறி உயர்த்திக்கொண்டே போவதையும்,

விவசாயிகளை ஜப்தி போன்ற கொடுமைகளுக்கு ஆளாக்கி அவர்களது சங்கங்களைப் பழி வாங்குவதையும், அரசு அலுவலர், நெசவாளர் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு முன்வராமல் அவர்கள் மீது அராஜக நடவடிக்கைகள் எடுப்பதையும், ஜாதிக் கலவரங்கள் பெருகி வருவதையும், சாராய வியாபாரம் முதல் சகல காரியங்களிலும் அமைச்சர்களும் ஆளுங்கட்சியின் பிரமுகர்களும் ஊழலின் மொத்த உருவங்களாக மாறி, ஒரு கொள்ளையடிக்கும் கூட்டமே கொலு வீற்றிருக்கிறது என நினைக்கத் தக்க வகையில் நித்தநித்தம் கோணல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருப்பதையும், எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் ஓநாய் உள்ளம் கொண்டு ஆட்சியாளர்கள் தமிழகத்தில் தர்பார் நடத்துவதையும், மக்களின் பல்வேறு பிரிவினர் மனக்கொதிப்பு அடையும் வண்ணம் தமிழக மகுடபதிகளின் அடக்கு முறைத் தாண்டவம் நடைபெறுவதையும் - இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு பேரணியின் முடிவில் நடைபெறுகிற பொதுக்கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்களையும், நிர்வாகக் குழப்பங்களையும், தொடர் ஊழல்களையும், லஞ்ச லாவண்யங்களையும் - ஆதாரங்களுடன் விளக்கிப் பேசிட வேண்டும்!

கொடுமைகள் தொடர்வது கண்டு கொதித்துப் போயிருக்கிற உள்ளம்! குமுறலின் வார்ப்படங்களாக வெளிவரும் வார்த்தைகளில் காரசாரங்கூட இருக்கலாம்! ஆனால் துளியளவு கண்ணியக் குறைவும் தலைகாட்டிடக் கூடாது.

கண்ணியக் குறைவாகவும், தரம் தாழ்ந்தும் பேசித்தான் கைதட்டலைப் பெற வேண்டுமென்ற நிலையை நமது கழகத்தின் எந்தப் பேச்சாளரும் மேற்கொள்வதில்லை! மேற்கொள்ளக் கூடாது! அப்படி மேற்கொண்டோர் அவ்வப்போது கழகத் தலைமையினால் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இனியும் அந்த எச்சரிக்கை தேவை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அராஜக ஊழல் ஆட்சிக் குறித்து ஆதாரங்களுடன் ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுகள்; சட்டப்பேரவையிலே கூறப்பட்டிருக்கின்றன!

இந்த ஆட்சியில் மக்கள் நலன்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை நமது கழக ஏடுகளையும், கழக ஆதரவு ஏடுகளையும் - நமது பேச்சாளர்கள் சிறிது சிரமம் எடுத்துக் கொண்டு - ஒருமுறை புரட்டிப் பார்த்துக் குறிப்பு எடுத்துக் கொண்டாலே, மணிக்கணக்கில் மக்களுக்கு விளக்கங்களை வாரி வழங்கிட முடியும்!

பெரிய கூட்டங்கள் கூடுகிற இடத்திற்குத்தான் போவேன் என்றில்லாமல் - சிறிய ஊர்களிலும் நூற்றுக்கணக்கானோர் மத்தியிலே விளக்கம் தருகிற கடமை உணர்ச்சியை நமது கழகத்தின் சொல்லேருழவர்கள் பெற்றிடல் வேண்டும்!

உடன்பிறப்பே, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் - பிற்படுத்தப்பட்டோர் பகுதிகள் - அங்கெல்லாம் ஐம்பது பேருக்கும் குறைவான கூட்டங்களில் பேசித்தான் இன்று லட்சக்கணக்கானோர் கூடும் மாநாடுகளில், கூட்டங்களில் உன்னால் அங்கீகரிக்கப்பட்ட தலைவன் பேசுகிறான் என்பதை, கர்வத்தோடு அல்ல; உனக்குக் கடமையை வலியுறுத்தும் உணர்வோடு கூறிக் கொள்கிறேன்.

எத்தனை பேர் - பேரணியிலே கழகக் கொடி பிடித்துச் சென்றோம் என்றல்ல; எத்தகைய ஊர்களில் கூட்டம் நடத்துவது என்றல்ல; எத்தனை ஊர்களில் எத்தனை பேர் உள்ளத்தில் நாட்டு நிலையைப் பதிய வைத்திருக்கிறோம் என்பது தான் முக்கியம்!

எறும்பு ஊர்ந்திடக் கல்லும் தேயும் என்ற முதுமொழியை மறந்திடாமல் - நாட்டின் உண்மை நிலையைக் கல்லாதார் மத்தியிலே - காணாதார் மத்தியிலே - கண்டும் காணாதிருப்போர் மத்தியிலே - தமிழினத்தையே சீரழிக்கும் ஒரு ஆட்சியின் அலங்கோலத்தைச் சுட்டிக்காட்டிடவே - ஆகஸ்டு திங்களில் தொடங்குகிறது நமது முதற் கட்ட முழக்கம்!

அன்புள்ள,

மு. க.

(25-07-1981)

936. நச்சுப்பையில் விஷம் ஊறுகிறது!

உடன்பிறப்பே,

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலை சாதியினர் என்ற வகையில் கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடுகள் என்ற நிலையை மாற்றி - பெரியார் - அண்ணா கொள்கைகளுக்கெதிராகப் பெரும் புரட்சி செய்கிறேன் என்று முழக்கமிட்டு ஒன்பதாயிர ரூபாய் வருமான அடிப்படையென ஒரு ஆணையைப் பிறப்பித்துப் பிற்படுத்தப்பட்டோர் எதிர்காலத்தை இருள்மயமாக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட எம்.ஜி.ஆரின் போக்கை எதிர்த்து தி.மு.க., திராவிடர் கழகம், இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மற்றும் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு போன்ற ஒரு சில கட்சிகளைத் தவிர) அனைத்துக் கட்சிகளுமே கண்டனம் தெரிவித்தன.

அந்த அரசாணையைக் கொளுத்தி சாம்பலைத் தலைமைச் செயலகத்திற்கே அனுப்பி வைத்தது திராவிடர் கழகம்!

அந்தச் சாம்பலைக் கோட்டையில் உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு எருவாகப் போடுவோம் என்று; தேர்ந்த பகுத்தறிவுவாதியும் சுயமரியாதைச் சுடருமான நிதியமைச்சர் நாவலர் ஏகடியம் செய்து மேடைக்கு மேடை பேசினார்.

எம்.ஜி.ஆரின் பொருளாதார மேதாவிலாசத்தை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்துப் பக்கம் பக்கமாகக் கட்டுரை எழுதினார்கள் அவரது அமைச்சரவையில் உள்ள பல பேர்!

பாவம்; அவர்களில் சிலர், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் என்பதையும் வியப்போடு நினைவுகூர்ந்திடத்தான் வேண்டியிருக்கிறது.

ஒரு நாள் வரையறுத்து அந்தக் குறிப்பிட்ட நாளுக்குள், பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதிக்கும் வருமான வரம்பு ஆணையை நீக்கிவிட்டு - பழைய மாதிரி இட ஒதுக்கீடு

முறையை நடைமுறைக்குக் கொண்டு வராவிட்டால் பெரியதோர் போராட்டத்தைத் தொடங்குவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகம், போர்ப் பிரகடனம் செய்தது!

அந்த அறப்போர்ச் செய்தி வெளியான சில நாட்களுக்கெல்லாம் எம்.ஜி.ஆர். அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியைத் தவிர மற்ற முக்கியமான கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் இடஒதுக்கீடு முறை தொடர வேண்டுமென்றும் - ஓராண்டு காலமாக நடைமுறைப்படுத்தப்படும் வருமான வரம்பு என்ற புதிய ஆணை திரும்பப் பெறப்பட வேண்டுமென்றும் கருத்தறிவித்தனர்.

1980 ஜனவரி 21-ஆம் நாள் இந்தக் கூட்டம் நடைபெற்றது!

கூட்டத்தில் பல கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் - தி.மு.கழகம் நடத்துவதாக அறிவித்திருந்த போராட்டம் இவற்றின் விளைவாக 1980 ஜனவரி 24-ஆம் நாள் முதல்வர் எம்.ஜி.ஆர். நிருபர்களை அழைத்து, வருமான வரம்பு ஆணையை ரத்து செய்கிறேன் எனக் கூறினார். அதுமட்டுமல்ல; பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்றிருந்ததை ஐம்பது சதவிகிதமாக உயர்த்துகிறேன் என்றும் கூறினார்.

பல்வேறு கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்ததற்கு இணங்கவும் - அனைத்துக் கட்சித் தலைவர்களும் கேட்டதற்கு இணங்கவும் சட்டமன்றத்தில் பல்வேறு கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எடுத்துச் சொன்னதற்கிணங்கவும் நடுநிலையாளர்கள் கருத்துக்களுக்கு ஏற்பவும் வருமான வரம்பு உத்திரவு ரத்து செய்யப்படுகிறது.

- என நிருபர்களிடம் விளக்கமும் அளித்தார். எப்படியோ ஒருவிதமாக ஓராண்டுக் காலம் அவர் பிற்பட்டோர் தலையில் கை வைத்து - நடத்திய புரட்சி (?)க்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது!

ஆனால் மீண்டும் நச்சுப்பையில் விஷம் ஊறிவிட்டது என்பது போல முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், கோவையில் நடைபெற்ற மாநகராட்சித் தொடக்க விழாவிலே பின்வருமாறு பேசியிருக்கிறார்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கான ஒன்பதாயிரம் ரூபாய் வருமான வரம்பு உத்திரவு; அவர்களில் பெரும்பாலான மக்களுக்குப் பலன் தந்தது என்றாலும் - அதை எதிர்த்து சுயநல சக்திகள் கூக்குரல் எழுப்பின! எனவே அந்த உத்திரவை, திரும்பப் பெறும் நிலை ஏற்பட்டது! இப்போது ஏழை மக்கள் அந்த வருமான வரம்பு உத்திரவை திரும்பக் கொண்டு வரவேண்டுமென்று ஏராளமாக மனுக் கொடுக்கிறார்கள். ஏழை மக்கள் ஒன்றுபட்டு அந்தக் குரலை எழுப்புவார்களேயானால் மீண்டும் நிச்சயமாக அந்த வருமான வரம்பு உத்திரவைக் கொண்டு வருவோம். ஆனால் அதைத் தற்போதைக்குக் கொண்டு வருவது சாத்தியமல்ல!

உடன்பிறப்பே! சுயநல சக்திகளின் கூக்குரலால்தான் திவ்யமான உத்திரவைத் திரும்பப் பெற்று விட்டாராம் - கோவையில் கூறியிருக்கிறார்!

உத்திரவைத் திரும்பப் பெற்றபோது நிருபர்களிடம் என்ன சொன்னார்? பல கட்சித் தலைவர்கள், நடுநிலையாளர்கள், சட்ட சபையில் பல கட்சிப் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தார்கள். அதனையேற்றுத்தான் உத்திரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டேன் என்று கூறினார்! இப்போது கோவையில் கூறுகிறார்; கோரிக்கை வைத்தவர்கள் எல்லாம் சுயநலசக்திகள் என்று! அதாவது அவர் நிருபர்களிடம் 1980-இல் குறிப்பிட்ட பல கட்சித் தலைவர்கள், நடுநிலையாளர்கள், சட்டமன்றப் பிரதிநிதிகள் அனைவரும் இப்போது அவரது கோவை பேச்சுப்படி சுயநல சக்திகள்!

ஏழை மக்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பினால் - மீண்டும் தனது பழைய உத்திரவைக் கொண்டு வருவேன் என்று ஒரு வீர உரை!

உடனே, தமிழகம் 1979-இல் கொந்தளித்த காட்சி நினைவுக்கு வருகிறது!

தற்போதைக்கு அதைக் கொண்டு வருவது சாத்தியமில்லை - என்று திடீரென சுருதி இறங்கி விடுகிறது!

ஆனால் அவருடைய பேச்சின் விளைவு உடனே கடலூரில் எதிரொலித்திருக்கிறது!

இன்று காலை தினசரியில் வந்துள்ள செய்தி வருமாறு :-

கடலூரில் கூடிய அகில இந்திய இதர சமூகத்தினர் சம்மேளனம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் - பின்தங்கியோர் - ஷெட்யூல் வகுப்பினர், மலை சாதியினர் ஆகியோருக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தையும் ரத்து செய்ய அரசியல் சட்ட திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் - கல்விக் கூடங்களில் மாணவர்களைச் சேர்ப்பதில் வருமானத்தைத்தான் கணக்கில் கொள்ள வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

கோவையில் எம்.ஜி.ஆர். பேசியதின் விளைவு மட்டுமல்ல; நீண்ட காலமாகவே அவருக்கு - தாழ்த்தப்பட்டோர்க்கும், பிற்படுத்தப்பட்டோர்க்கும் சலுகைகள், ஒதுக்கீடுகள் தேவையில்லை என்ற எண்ணமிருக்கிறது என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாகவும் - அய்யாவும் அண்ணாவும் அவர்களுக்கு முன்பு நீதிக்கட்சியும் - அண்ணல் அம்பேத்காரும், எத்தகைய உரிமைகளால் சமூகத்தின் அடித்தளத்தில் கிடக்கிற பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட முடியுமென நினைத்தார்களோ - அந்த நினைப்பின் வெற்றியை நிர்மூலமாக்கிவிட முடியுமென்று சிலர் கருதுகிறார்கள்.

இத்தகைய அபாயமான நினைவு கொண்டோரால் இடஒதுக்கீடு முறை இடுகாட்டுக்குச் சென்று விடுமோ என்ற அச்சம் நம்மைக் குலுக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் மத்திய அரசின் அறிவிப்பு ஒன்று நமக்கு ஓரளவு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இடஒதுக்கீடு முறைக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடத்துவோர் மீது மாநிலங்கள் உறுதியான நடவடிக்கை எடுத்துச் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டுமென மத்திய அரசு கூறியுள்ளது.

இன்றைய ஏடுகளில் வந்துள்ள இந்தச் செய்தியினையொட்டி;

இட ஒதுக்கீடு முறைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடும்படி மக்களைத் தூண்டிவிட அதிருப்தி கொண்ட சில கோஷ்டிகள் முயன்று வருவதாக மத்திய அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதி அடிப்படையில் இடங்களை ஒதுக்குவதையும் பதவி உயர்வுகளை அளிப்பதையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரி பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்ட சம்பவங்கள் நடந்துள்ளன.

இட ஒதுக்கீடு முடிவாகிவிட்ட விஷயம் என்றும், இது விஷயத்தில் அரசின் கொள்கை தெளிவானது என்றும் மாநிலங்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இப்பொறுப்பு பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டியதாகும் என்றும், அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி இட ஒதுக்கீடுகளைச் செய்வதென்ற தேசியப் பொறுப்பை நிறைவேற்ற அரசுக்குக் கடமைப் பொறுப்பு உள்ளதென்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இட ஒதுக்கீடுகளை எதிர்த்து குஜராத்தில் தோன்றிய கிளர்ச்சியின் எதிரொலியாக தமிழ்நாடு, பஞ்சாப், உ.பி., ராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஹிமாசலப் பிரதேசம் உட்பட பல மாநிலங்களிலும், டில்லி, சண்டிகார் ஆகிய யூனியன் ஆட்சிப் பிராந்தியங்களிலும் குரல்கள் எழுந்தன என்று இங்குக் கிடைத்த தகவல்கள் காட்டுகின்றன.

இட ஒதுக்கீடு முறை தேசியக் கொள்கையாகும் என்று கூறியும், இதனை மீண்டும் வலியுறுத்தியும் லோக்சபை மார்ச் 18-ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. என்ற விபரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் இந்தத் திட்டவட்டமான அறிவிப்புக்குப் பிறகாவது எம்.ஜி.ஆர். தனது கோவைப் பேச்சை வேறெங்கும் தொடர மாட்டார் என்று நம்புவோமாக!

நண்பர் வீரமணி சுட்டிக் காட்டியிருப்பதைப் போல - பிற்படுத்தப்பட்டோருக்கு ஐம்பது சதவிகித ஒதுக்கீடு செய்திருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டில் இந்த அரசின் ஆணையை எதிர்த்து சிலர் வழக்குத் தொடுத்திருக்கும் போது - இந்த அரசின் முதலமைச்சரே; கோவையில் இப்படிப் பேசியிருப்பது - வழக்குத் தொடர்ந்துள்ளவர்களுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்குவது போலத்தானே அமைந்துள்ளது!

என் செய்வது; இரட்டை நா படைத்தவரையன்றோ இந்தத் தமிழகம் முதல்வராக ஏற்றுக் கொண்டுள்ளது!

அன்புள்ள,

மு. க.

(28-07-1981)

937. இதற்குமேல் எழுதமுடியவில்லை!

உடன்பிறப்பே,

இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்களவர்களின் வெறிப் பேச்சு எந்த அளவு எல்லை மீறிப் போயிருக்கிறது பார்த்தாயா? எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மீது ஆளுங்கட்சியைச் சார்ந்தோர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளனர். தீர்மானம் விவாதத்திற்கு வருவதற்கு முன்பே அவையில் அமிர்தலிங்கம் அவர்களும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் சில விளக்கங்களைத் தெரிவிக்க விரும்பியிருக்கின்றனர். அந்த விருப்பம் ஏற்றுக் கொள்ளப்படாத சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்து விட்டன.

அதற்குப் பிறகு கேட்கவா வேண்டும்! ஆளுங்கட்சியினர் சண்டப்பிரசண்டங்களைத் தட்டிக் கேட்க ஆள் யார்?

ஈழத் தமிழர்களின் தலைவரும் - அறவழியில் தமிழர்களின் உரிமைகளைக் கோருபவரும் - எதிர்க்கட்சியின் தலைவருமான அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றிக் கொடுமையான சொற்களை வாரியிறைத்து அந்த நாடாளுமன்றத்தையே நாராசம் பெருக்கெடுக்கும் கூடமாக ஆக்கியிருக்கிறார்கள்.

பொய்யன்!
துரோகி!
கொலைகாரன்!
தூக்கில் போட வேண்டும்!

அமிர்தலிங்கனார் பற்றி சிங்கள வெறியர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் கக்கிய கடும் விஷம் இது!

வெறி எந்த அளவுக்குத் தலைக்கேறினால் இப்படிப்பட்ட தடித்த வார்த்தைகள் - தரக்குறைவான வார்த்தைகள் - அவர்தம் நடுங்கா நாக்கில் நர்த்தனமாடிட முடியும் என்பதைத்

தமிழ்க்குருதியோடுகின்ற தமிழினத்தின் உடன்பிறப்பே; நீ எண்ணிப் பார்த்திடு!

அதிகார மமதை கொண்டோர் - பதவிச் செருக்கு படைத்தோர் - நா காக்கத் தெரியாமல் நரகல் நடையில் பேசிடுவர்! வியப்பல்ல!

தமிழ் ஈழம் கேட்போரையெல்லாம் கழுவிலேற்ற வேண்டுமென்றும் - அவர்களைக் கமுக மரங்களுக்கிடையே கட்டித் தொங்கவிட்டு உடலை இரு கூறாக்க வேண்டுமென்றும் ஒரு சிங்கள வெறியர் - நாடாளுமன்ற உறுப்பினர் - காட்டுமிராண்டிக் காலத்துக்கட்டளைகளைத் தனது அவைப் பேச்சாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்றால்; இலங்கையில் மட்டுமல்ல - உலகெங்கும் பரவிக் கிடக்கிற தமிழ்க் குலத்தினரால் அதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை! சகித்துக் கொள்ள முடியாது!

தமிழ் ஈழ இயக்கத்தில் இணைந்திடாதவரும் - இலங்கை அமைச்சர்களில் ஒருவராக இருப்பவருமான தொண்டைமான் அவர்களின் தமிழ் இதயம் துடித்திருக்கிறது! தமிழ்க் குருதி கொதித்திருக்கிறது! சிங்களவர்களின் பேய்க் கூச்சலுக்கு எதிராக சில வார்த்தைகளைக் கூறியிருக்கிறார்! தமிழர் சிங்களவரிடையே ஜனாதிபதி ஜெயவர்த்தனே ஏற்படுத்த முனையும் சுமுகநிலையைக் கெடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அமைச்சர் பதவியில் இருக்கிறாரே; அவ்வளவு தானே பேசமுடியும்! அமைச்சர் பதவியில் இருப்பவரால் அமிர்தலிங்கம் மீது ஆளுங்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தடுத்து நிறுத்திட இயலவில்லையே!

உணர்ச்சியுள்ள ஒரு தமிழனையும் பாழும் பதவி எங்கேயோ இழுத்துச் சென்று விடுகிறதே! தமிழா! உன் சரித்திரமே இப்படித்தானா? நெஞ்சு பிளந்து விடும் போலிருக்கிறது; என் செய்வது?

தொண்டைமான் அமைச்சராக இருந்துகொண்டு இந்த அளவாவது பேசினாரே என்பதில் ஒரு ஆறுதல்! தமிழ்க்குருதியின் சூடு அடியோடு தணிந்து விடவில்லை! தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற முதுமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறார்!

ஈழப் பகுதியைச் சேர்ந்த தேவநாயகம் என்ற ஒரு அமைச்சர்! அவர் தமிழர்களைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்! கொலைகாரர் கூட்டம் என்று பழி சுமத்தியிருக்கிறார்!

விபீஷணன் இலங்கையில் தானே இருந்தான் என்கிறது ராமாயணம்!

அவனுக்கு இராமன் சிரஞ்சீவி வரம் கொடுத்தானாமே!

சிரஞ்சீவி வரம் பெற்ற விபீஷணர்களுக்கு மரணம் கிடையாதாமே!

வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள்!

தமிழன் பெற்றுள்ள பேறுகளில் பதினேழாவது பேறு ஆயிற்றே; வரலாற்றில் தொடர்ந்துவரும் துரோகம் எனும் இந்தப் பேறு!

இனக்கொலை நடைபெறும் போதும் இதயம் துடிக்காத அளவுக்குக் கண்களை மறைக்கும் பதவியும் - ஆதிக்கவாதிகளின் ஆக்கிரமிப்பால் அடிமையாகும் தமிழினத்தின் தாழ்வு கண்டும் வாய் திறக்க முடியாமல் தமிழர்கள் சிலரை ஆட்டிப் படைக்கும் வாய்ப்பு வசதிகளும் - தரித்திரம் பிடித்த தமிழ்ச் சாதியின் சரித்திரக் களங்கங்களாகி விட்ட பிறகு;

தமிழனே! உனக்கு
விடிவு காலம் ஏது?
விமோசனம்தான் எப்போது?

உடன்பிறப்பே, இலங்கைத் தமிழர்களுக்கெதிராகக் கிளர்ந்துள்ள வெறிப் போக்கினையும் - நாச நடவடிக்கைகளையும் - கேள்விப்படும் போது;

நமது இரத்த நாளங்கள்
தகிக்கின்றன!

இதற்குமேல் என்னால் எழுத முடியவில்லை! நீர்த்திரை என் விழியினை மறைக்கின்றது - என் செய்வேன்!

அன்புள்ள,

மு. க.

(29-07-1981)

938. பணிகள் பல காத்திருக்கின்றன!

உடன்பிறப்பே,

கடலூர் மாநாட்டில் அறிவித்ததற்கேற்ப ஆகஸ்டு முதல்நாளும் இரண்டாம் நாளும் நமது முதற்கட்ட முழக்கத்திற்குத் தயாராகிக் கொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும். எந்தெந்த ஊர்களில் பேரணி - பொதுக்கூட்டம் - யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் மாவட்டக் கழகச் செயலாளர்களும் ஒன்றியக் கழக - நகரக் கழக - கிளைக்கழக - சார்புமன்ற - இளைஞர்அணி - ஆகிய அமைப்புகளின் செயலாளர்களும் கூடிக்கலந்து முடிவினை மேற்கொண்டு முனைந்து செயல்களாற்றப்படும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு!

ஏற்கனவே நமது கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் கந்தப்பன் அவர்கள், கடந்த ஆண்டுகளில் ஒன்றியக் கழகங்கள் எப்படி இயங்கியிருக்கின்றன - எத்தனை கிளைகளை உடையவைகளாகச் செயல்பட்டு வருகின்றன - அந்த அமைப்புகளின் சார்பில் கழகப் பணிகள், கொள்கை விளக்கங்கள் குறித்து ஒன்றியச் செயலாளர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு - அவர்களிடமிருந்து வரும் விளக்கங்களை நாள்தோறும் என்னிடமும் பொதுச் செயலாளரிடமும் காட்டி வருகிறார். வந்துள்ள பதில்கள் உற்சாகமூட்டத் தக்கவைகளாக இருக்கின்றன. இன்னும் வர வேண்டிய பதில்களும் அவ்வாறே இருந்திடக் கூடும்!

நமது முதற்கட்ட முழக்கத்தை அறப்போர் எனப் பெயர் சூட்டி அழைத்தாலும் கூட - எம்.ஜி.ஆர். அரசின் லஞ்சலாவண்யங்களையும், நிர்வாகக் குழப்பங்களையும், மக்கள் விரோதப் போக்கினையும், விலைவாசியேற்றம், பஸ் கட்டண உயர்வு, பழிவாங்கும் நடவடிக்கை போன்றவைகளையும்

கண்டித்து ஊர்வலங்கள் - ஊர்வல முடிவில் கூட்டங்கள் - கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுதல் என்பதோடு நிகழ்ச்சிகள் முடிவுற வேண்டும்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் குறித்து ஜூலை 25-ஆம் நாள் எழுதியுள்ள கடிதத்தில் விளக்கியிருக்கிறேன்.

முதற்கட்டம் அமைதியாகவும், எழுச்சியும் ஏற்றமும் கொண்டதாகவும் அமைந்திட நீ பணியாற்றிட வேண்டுமென்பதற்காகத்தான் கழக உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் இவற்றுக்கான காலத்தை மேலும் ஒரு வாரம் நீட்டித்து ஆகஸ்டு ஏழாம் நாள் வரையில் என்று குறிப்பிட்டு நமது பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

நானும் பேராசிரியரும் நமது கழக அமைப்புச் செயலாளர்களில் ஒருவரான நண்பர் நீலநாராயணனும் இதுவரையில் இந்தக் கட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக் கணக்கைப் பார்த்து மிகுந்த ஊக்கம் பெற்று உவகை பூத்திடுகின்றோம்!

பதினைந்து லட்சம் உறுப்பினர்கள் என்ற அளவை எட்டிப் பிடிக்கும் நிலையில்! இதுவரையில்!

இன்னும் ஒரு வாரம் நீட்டிக்கப்பட்டிருப்பதால் ஆகஸ்டு ஏழாம் நாளன்று இருபது லட்சம் உறுப்பினர்கள் என்ற இனிய செய்தி - இதயத்திற்கு இதமான செய்தி - நிச்சயமாகக் கிட்டுமென்றே எதிர்பார்க்கிறேன்.

உடன்பிறப்பே, நமது கழக அமைப்பு முறையும் - கட்டுக்கோப்பும்தானே - எத்தனை பெரும் புயல்களாலும் நமது இலட்சிய தீபத்தை அணைத்திட இயலவில்லை!

உறுப்பினர் சேர்த்தல், புதுப்பித்தல் - தொடர்ந்து கிளைக் கழகத் தேர்தல் - ஒன்றிய - மாவட்டக் கழக - மாநிலக் கழக நிர்வாகிகள் தேர்தல் - செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்தல் - பின்னர் தலைமைக் கழகத் தேர்தல் - கழகம் தோன்றிய நாள் முதல் அண்ணன் கற்றுத் தந்த ஜனநாயக

நெறிப்படி இத்தனை நிலைகளையும் - தவறாமல் கடைப்பிடித்துக் கழகத்தைக் கட்டிக்காக்கும் மாண்பினை நாம் தொடர்ந்து பெற்று வருகிறோம்.

கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழிகள், கட்சி தொடங்கிச் சுமார் ஒன்பதாண்டு கழித்துத் தேர்தல் நாடகத்தை நடத்தி - நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகளை மாவட்டத்திற்கு மாவட்டம் ரத்து செய்து - இன்னமும் முழுமை பெறாமல் தினறிக் கொண்டிருக்கிற காட்சிகளையும் பார்க்கிறோமல்லவா? குமரியிலும் ஆற்காட்டிலும் அவர்களுக்குள்ளாகவே நடைபெற்ற குத்து வெட்டில் இரண்டு கொலைகள் விழுந்ததையும் நாடறியுமல்லவா?

அது போகட்டும்; உடன்பிறப்பே! ஆகஸ்டு தொடங்கி உனக்கு நிறைய பணிகள் இருக்கின்றன!

முதற்கட்ட முழக்கத்திற்குப் பிறகு - திருச்சியில் கழக மகளிர் மாநாடு! ஆகஸ்டு 15-இல்!

ஆகஸ்டு 21, சென்னையில் கருங்கொடிப் பேரணி!
அவற்றையெல்லாம் குறித்துப் பிறகு எழுதுகிறேன்.

முதற்கட்டம் - முழுவெற்றியாக நடைபெறச் செயலாற்று! செய்திகளை உடனுக்குடன் தலைமைக் கழகத்திற்கும் நமது நாளேடுகளுக்கும் அனுப்பி வை!

அன்புள்ள,

மு. க.

(31-07-1981)

939. கண்ணகியானால் சிலம்பை உடைத்திடுக!

உடன்பிறப்பே,

மது அருந்தியவன் தள்ளாடித் தடுமாறிக் கண்டபடி உளறுகிறானோ இல்லையோ; நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசாங்கம் கொண்டு வந்துள்ள மதுவிலக்கு தளர்த்தல் சட்டம் இருக்கிறதே; அந்தச் சட்டம் காலைக் கீழே ஊன்ற முடியாமலும் - கைகளை நேராக நீட்ட முடியாமலும் - விழிகளை மூடமுடியாமலும் திறக்க முடியாமலும் - தடுமாறித் தத்தளித்துச் சாய்ந்தாடுகிற காட்சி; அய்யோ! சகிக்க முடியவில்லை!

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகவே மதுவிலக்கு தளர்த்தப்பட்டு பதினைந்தாயிரம் மதுக்கடைகள் திறக்கப்படுகின்றன என்றார்கள்!

இப்போது பெரும்பாலான அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் கள்ளச் சாராயம் அதிகார பூர்வமாகப் பட்டயம் கட்டிக்கொண்டு விற்பனை செய்யப்படுகின்றன.

சென்னையில் மட்டுமல்ல; திருச்சியில் கள்ளச் சாராய விற்பனைக்கு ஆதரவு குறையவில்லையென்று தினமணி இதழே, கொட்டையெழுத்துக்களில் செய்தி வெளியிட்டுள்ளது.

பர்மிட் வாங்காதவர்களுக்குக் கள்ளோ, சாராயமோ விற்கப்பட மாட்டாது! பர்மிட் வாங்காமல் குடித்தால் அது பெருங்குற்றம் என்று சண்டப் பிரசண்டம் செய்தார்கள்!

குடிப்பவர்களில், நூற்றுக்குத் தொண்ணூற்றி ஐந்து பேர், அங்கீகாரம் பெற்ற கடைகளில் பர்மிட் இல்லாமலேதான் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆங்கில, தமிழ் தினசரிகள் அனைத்தும் செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.

தென் ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் 679 சாராயக் கடைகள் ஏலம் விடப்பட்டிருப்பதாகவும், ஆனால் அங்கு சாராயம்

குடிக்க இதுவரையில் 3681 பேர்தான் பர்மிட் வாங்கியிருக்கிறார்கள் என்றும் செய்தி வருகிறது! இந்தப் புள்ளிவிபரப்படி ஐந்து ஆட்களுக்கு ஒரு சாராயக் கடை என்று ஆகிறது! ஒரு சாராயக் கடை சரக்கினை ஐந்தே பேர் ஒரு நாளைக்குக் குடித்தால் - மறுநாள் அந்த பர்மிட்காரர்கள் உலகத்திலேயே இருக்க மாட்டார்களே!

அப்படியானால் என்ன நடக்கிறது? மற்றவர்கள் எல்லாம் பர்மிட் வாங்காமலே சாராயக் கடைகளில் அதிகாரப்பூர்வமாக சாராயம் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

பாட்டில் எங்கே?
பர்மிட் எங்கே?

இதைக் கேட்டால் எம்.ஜி.ஆர். ஒளிந்து கொண்டு - பாவம்; எஸ்.டி.எஸ். அவர்களை நிருபர்களிடம் தள்ளி விடுகிறார்!

அவர் உடனே கருணாநிதி; சீதையைக் கேட்க வேண்டியதை கண்ணகியாகிய என்னைப் பார்த்துக் கேட்கிறார்! சீதைதான் சந்தேகத்திற்குரியவள்! சோதனைக்கு ஆளாக வேண்டியிருந்தது! எஸ்.டி.எஸ். ஆகிய நான் கண்ணகியாக்கும்! சோதனைக்கு ஆளாகிப் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டியதில்லை! என்று இலக்கியப் பதிலை உதிர்க்கிறார்.

எம்.ஜி.ஆர். சீதையாம்! சோதனைக்கு ஆளாகிப் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமாம்! கண்ணகியின் தூய்மையில்; அதாவது எஸ்.டி.எஸ். தூய்மையில் சந்தேகமே இல்லையாம்! அடடா! எவ்வளவு நாசுக்காக நண்பர் எஸ்.டி.எஸ்.; எம்.ஜி.ஆரை அடையாளம் காட்டியிருக்கிறார்!

ஆனால் ஒன்று - நீதி கேட்க வந்த கண்ணகியின் கையில் உள்ள சிலம்பில் உள்ளவை முத்துப் பரல்களா? மாணிக்கப் பரல்களா? என்ற சந்தேகம் எழுப்பப்பட்ட போது - கண்ணகி தனது சிலம்பைக் கொலு மண்டபத்தில் பலருக்கும் நேராக உடைத்துக் காட்டி, தனது பக்கமுள்ள நியாயத்தை நிலை நாட்டியிருக்கிறாள்!

கண்ணகி பாத்திரமாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்கிற நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களும் - தான் தவறிழைக்கவில்லை

என்பதையும் - தவறிழைத்தது யார்தான் என்பதையும் நாட்டுக்கு அறிவித்துத் தனது நாணயத்தை நிலைநாட்டக் கடமைப் பட்டிருக்கிறார்.

நெல்லை மாவட்டத்தில் மது விற்பனை மொத்த வியாபாரம் - அமைச்சர்களின் தலையீட்டால் உரியவருக்குத் தரப்படாமல் இன்னொருவருக்குத் தரப்பட்டு - நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே; அந்தத் தவறுக்குக் காரணமாக இருந்தது யார்?

சீதையானால் தீயில் இறங்க வேண்டும்! கண்ணகியானால் காற்சிலம்பை உடைத்துக் காட்ட வேண்டும்!

நீலாங்கரையில் தகுதியற்ற ஒருவருக்கு - தயவு காரணமாக - தரப்பட்ட தொகை காரணமாக - பிளண்டிங் யூனிட் உரிமம் அளிக்கப்பட்டு - அங்கு எந்த வேலையும் நடைபெறவில்லையென்று சுமார் ஒரு மாத காலமாக எல்லாப் பத்திரிகைகளும் படம் போட்டுக் காட்டியும்கூட - மௌனமாக இந்த அரசு இருந்தது ஏன்?

இவ்வளவு காலதாமதமாக இப்போது அந்தத் தொழிற்சாலை உரிமத்தை ரத்து செய்த காரணம் என்ன?

நீலாங்கரை அதிபர், நீதிமன்றம் செல்லக்கூடும் - அவருக்கே மீண்டும் உரிமம் கிடைக்கும் வகையில் அரசாங்கம் ஒரு கண்துடைப்பு வழக்கு நாடகம் நடத்தக்கூடும் - என்று நம்பகமான தகவல்கள் இந்த அரசைப் பற்றி வருகின்றனவே; அதனை எஸ்.டி.எஸ். மறுக்கிறாரா?

மறுத்தால் மகிழ்ச்சி! பாராட்டு! ஆனால் நீலாங்கரைக்காரருக்கு இவ்வளவு சலுகை, இத்தனை நாட்கள் அளித்தமைக்கு யார் காரணம்? எது காரணம்?

சீதையானால் தீயில் இறங்கிடுக! கண்ணகியானால் சிலம்பை உடைத்திடுக!

கோவை மாவட்டத்திற்கு பிளண்டிங் பாட்லிங் யூனிட்டுக்கு இதுவரையில் யாருக்கும் உரிமம் தரப்படவில்லை!

உரிமம் தரப்படுவதற்கு முன்பே தொழிற்சாலைக் கட்டிடம் எப்படித் தோன்றியது?

எந்த பேரம் முறிந்துவிட்ட காரணத்தால் இந்தத் தடுமாற்றமும் தயக்கமும் ஏற்பட்டுள்ளது?

கோவை மாவட்டச் சாராயக் கடைகளில் பெரும்பாலும் விற்பனையாவது கள்ளச் சாராயம் தான் என்பதை மறுக்க முடியுமா?

அங்குதான் பிளண்டிங் தொழிற்சாலையே கிடையாதே!

இன்னும் முடிவெடுக்க முடியாமல் கோவை மாவட்டத்தில் தடுமாறுவதற்கு என்ன காரணம்? எது காரணம்?

சீதையானால் தீயில் இறங்கிடுக! கண்ணகியானால் சிலம்பை உடைத்திடுக!

நெல்லை, சென்னை, கோவை மாவட்டங்கள் மட்டுமல்ல - எல்லா மாவட்டங்களிலுமே லஞ்சப் பணம் கொஞ்சியிருக்கிறது! மேலும் கொஞ்சிக் கொண்டிருக்கிறது!

திடீரென்று 23-5-81 அன்று இந்த அரசு ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தது.

அதன்படி தமிழ்நாட்டில் எரிசாராயம் உற்பத்தி செய்கிற சாராய வடிசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமங்கள் ரத்து செய்யப்பட்டும் - அதைப் போலவே பீர், விஸ்கி, பிராந்தி போன்றவைகளை விற்பனை செய்யும் கடைகளுக்கான உரிமங்கள் இரண்டு மாதத்தில் ரத்து செய்யப்படும் என்றும் அவசரச் சட்டம் பிறப்பித்தார்கள்.

ஆனால் இந்தக் கடைகள் 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி வரை நடத்த இந்த அரசிடமே லைசென்ஸ் பெற்றவையாகும்.

இவர்களே உரிமம் வழங்கிவிட்டு, பிறகு இவர்களே அதனை ரத்து செய்தார்கள்.

இந்த அவசரச் சட்டத்தின்படி - இவர்கள் 23-7-81-ஆம் தேதிக்கு மேல் கடை நடத்த முடியாது.

ஆனால் தடுமாற்றத்துடன் நடைபெறும் இந்த ஆட்சி 20-7-81 அன்று மீண்டும் ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து - இந்தக் கடைகள் 31-8-82 வரை நடைபெறலாம் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

23-5-81 அன்று பிறப்பித்த அவசரச் சட்டத்திற்கு 20-7-81 அன்று மாற்றம் செய்து மீண்டும் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க காரணம் என்ன? இடையில் நடைபெற்றது என்ன?

இத்தனை விபரீதங்கள்! வேண்டாத வேலைகள்! கோமாளித்தனங்கள்! குளறுபடிகள்! இவற்றுக்கிடையே கோடிக்கணக்கில் கொள்ளையோ கொள்ளை!

இதற்கெல்லாம் யார் காரணம்?
எவர் காரணம்?
சீதையானால் தீயில் இறங்கிடுக!
கண்ணகியானால் சிலம்பை உடைத்திடுக!

இந்தப் பதிலைத்தானே நான் அளிக்க வேண்டியிருக்கிறது! இல்லையா உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(01-08-1981)

940. அந்த எட்டு இளைஞர்கள்!

உடன்பிறப்பே,

எண்ணிக்கை எட்டாகிவிட்டது! இன்னும் எத்தனையோ! உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட இளைஞர்கள் எட்டுப்பேர்! முதலில் ஒரு இளைஞன்; பாஃபிசாண்டஸ் எனும் பெயருடைய வீரன் - தன் முன்னாலேயே உணவு பரிமாறப்பட்ட நிலையிலும் அதனை ஏறெடுத்தும் பார்க்காமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு - தான்; ஒரு வேளை மயக்கமுற்று விட்டால் டாக்டர்கள் குளுக்கோஸ் போன்ற சத்துள்ள உணவுப் பொருட்களை ஊசி மூலமாக செலுத்தாமல் தடுத்திட வேண்டுமெனத் தன்னை ஈன்றெடுத்த தாயைக் கேட்டுக்கொண்டு அந்தத் தாயும் அவ்வாறே மகனின் தியாக உள்ளத்திலிருந்து எழுந்த ஆசையை நிறைவேற்றி வைத்திட; அந்த உண்ணா நோன்பிருந்த உறுதி கொண்ட நெஞ்சினன், அறுபது நாட்களுக்கு மேல் சிறைச்சாலைக்குள்ளேயே பட்டினிப் போராட்டம் நடத்தித் தளிராகவே உதிர்ந்து போனான்!

அயர்லாந்து நாட்டு விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் கணக்கற்றோர் - வன்முறையாளர்கள் எனக் குற்றம் சாட்டப் பெற்று - பெல்பாஸ்ட் என்னும் இடத்தில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்! அவர்களில் மிகப் பெரும்பாலோர் வசந்தம் நுகரும் வாலிபப் பருவத்தினர்! ஆயுட்காலத்தில் ஒரு கால கட்டத்தில் மட்டுமே வீசக்கூடிய இன்பத் தென்றலை நாடிட மறுத்து விட்டுத் தங்களைப் புயலாக ஆக்கிக் கொண்டவர்கள்! புலிக்குணம் கொண்டோர்! அயர்லாந்தின் புறநானூற்றுச் சிற்பங்களாக விளங்கிடுவோர்!

பத்து ஆண்டுகள் என்றும் இருபது ஆண்டுகள் என்றும் தண்டனைகளைப் பெற்று சிறைக் கோட்டங்களில் அடைக்கப்பட்டுள்ள அந்த அடலேறுகள்; சிறையில் தங்களை அரசியல் கைதிகளாக நடத்திட வேண்டுமென ஒரு போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள்.

தொடக்கத்திலேயே ஓரிரு தியாக தீபங்கள் இளம் வயதில் அணைந்து விட்ட அவலம் கண்டு, நான் கண்ணீர் சிந்தியதை

நீ மறந்திருக்க மாட்டாய்! உலகமே, அந்த உறுதிவாய்ந்த சிறுத்தைக்குட்டிகளின் தியாக மரணம் கேள்வியுற்றுக் குலுங்கிற்று! டெல்லி மாநிலங்களவையில் நமது கழகத்தினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் அயர்லாந்து சிறையில் அறப்போர் நடத்தி மடிந்து போன மாவீரர்களுக்காக இதய அஞ்சலி செலுத்தி இரங்கலுரை ஆற்றினர் என்பது அப்போதே வந்த செய்தி!

தொடர்ந்து வாரந்தோறும் நமது நெஞ்சைப் பிளக்கும் செய்தியினைப் பெல்பாஸ்ட் சிறைச்சாலை வழங்கிக் கொண்டேயிருக்கிறது!

கடைசியாக வந்துள்ள செய்தியின்படி - கெய்ரன் தோகர்த்தி என்ற இருபத்தி ஐந்து வயது வாலிபன், அந்தக் காராக்கிருகத்தில் அரசியல் கைதிகளுக்கான உரிமைகளைக் கோரி எழுபது நாட்களுக்கு மேல் உண்ணாநோன்பு கடைப்பிடித்து உயிர் விட்டிருக்கிறான்.

அயர்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன் கூட!

அந்த அரிமா, தனது பதினேழாவது வயதிலேயே அயர்லாந்தின் குடியரசுப்படை இளைஞர் பிரிவில் இணைந்து, பிரிட்டிஷ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டவன்! பின்னர் அயர்லாந்து குடியரசுக்கே தப்பியோடி வந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டு மீண்டும் மீண்டும் சிறையேகினான். 1978-ஆம் ஆண்டு அவன் மீது தொடரப்பட்ட வன்முறை வழக்கின் காரணமாக இருபத்திரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றான். சிறையில் நடத்திய உரிமைக் கிளர்ச்சியில் பட்டினி கிடந்து, தன்னைத் தானே வருத்திக்கொண்டு - செத்து மடிந்தான்! புகழ் சேர்த்து மடிந்தான்!

இவனைச் சேர்த்து அந்தச் சிறைக் கோட்டத்தில் உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட வாலிபர்கள் எட்டுப் பேர்!

உடன்பிறப்பே, எட்டுப் பேர் என்றதும் உனக்கு நினைவு அலைகள் எழுகின்றன அல்லவா; இந்தித் திணிப்பை எதிர்த்து இந்தத் தமிழ் மண்ணில் நமது கழக இளைஞர்கள் எட்டுப் பேர் 1965-ஆம் ஆண்டில் தீக்குளித்துச் செத்த தியாகச் செய்தி குறித்து!

மதவாதிகள் சிலர், தங்கள் கொள்கையை நிலைநாட்ட வியட்நாமில் தீக்குளித்து மடிந்த நிகழ்ச்சிக்குப் பிறகு - தாய்

மொழியைப் பாதுகாக்கத் தணலுக்குத் தங்கள் தேகங்களை உயிருடனேயே பலி கொடுத்த தமிழ்ச் சீயங்கள் எட்டுப் பேரைத் தந்திட்ட மண்ணல்லவோ இந்தத் தமிழ் மண்!

தீயிட்டுக்கொண்டு மடிவதென்றால் - உடல் சுடுமே - மேனி தகிக்குமே - பாளம்பாளமாக வெடிக்குமே - எரிச்சல் தாங்காதே - துடிதுடித்துச் சாக வேண்டுமே - என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொள்ளாமல் - செந்தமிழுக்கொரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ - எனக் கேட்டுச் சாம்பலாகிப் போனார்கள்; என்றும் சாகாத அந்த இளம் தமிழர்கள்!

அந்தத் தியாகத் திருவிளக்குகளை இழித்துப் பேசியோரும் - பழித்து எழுதியோரும் கூட உண்டு!

ஆனால் அந்த வாலிப ஜோதிகள் வரலாற்றில் அழியாத இடம் பெற்று விட்டன!

இதோ இன்னொரு வீர வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் அயர்லாந்து நாட்டுச் சிறைப் பறவைகள்!

அணு அணுவாக உயிர் போகிறது - குடல் கருகுகிறது - உடல் மெலிகிறது - ஒளிமங்குகிறது - வினாடிக்கு வினாடி செத்துச் செத்து இறுதியில் செத்தே போகிறார்கள்!

அந்தோ! எட்டு என்ற இந்த எண்ணிக்கையுடனாவது இதைத் தடுத்து நிறுத்திட வழிகாண வேண்டுமென்று யாருடைய கருணை விழியும் திறக்காதா?

இல்லை; இது முடியாத கதைதானா?

இந்தக் கொடுமையை முடித்துவைக்க வலிமை வாய்ந்த ஒரு குரல் - இரக்கம் கொண்ட ஒரு குரல் - உடனடியாக உலகின் கவனத்தை இழுக்குமளவுக்கு எழுந்திடாதா?

எதிர்பார்க்கிறேன் அப்படியொரு குரல் எழுமென்று! அந்த நினைவோடுதான் இந்தக் கடிதம் எழுதுகிறேன்! கடிதம் உன் கைக்குக் கிடைக்குமுன்னர் அந்தக் குரல் எழுமேயானால் நான் மட்டுமல்ல; இதயமுள்ள அனைவருமே ஆறுதல் பெற்றிடுவர்!

அன்புள்ள,

மு. க.

(05-08-1981)

941. அடுத்த கட்டம் அழைக்கிறது!

உடன்பிறப்பே,

கழகம் அறிவித்தவாறு மாநில முழுவதும் பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுள்ளன. கொட்டும் மழை சில இடங்களில்! சற்றும் சோர்ந்திடாமல் நமது கழகக் கண்மணிகள் பேரணிகளை நடத்தியுள்ளனர். பெய்து கொண்டேயிருந்த மழையைக் குற்றாலத்துச் சாரல் போலக் கருதிக் கொண்டு பொதுமக்களும் கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு இன்று நடைபெறும் அவல ஆட்சிக்கு எதிரான முதல்கட்ட முழக்கத்தில் ஒன்றிப்போயினர் என்ற செய்தி பல பகுதிகளில் இருந்தும் கிடைத்த வண்ணமிருக்கின்றன.

கடமையுணர்வுடன் அறிவிக்கப்பட்ட கூட்டங்களுக்குச் சென்று விளக்கவுரையாற்றி வந்த சொற்பொழிவாளர்களும், கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்திய கழக அமைப்புக்களின் நிர்வாகிகளும், நேற்றும் இன்றும் தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்தும் - கடிதங்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு - பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் எத்துணைச் சிறப்புடன் நடைபெற்றன என்பதைத் தெரிவித்துத் தாங்களும் மகிழ்ச்சியில் திளைத்து நம்மையும் திளைத்திடச் செய்கிறார்கள்.

இனி - அடுத்து ஆகஸ்டு 15-ஆம் நாள் திருச்சியில் கழக மகளிர் அணி மாநாடு! ஆகஸ்டு 21-ஆம் நாள் சென்னையில் மாபெரும் பேரணி! கறுப்புக்கொடி ஏந்தி! கறுப்புடை அணிந்து!

மதுவிலக்கு சட்டத்தை மேலும் தீவிரமாக்குவேனே தவிர, ஒரு சிறிதும் தளர்த்த மாட்டேன் என்று தாயின்மீது சத்தியம் செய்து முழக்கமிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், இன்று அந்தச் சத்தியத்தைக் கால்தூசிக்குச் சமமாக மதித்து - தாய்க்குலத்தையே இழிவுபடுத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளதைத் தாய்க்குலம் புரிந்து கொள்ள

வேண்டுமென்பதற்காக - திருச்சியில் விளக்கமளிக்க கழக மகளிர் மாநாடு கூடுகிறது!

முன்பொரு முறை எம்.ஜி.ஆர். தாய்க் குலத்தை இழிவாகப் பேசினார் என்பதைக் கண்டித்துப் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எப்படிச் சீற்றங்கொண்டு - எத்தனையெத்தனை கூட்டங்களில் பதில் அளித்தார் என்பதை பழைய ஏடுகளில் இன்றைக்கும் படித்துப் பார்க்க முடியும்!

இப்போது தன்னை ஈன்றெடுத்த தாயின் மீதே ஆணையிட்டு மதுவிலக்குச் சட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவித்தார்! ஆமாம்; அவர் முதலமைச்சரான பிறகு! ஆனால் நடப்பது என்ன?

பதினைந்தாயிரம் கடைகள் திறக்கப்பட்டு விட்டன! பாட்டில் சாராயம்தான் விற்கப்படுமென்றார்! பாட்டில் இல்லாமலே பல கடைகளில் சாராய வியாபாரம் நடக்கிறது! பர்மிட் பெற்றவர் மட்டுமே குடிக்க முடியும் என்றார்! பர்மிட் இல்லாதவர்கள் தான் பகிரங்கமாக கடைகளில் வந்து மதுவினை வாங்கிக் குடித்து மயங்கி விழுகின்றனர்! வயது வரம்பு வைத்து இருபத்தி ஐந்து வயதுக்குக் குறைந்தோர் குடிக்க முடியாது என்றார்! பதினைந்து பதினாறு வயது சிறுவர்கள் கடைகளில் அமர்ந்து ஆடிப்பாடி மது அருந்தும் காட்சிகளை ஆதாரப்பூர்வமான புகைப்படங்களுடன் ஆங்கில நாளேடுகள் வெளியிட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் குடித்து வெளியேறிய ஐந்து இளைஞர்கள், குளித்தலைப் பகுதியில் - வீடு புகுந்து மூன்று பெண்கள் உட்பட பதின்மூன்று பேரை கத்தியால் குத்தியும் கடைகளைச் சூறையாடியும் அமளி விளைவித்த நிகழ்ச்சி, இன்றைய ஏடுகளில் வெளிவந்துள்ளது. சாராயக் கலவைத் தொழிற்சாலைகளில் இருந்து போதுமான சாராயம் ஏலமெடுத்த சில்லறைக் கடைகளுக்கு வராத காரணத்தால் கள்ளச் சாராயத்தையே கடைகளில் வெளிப்படையாக விற்பதாகத் திட்டவட்டமான செய்திகளை எல்லா தினசரி ஏடுகளும் வெளியிட்டு வருகின்றன.

கள்ளச் சாராய வியாபாரிகளால் தங்கள் கடை வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று ஒரு சில வியாபாரிகள் புகார் செய்தால் -

அந்தக் கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்கு ஆயிரம் இரண்டாயிரம் கையூட்டு கொடு என்று ஒரு சில காவல்துறை அதிகாரிகள் கேட்கின்றனர்!

இதிலும் லஞ்சமா? என்று வியாபாரிகள் வியப்பு தெரிவித்தால் - இது சில்லரை வியாபாரம்தானே; அதனால் ஆயிரம் இரண்டாயிரம்! மொத்த வியாபாரத்திற்கு இருபது முப்பது லட்சம் என்று வாங்கிக் கொண்டு கறை படாத கரம் பார்! என்று காட்டிக் கொண்டிருக்கிறார்களே - இன்னும் இயங்காத பிளண்டிங் - பாட்லிங் தொழிற்சாலைகளுக்குக் கோடி கோடியாகப் பெற்றிருக்கிறார்களே - அதைவிட இது மோசமா? கிடக்கட்டும், கேட்டதை எடு! என்கிறார்கள்!

ஊரே சிரிக்கிறது! நாடே சிரிக்கிறது! இவர்கள் கள்ளுக்கடை சாராயக்கடைகளைத் திறந்த லட்சணம் - உலகமே கைகொட்டிச் சிரிக்கிறது!

உரிமம் ரத்து! கையிலே லட்சம் பத்து! போன உரிமம் திரும்பி வரும் புதுமணத்தோட!

நாம், கூட்டம் போட்டு விளக்காமலே - ஊருக்கு ஊர் - தெருவுக்குத் தெரு - திண்ணைக்குத் திண்ணை - எம்.ஜி.ஆரின் ஊழல் ராஜ்யம் பற்றி பேச்சு ஆரம்பமாகி விட்டது!

அதனால்தான் இன்னும் தாய்மார்களை ஏமாற்றலாம் என்ற நம்பிக்கையுடன் பழைய படங்களை ஊருக்கு ஊர் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இவ்வளவுக்கும் பிறகு விழிப்படையாமல் இருக்கிற தாய்க்குலத்திற்கு விளக்கமளிக்கத் திட்டம் தீட்டுகிற மாநாடே திருச்சி மகளிர் மாநாடு!

ஒவ்வொரு ஊரிலிருந்தும் கழக மகளிர் - தாங்கள் வருவது மட்டுமன்றி கழக உறுப்பினராக இல்லாத தாய்மார்களையும் சகோதரிகளையும் திருச்சி மாநாட்டுக்கு அழைத்து வர வேண்டும்.

மாநாட்டுப் பணிகள் தொடங்கி விட்டன! நேற்றுக் கூட திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் சென்னைக்கு வந்து மாநில மகளிர் அணியின் நிர்வாகிகளுடன் கலந்து பேசி மாநாட்டுக்கான முன்னேற்பாடுகளைச் செய்து விட்டுச் சென்றிருக்கிறார்!

திருச்சி மாவட்டத்திற்கு மட்டுமே இந்த மாநாடு என்று கருதாமல் - இது மாநில அளவில் எல்லா மாவட்டச் செயலாளர்களும் - அமைப்புக்களும் - அக்கறையும் ஆர்வமும் காட்ட வேண்டிய மாநாடு எனக் கருதி செயல்படக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநாடு நடக்கும் மண்டபத்தில் ஆண்களுக்குத் தனியிட முண்டு என்று அறிவிக்கிற அளவுக்கு தாய்க் குலத்தினர் அந்த மண்டபம் நிரம்பிடும் வண்ணம் குழுமிட வேண்டும்!

எங்கே பார்க்கலாம்; மகளிர் அணிவகுப்பின் மாண்பினை - மாநகராம் திருச்சியிலே!

அன்புள்ள,

மு. க.

(06-08-1981)

942. ஒரே இரத்தம் - ஒரு விளக்கத்திற்காக!

உடன்பிறப்பே,

ஒரு கூட்டத்தார் வீரவாடியைச் சேர்ந்தவர்கள்! எதிரிகளைத் தாக்கக் கம்பும், எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்கக் கேடயம் போல முறமும் கைகளில்!

இன்னொரு கூட்டத்தின் கைகளில் அரிவாள், மண்வெட்டி, கம்புகள்! அந்தக் கூட்டத்தால் அம்பல் காலனியைச் சேர்ந்தவர்கள் என்பது மகேஸ்வரனுக்கு உடனே விளங்கி விட்டது. அந்த கூட்டத்துக்குப் பொன்னன்தான் தலைமைதாங்கி நடத்திக் கொண்டிருந்தான். அவனருகே திருக்கைவால் முரடன் முனியாண்டியும் திருக்கைவாலைச் சுழற்றி எதிரிகளை அடித்துக் கொண்டிருந்தான். ஒரே கூக்குரல்! அடி! குத்து! கொல்லு! இப்படி வீராவேச ஒலிகள்!

இந்தப் பகுதியிலேதான் நந்தகுமார் தாக்கப்பட்டான் என்பதும், அதற்குப் பதிலுக்குப் பதில் தாக்குவதற்காகவே அம்பல் காலனியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்டு வந்திருக்கிறார்கள் என்பதும் மகேஸ்வரனுக்கு விரைவில் விளங்கி விட்டன.

மகேஸ்வரன் காரை நிறுத்தி இறங்கினான். இரு சாராரும் மோதிக் கொள்ளும் இடத்தை நோக்கி ஓடினான். நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! என்று கத்தினான். பயனில்லை. கலவரம் கடுமையாயிற்று. மகேஸ்வரன் மனஉறுதி குலையவில்லை. திடீரென இரு சாராருக்கும் இடையில் போய் நின்று கொண்டு கைகளை உயரத் தூக்கியவாறு உரத்த குரலில் அழுத்தம் திருத்தமாக அறிவித்தான்.

முதலில் என்னை அடித்துக் கொன்றுவிட்டு பிறகு இருசாராரும் அடித்துக் கொள்ளுங்கள்!

உயர்ந்த கம்புகள் தாழ்ந்தன! ஓங்கிய அரிவாள்கள் தரையில் வீழ்ந்தன! ஒரே அமைதி!

தன்னுடைய உருக்கமான வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு இரு சாராரும் தாங்கள் ஏந்தியிருந்த வன்முறைக் கருவிகளைக் கீழே போட்டுவிட்டு அசைவற்று நின்றதைக் கண்ட மகேஸ்வரன், கண்களில் நீர் துளிர்க்க உதடுகளில் புன்னகை மின்னிட பொன்னன் தோளில் ஒரு கையைப் போட்டுக் கொண்டு, இன்னொரு கையை எதிர்வரிசைக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருந்த கொத்து மீசைக்கார வாலிபனின் தோளில் போட்டுக் கொண்டான்.

உன் பெயர் என்னப்பா? என்று மகேஸ்வரன் கேட்பதற்குள் நாகேந்திரன் என்ற பதிலைச் சொல்லிவிட்டு தன் தோள் மீதிருந்த மகேசின் கையை மெதுவாகத் தள்ளி விட்டுச் சிறிது அகன்று நின்றான்.

ஒருபுறம் தாழ்த்தப்பட்ட மக்கள்! மறுபுறம் பிற்படுத்தப்பட்ட மக்கள்! உங்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டும் வெட்டிக் கொண்டும் நீங்கள் பிறந்த இந்த மண்ணில் ரத்தத்தைத் தெளிக்கிறீர்களே; அதனால் பகையென்னும் பயிர்தான் விளையுமே தவிர - வேறென்ன நற்பயனைக் காணப் போகிறீர்கள்? இதோ நான் உங்களைவிட உயர்ந்த ஜாதிக்காரன்! ஒருகாலத்தில் உங்களை பிரித்து வைப்பதில் சுவை கண்ட பெரிய ஜாதிக்கார வீட்டுப்பிள்ளை! மிகச் சிறுபான்மையோராகிய எங்களால் மிகப் பெரும்பான்மையான உங்களை எப்படிப் பிரித்து வைக்க முடிந்தது? உங்களுக்கு வீரம் உண்டு! வல்லமை உண்டு! அறிவு உண்டு! ஆற்றல் உண்டு! எதற்கும் அஞ்சாத துணிவு மிக்கவர்கள்தான் நீங்கள்!

இதோ இந்தப் பக்கம் நிற்கிற தாழ்த்தப்பட்ட சகோதரர்களானாலும் - அதோ அந்தப் பக்கம் நிற்கிற பிற்படுத்தப்பட்ட சகோதரர்களானாலும் - எங்களைவிட எதிலும் குறைந்தவர்கள் அல்ல! உண்மையாகச் சொன்னால் எங்களைவிட உயர்ந்தவர்களேதான் நீங்கள் எல்லாம்! ஆனாலும் ஒற்றுமை என்ற ஒரு குணம் இல்லாத காரணத்தால் உங்களை ஒருவரையொருவர் மோதவிட்டுக் கொண்டே எங்களைப் போன்ற பெரிய ஜாதிக்காரர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் பொன்னனின் தம்பி நந்தகுமார், சென்னையில் படித்துக் கொண்டிருக்கிறான். ஊருக்கு வந்து தாய் தகப்பனாரைப் பார்த்து விட்டுத் திரும்பலாம் என்று புறப்பட்டிருக்கிறான். ரயிலடியிலிருந்து ஒரு வண்டி பேசிக்கொண்டு கிளம்பியிருக்கிறான். வழியில் இந்த ஊரை வண்டி கடக்கும்போது, நந்தகுமார் மாரியின் மகன் என்பது வண்டிக்காரப் பெரியவருக்குத் தெரிந்திருக்கிறது. அந்தப் பெரியவர் யார்? அவரும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்! இருந்தாலும் தாழ்த்தப்பட்டோர் வீட்டுப் பையன் தன் வண்டியில் ஏறிவிட்டானே என்பதால், அவருக்கு ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பியிருக்கிறது!

அது அவர் குற்றமல்ல! நூற்றாண்டுக் காலமாக ஊறிப் போயிருக்கிற ஜாதி உணர்ச்சி! அந்த உணர்ச்சி வெறியாக மாறியது! வண்டியைக் கவிழ்த்தது! நந்தகுமாரின் மண்டையைப் பிளந்தது! அந்த நேரம் நான் காரில் வந்திராவிட்டால் நந்தகுமார் பிணமாகக்கூட ஆகியிருக்கக்கூடும். செய்தி பரவிற்று! அம்பல் காலனி மக்கள் ஆயுதபாணிகளாகப் புறப்பட்டனர். வீரவாடிப் பகுதியைச் சேர்ந்தவர்களும் எதிர்த்துத் தாக்கினர். கலவரம் மூண்டது. இந்நேரம் நான் வராமல் போலீசார் இங்கு வந்திருந்தால் உங்கள் இருசாராரையும் கைது செய்து லாரிகளில் ஏற்றிக் கொண்டு போயிருப்பார்கள்!

தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பகை உணர்ச்சி தேவைதானா? கல்வியெனும் பலகணி திறக்கப்பட்டு, அறிவு மணம் பரவிடாத இந்தக் கிராமப்புறங்களில் மட்டுமல்ல; நவீன விஞ்ஞானக் கல்வி முறைகளும் நாகரீகமும் நடைபழகுகின்ற நகர்ப்புறங்களிலே கூட இத்தகைய சாதிக் கலவரங்களைத் தவிர்க்க முடியவில்லை. அறிவு ஒளியை ஏற்றி வைக்கிற கல்லூரிகளில் மாணவர்களுக்கிடையேகூட சாதிக் கலவரங்கள் தலை விரித்தாடுகிற அலங்கோலத்தை இன்னமும் காண முடிகிறது. அந்தக் கலவரங்களில் ஈடுபட்டு இரத்தம் சிந்துவோர் யார்? நாட்டில் ஜாதிகளைப் பிரித்து வைத்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்படுகிற உயர்ஜாதிக்காரர்களா?

இல்லை! இல்லவே இல்லை! யார் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறார்களோ - யார் ஒதுக்கப்பட்டு உழல்கிறார்களோ - யார்

பிற்படுத்தப்பட்டுப் பள்ளத்தில் உருண்டு வீழ்ந்திருக்கிறார்களோ - அவர்கள்தான் ஒருவருக்கொருவர் ஆயுதம் தாங்கிக் கலவரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாலு வேங்கைகள் சேர்ந்து நாற்பதாயிரம் மான்கள் கொண்ட கூட்டத்தை ஒற்றுமையில்லாக் கூட்டமாக ஆக்கி விட்டன. இப்போது மான்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன. வேங்கைகள் வேடிக்கை பார்க்கின்றன. மானும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று அந்தக் காலத்தில் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டினை எழுதிக் காட்டுவார்கள்! இப்போது மானும் புலியும் கூட வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?

மகேஸ்வரனின் உணர்ச்சி மிக்க உரை கேட்டு அந்தக் கலகக் கூட்டம் மெய்மறந்து நின்றது. நாகேந்திரன் மட்டும் தனது கொத்து மீசையைத் தடவிக் கொண்டு மகேஸ்வரனை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

நீங்க சொல்றதெல்லாம் கேக்கிறதுக்கு இனிப்பாதான் இருக்கு! ஆனா இது ஏட்டுச் சக்கரையா இருந்து பிரயோஜனமில்லையே!

தனது கருத்துக்கள், நாகேந்திரனின் இதயத்தைத் தொட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியோடு மகேஸ்வரன், அவனை நெருங்கி முதுகில் தட்டிக் கொடுத்தான்.

ஏட்டுச் சர்க்கரையாக இருக்கக்கூடாது! நாட்டு நடப்பாக அமைய வேண்டும்! அதற்குத்தான் நான் பாடுபட்டு வருகிறேன். என்னை, அந்தக் கொள்கைக்காகவே ஒப்படைத்து விட்டு வாழ்ந்து வருகிறேன். என்னைப் போல ஒவ்வொருவரும் தங்களைத் திருத்திக்கொண்டு சாதிபேதப் பூசல்களற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த உழைப்பார்களேயானால் இந்த நாடு வகுப்புக் கலவரங்களுக்கு அப்பாற்பட்ட அமைதிப் பூங்காவாகத் திகழும் என்பது என் திடமான நம்பிக்கை!

உடன்பிறப்பே, ஓராண்டுக்கு முன்பு குங்குமம் இதழில் தொடர்கதையாக வந்து, தமிழ்க்கனி பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள ஒரே இரத்தம் நூலில் இருந்து ஒரு நிகழ்ச்சியை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

நாட்டில் நடைபெறும் சாதிக் கலவரங்கள் என்னுள்ளத்தில் ஈட்டிகளாய்ப் பாய்ந்து கொண்டுள்ளன. அந்தக் கலவரங்களில்

ஈடுபடுவோர் யார்? கை, கால் இழப்போர் - படுகாயமுற்றோர் யார்? உயிர், உடமைகளைத் துறப்போர் யார்? இந்த யார்? யார்? என்னும் கேள்வி என் நெஞ்சைப் பிளந்து கொண்டேயிருக்கிறது! அதற்குக் கிடைக்கும் பதில்... அம்மவோ! மிக வேதனை! அந்த வேதனைக் குரலைத்தான் ஒரே இரத்தம் தொடர்கதை வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறேன்.

என் செய்வது; சாதிப்பூசல்களும் அதன் விளைவாக வன்முறை வெறியாட்டங்களும் - வீடிழந்து வாசல் இழந்து, அனைத்தையும் தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிவிட்டு நிற்போரும் - வகுப்புக் கலவரங்களின் வளர்ந்து கொண்டே போகும் தொடர்கதையின் நிகழ்ச்சிகளாகவும், கதாபாத்திரங்களாகவும் ஆகிவிட்டனரே!

ஒரு அதிர்ச்சியால் உலுக்கப்பெற்று அதிலிருந்து மீண்டு இதயம் அமைதி அடைவதற்குள்ளாக இன்னொரு அதிர்ச்சி காத்திருக்கிறதே!

இதோ பெண்ணாடத்திற்கருகே தோலார் என்னும் இடத்தில் ஏற்பட்ட சாதிச் சண்டையில் - ஆயுதம் தாங்கினர்! தீப்பந்தம் ஏந்தினர்! இருநூறுக்கு மேற்பட்ட வீடுகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன! இருசாராரிலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்!

இந்தக் கொடுமையான சம்பவத்தில் அதிகமாகப் பாதிக்கப் பட்டிருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்! இருபதுக்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கடுமையாகக் காயமுற்றிருக்கின்றனர்! ஆடுகள் உயிருடன் கொளுத்தப்பட்டிருக்கின்றன! பல லட்ச ரூபாய்ச் சேதம்!

இந்த அநியாயச் செயல்களுக்கு ஆரம்பத்தில் காரணமாக இருந்தது எது என்பது குறித்து பல்வேறு செய்திகள் வருகின்றன!

அந்தக் காரணங்கள் உண்மையாக இருக்குமானால், குறிப்பிட்ட விஷமிகள் மீது, அதற்குச் சட்டப்படிப் பரிகாரம் தேடிக் கொள்ள முனைவதுதான் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமே தவிர - இந்தக் கோர விளையாட்டுக்கள் மனிதாபிமான உணர்வுகளை அறவே பட்டுப் போகச் செய்து விடுவதோடு - நாட்டைக் குழப்பக் காடாகவும் மாற்றிவிடும் என்பதை மறந்து விடக் கூடாது!

உடன்பிறப்பே, நான் ஒரே இரத்தம் நூலில் கோடிட்டுக் காட்டும் கருத்துக்களின் அடிப்படையில் நீயும் நமது கழக அமைப்புகளும் இந்தப் பிரச்சினையை அணுகிட வேண்டும்!

அதற்காகவே மீண்டும் ஒருமுறை அந்த நூலை உனக்கு நினைவுபடுத்தியுள்ளேன்! நீயும் படித்துப் பார்! மற்றவர்க்கும் படித்துக்காட்டு! சாதிப் பூசல்களைக் களைந்திட நம்மாலியன்ற முயற்சி; இத்தகைய கருத்துக்களை இருசாரார் மத்தியிலும் விளக்குவதே! அந்த நோக்கம் வெற்றி பெற்றிடவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(08-08-1981)

943. சின்னப் புது மலரே!
சிங்கார அகல் விளக்கே!

உடன்பிறப்பே,

எழுச்சியுற்ற இளைஞன்தான்!
ஏறுநடைச் சிங்கம்தான்!
கொழித்துவிட்ட உமிகள்தான் - இனிக்
கொடுமை செய்யும் கூட்டத்தார்

இப்படிச் சில கவிதை வரிகளை எனது இளமைக் காலத்தில் எழுதிய நினைவின் அலைகள் இதயத்தில் இன்னமும் மோதிக் கொண்டிருக்கின்றன.

மன்னர் பின்னால் அணிவகுத்துச் சென்ற படை வீரர்களில் ஒருவனாக என் மகனும் சென்று அவரது அன்பின் பெருக்கிற்கு உரியவனாக அமைந்தான் என்ற செய்தி மட்டும் கிடைத்துள்ளதே தவிர, அந்த மன்னர் தலைமை தாங்கி நடத்தும் போரில் இந்த மண்ணைக் காத்திட என் மகன் வீரம் விளைவித்து, விழுப்புண் ஏற்று, சாவில் வீழ்ந்து சாகாப் புகழ் பெற்றான் என்ற செய்தி இன்னும் வரவில்லையே என ஒரு தாய் ஏக்கம் கொண்டு புலம்பினாள் என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது! மகனைப் பெற்ற மகிழ்ச்சியை விட, மகன் களத்தில் மார்பில் காயமுற்று மடிந்தான் என்பதிலேயே அதிக மகிழ்ச்சியுற்றனர் சங்க காலத் தமிழன்னைகள் என விளக்கும் புறநானூற்று வரிகளைப் படிக்கும் போதெல்லாம் புல்லரிக்கிறது உடல்!

வீரமிகுக் கவிதைகளையும் தீரமிகு வரலாறுகளையும் படித்துப் படித்து அந்தப் படைவீரர் பட்டியலில் இடம் பெற்று வாழ்வை நிறைவுபடுத்துவதன்றோ - வையத்தில் நாம் பெற்றிடும் பெரும் பேறு எனத் துடித்தது இளம் உள்ளம்!

எனக்கு மட்டுமல்ல; எத்தனையோ இளைஞர்களுக்கு! அவர்களிலே பலர் இன்று நமது கழகத்தின் தூண்களாகத் திகழ்கிறார்கள்!

கூட்டங்கள் நடத்துவதில் எத்துணை ஆர்வம்! அதற்கென விளம்பரச் சுவரொட்டிகளை இரவெல்லாம் கண்விழித்து ஒட்டுவதிலும் -தெருவெல்லாம் கொடிகளைத் தோரணங்களைப் பதாகைகளைத் தொங்க விடுவதற்காக அல்லும்பகலும் அயராது பாடுபடுவதிலும் எவ்வளவு அக்கறை - உறுப்பினர் சேர்ப்பதில் எவ்வளவு உற்சாகம் - அடடா! அந்த இளமையின் துள்ளல் முழுவதும் இந்த இயக்கத்திற்காக - இலட்சிய வெற்றிக்காக - பயன்பட்டதை எண்ணி எண்ணிப் பரவசமடைந்திடும் பருவமல்லவா இது!

அந்த இளமை, திரும்பி வரப்போவதில்லை! வரவேண்டு மென்று வரம் கேட்கவும் போவதில்லை! கேட்டாலும் தரக்கூடிய வலிமை பெற்றோர் யாரும் இல்லை! ஆனால்; அதே நேரத்தில் வயதில் முதியோராயிருந்தாலும் வாய்மைப் போருக்கு என்றும் இளையாராய் இருந்திடல் வேண்டுமென்ற புரட்சிக் கவிஞரின் கருத்தைப் புறந்தள்ளி விட முடியுமோ!

இளைஞர்களாய் இருந்து இயக்கம் வளர்த்து இன்று இணையற்ற கட்டுப்கோப்புடன் இலட்சியப் பாசறையாக அண்ணா வழியில் கழகம் நடத்துகிறவர்கள்; இப்போது தங்களைப் பின்பற்றி இளைஞர் பட்டாளம்; ஆம் - அரும்புமீசைத் தம்பிகள்; இல்லை அந்த மீசை கூட அரும்பிடாதவர்கள் - இயக்கத்தின் சுடர்மணிகளாய் - கதிர் ஒளிகளாய் - வந்து குவிந்த வண்ணமிருப்பதைப் பார்த்துப் பூரிக்கிறோம்.

தாய்மொழி காக்க - தமிழ் நில மேன்மை காக்க - தமிழின மானம் மரியாதை காக்க - பகுத்தறிவு நெறி காக்க - பாட்டாளி வர்க்கத்தின் உரிமை காக்க - இடையறாது பணியாற்றும் இந்தக் கழகப் பாடி வீட்டில் இளைஞர் அணியினர் பெருகிட வேண்டும்; என்ற கருத்தினை கழகம் அறிவித்தவுடனே - இலட்சக்கணக்கில் இளைஞர்கள் இணைந்த வண்ணமுள்ளனர்!

எங்கெங்கு நோக்கினும் இளைஞர் அணியடா! எனப் பொங்கிடும் உவகையால் பாடிடத் தோன்றுகிறது!

உயர்வுகள் போற்றிடவும் -
ஒழுக்கம் பேணிடவும் -
கடமைகள் ஆற்றிடவும் -
கண்ணியம் நாட்டிடவும் -

கட்டுப்பாடு மிக்க இளங்காளையர் கழகத்தின் விழுதுகளாக இளைஞர் அணிகளை அமைத்து வருகின்றனர்!

கழகத்தில் மூத்தோராயிருப்போர் - அந்த இளைஞர்களை, இன்னும் ஊக்கப்படுத்துவார்களேயானால் - கடல்மடை திறந்தாற்போல் அந்தச் சிறுத்தைக் கூட்டம் செயலாற்றப் புறப்படும்!

ஓரிரு இடங்களில் இளைஞர் அணியினரைச் செயலிழக்கச் செய்யும் காரியங்களும் நடைபெறுவதாகத் தகவல்! மிகச் சில இடங்கள்தான் எனினும், அதற்காக வருந்துகிறேன்! திருந்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இளைஞர் அணி - ஆலுக்கு விழுதே தவிர; வாழைக்குக் கன்றல்ல - என்பதையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது!

பெரியோரின் அனுபவம் - இளையோரின் ஆர்வம் - இரண்டும் ஒரு இயக்கம் வளர - வலிவுபெற - தேவைதானே!

செல்லுமிடமெங்கும் இளைஞர் அணியின் சின்னப் புது மலர்களை - சிங்கார அகல் விளக்குகளை - ஏராளமாகக் கண்டிட முடிகிறது!

எதிர்காலத் தமிழகத்தின் நலம் பாடக் கூடிய - அந்த நிகழ்காலப் பிறை நிலவுகளை வளர விடுவோம்!

முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழு நிலவாகத் தமிழகம் தோன்றிட; என் சின்னத் தம்பிகளே! செல்லக் கட்டிகளே! சிரிப்பு தவழும் முகத்துடனே செயல்புரிய வாரீர்!

எங்கே பார்க்கலாம்; இளைஞர் அணி இல்லாத இடங்களே இருக்கக் கூடாது!

தொடர்ந்திடுக பணியை! தொடர்புகொள்க கழக அமைப்புகளுடன்! அதில் ஏதேனும் தொல்லையிருப்பின் தலைமைக் கழகத்திற்குத் தகவல் தருக!

அன்புள்ள,

மு. க.

(09-08-1981)

944. அரியதோர் வாய்ப்பு ஆகஸ்ட் 15

"அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளை நோய் போல் மதத்தைக் கூட்டியழும்
வைதீகத்தைப்
போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு போர்க்கவந்த வீரா இளவீரா!

வாடப் பலபுரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்த வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா! இளந்தோளா!...."

ஆண் குழந்தையைத் தூங்கவைக்கத் தாலாட்டுப் பாடும் அன்னையர்க்கெனப் புரட்சிக் கவிஞர் எழுதிய கவிதையில் சிலவரிகள் இவை!

இதோ, பெண் குழந்தைக்கான தாலாட்டுப் பாடலையும் புரட்சிக் கவிஞர் தீட்டியுள்ளார்!

"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு, மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேச வந்த
பெண்ணழகே!

நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!"

ஆணையும் பெண்ணையும் குழந்தைப் பருவத்தில் தூங்க வைத்திடும் தாலாட்டு எனினும், அவர்தம் எதிர்காலத்தில்

அன்னைத் தமிழகத்தையே விழிப்புறச் செய்திட, கவிஞர் வடித்திட்டக் காவியமன்றோ இஃது!

உறங்குவதற்காகப் பாடும்போதே உள்ளத்தில் பதிவதற்காகப் பாவேந்தர் இயற்றியுள்ள உணர்ச்சிமிகு ஓவியத்தை இன்று நான் நினைவூட்டுவதற்குரிய காரணத்தை; என் உடன்பிறப்பே! நீ அறிந்து கொள்ளாமலா இருந்திடுவாய்!

உதவாதினி ஒரு தாமதம்! உடனே விழி தமிழகமே! என்று தட்டியெழுப்பிடும் வேளையிலே - தாலாட்டும் பாடமாட்டேன்! அந்தப் பாட்டுக் கேட்டு இமை மூடும் பருவத்தினருக்கு விடுக்கின்ற அழைப்புமல்ல இது!

தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டிகளே! வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேசமட்டுமல்ல; செயல் திறனால் விளக்கிடவும் வாரீர் திருச்சி மாநாட்டுக்கு என, நான் அழைத்திடும் போது "இப்புவிக்குத் தாயென்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!" என்று பெருமை கொள்ளும் கவிஞரின் கற்கண்டுத் சொற்கொண்டு விளிப்பதிலே எத்துணை மகிழ்ச்சி! எத்தனை எழுச்சி!

ஆகஸ்டு 15, நாடு விடுதலைபெற்ற நாள்! ஆனால் இன்றைய தமிழ்க் குலத்தின் கைகால்களில் பூட்டப்பட்டுள்ள கேடுபாடுகள் என்னும் தளைகள் அகற்றப்பட்டு விட்டனவா?

தாய்க்குலத்தை ஏமாற்றுவதையே கலையாகக் கற்று - அவர்களில் பெரும் பகுதியினரைச் சிந்தனை மலடுகளாக்கி - இன்றைக்கு அந்தத் தாய்க் குலத்தின் பெருமையையே மிதித்து நகுக்கி அவர்களின் கண்ணீரைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்களன்றோ தமிழகத்து அரியணையில் ஏறி அமர்ந்திருக்கின்றனர்.

இளஞ்செழியனைக் கொலைவெறிக்கு இரையாக்கிய கொடியவர்கள் தப்பித்துக் கொள்ளவும் - அவனைப் பெற்றெடுத்த தாய் தவித்து அழுதிடவும் நேரிட்டது எப்போது?

வாகைக் குளத்தில் இரண்டு உழவர்குலப் பெருமாட்டிகள் சுட்டு வீழ்த்தப்பட்டு பிணமாகச் சுருண்டு போனது எப்போது?

மதுராந்தகத்தில் ஞானசௌந்தரி மர்மமாக மரணமுற்றதும் - அந்த மரணத்திற்கு மையப்புள்ளியான ஆளுங்கட்சியின் பிரமுகர்,

அரசிடம் அடைக்கலம் பெற்று ஆனந்தமாகத் திரிவது எப்போது?

புட்லூர் தண்டபாணியின் மனைவியின் தாலி அறுபட்டது யாரால்? எப்போது?

இதோ, பனவிடலிச் சத்திரம்க ாவல் நிலையத்தில் இளைஞன் குணசேகரனை இழந்து விட்டுக் கண்ணீர் வழியத் துடிக்கிறாளே; அவன் தாய் - இந்தக் கொடுமை எப்போது?

ஏடு இடம் தராதே, எழுதுவதற்கு! ஒன்றா இரண்டா?

தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மதுவிலக்குச் சட்டம் தீவிரமாகும்! தாயின் மேலாணையாகச் சொல்லுகிறேன் - சட்டத்தைத் தளர்த்த மாட்டேன் - இப்படிச் சத்தியம் செய்தவர் தானே இன்று ஊருக்கு ஊர் மதுக்கடைகளைத் திறந்து மகிழ்ச்சி கொண்டாடுகிறார்!

கொலைகள் நடப்பதும் - தாலிகள் கொள்ளை போவதும் - குற்றவாளிகளைத் தப்புவிக்க வழிவகைகள் காண்பதும் - இந்த ஆட்சியின் இலக்கணமாகவே ஆகிவிட்டதே!

இவற்றையெல்லாம், தாய்க்குலத்திற்கு விளக்கிடவும் - தேர்தல் நேரத்தில் தரப்பட்ட வாக்குறுதிகளைப் பட்டியல் போட்டுக் காட்டியதற்கு நேர் மாறாக; ஏன் - தாறுமாறாக நடக்கும் ஆட்சியை அடையாளம் கண்டு கொள்ளச் செய்யவும் நமது கழகம் கடலூரில் அறிவித்த முடிவின்படி - இரண்டாம் கட்ட முழக்கம் திருச்சியில் ஆகஸ்ட் 15 காலையில் தொடங்குகிறது!

திருச்சி தேவர் மன்றம் முழுமையும் மகளிரே நிரம்பியிருந்திடல் வேண்டும்!

மாவட்டந்தோறுமுள்ள மகளிர் அணி அமைப்பாளர்கள், அதற்குரிய பணியினை அயராது மேற்கொள்ள வேண்டும்!

மகளிர் அணி உடன்பிறப்புகளின் திறனையும் சிறப்பையும் அறிந்து கொள்வதற்கோர் அரிய வாய்ப்பு திருச்சி மாநாடு!

அன்புள்ள,

மு.க.

11-8-1981

945. அவர் உணர்வாரோ! யார் அறிவார்?

உடன்பிறப்பே,

திட்டித் தீர்க்கின்றார் – என்னைத்
திட்டித் தீர்க்கின்றார் – நான்
தீயுலையில் காய்ச்சிய சொல் எடுத்து
சுட்டிட மாட்டேனா என எதிர்பார்த்துத்
திட்டித் தீர்க்கின்றார்!
பட்டொளி வீசிடும் பதவியில் அமரப்
பலவழி முயன்று – ஒரு வழி கண்டு

திட்டித் தீர்க்கின்றார் – என்னை! எப்படித் தாக்குதல்? இன்னும் பாரீர்!

தப்பிட முடியுமோ – கருணாநிதியால்? உமது
சொற்படி கேட்பேன் பாதமும்
சொறிவேன்!
சுயமரியாதையைக் கனவிலும் நினையேன்!
தயை புரிந்து தந்திடுக பதவி!
கட்டிப் பிடிக்கின்றார்
தோட்டத்தார் காலை – அதனால்
திட்டித் தீர்க்கின்றார் –
தீ நாக்கு சுழற்றுகின்றார்!
பதர்களுக்குப் பதில் சொல்ல
புதர் வாழ் சிறுத்தைகளா தேவை?
இவர்களுக்குப் பதில் சொன்னால் –
அதைக்கொண்டே பதவிபெற ஓர் திட்டம்!(அதனால்தான்)

திட்டித் தீர்க்கின்றார் என்னை;
கட்டிப் பிடிக்கின்றார் அவர் காலை!
பதவியல்ல பண உதவி போதுமென
பத்துத் தலையோர் கைநீட்டுவதும் நானறிவேன்!
போகட்டும் பிழைத்துப்போகட்டும் மென்றும்
ஆகட்டும் அவர் காரியம் ஆகட்டும் என்றும்
ஏசட்டும் அதற்காக என்னை யென்றே
எதிர்த்தொரு வார்த்தை சொல்லாது விடுகின்றேன் நான்!
வேழத்தைத் தாக்குதல் வேங்கையின் வீரம் –
வெண் மூக்குக் குதிரையைத் தாக்குதல் வெட்கக்கேடன்றோ!
எனவேதான் ஏசட்டும் சிலர் என்றே
எதிர்த்தொரு வார்த்தை சொல்லாது விடுகின்றேன்!
விரல் கொண்டு நசுக்குகின்ற எறும்பை
வேல் கொண்டு வீழ்த்துவது அறிவாமோ?
கிட்டியதைத் தட்டிப் பறிக்காமல் காப்பதற்கும்
எட்டி எட்டிப் பாய்ந்து ஓர் பதவி பெறுவதற்கும்
திட்டித் தீர்க்கின்றார், என்னை –
கட்டிப் பிடிக்கின்றார் அவர் காலை!
பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்
எனும் குறட் பொருளை
அன்றுணர நான் தவறிடினும்
இனும் வேதனை சூழாமல் இருந்திடவே
இன்றவர் உணர்வாரோ – யாரறிவார்?

அன்புள்ள,

மு. க.

(12-08-1981)

946. இதோபதேசம் பலன் தருமா?

உடன்பிறப்பே,

ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் - என்ற அறிவுரை; உதட்டளவு உச்சரிப்பாகப் போய்விட்ட காரணத்தால் - பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சி வைத்தியம் நடத்தத் தீர்மானித்து விட்டார்கள்!

இன்றைக்கு மடாலயங்கள் அலறுகின்றன! இது தகுமா? முறையா? எனத் தணல் மிதித்தோர் போலக் குதிக்கின்றனர் பலர்!

மீனாட்சிபுரம் நிகழ்ச்சி, தொடரக்கூடாது எனத் துடித்திடுவோர் என்ன செய்திடல் வேண்டும்?

வருணாஸ்ரம தர்மம் என்ற வார்த்தையைத் தூக்கி நடுக்கடலில் போட்டுவிட்டோம் என்றல்லவா அறிவித்திருக்க வேண்டும்? அதன் பிறகல்லவா மத மாற்றத்தைத் தடுத்திடும் வழிபற்றிக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்திட வேண்டும்!

நரபலியிடுவது கொள்கை! அதற்கென நடுங்காமல் கையில் ஏற்றுவது கொடுவாள்! மானல்ல, என் மயிலல்ல, மடியில் வந்திடு - என நாவினிக்கக் குழந்தையைக் கொஞ்சுவது. நயவஞ்சகம் என்று தானே கொள்ளப்படும்!

அதுதானே இந்து மதக் காவலர்கள் எனக் கூறிக் கொள்வோர் இன்று கடைப்பிடிக்கும் முறை!

உன்னை நாலு சாதியாகப் பிரித்தும் ஆறுதலடையாமல் ஐந்தாம் சாதியாகப் பஞ்சமனாகவும் பிரித்தாளும் வர்ணாஸ்ரம வாள் என் கையிலிருப்பது கண்டு கலங்காதே!

சாதியில் நீ கீழ் என்பேன்! சகித்துக் கொள்!

நாயும் பன்றியும் நடமாடும் நடுவீதியில் உன் காலடி படுவதும் பாபமென்பேன். பதைத்திடாதே! பொறுத்துக்கொள்!

கடையில் உனக்கோர் குவளை, தனியென்பேன்! ஏற்றுக் கொள்!

வர்ணாஸ்ரமம் - ஒரு தர்மம் - மகாதர்மம் - அதற்கு அடங்கித்தான் நடக்க வேண்டும்!

இத்தனை மிரட்டல்களையும் காட்டிவிட்டு - இதை மீறி மீனாட்சிபுரங்கள் நடக்கலாமா எனக் கேட்பதின் பொருள்தான் எனக்கு விளங்கவில்லை!

குட்டுவேன்! குனிந்து கொடு! மிதிப்பேன்! வளைந்து கொடு! வர்ணாஸ்ரமத்தின் சந்நிதானத்தில் ஏன்? என்ற கேள்விக்கே இடமில்லை!

இப்படியொரு வர்ணாஸ்ரமத்தை வாளாகவும், கேடயமாகவும், அரணாகவும், அரண்மனையாகவும் பயன்படுத்திக் கொண்டு பன்னெடு நாட்களாக வாழ்பவர்கள்; அந்த வர்ணாஸ்ரமத்தால் வாட்டமுற்றுக் கிடப்போருக்கு ஆறுதல் வழங்கிடும் அருகதையை எப்போது பெற முடியும்?

வர்ணாஸ்ரமத்தைத் தலைமுதல் வால் வரையில் அடித்துக் கொன்று அதனைத் தீயிட்டுப் பொசுக்கி, அதற்கு ஆற்ற வேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் ஆற்றிவிட்ட பிறகல்லவா - மீனாட்சிபுரங்கள் மீண்டும் தொடராமல் இருக்க உரிய வழிகாண முடியும்!

உடன்பிறப்பே, சென்னைத் துறைமுகத்திற்கு வந்த கப்பலில் மரத்துண்டுகளோடு மறைந்து மலைப்பாம்பு ஒன்றும் வந்துவிட்டதாம்! அந்தமானில் அந்தக் கப்பலில் மரங்களை ஏற்றும்போது யார் கண்ணிலும் அந்த மலைப்பாம்பு படவில்லை! சென்னையில் மரங்களைக் கப்பலில் இருந்து இறக்கிடும்போதுதான் வாயைப் பிளந்து அந்தப் பாம்பு சீற்றம் காட்டியிருக்கிறது!

அந்த மலைப் பாம்பின் தந்திரம் கொண்டதன்றோ, மறைந்து வந்து தாக்குகின்ற வர்ணாஸ்ரமம்!

எப்படியோ மலைப்பாம்பு அகற்றப்படும்! மரங்கள் இறக்கப்படும்!

ஆனால் வர்ணாஸ்ரம மலைப்பாம்பு அகற்றப்படாமலே மத மாற்றத்தைத் தடுத்து விடலாம் என்பது பேதமையன்றோ!

நான், சில வாரங்களுக்கு முன்பு கோவை நிகழ்ச்சியொன்றில் எழுப்பிய வினா - அப்படியே இருக்கிறது!

இந்து மதப் பெரியவர்கள் யாரும் பதில் அளிக்கவில்லை!

பல்வேறு சாதிகளைக் கொண்ட இந்து மதம் எனும் இந்தத் தொகுப்பு மதத்திலிருந்து எந்தச் சாதியைச் சேர்ந்தவரும் முஸ்லீமாகி விட முடிகிறது! அங்கு சென்றதும் அவர்கள் முஸ்லீம்! ஒன்றை குலம்!

ஆனால் வேறு மதத்திலிருந்து இந்து மதத்திற்கு வருவோரை - இங்கு நிறைந்துள்ள சாதிகளில் எந்த சாதியில் சேர்ப்பீர்? அய்யர் சாதியிலா? முதலியார் சாதியிலா? செட்டியாரா? தேவரா? வன்னியரா? யாதவரா? அரிஜனா? எந்த சாதியில் சேர்ப்பீர்?

அதற்கு உற்ற வழி காண - இன்றில்லாவிடினும் எதிர்காலத்தில் சாதிப் பாகுபாடற்ற - சாதிப்பூசலற்ற - ஒரு சமுதாயமாக மாறிட - இன்றைக்கே அந்தச் சனாதன வர்ணாஸ்ரம சவக்குழிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டாமோ?

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் மதமாற்றத்தை ஊக்கப் படுத்துவதற்கு அல்ல!

ஏன் இந்த மனமாற்றம் ஏற்படுகிறது என்பதை - இந்து மதக் காவலர்கள் எனக் கூறிக்கொள்கிறார்களே; அவர்களுக்கு எடுத்துக் காட்டிட!

கழகத்தின் கொள்கை; எம்மதமும் சம்மதமே! மதம், மக்களுக்கு அபினியாகி விடக்கூடாது! என்பது தான்!

மத மாற்றத்தை தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வருவது பற்றிச் சிந்திப்பதைவிட - வர்ணாஸ்ரமக் கொள்கையைத் தடை செய்து சட்டம் கொண்டு வருவதுதான் முதல் வேலையாக இருக்க வேண்டும்!

அர்ச்சகர் சட்டத்தைக் கழக அரசு கொண்டு வந்தபோது அதனை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்று தடுத்து நிறுத்தியது எந்த அடிப்படையில்?

வர்ணாஸ்ரம அடிப்படையில் அல்லவா?

அதனை இடித்துத் தகர்க்காமல் இதோபதேசம் புரிந்து பயன் என்ன?

அன்புள்ள,

மு. க.

(13-08-1981)

947. தலைநகர் மாற்றம் - தர்பார் நடத்துவோருக்கு எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன!

ஐந்து கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இலவசமாகத் தரப்படும் எனக் கூறி வாக்குப் பெற்றனர்! அந்தத் திட்டத்தையும் காணோம்; அரிசி விலையும் ஏறிக் கொண்டேயிருக்கிறது!

அரிசி விலை மட்டுமா? அன்றாடத் தேவையான பண்டங்கள், காய்கறிகள் அனைத்துமே விஷம்போல் விலையேறி வாட்டி வதைக்கின்றன! விலைவாசி உயர்வைக் கண்டித்துக் கழக அரசை எதிர்த்து அன்றைக்கு உண்ணாவிரதமிருந்தவர்கள் இன்றைக்கு ஆளுங்கட்சியினர்! குறைப்போம் விலைவாசியை என்றவர்கள் இப்போது அதை கேட்க நீ யார்? எனக் கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்!

எங்குமில்லாத அளவுக்குப் பஸ் கட்டணங்களை உயர்த்தி எளியோரை வாட்டி பஸ் தொழில் நடத்தும் வலியோரிடம் வாங்க வேண்டியதை மறைவாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

பேருந்துகள் தேசியமயக் கொள்கை - பஸ்களுக்கு உச்ச வரம்பு - இவற்றையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், தனியார்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கி அதற்கெனத் தனியாகவே வாங்கிக்கொண்டு - இனியும் தனியார் வழித்தடங்களைத் தாராளமாக அனுமதிப்போம் என்று அறிவிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள்!

வேறு எந்த வேலை நடந்தாலும் நடக்காவிட்டாலும் அமைச்சர்களும் ஆளுங்கட்சிப் பிரமுகர்களும் கியூ வரிசையில் நின்று வெளிநாட்டுப் பயணங்களை நடத்திவிட்டு - அதற்கெனத் தமிழகத்தில் தொகுதி வாரியாகக் கணிசமான தொகையை

லட்சக்கணக்கில் வசூல் செய்து வசூல் மன்னரின் வாரிசுகள் என்பதை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!

திருச்செந்தூர் உண்டியல் மோசடி! சுப்பிரமணியர் சம்காரம்! அதைத் திரையிட்டு மறைக்க அமைச்சர்களின் மறுப்பு அறிக்கைகள்! இறுதியில் விவகாரம் விசாரணைக்கு வந்தே தீர வேண்டுமென்ற அளவுக்குக் கிளர்ந்தெழுந்த மக்களின் சக்தி!

தாரமங்கலம் கோயில் சிலை திருட்டு! ஆளுங்கட்சியின் அறநிலையப் பணி! அதனால் காவல்துறை நடவடிக்கையில் தாமதம்! பிறகு வேறு வழியின்றி நடவடிக்கைத் தொடக்கம்! சாட்சியத்தை மறைக்க ஒரு கொலை! தொடர்ந்து மற்றொரு கொலை!

மதுவிலக்கு கொள்கையில் மார்தட்டிய படலம்! மாதாமீது சத்தியம் செய்த படலம்! மாநில முழுதும் மதுக்கடைகள் திறந்துள்ள படலம்! பர்மிட்டு இல்லாமலே பல லட்சக்கணக்கானோர் குடிக்கும் படலம்! பர்மிட் முறையைத் தளர்த்த மாட்டோம் என வெத்து வேட்டு முழங்கும் வேடிக்கை நாதரின் விதூஷகப்படலம்! எரிசாராய ஊழலைத் தொடர்ந்து, சாராயக் கலவைத் தொழிற்சாலை ஊழல் - பொது விற்பனை உரிமம் வழங்கிய ஊழல் - அனைத்திலும் பல கோடி கொள்ளையோ - கொள்ளை!

பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறும் செப்டம்பரில் என்று பத்தாவது முறையாக அறிவிப்பு! பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுமென்று அறிவித்து இரண்டு ஆண்டுகளாகியும் - அதைப்பற்றிப் பிறகு சிந்திக்காமலே இருந்து - இப்போது அந்தத் தனித் தொகுதித் திட்டத்தின் மீது பழியைப் போட்டு - மீண்டும் பஞ்சாயத்துத் தேர்தல் ஒத்திவைக்கப்படுமென்று கத்துக்குட்டிப் பிரகடனம்!

இப்படி ஒன்றா இரண்டா? ஒரே கடிதத்தில் எழுதி முடித்து விட!

தொட்ட இடமெல்லாம் ஊழல் சீழ் வடிகின்ற துரைத்தனம்!

நிர்வாகமோ நிலைகுத்திக் கிடக்கிறது!

ஆளுவோரால் இது குறித்தெல்லாம் விளக்கமளிக்க முடியாத வெட்கக்கேடு!

அலைமோதல்! தடுமாற்றம்!

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஊழல்! ஆமை வேக நிர்வாகம்! லஞ்சம்! லஞ்சம்! அது இல்லாமல் கோப்புகள் கொஞ்சமும் இடம் பெயராத நிலைமை!

மருத்துவக் கல்லூரி தேர்வுகள் - எம்.டி. - எம்.எஸ். தேர்வுகள் - கைகள் சிவக்கச் சிவக்க; ஒருவர் போதாமல் உற்றார் உறவினர் அனைவருமே வாங்கி வாங்கிப் பெட்டியில் வைத்து - நீதிமன்றங்கள் வரையில் அந்தத் தேர்வுகளைப் பற்றிய வழக்குகள்!

இவற்றையும் இது போன்ற எல்லையற்ற ஊழல்களையும் ஒரேயடியாக மறைத்து, மாநில மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பலாமென்றுதான் திடீரென ஒரு அறிவிப்பு! திட்டவட்டமான அறிவிப்பு!

தலைநகர் மாற்றப்படும்!

சென்னையிலிருந்து மாற்றப்படும்!

முன்பு இப்படியொரு கருத்தை முதல்வர் சொன்ன போது யாருமே எதிர்க்க வில்லையாம்! அதனால் மக்களே ஆதரிக்கிறார்களாம்! எனவே தலைநகரை மாற்றுவது உறுதி! இந்த அறிக்கையே இறுதி! இறுதி என்கிறார்கள்!

தண்ணீர்க் கஷ்டமாம்! அதனால் தலைநகர் மாற்றமாம்! கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்றீர்களே? என்ன ஆயிற்று என்று மக்கள் கேட்க மாட்டார்கள் என்ற மமதையும் செருக்கும் இந்த மாநிலம் ஆள்பவர்களுக்கு!

உடன்பிறப்பே, தலைநகர் மாற்றம் திசை திருப்பும் பிரச்சாரம்!

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் நண்பர் மாணிக்கம் அறிவித்திருப்பதைப் போல - அவசரப்பட்டு கொச்சைப்படுத்திச் செய்யப்படுகின்ற விபரீதமான முயற்சி!

தலைநகரை மாற்றித்தான் தீருவோம் என்று தலைகீழாக நிற்பார்களேயானால் - அதற்கு விடையளிக்கச் சென்னை மாநகரமே வீறுகொண்டெழும்! துணிவிருந்தால் அதை இந்த அரசினர் சந்திக்கத் தயாராகட்டும்!

தலைநகர் மாற்றம் என்ற பிரச்சினையை எழுப்பி - மற்ற பிரச்சினைகளை மறந்து விடச் செய்யலாம் என்ற சூழ்ச்சி வலையில் யாரும் சிக்கிவிடத் தயாராக இல்லை!

மக்கள் சக்தி திரண்டெழுவதை மலிவாகக் கணக்கிடுவது மதோன்மத்தர்கள் செயல்!

அளித்த வாக்குறுதிகள் எங்கே? எங்கே?

அன்றாட நிகழ்ச்சியாகி விட்ட லஞ்ச லாவண்யங்களுக்கு பதில் எங்கே? எங்கே?

அனுதினமும் அடிக்கின்ற கொள்ளைக்கு ஆதாரம் இங்கே! இங்கே!

அதற்கு உடனடி பதில் எங்கே?

உடன்பிறப்பே, இப்படி வினாக்களை எழுப்பி வெடித்துக் குமுறும் எரிமலையாகக் காட்சி தருகிறது தமிழகம்!

வெந்து மடியும் விவசாயி!

நொந்து மடியும் நெசவாளி!

பசியால் துடிக்கும் பாட்டாளி!

இப்படிக் குமுறும் எரிமலையை - கொந்தளிக்கும் கடலை - தலைநகர் மாற்றம் என்ற திசை திருப்பும் பேச்சால் தடுத்து நிறுத்திவிட முடியாது!

இதனைத் தர்பார் நடாத்துவோர்

உணரட்டும்!

அன்புள்ள,

மு. க.

(14-08-1981)

948. மகளிர் அணியினர் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

திருச்சி மகளிர் மாநாடு குறித்து எம்.ஜி.ஆர். அவர்களின் ஏடு - அதற்கே உரிய பண்பாட்டுடன் கேலி புரிந்து கட்டுரை தீட்டியிருக்கிறது!

திரளுகிறார்கள் - மகளிர் மார் தட்டுகிறார்கள் என்பன போன்ற சொற்கள் அந்த ஏட்டில் வாரியிறைக்கப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆர். கட்சியினர், தங்களை அடையாளங்காட்டிக் கொள்கிறார்கள் என்பதைத் தவிர, வேறு விளக்கம் அளிப்பதற்கு என்ன இருக்கிறது!

தாசிக் குலப் பேச்சும், தமிழ்நாட்டுப் பெண்கள் தங்கள் கணவன் பேச்சைக் கூடக் கேட்க மாட்டார்கள். தன் பேச்சைத்தான் கேட்பார்கள் என்ற ஆணவ மொழியும் பேசியவர்தானே எம்.ஜி.ஆர்.!

அந்த இழிமொழிகளைக் கண்டித்துக் காமராசர் அவர்கள் நாடு முழுதும் முழக்கமிடவில்லையா?

எனவே எம்.ஜி.ஆர். அவர்களின் குடும்ப ஏட்டில் - திருச்சி மகளிர் மாநாட்டில் திரளுதல் மார்தட்டுதல் போன்ற இழிதகை வசைமாரிகள் இடம் பெறுவதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

உடன்பிறப்பே, திருச்சியில் மகளிர் மாநாடு கூடுவதின் முக்கிய நோக்கமே தமிழ் நாட்டுத் தாய்க் குலத்தின் பண்பாட்டை தூசுக்குச் சமமாக மதிக்கும் எம்.ஜி.ஆர். கூட்டத்தினரைப் பற்றித் தாய்க்குலம் புரிந்து கொண்டு - விழிப்படைய வேண்டும் என்ற விளக்கங்களைத் தருவதற்காகத்தான்!

மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் - அந்தச் சட்டம் இந்திய நாடு முழுமைக்கும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால்தான் வெற்றியடைய முடியுமே தவிர ஒரு

சில மாநிலங்களில் அதனை வெற்றி பெறச் செய்ய முடியுமென்பது இயலாத செயல்! இது அனுபவ உண்மை!

இந்த உண்மையை எடுத்துக்காட்டித்தான் 1971-ல் கோவையில் கூடிய கழகப் பொதுக் குழுவில் மதுவிலக்குச் சட்டத்தை ஒத்தி வைக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது! அப்படி ஒத்தி வைப்பதை ஆதரித்து அந்தப் பொதுக் குழுவில் அன்றைய பொருளாளர் எம்.ஜி.ஆர். பேசியதும் - அவரே ஆனந்த விகடன் இதழில் எழுதியதும் ஆதாரபூர்வமான தகவல்கள்!

அதைத் தொடர்ந்து கழக அரசு, மது விலக்குச் சட்டத்தை ஒத்தி வைத்தது! அப்போது அந்த முடிவை ஏற்றுக் கொண்ட எம்.ஜி.ஆர். 1972-ஆம் ஆண்டு கழகத்திலிருந்து தன்னை வெளியேற்றிக் கொண்ட பிறகு -

ஆகா! மதுவிலக்கை ஒத்திவைத்து விட்டார்களே என்று உருக்கமாகப் பேசினார்! மதுக்கடைகளின் முன்னால் முற்றிலும் தாய்மார்களைக் கொண்டே ஒரு போராட்டம் நடத்தப் போகிறேன் என்று முரசு கொட்டினார்!

அவர் மதுக்கடைகளை எதிர்த்துத் தாய்மார்களைக் கொண்டு போராட்டம் நடத்த முஸ்தீபுகளைச் செய்வதற்கு முன்பே - காமராசர் அவர்கள் தலைமையில் மதுக்கடைகளை மூடச் சொல்லிப் போராட்டம் தொடங்கப்பட்டு விட்டது! ஆயிரக்கணக்கான காங்கிரசார் சிறை புகுந்தனர்! ஓரிரு வாரங்களில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டதுடன் - வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டு - மதுவிலக்குச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டது! அளித்த உறுதிக்கேற்ப கழக ஆட்சியில் மதுக்கடைகள் மூடப்பட்டன!

இதைக் கண்ட எம்.ஜி.ஆர். என்ன பேசினார் தெரியுமா?

கருணாநிதியும் காமராசரும் கூடிப் பேசிக் கொண்டு காமராசர் போராட்டம் நடத்துவது போல் நடத்தி, கருணாநிதி அவருக்கு வாக்குறுதி வழங்கிவிட்டார் - என்று எம்.ஜி.ஆர். பேசியது அவரது கட்சிப் பத்திரிகையிலேயே ஆதாரபூர்வமாக அப்போது வெளி வந்திருக்கிறது!

அதே எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் கடுமையாக ஆக்கினார்!

தனது தாயின் மீது சத்தியம் செய்து - தமிழ் நாட்டில் மதுக்கடைகளைத் திறக்க மாட்டேன் என்று உறுதியளித்தார்!

இப்போதுள்ள விவகாரமெல்லாம் - எம்.ஜி.ஆர். அவர்களே! பெற்ற தாயின் மீது நீங்கள் செய்த சத்தியம் என்ன ஆனது?

பர்மிட் என்றீர்கள்! பாட்டில் என்றீர்கள்! அவைகள் எல்லாம் எங்கே போயின?

மதுவிலக்கை அமல்படுத்தக் கடுமையான சட்டம் கொண்டு வந்த போதும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக என்றீர்!

இப்போது மதுக்கடைகளைத் திறந்திருப்பதும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக என்கிறீர்!

தாய்மார்களின் கண்ணீர் என்ன; உமது நோக்கில் அவ்வளவு மலிவுப் பொருளா?

இப்போது மதுவிலக்கு ரத்து என்ற பெயரால் எவ்வளவு ஊழல்! எத்தனை கோடிக்கு ஊழல்!

கழக ஆட்சியில் மதுவிலக்கு ஒத்திவைப்பை ஆதரித்துவிட்டு - பிறகு புதுக் கட்சியின் சார்பில் எதிர்த்துப் போர்க்கொடி காட்டியவரே! இப்போது உமது ஆட்சியில் மதுவும் ஆறாகப் பெருகியோடுகிறது! ஊழலும் கடலாகப் பொங்குகிறதே!

இதற்கென்ன பதில் சொல்கிறீர்?

இதைக் கேட்கவும் - இந்தத் தரங்கெட்ட ஆட்சி பற்றித் தாய்க் குலத்திற்கு விளக்கவுமே - திருச்சி மகளிர் மாநாடு!

மாநாடு நடத்திடும் மகளிர் குறித்தும் - மாநாட்டுக்கு வருகை தரும் மகளிர் குறித்தும் - இழிதனைச் சொற்களை வாரியிறைப்போர் - தங்கள் கட்சியினரின் உண்மை உருவை உலகிற்கு உணர்த்துகிறார்கள் என்றே பொருள்!

அன்புள்ள,

மு. க.

(15-08-1981)

949. கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்!

உடன்பிறப்பே,

வீட்டு வாடகையிலேயிருந்து நாட்டில் மது விலக்குச் சட்டத்தைத் தளர்த்தி கடைகளின் திறப்பு விழாவை நடத்தியது வரையில் ஊழலின் மொத்த உருவமாகத் திகழும் ஒருவர், மிரட்டிப் பார்க்கிறார்! வேலூர் கூட்டத்தில் வீரஉரை ஆற்றியிருக்கிறார்! கோர்ட்டில் நம்மில் பலரை சந்திப்பாராம்! கொக்கரித்திருக்கிறார்!

கருமாரியம்மன் கோயில் சமபந்தி போஜன நிகழ்ச்சியிலே யாரோ வெளியிட்ட துண்டு அறிக்கையைத் தூக்கி வைத்துக் கொண்டு கயமைத்தனமான பேச்சு! கலப்புத் திருமணங்கள்தான் சாதி பேதத்தை ஓரளவு ஒழிக்க முடியும் என்று நாட்டின் பெருந்தலைவர்கள் அனைவரும் கருத்துரை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை வலியுறுத்தி ஒரு சிலர் வெளியிட்ட துண்டு அறிக்கை குறித்து - அமைதியான முறையில் அவர்களையும் அரவணைக்கும் வகையில் விளக்கமளித்து வரவேற்றிருக்க வேண்டிய பொறுப்பான இடத்திலே இருப்பவர் - பொங்கிய பானையின் சோறு நெருப்பிலே கொட்டுவது போல - ஆத்திரத்தில் ஏதேதோ உளறிக்கொட்டி - நம்மை வீண் வம்புக்கு இழுத்திருக்கிறார்!

அவருக்குப் புரியக்கூடிய பாஷையிலேதான் பதில் அளிக்க வேண்டுமென்று தவிர்க்க முடியாத கட்டாயத்திற்கு நம்மைத் தள்ளிவிட்டார்! அதன் விளைவுதான் உடன்பிறப்பே, எனது திருவாரூர்ப் பேச்சின் ஒரு பகுதி!

அதனை மேலும் விரிவாகத் திரும்பப் பேசிடவோ எழுதிடவோ நான் விரும்பவில்லை.

மீண்டும் அப்படியொரு பதிலையளிக்கும் நிலைமைக்கு நான் தள்ளப்படுவேனானால் - அதற்கு நான் பொறுப்பல்ல! வினை விதைத்தவர்கள்தான் வினையை அறுவடை செய்திட வேண்டும்.

எனக்கு வயதாகி விட்டது! இனி என்னால் கலப்புத் திருமணம் செய்து கொள்ள இயலாது

கருமாரியம்மன் கோயில் விழாவில் அவர் அளித்த ரசாபாசமான பதில்களில் ஒன்றுதான் இது!

எனக்குப் பிள்ளைகள் கிடையாது. அதனால் அவர்களுக்குக் கலப்புத் திருமணம் செய்து வைக்கவும் வழியில்லை.

இதுவும் அவரது விளக்கம்தான். அம்மன் கோயில் விழாவில்!

இவருக்குப் பிள்ளையில்லை, சரி - இவரது தமையனார் பிள்ளைகள் பலருக்கு இவரே பொறுப்பேற்றுத் திருமணம் நடத்தி வைத்தாரே - அப்போது கூட கேரளத்துச் சம்பந்தங்கள்தானே!

அண்ணன் பிள்ளைகள் இருக்கட்டும்; இவரது வளர்ப்பு மகனுக்குக் கூட இவர்தானே திருமணம் நடத்தி வைத்தார்! மலையாள மங்கைதானே மணமகள்! அப்போது கலப்பு மணங்குறித்துக் கருதினாரா?

மீனாட்சிபுரத்திலும் சரி, திருவேற்காட்டிலும் சரி, துண்டு அறிக்கை வெளியிட்டவர்கள் - சமுதாயத்தில் சாதிப்பூசல்கள் நீங்கிட, பொதுவான ஒரு கருத்தைத் தானே வலியுறுத்துகிறார்கள்!

அதையேன் தனிப்பட்ட ஒருவரைப் பார்த்து - அதுவும் குறிப்பாக இவரைப் பார்த்துக் கேட்டதாக இவர் தவறாகப் புரிந்து கொண்டு தாறுமாறாகப் பேசியிருக்க வேண்டும்!

பாவம்! மனிதர் மிகுந்த படபடப்பில் இருக்கிறார் என்று தெரிகிறது!

இல்லாவிட்டால் அனைத்து மக்களும் அர்ச்சகராகலாம் என்ற கொள்கையைக் கேலி செய்து திருவேற்காட்டில் திருவாய் மலர்ந்திருப்பாரா?

ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டுமென்ற கருத்தினை நையாண்டி செய்து கருமாரி கோயில் நிகழ்ச்சியிலே கதாகாலட்சேபம் நடத்தியிருப்பாரா?

பெரியார், அண்ணா பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டே, அவர்களுடைய கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்க நடைபெறுகிற முயற்சிக்குத் தன்மானமுள்ள தமிழன் எவனும் துணைபோக மாட்டான்!

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ இட ஒதுக்கீடு திட்டத்திலும் தனக்கு நம்பிக்கையில்லையென்றும் அது சில சுயநலவாதிகளின் கொள்கையென்றும் ஓரிரு வாரங்களுக்கு முன்புதான் அறிவித்திருக்கிறார்.

பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை எதிர்த்து நீதிமன்றத்திலே வழக்கு! அந்த வழக்கில் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்காக வாதாடிட வேண்டிய அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்; இட ஒதுக்கீடு என்பது சுயநலவாதிகளின் கொள்கையென்று வெளிப்படையாக அறிவிக்கிறார் என்றால் என்ன பொருள்!

திராவிடர் இயக்கத்தின் பெயரால் நிகழும் இந்த மோசடியைத் தட்டிக் கேட்க அவர் கட்சியில் யார் இருக்கிறார்கள்!

தன்மான உணர்வுள்ளவர்கள், தமிழ்மானம் பெரிதென எண்ணுபவர்கள் அங்கும் சிலர் இருக்கிறார்கள்! ஆனால் அவர்களையெல்லாம் பதவி எனும் மிகப்பெரும் பற்று வாய்மூடி மௌனிகளாக ஆக்கி வைத்திருக்கிறதே! என் செய்வது!

அவரது படபடப்பின் உச்சகட்டமாக வேலூர் உரை அமைந்துள்ளது கண்டு விலா நோகச் சிரித்திட வேண்டியுள்ளது.

கோர்ட்டில் சந்திக்கிறேன் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார்!

பல்கேரியா, பால்டிகா கப்பல் பேர ஊழலைப் பற்றிப் பேசினேன் என்று என் மீது வழக்குத் தொடுத்து ஓராண்டுக்கு மேலாகிறது!

போட்ட வழக்கில் இன்னும் அவர் என்னைச் சந்திக்க கோர்ட்டுக்கே வரவேயில்லை!

இப்போதும் வழக்குப் போடுவேன் என அச்சுறுத்துகிறார்.

எரிசாராய ஊழல் - சாராயக் கலவைத் தொழிற்சாலை ஊழல் - பர்மிட் ஊழல் - பாட்டில் தொழிற்சாலை ஊழல் - மாவட்டத்தில் மது மொத்த வியாபார ஊழல் - ஐ.எம்.எப்.எல். ஊழல் - இத்தனை குறித்தும் பேசியிருக்கிறேன்! அத்தனையும் சேர்த்து அவர் வழக்குப் போடட்டும்!

அவரை நாட்டுக்கு அடையாளம் காட்டியாகிவிட்டது! இன்னும் முழுமையாக அடையாளம் காட்டிட அவர் நம்

அனைவரது மீதும் வழக்குப் போடும் பொன்னான வாய்ப்பை எதிர்பார்க்கிறேன்.

உடன்பிறப்பே, தாயின் மேலிட்ட ஆணையைப் புறக்கணித்து மதுக் கடைகளைத் திறந்துவிட்டு - அதன் மூலம் பெருங்கொள்ளை நடத்திக் கொண்டு - நிர்வாகம் சீர்குலையவும் நிலை தடுமாறவுமான சூழ்நிலையைத் தமிழகத்தில் உருவாக்கி - பழி தீர்த்தல் - அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளால் அரசு இயந்திரத்தைப் பழுதாக்கி - தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிர்காலம், கேள்விக்குறியாக்கப்படுகிற நிலையை ஏற்படுத்தி - அடிமுதல் நுனிவரையில் அங்கிங்கெனாதபடி லஞ்சத்தைப் பெருக்கெடுக்கச் செய்து - தொடர்ந்து மக்களை ஏமாற்றி வாழலாம் என்ற கெடு நினைப்புடன் ஆட்சி நாடகம் நடத்துவோரின் முகமூடியைக் கிழித்தெறியத்தான் -

ஆகஸ்டு 21-ஆம் நாள்

நமது கழகத்தின் மூன்றாவது கட்ட முழக்கம் சென்னை மாநகரில் ஒலிக்க இருக்கிறது!

கறுப்புடை தரித்தோரின் அணி!
கருங்கொடி ஏந்தியோரின் அணி!
கழகத்தின் கண்மணியே!

நான் கடிதமெழுதி அழைத்த போதெல்லாம் - ஓடோடிவந்து என்னை உற்சாகப்படுத்தி மேலும் உழைத்திட வைக்கின்ற உடன்பிறப்பே!

எல்லைமீறிப் பேசுகின்றார் - தமிழர்க்குத்
தொல்லை மிகத் தருகின்றார்
பல்லை இளிப்போர் பதவிக்கு அங்கு கிடக்கட்டும்!

கல்லில் செதுக்கிடும் மானப்புகழ் பூண்ட நம்படை நடக்கட்டும்!

எனப்பாடி முரசுகொட்டி;
சென்னை நகர் அதிர்ந்திடவே
அன்னைக்குலம் நிறைந்திடவே
முன்னை கண்ட பேரணிகள் பின்னடைய - பசும்

பொன்னை நிகர்த்த உடன்பிறப்பே! வந்திடுக!
தாய்க்குலம் வருக!
தரம்கெட்ட ஆட்சிக்குப் புத்தி புகட்ட!
இளைஞர் படை வருக!
இழிதகை அரசுக்குப் பாடம் கற்பிக்க!
உழவர்களே! வருக!
உங்கள் வேதனைகளுக்கு ஒரு விமோசனம் காண!
பாட்டாளிகளே! வருக!
பைந்தமிழ்ச் செல்வங்களாம்; மாணவ மணிகளே! வருக!
பகுத்தறிவுச் சீயங்களே! வருக!
அண்ணாவின் தம்பிகளே! வருக!
பெரியாரின் பேரப்பிள்ளைகளே! வருக!

இப்படி அனைவரையும் தனித்தனியாக அழைப்பதற்குப் பதிலாகத்தான்;

என்னுயிர் உடன்பிறப்பே! வருக! என அழைக்கிறேன்! வா! வா!

அன்புள்ள,

மு. க.

(19-08-1981)

950. அந்தத் திசையை நோக்குகிறார்கள்; ஐந்து கோடித் தமிழர்கள்!

உடன்பிறப்பே,

கண்ணீர் வடிக்கிறோம் –
கவலை தெரிவிக்கிறோம் –
கண்டனக் குரல் கொடுக்கிறோம் –

இலங்கையில் வதைபடும் தமிழர்களுக்காக இங்குள்ள நாம் அதைத்தான் செய்கிறோம்! அதைத்தான் செய்ய முடிகிறது! இலங்கையில் வதைபடும் தமிழர்கள் எனப் பொதுவாகத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தியத் தமிழர்களானாலும் இலங்கையில் தமிழ் ஈழம் கேட்கிற தமிழர்களானாலும் மலைத் தோட்டத் தமிழர்களானாலும் நமது நோக்கில் தமிழ்க்குலம் தானே!

அந்தத் தமிழ்க்குலம் அங்கே படும் பாடு – பஞ்சு தான் படுமோ என்றல்லவா எண்ணி எண்ணி வேதனைத் தணலில் விழுந்து துடிக்கிறோம்.

இன்றா – நேற்றா? எத்தனை ஆண்டுகளாக இந்தக் கொடுமையின் கோர நர்த்தனம் இலங்கை மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்திடும் தமிழ் மங்கையரின் கற்புக்குக் களங்கம் விளைவிக்கும் செயல் கண்டும், தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் கொள்ளை போவதைக் கண்டும் – அண்ணா காலத்திலிருந்தே, தி.மு.கழகம் தொடர்ந்து பேரணிகள், கண்டனக் கூட்டங்கள் வாயிலாகத் தாயகத் தமிழர்களின் இதயத் துடிப்பினை இந்தியப் பேரரசுக்கு எடுத்துக்காட்டி – இலங்கையில் எழும் சிங்களவர் வெறிக்கு அணை கட்டி வந்திருக்கிறது.

இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்பு இலங்கையில் தமிழர்கள் மீண்டும் கொலைவெறிக்கு ஆளான போதும் கழகத்தின் பேரணியும், தமிழர்கள் ஒருமித்த குரலில் கொடுத்த எதிர்ப்பு முழக்கமும் - இலங்கைத் தமிழர்களை வாழ வைக்கப் பெரிதும் உதவின!

இப்போது மீண்டும் தொல்லை! இல்லை, தமிழர்கள் உரிமையும், உடைமையும், உயிரும் - ஏன்? மானமும் கூட கொள்ளையோ கொள்ளை!

இதோ அந்த அநியாயத்தைக் கண்டித்துத் தமிழகம் சிலிர்த்தெழுந்து நிற்கிறது!

இலங்கைத் தமிழர்கள் இப்படி எத்தனை முறைதான் செத்துச் செத்துப் பிழைப்பது!

இந்தியப் பாராளுமன்றத்தில் நமது கழக உறுப்பினர்கள் உட்படப் பலரும் கவன ஈர்ப்பு தீர்மானங்களைக் கொடுத்திருப்பதாகத் தகவல். குலுக்கல்முறைப்படி எந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறதோ. இம்மடல் தீட்டும் வரையில் எனக்குத் தெரியாது! இலங்கையில் தமிழர்களுக்குற்ற தீமை களையப்பட, இந்தியப் பேரரசு எடுத்திட வேண்டிய முறையான கடமைகளைக் குறித்து நமது கழகத்தினர் டெல்லியில் வலியுறுத்துவார்கள்! தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருப்பார்கள்!

கழகத்தின் சார்பில் பிரதமரையும் வெளி விவகார அமைச்சரையும் நேரிலே சந்தித்து இலங்கை நிலவரங்களை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன்.

அவ்வப்போது அங்கே உருவாகிடும் நிலைமைகள், தலைமைக் கழகத்திற்குத் தரப்பட்டவுடன் அவற்றை உடனடியாகப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கும், வெளி விவகார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கழகத் தலைமை, தந்திகளின் மூலம் தெரிவித்துக் கொண்டேயிருக்கிறது!

தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த கவலை இலங்கையைப் பற்றியதாக இருப்பதை உணர்ந்துள்ள நமது மத்திய அரசு, அது குறித்த அறிக்கையொன்றினை நாடாளுமன்றத்தில் வைத்திடப் போகிறது என்ற செய்தியும் வந்துள்ளது.

வேறொரு நாட்டுப் பிரச்சினையில் எத்துணை எச்சரிக்கையோடு தலையிட வேண்டும் என்பதை நாம் உணராதவர்கள் அல்ல!

தமிழ்க்குலத்தினரைத் தாக்கியொழிப்பது என்ற பெயரால் இலங்கையில் மனிதாபிமான உணர்வுக்கே அறைகூவல் விடப்பட்டுள்ளது என்பதை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எண்ணிப் பார்த்து செயல்படத் தயங்கமாட்டார் என்றே தாய்த் தமிழகத்து மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பில் உள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. ஆப்ரகாம் அவர்களிடமிருந்து இந்திய அரசுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி இலங்கையில் நிலைமை மோசமாக இருக்கிறது - பெரும்பாலும் தமிழர்கள் வன்முறை வெறியாட்டங்களால் தாக்குண்டு பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்ற உண்மைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

மானபங்கம் - சித்ரவதை - மரணம் - என்ற வன்முறை நெருப்பு வளையங்களுக்குள் புழுக்களாய்த் துடிக்கும் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் எப்படி நிர்ணயிக்கப்பட இருக்கிறதோ? என்பதைக் கொந்தளிக்கும் உள்ளத்தோடு - இங்கேயுள்ள ஐந்து கோடித் தமிழர்கள் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்!

அன்புள்ள,

மு. க.

(20-08-1981)

951. எழுச்சி கண்டார் - எரிச்சல் கொண்டார்!

உடன்பிறப்பே,

எங்கே திருவிழா நடக்கிறது - எங்கே மணிவிழா நடக்கிறது - எங்கே கூட்டம் கூடுகிறது என்று முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொண்டு - அங்கே தாங்களும் நுழைந்து கொண்டு சங்கிலியறுத்தல் - கடிகாரம் பறித்தல் - சட்டைப் பையில் கத்தரிக்கோல் போடுதல் - போன்ற தங்களது தொழிலை நடத்துவதற்கென்றே திட்டம் போட்டுக் கொண்டு சிலர் நடமாடுவர்.

அந்தப் பெருங்கூட்டங்களுக்குள் அவர்கள் நுழைந்து விடாதபடி நிகழ்ச்சிகளை நடத்துவோர் விழிப்புணர்வுடன் இருந்து தடுத்து விட்டாலோ - அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகளின் மீதே ஒருவித வெறுப்பு வந்து விடும்.

என்ன பெரிய திருமணம் நடத்திக் கிழித்து விட்டான். தெரு வாசலில் நாலு எச்சில் இலைகூட விழவில்லை! இவன் வீட்டுத் திருமணத்துக்கு ஒரு பயலும் போகவில்லை. இவனை மதித்து எவன் போவான்?

என்ன பெரிய விழா எடுத்துவிட்டார்கள் விழா! பந்தலே காலியாகக் கிடந்தது! ஒரு பகெட் சிகரெட்டு - ஒரு துண்டு பீடி - ஏதாவது ஒண்ணு பந்தலுக்கு வெளியே கிடக்கணுமே ஊகூம்! ஒன்றும் கிடையாது!

என்னப்பா அந்தக் கல்யாணத்திலே பெரிய ரகளையாமே! தாலி கட்டப் போற நேரத்திலே மாப்பிள்ளையும் பெண்ணும் மணமேடையிலேயே கன்னாபின்னான்னு பேசிகிட்டாங்களாம்.

ஆமா ஆமாம்! நான் கூட கேள்விப்பட்டேன் - வீடே அமர்க்களப் பட்டதாம்! பெண்ணோட சொந்தக்காரர்கள் - மாப்பிள்ளையோட சொந்தக்காரர்கள் - எல்லாம் ஊருக்குக் கிளம்பிட்டார்களாம்.

உடன்பிறப்பே,

இந்த உரையாடல்களில் கலந்து கொள்பவர்கள், மண வீட்டுக்குள் நுழைய முடியாமல் - முன் எச்சரிக்கையாகத் தடுக்கப்பட்டவர்கள்! விழாக்கூட்டத்தில் புகுந்தால் விபரீதம் ஏற்படுமென்று காவல்துறையினரால் கண்காணிக்கப்பட்டு விரட்டப்பட்டவர்கள்!

தங்கள் கைத்திறனையும், கத்தரித் திறனையும் காட்டி தொழில் நடத்த முடியாமற் போய் விட்டதே யென்று சினங்கொண்டு அந்த விழாக்களையே கேலி பேசியும், நடக்காத சம்பவங்களை நடந்ததாக நாக்கூச்சமின்றி உளறியும், எரிச்சலைத் தீர்த்துக் கொள்ளும் பண்பினர்!

அத்தகைய மனஇயல்பு கொண்டோர் சிலர், சென்னையில் நாம் நடத்திய பேரணியை எங்கோ தொலையில் இருந்து பார்த்து விட்டு ஏ, அப்பா! இவ்வளவு கூட்டமா? அணி திரண்டு வருகின்றனரா? அல்லது அலைகடல் பொங்கி எழுகின்றதா? என மூக்கில் விரல் வைத்து வியப்பில் மூழ்கினாலும்கூட வெளியிலே காட்ட வேண்டிய வெறுப்பைக் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. காரணம், அவர்களின் கைத்தொழிலும் கத்தரித் தொழிலும் நடத்திடக் கூட்டத்தில் நுழைய முடியாமல் எங்கேயோ துரத்தப்பட்டு ஒளிந்துகொண்டு நிற்கிறார்கள்.

உடன்பிறப்பே, விடுத்த அழைப்பினையேற்று, வில்லில் தொடுத்த கணைகள் விர்! விர்! என்று கிளம்பி வருமே; அதைப் போலத் தலைநகர் நோக்கி வந்தாய்!

மூன்றாவது கட்ட முழக்கமா? முக்கடலின் சங்கமமா? என, உன் அணிவகுப்பைக் கண்டோர் கேட்டனர்! நேரில் காணாதோர் ஏடுகளில் வந்த புகைப்படங்களையும் - தொலைக்காட்சிகளையும் பார்த்துப் பரவசமுற்றனர்!

வீதியை அடைத்துக் கொண்டு வந்த மக்கள் வெள்ளம்! அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கும் அண்ணா மேம்பாலத்திற்குமாக தேனடைபோல் தெரிந்த கூட்டம்!

ஊர்வலம் என்ற பாணியில் - ஒரு வரிசைக்கு நாலைந்து பேராக அணிவகுக்கச் செய்திருந்தால் ஒரு இடத்தைக் கடக்க எத்தனை மணி நேரமாகுமோ சொல்ல முடியாது!

ஊர்வலத்தின் நீளம் எத்தனை மைல்கள் இருந்திடுமோ அதனையும் வர்ணிக்க இயலாது!

தமிழ்நாட்டில் நடக்கும் தரங்கெட்ட ஆட்சி இன்னும் எத்தனை நாள்?

இந்தக் கேள்விக்குக் கிடைத்த விடைதான் சென்னைப் பேரணி?

ஆணவங்கொழிக்கும் அமைச்சர்களின் பேச்சுக்கள்!
ஆபாசம் வழியும் ஆளுங்கட்சியினரின் வசை
புராணங்கள்!

ஊழலின் மொத்த உருவங்கள் உத்தமர்களைப் போல நடித்து இன்னமும் ஊரை ஏமாற்றலாம் என்று கண்டிடும் கனவுகள்!

எதிர்க்கட்சியைப் பழிவாங்கும் கொடிய எண்ணங்கள்!

அத்தனையும் விரைவில் பொடிப் பொடியாகப் போகும் என்று விடுத்திட்ட எச்சரிக்கைதான்; என் உடன்பிறப்பே! நீ எழுச்சி கொண்டு நடத்திக் காட்டிய இந்தப் பேரணி!

இதன் வலிவைப் புரிந்து கொள்ளாதோர் - வாரியிறைக்கும் வார்த்தைகள்; மலையைப் பார்த்து மடு என்று கூறுபவனின் மடமையுடன் சேர்த்துக் கருதிடத் தக்கவையாகும்!

அன்புள்ள,

மு. க.

(24-08-1981)

952. தமிழன் நாதியற்றவனா?

உடன்பிறப்பே,

இலங்கைத் தீவில் என்ன நடக்கிறது என்பதற்கு, தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சுற்றுலா சென்ற தனபதி படுகொலை செய்யப்பட்ட கொடுமையான நிகழ்ச்சியொன்றே போதும்!

தமிழர்களைக் கண்டாலே - கண்ட இடத்தில் அவர்களைக் கண்டதுண்டமாக்க வேண்டும் என்ற வெறியுணர்ச்சியுடன் சிங்களவர்கள் கையில் கொலைக் கருவிகளுடன் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து சென்ற ஒரு தமிழன் கொல்லப்பட்டான் என்றதும் இலங்கை அரசினர், வருத்தம் தெரிவித்துப் பேசுதல் - கடிதம் எழுதுதல் - சிலரைக் கைது செய்தல் - போன்ற நாடகங்களை ஆடினாலுங்கூட, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைக் குரலை ஒடுக்க - சிங்களவர்களின் வன்முறை வெறியாட்டத்தை ஊக்கப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது!

சுற்றுலாப்பயணம் மேற்கொண்ட தமிழ் நாட்டுக்காரர்களில் ஒரு சிலர், அங்கிருந்த சிங்களவர்களுக்குக் கொடுத்த தொல்லை என்ன? எதுவுமேயில்லை!

திருவொற்றியூரைச் சேர்ந்த தனபதி ஒரு தொழிலாளி! அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்! அவரும் அவருடன் சென்றவர்களும் கதிர்காமம் கண்டு திரும்பும் வழியில் அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து பழுதுபட்டு விடுகிறது! அதைப் பழுது பார்க்கவிட்டு விட்டு, தனபதியும் வேறு இருவரும் ஒரு முடியலங்காரச் சாலைக்குச் செல்கிறார்கள்! தனபதி, முகச் சவரம் செய்து கொண்டு, மற்ற இருவருக்காக வெளியில் உள்ள பலகையில் அமர்ந்து காத்திருக்கிறார்.

அப்போது சிங்கள வெறியர்கள், கையில் கோடரியுடன் கூட்டமாக வருகின்றனர். தனபதியைக் கண்டதும் ஆ! அதோ ஒரு தமிழன்! என்ற ஆத்திரம் பீறிட்டெழுகிறது! மான்குட்டி மீது பாயும் ஓநாய்களைப் போல் பாய்கின்றனர்! இரத்தம் கொப்பளிக்கிறது! சிங்களவர் கோடரிக்குக் குருதிக் குளிப்பாட்டல் நடைபெறுகிறது! தனபதி - அய்யோ - அந்தத் தமிழன் - இலங்கையின் வளம் காணப் போனவன்; பிணம் தின்னும் கழுகுகளின் தீனியாகிறான்!

தனபதி செத்து மடிவதைக் கண்டு கடைக்குள்ளிருந்த அவரது நண்பர்கள் வெளியே ஓடிவருகின்றனர். அந்தத் தமிழர்களையும் கொன்று குவிக்கச் சிங்களவர் பாய்கின்றனர். ஆனால் அவர்கள் தப்பி விடுகின்றனர்.

அருகில் உள்ள காவல் நிலையத்திற்குச் சென்று கதறியிருக்கிறார்கள் தப்பிப் பிழைத்தவர்கள்! காவல்துறையினர் அதுபற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவே இல்லையாம்!

எப்படிக் கவலைப்படுவார்கள்? தமிழர்களை நிலைகுலையச் செய்து அடக்கி ஒடுக்கத் திட்டமிட்டுக் கொண்டு ஆட்சியாளர்களே வன்முறைகளுக்குத் தூபமிடுகின்ற அந்த தீவில் - பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகின்ற காரியம்தான் நடைபெறுகிறதே தவிர, சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுவதாக ஏமாளி கூட ஏற்றுக் கொள்ள இயலாது!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பகை மூட்டிட இடையில் யாரோ சதி செய்கிறார்கள் என்பதெல்லாம் இலங்கை அரசின் திசை திருப்பும் பேச்சேயாகும்!

இலங்கை அரசுதான், தமிழனை நாதியற்றவன் எனக் கருதிக் கொண்டு அவனைக் கொலை செய்து - மானபங்கம் செய்து - அடக்குமுறைக்கு ஆளாக்கி - அவன் உடமைகளை உருத்தெரியாமல் ஆக்கி - அழித்து ஒழித்து விடலாம் எனத் திட்டம் வகுத்திருப்பதைப் போல் தெளிவாகத் தோன்றுகிறது!

தமிழர் நூல் நிலையங்கள் தீக்கிரை - ஆலயங்கள் சேதம் - தமிழர்கள் படுகொலை - கற்பழிப்பு - இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்தைக் கழுவில் ஏற்றிக் கொல்ல வேண்டும் என்று இலங்கை நாடாளுமன்றத்திலே ஆளுங்கட்சியின் ஆணவப்பேச்சு -

தமிழனைக் கண்டாலே கொல்வது என்ற திட்டத்திற்கு உதாரணமாக - இதோ தனபதியின் உயிர்ப் பலி!

இவ்வளவும் செய்துவிட்டு இலங்கை அரசு, சாகச நாடகம் ஆடுகிற தென்றால் -

தமிழன் நாதியற்றவனா?

- என்ற கேள்விக்கு விடைகாண வேண்டிய விரைவு மிகுந்த கட்டம் வரத்தான் போகிறது!

வரத்தான் வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(27-08-1981)

953. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

உடன்பிறப்பே,

- அவர்களிடம் எந்தப் பொருளையும் விலை கொடுத்து வாங்கக் கூடாது!
- அவர்களுக்கு எந்தப் பொருளையும் விற்கக்கூடாது!
- அவர்களில் டாக்டர்களாயிருப்பவர்களிடம் சிகிச்சைக்குச் செல்லக் கூடாது!
- அவர்களில் வழக்கறிஞராயிருப்பவர்களையும் வழக்குகளுக்கு நாடக் கூடாது!
- அவர்களில் பொறியாளர்களாக இருப்பவர்களிடம் அணுகக் கூடாது!
- அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக் கூடாது!
- அவர்களுக்கு நிலத்தை விற்கக் கூடாது!
- அவர்கள் விளைவித்ததை வாங்கக் கூடாது!
- அவர்களுக்கு விதைகளை விற்றிடக் கூடாது!
- அவர்களிடம் அடமானம், கடன் போன்ற காரியங்கள் எதிலும் தொடர்பு கொள்ளக் கூடாது!

இப்படிப் பத்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன! எங்கேயென்று தெரிந்து கொள்வதற்கு முன்பு அவர்கள் என்று குறிப்பிட்டிருப்பது யாரையென்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

அவர்கள் என்பது, தமிழர்களையும் முஸ்லிம்களையும் குறிப்பதாகும்!

இந்த விளக்கத்திற்குப் பிறகு - மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேதனை தரும் பத்துக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள இடம்

இலங்கைத் தீவுதான் என்பதை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

A Way to fight "EELAM"

என்ற தலைப்பில், சிங்களவர்கள் வெளியிட்டுள்ள துண்டு அறிக்கையில்தான் இந்தப் பத்துக் கட்டளைகள் அச்சியற்றப்பட்டுள்ளன.

அந்தத் துண்டு அறிக்கையின் முகவுரையாக எழுதப்பட்டிருக்கிற வாசகங்கள், பயங்கரமானவை! சிங்களவர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும் நஞ்சினை உலகிற்கு உணர்த்தக் கூடியவை! இதோ, அந்த வரிகள்!

ஈழம் வேண்டுமென்ற கூப்பாடு, கண்டிக்கத்தக்க ஒன்று!

நேரிடையான பகைவர்கள் - மறைமுகமான பகைவர்கள் - அதாவது தமிழர்களும் முஸ்லிம்களும் ஆகிய இரு சாராரையும் ஒரேயடியாக ஒழித்துக் கட்ட வேண்டும். இந்தப் பொதுவான காரியத்தை யொட்டி அனைத்துச் சிங்களவர்களும் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுதான்!

நம்முடைய கோரிக்கையில் வெற்றிபெற நாம் ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்த வேண்டாம்! தமிழ் ஈழத்தை எதிர்க்கக் கூடிய உறுப்பினர்களை தேசியப் பேரவைக்கும், மற்ற ஜனநாயக அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கக் கூடிய காலம் வரும் வரையில் முழுமையான பொருளாதாரத் துறைப் புறக்கணிப்பு மூலம் தமிழர் முஸ்லிம் ஆகிய இரட்டை எதிரிகளை முறியடிப்போம்

இந்த முகவுரையைத் தொடர்ந்துதான், சிங்களவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது பத்து அம்சத் திட்டத்தை அந்த துண்டு அறிக்கை, பிரகடனப்படுத்துகிறது.

எத்துணைச் சீற்றமும் வெறித்தன்மையும் வெறுப்பும் கலந்த தாக்குதல்களுக்கு இலங்கைத் தமிழர்கள் ஆளாகி வருகிறார்கள் என்பதற்கு இந்தத் துண்டு அறிக்கை மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

"The cry for Eelam is ridiculous and it is time all Sinhalese united in one common cause to stamp out for all time this twin cause, the known and unknown enemies, namely the Tamils and Muslims"

சிங்களவர் ஒன்றுபடுதல் - தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒழித்துக் கட்டிப் பூண்டற்றுப் போகச் செய்தல்! இது இலங்கையில் தீட்டப்பட்டுள்ள திட்டம்!

இந்தத் திட்டம் நிறைவேற சிங்களவர் ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்திடக் கூடாதாம்!

அங்கு தவித்திடும் தமிழர்களும், இங்கிருந்து சென்றிடும் தனபதிகளும் மட்டுமே ரத்தம் சிந்தி மாண்டிட வேண்டுமாம்!

ஆதிக்கவாதிகளின் பலமுனை ஆக்கிரமிப்புக்களால் தேய்ந்து தேய்ந்து மேலும் தேய்ந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்கு விமோசனமே கிடையாதா என்ற கேள்வி, பெரு மூச்சுடன் வெளிப்பட்டு கண்ணீரால் குளிப்பாட்டப்படுவதைக் கண்ட பிறகாவது - தூங்கிடும் தமிழன் விழித்துக் கொள்ள மாட்டானா?

இந்தக் கேள்வியின் விளைவுதான் இன்று 29-8-81 காலை பத்து மணிக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் சீத்தாபதி எம்.எல்.சி., தலைமையில் என்.வி.என். சோமு எம்.எல்.ஏ., புருடோத்தமன் எம்.எல்.ஏ., மாணவர் அணி செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற இருக்கிற அடையாள மறியல்!

அறவழி!
அமைதிவழி!
அண்ணாவழி!

அவ்வழி பிறழோம் என்பதற்கு அடையாளமாக அண்ணா சிலையிலிருந்து, அண்ணா சாலை வழியாக!

இலங்கையில் தமிழர்கள் மீது விழும் ஒவ்வொரு அடியும் நமது நெஞ்சில் இடியாக விழுகிறது!

இலங்கையில் கொல்லப்பட்ட பத்து தமிழர்களின் பிணங்கள் வேதாரண்யம் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதாக எனக்கு நண்பர் மீனாட்சிசுந்தரம் கொடுத்துள்ள தந்தி குறித்து நமது பேராசிரியர் சட்ட மன்றத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியையும் நீ அறிவாய்!

கல்லால் தாக்குண்ட குழந்தை தாயின் முகத்தைப் பார்த்துக் கதறியழுவதைப் போல் இலங்கைத் தமிழ்க்குலம் அழுகிறது!

அதனை வேடிக்கை பார்த்திடும் வீணர் கூட்டமல்ல இங்குள்ள தமிழர் கூட்டம் என்பதை எடுத்தியம்பிடவே அறப்போர் - அடையாள மறியல்!

துளியளவு வன்முறைக்கும் இடமின்றி - துன்பங்களைத் தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளும் தியாக உள்ளத்துடன் அடையாள மறியலுக்கு அணிவகுப்போர்,

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

என்று பாடிய பாவேந்தர் கவிதையைச் செயல்படுத்திக் காட்டிடுவீர்!

அன்புள்ள,

மு. க.

(29-08-1981)

954. உணர்வைப் புரிந்து கொள்க!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவரகத்தின் முன்பு மறியல் அறப்போர் நடத்தப் போவதாக அறிவித்ததை கருணாநிதியின் பித்தலாட்டம் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசாங்கமும், மாநகராட்சியும் நடத்திய நிகழ்ச்சியொன்றில் பேசியதாக அவரது குடும்பப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அனைத்துக் கட்சிகளும் சேர்த்து அர்த்தால் நடத்தலாம் என்று பேரவையில் முடிவெடுத்திருக்கும்போது தி.மு.கழகம் இப்படியொரு மறியலை நடத்துவதா? என்று அரசு விழாவில் முதலமைச்சர் கேட்டிருக்கிறார்.

அரசு விழா நிகழ்ச்சி! கழக எம்.பி. கலாநிதியும் கலந்து கொண்ட விழா! அந்த நிகழ்ச்சியில்தான், முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நாகரிகமாக நடந்து கொண்டிருக்கிறார்.

அப்படியொரு நாகரிகத்தை அவரிடம் எதிர்பார்க்க முடியாதுதான்!

அன்னை மணியம்மையார் அவர்களை மேடையிலே உட்கார வைத்துக்கொண்டே, பெரியார் சிலை திறப்பு விழாவின்போது பெரியாரின் கொள்கைக்கும் பெரியார் வலியுறுத்திய சமத்துவ உரிமைக்கும் வேறுபாடு தெரியாமல் பெரியாரையே கேலி பேசியவரல்லவா?

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க முடியும்!

அர்த்தால் பற்றி முடிவெடுக்க எதிர்க்கட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதினோம். பதில் எழுதவில்லை. மறியல் நடத்துவதாக

அறிவிக்கிறார்கள். ஒரு எதிர்க்கட்சி செய்யும் காரியமா இது? இலங்கைத் தூதரகம் முன் மறியல் என்பது கருணாநிதியின் பித்தலாட்டம்.

முதலமைச்சரின் விமரிசனமும், வியாக்யானமும் அவருடைய அதிகார பூர்வமான கட்சி ஏட்டில் வந்துள்ளதைத்தான் அப்படியே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

ஆனால் உண்மை என்ன? இலங்கைப் பிரச்சினை குறித்த தீர்மானம் சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்டது 22-8-81 என்ற நாளில்! அர்த்தால் நடத்தலாம் என்று முதல்வர் யோசனை தெரிவித்து அதனை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டதும் அதே நாளில்தான்!

பிறகு இரண்டு மூன்று நாட்கள் அரசின் சார்பில் எந்தத் தாக்கீதும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வரவில்லை!

இதற்கிடையே இலங்கை சென்ற தமிழ்நாட்டு வாலிபர் தனபதி இலங்கையில் சிங்கள வெறியர்களால் கோடரி கொண்டு பிளக்கப்படுகிறார்.

(இதைக் குறிப்பிட்டால் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், விழுந்தது எங்கள் பிணம்! எங்களுக்கில்லாத அக்கறை - உங்களுக்கேன் வந்தது? என்று கோபித்துக் கொள்கிறார்.)

தமிழர்களுக்கு இலங்கையில் இழைக்கப்படும் கொடுமைக்குத் தனபதி கொலை செய்யப்பட்டது ஒன்றே போதுமான சான்று என்று சுட்டிக்காட்டி, 25-8-81 அன்று நான் பேரவையில் பிரச்சினை எழுப்பினேன்.

அப்போது முதல்வரும் இருந்து அது குறித்து பதில் அளித்திருக்கிறார்.

அடுத்த சில விநாடிகளுக்குள்ளேயே பேரவையில் இருந்த எல்லாக் கட்சித் தலைவர்களிடமும் கலந்து பேசி - (அவையிலேயே) எந்தத் தேதியில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அர்த்தால் தேதி பற்றி முடிவு செய்யலாம் என்று முதல்வரோ அல்லது அவை முன்னவரோ கேட்டிருக்கலாம்!

ஆனால் என்ன நடந்திருக்கிறது!

அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 26-ஆம் தேதி வைத்துக் கொள்ளலாமா என அறிந்து கொள்ள முதல்வர் விரும்புகிறார் என ஒரு அதிகாரி கடிதம் எழுதி, அந்தக் கடிதம் 26-ஆம் தேதி மாலையில்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்கிறது.

சட்டப் பேரவையிலேயே நேருக்கு நேராகப் பேசி, ஒரு வசதியான தேதியைக் குறித்துக் கொண்டு அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து முடிவெடுக்கும் கூட்டத்தை நடத்துவதற்குப் பதிலாக, தலையைச் சுற்றிக்கொண்டு மூக்கை விரலால் தொடுகிற காரியத்தை மேற்கொண்டவர்கள் யார்?

அரசினரா?
அல்லது அனைத்துக் கட்சித்
தலைவர்களா?

அர்த்தால் என்று அவையில் அறிவித்துவிட்டு, அதற்குரிய முறையான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முனைந்திடாத நிலையில் இலங்கையில் தமிழனைக் கொன்று அவன் மாமிசத்தை விலை கூறி விற்கிறார்கள் என்ற கோரச் செய்திகள்; தமிழ்நாட்டு ஏடுகளில் வெளி வந்ததைக் கண்டபிறகும் - இங்குள்ள தமிழர்களின் இரத்தம் கொதிப்படையாமல் ஆமைகளாய் ஊமைகளாய் இருந்திட இயலாது என்பதின் அடையாளம்தான் தி.மு.க. நடத்திய ஒருநாள் அடையாள மறியல்!

அந்த மறியலின் அடிப்படை உணர்வைப் புரிந்து கொள்ளாமல் எம்.ஜி.ஆரின் பத்திரிகை மறியலைக் கேலி செய்தும், போலீசாரைக் கண்டு தி.மு.க. தொண்டர்கள் ஓட்டமெடுத்தனர் என்றும், ஏகடியம் புரிந்தும் செய்தி வெளியிட்டிருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆளுங்கட்சிக்குரிய அக்கறையைத்தான் வெளிப்படுத்துகிறது.

இலங்கையில் விழுந்த தனபதியின் பிணம் எங்கள் பிணம் - நாங்களே சும்மாயிருக்கும் போது உங்களுக்கென்ன வந்தது?

என்று ஒரு அமைச்சரே அவையில் பேசுகிறார் என்றால், இதைவிட வேதனை வேறென்ன இருக்க முடியும்!

பதினேழு லட்ச ரூபாய் கட்டிடத்தைத் திறக்கப் பல லட்ச ரூபாய் செலவில் விழா ஏற்பாடுகளை நடத்தி - அந்த அரசாங்க விழாவில் தி.மு.கழகம் இலங்கைப் பிரச்சினைகளுக்காக நடத்தும் கண்டன ஊர்வலம், மறியல் ஆகியவற்றைக் குறித்து விமர்சித்தும், எந்தக் கட்சித் தலைவர்களுக்கும் உரிய நேரத்தில் போய்ச் சேரமுடியாத அளவுக்கு அரசின் சார்பில் எழுதிய கடிதத்தைப் பற்றி விளக்கவுரை அளித்தும் - அரசு நிகழ்ச்சியை அரசியல் நிகழ்ச்சியாக மாற்றிய முதலமைச்சரைத் திருத்துவது என்பது முயற்கொம்பே!

அன்புள்ள,

மு. க.

(31-08-1981)

955. அமைதியாகத் தொடரட்டும் அறப்போர்!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழகத்தில் ஆளுங்கட்சியும் இணைந்து நடத்தும் முழு அடைப்பு (அர்த்தால்) இத்திங்கள் எட்டாம் நாள் நடைபெறுமென்று நாள் குறிக்கப்பட்டதை ஆகஸ்டு 31-ஆம் நாள் மாலையிலேயே பம்பாயில் இருந்த நான் அறிந்து கொண்டு, அன்று பம்பாய் சண்முகானந்தா அரங்கில் நடைபெற்ற தமிழ்ப் பேரவை ஆண்டு விழாவில் தமிழக ஆட்சியாளருக்குப் பாராட்டு தெரிவித்துப் பேசியிருக்கிறேன்.

இலங்கையில் கொடுமைக்கு ஆளாக்கப்படும் தமிழர்களைக் காப்பதற்கு தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் தனித் தனியாகக் குரல் எழுப்பிடுவதும் ஒன்றுபட்டு அர்த்தால் நடத்திடுவதும் இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய வலிவை வழங்குவதோடு ஆறுதலையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த கால நிகழ்ச்சிகளை - கட்சிமாச்சரியங்களை - இலங்கைப் பிரச்சினைக்காக மறந்து விட்டு இங்குள்ள தமிழர்கள் ஒன்றாக அணிவகுத்திடும் நேரத்தில் நாம் கொண்டுள்ள மகிழ்ச்சியும் எழுச்சியும் ஒருக்கணம் மறைந்திடும் விதத்தில் தமிழக ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை!

சென்னை பல்கலைக் கழகத்திற்கும், அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கும் செனட் உறுப்பினர்களின் பதவிக்கால வரம்பு கட்டப்படும் சட்டம் கொண்டு வரப்படாமல் நமது நண்பர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களை மனதில் வைத்து மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும்

சட்டம் கொண்டு வரப்பட்டதைப் போலத்தான் - இலங்கைப் பிரச்சினைக்காக தூதுவரகத்தின் முன்னே ஆர்ப்பாட்டம் செய்த கட்சிகள், உண்ணாவிரதம் இருந்த கட்சிகள், அமைப்புகள், ஆகியவற்றின் மீது மேற்கொள்ளாத நடவடிக்கைகளை இந்த அரசு, தி.மு.கழகத்தினர் மீது மட்டும் மேற்கொண்டு - முன்கூட்டியே கைது, கைது செய்யப்பட்டவர்களில் பத்து மகளிர் உட்பட நூற்றி ஐம்பத்தி ஏழு பேர் மீது ரிமாண்டு, மத்திய சிறைச்சாலையில் அடைத்தல், பல பிரிவுகளில் வழக்குகள், என்று அறிவித்துச் செயல்படுகிறது!

அரசும் இணைந்து நடத்துகிற அர்த்தால் அறிவிக்கப்பட இருப்பதால் - அதற்கிடையே தி.மு.கழகம் அறப்போரில் அதுவும் ஒருநாள் அடையாளமாக அறப்போரில் ஈடுபடக்கூடாதாம்!

அது மாபெரும் பாதகச் செயலாம் - அதாவது தி.மு.கழகம் அப்படியொரு அடையாள மறியலை நடத்துவதால் அதனை ஆட்சியாளரால் பொறுத்துக் கொள்ள முடியாதாம்!

அர்த்தால் நடக்குமென அவையில் அறிவித்த பிறகு மற்ற கட்சிகள், இலங்கைப் பிரச்சினைக்காகக் கண்டனக் கூட்டங்கள் நடத்தலாம்! ஆர்ப்பாட்டங்கள் நடத்தலாம்! உண்ணாவிரதம் நடத்தலாம்!

தி.மு.கழகம் மட்டும் அந்தத் திக்கு நோக்கிச் செல்லக் கூடாதாம்!

ஏனென்றால் இருபதாண்டுக் காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொண்டு சிங்கள வெறியர்களுக்கு எதிராக முழக்கமிடும் இயக்கமல்லவா தி.மு.கழகம்; அதனால் அந்தக் கழகம் தனியாகச் சிங்கள வெறியரை எதிர்த்து எந்தக் குரலும் எழுப்பக் கூடாதாம்!

இப்படியொரு அநீதியை நீதியெனக் கூறிக்கொண்டு சட்டமும் ஒழுங்கும் - தனது பாய்ச்சலை நமது கழகத்தின் மீது நடத்துவதை நாட்டுக்கு உணர்த்திடும் பொறுப்பு நமக்கு உண்டு!

அந்தப் பொறுப்பினை நிறைவேற்றவே, செப்டம்பர் மூன்றாம் நாள் முதல் நமது அறப்போராட்டம் தொடங்குகிறது.

ஒவ்வொரு நாளும் கழக முன்னணியினர் தலைமையில் கழகச் செயல்வீரர்கள், அரசின் தடையை மீறி அறப்போரில் ஈடுபடுவர்!

சிங்களவரால் சீரழியும் தமிழர்களுக்காக, நாம் இங்கே சிறையினில் தவம் இருப்போம்!

சிறையில் இருக்கும் உடன்பிறப்புகளையும் - சிறையேகிட அணிவகுக்கும் உடன்பிறப்புகளையும் வாழ்த்துகிறேன்!

உங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பினை நானும் பெற இருப்பதை எண்ணி மகிழ்கிறேன்!

அமைதிக்கு அணுவளவும் குந்தகம் நேர்ந்திடாதவாறு நமது அறப்போர் தொடரட்டும்!

அன்புள்ள,

மு. க.

(03-09-1981)

956. தனபதி குடும்பநிதி

உடன்பிறப்பே,

இலங்கையில் கொலை செய்யப்பட்ட சென்னையைச் சேர்ந்த தனபதி குடும்பத்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி மூவாயிர ரூபாய் நிதி செய்ய முன்வந்தார். ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள தனபதியின் குடும்பத்தினர் மறுத்து விட்டனர். கட்சியின் சார்பில் பத்தாயிர ரூபாய் வசூல் செய்து அதில் மூவாயிர ரூபாய் கொடுக்க முன் வந்தார். அதில் கூட ஏழாயிர ரூபாயைச் சாப்பிடத் துணிந்து விட்டார்.

இப்படிப் பேசியது யார் தெரியுமா? எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள்தான்!

அவரது இந்த நரகல் நடைப் பேச்சு தினத்தந்தி சென்னைப் பதிப்பில் வெளி வந்திருக்கிறது.

கடந்த திங்கள் ஆகஸ்டு 31-ஆம் நாள் பம்பாய் தமிழ் அகாடமியின் முதலாண்டு விழா நிகழ்ச்சி, பம்பாய் சண்முகானந்தா அரங்கில் நடைபெற்றது. அந்தத் தமிழ் அகாடமிக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வணிகத் துறையிலும், ஏர் இந்தியா போன்ற அலுவலகங்களிலும் பணியாற்றுகிற தமிழர்கள் ஒன்று சேர்ந்து நடத்துகிற அமைப்புதான் அந்தத் தமிழ் அகாடமி! கட்சிச் சார்பற்ற முறையில் செயல்பட்டு வருகிற அந்தத் தமிழ் அகாடமி விழாவில் நுழைவுக் கட்டண நன்கொடைச் சீட்டுகளின் மூலம் இருபத்தைந்தாயிர ரூபாய் வசூலாயிற்று என்று அறிவிக்கப்பட்டது. அந்த வசூல் கணக்கும் அதில் மிஞ்சுகின்ற தொகையும் பம்பாயில் உள்ள அந்தத் தமிழ் அகாடமியின் பொறுப்புக்கு உட்பட்டதாகும். அந்த நிகழ்ச்சியில் அகாடமி சார்பில் தனபதி குடும்பத்திற்கு ஆயிர ரூபாய் நிதியை வழங்குமாறு என்னிடம் அளித்தார்கள். அதே மேடையில் பம்பாய் தி.மு.கழகத்தின் சார்பில் இரண்டாயிர ரூபாய்

நிதியை என்னிடம் தந்து இலங்கையில் படுகொலைக்கு ஆளான தனபதி குடும்பத்திற்கு கொடுத்துவிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

பம்பாய் நிகழ்ச்சிகள் முடிவுற்று மறுநாள் செப்டம்பர் முதல் நாள் காலை விமானத்தில் சென்னை திரும்பினேன். கழகப் பொருளாளர் சாதிக் அவர்களிடம் அந்த மூவாயிர ரூபாயையும் கொடுத்து அதனைத் திருவொற்றியூரில் உள்ள தனபதி குடும்பத்தாரிடம் சேர்த்து விடுமாறு கேட்டுக் கொண்டேன். அவரும் மா.வெ. நாராயணசாமியும் மாவட்டச் செயலாளர் ஆறுமுகமும், நகரச் செயலாளர் பழனிச்சாமியும் மற்ற நண்பர்களும் சென்று மறைந்த தனபதியின் துணைவியாரிடம் அந்தத் தொகையை செப்டம்பர் முதல் நாள் மாலையிலேயே அளித்து, அதற்கான கையெழுத்தையும் பெற்றுள்ளனர்.

அன்னையார் சோகமே உருவாக நின்று, தனபதியின் துணைவியார் அமுதா அவர்கள் கண்கலங்கிட அந்த நிதியை நன்றியுணர்வுடன் பெற்றுக் கொண்ட காட்சி புகைப்படமாக மறுநாளே தினகரன் இதழில் வெளிவந்துள்ளது. அந்தப் படத்தையும், தனபதியின் துணைவியார் அமுதா அவர்கள் நிதியைப்பெற்றுக் கொண்டதற்கான கையெழுத்திட்ட தாளையும் இத்துடன் இணைத்திருக்கிறேன்.

கொடுத்த நிதியை தனபதியின் குடும்பத்தினர் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள் என்று எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் நெல்லையில் பேசியிருப்பது எவ்வளவு பச்சைப் பொய் என்பது உனக்கும் ஊருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விபரங்களையெல்லாம் தெரிவிக்க வேண்டி வந்தது!

உதவி நிதியை நன்றி கூறிப் பெற்றுக் கொண்டது மாத்திரமல்ல; அடுத்து இரண்டொரு நாட்களுக்கெல்லாம் தனபதியின் நினைவுச் சடங்கிற்கான அழைப்பை அவரது சகோதரரே தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து எங்களிடம் கொடுத்து விட்டு அன்பினை வெளிப்படுத்தி விட்டுச் சென்றார்.

அதற்குப் பிறகு நடைபெற்றது என்னவென்று எனக்குத் தெரியாது! மூவாயிர ரூபாய் நிதியை அந்தக் குடும்பத்தினர் திருப்பி அனுப்பிவிட்டனர் என்று செய்திகள் வெளியிடப்பட்டன.

அதைத் தொடர்ந்து எம்.ஜி.ராமச்சந்திரன், நெல்லையில் இப்படியொரு அபத்தமான சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார்.

பெற மறுத்துவிட்டனர் என்று அவர் கூறியதற்கும் - பெற்றுக் கொண்டதை ஒரு வாரம் கழித்துத் திருப்பி அனுப்புவதாகச் செய்தி தருவதற்கும் இடையிலே என்ன நடந்திருக்கும் என்பது அவரவர் யூகங்களுக்கே விடப்படுகிறது!

நெல்லை அ.தி.மு.க. மாநாட்டில் இருபத்தி ஐயாயிர ரூபாய் தனபதி குடும்பத்திற்குத் தரப்பட்டுள்ளது.

அப்படி நிதி வழங்கியதோடு நிறுத்தாமல், கருணாநிதி கொடுத்ததை வாங்க மறுத்து விட்டார்கள் என்றும் பத்தாயிரம் வசூலித்து அதில் ஏழாயிரத்தைச் சாப்பிடத் துணிந்து விட்டார் என்றும் சந்துமுனைச் சிந்துபாடி போல எம்.ஜி.ராமச்சந்திரன் ஜீரணமாகாத வார்த்தைகளை வாந்தியெடுத்திருப்பது தினத்தந்தி ஏட்டில் அள்ளிக் கொட்டப்பட்டிருக்கிறது.

பிளண்டிங் யூனிட் என்றும் பாட்லிங் யூனிட் என்றும் மாவட்ட மொத்த வியாபார மது உரிமங்கள் என்றும் ஊழல் நடத்தி அதில் வசூல் மன்னனாகத் திகழ்ந்து பஸ் முதலாளிகளிடம் கையூட்டுப் பெற்று சலுகைகளை வழங்கி அதிலும் வசூல் மன்னனாக விளங்கி, ஊரும் உலகமும் சிரித்திடுமளவுக்கு லஞ்சலாவண்ய அவதாரம் எடுத்திருப்பவர்கள்; இப்படிப்பட்ட தரக்குறைவான பேச்சுக்களின் வாயிலாகத் தங்களை உத்தமபுத்திரர்கள் என்று காட்டிக் கொள்ள முனைகிறார்கள் என்பது புரிகிறதல்லவா?

தனபதி குடும்ப நிதியென்று தி.மு.கழகத்தின் சார்பில் எவரிடமும் வசூல் செய்யப்படவுமில்லை! அப்படியொரு அறிவிப்பு தரவுமில்லை!

பம்பாய் தமிழ் அகாடமி ஆண்டு விழாவுக்குச் சென்ற நேரத்தில் பம்பாயில் உள்ள தி.மு.கழகத்தினரும், தமிழ் அகாடமியைச் சேர்ந்தவர்களும் மூவாயிர ரூபாயை தனபதி குடும்ப நிதியாக மேடையில் அறிவித்து என்னிடம் தந்தார்கள்; அவ்வளவுதான்!

நிதியை நன்றியுணர்வோடு பெற்றுக்கொண்ட தனபதி குடும்பத்தினர் ஒரு வாரம் கழித்து அதனைத் திருப்பி அனுப்புவதாக அறிவித்துள்ளனர்.

அவர்களுக்கு இடையிலே ஏற்பட்ட தொல்லை என்ன என்பது எம்.ஜி.ராமச்சந்திரனை அறிந்தவர்களே புரிந்து கொள்ள முடியும்.

தனபதி இலங்கையில் கொல்லப்பட்ட செய்தி கிடைத்ததும் அது குறித்துச் சட்டப் பேரவையில் குரல் எழுப்பி விளக்கம் கேட்டவன் நான்!

கண்ணீர்மல்க முரசொலியில் கடிதம் எழுதியவன் நான்!

இலங்கையில் விழுந்தது எங்கள் கட்சிக்காரன் பிணம்! நாங்களே சும்மாயிருக்கும் போது உங்களுக்கேன் அக்கறை? என்று பேரவையில் ஒரு அமைச்சரே கேட்டார்!

பரவாயில்லை; உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு மூவாயிர ரூபாய் தந்த காரணத்தால் - அவர்களுக்கு இப்போது இருபத்தையாயிர ரூபாய் கிடைத்திருக்கிறது!

திருப்பி அனுப்ப வேண்டிய நெருக்கடி தனபதி குடும்பத்திற்கு ஏற்பட்டு விட்டதே என்ற வருத்தம் நமக்கிருந்தாலும்கூட, நம்மால் அந்தக் குடும்பத்திற்கு இருபத்திஐயாயிரம் கிடைத்ததே என்ற ஆறுதலும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படாமல் இல்லை!

அன்புள்ள,

மு. க.

(08-09-1981)

957. உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழ் இனம் கொடுமைப்படுத்தப்படுவதையும் - கொலை செய்யப்படுவதையும் - மானபங்கப்படுத்தப்படுவதையும் - உடமைகள் சூறையாடப்படுவதையும் - அவர்தம் ஆலயங்கள், நூல் நிலையங்கள் நாசமாக்கப்படுவதையும் கண்டித்து ஒரு நாள் அடையாள மறியல் - ஆம்; ஒரே ஒரு நாள் மட்டும் அடையாள மறியல் - இலங்கைத் தூதுவரகத்தின் முன்னால் நடத்துவதென்று அறிவித்துச் செயல்பட முனைந்தது சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகம்!

ஒரு நாள் அடையாள மறியல் என்றால் மறு நாள் மறியல் தொடராது என்றுதான் அர்த்தம்!

ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் என்றால் மறு நாள் அந்த உண்ணாவிரதம் தொடராது என்றுதான் பொருள்!

ஆகஸ்டு 29-ஆம் நாள் சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவரகத்திற்கு முன்பு மறியல் செய்யச் சென்றவர்களை - அவர்கள் ஊர்வலம் தொடங்கிய அண்ணா சிலைக்கு அருகிலேயே கைது செய்து - அவர்கள் மீது பல பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து - ரிமாண்டு பெற்று - மத்திய சிறையில் வைத்தது எம்.ஜி.ஆர். அரசு!

அதற்கு அடுத்த நாள் தூதுவர் அலுவலகத்திற்கு எதிரிலேயே தடையைமீறி உண்ணாவிரதம் இருக்க முனைந்த இளைஞர் காங்கிரஸ் நண்பர்களை கைது செய்த இந்த அரசு, அவர்களை அன்று மாலையிலேயே விடுதலை செய்து விட்டது!

அவர்களை ஏன் விடுதலை செய்ய வேண்டும் என்பது நமது கேள்வியல்ல!

நாம் உணர்த்த விரும்புவதெல்லாம் மாவட்டச் செயலாளர் சீதாபதி எம்.எல்.சி. தலைமையிலும், என்.வி.என். சோமு எம்.எல்.ஏ., புருடோத்தமன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையிலும் நூற்றி

ஐம்பதுக்கு மேற்பட்ட கழகக் கண்மணிகள் (பத்து மகளிர் உட்பட) தடையை மீறி ஊர்வலம் நடத்தினர்; அதே போல் இந்திரா காங்கிரஸ் இளைஞர்கள் தடையை மீறி உண்ணாவிரதத்திற்கு உட்கார முனைந்தனர்; இந்தப் பிரச்சினையில் எம்.ஜி.ஆர். கையில் உள்ள சட்டம், இரட்டை வேடம் தாங்குவானேன் என்பது தான்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இங்குள்ள ஆளுங்கட்சியும் மற்ற கட்சிகளும் ஒரே விதமான கருத்துக் கொண்டிருக்கும் போது ஒருநாள் அடையாள மறியலுக்காக ஊர்வலம் புறப்படவே தடை விதித்துவிட்டு அதனை மீறியவர்களைக் கைது செய்து - வழக்குத் தொடுத்து சிறையில் வாட்டுவது என்றால்; இது - வேண்டுமென்றே நமது கழகத்தின் மீது மட்டும் காட்டப்படுகிற காழ்ப்புணர்ச்சியும் பழிவாங்கும் நோக்கமும் என்பதைத் தவிர வேறென்ன?

அடையாள மறியல் என்றால் அர்த்தம் புரியாதவர்களா ஆட்சி நடத்துகிறார்கள்?

மறியல் செய்தால் கைது செய்யாமல் இருக்க முடியுமா?

கைது செய்தது சரி! மறுக்கவில்லை! இலங்கையில் உள்ள தமிழனைச் சிங்களவன் கொடுமைப்படுத்துகிறான், இங்குள்ள தமிழனை நான் கொடுமைப்படுத்துகிறேன் என்பது போல் அல்லவா கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு தொடர்ந்து அவர்களைச் சிறையில் பூட்டியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

செப்டம்பர் மூன்றாம் தேதி முதல் தொடர் மறியல் நடைபெறும் என்று அறிவிக்க வேண்டிய அவசியம் ஏன் கழகத்திற்கு ஏற்பட்டது?

ஆகஸ்டு 29-ஆம் நாள் கழக ஊர்வலத்திற்குத் தடை விதித்தது ஏன்?

ஒரே நாள் அடையாள மறியல் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தும் - கைது செய்யப்பட்ட கழக உடன் பிறப்புக்களைத் தொடர்ந்து ரிமாண்டில் வைத்து வழக்குத் தொடர வேண்டிய அவசியம் என்ன?

அரசு ஆணைகளை எத்தனையோ அமைப்புகள்; ஏன் - அரசு ஊழியர்களே கூடப் பொது இடங்களில் கொளுத்திய போது சும்மாயிருந்த எம்.ஜி.ஆர்.; நமது கழகத்தினர் அரசு ஆணையைக் கொளுத்திய போது மட்டும் சட்டத்தை மிகக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு அனைவரையும் கைது செய்து சிறைச்சாலைகளில் அடைத்து வழக்குகளைத் தொடரவில்லையா?

இப்போதும் நெல்லையில் நடைபெற்ற அவரது கட்சி மாநாட்டில் என்ன பேசியிருக்கிறார்?

மறியலின் போது கருணாநிதியைத் தள்ளிக் கொண்டு பணியாளர்கள் போவார்கள். கருணாநிதியுடன் செல்பவர்கள் சும்மா இருப்பார்களா? என்னை யாராவது தள்ளிக் கொண்டு போனால் நீங்கள் சும்மா இருப்பீர்களா? அது போலக் கருணாநிதியைத் தள்ளும் போது யாரும் பார்த்துக் கொண்டிருப்பார்களா? அதுவும் வன்முறையில் அனுபவப்பட்டவர்கள். கருணாநிதி என்ன நினைக்கிறார். நாட்டில் குழப்பம் ஏற்படுத்த நினைக்கிறார். போலீஸ் துப்பாக்கிச் சூடு வரையில் நடக்கலாம். அப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு முழுப் பொறுப்பும் கருணாநிதிதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். எந்த அளவுக்கு திட்டம் தீட்டியிருக்கிறார் என்பது அவரது திருநெல்வேலிப் பேச்சிலிருந்து புரிகிறதல்லவா?

மறியல் என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு மக்களை எப்படியெல்லாம் பயமுறுத்தி - அவர் நடத்த இருக்கிற துப்பாக்கி பிரயோகத்திற்கும் இப்போதே நியாயம் கற்பிக்கத் தொடங்கி விட்டார் பார்த்தாயா?

வேலூரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மறியல் நடைபெற்ற வரலாறுகள் எல்லாம் எம்.ஜி.ஆருக்குத் தெரியாது! மறந்து விட்டிருப்பார்!

அருகிலிருப்போர் நினைவூட்டல் வேண்டும்!

இலங்கைத் தூதுவராகத்திற்குச் செல்கிற பணியாளர்கள் என்னைத் தள்ளுவார்களாம்!

அப்படித் தள்ளுங்கள் என்று அந்தப் பணியாளர்களுக்கு முன்கூட்டியே சொல்லி வைத்துள்ளதைப் போல அல்லவா எம்.ஜி.ராமச்சந்திரன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்!

தடையை மீறிய இரண்டு கட்சித் தோழர்களில் - ஒரு கட்சியினரைக் கைது செய்து உடனே விடுதலை செய்துவிட்டு இன்னொரு கட்சித் தோழரை மட்டும் சிறையில் வைத்து வழக்குப் போடுவானேன்?

ஒரே ஒரு நாள் அடையாள மறியல் தானே! அதற்கு இப்படிப் பாரபட்சம் காட்டிப் பழிவாங்குவானேன்?

இந்தக் கேள்விகளின் விளைவுதான் செப்டம்பர் மூன்றாம் தேதி முதல் 15-ம் தேதிவரையில் தடை மீறி ஊர்வலமும் மறியலும் என்பதை எல்லாக் கட்சியினரும் - பொது மக்களும் உணர்ந்திருக்கும் போது - எம்.ஜி.ஆர். யாரை ஏமாற்றப் பார்க்கிறார்!

தூதுவரின் அலுவலகத்திற்கு நூறு கெஜ தூரத்திற்கு முன்பே உள்ள சாலையின் முனையிலேதான் மறியல் வீரர்கள் ஒவ்வொரு நாளும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

ஆனால் எம்.ஜி.ஆர். சொல்கிறார்; பணியாளர்கள் என்னைத் தள்ளுவார்களாம்! துப்பாக்கி ரவைகள் வெடிக்குமாம்!

அந்த ரவைகளில் ஒன்று என் தலையைப் பிளக்குமானால் - அண்ணா சிலையின் பாதங்களுக்கு அருகே அண்ணா பிறந்த நாளில் இந்த உயிர் பிரியுமானால் - அந்த முடிவை நான் யாசித்துப் பெறக்கூடியவன் என்பதை எம்.ஜி.ஆர். அறிய மாட்டார்!

ஆனால் என் இனிய உடன்பிறப்பே, நீ அறிவாய்!

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்காக ஒரே ஒரு நாள் அறப்போரில் ஈடுபட்டவர்களைச் சிறையில் அடைத்துப் பழி வாங்குவதையும் - அந்தச் செயலை கண்டித்துத் தொடர் போராட்டம் நடத்துகிறவர்களைச் சிறையில் தள்ளி வஞ்சம் தீர்த்துக் கொள்வதையும் கண்டித்தேதான் செப்டம்பர் 15-ஆம் நாள் நான் களம் புகுகிறேன்!

உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை! உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சிடப் போவதில்லை!

இருப்பது ஒரு உயிர்!
அது போவதும் ஒரு முறைதான்!
ஒரு நல்ல காரியத்திற்காக
அது போவது மகிழ்ச்சியே!

அண்ணாவின் இந்த வாசகம் என் இதயத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது!

இலங்கைத் தமிழர்களுக்காக, என் இனிய உடன்பிறப்புக்களின் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறையை எதிர்ப்பதற்காக தியாகம் செய்வதைவிட பெரும்பேறு வேறென்ன இருக்க முடியும்!

அன்புள்ள,

மு. க.

(09-09-1981)

958. விதூஷகர் - வேறு யார் கிடைத்திடுவார்!

உடன்பிறப்பே,

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று ஒரு வேடிக்கை மொழி, கிராமங்களில் பேசப்படும்!

அப்பனை யாரோ சிலர் துரத்திக் கொண்டு வந்தார்கள். துரத்தப்பட்டவன் ஓடிவந்து வீட்டுக்குள்ளிருந்த குதிருக்குள் ஒளிந்து கொண்டான். அதை அவன் மகன் பார்த்துக் கொண்டிருந்தான். பாவம்; அவன் கொஞ்சம் பற்றாக்குறை! துரத்தி வந்தவர்கள் அந்தப் பையனைப் பார்த்து; எங்கேடா உங்கப்பன்? என்று அதட்டினார்கள். பையன் வெடுக்கென்று விடையளித்தான்; எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்று! வந்தவர்கள், குதிருக்குள் இருந்தவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்! இது ஒரு துக்கடாக் கதை!

இப்போது ஏன் இந்தக் கதையைச் சொல்லுகிறாய் என்று கேட்கிறாயா? கடிதத்தை முழுவதும் படித்துப் பார்; உனக்கு விளக்கம் கிடைக்கும் - விலா நோகச் சிரித்திடுவாய்!

நெல்லை மாநாட்டில் நான் முதலமைச்சராய் இங்கே பேசவில்லை! உங்களில் ஒருவனாக, நண்பனாக இங்கே பேசுகிறேன் என்ற பீடிகையுடன் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையில் ஒரு பகுதியை இதோ அவரது கட்சி ஏட்டிலிருந்தே தருகிறேன்!

எனக்கு இலங்கையில் இருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அங்கே நடக்கும் கொலை பாதகச் செயல் அதில் விவரிக்கப்பட்டு இருக்கிறது. தப்பிப் பிழைத்த ஒருவர் அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். என் தந்தை கொலை செய்யப்பட்டிருக்கிறார். என் தாய் அவமானப்படுத்தப்பட்டு உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டது. இந்த நிலையில் நான் வெளியே ஓடிவந்து விட்டேன் என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட கடிதங்களையெல்லாம் வெளியிட்டு நாம் மக்களைத்

தூண்டுவதா? இதை எங்கே சொல்ல வேண்டுமோ - அங்கே சொல்லி அதற்கான நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம்

இது நெல்லை அ.இ.அ.தி.மு.க. மாநாட்டில் நண்பர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பேசியது. தந்தை கொலை! தாய்க்கு மானபங்கம்! உயிருக்கும் ஆபத்து! இப்படி எழுதப்பட்டுள்ள கடிதங்களையெல்லாம் வெளியிட்டு, நாம் மக்களைத் தூண்டலாமா? என்று எம்.ஜி.ராமச்சந்திரன் கேட்கிறார்!

வெளியிடலாமா என்று அவர் கேட்பது வெளியிடக் கூடாது என்ற கருத்துடன்!

ஆனால் அவரே அதை வெளியிட்டு கடிதங்களின் முக்கியமான பயங்கரச் செய்திகளையும் அறிவித்திருக்கிறார்!

மக்கள் இல்லாத இடத்திலா என்றால் அதுவுமில்லை! மாநாட்டில் மக்கள் குழுமியிருந்த இடத்திலே தான் வெளியிட்டிருக்கிறார் அந்த கடிதங்களில் வந்த செய்திகளை!

மாநாட்டில் வெளியிட்டது மாத்திரமா? அங்கே அவர் பேசியதை பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள்!

எங்கே, எப்போது, யாரிடம் சொல்லி, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அப்படி எடுக்க வேண்டுமே தவிர, இது போன்ற இலங்கைக் கடிதங்களை மக்கள் முன் வெளியிட்டு நான் மக்களைத் தூண்ட மாட்டேன்!

என்ற அற்புதக் கருத்தையுமன்றோ அருமை நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், அந்த மாநாட்டில் வழங்கியிருக்கிறார்!

வெம்மை கொளுத்துகின்ற வெஞ்சிறையில் வாழுகின்ற உடன்பிறப்பே! வெறுப்பு அரசியலை வளர்க்கின்ற கறுப்பு உள்ளங்களைக் கண்டு வெந்த மனங்கொண்டு வெளியில் உலவுகின்ற உடன்பிறப்பே! இடை இடையே இப்படிப்பட்ட நகைச்சுவைகளால் உன் களைப்பு தீர்ந்து களிப்பு ஏற்படுகிறதல்லவா? இத்தகைய நகைச்சுவைகளைத் தந்திட இவர் போன்ற அரசியல் விதூஷகர்; வேறு யார் கிடைத்திடுவார்!

இப்போது புரிகிறதா; எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற பழைய கதைக்குப் புதிய விளக்கம்!

அன்புள்ள,

மு. க.

(10-09-1981)

959. இடர், எதுவரினும் ஏற்பேன்!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு எடுத்துள்ள முடிவும் - அந்த முடிவினை எடுப்பதற்கான விளக்கமும் - உனக்குக் கிடைத்து அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும்.

செப்டம்பர் 15-ஆம் நாள் மாநிலத் தலைநகராம் சென்னையில் மட்டுமின்றி, மாவட்டத் தலைநகர்களிலும் ஆயிரக்கணக்கானோர் மறியலில் ஈடுபடுவதென்ற நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அடக்குமுறையை எதிர்த்து சிறை புகுவது - தியாகம் புரிவது என்றாலும் ஆட்சிமன்றம் செல்வது என்றாலும் இரண்டையும் சமமாகக் கருதக்கூடிய உறுதி படைத்தவர்கள் என் தம்பிமார்கள். என்று அண்ணன் அடிக்கடி கூறுவார் அல்லவா - அந்த அண்ணன் பிறந்த நாள் விழாவிலேதான் நமது அறப்போர், மாவட்டத் தலைநகரங்களில்! தமிழகத் தலைநகரில்!

உரிமைக்காகக் குரல் கொடுத்து - தமிழன் உயர்வுக்காகக் களம் பல கண்டு நம் உளம் நிறைந்த அண்ணன், எங்கே பதவி? எங்கே பதவி? என்று வாய் பிளந்து நிற்கும் பேராசைக்காரர்களைத் தன் தம்பியாக ஏற்றுக் கொண்டதில்லை! மாலைக்கு மட்டும் இந்தக் கழுத்து நீளும் - அடக்குமுறை வாள் பாய்ந்தால் அஞ்சி நடுங்கும் - என்றுரைப்போர் முகம் காணவே விரும்பாத தியாக வேந்தர் நமது அண்ணன்!

அந்த அண்ணன் பிறந்த நாளில்தான் தமிழகம் முழுவதுமுள்ள கழக அமைப்புகள் - மாவட்டத் தலைநகரங்களில் அறப்போர் பாசறைகளை அமைக்கின்றன!

ஏன்? எதற்காக?

இலங்கையில் தமிழன் கொடுமை தாளாமல் குமுறிக் கொண்டிருக்கிறான். அந்தத் தமிழன் இங்குள்ள எந்தக் கட்சிக்கு ஆதரவாளன் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கவில்லை. அவன் காங்கிரசா? கழகமா? அ.தி.மு.க.வா? கம்யூனிஸ்டா? என்றெல்லாம் குறுகிய நோக்குடன் பகுத்துப் பார்த்துக் கொண்டிராமல் நம் இனத்தவன் என்ற ஒரே உணர்வோடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம். அர்த்தால் நடத்திட அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்றோம். சில கட்சிகள் சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் மகஜர்கள் அளித்தன. சில கட்சிகள் அலுவலகத்திற்கு எதிரே அணிவகுத்துக் கண்டன முழக்கங்கள் எழுப்பின. சில கட்சிகள் போலீசின் தடையை மீறி உண்ணாவிரதம் மேற்கொண்டன தூதரகத்தின் முன்பாக!

இலங்கையில் தனபதியென்ற தமிழ்நாட்டு வாலிபன் கோடரி கொண்டு பிளக்கப்பட்டான் என்ற நெஞ்சு குலுங்கும் செய்தி வந்ததும் சட்டமன்றத்தில் அதுகுறித்துக் கண்டனம் எழுப்பினேன். இலங்கையில் தமிழர்களுக்குத் தொடரும் கொடுமைகளுடன் இந்தக் கொடுமையும் சேர்ந்ததே என வெந்து போன உள்ளத்தினராய் - சென்னை மாவட்டக் கழக உடன்பிறப்புக்கள் ஒருநாள் அடையாள மறியல் என அறிவித்து இலங்கைத் தூதரகம் செல்ல அண்ணா சிலையருகே ஊர்வலம் புறப்பட்டனர்! தடையுத்திரவு எனக் கூறிக் கைது செய்தது அரசு! பின்னர் சட்டப்பிரிவுகள் தேடப்பட்டன! வழக்கு தொடரப்பட்டது! அடையாள மறியலில் ஈடுபட்டோர் அடைக்கப்பட்டனர் சிறைச்சாலையில்!

இலங்கைத் தமிழர்களுக்காக எந்தக் கட்சிக் கிளர்ச்சி நடத்தினாலும் அதனை நாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை! ஆனால் நம் மீது காழ்ப்புக் கொண்டோர் நாம் சென்னையில் நடத்திடமுனைந்த ஒருநாள் மறியலை ஏசியும் இழிமொழி வீசியும் கண்டித்தனர்; பழி வாங்கும் உணர்வோடு எம்.ஜி.ஆர். அரசும் நடந்து கொண்டது!

அடையாள மறியலில் சிறைப்பட்டோர் ஐந்து நாட்களாகியும் விடுவிக்கப்பட வில்லை - சட்டமன்றத்திலே இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. இளையபெருமாள் அவர்களும், திரு. சித்தன் அவர்களும், அடையாள மறியலில் ஈடுபட்ட கழகத்தினரை

விடுவித்திட அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அரசு, அதனைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

ஐந்து நாட்களுக்குப் பிறகு செப்டம்பர் மூன்றாம் நாள் முதல் இலங்கைக் கொடுமையையும் எம்.ஜி.ஆர். அரசின் பழிவாங்கும் போக்கையும் கண்டித்திட தொடர் மறியல் தொடங்கியது!

இன்று வரை சுமார் ஐநூறு பேர் சென்னை மத்திய சிறைச்சாலையில்!

மகளிரும் பலர் இந்த அடக்குமுறையை எதிர்த்து சிறைக் கோட்டம் புகுந்துள்ளனர்!

இலங்கையில் கொல்லப்பட்ட தமிழன் தனபதி குடும்பத்திற்கு அ.தி.மு.க. சார்பில் இருபத்திஐயாயிர ரூபாய் நிதி வழங்கப்படுகிறது!

நாடாளுமன்ற துணைச் சபாநாயகரும் திருவொற்றியூர் உள்ளிட்ட தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நண்பர் ஜி. லட்சுமணன் அவர்களின் வேண்டுகோள் கடிதத்திற்கு இணங்கி இந்தியப் பிரதமர் நிதியிலிருந்து தனபதி குடும்பத்திற்கு ஐயாயிர ரூபாய் நிதி அனுப்பப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன.

பம்பாய் நிகழ்ச்சியில் அங்குள்ள தமிழ்ப் பேரவையினரும் கழகத்தினரும் வழங்கிய மூவாயிர ரூபாய் நிதியை நமது பொருளாளர் சாதிக் அவர்கள், தனபதியின் குடும்பத்தாரிடம் செப்டம்பர் முதல் தேதியன்று வழங்கினார்.

முதன் முதலாக முந்திக் கொண்டு வழங்கி விட்ட காரணத்தாலோ என்னவோ; அந்த நிதியைத் திருப்பி அனுப்புமாறு செய்து விட்டனர்!

இலங்கையில் நடைபெறும் கொடுமைகளைக் கண்டித்து ஒரே நோக்கில் செயல்படுகிறோம் எனினும் - அவரவர் பங்கினைச் செலுத்துவதும் அந்தந்தக் கட்சிகள்; தங்களது வாய்ப்புக்கேற்றவாறு கிளர்ச்சிகளை முறையாக நடத்துவதும் எப்படித் தவறாக இருக்க முடியும்?

குறுகிற உள்ளம் - கடுகினும் அளவில் சிறிய உள்ளம் - இந்தப் பொதுப் பிரச்சினையில் அணுகுமுறை எப்படியிருக்க வேண்டுமென்பதைச் சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிட்டதில் ஆச்சரியமிருக்க முடியாதல்லவா?

எனவேதான் என்னுயிர் உடன்பிறப்பே! பரந்து விரிந்த பேருள்ளத்திற்குச் சொந்தக்காரரான அண்ணன் பிறந்த நாளில் கடுகு உள்ளம் கொண்டோரையும் அவர்தம் கொடுங்கோன்மையையும் நாட்டுக்கும் நானிலத்திற்கும் உணர்த்த அறப்போரில் குதிக்கிறோம்!

அந்நாளில் வன்முறை தலைவிரித்தாடிடச் செய்யும் பேச்சொன்றை நெல்லை மாநாட்டில் எம்.ஜி.ஆர். பேசியிருக்கின்றார்! அவரது நெல்லைப் பேச்சையொட்டித் திட்டங்கள் தீட்டப்படுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன!

அவர்கள் நடத்தட்டும் வெறியாட்டத்தை! ஆனால் நமது அறப்போர் அணிவகுப்பும் - மறியல் களமும் - நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்கிற அமைதி நிறைந்த தன்மை உடையவைகளாக விளங்கிடல் வேண்டும்!

மாவட்டத் தலைநகரங்களில் மறியலில் ஈடுபடவும், தண்டனைகளைத் தாங்கிக் கொள்ளவுமான வாய்ப்புள்ள உடன்பிறப்புகளின் பட்டியலை உடனடியாகத் தயார் செய்து கொள்ளவும்!

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு அமைதியான முறையில் மறியல்!

சென்னையில் ஏற்கனவே அறிவித்தவாறு என் தலைமையில் அறப்போர் மறியல்!

செப்டம்பர் 15 காலையில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்திற்கு முன்புள்ள அண்ணன் சிலைக்கு மாலையணி விக்கிறேன்.

பொதுச் செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும் - அண்ணன் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு பின்னர் என்னை அறப்போருக்கு வழியனுப்பி வைப்பார்கள்!

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தில்லையில் நடைபெற்ற மாநாட்டில் பேராசிரியர் தலைமையில் அண்ணன் என்னை கல்லக்குடி அறப்போருக்கு வழியனுப்பி வைத்தார்!

இன்று அண்ணன் சிலை முன்னால் பேராசிரியர் என்னை வழியனுப்பி வைக்க இருக்கிறார்!

என் தம்பி தனிமைச் சிறையிருக்கும் பாளையங்கோட்டை, எனக்கு பாத யாத்திரைத் தளம் என்று நெல்லையிலேதான் அன்றொரு நாள் அண்ணா பேசினார்!

அந்தச் சொற்கள் - செப்டம்பர் 15-இல் அண்ணன் சிலைக்கு எதிரே நிற்கும்போது என் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்!

அந்த இனிய ஓசையில் மகிழ்ந்தவாறு களம் நோக்கி நடப்பேன்!

இடர் எதுவரினும் ஏற்பேன்!

அன்புள்ள,

மு. க.

(13-09-1981)

960. நாங்களிருக்குமிடம் நீயிருப்பாய்!

ஆருயிர் அண்ணனே,

இன்று உனக்குப் பிறந்த நாள்! உனது ஐம்பத்தி மூன்றாம் ஆண்டு பிறந்த நாள் விழா; ஆம் - அதுதான் முதன்முதலாக உனக்கு கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட பிறந்த நாள் விழா - 1961-ஆம் ஆண்டு தஞ்சை மாநகரில் நடைபெற்றபோது மேசையென்றும், நாற்காலியென்றும் கடிகாரமென்றும் பீரோ என்றும் ஐம்பத்துமூன்று பொருள்களை உனக்கு வழங்கி, உவகை பெருக்கெடுக்க நின்றோம். அந்த விழாவில் நீ ஆற்றிய உரை எங்களுக்குத் தேன்! தேன்! தேன்!

அறுபதாம் ஆண்டு மணிவிழாவினை அனைத்து நாடுகளிலும் பரவிக் கிடக்கும் தமிழர்களையெல்லாம் அழைத்து நடத்திட வேண்டுமெனத் திட்டங்களை நாங்கள் தீட்டிக் கொண்டிருந்தபோதுதான் எங்கள் கண்களை குருதி கொட்டும் நீர்வீழ்ச்சிகளாக்கிவிட்டு நீடுதுயில் கொண்டு விட்டாய்!

ஒளிவெள்ளம் பாய்ந்திடும் விழாக்கள் எடுத்து வெளியிலே கொண்டாடப்படும் என் பிறந்த நாள் விழாக்களில் எனக்கேற்படும் மகிழ்ச்சியை விடச் சிறைக் கோட்டங்களில் என் பிறந்தநாளைக் கொண்டாடுவது தான் பெருமகிழ்ச்சியில் என்னை ஆழ்த்துகிறது.

- என்று எத்தனையோ முறை நீ கூறியதை மட்டுமல்ல; வேலூர், சென்னை போன்ற சிறைச்சாலைகளில் நீ அப்படிப் பிறந்த நாளைக் கொண்டாடிக் களித்திருக்கிறாய்!

ஐம்பத்தி ஒன்பது ஆண்டுகளுடன் அகவையை முடித்துக்கொண்ட உனக்கு நாங்கள் எடுத்து வரும் பிறந்த நாள் விழாக்களில் இந்த எழுபத்தி மூன்றாவது பிறந்தநாள் விழா சற்று வித்தியாசமானது!

நீயே சிறையில் இருந்து உன் பிறந்தநாள் விழாக்களைக் கொண்டாடினாய் அல்லவா; இப்போது நாங்கள் சிறை புகுந்து

அங்கே உன் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் வாய்ப்பினை பெற்றிருக்கிறோம்!

தமிழ் இனத்தின் மானமும் மரபும் காப்பாற்றப்பட, கலையும் இலக்கியமும் பாதுகாக்கப்பட, மொழியுணர்வும் வரலாறும் மங்கி மறைந்துவிடாமல் இருக்க, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தாலும் அமராவிட்டாலும் தி.மு.கழகத்திற்கு இன்னும் ஐம்பதாண்டு காலப் பணி, பாக்கியிருக்கிறது

- என்று, 1966-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற சென்னை விருகம்பாக்கம் மாநாட்டில் நீ கொட்டிய முரசும் இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது!

தமிழன் உயிரிழக்கிறான் - தமிழச்சி கற்பிழக்கிறாள் - இந்தச் செய்திகள்; இலங்கைத் தீவிலிருந்து இங்கே வந்திடும்போது இதயமுள்ளோர் துடித்திடாமல் இருந்திட இயலுமோ?

மரபுகள் அழிக்கப்படுவதும், மாண்புகள் குலைக்கப்படுவதும், மானம் சிதைக்கப்படுவதும், மெல்ல மெல்லத் தமிழ் இனத்தை ஒழித்துவிடத் திட்டம் தீட்டப்படுவதும் சிங்களவர்களின் வெறிச் செயலால் அன்றாடம் தொடர்கின்றன என்ற தகவல்களை அறிந்த பின்னும், எப்படியண்ணா எங்களால் தாங்கிக் கொள்ள முடியும்!

எங்கள் கண்ணீரை இலங்கைத் தமிழர்களுக்குக் கவசமாக்கிப் பார்த்தோம்! பாறையில் வைக்கப்பட்ட வெண்ணெய் உருண்டை; வெயிலில் உருகிடும் போது அதனைப் பாதுகாக்கவும் முடியாமல் யாரையும் கூவி அழைத்திடவும் முடியாமல் தவித்தான் கைகள் இல்லாத ஊமையொருவன் என்று இலக்கியப் பாடல் ஒன்று இயம்பிடுமே; அந்தக் கையில்லாத ஊமை போல எத்தனை நாள் இங்குள்ள தமிழன் இலங்கைத் தமிழன் சீரழிவைக் கண்கொண்டு பார்க்க முடியும்! செவி கொண்டு கேட்க முடியும்!

கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு
கருவிழிதான் ஆழ்கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ்தந்த பெருவீரர்,
உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டார் - மலைத்தமிழர்

இவரெல்லாம் மிதிபடவும், இந்திய வம்சாவளித் தமிழர்களின் உயிர் அறுபடவும், கொடுமை கோரத் தாண்டவம் ஆடிடும் வேளை உறையிலிடவோ இங்குள்ள தமிழர் அறப்போர் வாளையென்றுதான் ஆர்த்தெழுந்தனர்.

தனபதியென்றொரு தமிழன், தாயகமிருந்து அந்தத் தீவுக்குச் சுற்றுலா சென்றதே அவன் செய்த குற்றம்! சிங்கள வெறியர் கோடரி கொண்டு பிளந்தனர் அவன் தலையை! கொதித்தது தமிழகம்! கண்ணீர்! கண்டனம்! அவன் ஒரு கட்சிக்குரியவன் எனினும் - கட்சிக்காரன் என்பதற்காக இலங்கையில் கொல்லப்படவில்லை; தமிழன் என்பதற்காகக் கொல்லப்பட்டான்! கட்சியை மறந்து தமிழ் நெஞ்சம் துடிக்காதா அண்ணா!

அதனையும் இங்குள்ள சிலர் அரசியலாக்கி விட்டனர்!

அத்துடன் நிறுத்தினரா? சட்டம் பேசுகின்றனர்! சர்வதேசியம் பேசுகின்றனர்! தூதரகங்களின் சிறப்பு பற்றியெல்லாம் மகாத்மியங்கள் தீட்டுகின்றனர்! உன்னால் வளர்க்கப்பட்ட எங்களுக்கு இவைகள் எல்லாம் தெரியாதாம் அண்ணா!

அரசியல் சட்டம்கூடப் புனிதமானது என்றே வாதிடுவர்! இது தமிழர் நலனுக்கு விரோதமாக அமைந்தபோது இந்தித் திணிப்பை எதிர்க்க, அரசியல் சட்டத்தின் சில பகுதிகளை பொது மேடையில் எரிக்கச் சொல்லி ஆணையிட்ட தலைவன் நீ என்பதெல்லாம் அவர்களுக்கு எங்கே நினைவிருக்கப் போகிறது!

குடியரசு நாள் கூட சிறப்புக்குரியதுதான்! நமது மொழிப்போரின் அடையாளமாக அந்த நாளில் தமிழர்தம் இல்லங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடச் சொன்ன தலைவன் நீ என்பதை, தங்கள் வீட்டிலோ, அலுவலகத்திலோ கறுப்புக்கொடி கட்டாத அந்த வீராதிவீரர்கள்(?) எப்படி நினைத்துக் கொண்டிருக்க முடியும்?

பொருள் உற்பத்தி பாதிக்கப்படக்கூடாதென்று வேலை நிறுத்தங்களைத் தடை செய்து சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கும் போது - பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டுச் சொல்லியிருப்பது போல ஐம்பது கோடி ரூபாய் தொழில் துறையில் உற்பத்தி பாதிக்கப்படும் அளவுக்கு ஒருநாள் முழு அடைப்புச் செய்திட இங்குள்ள மாநில அரசு, ஒத்துழைப்பு தருவது குற்றமில்லையென்று வாதிடுவது இலங்கைத் தமிழர்களுக்காகத்தானே!

அந்த வாதம், ஆகஸ்டு 29-ஆம் நாள் - ஒருநாள் அடையாள மறியலுக்குத் தடையை மீறி ஊர்வலம் நடத்தினார்களே; அந்தக் கழகக் கண்மணிகளுக்குப் பொருந்தாது என்று இங்குள்ளோர் கூறுகிறார்கள் அண்ணா!

ஆகஸ்டு 29-இல் மறியல் செய்ய வேண்டிய இடத்திற்கே போகவில்லை! ஊர்வலம் புறப்பட இருந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டு விட்டார்கள்!

தடையை மீறி ஊர்வலம் நடத்தியதற்காகத்தான் கைது செய்யப்பட்டனர்.

மறியல் களமே, சென்றிடவில்லை! அவர்களை சிறையில் அடைத்துவிட்டு, பொய் வழக்கும் தொடுத்துவிட்டு, தூதுவராலயம் என்றால் என்னவென்று தெளிபொருள் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

என்ன தம்பி செய்வது! நரிக்கு நாட்டாண்மை கொடுத்து விட்டால் அது கிடைக்கு எட்டு ஆடு கேட்கத்தானே செய்யும் - என்று நீ புன்னகை மூலம் பதில் அளிப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது அண்ணா!

நான் புரிந்து கொண்டிருப்பதை நாடும் வேகமாகப் புரிந்து கொண்டுதான் வருகிறது!

புகைச்சல்தானே என்று பொல்லாதவர்களால் அலட்சியப் படுத்தப்பட்டவைகள்தான் எரிமலைகளாய் பொங்கியிருக்கின்றன என்ற சரித்திரத்தைப் படிக்காதவர்கள்; அதிகாரமிருக்கும் வரையில் ஆட்டம் போடத்தான் செய்வார்கள்.

உனது இந்தப் பொன்மொழியை உள்ளத்தில் ஏந்தி - கரத்தினிலே நீ தந்த கொடியேந்தி - உன் பிறந்த நாளில் கடமையாற்றிடப் பயணம் தொடருகிறோம்; நாங்கள் இருக்கு மிடமெல்லாம் நீ இருப்பாய் என்ற நம்பிக்கையுடன்!

அன்புள்ள,

மு. க.

(15-09-1981)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022